நாஞ்ச ப்ரம்ஹஹாயோநிம்ருச்சதி. ப்ரம்ஹஹத்திசெய்தவன் நாய், பன்றி, கழுதை, ஒட்டகை, பசு, செம்மறியாடு, வெள்ளாடு, மான், பக்ஷி, சண்டாளன், புல்கஸன் முதலிய பிறவியை யடைகிறான். என ஸ்மிருதியிலுபதேசிக்கப் பட்டிருக்கிறது.

तमनेवं चावरोहन्ति । यथेतमिति यथागतमित्यर्थः । अनेवमिति तद्विपर्ययेणेत्यर्थः । धूमाकाशयोः पितृयाणेऽध्वन्युपात्तयोरवरोहे सङ्कीर्तनाद्यथेतंशब्दाच्च यथागतमिति प्रतीयते । रात्र्याद्यसङ्कीर्तनादभ्राद्युपसङ्ख्यानाच्च विपर्ययोऽपि प्रतीयते ॥ ८ ॥

चरणादिति चेन्नोपलक्षणार्थेति कार्ष्णाजिनिः ॥ ९ ॥

अथापि स्यात् । या श्रुतिरनुशयसद्भावप्रतिपादनायोदाहृता—'तद्य इह रमणीयचरणाः' (छा० ५ । १० । ७) इति । सा खलु चरणाद्योन्यापत्तिं दर्शयति नानुशयात् । अन्यच्चरणमन्योऽनुशयः । चरणं चारित्रमाचारः शीलमित्यनर्थान्तरम् । अनुशयस्तु

னார். ஸூத்திரத்திலுள்ள "யதேதம்" என்றதற்கு போனமுறையை யொட்டி என்று பொருள். "அநேவம்" என்றதற்கு அதற்குமாறாகவும் என்று பொருள். பிதிருயானம் என்ற மார்க்கத்தில் தூமம், ஆகாசம் இவற்றை குறிப்பிட்டிருப்பதாலும், யதேதம் (சென்றபடியே திரும்புகிறான்) என்று ஸ்ருதி கூறுவதாலும் சென்றமுறைப்படியே திரும்புகிறானென அறியப்படுகின்றது. (திரும்பும் பாதையில் ஏறும் பாதையிலுள்ள) ராத்திரி முதலியன குறிக்கப்படாததாலும் மேகம் முதலியன புதிதாக கூறப்படுவதாலும் சென்ற மார்க்கத்துக்கு மாறுதலும் அறியப்படுகின்றது. (8) (எ—று)

(ஸூ) சரணாதிதிசேத் நோபலக்ஷணார்த்தேதி கார்ஷ்ணாஜிநி:

(ப—ரை) **चरणादितिचेत्**(சரணாதிதிசேத்)=தத் ய இஹ **ரமணீய சரணா:** என்ற ஸ்ருதியில் சரண சப்தப்ரயோகமிருப்பதுபற்றி ஆசாரத்தினாலேயே ப்ராம்ஹணாதி யோநியை அடைகிறான். அனுபவிக்கப்பட்ட பலனையுடைய கர்மத்தைதக்காட்டிலும் வேறான கர்மத்தினாலன்று என்று சொல்வாயேல் **न** (ந)=அவ்விதம் சொல்வது பொருந்தாது. **कार्ष्णाजिनिः** (கார்ஷ்ணாஜிநி:)=கார்ஷ்ணாஜிநி என்ற ஆசிரியர் **उपलक्षणार्था** (உபலக்ஷணார்த்தா)=சரண ஸ்ருதியானது அனுசயத்தை லக்ஷணைமுறையால் ஸூசிப்பிக்கின்றதாகின்றது என்று கூறுவதுபற்றியே என்க. (9)

பாஷ்யம்.—ஆயினும் (பின்வருமாறு) ஆக்ஷேபிக்கக்கூடும். அதாவது:— **தத் ய இஹ ரமணீயசரணா:** என்ற எந்த ஸ்ருதியானது அனுசயத்தின் (கர்மவாஸனையின்) இருப்பைத் தெரிவிப்பதற்சாக எடுத்துக் கூறப்பட்டதோ, அந்த ஸ்ருதியானது சரணத்தினின்றும் (ப்ராம்ஹணாதி) யோநியில் பிறவியைத் தெரிவிக்கின்றதேயல்லாது அனுசயத்தாலுண்டாவதாகக் கூறவில்லை. சரணம் வேறு, அனுஸயம் வேறு. *சரணம், சாரித்ரம், ஆசாரம், சீலம் என்ற பதங்கள் ஒரே பொருளுள்ளனவாகும். அநுஸயமோ அனுபவிக்கப்பட்ட பலனையுடைய கர்மத்தைக்

---

* அத்ரோஹ: ஸர்வபூதேஷு கர்மணா மநஸா கிரா, அநுக்ரஹச்ச க்ஞாநம் ச சீலமேத த்விதுர்ப்புதா:. மனது, வாக், கர்மம் இவற்றால் எல்லாப் பிராணிகளுக்கும் துரோஹம் செய்யாமையும், அனுக்கிரஹமும், சாஸ்திரார்த்த க்ஞானமும் சீலமெனப்படும் என்று ஸ்மிருதியில் கூறப்பட்டிருக்கிறது.

भुक्तफलात्कर्मणोऽतिरिक्तं कर्माभिप्रेतम् । श्रुतिश्च कर्मचरणे भेदेन व्यपदिशति—'यथाकारी यथाचारी तथा भवति' (बृ० ४।४।५) इति, 'यान्यनवद्यानि कर्माणि तानि सेवितव्यानि नो इतराणि, यान्यस्माकं सुचरितानि तानि त्वयोपास्यानि' (तै० १।११।२) इति च । तस्माच्चरणाद्योन्यापत्तिश्रुतेर्नानुशयसिद्धिरितिचेत् । नैष दोषः । यतोऽनुशयोपलक्षणार्थैवैषा चरणश्रुतिरिति कार्ष्णाजिनिराचार्यो मन्यते ॥ ९ ॥

आनर्थक्यमिति चेन्न तदपेक्षत्वात् ॥ १० ॥

स्यादेतत् । कस्मात्पुनश्चरणशब्देन श्रौतं शीलं विहाय लाक्षणिकोऽनुशयः प्रत्याय्यते । ननु शीलस्यैव श्रौतस्य विहितप्रतिषिद्धस्य साध्वसाधुरूपस्य शुभाशुभयोन्यापत्तिः फलं भविष्यति । अवश्यं च शीलस्यापि किञ्चित्फलमभ्युपगन्तव्यम । अन्यथा

காட்டிலும் வேறான கர்மமாக எண்ணப்படுகிறது. "எத்தகைய கர்மத்தைச் செய்பவனாகவும், எத்தகைய ஆசாரமுள்ளவனாகவும் (இப்பிறவியில்) ஆகின்றானோ,அவ்விதமே மறுபிறவியிலாகின்றான்" என்றும், "நிஷேதிக்கப்படாத கர்மங்கள் எவையுண்டோ அவை அனுஷ்டிக்கத்தக்கன. மற்றவை அனுஷ்டிக்கத்தகாதன. எங்களுடைய எந்த ஸுசரிதங்கள் (நந்நடத்தைகள்) உண்டோ அவை உன்னால் அநுஷ்டிக்கத்தக்கன" என்றுமான ஶ்ருதியும் கர்மம் சரணம் இவைகளை (ஒன்றுக்கொன்று) வேறுபட்டனவாகவே குறிக்கின்றது. ஆகையால் சரணத்தினின்றும் யோநிலாபம் ஶ்ருதியில் கூறப்படுவதால் அனுசயம் (கர்மசேஷம்) ஸித்திபெறாதே எனின்? இது தோஷமாகாது. கார்ஷ்ணாஜிநி என்ற ஆசிரியர் **ரமணீயசரணா:** என்ற ஶ்ருதியானது அனுசயத்தை லக்ஷணைமுறையால் குறிக்கிறதாகவாகின்றது என்று கருதுவதுபற்றியே என்க. (9) (எ—று)

(ஸூ) ஆநர்த்தக்யமிதிசேத் ந ததபேக்ஷத்வாத் (10)

(ப—ரை) **आनर्थक्यम्** (ஆநர்த்தக்யம்)=சரணசப்தத்தின் பொருளான ஆசாரத்திற்கே நல்லது கெட்டதான யோநிலாப காரணத்வம் சொல்லாவிடில் சரணத்துக்குப் பயனற்றிருத்தல் ஸம்பவிக்கும் எனின்? **न** (ந)=அது பொருந்தாது. **तदपेक्षत्वात्** (ததபேக்ஷத்வாத்)=யாகாதிகர்மம் ஆசாரத்தை அபேக்ஷித்ததாகவிருப்பதுபற்றியே என்க. (10) (எ—று)

பாஷ்யம்.—சங்கை—இஃதிருக்கட்டும். (**ரமணீயசரணா:** என்ற ஶ்ருதியில்) சரணம் என்ற சப்தத்தால் சக்திமுறையால் போதிக்கப்படும் சீலம் என்ற பொருளை விடுத்து லக்ஷணை முறையாலறியப்படும் அனுசயம் எக்காரணம் பற்றி கொள்ளப்படுகிறது. சக்திமுறையாலறியப் படுவதும், விதிக்கப்பட்டதும் விலக்கப்பட்டது மானதும், நல்லது கெட்டது தருபமானதுமான சீலத்திற்கே நல்லது கெட்டதான யோனி (பிறவி) லாபம் பயனாகவாகலாம். சீலத்துக்கும் அவஶ்யமாய் யாதானு மொருபலனை அங்கீகரித்தே தீரவேண்டும். இவ்விதமங்கீகரிக்காவிடில் சீலத்துக்குப் பயனற்றிருத்தலே பிரஸங்கிக்கும் எனின்?

ह्यानर्थक्यमेव शीलस्य प्रसज्येतेति चेत्। नैष दोषः। कुतः—तदपेक्षत्वात्। इष्टादि हि कर्मजातं चरणापेक्षम्। नहि सदाचारहीनः कश्चिदधिकृतः स्यात्—'आचारहीनं न पुनन्ति वेदाः' इत्यादिस्मृतिभ्यः। पुरुषार्थत्वेऽप्याचारस्य नानर्थक्यम्। इष्टादौ हि कर्मजाते फलमारभमाणे तदपेक्ष एवाचारस्तत्रैव कञ्चिदतिशयमारप्स्यते। कर्म च सर्वार्थकारीति श्रुतिस्मृतिप्रसिद्धिः। तस्मात्कर्मैव शीलोपलक्षितमनुशयभूतं योन्यापत्तौ कारणमिति कार्ष्णाजिनेर्मतम्। नहि कर्मणि संभवति शीलाद्योन्यापत्तिर्युक्ता। नहि पद्भ्यां पलायितुं पारयमाणो जानुभ्यां रंहितुमर्हतीति ॥ १० ॥

सुकृतदुष्कृते एवेति तु बादरिः ॥ ११ ॥

बादरिस्त्वाचार्यः सुकृतदुष्कृते एव चरणशब्देन प्रत्याय्येते इति मन्यते। चरणमनु-

---

உத்தரம்—இது தோஷமாகாது. என்? சீலத்தை அபேக்ஷித்ததாக விருப்பது பற்றியே என்ற. அதாவது:—யாகம் முதலிய கர்மஸமூஹமானது ஆசாரத்தை அபேக்ஷித்ததாகின்றது. "ஆசாரமற்றவனுக்கு வேதத்திற் கூறியகர்மங்கள் பயனைக்கொடுப்பதில்லை" என்றது முதலாய ஸ்மிருதிகளிருப்பதால் ஆசாரமற்ற ஒருவனும் (கர்மங்களில்) அதிகாரம் பெறமாட்டானன்றோ? * என்பதாம். மேலும், ஆசாரத்துக்குப் புருஷ ஸம்ஸ்காரகத்வத்தை அங்கீகரித்தாலும், பயனற்றிருத்தல் ஸம்பவியாது. அதாவது:—யாகம் முதலிய கர்மஸமூஹம் பலனைக்கொடுக்குங்கால் யாகாதிகர்மத்தை அபேக்ஷித்தே ஆசாரமானது கர்மபலத்திலேயே ஏதோ ஒருவிசேஷத்தை உண்டுபண்ணுகின்றது. கர்மமோ எல்லாவிதமான பலனையுமுண்டுபண்ணுகின்றதென்ற பிரஸித்தி ஶ்ருதி ஸ்மிருதிகளிலிருக்கின்றது. ஆகையால் சீலத்தால் ஞாபிக்கப்பட்டதும், அனுஶயமாகவானதுமான கர்மமே யோனிலாபத்துக்குக் காரணமாகின்றதென்பது கார்ஷ்ணாஜினி என்ற ஆசிரியரின் மதமாகும். (பிரதானமான) கர்மம் ஸம்பவிக்குங்கால் ஆசாரத்தினின்றும் யோனிலாபம் கூறுவது பொருந்தாதன்றோ? கால்களால் ஓடுவதற்குச் சக்தியுள்ளவன் முழந்தாள்களாலோடுவது பொருந்தாதன்றோ? (10) (எ-று)

(ஸூ) ஸுக்ருததுஷ்க்ருதே ஏவேதிது பாதரி: (11)

(ப-ரை) बादरिः (பாதரி:)=பாதரி என்ற ஆசிரியர். सुकृतदुष्कृते एव (ஸுகிருததுஷ் கிருதே ஏவ)=புண்யம் பாபம் இவைகளே [चरणशब्देन प्रात्याय्येते (சரணஶப்தேந ப்ரத்யாய்யேதே)=சரணசப்தத்தால் போதிக்கப்படுகின்றன என்று கருதுகிறார்.]

பாஷ்யம்.—பாதரி என்ற ஆசிரியரோ புண்யம் பாபம் இவைகள்தான் சரண

---

* இதுவரை ப்ரயாஜாதிகளைப்போல் கர்மாங்கத்வமங்கீகரித்துப் பதில் கூறப்பட்டது. இனி ஸ்ஞாதிகளைப்போன்று ஆசாரத்தைப் புருஷ ஸம்ஸ்காரமாக வங்கீகரித்துப் பதில் கூறப்படுகின்றது.

ष्ठानं कर्मेत्यनर्थान्तरम् । तथाहि—अविशेषेण कर्ममात्रे चरतिः प्रयुज्यमानो दृश्यते । यो हीष्टादिलक्षणं पुण्यं कर्म करोति तं लौकिका आचक्षते धर्मं चरत्येष महात्मेति । आचारोऽपि च धर्मविशेष एव । भेदव्यपदेशस्तु कर्मचरणयोर्ब्राह्मणपरिव्राजकन्यायेनाप्युपपद्यते । तस्माद्रमणीयचरणाः प्रशस्तकर्माणः कपूयचरणा निन्दितकर्माण इति निर्णयः ॥

३ अनिष्टादिकार्यधिकरणम् । सू० १२–२१

अनिष्टादिकारिणामपि च श्रुतम् ॥ १२ ॥

चन्द्रं याति नवा पापी ते सर्वे इति वाक्यतः । पञ्चमाहुतिलाभार्थं भोगाभावेऽपि यात्यसौ ॥ १ ॥
भोगार्थमेव गमनमाहुतिर्व्यभिचारिणी । सर्वश्रुतिः सुकृतिनां याम्ये पापिगतिः श्रुता ॥ २ ॥

சப்தத்தால் போதிக்கப்படுகின்றனவென்று கருதுகிறார். சரணம், அநுஷ்டானம், கர்ம என்ற வார்த்தைகள் ஒரே பொருளுள்ளனவாகும். அதாவது: சர் என்ற தாதுவானது விசேஷமின்றியே எல்லாக் கர்மத்திலும் ப்ரயோகிக்கப்படுவதாய் காணப்படுகின்றது. எவன் யாகம் முதலியனவான புண்யமான கர்மத்தைச் செய்கின்றானோ அவனை லௌகிகர் "இந்த மஹான் தர்மத்தைச் செய்கிறான்" எனச் சொல்லுகின்றனர். ஆசாரமும் தர்மத்தின் ஓர் விசேஷமேதான். கர்மம் சரணம் இவற்றைப் பிரிவுபடுத்திக் கூறலானது *ப்ராம்ஹண பரிவ்ராஜக நியாயத்தாலும் பொருந்தக்கூடியதே. அதையால் **ரமணீயசரணா:**=சிறந்த கர்மமுள்ளவர்கள். **கபூயசரணா:**=வெறுக்கப்பட்ட கர்மமுள்ளவர்கள் என்பது நிர்ணயமான பொருளாகும். (11) (எ—று)

இரண்டாவது கிருதாத்யயாதிகரணம் முற்றிற்று.

அநிஷ்டாதிகார்யதிகரணம் 3.

(அ—கை) 10 ஸூத்திரங்கள் கொண்ட இவ்வதிகரணத்தால் அநிஷ்டாதிகாரிகளுக்கு சந்திரலோக கமனம் உண்டா? இல்லையா என்பது விசாரிக்கப் படுகின்றது. அவற்றுள் அநிஷ்டாதிகாரிகளுக்கும் சந்திரலோக கமனத்தை நிரூபிக்கும் பூர்வபக்ஷ ஸூத்திரம் பின்வருமாறு:—

(ஸூ) அநிஷ்டாதிகாரிணாமபிச ச்ருதம் (12)

(ப—ரை) **अनिष्टादिकारिणामपिच** (அநிஷ்டாதிகாரிணாமபிச) = பாபகர்மங்கள் முதலியவற்றைச் செய்தவர்களுக்கும் **श्रुतम्** (ஶ்ருதம்)=சந்திரலோகப்ராப்தியானது ஶ்ருதியில் கூறப்பட்டிருக்கிறது. (12) (எ—று)

---

* "ப்ராம்ஹணர்களும், ஸன்யாஸிகளும் வந்தனர்" என்று கூறுமிடத்தில் ஸன்யாஸிகள் ப்ராம்ஹணர்களாயினும் அவர்களைத் தனித்துக் கூறல் விசேஷத்தில் கருத்துக் கொண்டு ஏற்பட்டதா யங்கீகரிக்கிறோம். இதுவே ப்ராம்ஹண பரிவ்ராஜக நியாயமாகும்.

इष्टादिकारिणश्चन्द्रमसं गच्छन्तीत्युक्तम्। ये त्वितरेऽनिष्टादिकारिणस्तेऽपि किं चन्द्रमसं गच्छन्त्युत न गच्छन्तीति चिन्त्यते। तत्र तावदाहुः—इष्टादिकारिण एव चन्द्रमसं गच्छन्तीत्येतन्न। कस्मात्। यतोऽनिष्टादिकारिणामपि चन्द्रमण्डलं गन्तव्यत्वेन श्रुतम्। तथाह्यविशेषेण कौषीतकिनः समामनन्ति—'ये वै के चास्माल्लोकात्प्रयन्ति चन्द्रमसमेव ते सर्वे गच्छन्ति' (कौषी० १। २) इति। देहारम्भोऽपि च पुनर्जायमानानां नान्तरेण चन्द्रप्राप्तिमवकल्पते। पञ्चम्यामाहुतावित्याहुति सङ्ख्यानियमात्। तस्मात्सर्व एव चन्द्रम-

---

வையாஸிக நியாயமாலே.

(க—ரை) பாபம் செய்தவன் சந்திரமண்டலத்தை அடைகின்ருனு? அடைவதில்லையா? என்பது ஸந்தேஹம். யேவைகே சாஸ்மாத் லோகாத்ப்ரயந்தி சந்திரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி என்றஸ்ருதியில் "அவர் யாவரும்" என்று கூறப்படுவதாலும், சரீராரம்பகமான ஐந்தாவது ஆஹுதிலாபம் ஏற்படுவதற்காகவும், போகலாபமில்லாவிடினும் பாபம்செய்தவனும் சந்திரமண்டலத்தையடைகிருன் என்பது பூர்வபக்ஷம். போகத்துக்காகவே சந்திரமண்டல கமனம் சொல்லப்படுவதாலும், 5-வது ஆஹுதிதான் சரீராரம்பகம் என்பது சிலவிடத்தில் வியபிசரிப்பதாலும், "அவர் யாவரும்" என்றுஸ்ருதியில் கூறினது புண்யசாலிகளைப்பற்றியதாவதாலும், பாபம் செய்தவர்களுக்கு யமலோக கமனம் வேறு ஸ்ருதியாலுபதேசிக்கப்படுவதாலும், பாபம் செய்தவன் சந்திரமண்டலத்தையடைவதில்லை என்பது ஸித்தாந்தம்.

பாஷ்யம்.—இஷ்டாதிகாரிகள் சந்திரமண்டலத்தை அடைகின்றனர் என்று சொல்லப்பட்டது. அவர்களைக் காட்டிலும் வேறுபட்ட அனிஷ்டாதிகாரிகள் (பாபகர்மத்தைச் செய்தவர்கள்) எவர்களுண்டோ அவர்களும் சந்திரமண்டலத்தை அடைகின்றனரா? அல்லது அடையவில்லையா? என்பது விசாரிக்கப்படுகின்றது. அவ்விஷயத்தில் பூர்வபக்ஷிகள் சொல்லுவதாவது:—இஷ்டாதிகாரிகள்தான் சந்திரனை அடைகின்றனர் என்பது இல்லை. ஏன்? அநிஷ்டாதிகாரிகளுக்கும் சந்திர மண்டலமடையத்தக்கதாக ஸ்ருதியிலுபதேசிக்கப்படுவதுபற்றியே என்க. அவ்விதமேயன்றே விசேஷமின்றியே கௌஷீதகீசாகாத்யாயிகள் "எவரெவர்கள் இவ்வுலகினின்றும் செல்லுகின்றனரோ அவர் யாவரும் சந்திரனையே அடைகின்றனர்" என்று படிக்கின்றனர். மேலும், உண்டாகும் பிராணிகளுக்கு தேஹோத்பத்தியும் சந்திரனை யடையாவிடில் ஸம்பவிக்காது. "ஐந்தாவது ஆஹுதி ஏற்பட்ட பிறகு(பூதசூக்ஷ்மங்கள் புருஷன் என்ற பெயரை அடைகின்றன)"என்றதால் ஆஹுதியில் ஐந்து என்ற எண்ணுக்கு நியமமிருப்பதுபற்றியே என்க. * ஆகையினுல் யாவருமே சந்திரனை யடைகின்றனர். இஷ்டாதி

---

* த்யுலோகம், பர்ஜன்யம், பிருதிவீ, புருஷன், ஸ்திரீ என்ற ஐந்து அக்கினிகளில் பூதசூக்ஷ்மங்கள் முறையேசிரத்தை, ஸோமம், விருஷ்டி, அன்னம், ரேதஸ் என்ற மாறுதலை அனுஸரித்து ஹோமம் செய்யப்பட்ட பிறகே அவை புருஷவடிவமாயாவதாய் சுருதியில் கூறப்படுவதால் அநிஷ்டாதிகாரிகளுக்கும் சரீர லாபத்திற்குவேண்டியே சந்திரமண்டல கமனமவச்யமாகின்றது என்று கருத்து.

समासीदेयुः । इष्टादिकारिणामितरेषां च समानगतित्वं न युक्तमिति चेत् । न । इतरेषां चन्द्रमण्डले भोगाभावात् ॥ १२ ॥

संयमने त्वनुभूयेतरेषामारोहावरोहौ तद्गतिदर्शनात् ॥ १३ ॥

तुशब्दः पक्षं व्यावर्तयति । नैतदस्ति सर्वे चन्द्रमसं गच्छन्तीति । एतत्कस्मात् । यतो भोगायैव चन्द्रारोहणं न निष्प्रयोजनम् । नापि प्रत्यवरोहायैव । यथा कश्चिद्वृक्षमारोहति पुष्पफलोपादानायैव न निष्प्रयोजनं नापि पतनायैव । भोगश्चानिष्टादिकारिणां चन्द्रमसि नास्तीत्युक्तम् । तस्मादिष्टादिकारिण एव चन्द्रमसमारोहन्ति नेतरे । ते तु संयमनं यमालयमवगाह्य स्वदुष्कृतानुरूपा यामीर्यातना अनुभूय पुनरेवेमं लोकं प्रत्यवरोहन्ति ।

காரிகளுக்கும் மற்றவர்களுக்கும் செல்லவேண்டிய இடம் ஒன்றாகவிருப்பது பொருந்ாதெனின்? அவ்விதமில்லை. அநிஷ்டாதிகாரிகளுக்கு சந்திரமண்டலத்தில் போகமில்லாமைபற்றியே என்க. (இஷ்டாதிகாரிகளுக்கும், அநிஷ்டாதிகாரிகளுக்கும் அடையவேண்டிய இடம் ஒன்றாயினும், இஷ்டாதிகாரிகளுக்கு சந்திரமண்டலத்தில் போகமுண்டு, மற்றவர்களுக்கு அஃதில்லை என்ற வேற்றுமை இருப்பதால் பாதகம் ஏதவும் வராதென்று கருத்து.) (12) (எ-று)

(ஸூ) ஸம்யமநே த்வநுபூயேதரேஷமாரோஹா வரோஹௌ தத்கதிதர்சனாத். (13)

(ப-ரை) **तु** (து)=முற்கூறியபடிக்கில்லை. **संयमने** (ஸம்யமநே)=யமலோகத்தில் **अनुभूय** (அநுபூய)=அநிஷ்டாதிகாரிகள் தமது பாபகர்மத்துக்குத் தக்கபடி யமலோகத்திலுள்ள துக்கங்களை அனுபவித்து கீழ் இரங்குகின்றனர். **इतरेषाम्** (**இதரேஷாம்**)=அந்த அநிஷ்டாதிகாரிகளுடைய **आरोहावरोहौ** (**ஆரோஹாவரோஹௌ**)=ஏறுதல் இறங்குதல் இவைகள் இவ்விதமேற்படுகின்றன. **तद्गतिदर्शनात्** (**தத்கதிதர்ஶநாத்**)=அநிஷ்டாதிகாரிகளுக்கு யமலோக கமனம் ஶ்ருதியில் காணப்படுவதுபற்றியே என்க. (13) (எ-று)

பாஷ்யம்.—**து** என்ற சப்தம் பூர்வபக்ஷத்தைவிலக்குகின்றது. யாவரும் சந்திரனை அடைகின்றனர் என்பதில்லை. இது எக்காரணம்பற்றி எனின்? சந்திரமண்டலத்தை அடைதல் போகத்துக்குவேண்டியேயல்லாது பிரயோஜனமின்றி இல்லை என்பதுபற்றியே என்க. இரங்குவதற்காகவே சந்திரமண்டலத்தை அடைகிறான் என்பதும் பொருந்தாது. ஒருவன் புஷ்பம்,பழம் இவற்றைப்பறிப்பதற்காகவே மரத்தில் ஏறுவானே அல்லாது பயனில்லாமலோ,கீழ்விழுவதற்காகவோ ஏறமாட்டான் என்பது போலவாம். அநிஷ்டாதிகாரிகளுக்கோ சந்திர மண்டலத்தில் போகம் கிடையாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இஷ்டாதிகாரிகள்தான் சந்திரமண்டலத்தை அடைகின்றனரேயன்றி மற்றவரடைவதில்லை. அவர்களோ (பாபிகளோ) வெனில் ஸம்யமனத்தை=யமலோகத்தை அடைந்து தமது பாபகர்மங்களுக்குத் தகுந்ததான யமலோகத்தில் நிகழும் துக்கங்களை அனுபவித்து மறுபடியும் இதே லோகத்தை அடைகின்றனர். அநிஷ்டாதிகாரிகளுடைய லோகாந்தர ப்ராப்தியும்

एवंभूतौ तेषामारोहावरोहौ भवतः। कुतः—तद्गतिदर्शनात्। तथाहि यमवचनसरूपा श्रुतिः प्रयतामनिष्टादिकारिणां यमवश्यतां दर्शयति—'न सांपरायः प्रतिभाति बालं प्रमाद्यन्तं वित्तमोहेन मूढम्। अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे' (कठ० २। ६) इति। 'वैवस्वतं सङ्गमनं जनानाम्' इत्येवञ्जातीयकं च बह्वेव यमवश्यताप्राप्तिलिङ्गं भवति॥ १३॥

स्मरन्ति च॥ १४॥

अपिच मनुव्यासप्रभृतयः शिष्टाः संयमने पुरे यमायत्तं कपूयकर्मविपाकं स्मरन्ति नाचिकेतोपाख्यानादिषु॥ १४॥

अपिच सप्त॥ १५॥

अपि च सप्त नरका रौरवप्रमुखा दुष्कृतफलोपभोगभूमित्वेन स्मर्यन्ते पौराणिकैः। ताननिष्टादिकारिणः प्राप्नुवन्ति। कुतस्ते चन्द्रं प्राप्नुयुरित्यभिप्रायः॥ १५॥

அங்கிருந்து திரும்புதலுமித்தகையதாகின்றன. என்? அங்கு செல்லுதல் காணப்படுவதுபற்றியே என்க. அதாவது:— *யமனுடைய வார்த்தைக்கு ஒப்பான ஸ்ருதியானது மரணமடைகின்ற அநிஷ்டாதிகாரிகளுக்கு யமனுக்கு அதீனமாகுதலை உபதேசிக்கின்றது. அதாவது:—"விவேகமற்றவனும், தவறான கார்யங்களைச் செய்கின்றவனும், பணத்திலுள்ள ஆசையால் மறைக்கப்பட்ட அறிவையுடையவனுமான மனிதனுக்கு பரலோகோபாயம் புலப்படாது. இதுவே (அதாவது:—பெண், பொன் இவை நிறைந்த கண்கூடாகக் காணப்படுமிவ்வுலகமே என்பதாம்.) லோகமாகும். பரலோகமில்லை என்று எண்ணுபவன் அடிக்கடி எனது வசத்தையடைகிறான்" என்பதாம். "பாபியான ஜனங்களால் நன்கு அடையத்தக்க யமனை ஹவிஸ்ஸினால் திருப்தி செய்யுங்கள்" என்பது போன்ற யமனுக்கு வசப்படுதலைத் தெரிவிக்கின்ற அறிகுறிகள் பலவிருக்கின்றன. (எ—று) (13)

(ஸூ) ஸ்மரந்தி ச (14)

(ப—ரை) **स्मरन्ति च** (ஸ்மரந்தி ச)=மனுவ்யாஸர் முதலிய சிஷ்டர்கள் யமலோகத்தில் பாபிகளுக்குப் பாபகர்மங்களின் பலானுபவத்தை உபதேசிக்கின்றனர்.

பாஷ்யம்.—மனுவ்யாஸர் முதலிய சிஷ்டர்கள் யமலோகத்தில் யமனால் கொடுக்கப்படுகின்ற பாபகர்மங்களின் பயனை நாசிகேதோபாக்யானம் முதலியவற்றில் உபதேசிக்கின்றனர். (14)

(ஸூ) அபி ச ஸப்த (15)

(ப—ரை) **अपि च** (அபி ச)=மேலும் **सप्त** (ஸப்த)=7 நரகங்களும் பௌராணிகர்களாலுபதேசிக்கப்படுகின்றன. (எ—று) (15)

பாஷ்யம்.—மேலும் ரௌரவம் முதலிய 7 நரகங்கள் பாபபலனையனுபவிப்

---

* யமன் உபதேசிப்பதாய் கூறுகின்ற சுருதியானது என்பது கருத்து.

ननु विरुद्धमिदं यमायत्ता यातनाः पापकर्माणोऽनुभवन्तीति। यावता तेषु रौरवादिष्वन्ये चित्रगुप्तादयो नानाधिष्ठातारः स्मर्यन्त इति। नेत्याह—

तत्रापि च तद्व्यापारादविरोधः ॥ १६ ॥

तेष्वपि सप्तसु नरकेषु तस्यैव यमस्याधिष्ठातृत्वव्यापाराभ्युपगमादविरोधः। यमप्रयुक्ता एव हि ते चित्रगुप्तादयोऽधिष्ठातारः स्मर्यन्ते ॥ १६ ॥

विद्याकर्मणोरिति तु प्रकृतत्वात् ॥ १७ ॥

पञ्चाग्निविद्यायाम 'वेत्थ यथासौ लोको न संपूर्यते' (छा० ५। ३। ३) इत्यस्य प्रश्नस्य प्रतिवचनावसरे श्रूयते—'अथैतयोः पथोर्न कतरेणचन तानीमानि क्षुद्राण्यसकृ-

---

பதற்குரிய பூமியாக (தேசமாக) பௌராணிகர்களாலுபதேசிக்கப்படுகின்றன. அந்த நரகங்களை அதிஷ்டாதிகாரிகள் அடைகின்றனர். (இவ்விதமவர்கள் நரகங்களை யடையவேண்டியவர்களாயிருப்பதால்) எங்ஙனம் சந்திரனை அடைவர் என்பது கருத்து. (எ—று) (15)

அவதாரிகா பாஷ்யம்.—அந்த ரௌரவம் முதலிய நரகங்களில் சித்திரகுப்தன் முதலியோர் யஜமானர்களாகப் புராணங்களிலுபதேசிக்கப்படுவதால் பாபம் செய்தவர்கள் யமனால் கொடுக்கப்படுகின்ற நரகங்களை அனுபவிக்கின்றனர் என்ற இது விருத்தமாக இருக்கின்றது எனின்? அவ்விதமில்லை எனப் பதில் சொல்லுகிறார்—

(ஸூ) தத்ராபி ச தத்வ்யாபாராதவிரோத: (16)

(ப—ரை) **तत्रापि च** (தத்ராபி ச)=ரௌரவம் முதலிய நரகங்களிலும் **तद्व्यापारात्** (தத்வ்யாபாராத்)=யமனுக்கே யஜமானனாயிருத்தல் அங்கீகரிக்கப்படுவதால் **अविरोधः** (அவிரோத:)=புராணத்திற் கூறியதுடன் விரோதமில்லை. (16) (எ—று)

பாஷ்யம்.—அந்த 7 நரகங்களிலும் யமனுக்கே தலைவன் தொழிலங்கீகரிக்கப்படுவதால் விரோதமில்லை. சித்திரகுப்தன் முதலியோர் யமனால் தூண்டப்பட்டவர்களாய்க் கொண்டல்லவோ யஜமானர்களாக உபதேசிக்கப்படுகின்றனர். (16)

(ஸூ) வித்யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத் (17)

(ப—ரை) ஏதயோ: பதோர்ந கதரேணசன என்ற ஶ்ருதியில் ஏதயோ: என்றதால் **विद्याकर्मणोरिति तु** (வித்யாகர்மணோரிதி து)=வித்யை (உபாஸனம்) கர்மம் இவைகளே **प्रकृतत्वात्** (ப்ரக்ருதத்வாத்)=தொடர்ச்சியையனுசரித்துக் கொள்ளப்படுவதாலும் அநிஷ்டாதிகாரிகளுக்குச் சந்திரலோக ப்ராப்திகிடையாது. (17)(எ—று)

பாஷ்யம்.—பஞ்சாக்னி வித்யையை உபதேசிக்குமிடத்தில் "இந்தச் சந்திர மண்டலமானது (மறித்த பிறகு வந்து சேருகின்ற பிராணிகளால்) எவ்விதம் நிறப்பப்படாததாசவாகின்றது" என்ற கேள்விக்குப் பதில் சொல்லுமிடத்துப் பின்வரு

दावर्तीनि भूतानि भवन्ति । जायस्व म्रियस्वेत्येतत्तृतीयं स्थानं तेनासौ लोको न संपूर्यते' (छा० ५ । १० । ८) इति । तत्रैतयोः पथोरिति विद्याकर्मणोरित्येतत् । कस्मात् । प्रकृतत्वात् । विद्याकर्मणी हि देवयानपितृयाणयोः पथोः प्रतिपत्तौ प्रकृते । 'तद्य इत्थं विदुः' इति विद्या तया प्रतिपत्तव्यो देवयानः पन्थाः प्रकीर्तितः । 'इष्टापूर्ते दत्तम्' (छा० ५ । १० । १, ३) इति कर्म तेन प्रतिपत्तव्यः पितृयाणः पन्थाः प्रकीर्तितः । तत्प्रक्रियायाम्—'अथैतयोः पथोर्न कतरेणचन' इति श्रुतम् । एतदुक्तं भवति—ये न विद्यासाधनेन देवयाने पथ्यधिकृता नापि कर्मणा पितृयाणे तेषामेष क्षुद्रजन्तुलक्षणोऽसकृदावर्ती तृतीयः पन्था भवतीति । तस्मादपि नानिष्टादिकारिभिश्चन्द्रमाः प्राप्यते । स्यादेतत् । तेऽपि चन्द्रबिम्बमारुह्य ततोऽवरुह्य क्षुद्रजन्तुत्वं प्रतिपत्स्यन्त इति । तदपि नास्ति । आरोहानर्थक्यात् । अपिच सर्वेषु प्रयत्सु चन्द्रलोकं प्राप्नुवत्स्वसौ लोकः प्रयद्भिः संपू-

---

மாறு படிக்கப்படுகின்றது. அதாவது:—(எவர்கள்) தேவயான பிதுருயாண ஸாதனமான வித்யா கர்மங்களில் அதிகாரம் பெறவில்லையோ அவர்கள் தேவயானம், பிதிருயாணம் என்ற மார்க்கங்களுள் ஒன்றினாலும் செல்லுவதில்லை. அவர்கள் அடிக்கடி ஜனனமரணங்களை யடைகின்ற க்ஷுத்திரமான (கொசு, புழு முதலிய) பிராணிகளாகின்றனர். அதாவது: பிறப்பதும் இறப்பதுமாயுள்ள மூன்றாவது ஸ்தானத்தையடைந்தவராகவாகின்றனர்'' என்பதாம். இந்த ஶ்ருதியிலுள்ள ஏதயோ: பதோ: என்றதற்கு வித்யை, கர்மம் என்று பொருள். ஏன்? தொடர்பு இருப்பது பற்றியே என்க. வித்யைகர்மம் இவைகள்தான் (முறையே) தேவயானம் பிதுருயாணம் என்ற மார்க்கங்களையடைவதில் ஸாதனமாய் (முன்பு) தொடங்கப்பட்டிருக்கிறது. அதாவது:—"எவர்கள் இவ்விசமுபாஸிக்கின்றனரோ'' என்று தொடங்கி வித்யையும், அதனால் அடையத்தகுந்த தேவயானம் என்ற மார்க்கமும் சொல்லப்பட்டிருக்கிறது. "யாகம், குளம் வெட்டல் முதலியன, தானம்'' என்று தொடங்கி கர்மமும், அதனால் அடையத்தக்க பிதிருயாணம் என்ற மார்க்கமும் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதாம். அந்தப் பிரகரணத்தில் "ஏதயோ: பதோர் நகதரேணசந'' என்று படிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஶ்ருதியால் இவ்விதம் (பின்வருமாறு) கூறப்பட்டதாகின்றது. எவர்கள் வித்யை என்ற ஸாதனத்தினால் (அடையத்தக்க) தேவயானம் என்ற மார்க்கத்தில் அதிகாரம் பெறவில்லையோ, கர்மத்தினால் (அடையத்தக்க) பிதிருயாணம் என்ற மார்க்கத்திலும் அதிகாரம் பெறவில்லையோ அவர்களுக்கு (கொசு, புழு முதலிய) க்ஷுத்திர ஜந்துரூபமானதும், அடிக்கடி ஜனனமரணங்களை அடைகின்றதுமான இந்த மூன்றாவதுமார்க்கம் ஏற்படுகின்றது என்பதாம் என இவ்விதம் கூறப்பட்டிருப்பதாலும் அநிஷ்டாதிகாரிகளால் சந்திரன் அடையப்படுவதில்லை.

சங்கை — இஃதிருக்கட்டும், அநிஷ்டாதிகாரிகளும் சந்திரமண்டலத்தையடைந்து, அதனின்றும் இரங்கி க்ஷுத்திரப்பிராணியாயிருத்தலை அடையக்கூடாதோ எனின்?

உத்தரம்—அதுவுமில்லை. (சந்திரமண்டலத்தில்) ஏறினது பயனற்றுவிடுவது

येतेत्यत: प्रश्नविरुद्धं प्रतिवचनं प्रसज्येत । तथाहि प्रतिवचनं दातव्यं यथाऽसौ लोको न संपूर्यते । अवरोहाभ्युपगमादसंपूर्णोपपत्तिरिति चेत् । न । अश्रुतत्वात् । सत्यमवरोहादप्यसंपूरणमुपपद्यते । श्रुतिस्तु तृतीयस्थानसङ्कीर्तनेनासंपूरणं दर्शयति—'एतत्तृतीयं स्थानं तेनासौ लोको न संपूर्यते' (छा० ५ । १० । ८) इति । तेनानारोहादेवासंपूरणमिति युक्तम् । अवरोहस्येष्टादिकारिष्वप्यविशिष्टत्वे सति तृतीयस्थानोक्त्यानर्थक्यप्रसङ्गात् । तुशब्दस्तु शाखान्तरीयवाक्यप्रभवामशेषगमनाशङ्कामुच्छिनत्ति । एवं सत्यधिकृतापेक्ष: शाखान्तरीये वाक्ये सर्वशब्दोऽवतिष्ठते । ये वै केचिदधिकृता अस्माल्लोकात्प्रयन्ति चन्द्रमसमेव ते सर्वे गच्छन्तीति ॥ १७ ॥

यत्पुनरुक्तं देहलाभोपपत्तये सर्वे चन्द्रमसं गन्तुमर्हन्ति, पञ्चम्यामाहुतावित्याहुतिसङ्ख्यानियमादिति । तत्प्रत्युच्यते—

பற்றியே என்க. இறந்த யாவரும் சந்திர லோகத்தையடைந்தால் அந்த லோகம் இறந்தவர்களால் நிரப்பப்பட்டுவிடுமாதலால் பதிலானது கேள்விக்கு முறண்பட்டதாகவாகிவிடும். (அந்த சந்திரலோகம் இறப்பவர்களால் ஏன் நிரப்பப்படவில்லை என்ற கேள்விக்கு) எவ்விதம் அந்தலோகம் நிறைவுபெருதோ அவ்விதமல்லவோ பதில் கொடுக்கவேண்டும்.

சங்கை—(சந்திர லோகம் சென்றவர்களுக்கு அங்கிருந்து) கீழ்வருதலங்கீகரிக்கப்படுவதால் நிறைவு பெருமை பொருந்தலாம் எனின்?

உத்தரம்—இல்லை அது ஶ்ருதியால் அறியப்படாமைபற்றியே என்க. அதாவது:—(கீழ்) இரங்குவதால் (சந்திரமண்டலத்துக்கு) நிறைவுபெருமை உண்மையில் ஸம்பவிக்கலாந்தான். (ஆயினும்) "இது மூன்ருவது ஸ்தானமாகும். அதனுல் அந்தலோகம் நிறப்பப்படுவதில்லை" என்ற ஶ்ருதியோவெனில் 3-வது ஸ்தானத்தைச் சொல்லி நிறப்பப்படாமையை காண்பிக்கின்றது. ஆகையினுல் (பாபிகள் சந்திரனே) அடையாமையயாலேயே நிறைவுபெருமை ஸம்பவிப்பதென்பது பொருந்துவதாகின்றது. இஷ்டாதிகாரிகளுக்குக்கீழ் இரங்குதல் பொதுவாயிருப்பதிலிருந்தே (அநிஷ்டாதிகாரிகளுக்கும் இரங்குதல் அர்த்தஸித்தமாவதால் அவர்களுக்கு) மூன்ருவது மார்க்கங்கூறினது பயனற்றதாகவே பிரஸக்தமாகும். ஸூத்திரத்திலுள்ள து என்ற பதமானது வேறு சாகையைச்சேர்ந்த வாக்கியத்தினின்றுமுண்டான எல்லோரும் சந்திரனே அடைகின்றனர் என்ற ஆசங்கையை விலக்குகின்றது. முற்கூறியபடி தீர்மானிக்கப்பட்டுவிட்டபடியால் வேறுசாகையில் படித்த வாக்கியத்திலுள்ள எல்லோரும் என்றபதமானது சந்திரனே அடைய அதிகாரம்பெற்றவர்களே அபேக்ஷித்ததாகவாகின்றது. அதாவது:—சந்திரனே அடைய அதிகாரம் பெற்ற எந்தச்சிலர் இவ்வுலகினின்றும் செல்லுகின்றனரோ அவர்யாவரும் சந்திரனேயே அடைகின்றனர் என்பதாம். (17) (எ—று)

அவதாரிகா பாஷ்யம்.—"ஐந்தாவது ஆஹுதியில்" என்றவிடத்தில் ஹோம ஸங்கியையில் நியமமிருப்பதால் தேஹலாபம் பொருந்துவதற்காக எல்லோரும்

न तृतीये तथोपलब्धेः ॥ १८ ॥

न तृतीये स्थाने देहलाभाय पञ्चसङ्ख्यानियम आहुतीनामादर्तव्यः। कुतः—तथोपलब्धेः। तथाह्यन्तरेणैवाहुतिसङ्ख्यानियमं वर्णितेन प्रकारेण तृतीयस्थानप्राप्तिरुपलभ्यते 'जायस्व म्रियस्वेत्येतत्तृतीयं स्थानम्' (छा० ५।१०।८) इति। अपिच 'पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो भवन्ति' (छा० ५।३।३) इति मनुष्यशरीरहेतुत्वेनाहुतिसङ्ख्या सङ्कीर्त्यते न कीटपतङ्गादिशरीरहेतुत्वेन, पुरुषशब्दस्य मनुष्यजातिवचनत्वात्। अपिच पञ्चम्यामाहुतावपां पुरुषवचस्त्वमुपदिश्यते नापञ्चम्यामाहुतौ पुरुषवचस्त्वं प्रतिषिध्यते, वाक्यस्य द्व्यर्थतादोषात्। तत्र येषामारोहावरोहौ संभवतस्तेषां पञ्चम्यामाहुतौ देह उद्भविष्यति। अन्येषां तु विनैवाहुतिसङ्ख्यया भूतान्तरोपसृष्टाभिरद्भिर्देह आरप्स्यते ॥

சந்திரனை அடையத் தகுதியுள்ளவர்களாகின்றனர் என யாதொன்று சொல்லப்பட்டதோ அதற்குப் பதில் கூறப்படுகின்றது.

(ஸூ) ந த்ருதீயே ததோபலப்த்தே: (18)

(ப—ரை) **तृतीये** (த்ருதீயே)=மூன்றுவது மார்க்கத்தில் **न** (ந)=ஆஹுதிகளில் 5 என்ற எண்ணின் நியமம் (ஆவஶ்யகதை) ஆதரிக்கத்தக்கதல்ல. **तथोपलब्धेः** (ததோபலப்த்தே:)=5 என்ற ஆஹுதி ஸங்கியா நியமமின்றியே மூன்றுவது ஸ்தான லாபம் காணப்படுவதுபற்றியே என்க. (18) (எ—று)

பாஷ்யம்.—மூன்றுவது மார்க்கத்தில் சரீரலாபத்துக்கு வேண்டி ஆஹுதிகளில் 5 என்ற எண்ணின் நியமம் ஆதரிக்கத்தகுந்ததன்று. ஏன்? அவ்விதம் காணப்படுவதுபற்றியே என்க. அதாவது: "பிறப்பதும் இறப்பதுமாயுள்ள இந்தப்பிறவி மூன்றுவது ஸ்தானமாகும்" என்றதால் அவ்விதமே யன்றோ ஆஹுதியின் எண்ணில் நியமமின்றியே முற்கூறிய முறைப்படி மூன்றுவது ஸ்தான லாபமானது அறியப்படுகின்றது என்பதாம். "ஐந்தாவது ஆஹுதியில் அப்புகள் (பூதஸூக்ஷமங்கள்) புருஷன் என்ற பெயருள்ளனவாகவாகின்றன" என்றதால் மனுஷ்யசரீரத்துக்குக் காரணமாய் ஹோமசங்கியை சொல்லப்படுகின்றதேயல்லாது புழு, பறவை முதலியவற்றின் சரீரத்துக்கும் காரணமாய்ச் சொல்லப்படவில்லை. புருஷ என்ற வார்த்தை மனிதஜாதியைக் குறிப்பதாக விருப்பதுபற்றியே என்க. மேலும், ஐந்தாவது ஆஹுதி ஏற்பட்டபிறகு அப்புக்களுக்குப் புருஷன் என்ற பெயர் உபதேசிக்கப்படுகின்றதேயல்லாது ஐந்தாவது ஆஹுதி ஏற்படாவிடில் (அவற்றுக்கு) புருஷன் என்ற பெயரால் குறிக்கப்படுதல் தடுக்கப்படுவதில்லை. (அங்ஙனமாயின் ஒரு வாக்கியத்துக்கு) இரண்டு பொருளுள்ளதாயிருத்தல் என்ற தோஷம் வருவதுபற்றியே என்க. (அதாவது: வாக்யபேதம் வரும் என்பது கருத்து) எவர்களுக்கு ஏறுதல் இரங்குதல் இவைகள் ஸம்பவிக்கின்றனவோ அவர்களுக்கு ஐந்தாவது ஆஹுதி ஏற்பட்ட பிறகு தேஹம் உண்டாகின்றது. மற்றவர்களுக்கோவெனில் ஹோமஸங்கியையின்றியே மற்ற பூதஸூக்ஷமங்களுடன் சேர்ந்த ஜலங்களால் சரீரம் உண்டுபண்ணப்படுகின்றது. (18) (எ—று)

स्मर्यतेऽपि च लोके ॥ १९ ॥

अपिच स्मर्यते लोके । द्रोण धृष्टद्युम्न प्रभृतीनां सीता द्रौपदी प्रभृतीनां चायोनिजत्वम् । तत्र द्रोणादीनां योषिद्विषयैकाहुतिर्नास्ति । धृष्टद्युम्नादीनां तु योषित्पुरुषविषये द्वे अप्याहुती न स्तः । यथा च तत्राहुतिसङ्ख्यानादरो भवत्येवमन्यत्रापि भविष्यति । बलाकाप्यन्तरेणैव रेतःसेकं गर्भं धत्त इति लोकरूढिः ॥ १९ ॥

दर्शनाच्च ॥ २० ॥

(ஸூ) ஸ்மர்யதேபிச லோகே (19)

(ப-ரை) **अपिच** (அபிச) = மேலும், **लोके** (லோகே)=மஹாபாரதாதிகளில் **स्मर्यते** (ஸ்மர்யதே)=த்ரோணர், திருஷ்டதுப்னன் முதலியோருக்கு அயோனிஜத்வமானது சொல்லப்படுகின்றது. இதனாலும் 5-வது ஆஹுதிதான் சரீராம்பத்தைச் செய்கின்றதென்ற நியமமில்லை என்பது பெறப்படுகின்றது. (19) (எ-று)

பாஷ்யம்.—மேலும் மஹாபாரதாதிகளில் * துரோணர் திருஷ்டத்யும்னன் முதலியவர்களுக்கும், ஸீதை, திரௌபதீ முதலியவர்களுக்கும் அயோனிஜத்வமானது (மாதாவின் கர்ப்பவாஸமின்மையானது) உபதேசிக்கப்படுகின்றது. அவர்களுள் துரோணர் முதலியவர்களுக்கு ஸ்திரீயாகிற அக்னியில் ஹோமமானது கிடையாது. திருஷ்டத்யும்னாதிகளுக்கோவெனில் ஸ்திரீ, புருஷன் இவ்விருவர் விஷயமான இரண்டுஹோமங்களுமில்லை. அங்கு எவ்விதம் ஹோமத்தின் எண்ணில் ஆதரவு கிடையாதோ இவ்விதமே மற்றவிடத்திலும் ஸம்பவிக்கலாம். பெண்கொக்கும் வீர்யஸம்பந்தமில்லாமலே கர்ப்பத்தைத்தரிக்கின்றதென்ற லோகப்ரஸித்தியு மிருக்கின்றது. (19)

(ஸூ) தர்சநாத் ச (20)

(ப-ரை) **दर्शनात् च** (தர்ஶநாத் ச)=நான்குவிதமான பிராணி ஸமூஹங்களில் வியர்வையினின்றுமுண்டாகின்றவை, பூமியைப் பிளந்து உண்டாகின்ற மரம் கொடி முதலியவை இவற்றிற்கு ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கையின்றியே உத்பத்தி ஏற்படுவதைக் காண்பதாலும் 5-வது ஆஹுதிதான் சரீராரம்பத்தைச் செய்கின்றதென்ற நியமம் ஸம்பவிக்காது. (20) (எ-று)

---

* பரத்வாஜர் என்ற மஹர்ஷியானவர் கிருதாசீ என்ற தேவதாஸியைக் கண்டு மோஹமடையுங்கால் அவரது வீர்யம் வெளிவரவே அதைத்துரோணம் என்ற கமண்டலுவில் போட்டு வைத்ததாகவும், அதனின்றும் துரோணாசார்யர் உண்டானதாகவும், துருபதன் யாகம் செய்யும் பொழுது யாககுண்டத்தினின்றும் த்ருஷ்டத்யும்னனும், யாகவேதியினின்றும் திரௌபதியு முண்டானதாகவும், ஜனகன் யாகம் செய்வதற்காகப் பூமியைக் கலப்பை கொண்டு உழும்பொழுது ஒருபெட்டி கிடைத்ததாகவும், அதற்குள் இருந்த பெண்குழந்தையே ஸீதை என்றும் மஹாபாரதம் முதலியவற்றில் உபதேசிக்கப் பட்டிருக்கிறது.

अपिच चतुर्विधे भूतग्रामे जरायुजाण्डजस्वेदजोद्भिज्जलक्षणे स्वेदजोद्भिज्जयोरन्तरेणैव ग्राम्यधर्ममुत्पत्तिदर्शनादाहुतिसङ्ख्यानादरो भवति। एवमन्यत्रापि भविष्यति ॥ २० ॥

ननु 'तेषां खल्वेषां भूतानां त्रीण्येव बीजानि भवन्ति आण्डजं जीवजमुद्भिज्जम्' (छा० ६ । ३ । १) इति। अत्र त्रिविध एव भूतग्रामः श्रूयते कथं चतुर्विधत्वं भूतग्रामस्य प्रतिज्ञातमिति । अत्रोच्यते—

तृतीयशब्दावरोधः संशोकजस्य ॥ २१ ॥

'आण्डजं जीवजमुद्भिज्जम्' (छा० ६ । ३ । १) इत्यत्र तृतीयेनोद्भिज्जशब्देनैव स्वेदजोपसङ्ग्रहः कृतः प्रत्येतव्यः। उभयोरपि स्वेदजोद्भिज्जयोर्भूम्युदकोद्भेदप्रभवत्वस्य तुल्यत्वात्। स्थावरोद्भेदात्तु विलक्षणो जङ्गमोद्भेद इत्यन्यत्र स्वेदजोद्भिज्जयोर्भेदवाद इत्यविरोधः॥

பாஷ்யம்.—மேலும் ஜராயுஜம் (கர்ப்பப்பையினின்றும் வெளிவருவது) ஆண்டஜம் (முட்டையினுள்ளினின்றும் வெளிவருவது) ஸ்வேதஜம் (வியர்வையினின்றும் வெளிவருவது) உத்பிஜ்ஜம் (பூமியைப்பிளந்து வெளிவருவது) என்ற நான்கு விதமான பிராணி ஸமூஹத்தில் ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் இவற்றுக்கு ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கையின்றியும் உத்பத்தி காணப்படுவதால் ஹோமத்தின் எண்ணில் ஆதரவின்மை ஏற்படுகின்றது. இவ்விதமே மற்றவிடத்திலும் ஸம்பவிக்கலாம்.

அவதாரிகா பாஷ்யம்.—"அந்த இந்தப்பிராணிகளுக்கு மூன்றேகாரணங்களாகின்றன. ஆகவே அவைகள் ஆண்டஜம், ஜராயுஜம், உத்பிஜ்ஜம் என மூன்றுவிதமாகும்" என்றவிடத்தில் மூன்றுவிதமாகவே பூதஸமூஹம் உபதேசிக்கப்படுகின்றன. (ஆதலால்) பூதஸமூஹத்துக்கு நான்குவிதமாகவிருத்தல் எங்ஙனம் பிரதிக்ஞை செய்யப்பட்டதெனின்? இவ்விஷயத்தில் பதில் சொல்லப்படுகின்றது—

(ஸூ) த்ருதீயசப்தாவரோத: ஸம்சோகஜஸ்ய (21)

(ப—ரை) संशोकजस्य (ஸம்ஶோகஜஸ்ய)=ஸ்வேதஜத்துக்கு तृतीयशब्दावरोधः (த்ருதீயஶப்தாவரோத:)=तृतीय (த்ருதீய)=(ஆண்டஜம், ஜீவஜம், உத்பிஜ்ஜம் என்றவிடத்திலுள்ள शब्द (ஶப்த)=உத்பிஜ்ஜம் என்ற பதத்தினுலேயே अवरोधः (அவரோத:)=கிரஹணமானது [प्रत्येतव्यः (ப்ரத்யேதவ்ய:)=காணத்தகுந்தது.] (21)

பாஷ்யம்.—ஆண்டஜம், ஜீவஜம், உத்பிஜ்ஜம் என்றவிடத்திலுள்ள மூன்ருவதான உத்பிஜ்ஜம் என்ற பதத்தினுலேயே ஸ்வேதஜத்தையும் சேர்த்துக்கொண்டதாய் அறியவேண்டும். ஸ்வேதஜம், உத்பிஜ்ஜம் இரண்டிற்கும் (அவ்வவற்றிற்குத் தக்கபடி) பூமி, ஜலம் இவற்றைப்பிளந்து உண்டாகுதல் ஒற்றிருப்பதுபற்றியே என்க. ஜங்கமோத்பேதமானது (புழு முதலியவற்றின் உத்பத்தியானது) ஸ்தாவரோத்பேதத்தைக் காட்டிலும் (மரம் முதலியவற்றின் உத்பத்தியைக் காட்டிலும்) விசேஷமுள்ளதாயிருத்தல்பற்றி மற்றவிடங்களில் வேறுபடுத்திக் கூறல் ஏற்படுவதால் விரோதமில்லே. (21) (எ—று)

மூன்ருவது அநிஷ்டாதிகாரி அதிகரணம் முற்றிற்று.

४ साभाव्यापत्त्यधिकरणम्। सू० २२

साभाव्यापत्तिरुपपत्तेः ॥ २२ ॥

वियदादिस्वरूपत्वं तत्साम्यं वाऽवरोहिणः। वायुर्भूत्वेत्यादिवाक्यात्तत्तद्भावं प्रपद्यते ॥ १ ॥

खवत्सूक्ष्मो वायुवशो युक्तो धूमादिभिर्भवेत्। अन्यस्यान्यस्वरूपत्वं न मुख्यमुपपद्यते ॥ २ ॥

इष्टादिकारिणश्चन्द्रमसमारुह्य तस्मिन्यावत्संपातमुषित्वा ततः सानुशया अवरोहन्तीत्युक्तम्। अथावरोहप्रकारः परीक्ष्यते। तत्रेयमवरोहश्रुतिर्भवति—"अथैतमेवाध्वानं पुनर्निवर्तन्ते यथेतमाकाशमाकाशाद्वायुं वायुर्भूत्वा धूमो भवति धूमो भूत्वाऽभ्रं भवत्यभ्रं भूत्वा मेघो भवति मेघो भूत्वा प्रवर्षति' (छा० ५। १०। ५) इति। तत्र संशयः—किमाका-

---

ஸாபாவ்யாபத்யதிகரணம் 4.

(அ—கை) இந்த அதிகரணத்தால் சந்திரமண்டலத்தினின்றும் இரங்கும் முறை விசாரிக்கப்படுகிறது.

(ஸூ) ஸாபாவ்யாபத்திருபபத்தே: (22)

(ப—ரை) [चन्द्रमण्डलादवरोहिणाम (சந்திரமண்டலாதவரோஹிணாம்)=சந்திரமண்டலத்தினின்றும் இரங்குகின்றவர்கட்கு] **साभाव्यापत्तिः** (ஸாபாவ்யாபத்திஃ)= ஆகாசாதிகளின் ஸாம்ய ப்ராப்தியானது **भवति** (பவதி)=ஏற்படுகிறது. ஏன்? **उपपत्तेः** (உபபத்தே:)=அதற்குப்போதிய யுக்தியிருப்பதே அதன் காரணமாகும்:

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) சந்திரமண்டலத்தினின்றும் இரங்குகின்றவர்க்கு ஆகாசாதிகளின் ஸ்வரூபப்ராப்தியா? அல்லது அவற்றின் ஸாம்யப்ராப்தியா? என்பது ஸந்தேஹம். "வாயுவாகவாகி" என்றதாதியான வாக்கியத்தினின்றும் அந்தந்தப் பொருளின் தன்மையை யடைகின்றான் என்பதுதான் பொருத்தமுள்ளது என்பது **பூர்வபக்ஷம்.** ஆகாசம்போன்று ஸூக்ஷ்மமாகவாகி வாயுவின் வசத்தையடைந்து தூமம் முதலியவற்றுடன் கூடினவனாகவாகிறான். ஒன்றுக்கு மற்றொன்றின் ஸ்வரூப ப்ராப்தியானது முக்கியமாகப் பொருந்தமாட்டாது என்பது **ஸித்தாந்தம்.**

பாஷ்யம்.—யாகாதிகளைச் செய்தவர் சந்திரமண்டலத்தையடைந்து அதில் கர்மமுள்ளவரை இருந்து அங்கிருந்து அநுஶயத்துடன் கூடினவர்களாக இரங்குகின்றனர் என்று சொல்லப்பட்டது. இதுபோழ்து இரங்கும்முறை பரீக்ஷிக்கப்படுகிறது. அவ்விடத்தில் இரக்கத்தைக்கூறும் பின்வரும் ஶ்ருதி காணப்படுகிறது. அதாவது: "எவ்விதம் செல்லப்பட்டதோ பின்னர் இதேமார்க்கத்தைத்திரும்பவும் அடைகின்றனர். (முதலில்) ஆகாசத்தையும், ஆகாசத்தினின்றும் வாயுவையும், வாயுவாகவாகி தூமத்தையும் அடைகிறான். தூமமாகவாகி *அப்ரமாகவாகிறான். அப்ரமாகவாகி மேகத்தையடைகிறான். மேகமாகவாகி வர்ஷிக்கிறான்" என்பதாம்.

---

* சுருதியில் "அப்ர" என்றதால் மழைபொழிவதற்கு முன்னிலையிலுள்ளதும், "மேக" என்றதால் மழைபொழியும் நிலையிலுள்ளதும் சொல்லப்படுகிறது.

शादिस्वरूपमेवावरोहन्तः प्रतिपद्यन्ते किं वाकाशादिसाम्यमिति। तत्र प्राप्तं तावदाकाशादिस्वरूपमेव प्रतिपद्यन्त इति। कुतः—एवं हि श्रुतिर्भवति। इतरथा लक्षणा स्यात्। श्रुतिलक्षणाविशये च श्रुतिर्न्याय्या न लक्षणा। तथा च वायुर्भूत्वा धूमो भवतीत्येवमादीन्यक्षराणि तत्तत्स्वरूपोपपत्तावाञ्जस्येनावकल्पन्ते। तस्मादाकाशादिस्वरूपप्रतिपत्तिरिति। एवं प्राप्ते ब्रूमः—आकाशादिसाम्यं प्रतिपद्यन्त इति। चन्द्रमण्डले यदम्मयं शरीरमुपभोगार्थमारब्धं तदुपभोगक्षये सति प्रविलीयमानं सूक्ष्ममाकाशसमं भवति ततो वायोर्वशमेति ततो धूमादिभिः संपृच्यत इति। तदेतदुच्यते—'यथेतमाकाशमाकाशाद्वायुम्' (छा० ५। १०। ५) इत्येवमादिना। कुत एतत्। उपपत्तेः। एवं ह्येतदुपपद्यते। नह्यन्यस्यान्यभावो मुख्य उपपद्यते। आकाशस्वरूपप्रतिपत्तौ च वाय्वादिक्रमेणावरोहो नोपपद्यते। विभुत्वाच्चाकाशेन नित्यसंबन्धवत्त्वान्न तत्सादृश्यापत्तेरन्यस्तत्संबन्धो घटते। श्रुत्यसंभवे च लक्षणाश्रयणं न्याय्यमेव। अत आकाशादितुल्यतापत्तिरेवात्राकाशादिभाव इत्युपचर्यते ॥२२॥

அதில் ஸம்சயமுதயமாகிறது. அதாவது:—இரங்குகின்றவர் ஆகாசாதிகளின் ஸ்வரூபத்தையேயடைகின்றனரா? அல்லது ஆகாசாதிகளின் ஸாம்யத்தையடைகின்றனரா? என்பதாம். இவ்விடத்தில் ஆகாசாதிகளின் ஸ்வரூபத்தையேயடைகின்றனர் என முதன்முதலில் தோற்றுகின்றது. ஏன்? இவ்விதமேயன்றோ ஸ்ருதி (சக்யார்த்தம்) யிருக்கிறது. இதற்கு மாறுனல் லக்ஷணையைக் கற்பிக்கவேண்டிவரும். ஸ்ருதி (சக்யார்த்தம்) லக்ஷணை இவ்விரண்டனுள் சக்யார்த்தம் கொள்வது நியாயமாகவாகுமேயொழிய லாக்ஷணிகமான பொருள் கொள்ளுவது நியாயமாகவாகாது. ஆகவே வாயுவாகவாகி தூமமாகவாகிறுன் என்ற இம்மாதிரியான பதங்கள் அவ்வவற்றின் ஸ்வரூபப்ராப்தியைச் சொல்லுங்கால் ருஜுவாகப் பொருந்திவிடுகின்றன. ஆனதுபற்றி ஆகாசாதிகளின் ஸ்வரூபப்ராப்தியேற்படுகிறது என்று தானேற்படுகிறது என இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்தமாகவே ஆகாசாதிகளின் ஸாம்யத்தையடைகிறுன் எனச் சொல்லுகிறேம். சந்திரமண்டலத்தில் உபபோகத்துக்கு வேண்டி ஆரம்பித்த ஜலமயமான சரீரம் யாதுண்டோ அதனுடைய உபபோகம் (அநுபவம்) தேய்ந்ததும் ஒடுங்கவாரம்பித்ததாய் ஸூக்ஷ்மமாகவாகி ஆகாசஸாம்யத்தை யடைகிறது. அதன் பின்னர் வாயுவின் வசத்தை யடைகிறுன். அதன் பின்னர் தூமாதிகளுடன் சேர்க்கையையடைகிறுன் என்பதாம். அந்த இதுவே "சென்றதையொட்டி ஆகாசத்தையும் ஆகாசத்தினின்றும் வாயுவையும் அடைகிறுன்" என்றதாதியாற் சொல்லப்படுகிறது. இது எதனுலென்றுல்? உபபத்தி (யுக்தி) யிருப்பதே அதன் காரணமாகும். இவ்விதஞ் சொன்னுலன்றோ இது பொருந்தும். ஒன்றுக்குப் பிறவற்றின் தன்மை முக்கியமாக ஏற்படாதல்லவா. ஆகாசஸ்வரூப ப்ராப்த்தி சொன்னுலோ வாய்வாதி முறையாக இரங்குதல் பொருந்தாதன்றே? (ஆகாசம்) விபுவாகையாலும், ஆகாசத்துடன் நித்திய ஸம்பந்தமுள்ளதாயிருப்பதுபற்றியும் ஆகாச ஸாம்யாபத்தியைத் தவிர்த்து வேறுபட்ட அதன் ஸம்பந்தம் பொருந்தவும் மாட்டாது. சக்யார்த்தம் ஸம்பவிக்காவிடில் லக்ஷணை முறையை ஆஸ்ரயிப்பது நியாயமானதேயாகும். ஆனதுபற்றி ஆகாசாதிகளுக்குத்

५ नातिचिराधिकरणम्। सू० २३

नातिचिरेण विशेषात् ॥ २३ ॥

व्रीह्यादेः प्राग्विलंबेन त्वरया वाऽवरोहति। तत्रानियम एव स्यान्नियामकविवर्जनात् ॥ १ ॥

दुःखं व्रीह्यादिनिर्याणमिति तत्र विशेषितः। विलंबस्तेन पूर्वत्र त्वरार्थादवसीयते ॥ २ ॥

तत्राकाशादिप्रतिपत्तौ प्राग्व्रीह्यादिप्रतिपत्तेर्भवति विशयः। किं दीर्घं दीर्घं कालं पूर्वपूर्वसादृश्येनावस्थायोत्तरोत्तरसादृश्यं गच्छन्त्युताल्पमिति। तत्रानियमो नियमकारिणः शास्त्रस्याभावादिति। एवं प्राप्त इदमाह—नातिचिरेणेति। अल्पमल्पं कालमाकाशादिभावे

துல்லியமாக இருத்தலேதான் இவ்விடத்தில் ஆகாசாதிபாவம் என உபசாரமுறையாற் கூறப்படுகிறது. (22) (எ-று)

நான்காவது ஸாபாவ்யாபத்யதிகரணம் முற்றிற்று.

நாதிசிராதிகரணம் 5.

(ஸூ) நாதிசிரேண விசேஷாத் (23)

(ப-ரை) **नातिचिरेण** (நாதிசிரேண) = ஆகாசஸாம்யத்தை யடைந்தபின்னர் அதிகதாமதமின்றியே இந்தப்புருஷன் வர்ஷதாரைகளுடன் ஸம்பந்தத்தை அடைகிறான், ஏன்? **विशेषात्** (விசேஷாத்)=ஶ்ருதியில் அவ்விதவிசேஷம்கூறியிருப்பதே அதன் காரணமாகும். (23) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) வ்ரீஹிமுதலியவற்றை யடைவதற்குமுன்னர் வெகுதாமதத்துடன் இரங்குகின்றனரா? அல்லது வேகமாக இரங்குகின்றனரா? என்பது ஸந்தேஹம். அவ்விஷயத்தில் இன்னவிதந்தானென நியமஞ்செய்யக்கூடிய தொன்றுமில்லாததுபற்றித் தாமதித்தென்றோ, சீக்கிரமாகவென்றோ நியமமெதுவுமில்லை என்பது பூர்வபக்ஷம். அவ்விடத்திலுள்ள ஶ்ருதியில் வ்ரீஹ்யாதிகளினின்றும் வெளிவருதல் வெகுகஷ்டமானது எனத் தனித்துக் கூறியிருப்பதிலிருந்து வ்ரீஹ்யாதிப்ராப்த்திக்குப் பிந்திவிளம்பத்துடனும் அதற்கு முன்னர் விளம்பமின்றியும் இரங்குகின்றனர் என்றேற்படுகிறது என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—அங்கு ஆகாசாதிப் பிராப்த்தியேற்பட்டதும் வ்ரீஹ்யாதிப்ராப்த்திச்கு முன்னர் நீண்ட நீண்டகாலம் முன்முன்னுள்ளவற்றின் ஸாம்யத்துடனிருந்து பேன்மேலுள்ளவற்றின் ஸாம்யத்தை யடைகின்றனரா? அல்லது அற்பகால மிருந்து ஸாம்யத்தை யடைகின்றனரா? என ஸம்ஶயமுண்டாகிறது. நியமகாரியான ஶாஸ்திரமில்லாமைபற்றி அவ்விஷயத்தில் நியமமெதுவுமில்லை என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே "நாதிசிரேண" என்றதால் பதில்சொல்லு

नावस्थाय वर्षधाराभिः सहेमां भुवमापतन्ति । कुत एतत् । विशेषदर्शनात् । तथाहि व्रीह्यादिभावापत्तेरनन्तरं विशिनष्टि—'अतो वै खलु दुर्निष्प्रपतरम्' (छा० ५ । १० । ६) इति । तकार एकश्छान्दस्यां प्रक्रियायां लुप्तो मन्तव्यः। दुर्निष्प्रपततरं दुर्निष्क्रमतरं दुःखतरमस्माद्व्रीह्यादिभावान्निस्सरणं भवतीत्यर्थः । तदत्र दुःखं निष्प्रपतनं प्रदर्शयन्पूर्वेषु सुखं निष्प्रपतनं दर्शयति । सुखदुःखताविशेषश्चायं निष्प्रपतनस्य कालाल्पत्वदीर्घत्वनिमित्तः । तस्मिन्नवधौ शरीरानिष्पत्तेरुपभोगासंभवात् । तस्माद्व्रीह्यादिभावापत्तेः प्रागल्पेनैव कालेनावरोहः स्यादिति ॥ २३ ॥

கிறார். அற்பமற்பம் காலம் ஆகாசாதிபாவத்துடனிருந்து வர்ஷதாரைகளுடன் கூட இந்தப் பூமியை அடைகின்றனர். இது எவ்விதமெனில்? விசேஷதர்சன மிருப்பதே அதன்காரணமாகும். அதாவது:—வ்ரீஹ்யாதிபாவப்ராப்திக்குப் பிறகு "இதற்குப்பிறகு வெகுகஷ்டப்பட்டு வெளிவரத்தக்கபிறவியை (அதாவது: வ்ரீஹ்யாதிபாவத்தை) அடைகிறான்." எனச் ஶ்ருதியில் விசேஷம் காணப்படு கிறது. இங்கு ஶ்ருதியிலுள்ள "துர்நிஷ்ப்ரபதரம்" என்றவிடத்தில்(துர்நிஷ்ப்ரபத தரம் என்றிருக்கவேண்டியதில்) வேதமுறையில் ஒரு த என்ற எழுத்து இல்லா திருக்கிறது என்று கண்டுகொள்ளவேண்டும். துர்நிஷ்ப்ரபததரம்=வெளிவருத லரிதானது. அதாவது: இந்த வ்ரீஹ்யாதிபாவத்தினின்றும் வெளிவருதலானது மிக்கதுக்ககரமானது என்பது அதன் பொருள். ஆகவே இவ்விடத்தில் கஷ்டப் பட்டு வெளிவருதலைக் காண்பிக்கின்ற வேதமானது அதற்கு முன்னுள்ள வற்றி னின்றும் சுகமாக வெளிவருதலைக் காண்பிக்கிறது. வெளிவருதலைப் பற்றிய இந்தச்சுகதுக்கத்தன்மையின் விசேஷமானது காலத்தின் குறைவையும், நீளத்தை தையும் நிமித்தமாகக்கொண்டது. அந்த எல்லையில் சரீரமுண்டாகாமைபற்றி உப போகம் (சுகதுக்கானுபவம்) இல்லாதிருப்பதே அதன்காரணமாகும். ஆகவே வ்ரீஹ்யாதிபாவத்தை யடைவதற்கு முன்னர் அற்பமான காலத்தினாலேயே இரங் குதல் ஏற்படுகிறது என்றேற்பட்டது. (23) (எ—று)

ஐந்தாவது நாதிசிராதிகரணம் முற்றிற்று.

அந்யாதிஷ்டிதாதிகரணம் 6.

(அ—கை) ஜீவன் சந்திரமண்டலத்தினின்றும் இரங்குங்கால் வ்ரீஹ்யாதி பாவத்தை யடைவதாகச் சொல்லப்பட்டது. வ்ரீஹ்யாதிபாவத்தை யடைவதென் பதற்கு வ்ரீஹ்யாதிசரீரத்தை யடைகின்றான் என்று பொருளா? அல்லது வ்ரீஹ் யாதிசரீரத்தை யடைந்த ஜீவனைவிடத் தனியாக முற்கூறிய ஜீவன் அவற்றில் இரங்குங்கால் ஸம்பந்தத்தைமட்டும் அடைகின்றான் என்று பொருளா? என ஸந்தேஹம்வர வ்ரீஹ்யாதி சரீரத்தையடைந்த ஜீவனை விடவேறாக அவற்றுடன் இவன் ஸம்பந்தத்தை மட்டும் அடைகிறான் என 4சூத்திரங்கள் கொண்ட இந்த அதி கரணத்தால் நிஸ்சயிக்கப்படுகிறது. அவற்றின் முதல் சூத்திரம் பின்வருமாறு—

६ अन्याधिष्ठिताधिकरणम् । सू-२४-२७

अन्याधिष्ठितेषु पूर्ववदभिलापात् ॥ २४ ॥

व्रीह्यादौ जन्मतेषांस्यात्संश्लेषो वा जनिर्भवेत् । जायन्त इति मुख्यत्वात् पशुहिंसादिपापतः ॥ १ ॥
वैधान्न पापसंश्लेषः कर्मव्यापृत्यनुक्तितः । श्वविप्रादौ मुख्यजनौ चरणव्यापृतिः श्रुता ॥ २ ॥

तस्मिन्नेवावरोहे प्रवर्षणानन्तरं पठ्यते—'त इह व्रीहियवा ओषधिवनस्पतयस्तिलमाषा इति जायन्ते' (छा० ५ । १० । ६) इति । तत्र संशयः—किमस्मिन्नवरोहे स्थावरजात्यापन्नाः स्थावरसुखदुःखभाजोऽनुशयिनो भवन्त्याहोस्वित्क्षेत्रज्ञान्तराधिष्ठितेषु स्थावरशरीरेषु संश्लेषमात्रं गच्छन्तीति । किं तावत्प्राप्तम् । स्थावरजात्यापन्नास्तत्सुखदुःख-

---

(ஸூ) அந்யாதிஷ்டிதேஷு பூர்வவதபிலாபாத் (24)

(ப-ரை) **अन्याधिष्ठितेषु** (அந்யாதிஷ்டிதேஷு)=வேறு ஜீவர்களால் அடையப்பட்ட வ்ரீஹ்யாதிகளில் **पूर्ववत्** (பூர்வவத்)=முன்னருள்ள வாயுவாதிகளில் போலவே [**संसर्गमात्रम्** (ஸம்ஸர்க்கமாத்ரம்)=ஸம்பந்தத்தை மட்டும் அநுஶயிகளான ஜீவர்களடைகின்றனர். **कुतः** (குத:)=ஏன்?] **अभिलापात्** (அபிலாபாத்)=கர்மத்தின் வியாரம் எதவுமில்லாமலே வ்ரீஹ்யாதிபாவாபத்தியானது ஶ்ருதியிற் சொல்லப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். (24) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) அநுஶயிகளுக்கு வ்ரீஹ்யாதியில் பிறவியா? அல்லது அவற்றுடன் ஸம்பந்தம் பட்டுமா? என்பது ஸந்தேஹம். ஶ்ருதில் "ஜநிக்கின்றனர்" என்று ஜந்மாவை முக்கியமாகக் கூறியிருப்பதாலும், ஸ்வர்க்காதி லோகஞ்சென்று திரும்புகின்றவர்க்கு ஸ்வர்க்கலோகஸாதனமான யாகாதிகளைச் செய்யுங்கால் பசுஹிம்ஸை முதலிய பாபஸம்பந்தமிருப்பதாலும். வ்ரீஹ்யாதிப்பிறவியை யடைகின்றனர் என்றுதான் சொல்லவேண்டும் என்பது பூர்வபக்ஷம். ஶாஸ்திரவிஹிதமான யாகாதிகளில் எவ்விதபாபமும் ஸம்பவிக்க இடமில்லை யாதலாலும், கர்மவியாபாரத்தை யொட்டி வ்ரீஹ்யாதி ப்ராப்தியை ஶ்ருதி இங்கு செல்லாததாலும், நாய் ப்ராஹ்மணன் முதலிய முக்கியப்பிறவியில் சரண (கர்ம) வியாபாரம் சொல்லப்பட்டிருப்பதாலும் வ்ரீஹ்யாதிகளில் ஸம்பந்தம் மட்டுமேதான் இவர்களுக்கேற்படுகிறது என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—அதே அவரோஹம் (இரங்குதல்) சொல்லுமிடத்து ப்ரவர்ஷணம் சொன்னபிறகு ஶ்ருதியில் "அவர்கள் (அநுஶயிகள்) இவ்வழியில் வ்ரீஹியவங்களாகவோ, ஓஷதிவநஸ்பதிகளாகவோ, எள்ளு உளுந்து இவைகளாகவோ இவ்விதம் ஜநிக்கின்றனர்" எனப் படிக்கப்படுகிறது. அதில் ஸம்ஶயமேற்படுகிறது. அதாவது:—இந்த எல்லையில் (வர்ஷணம் சொன்னபிறகு) ஸ்தாவரவகுப்பை யடைந்த அநுஶயிகள் ஸ்தாவரத்தினது சுகதுக்கங்களை யடைந்தவர்களாக ஆகின்றனரா? அல்லது வேறு ஜீவனுல் அடையப்பட்ட ஸ்தாவரசரீரங்களில் ஸம்ஶ்லே

भाजोऽनुशयिनो भवन्तीति। कुत एतत्। जनेर्मुख्यार्थत्वोपपत्तेः, स्थावरभावस्य च श्रुतिस्मृत्योरुपभोगस्थानत्वप्रसिद्धेः। पशुहिंसादियोगाच्चेष्टादेः कर्मजातस्यानिष्टफलत्वोपपत्तेः। तस्मान्मुख्यमेवेदमनुशयिनां व्रीह्यादिजन्म। श्वादिजन्मवत्। यथा श्वयोनिं वा सूकरयोनिं वा चण्डालयोनिं वेति मुख्यमेवानुशयिनां श्वादिजन्म तत्सुखदुःखान्वितं भवति। एवं व्रीह्यादिजन्मापीति। एवं प्राप्ते—

ब्रूमः, अन्यैर्जीवैरधिष्ठितेषु व्रीह्यादिषु संसर्गमात्रमनुशयिनः प्रतिपद्यन्ते न तत्सुखदुःखभाजो भवन्ति पूर्ववत्। यथा वायुधूमादिभावोऽनुशयिनां तत्संश्लेषमात्रम्। एवं व्रीह्यादिभावोऽपि जातिस्थावरैः संश्लेषमात्रम्। कुत एतत्। तद्वदेवेहाप्यभिलापात्। कोऽभिलापस्य तद्वद्भावः। कर्मव्यापारमन्तरेण सङ्कीर्तनम्। यथाकाशादिषु प्रवर्षणान्तेषु न कञ्चित्कर्मव्यापारं परामृशत्येवं व्रीह्यादिजन्मन्यपि। तस्मान्नास्त्यत्र सुखदुःखभाक्त्व-

---

ஷத்தை (ஒட்டுதலை) மட்டும் அடைகின்றனரா? என்பதாம். முதலில் கிடைப்பது யாதெனில் ஸ்தாவரவகுப்பை யடைந்த அநுஶயிகள் அதற்குரிய சுகதுக்கங்களை யடைந்தவர்களாக ஆகின்றனர் என்றாம். இது எதனாலென்றால் (ஶ்ருதியில் "ஜாயந்தே" என்று கூறிய) உத்பத்திக்கு முக்கியமான பொருளுள்ள தன்மை யேற்படுவதும், ஶ்ருதிஸ்மிருதிகளில் ஸ்தாவரபாவத்தை உபபோகஸ்தானமாகச் சொல்லும் பிரஸித்தியிருப்பதும், பசு ஹிம்ஸையிருப்பதுபற்றி யாகம் முதலிய கர்ம ஸமூஹத்துக்கு அநிஷ்டபலத்தன்மை பொருந்தக்கூடியதாக இருப்பதுமே அதன் காரணமாகும். ஆனதுபற்றி அநுஶயிகளுடைய இந்த வ்ரீஹ்யாதி ஜநநமானது முக்கியமானதே யாகும். நாய் முதலியவற்றின் பிறவி போலவாம் 'நாயின் யோநியையோ, பன்றியின் யோநியையோ, சண்டாள யோநியையோ," என்று கூறியிருப்பதிலிருந்து அநுஶயிகளுக்கு நாய் முதலிய பிறவியானது அதற்குரிய சுகதுக்கங்களுடன் கூடியதாய் முக்கியமானதாகவே ஆகிறது. வ்ரீஹ்யாதிஜநநமும் இவ்விதமேதானாகும் என்றேற்படுகிறது. இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்த்தமாகவே (ஸித்தாந்தம்) சொல்லுகிறோம்.

வேறு ஜீவர்களால் அதிஷ்டிதங்களான வ்ரீஹ்யாதிகளில் அநுஶயிகள் ஸம்ஸர்க்கத்தை மட்டும் அடைகின்றனரே யொழிய அவற்றுக்குரிய சுகதுக்கங்களை யடைவதில்லை. முன்னர் சொல்லியதுபோலவேயாம். அதாவது:—அநுஶயிகளுக்குச் சொல்லிய வாயுதூமாதிபாவமானது அவற்றுடன் ஸம்ஶ்லேஷ (ஸம்பந்த) மாத்திரமாகவாவது எவ்விதமோ, இவ்விதமே வ்ரீஹ்யாதிபாவமும் ஜாதிஸ்தாவரங்களுடன் (ஸ்தாவரஜன்மாவையடைந்தவைகளுடன்) ஸம்பந்தம் மட்டுமே தானாகும். இது எவ்விதமெனில்? அதுபோலவே இங்கும் சொல்லப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். அபிலாபத்துக்கு (உபதேசத்துக்கு) அதுபோலிருத்தல் என்பது எத்தகையது எனின்? கர்மங்களின் வியாபாரமில்லாமலே உபதேசம் காணப்படுவதேயாம். ஆகாசம் தொடங்கி ப்ரவர்ஷணமீறாகவுள்ள விடங்களில் ஒருவித கர்ம வியாபாரத்தையும் ஶ்ருதி எவ்விதம் கூறவில்லையோ வ்ரீஹ்யாதிப்பிறவியிலும் இவ்

मनुशयिनाम् । यत्र तु सुखदुःखभाक्त्वमभिप्रैति परामृशति तत्र कर्मव्यापारं रमणीयचरणाः कपूयचरणा इति च । अपिच, मुख्येऽनुशयिनां व्रीह्यादिजन्मनि व्रीह्यादिषु लूयमानेषु कण्ड्यमानेषु पच्यमानेषु भक्ष्यमाणेषु च तदभिमानिनोऽनुशयिनः प्रवसेयुः । यो हि जीवो यच्छरीरमभिमन्यते स तस्मिन्पीड्यमाने प्रवसतीति प्रसिद्धम् । तत्र व्रीह्यादिभावाद्रेतःसिग्भावोऽनुशयिनां नाभिलप्येत । अतः संसर्गमात्रमनुशयिनामन्याधिष्ठितेषु व्रीह्यादिषु भवति । एतेन जनेर्मुख्यार्थत्वं प्रतिब्रयादुपभोगस्थानत्वं च स्थावरभावस्य । नच वयमुपभोगस्थानत्वं स्थावरभावस्यावजानीमहे । भवत्वन्येषां जन्तूनामपुण्यसामर्थ्येन स्थावरभावमुपगतानामेतदुपभोगस्थानम् । चन्द्रमसस्त्ववरोहन्तोऽनुशयिनो न स्थावरभावमुपभुञ्जत इत्याचक्ष्महे ॥ २४ ॥

अशुद्धमिति चेन्न शब्दात् ॥ २५ ॥

விதமே கூறவில்லே. ஆகவே அநுஶயிகளுக்கு இவ்விடத்தில் (ஸ்தாவராதிகளில் அவற்றுக்குரிய) சுகதுக்கங்களே யடையும் தன்மைகிடையாது. ஶ்ருதியானது எங்கு சுகதுக்கங்களே யடையும் தன்மையை அபிப்பிராயப்படுகிறதோ அவ்விடத்தில் "ரமணீயசரணா:, கபூயசரணா:" என்றதால் கர்மவியாபாரத்தைச் சொல்லியே இருக்கிறது. மேலும், அநுஶயிகளுக்கு வ்ரீஹ்யாதிஜந்மம் முக்கியமாக இருக்குமாளுல் வ்ரீஹி முதலியன அறுக்கப்பட்டாலும், வெட்டப்பட்டாலும் பாகம் செய்யப்பட்டாலும், உண்ணப்பட்டாலும் அவற்றில் அபிமானத்தையடைந்த அநுஶயிகள் அவற்றைவிட்டு விலகவேண்டிவரும். எந்த ஜீவன் எந்தச் சரீரத்தில் அபிமானத்தையடைகின்ருனே அச்சரீரம் பீடிக்கப்படுங்கால் அதைவிட்டுவிலகி விடுகிருன் என்பது பிரசித்தமாகவே யிருக்கிறது. அவ்விதமாயின் வ்ரீஹ்யாதி பாவத்தினின்றும் ரேதஸ்ஸேசனம் செய்பவற்றின்ஸம்பந்தம் அநுஶயிகளுக்குச் சொல்லப்படமாட்டாது. ஆகவே அநுஶயிகளுக்கு வேறுஜீவாதிஷ்டிதங்களான வ்ரீஹ்யாதிகளில் ஸம்பந்தப்பட்டுமேதான் என்றேற்படுகிறது. இவ்விதம்சொன்னதைக்கொண்டு (ஜாயந்தே என ஶ்ருதியிற் செல்லிய) ஜநிக்கு (உத்பத்திக்கு) முக்கியார்த்தத்துவமும், ஸ்தாவரபாவம் சுகதுக்காநுபவஸ்தானமென்பதும் மறுக்கப்பட்டதாகவாகிவிடுகிறது. ஆளுல் நாம் ஸ்தாவராதிப்பிராப்தியானது சுகதுக்காதியனுபவஸ்தானமென்பதை முற்றிலும் மறுக்கின்றேமில்லே. தமது பாபகர்மத்தின் சக்தியிளுல் ஸ்தாவராதிபாவத்தையடைந்த வேறுஜீவர்களுக்கு அது சுகதுக்காநுபவஸ்தானமாகவாகட்டும். சந்திரமண்டலத்தினின்றும் இரங்குகின்ற ஜீவர்கள் ஸ்தாவரபாவத்தை அநுபவிப்பதில்லே என்றுமட்டுமே சொல்லுகிறேம். (24)

(ஸூ) அசுத்தமிதிசேத் ந சப்தாத் (25)

(ப-ரை) **अशुद्धमितिचेत** (அசுத்தமிதிசேத்)=பசுஹிம்ஸாதிகளின் ஸம்பந்தமிருப்பதுபற்றி வைதிகமானயாகாதிகள் அசுத்தமாகின்றன என்ருலோ **न** (ந)= அது பொருந்தாது. **शब्दात्** (சப்தாத்)=வைதிகசாஸ்திரமூலம் அது ஏற்படுவதாயிருப்பதே அதன் காரணமாகும். (25) (எ-று)

यत्पुनरुक्तं पशुहिंसादियोगादशुद्धमाध्वरिकं कर्म तस्यानिष्टमपि फलमवकल्पत इत्यतो मुख्यमेवानुशयिनां व्रीह्यादिजन्मास्तु तत्र गौणी कल्पनानर्थिकेति तत्परिहियते। न, शास्त्रहेतुत्वाद्धर्माधर्मविज्ञानस्य। अयं धर्मोऽयमधर्म इति शास्त्रमेव विज्ञाने कारणम्। अतीन्द्रियत्वात्तयोः, अनियतदेशकालनिमित्तत्वाच्च। यस्मिन्देशे काले निमित्ते च यो धर्मोऽनुष्ठीयते स एव देशकालनिमित्तान्तरेष्वधर्मो भवति। तेन शास्त्रादृते धर्माधर्मविषयं विज्ञानं न कस्यचिदस्ति। शास्त्राच्च हिंसानुग्रहाद्यात्मको ज्योतिष्टोमो धर्म इत्यवधारितः स कथमशुद्ध इति शक्यते वक्तुम्। ननु 'न हिंस्यात्सर्वा भूतानि' इति शास्त्रमेव भूतविषयां हिंसामधर्म इत्यवगमयति। बाढम्। उत्सर्गस्तु सः। अपवादः 'अग्नीषोमीयं पशुमालभेत' इति। उत्सर्गापवादयोश्च व्यवस्थितविषयत्वम्। तस्माद्विशुद्धं कर्म वैदिकं, शिष्टैरनुष्ठीयमानत्वादनिन्द्यमानत्वाच्च। तेन न तस्य प्रतिरूपं फलं जातिस्थावर-

---

பாஷ்யம்.—'பசுஹிம்ஸாதிகளின் ஸம்பந்தமிருப்பதிலிருந்து யாகாதியான கர்மமானது அசுத்தமாகிறது, அதற்கு அநிஷ்டமானபலனும் ஏற்படலாம் என்ற இக்காரணத்தால் அநுஶயிகளுக்கு வ்ரீஹ்யாதி ஜன்மமானது முக்கியமாகவே இருக்கட்டும், அவ்விஷயத்தில் (ஜாயந்தே என்றுகூறிய ஜநிக்குக்) கௌணார்த்தகல்பனை செய்வது பயனற்றது' எனயாதேன்று சொல்லப்பட்டதோ அதற்குப் பதில்சொல்லப்படுகிறது. தர்மாதர்மத்தைப்பற்றிய அறிவானது சாஸ்திரமூலமேற்படுவது பற்றி (முன்சொன்ன ஆக்ஷேபமானது) பொருந்தாது. இது தர்மம், இது அதர்மம் என்றவிஷயத்தில் சாஸ்திரமேதான் காரணமாகவாகிறது. தர்மாதர்மங்கள் இந்திரியங்களுக்குப் புலனாகாதிருப்பதும், மாறுபட்டதேசகால நிமித்தமுள்ளதாகவிருப்பதுமே அதன் காரணமாகும். அதாவது:—எந்தத்தேசத்தில் எந்தக்காலத்தில் எந்தநிமித்தத்தில் எதுதர்மாக அநுஷ்டிக்கப்படுகிறதோ அதுவே வேறுதேசம், காலம், நிமித்தம் இவற்றில் அதர்மமாக மாறிவிடுகிறது. அதனால் சாஸ்திரத்தைவிடுத்து தர்மாதர்மவிஷயமான அறிவானது ஒருவனுக்கும் உண்டாவதில்லை. ஹிம்ஸாநுக்கிரஹரூபமான ஜ்யோதிஷ்டோமமானது சாஸ்திரத்தினின்றும் தர்மமாக நிஶ்சயிக்கப்படுங்கால் அது அசுத்தமானதென எவ்விதஞ் சொல்லமுடியும்.

சங்கை—"எல்லாவுயிர்களையும் ஹிம்ஸிக்கலாகாது" எனச் சாஸ்திரமே உயிர்களைப்பற்றிய ஹிம்ஸையை அதர்மமெனத் தெரிவிக்கிறது எனின்?

உத்தரம்—ஆம். அது பொதுவிதியாகும். "அக்நீஷோமதேவதையைக் குறித்து பசுவை ஆலம்பநம் செய்தல்வேண்டும்" என்பது விலக்குவிதியாகும். பொதுவிதிவிலக்குவிதி இவற்றுக்கு விஷயவேறுபாடு நிஶ்சிதமாயிருக்கிறது. ஆனதுபற்றி வைதிக (யாகாதி) கர்மமானது விசுத்தமாக (எவ்விததோஷமுமற்றதாக) வேயாகிறது. ஶிஷ்டர்களால் அநுஷ்டிக்கப்படுவதும், வெறுக்கத்தகாததாகவிருப்பதுமே அதன் காரணமாகும். அதனால் அந்த வைதிககர்மத்துக்கு ஸ்தாவரப்பிறவியானது முறண்பட்ட பலனேயாகும். மேலும் நாய் முதலியவற்றின் பிறவிபோலக்கூட வ்ரீஹ்யாதிப்பிறவி ஆவது பொருந்தாது. அதுவோ கெட்டகர்

त्वम् । नच श्वादिजन्मवदपि व्रीह्यादिजन्म भवितुमर्हति । तद्धि कपूयचरणानधिकृत्योच्यते नैवमिह वैशेषिकः कश्चिदधिकारोऽस्ति । अतश्चन्द्रमण्डलस्खलितानामनुशयिनां व्रीह्यादिसंश्लेषमात्रं तद्भाव इत्युपचर्यते ॥ २५ ॥

रेतःसिग्योगोऽथ ॥ २६ ॥

इतश्च व्रीह्यादिसंश्लेषमात्रं तद्भावो यत्कारणं व्रीह्यादिभावस्यानन्तरमनुशयिनां रेतःसिग्भाव आम्नायते—'यो यो ह्यन्नमत्ति यो रेतः सिञ्चति तद्भूय एव भवति' (छा० ५ । १० । ६) इति । नचात्र मुख्यो रेतःसिग्भावः संभवति । चिरजातो हि प्राप्तयौवनो रेतःसिग्भवति । कथमिवानुपचरितं तद्भावमद्यमानान्नानुगतोऽनुशयी प्रतिपद्यते । तत्र तावदवश्यं रेतःसिग्योग एव रेतःसिग्भावोऽभ्युपगन्तव्यः । तद्वद्व्रीह्यादिभावोऽपि व्रीह्यादियोग एवेत्यविरोधः ॥ २६ ॥

மஞ்செய்தவர்களைச் சொல்லத்தொடங்கியவிடத்தில் படிக்கப்படுகிறது. இவ்விடத்திலோ தனிப்பட்டதொரு அதிகாரம் (தொடர்பு) காணப்படவில்லை. ஆகவே சந்திரமண்டலத்தினின்றும் நழுவின அநுஶயிகளுக்கு வ்ரீஹ்யாதிகளுடன் ஸம்ஶ்லேஷம் (ஒட்டுதல்) மட்டுமேதான் வ்ரீஹ்யாதிபாவமாக உபசாரமுறையாற் சொல்லப்படுகிறது. (25) (எ-று)

(ஸூ) ரேதஸ்ஸிக்யோகோத (26)

(ப-ரை) **अथ** (அத)=வ்ரீஹ்யாதிபாவத்துக்குப் பின்னர் **रेतस्सिग्योगः** (ரேதஸ்ஸிக்யோக:)=இந்திரியஸேசனம் செய்யும் ஜீவனுடன் சேர்க்கை சொல்லப்படுகிறது. ஆனதுபற்றியும் வ்ரீஹ்யாதிஸம்ஶ்லேஷம் மட்டும் சொல்லுவதுதான் பொருந்தும். (26) (எ-று)

பாஷ்யம்.—இதனாலும் வ்ரீஹ்யாதிஸம்ஶ்லேஷம் மட்டுமேதான் வ்ரீஹ்யாதிபாவமாக வேற்படும். "எவனெவன் அன்னத்தைச் சாப்பிடுகின்றானோ, எவனெவன் ரேதஸ்ஸேசனத்தைச் செய்கின்றானோ அவன் வடிவமாகவே ஆகிவிடுகிறான்" என ஶ்ருதியானது வ்ரீஹ்யாதிபாவத்துக்குப்பிறகு அநுஶயிகளுக்கு ரேதஸ்ஸேசனம் செய்பவற்றுடன் ஸம்ஶ்லேஷத்தைமட்டும் எக்காரணம்பற்றிச் சொல்லுகிறதோ அக்காரணம்பற்றியே என்க. இவ்விடத்தில் ரேதஸ்ஸேசனம் செய்பவற்றின் தன்மை முக்கியமாக ஸம்பவிக்கமுடியாது. ரேதஸ்ஸேசனஞ்செய்பவன் முன்னருண்டானவனாகவும், யௌவப்பருவத்தையடைந்தவனாகவுமன்றோ ஆகிறான். அவனாலுட்கொள்ளப்படும் ஆகாரத்துடன்கலந்த அநுஶயியானவன் உபசாரமுறையாற் கூறப்படாத (அதாவது: முக்கியமான) ரேதஸ்ஸேசநம் செய்கின்றவற்றின் தன்மையை எவ்விதமடையமுடியும். அவ்விடத்தில் ரேதஸ்ஸேசநம் செய்பவற்றுடன் சேர்க்கையேதான் ரேதஸ்ஸேசனம் செய்பவற்றின் தன்மையென அவஶ்யம் அங்கீகரிக்கவேண்டும். ஆகவே வ்ரீஹ்யாதிபாவமும் வ்ரீஹ்யாதியுடன் சேர்க்கையே'யாவதுபற்றி விரோதமெதுவுமில்லை. (26) (எ-று)

योनेः शरीरम् ॥ २७ ॥

अथ रेतःसिग्भावस्यानन्तरं योनौ निषिक्ते रेतसि योनेरधिशरीरमनुशयिनामनुशयफलोपभोगाय जायत इत्याह शास्त्रम्—'तद्य इह रमणीयचरणाः' (छां० ५। १०। ७) इत्यादि। तस्मादप्यवगम्यते नावरोहे व्रीह्यादिभावावसरे तच्छरीरमेव सुखदुःखान्वितं भवतीति। तस्माद्व्रीह्यादिसंश्लेषमात्रमनुशयिनां तज्जन्मेति सिद्धम् ॥ २७ ॥

इति श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्य श्रीमच्छङ्करभगवत्पूज्यपादकृतौ शारीरकमीमांसाभाष्ये तृतीयाध्यायस्य प्रथमः पादः ॥ १ ॥

(ஸூ) யோநே: சரீரம் (27)

(ப—ரை) योनेः (யோநே:)=யோநியில் சேர்க்கையேற்பட்டதினின்றும் அநுஶயிகளுக்கு शरीरम् (சரீரம்)=சரீரம் வருவதாகச் சாஸ்திரங்கூறுகிறது. (27)

பாஷ்யம்.—ரேதஸ்ஸேசனம் செய்பவற்றின் தன்மையேற்பட்ட பின்னர் ரேதஸ்ஸானது யோநியில் நிஷிக்தமானபின்னர் யோநியினின்றும் அநுஶயத்தின் பலனை யநுபவிப்பதற்குவேண்டி அநுஶயிகளுக்குச் சரீரம் உண்டாவதாகச் சாஸ்திரமுபதேசிக்கிறது. அதாவது:—"அவர்களுள் எவர் ரமணீய சரணர்களோ" என்றதாதியாம். அதனின்றும் இரங்குங்கால் வ்ரீஹ்யாதிபாவம் சொல்லுங்கால் அந்தச் சரீரமே சுகதுக்கங்களுடன் கூடினதாக ஆவதில்லை என அறியக்கிடக்கிறது. ஆனதுபற்றி அநுஶயிகளுக்கு வ்ரீஹ்யாதிஸம்ஶ்லேஷம் மட்டுமே அத்தகைய பிறவியாகக் கூறப்படுகிறது என்பது ஸித்திக்கிறது. (27) (எ—று)

ஆறுவது அங்யாதிஷ்டிதாதிகரணம் முற்றிற்று.

ஸ்ரீமத் கோவிந்தபகவத்பூஜ்யபாத ரவர்களின் சிஷ்யர்களான ஸ்ரீமத் சங்கர பகவத்பூஜ்யபாத ரவர்களின் கிருதியான சாரீரகமீமாம்ஸா பாஷ்யத்தில் மூன்றாவது அத்தியாயத்தின்

முதலாவது பாதம் முற்றிற்று.

तृतीयाध्याये द्वितीयः पादः ।

[अत्रपादे तत्त्वंपदार्थपरिशोधनविचारः]

१ संध्याधिकरणम् । सू–१–६

संध्ये सृष्टिराह हि ॥ १ ॥

सत्या मिथ्याऽथवा स्वप्नसृष्टिः सत्या श्रुतीरणात् । जाग्रद्देशाविशिष्टत्वादीश्वरेणैव निर्मिता ॥ १ ॥
देशकालाद्यनौचित्याद्बाधितत्वाच्च सा मृषा । अभावोक्तेर्द्वैतमात्रसाम्याज्जीवानुवादतः ॥ २ ॥

ओं नमो भगवते वासुदेवाय ॥

மூன்றாவது அத்தியாயத்தின் இரண்டாவது பாதம்.

ஸந்த்யாதிகரணம் 1.

(அ–கை) சென்ற முதலாவது பாதத்தில் ப்ரம்ஹாத்மைக்ய க்ஞானமில்லாதவர் இந்த ஸ்தூலதேஹம் விட்டு ஸூக்ஷ்ம தேஹத்துடன் பரலோகஞ் செல்லும் முறையும், அங்கு அவர்களுக்குநேரும் கர்மபலாநுபவமுறையும், பின்னர் அங்கிருந்து திரும்பும் முறையும், திரும்புங்கால் அவர்களுக்குண்டாகும் கஷ்டமுறையும் விளக்கப்பட்டது. இதனின்றும் இம்மைமறுமைப் பயனில் வெறுப்புக் கொண்டு குருமுகாதீன வேதாந்தவிசாரஞ் செய்து அதன் வாயிலாகவுண்டாகும் ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரத்தை யடைதலே எல்லாவற்றுள்ளும் மேலானது என்றும் பெறப்பட்டது. இதுபோழ்து ப்ரப்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரத்துக்கின்றியமையாத தத்பதார்த்தம், த்வம் பதார்த்தம் இவற்றைப் பரிசோதிக்கவேண்டி 41ஸூத்திரங்களும், 8அதிகரணங்களுங் கொண்ட இந்த இரண்டாவது பாதமாரம்பிக்கப்படுகிறது. அவற்றுள் 6ஸூத்திரங்கள் கொண்ட முதலாவது ஸந்த்யாதிகரணத்தில் முதலிலுள்ள பூர்வபக்ஷ ஸூத்திரங்கள் இரண்டில் முதலாவது ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹஹி (1)

(ப–ரை) सन्ध्ये (ஸந்த்யே)=ப்ரபோதம் ஸுஷுப்தி இவ்விரண்டுஸ்தானங்களுடையவோ, இஹலோக பரலோக ஸ்தானங்களுடையவோ இடையிலுள்ளது ஸந்த்யம் எனப்படும். அத்தகைய ஸந்த்யமான ஸ்தானத்திலுள்ள सृष्टिः (ஸ்ருஷ்டி:)=ஸ்ருஷ்டியானது உண்மையானதேயாகும். आह हि (ஆஹஹி)=அவ்விதமே ஶ்ருதி உபதேசிப்பதே அதன் காரணமாகும். (1) (ஏ–று)

வையாஸிக ந்யாயமாலை.

(க–ரை) ஸ்வப்நத்திலுள்ள ஸ்ருஷ்டியானது உண்மையானதா? அல்லது

अतिक्रान्ते पादे पञ्चाग्निविद्यामुदाहृत्य जीवस्य संसारगतिप्रभेदः प्रपञ्चितः। इदानीं तु तस्यैवावस्थाभेदः प्रपञ्च्यते। इदमामनन्ति—'स यत्र प्रस्वपिति' (बृ० ४।३।९) इत्युपक्रम्य 'न तत्र रथा न रथयोगा न पन्थानो भवन्त्यथ रथान्रथयोगान्पथः सृजते' (बृ० ४।३।१०) इत्यादि। तत्र संशयः—किं प्रबोध इव स्वप्नेऽपि पारमार्थिकी सृष्टिराहोस्विन्मायामयीति। तत्र तावत्प्रतिपद्यते संध्ये तथ्यरूपा सृष्टिरिति। संध्यमिति स्वप्नस्थानमाचष्टे, वेदे प्रयोगदर्शनात् 'संध्यं तृतीयं स्वप्नस्थानम्' (बृ० ४।३।९) इति। द्वयोर्लोकस्थानयोः प्रबोधसंप्रसादस्थानयोर्वा सन्धौ भवतीति संध्यम्। तस्मिन्संध्ये स्थाने तथ्यरूपैव सृष्टिर्भवितुमर्हति। कुतः—यतः प्रमाणभूता श्रुतिरेवमाह 'अथ रथान् रथयोगान्पथः सृजते' (बृ० ४।३।१०) इत्यादि। स हि कर्तेति चोपसंहारादेवमेवावगम्यते॥ १॥

பொய்யானதா? என்பது ஸந்தேஹம். ஃ்ருதி சொல்லுவதாலும், ஜாக்கிரத் தேசமானது பொதுவாக விருப்பதாலும், ஈஃ்வரனாலேயே நிர்மாணஞ் செய்யப்பட்டிருப்பதாலும், அது உண்மையானதேயாகும் என்பது பூர்வபக்ஷம். ஸிருஷ்டிக்குரிய தேசகாலாதிகள் உசிதமாக இல்லாததாலும், விழித்தெழுந்ததும் பாதிக்கப்பட்டு விடுவதாலும் அதுபொய்யானதேயாகும். ஸ்வப்நாதிகளுக்கு உண்மையான நிலையில் இல்லாமை சொல்லியிருப்பதும், எல்லாத்வைத பதார்த்தத்துடனும் ஸமமாக்கி ஜீவனை ஃ்ருதி அநுவாதமுறையிற் கூறியிருப்பதும் மற்றொரு காரணமாகும். (எ—று)

பாஷ்யம்.—சென்ற பாதத்தில் பஞ்சாக்நிவித்தையை உதாஹரித்து ஜீவனுடைய ஸம்ஸாரகதிபேதமானது விரிவாகக் கூறப்பட்டது. இப்பொழுதோ அவனதாகவேயுள்ள அவஸ்தாபேதமானது விரித்துக் கூறப்படுகிறது. "அவன் எப்பொழுது தூங்குகின்றானோ" என்றுதொடங்கி "அப்பொழுது தேர்களில்லை, தேரில் கட்டும் மாடுமுதலியன கிடையா. வழிகளில்லை. ஆயினும் பின்னர் தேர்களையும், தேரில்கட்டும் மாடுமுதலியவற்றையும், வழிகளையும் படைத்துக் கொள்ளுகிறான்" என்றது முதலான இதை உபநிடதங்கள் உபதேசிக்கின்றன. அதில் ஸம்சயமுண்டாகிறது. அதாவது:—விழிப்பிற் போலவே ஸ்வப்பினத்திலும் ஸிருஷ்டியானது பாரமார்த்திகமேயா? (உண்மையானதேயா?) அல்லது மாயாமயமானதா? (பொய்யானதா?) என்பதாம். அவற்றுள் முதலிற் கொள்ளப்படுவது யாதெனில்? ஸிருஷ்டியானது உண்மையானதென்பதே யாம். "ஸந்த்யமானது மூன்றாவதான ஸ்வப்னஸ்தானமாகும்" என வேதத்தில் பிரயோகம் காணப்படுவதுபற்றி ஸந்த்யம் என்றபதம் ஸ்வப்னஸ்தானத்தைச் சொல்லுகிறது. இஹலோகபரலோகஸ்தானங்களுடையவோ, அல்லது விழிப்பு ஸுஷுப்தி இவ்விருஸ்தானங்களுடையவுமோ ஸந்தியில் (இடையில்) இருப்பதுபற்றி (ஸ்வப்நம்) ஸந்த்யமாக வாகிறது. அத்தகைய ஸந்த்யமான ஸ்தானத்தில் உள்ள ஸிருஷ்டியானது உண்மையானதாகவாவதுதான் பொருந்தக்கூடியது. ஏன்? எக்காரணம் பற்றி

निर्मातारं चैके पुत्रादयश्च ॥ २ ॥

अपिचैके शाखिनोऽस्मिन्नेव संध्ये स्थाने कामानां निर्मातारमात्मानमामनन्ति—'य एष सुप्तेषु जागर्ति कामं कामं पुरुषो निर्मिमाणः' (क० ५।८) इति। पुत्रादयश्च तत्र कामा अभिप्रेयन्ते काम्यन्त इति। ननु कामशब्देनेच्छाविशेषा एवोच्येरन्। न। 'शतायुषः पुत्रपौत्रान्वृणीष्व' (क० १।२३) इति प्रकृत्यान्ते 'कामानां त्वा कामभाजं करोमि' (क० १।२४) इति प्रकृतेषु तत्र तत्र पुत्रादिषु कामशब्दस्य प्रयुक्तत्वात्। प्राज्ञं चैनं निर्मातारं प्रकरणवाक्यशेषाभ्यां प्रतीमः। प्राज्ञस्य हीदं प्रकरणम् 'अन्यत्र धर्मादन्यत्राधर्मात्' (क० २।१४) इत्यादि, तद्विषय एव च वाक्यशेषोऽपि—'तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृत-

---

ப்ரமாணபூதமான ஶ்ருதியானது "பின்னர் தேர்களேயும், தேரில்கட்டப்படுபவன வற்றையும் படைக்கின்றான்" என்ற தாதியாலுபதேசிக்கிறதோ அக்காரணம்பற்றியே என்க. "அவனன்றோ கர்த்தா" என முடித்திருப்பதிலிருந்தும் இவ்விதமே தான் அறியக்கிடக்கிறது. (1) (எ—று)

(ஸூ) நிர்மாதாரம்ச ஏகே புத்ராதய: ச (2)

(ப—ரை) **च** (ச)=மேலும், **एके** (ஏகே)=சிலசாகிகள் இதே ஸ்வப்நமான ஸந்தியத்தில் ஆத்மாவை காமங்களே **निर्मातारम्** (நிர்மாதாரம்)=நிர்மாணஞ் செய்பவனுகவும் சொல்லுகின்றனர். அங்கு ஶ்ருதியிலுள்ள "காமம் காமம்" என்பவை **पुत्रादयश्च** (புத்ராதயஶ்ச)=புத்திராதிகளேயாகும். (2) (எ—று)

பாஷ்யம்.—மேலும், சிலசாகைக் காரர்கள் இதே ஸந்த்யமென்ற ஸ்தானத்தில் ஆத்மாவை காமங்களே நிர்மாணஞ்செய்பவனுகச் சொல்லுகின்றனர். அதாவது:—"இந்திரியங்கள் தூங்கினதும் (தமது வேலேயைவிட்டு நீங்கினதும்) தனக்கிஷ்டமான அந்தந்தப் பொருளே நிர்மாணஞ் செய்கின்றவனும் யாதொரு இந்தப் புருஷனிருக்கின்றானே" என்ற தாதியாம். விரும்பப்படுவனபற்றி அங்குள்ள **காமம் காமம்** என்றதால் புத்திராதிகளான காமங்களே கொள்ளப்படுகின்றன.

சங்கை— **காம** என்ற சப்தத்தால் இச்சாவிசேஷங்களே அன்றோ சொல்லப்படும். எனின் ?

உத்தரம்—அதுபொருந்தாது. "நூறுவயதுள்ள புத்திரபௌத்திரர்களே வரமாகக்கேட்டுக் கொள்" என்று தொடங்கி முடிவில் "உன்னே காமங்களின் (புத்திராதிகளின்) லாபத்தை யடைந்தவனுகச் செய்கிறேன்" என்பதாய் பிரகிருதமான அந்தந்தப் புத்திராதிகளில் காமசப்தமானது பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ப்ரகரணம் மேலுள்ளவாக்கியம் இவ்விரண்டையுங் கொண்டு இந்தப் ராக்ஞனேயே (ஸுஷுப்தாவஸ்தாபன்ன ஜீவஸாக்ஷி ப்ராக்ஞனெனப்படுவன்) நிர்மாதாவாக (ஸிருஷ்டிகர்த்தாவாக) எண்ணுகிறோம். "தர்மத்தை விட வேறுபட்டதும் அதர்மத்தை விடவேறுபட்டதும்" என்ற தாதியான இது ப்ராக்ஞனேக் கூறும் ப்ரகரணமல்லவா? "அதுவே சுக்ரமும் (சுத்தமும்) அதுவே ப்ரம்ஹமும்,

मुच्यते । तस्मिंल्लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन' (क० ५ । ८) इति । प्राज्ञकर्तृका च सृष्टिस्तथ्यरूपा समधिगता जागरिताश्रया तथा स्वप्नाश्रयापि सृष्टिर्भवितुमर्हति । तथाच श्रुतिः—'अथो खल्वाहुर्जागरितदेश एवास्यैष इति यानि ह्येव जाग्रत्पश्यति तानि सुप्तः' (बृ० ४ । ३ । १४) इति स्वप्नजागरितयोः समानन्यायतां श्रावयति । तस्मात्तथ्यरूपैव संध्ये सृष्टिरिति ॥ २ ॥ एवं प्राप्ते प्रत्याह—

मायामात्रं तु कार्त्स्न्येनानभिव्यक्तस्वरूपत्वात् ॥ ३ ॥

तुशब्दः पक्षं व्यावर्तयति । नैतदस्ति यदुक्तं संध्ये सृष्टिः पारमार्थिकीति । मायैव संध्ये सृष्टिर्न परमार्थगन्धोऽप्यस्ति । कुतः—कार्त्स्न्येनानभिव्यक्तस्वरूपत्वात् । नहि का-

---

அதுவே அமிருதமுமாகச் சொல்லப்படுகிறது. எல்லாவுலகங்களும் அதை யாஸ்ர யித்திருக்கின்றன. ஒன்றும் அதைக்கடந்து விடக் கூடியதன்று" என்பதாய் அந்தப் பிராக்ஞவிஷயமாகவே யுள்ள மேலுள்ள வாக்கியமு மிருக்கிறது. ப்ராக் ஞனக்கர்த்தாவாகக் கொண்ட ஜாக்கிரத்தையாஸ்ரயித்த ஸிருஷ்டியானது உண் மையானதாகவாவது எவ்விதமோ அவ்விதமே ஸ்வப்நாஸ்ரயமான ஸிருஷ்டியுமா வது தான் பொருத்தமானது. அவ்விதமே ஸ்ருதியும் (ஸ்வப்நம் என்பது யாதுண் டோ) "இது இவனுடைய ஜாகரிதமே தாகும் எனச் சிலர் சொல்லுகின் றனர். ஜாகரிததேசத்தில் எவற்றையே பார்க்கின்றானோ அவற்றையே ஸுப்தனும் பார்க்கிறான்" என்றதால் ஸ்வப்ன ஜாகரிதங்கள் ஸமானமான நியாயமுள்ளன என்பதைத் தெரிவிக்கிறது. ஆனதுபற்றி ஸந்த்யத்திலுள்ள ஸிருஷ்டியானது உண்மையான வுருவமுள்ளதே யாகும். (2) (எ-று)

அவதாரிகா பாஷ்யம்.—இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்த்தமாகவே (ஸித்தாந் தம்) சொல்லுகிறார்—

(ஸூ) மாயாமாத்ரந்து கார்த்ஸ்ந்யேந அநபிவ்யக்தஸ்வருபத்வாத் (3)

(ப-ரை) तु (து)=முற்கூறிய பூர்வபக்ஷம் பொருந்தாது. **मायामात्रम्** (மாயா மாத்ரம்)=ஸந்த்யத்திலுள்ள ஸிருஷ்டியானது மாயையாகமட்டுமே யாகும். ஏன் **कार्त्स्न्येन** (கார்த்ஸ்ந்யேந)=முற்றிலும் (அதாவது: உண்மையிலேயிலுள்ள வஸ்துக் களின் முழுதர்மங்களுடனும் என்பதாம்.) **अनभिव्यक्तस्वरूपत्वात्** (அநபிவ்யக்த ஸ்வருபத்வாத்)=வெளியான ஸ்வரூபமுள்ளதாக இல்லாதிருப்பதே அதன் காரண மாகும். (3) (எ-று)

பாஷ்யம்.—ஸூத்திரத்திலுள்ள து என்ற சப்தமானது பூர்வபக்ஷத்தை விலக்கிக் காட்டுகிறது. ஸந்த்யத்திலுள்ள ஸிருஷ்டியானது உண்மையானது என யாதொன்று சொல்லப்பட்டதோ இது இல்லை. ஸந்த்யத்திலுள்ள ஸிருஷ்டியா னது பொய்யேயொழிய உண்மையின்மணங்கூட அதிலில்லை. ஏன்? முற்றிலும் வெளியான ஸ்வரூபமற்றதாக அது இருப்பதே அதன் காரணமாகும். உண்மை

त्स्न्येन परमार्थवस्तुधर्मेणाभिव्यक्तस्वरूपः स्वप्नः। किं पुनरत्र कात्स्न्र्यमभिप्रेतं देशकालनिमित्तसंपत्तिरबाधश्च। नहि परमार्थवस्तुविषयाणि देशकालनिमित्तान्यबाधश्च स्वप्ने संभाव्यन्ते। न तावत्स्वप्ने रथादीनामुचितो देशः संभवति। नहि संवृते देहदेशे रथादयोऽवकाशं लभेरन्। स्यादेतत्। बहिर्देहात्स्वप्नं द्रक्ष्यति देशान्तरितद्रव्यग्रहणात्। दर्शयति च श्रुतिर्बहिर्देहात्स्वप्नम्—'बहिष्कुलायादमृतश्चरित्वा। स ईयतेऽमृतो यत्र कामम्' (बृ० ४।३।१२) इति स्थितिगतिप्रत्ययभेदश्च नानिष्क्रान्ते जन्तौ सामञ्जस्यमश्नुवीतेति। नेत्युच्यते। नहि सुप्तस्य जन्तोः क्षणमात्रेण योजनशतान्तरितं देशं पर्येतुं विपर्येतुं च ततः सामर्थ्यं संभाव्यते। क्वचिच्च प्रत्यागमनवर्जितं स्वप्नं श्रावयति कुरुष्वहमद्य शयानो निद्रयाऽभिप्लुतः स्वप्ने पञ्चालानभिगतश्चास्मिन्प्रतिबुद्धश्चेति। देहाच्चेदपेयात्पञ्चालेषु प्रतिबुध्येत न तानसावभिगत इति कुरुष्वेव तु प्रतिबुध्यते। येन चायं देहेन देशान्तरमश्नुवानो

யான பொருளுக்குள்ள முழுதர்மத்துடனும் அபிவ்யக்தமான (வெளியான) ஸ்வரூபமுள்ளதாக ஸ்வப்பிநமானது ஆகாதன்றோ? இங்கு ஸூத்திரத்திலுள்ள கார்த்ஸ்ந்யம் (முற்றிலும்) என்றதால் எத்தகைய முழுத்தன்மை விரும்பப்படுகிறது எனின்? தேசம் காலம் நிமித்தம் இவற்றின் நிறைவும், மறுக்கப்படாமையுமேதான் கார்த்ஸ்ந்ய சப்தத்தால் விரும்பப்படுகிறது. உண்மையான பொருளைப்பற்றிய தேசகாலநிமித்தங்களும் பாதமின்மை (மறுப்பின்மை) யும் ஸ்வப்நத்தில் ஸம்பவிக்கமுடியாதன்றோ? ஸ்வப்நத்தில் தேர் முதலியவற்றுக்குப் போதிய தேசமானது முதலில் ஸம்பவிக்கமுடியாது. சுருங்கின தேஹத்துக்குள் தேர் முதலியன இடம் பெறவியலாதனவன்றோ ?

சங்கை—இஃதிருக்கட்டும். வேறு தேசத்திலுள்ள திரவியத்தைப்பற்றிய அநுபவமிருப்பதிலிருந்து தேஹத்துக்கு வெளியிற்றான் ஸ்வப்பினத்தைக் காண்கிறான். ஶ்ருதியும் "அமிருதனான ஆத்மாவானவன் சரீரத்துக்கு வெளியிற்சென்று எதில் இஷ்டமோ அங்கு ஸஞ்சரிக்கிறான்" என்றதால் தேஹத்துக்கு வெளியிலேயே ஸ்வப்பினத்தையுபதேசிக்கிறது. ஸ்திதி, கதி இவற்றைப் பற்றிய அறிவின் மாறுபாடானது ஜந்துவானது வெளியிற் சொல்லாவிடில் பொருத்தமான தன்மையை யடையமாட்டாதன்றோ. எனின் ?

உத்தரம்—அது இல்லையெனச் சொல்லப்படுகிறது. தூங்குகின்ற ஜந்துவுக்கு ஒருக்ஷணத்துக்குள் நூறுயோஜநதூரத்துக்கு மேற்பட்ட தேசத்தை யடையவோ, அங்கிருந்து திரும்பவோ ஸாமர்த்தியம் ஸம்பவிக்கமுடியாதன்றோ? சிலவிடத்தில் "குருதேசத்தில் படுத்துறங்கின நான் நித்திரையினால் கலக்கமுற்று ஸ்வப்பிநத்தில் பஞ்சாலதேசத்தை யடைந்தவனாய் அதேதேசத்தில் விழித்தெழுந்தேன்" என்பதாய் திருப்புதலற்ற ஸ்வப்பினத்தைச் ஶ்ருதி சொல்லியுமிருக்கிறது. தேஹத்தினின்றும் வெளிப் போந்தானேல் பஞ்சாலதேசத்தில் விழித்தெழுந்திருப்பான். ஆனால் இவன் பஞ்சாலத்தையடையாதவனாய் குருதேசத்திலேயே விழித்தெழுகின்றான். எந்தத் தேஹத்தைக் கொண்டு வேறுதேசத்தை யநுபவிப்பதாக

मन्यते तमन्ये पार्श्वस्थाः शयनदेश एव पश्यन्ति। यथाभूतानि चायं देशान्तराणि स्वप्ने पश्यति न तानि तथाभूतान्येव भवन्ति। परिधावंश्चेत्पश्येज्जाग्रद्वद्वस्तुभूतमर्थमाकलयेत्। दर्शयति च श्रुतिरन्तरेव देहे स्वप्नम्—'स यत्रैतत्स्वप्न्यया चरति' इत्युपक्रम्य 'स्वे शरीरे यथाकामं परिवर्तते' (बृ० २। १। १८) इति। अतश्च श्रुत्युपपत्तिविरोधाद्बहिष्कुलायश्रुतिर्गौणी व्याख्यातव्या बहिरिव कुलायादमृतश्चरित्वेति। यो हि वसन्नपि शरीरे न तेन प्रयोजनं करोति स बहिरिव शरीराद्भवतीति। स्थितिगतिप्रत्ययभेदोऽप्येवं सति विप्रलम्भ एवाभ्युपगन्तव्यः। कालविसंवादोऽपि च स्वप्ने भवति रजन्यां सुप्तो वासरं भारते वर्षे मन्यते। तथा मुहूर्तमात्रवर्तिनि स्वप्ने कदाचिद्बहुवर्षपूगानतिवाहयति। निमित्तान्यपि च स्वप्ने न बुद्धये कर्मणे वोचितानि विद्यन्ते। करणोपसंहाराद्धि नास्य रथादिग्रहणाय चक्षुरादीनि सन्ति। रथादिनिर्वर्तनेऽपि कुतोऽस्य निमेषमात्रेण सामर्थ्यं दारूणि वा। बाध्यन्ते चैते रथादयः स्वप्नदृष्टाः प्रबोधे। स्वप्न एव चैते सुलभबाधा भवन्ति। आद्यन्तयोर्व्यभि-

---

எண்ணுகிருனே அவனே அருகிலுள்ள மற்றவர் படுத்த விடத்திலேயே காண்கின்றனர். இவன் தேசாந்தரங்களை எவ்விதமிருப்பனவாக ஸ்வப்பினத்தில் காண்கின்ருனே அவை அவ்விதங்களாகவே இருப்பதில்லை. ஓரேதாவலாகத்தாவி ஸ்வப்பினம் காண்பானேல் ஜாக்கிரத்திற்போல பொருள் உண்மையானதென்றே எண்ணுவான். ஶ்ருதியும் "அவன் எதுபோழ்து ஸ்வப்பினத்திலுள்ளமனே விருத்தியுடன் ஸஞ்சரிக்கின்ருனே" என்று தொடங்கி "தனது சரீரத்தில் தனதிஷ்டப்படி சுற்றுகிருன்" என்றதால் தேஹத்துக்குள்ளேயே ஸ்வப்பினத்தைக் காண்பிக்கிறது. ஆனதுபற்றியும் ஶ்ருதியுக்தி இவற்றின் விரோதம் வருவதிலிருந்து 'சரீரத்துக்கு வெளியில்' என்று கூறும் ஶ்ருதியானது அமிருதனுன ஆத்மா சரீரத்துக்கு வெளியிற் போல ஸஞ்சரித்து என கௌணீ முறையை யொட்டிப் பொருட்படுத்திக் கொள்ளவேண்டுவதாக வாகிறது. எவன் சரீரத்தில் வஸித்தபோதிலுங்கூட அந்தச் சரீரத்தினுல் பயனே யடைவதில்லையோ அவன் சரீரத்துக்கு வெளியிலுள்ளவன் போலவே ஆகிருன் என்பதாம். இவ்விதமேற்படுங்கால் இருப்பதாகவும் வெளியில் செல்லுவதாகவுமேற்படும் அறிவின் மாறுபாடானது வெறும் மயக்கமானதென்றே ஒப்பவேண்டும். காலத்தின் முறன்பாடும் ஸ்வப்பினத்திற் காணக்கிடக்கிறது. அதாவது: பாரதவர்ஷத்தில் இரவில் தூங்கவாரம்பித்தவன் பகலாக வெண்ணுகிருன். அதுபோலவே ஒரு முஹூர்த்தம் மட்டுமிருக்கக்கூடிய ஸ்வப்பினத்தில் வெகு ஆண்டுகளைக் கடக்கிருன். ஸ்வப்பினத்திலுள்ள நிமித்தங்களுங்கூட ஞானத்துக்கோ, கர்மத்துக்கோ பொருத்தமானவையாக இருப்பதில்லை. இந்திரியங்களோடுங்கிவிட்டமையின் இவனுக்குத் தேர்முதலியவற்றை யறிவதற்குப் போதிய கண்முதலியன (அதுபோழ்து) கிடையா. தேர்முதலியவற்றைப் படைப்பதற்கும் இவனுக்கு ஒருநிமேஷத்துக்குள் ஸாமர்த்தியமோ (திறமையோ) கட்டைகளோ எங்கிருந்து கிட்டும். ஸ்வப்பினத்திற் காணப்பட்ட இந்தத் தேர் முதலியன ஜாக்கிரத்தில் பாதிக்கவும் படுகின்றன. மேலும், ஸ்வப்பினத்திலேயே

चारदर्शनात् । रथोऽयमिति हि कदाचित्स्वप्ने निर्धारितः क्षणेन मनुष्यः संपद्यते मनुष्योऽयमिति निर्धारितः क्षणेन वृक्षः। स्पष्टं चाभावं रथादीनां स्वप्ने श्रावयति शास्त्रम्— 'न तत्र रथा न रथयोगा न पन्थानो भवन्ति' (बृ० ४ । ३ । १०) इत्यादि । तस्मान्मायामात्रं स्वप्नदर्शनम् ॥ ३ ॥

सूचकश्च हि श्रुतेराचक्षते च तद्विदः ॥ ४ ॥

मायामात्रत्वात्तर्हि न कश्चित्स्वप्ने परमार्थगन्धोऽस्तीति । नेत्युच्यते । सूचकश्च हि स्वप्नो भवति भविष्यतोः साध्वसाधुनोः । तथाहि श्रूयते—'यदा कर्मसु काम्येषु स्त्रियं स्वप्नेषु पश्यति । समृद्धिं तत्र जानीयात्तस्मिन्स्वप्ननिदर्शने' (छा० ५ । २ । ९) तथा पुरुषं कृष्णं कृष्णदन्तं पश्यति स एनं हन्ति' इत्येवमादिभिः स्वप्नैरचिरजीवित्वमावेद्यत इति श्रावयति । आचक्षते च स्वप्नाध्यायविदः—'कुञ्जरारोहणादीनि स्वप्ने धन्यानि खर-

---

களுவில்பாதிக்கவும் படுகின்றன. ஸ்வப்பினகாலத்திலேயே முந்தியும் பிந்தியும் ஒருபொருளுக்குவியபிசாரம் காணப்படுவதே அதன் காரணமாகும். அதாவது:— ஸ்வப்பினத்தில் இது தேர் என வுறுதிசெய்யப்பட்ட பொருள் க்ஷணத்துக்குள் மனிதனுக மாறிவிடுகிறது. மனிதனுகவெண்ணப்பட்டது க்ஷணத்துக்குள் மரமாக மாறிவிடுகிறது. ஸ்வப்பினத்தில் தேர் முதலியவற்றின் இல்லாமையைச் ஶ்ருதி தெளிவாயுபதேசித்து மிருக்கிறது. அதாவது:—“அங்கு தேர்களும் தேரில்கட்டும் காளேமுதலியனவும் வழிகளும் கிடையா” என்ற தாதியாம். ஆதல் பற்றி ஸ்வப்பினதர்சனமானது மாயாமாத்திரமே யாகும்.

(ஸூ) ஸூசக: சஹி ச்ருதே: ஆசக்ஷதே ச தத்வித: (4)

(ப—ரை) [स्वप्नः (ஸ்வப்ன:)=ஸ்வப்பினமானது இனிவரவிருக்கும் நன்மை தீமைகளுக்கு] **सूचकश्चहि** (ஸூசகஶ்சஹி)=அறிகுறியாகவன்றே இருக்கின்றது. **श्रुतेः** (ஶ்ருதே:)=அத்தகைய ஶ்ருதியிருப்பதும், **तद्विदः** (தத்வித:)=ஸ்வப்பினத்தின் பயனே யறிந்தவர் **आचक्षते च** (ஆசக்ஷதே ச)=அவ்விதம் சொல்லியிருப்பதுமே அதன் காரணமாகும். (4) (எ—று)

பாஷ்யம்.—மாயாமாத்திரமாக (வெறும் மயக்கமாக) மட்டுமிருக்குமானல் அதுபோழ்து ஸ்வப்பினத்தில் உண்மையின் மணமொன்றுமே இருப்பதற்கிடமில்லே எனப் பிராப்த்தமாகவே அது இல்லேயெனச் சொல்லப்படுகிறது. ஸ்வப்பினமானது இனிவரவிருக்கும் நன்மைதீமைகளுக்கு ஸூசகமாக (அறிகுறியாகவன்றே இருக்கிறது. அவ்விதமே “எதுபோழ்து காம்யகர்மகாலங்களில் ஸ்வப்பினங்களில் ஸ்திரீயைக் காண்கின்றானே அதுபோழ்து அந்தக் காம்யகர்மத்தின் ஸமிருத்தியை (நிறைவை) அறியவேண்டும்.” “அதுபோலவே எவன் கருத்த நிறமுள்ளவனும் கருத்த பல்லுள்ளவனுமான புருஷனேப் பார்க்கின்றானே அவன் இவனேக் கொல்லுகிறான்” என்ற இம்மாதிரிகளான ஸ்வப்பினங்களால் வெகு காலம் ஜீவித்திருக்கமாட்டான் என்பது அறிவிக்கப்படுவதாகச் ஶ்ருதியும் சொல்

यानादीन्यधन्यानि' इति । मन्त्रदेवताद्रव्यविशेषनिमित्ताश्च केचित्स्वप्नाः सत्यार्थगन्धिनो भवन्तीति मन्यन्ते । तत्रापि भवतु नाम सूच्यमानस्य वस्तुनः सत्यत्वं, सूचकस्य तु स्त्रीदर्शनादेर्भवत्येव वैतथ्यं बाध्यमानत्वादित्यभिप्रायः । तस्मादुपपन्नं स्वप्नस्य मायामात्रत्वम् । यदुक्तम् 'आह हि' इति तदेवं सति भाक्तं व्याख्यातव्यम् । यथा लाङ्गलं गवादीनुद्वहतीति निमित्तमात्रत्वादेवमुच्यते, नतु प्रत्यक्षमेव लाङ्गलं गवादीनुद्वहति । एवं निमित्तमात्रत्वात्सुप्तो रथादीन्सृजते स हि कर्तेति चोच्यते, नतु प्रत्यक्षमेव सुप्तो रथादीन्सृजति । निमित्तत्वं त्वस्य रथादिप्रतिभाननिमित्तमोदत्रासादिदर्शनात्तन्निमित्तभूतयोः सुकृतदुष्कृतयोः कर्तृत्वेनेति वक्तव्यम् ॥

अपिच जागरिते विषयेन्द्रियसंयोगादादित्यादिज्योतिर्व्यतिकराच्चात्मनः स्वयंज्योतिष्ट्वं दुर्विवेचनमितितद्विवेचनाय स्वप्न उपन्यस्तः । तत्र यदि रथादिसृष्टिवचनं श्रुत्या नीयेत तदा स्वयंज्योतिष्ट्वं न निर्णीतं स्यात् । तस्माद्रथाद्यभाववचनं श्रुत्या, रथादिसृष्टि-

---

ஒகிறது. ஸ்வப்பிஞத்தியாய மறிந்தவர்கள் "ஸ்வப்பினத்தில் யானைமீதேருதல் முதலியன சிறந்ததென்றும் கழுதைமீதேருதல் முதலியன நன்றல்லதென்றும் உபதேசிக்கின்றனர். மந்திரம், தேவதை, திரவியவிசேஷம் இவற்றை நிமித்தமாகக் கொண்டு ஏற்படும் சிலஸ்வப்பினங்கள் உண்மைப் பொருளின் தொடர்புடையன வென்றும் எண்ணுகின்றனர். அவ்விடத்திலுங்கூட ஸூசிப்பிக்கப்படும் பொருள் ஸத்தியமாக (உண்மையிலுள்ளதாக) இருக்கட்டும். அதைக்குறிக்கும் ஸ்திரீதர்சனம் முதலியன பொய்யே யாகும். அவை பாதிக்கப்படுவதே அதன் காரணமுமாகும் என்பது கருத்து. ஆகவே ஸ்வப்பினமானது மாயாமத்திரமென்பது பொருத்தமானதே.

முதல் சூத்திரத்திலுள்ள "ஆஹஹி" என்றதால் எதுசொல்லப்பட்டதோ அது இவ்விதம் பார்க்குங்கால் கௌணமானதென வியாக்கியானஞ்செய்யப்பட்டதாக வாகின்றது. உலகில் கலப்பையானது பசுமுதலியவற்றைச் சுமக்கிறது என்று கூறுமிடத்து நிமித்தமாகமட்டும் இருப்பதுபற்றி இவ்விதம் சொல்லப்படுகிறதே யொழியக் கண்கூடாகக் கலப்பையானது பசுமுதலியவற்றைக் சுமப்பதில்லை என்பது எவ்விதமோ இவ்விதமே நிமித்தமாகமட்டு மிருப்பதுபற்றி ஸுப்தன் தேர்முதலியவற்றைப் படைக்கிருன் என்றும் அவனன்றோ கர்த்தா என்றும் சொல்லப்படுகிறது. ஸுப்தனே தேர்முதலியவற்றைப் படைப்பதில்லை யென்பது கண்கூடு. இவனுடைய நிமித்தத்தன்மையோ வெனில் தேர்முதலியவற்றின் தோற்றத்தை நிமித்தமாகக் கொண்ட ஸந்தோஷம் பயம் முதலியன காணப்படுதைக் கொண்டு அவற்றுக்கு நிமித்தங்களாக வான புண்ணியபாபங்களுக்குக் கர்த்தாவாக இருப்பது பற்றியே என்று சொல்லவேண்டும். மெலும் ஜாக்கிரத்தில் விஷயங்களுக்கும் இந்திரியங்களுக்கும் சேர்க்கையிருப்பதாலும், சூரியனுதியோரின் ஒளிகலந்து கிடப்பதாலும் ஆத்மாவினது ஸ்வப்ரகாசத்தன்மையானது பகுத்தறியவியலாதது என வெண்ணி அதைப் பாகுபாடுசெய்து காட்டவேண்டி ஸ்வப்பினமானது

वचनं तु भक्त्येति व्याख्येयम् । एतेन निर्माणश्रवणं व्याख्यातम् । यदप्युक्तम्—'प्राज्ञमेनं निर्मातारमामनन्ति' इति । तदप्यसत् । श्रुत्यन्तरे 'स्वयं विहत्य स्वयं निर्माय स्वेन भासा स्वेन ज्योतिषा प्रस्वपिति' (बृ० ४ । ३ । ९.) इति जीवव्यापारश्रवणात् । इहापि 'य एष सुप्तेषु जागर्ति' (क० ५ । ८) इति प्रसिद्धानुवादाज्जीव एवायं कामानां निर्माता सङ्कीर्त्यते । तस्य तु वाक्यशेषेण तदेव शुक्रं तद्ब्रह्मेति जीवभावं व्यावर्त्य ब्रह्मभाव उपदिश्यते—'तत्त्वमसि' (छा० ६ । ९ । ४) इत्यादिवदिति न ब्रह्मप्रकरणं विरुध्यते । नचास्माभिः स्वप्नेऽपि प्राज्ञव्यवहारः प्रतिषिध्यते । तस्य सर्वेश्वरत्वात्सर्वास्ववस्थास्वधिष्ठातृत्वोपपत्तेः । पारमार्थिकस्तु नायं संध्याश्रयः सर्गो वियदादिसर्गवदित्येतावत्प्रतिपाद्यते । नच वियदादिसर्गस्याप्यात्यन्तिकं सत्यत्वमस्ति । प्रतिपादितं हि 'तदनन्यत्वमारम्भणशब्दा-

---

உபந்யஸிக்கப் பட்டது. அவ்விடத்திலுள்ள தேர் முதலியவற்றினுடைய ஸிருஷ்டியாதிவசனமானது முக்கியமாகக் கொள்ளப்படுமாயின், அதுபோழ்து (ஆத்மாவினது)ஸ்வப்ரகாசத்தன்மையானது நிர்ணயிக்கப்படாததாக வாகிவிடும். ஆனதுபற்றித் தேர்முதலியன இல்லையென்ற வசனமானது முக்கியமானதாகவும், தேர் முதலியவற்றின் ஸிருஷ்டியைச் சொல்லும் வசனமானது கௌணமானதாகவும் உரைசெய்துகொள்ளத்தக்கதாகிறது. இதனால் நிர்மாணஞ்சொல்லும் ஶ்ருதியும் விரிக்கப்பட்டதாக வாகிவிடுகிறது. "ப்ராச்ஞனை இவனை நிர்மாதாவாகச் சொல்லுகின்றனர்" என யாதொன்று சொல்லப்பட்டதோ அதுவும் பயனற்றதேயாகும். வேறுசுருதியில் "தானே விஹத்ய=ஜாக்கிரத்தேஹத்தை எவ்விதவியாபாரமுமற்றதாகச் செய்து, தானே வாஸனையினால் (தேர்முதலியவற்றை) நிர்மாணஞ்செய்துகொண்டு தனது புத்திவிருத்தியினால் ஸ்வரூபசைதன்யத்துடன் தூங்குகிறான்" என்பதாய் ஜீவனது வியாபாரம் காணவும் படுகிறது. இவ்விடத்திலுங் கூட "பிரஸித்தனான யாதொரு இவன் இந்திரியங்கள் தூங்கினதும் விழித்துக்கொண்டிருக்கின்றானோ" என்றதால் ப்ரஸித்தமான பொருளை (ய ஏஷ: என்றதால்) அநுவாதம் செய்திருப்பதிலிருந்து இந்த ஜீவனே காமங்களுக்கு நிர்மாதாவாகச் சொல்லப்படுகிறான். அவனுக்கோ மேலுள்ள வாக்கியத்தினால் "அதுவே சுத்தமானது அது ப்ரம்ஹம்" என்பதாய் ஜீவத்தன்மையை விலக்கி "தத்வமஸி" என்றதிபோல ப்ரம்ஹபாவமானது உபதேசிக்கப்படுவதுபற்றி ப்ரம்ஹத்தைச் சொல்லத்தொடங்கிய ப்ரகரணத்துக்கு விரோதம் வருவதற்கு மிடமில்லை. ஸ்வப்பிநத்தில் ப்ராக்ஞனை பரமாத்மாவினது வியாரமானது நம்மால் மறுக்கப்படுவதுமில்லை. அவர் ஸர்வேஸ்வரனாவது பற்றி எல்லா அவஸ்தைகளிலும் அதிஷ்டாதாவாக (நியந்தாவாக) இருப்பது பொருந்தக்கூடியதாக விருப்பதே அதன் காரணமாகும். ஸந்தியை யாஶ்ரயித்த இந்த ஸிருஷ்டியானது ஆகாசாதி ஸிருஷ்டியானதுபோல உண்மையானதன்று என்ற இவ்வளவுமட்டுந்தான் கூறப்படுகிறது. மேலும் ஆகாசாதி ஸிருஷ்டிக்கும் ஆத்யந்திகமான (எப்பொழுதும் நிலைத்ததான) ஸத்யத்தன்மையானது கிடையாது "ததநந்யத்வமாரம்பணசப்தாதிப்ய:" என்ற (2 அ. 1

दिभ्यः' (ब्र० सू० २ । १ । १४) इत्यत्र समस्तस्य प्रपञ्चस्य मायामात्रत्वम् । प्राक्तु ब्रह्मात्मत्वदर्शनाद्वियदादिप्रपञ्चो व्यवस्थितरूपो भवति । संध्याश्रयस्तु प्रपञ्चः प्रतिदिनं बाध्यत इति । अतो वैशेषिकमिदं संध्यस्य मायामात्रत्वमुदितम् ॥ ४ ॥

पराभिध्यानात्तु तिरोहितं ततो ह्यस्य बन्धविपर्ययौ ॥ ५ ॥

अथापि स्यात्परस्यैव तावदात्मनोंऽशो जीवोऽग्नेरिव विस्फुलिङ्गः । तत्रैवं सति यथाग्निविस्फुलिङ्गयोः समाने दहनप्रकाशनशक्ती भवत एवं जीवेश्वरयोरपि ज्ञानैश्वर्यशक्ती, ततश्च जीस्य ज्ञानैश्वर्यवशात्साङ्कल्पिकी स्वप्ने रथादिसृष्टिर्भविष्यतीति । अत्रोच्यते—सत्यपि जीवेश्वरयोरंशांशिभावे प्रत्यक्षमेव जीवस्येश्वरविपरीतधर्मत्वम् । किं पुनर्जीवस्येश्वरसमानधर्मत्वं नास्त्येव । न नास्त्येव । विद्यमानमपि तत्तिरोहितमविद्यादिव्यवधा-

---

பா. 14 சூத்) விடத்தில் எல்லாப்ரபஞ்சமும் மாயாமாத்திரம் என்பது விரிக்கப் பட்டு மிருக்கிறது. ப்ரம்ஹாத்மைகத்வ ஸாக்ஷாத்காரம் வருவதற்கு முன்னரோ ஆகாசாதிப் பிரபஞ்சமானது நிலைத்தவுருவமுள்ளதாக விருக்கிறது. ஸந்தியை யாஶ்ரயித்தப் பிரபஞ்சமோ வெனில் ஒவ்வொருநாளும் பாதிக்கப்படுவதாக விருக்கிறது என்றும். ஆகவே ஸந்தியாஶ்ரிதமான பொருளுக்குச் சொல்லிய இந்த மாயாமாத்திரத்தன்மையானது தனிப்படக் கூறியதே யாகும். (4) (எ—று)

(ஸூ) பராபித்யாநாத்து திரோஹிதம் ததோஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ (5)

(ப—ரை) **तिरोहितम्** (திரோஹிதம்)=அவித்யாதிகளினால் மறைக்கப்பட்ட ஜீவனுடைய ஈஶ்வரஸமானதர்மத்வமானது **पराभिध्यानात्तु** (பராபித்யாநாத்து)=பரமாத்மாவினது தியானவிஶேஷத்தினால் ஆவிர்ப்பாவத்தையடைகிறது. **ततोहि** (ததோஹி)=அப்பரமேஶ்வரனிடமிருந்தன்றோ **अस्य** (அஸ்ய)=இந்த ஜீவனுக்கு **बन्धविपर्ययौ** (பந்தவிபர்யயௌ)=பந்தமோக்ஷங்கள் ஏற்படுகின்றன. (5) (எ—று)

பாஷ்யம்.—சங்கை—பின்வருமாறு மிருக்கலாம். நெருப்பினது பொறியானது போல ஜீவன் பரமாத்மாவினுடைய அம்சமாகவாகிறான். அது இவ்வித மிருக்குங்கால் நெருப்புக்கும் அதன் பொறிக்கும் தஹநசக்தி பிரகாசநசக்தி இவைகள் எவ்விதம் பொதுவாக விருக்கின்றனவோ இவ்விதமே ஜீவேஶ்வரர்களுக்கும் க்ஞானைஶ்வர்ய சக்திகளாகின்றன. அதனின்றும் ஜீவனுக்குக் ஞானைஶ்வரியவசத்தால் ஸ்வப்பிநத்தில் ஸங்கல்பமாத்திரத்தால் தேர் முதலியவற்றின் ஸிருஷ்டி உண்டாகலாம். என்கிறோம் எனின்?

உத்தரம்—இவ்விஷயத்தில் பதில் சொல்லப்படுகிறது. ஜீவேஶ்வரர்களுக்கு அம்சாம்சிபாவமானது இருந்தபோதிலும் ஜீவன் ஈஶ்வரனுக்கு மாறான தர்மமுள்ளவனாகவிருப்பது கண்கூடு. ஜீவனுக்கு ஈஶ்வரனுக்கொப்பான தர்மமுள்ளவனாக விருத்தல் கிடையாதோவெனின்? இல்லவே இல்லை என்பதில்லை. இருந்த போதிலுங்கூட அது (ஈஶ்வரனுக்கொப்பான தர்மமுள்ளவனாக விருத்தல்)

नात् । तत्पुनस्तिरोहितं सत्परमेश्वरमभिध्यायतो यतमानस्य जन्तोर्विधूतध्वान्तस्य तिमिरतिरस्कृतेव दृक्शक्तिरौषधवीर्यादीश्वरप्रसादात्संसिद्धस्य कस्यचिदेवाविर्भवति न स्वभावत एव सर्वेषां जन्तूनाम् । कुतः—ततो हीश्वराद्धेतोरस्य जीवस्य बन्धमोक्षौ भवतः। ईश्वरस्वरूपापरिज्ञानाद्बन्धस्तत्स्वरूपपरिज्ञानात्तु मोक्षः । तथा च श्रुतिः—'ज्ञात्वा देवं सर्वपाशापहानिः क्षीणैः क्लेशैर्जन्ममृत्युप्रहाणिः । तस्याभिध्यानात्तृतीयं देहभेदे विश्वैश्वर्यं केवल आप्तकामः' (श्वे० १ । ११) इत्येवमाद्या ॥ ५ ॥

देहयोगाद्वा सोऽपि ॥ ६ ॥

कस्मात्पुनर्जीवः परमात्मांश एव संस्तिरस्कृतज्ञानैश्वर्यो भवति । युक्तं तु ज्ञानैश्वर्ययोरतिरस्कृतत्वं विस्फुलिङ्गस्येव दहनप्रकाशनयोरिति । उच्यते । सत्यमेवैतत् । सोऽपि

அவித்யாதிகளாகிற பரைவால் மறைக்கப்பட்டிருக்கிறது. அது மறைக்கப்பட்டதா யிருந்துகொண்டு பரமேஸ்வரனை த்யானஞ்செய்து முயற்சிக்கின்றவனும் இருள்நீங்கினவனும் ஈஸ்வரப்ரஸாதத்தால் ஸித்திபெறுபவனுமான ஒரு ஜந்துவுக்கே ஒஷதியின் வீரியத்தை முன்னிட்டுத் திமிரமென்ற ரோகத்தால் மறைக்கப்பட்ட பார்க்கும் சக்தியானது போலத்திரும்பவு முதயமாகின்றதே யொழிய இயற்கையாகவே எல்லாஜந்துக்களுக்கும் உண்டாவதில்லை. ஏன்? அந்த ஈஸ்வர நிமித்தமாகவேயன்றோ இந்த ஜீவனுக்குப் பந்தமோக்ஷங்கள் ஏற்படுகின்றன. ஈஸ்வரனுடைய ஸ்வரூபத்தையறியாமையால் பந்தமும், அவரது ஸ்வரூபத்தை உள்ளபடி அறிவதால் மோக்ஷமுமோ உண்டாகிறது. அவ்விதமே "ஈஸ்வரனை யறிந்ததும் ஸர்வபாசங்களுக்கும் நாசமுண்டாகிறது. க்லேசங்கள் (அவித்தை, அஸ்மிதா, ராகம், துவேஷம், அபிநிவேசம் இவ்வைந்தும் க்லேஶமெனப்படும்.) தேய்ந்ததும் ஜனன மரணங்களுக்கு ஹானியுண்டாகிறது. பரமேஸ்வரனுடைய அநுஸந்தானோபாஸனத்தால் மூன்றாவதான (அதாவது: ஸர்வபாசாப ஹானியையும், ஜந்மம்ருத்யு ஹானியையும்விட மூன்றாவதான என்று கருத்து.) விஸ்வைஸ்வர்யமானது (அணிமாதிஸித்தியானது) ஏற்படுகிறது. இந்த மனித தேஹம் போனதும் த்வைதமற்றதும், ஆப்தகாமமுமான ஆநந்தரூபமாகவாகிறான்" என்ற இம்மாதிரியான ஶ்ருதியுமிருக்கிறது. (5) (எ—று)

(ஸூ) தேஹயோகாத்வா ஸோபி (6)

(ப—ரை) **सोपि** (ஸோபி)=அந்த க்ஞானைஸ்வர்ய திரோபாவமும். **देहयोगाद्वा** (தேஹயோகாத்வா)=தேஹத்தின் சேர்க்கையாலேயே ஏற்படுகிறது. (6) (எ—று)

பாஷ்யம்.—ஜீவன் பரமாத்மாவின் அம்சமாகவே இருந்துகொண்டு மறைக்கப்பட்ட க்ஞானைஸ்வர்யமுள்ளவனாக எவ்விதமாகக் கூடும். நெருப்புப்பொறியினுடைய தஹநப்ரகாசன சக்திகளுக்குப்போல(இவனது)க்ஞானைஸ்வர்யங்களுக்கு மறைக்கப்படாதிருத்தல் சொல்லுவது தான் பொருந்தும் எனின்? பதில் சொல்லப்படுகிறது. இஃதுண்மைதான். ஜீவனுடைய அந்த க்ஞானைஸ்வர்யதிரோபாவ

तु जीवस्य ज्ञानैश्वर्यतिरोभावो देहयोगात्=देहेन्द्रियमनोबुद्धिविषयवेदनादियोगाद्भवति। अस्ति चात्रोपमा यथाग्नेर्दहनप्रकाशनसंपन्नस्याप्यरणिगतस्य दहनप्रकाशने तिरोहिते भवतो यथा वा भस्मच्छन्नस्य। एवमविद्याप्रत्युपस्थापितनामरूपकृतदेहाद्युपाधियोगात्तदविवेकभ्रमकृतो जीवस्य ज्ञानैश्वर्यतिरोभावः। वाशब्दो जीवेश्वरयोरन्यत्वाशङ्काव्यावृत्त्यर्थः। नन्वन्य एव जीव ईश्वरादस्तु तिरस्कृतज्ञानैश्वर्यत्वात्किं देहयोगकल्पनया। नेत्युच्यते। नह्यन्यत्वं जीवस्येश्वरादुपपद्यते 'सेयं देवतैक्षत' (छा० ६।३।२) इत्युपक्रम्य 'अनेन जीवेनात्मनाऽनुप्रविश्य' (छा० ६।३।२) इत्यात्मशब्देन जीवस्य परामर्शात्। 'तत्सत्यं स आत्मा तत्त्वमसि श्वेतकेतो' (छा० ६।९।४) इति च जीवायोपदिशतीश्वरात्मत्वम्। अतोऽनन्य एवेश्वराज्जीवः सन्देहयोगात्तिरोहितज्ञानैश्वर्यो भवति। अतश्च न साङ्कल्पिकी जीवस्य स्वप्ने रथादिसृष्टिर्घटते। यदि च साङ्कल्पिकी स्वप्ने रथादिसृष्टिः स्यान्नैवानिष्टं

மானது (மறைவானது) தேஹயோகத்தால்=தேஹம் இந்திரியம் மனம் புத்தி விஷயாநுபவம் இவைமுதலியவற்றின் சேர்க்கையாலேற்படுகிறது. இவ்விஷயத்தில் திருஷ்டாந்தமுமிருக்கிறது. தஹநப்ரகாசனத்துடன் கூடினதாயினும் கூட அரணிக் கட்டையையடைந்த நெருப்புக்குத் தஹநப்ரகாசனங்கள் திரோஹிதங்களாக (மறைக்கப்பட்டனவாக) வாவது எவ்விதமோ, சாம்பலில் மறைந்த நெருப்புக்கு எவ்விதமோ, இவ்விதமே ஜீவனுடைய க்ஞானைஸ்வர்ய திரோபாவமானது அவித்தையினால் உண்டுபண்ணப்பட்ட நாமரூபங்களாற் செய்யப்பட்ட தேஹாதியாகிற உபாதியின் சேர்க்கையினின்றும் ஏற்பட்ட அவற்றின் அவிவேகப்ரமத்தாற் செய்யப்பட்டதாக ஏற்படுகிறது. ஸூத்திரத்திலுள்ள வா என்ற சப்தமானது ஜீவேஸ்வரர்கள் வேறுபட்டவர்கள் என்ற ஆசங்கையை மறுத்துக்கூறுகின்றது.

சங்கை—"மறைக்கப்பட்ட க்ஞானைஸ்வர்யமுள்ளவனாக விருப்பதுபற்றி ஈஸ்வரனைக் காட்டிலும் வேறுபட்டவனாகவே (ஜீவன்) இருக்கட்டும். தேஹயோகத்தின் கல்பனை எதற்கு எனின்?

உத்தரம்—அது பொருந்தாதெனச் சொல்லப்படுகிறது. ஜீவனுக்கு ஈஸ்வரனைக் காட்டிலும் வேறுபட்டிருத்தல் பொருந்தமாட்டாது. "அந்த இந்த தேவதை ஆலோசித்தது" என்று தொடங்கி "இந்த ஜீவனாகிற ஆத்மாவினால் (ஸ்வரூபத்தினால்) உள்ளில் பிரவேசித்து" என்றதால் ஆத்மா என்ற சப்தத்தால் ஜீவனைச் சொல்லியிருப்பதே அதன் காரணமாகும். "அது ஸத்யம், அது ஆத்மா, அதாகநீ இருக்கின்றாய் ஸ்வேதகேதோ!" என்றும் ஜீவனையும் பொருட்டு ஈஸ்வராத்மத்வத்தைச் சாஸ்திரம் உபதேசிக்கிறது. ஆனதுபற்றி ஜீவன் ஈஸ்வரனைவிட வேறுபடாதவனாகவே இருந்து கொண்டு தேஹயோகத்தை முன்னிட்டுத் திரோஹிதமான க்ஞானைஸ்வர்ய முள்ளவனாக வாகிறான். அதனாலும் ஜீவனுக்கு ஸ்வப்பினத்தில் ஸங்கல்பமூலம் ஏற்படும் தேர்முதலியவற்றின் ஸிருஷ்டி சொல்லுவது பொருந்தாது. ஸ்வப்பினத்தில் ஸங்கல்பமூலம் தேர் முதலியவற்றின் ஸிருஷ்டியா

कश्चित्स्वप्नं पश्येत् । नहि कश्चिदनिष्टं सङ्कल्पयते । यत्पुनरुक्तं जागरितदेशश्रुतिः स्वप्नस्य सत्यत्वं स्थापयतीति न तत्साम्यवचनं सत्यत्वाभिप्रायं स्वयंज्योतिष्ट्वविरोधात् । श्रुत्यैव च स्वप्ने रथाद्यभावस्य दर्शितत्वात् । जागरितप्रभववासनानिर्मितत्वात्तु स्वप्नस्य तत्तुल्यनिर्भासत्वाभिप्रायं तत् । तस्मादुपपन्नं स्वप्नस्य मायामात्रत्वम् ॥ ६ ॥

२ तदभावाधिकरणम् । सू० ७–८

तदभावो नाडीषु तच्छ्रुतेरात्मनि च ॥ ७ ॥

नाडीपुरीतद्ब्रह्माणि विकल्प्यन्ते सुषुप्तये । समुच्चितानि वैकार्थ्याद्विकल्प्यन्ते यवादिवत् ॥ १ ॥

समुच्चितानि नाडीभिरुपसृप्य पुरीतति । हृत्स्थे ब्रह्मणि यात्यैक्यं विकल्पेऽष्टदोषता ॥ २ ॥

னது இருக்குமாயின் ஒருவனும் அநிஷ்டமான ஸ்வப்பிநத்தைப் பார்க்கமாட்டான். ஒருவனும் அநிஷ்டத்தை ஸங்கல்பிக்கமாட்டானன்றோ? ஜாகரித தேச ஶ்ருதியானது ஸ்வப்பிநத்துக்கு ஸத்யத்வத்தை ஸ்தாபிக்கிறது என யாதொன்று சொல்லப்பட்டதோ அந்த ஸாம்யம் கூறும் வசனமானது ஸத்யத்வத்தைக் கருத்திற் கொண்டதன்று. (அங்ஙனமாயின்) ஸ்வயம் ஜ்யோதிஸ் தன்மை சொன்னது விருத்தமாக வாகிவிடும். ஶ்ருதியினாலேயே ஸ்வப்பிநத்தில் தேர் முதலியவற்றினுடைய அபாவமானது காண்பிக்கப்பட்டு மிருக்கிறது. ஸ்வப்பிநமானது ஜாகரிதத்திலுண்டான வாஸனையினா லுண்டுபண்ணப்பட்டிருப்பதால் அதற்கொப்பான தோற்றமுள்ளது என்ற கருத்துக் கொண்டு அவ்வசனமேற்பட்டது. ஆனது பற்றி ஸ்வப்பிநத்துக்கு மாயாமாத்திரத்தன்மையானது பொருத்தமுள்ளதாக வாகிவிடுகிறது. (6) (எ–று)

ஒன்றாவது ஸந்த்யாதிகரணம் முற்றிற்று.

ததபாவாதிகரணம் 2.

(அ–கை) வெளியிலுள்ள இந்திரியங்களின் உபரமம் (ஓய்வு) ஏற்பட்டதும் மனத்திலுள்ள வாஸனையினால் வெளிப்போந்த அவித்தையின் விலாஸவடிவமான ஸ்வப்பிநத்தை ஸாக்ஷியான ஆத்மாவுக்கு ஸ்வயம்ஜ்யோதிஷ்ட்வம் சொல்லுவதற்குவேண்டி விசாரித்து ஸ்வப்பிநாவஸ்தையை யடைந்த மனத்தின் லயரூபமான ஸுஷுப்தியை விசாரிக்கவேண்டி இரண்டு ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணம் ஆரம்பிக்கப் படுகிறது. அதன் முதல் ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ததபாவோ நாடீஷு தத்சுருதே: ஆத்மநி ச (7)

(ப–ரை) **तदभावः** (ததபாவ:)=ஸ்வப்பிநதர்சனத்தின் அபாவமானது அதாவது:—ஸுஷுப்தமானது **नाडीषु आत्मनि च** (நாடீஷு ஆத்மநி ச)=நாடிகளிலும் ஆத்மாவிலும் ஸமுச்சிதமாகவே (ஒன்று சேர்ந்ததாகவே) ஏற்படுகிறது. ஏன்? **तच्छ्रुतेः** (தத்சுருதே:)=அவ்விதஸமுச்சயத்தைக் கூறும் சுருதியிருப்பதே அதன் காரணமாகும். (1) (எ–று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ஸுஷுப்தியின் பொருட்டு ஏனைய நாடிகளும், புரீதத்தும், ப்ரம்ஹமும் விகல்பிக்கப்படுகின்றனவா? ஸமுச்சிதங்களாக வாகின்றனவா? என்பது ஸந்தேஹம். (அதாவது:—நாடிகளிலாவது, புரீதத்திலாவது, ப்ரப்ஹத்திலாவது ஸுஷுப்தி யேற்படுகின்றதா? அல்லது நாடிகள் வாழியாகப் புரீதத்தில் சென்று பிறகு ப்ரப்ஹத்தில் ஸுஷுப்தி யேற்படுகிறதா? என்பதாம்.) நாடிகளும், புரீதத்தும், ப்ரப்ஹமும் ஒரேவிதமான ஸுஷுப்தி ரூபமான பயனுள்ளன பற்றி யவம் முதலியது போல விகல்பிதங்களே யாகும் என்பது பூர்வபக்ஷம். நாடிகள் வழியாகச் சென்று புரீதத்திலும் ஹிருதயத்திலுள்ள ப்ரம்ஹத்தினிடத்திலும் ஐக்கியத்தை யடைகிறான். ஆனதுபற்றி நாடிகள், புரீதத், ப்ரம்ஹம் இவைகள் ஸமுச்சிதங்களேயாகும். விகல்பஞ்சொன்னாலோ எட்டு விதங்களான தோஷங்கள் வரத்தெரியும். (எ—று)

குறிப்பு—"வ்ரீஹிபிர்யஜேத, யவைர் யஜேத வ்ரீஹிகளைக் கொண்டாவது, யவங்களைக் கொண்டாவது புரோடாசந்தயார்செய்து யாகஞ்செய்தல் வேண்டும்" என்ற விடத்தில் எட்டு தோஷங்களுள்ளவிகல்பமானது வேறுவழியில்லாது அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. அவ்வெட்டுதோஷங்களாவன—முதலிலுள்ள வ்ரீஹியைக்கொண்டு புரோடாசந் தயார் செய்யத்தொடங்குங்கால் (1) யவைஃ (யவங்களால்) என்ற சாஸ்திரத்துக்குள்ள ப்ராமாண்யத்தை விடவேண்டிவருகிறது. (2) அதேசாஸ்திரத்துக்கு அப்ராமாண்யத்தைக் கல்பிக்கவேண்டியும் வருகிறது. (3) இரண்டாவதான யவங்களைக் கொண்டு புரோடாசந் தயார் செய்யத் தொடங்குங்கால் வ்ரீஹியின் அநுஷ்டானகாலத்தில் விடப்பட்ட யவசாஸ்திரத்தின் ப்ராமாண்யத்தை யங்கீகரித்தல், (4)யாதொரு அப்ராமாண்யமானது ஒப்பப்பட்டதோ அதை விடுதல் என இவ்விதம் யவசாஸ்திரத்தில் நான்கு தோஷங்கள் நேருகின்றன. இவ்விதமல்லாது முதலில் யவங்களைக் கொண்டு புரோடாசந் தயார்செய்யத் தொடங்கினால் (1) வ்ரீஹிபி: (வ்ரீஹிகளினால்) என்ற சாஸ்திரத்துக்குள்ள தனது பொருளை அநுஷ்டிக்கும்படி செய்தல் என்றப்ராமாண்யத்தை விடவேண்டி வருதல், (2) தனதுபொருளை அநுஷ்டிக்கும்படி செய்யாதிருத்தல் என்ற அப்ராமாண்யத்தைக் கல்பித்தல் (3) முதலாவதான வ்ரீஹிகளைக் கொண்டு புரோடாசந் தயார் செய்யுங்கால் யவத்தின் அநுஷ்டானகாலத்தில் விடப்பட்ட ப்ராமாண்யத்தை யங்கீகரித்தல் (4) ஒப்பப்பட்ட அப்ராமாண்யத்தைப் பரித்யாகஞ் செய்தல் என வ்ரீஹிசாஸ்திரத்தில் நான்குதோஷங்கள் நேருகின்றன. ஆகவே சாஸ்திரமூலமேற்படும் விகல்பஸ்தலத்தில் முற்கூறிய 8தோஷங்கள் ஸம்பவிப்பதில் வ்ரீஹி யவ சாஸ்திரவிஷயத்தில் வேறுவழியில்லாது மட்டும் அந்த விகல்பம் ஒப்பப்படுவதால் இந்த ஸுஷுப்தி விஷயத்தில் நாடிகளிலோ, புரீதத்திலோ, ப்ரம்ஹத்திலோ என விகல்பத்தையங்கீகரித்தால் முற்கூறிய 8 தோஷங்களும் வருவதாலும் நாடி வழியாகப் புரீதத் என்ற சிறு நாடியில் சென்று அங்கிருந்து ப்ரம்ஹத்தினிடத்தில் ஐக்கியத்தையடைகிறான் என ஸமுச்சயத்தைத்தான் அங்கீகரிக்க வேண்டும். இந்த சமுச்சயத்தில் முற்கூறியபடி எவ்வித தோஷமும் வருவதில்லை. (எ—று)

स्वप्नावस्था परीक्षिता सुषुप्तावस्थेदानीं परीक्ष्यते । तत्रैताः सुषुप्तिविषयाः श्रुतयो भवन्ति । क्वचिच्छ्रूयते—'तद्यत्रैतत्सुप्तः समस्तः संप्रसन्नः स्वप्नं न विजानात्यासु तदा नाडीषु सृप्तो भवति' (छां० ८ । ६ । ३) इति । अन्यत्र तु नाडीरेवानुक्रम्य श्रूयते—'ताभिः प्रत्यवसृप्य पुरीतति शेते' (बृ० २ । १ । १९) इति । तथान्यत्र नाडीरेवानुक्रम्य 'तासु तदा भवति यदा सुप्तः स्वप्नं न कञ्चन पश्यत्यथास्मिन्प्राण एवैकधा भवति' (कौषी० ४ । १९.) इति । तथान्यत्र 'य एषोऽन्तर्हृदय आकाशस्तस्मिञ्छेते' (बृ० २ । १ । १७) इति । तथान्यत्र 'सता सोम्य तदा संपन्नो भवति स्वमपीतो भवति' (छां० ६ । ८ । १) इति । प्राज्ञेनात्मना संपरिष्वक्तो न बाह्यं किञ्चन वेद नान्तरम्' (बृ० ४ । ३ । २१) इति च । तत्र संशयः—किमेतानि नाड्यादीनि परस्परनिरपेक्षाणि भिन्नानि सुषुप्तिस्थानान्याहोस्वित्परस्परापेक्षयैकं सुषुप्तिस्थानमिति । किं तावत्प्राप्तं भिन्नानीति । कुतः—एकार्थत्वात् । नह्येकार्थानां क्वचित्परस्परापेक्षत्वं दृश्यते व्रीहियवादीनाम् । ना-

---

பாஷ்யம்.—ஸ்வப்நாவஸ்தை பரீக்ஷிக்கப்பட்டது. ஸுஷுப்த்யவஸ்தை இதுபோழ்து பரீக்ஷிக்கப் படுகிறது. அவ்விடத்தில் ஸுஷுப்திவிஷயங்களான இந்த ஶ்ருதிகளிருக்கின்றன. சிலவிடத்தில் "தூக்கம் எவ்விதம் வருமோ அவ்விதமாகத் தூங்கினவனும் புறக்கரணவுணர்வற்றவனும் மனமொடுங்கினதாற் றெளிந்தவனுமான புருஷன் எதுபோழ்து ஸ்வப்நத்தையறிகின்றானில்லையோ அதுபோழ்து இந்த நாடிகளில் சென்றவனாக வாகின்றான்" எனப் படிக்கப்படுகிறது. வேறிடத்திலோ ஶ்ருதியில் நாடிகளையே சொல்லத்தொடங்கி "அவைகளால் (நாடிகளால்) சென்று புரீதத்தில் (இது ஹிருதயத்திலுள்ள ஓர் சிறுநாடியாகும்) ஒடுங்குகிறான்" எனப்படிக்கப்படுகிறது. அதுபோலவே வேறிடத்தில் நாடிகளையே சொல்லத்தொடங்கி 'எதுபோழ்து ஸுஷுப்தியை யடைந்தவனாய் ஒருவித ஸ்வப்நத்தையும் பார்க்கின்றானில்லையோ அதுபோழ்து நாடிகளிலிருக்கிறான், பிறகு இந்தப் பிராணனிடத்திலேயே ஒன்றுபட்டவனாக வாகிறான்" எனப் படிக்கப் படுகிறது. அவ்விதமே வேறிடத்தில் "அந்தர்ஹிருதயத்திலுள்ள யாதொரு இந்த ஆகாசமுண்டோ அதில் படுத்திருக்கிறான்" என்றும், அவ்விதமே வேறிடத்தில் "அப்பொழுது ஹே ஸோம்ய! ஸத்பதப்பொருளுடன் ஒன்றுபட்டவனாக வாகிறான். அதாவது:—தன்னையடைந்தவனாகவாகிறான்" என்றும், "ப்ராக்ஞனான ஆத்மாவுடன் நன்கு கலந்துகொண்டவனாய் வெளியிலுள்ள வொன்றையும் அறிவதில்லை. உள்ளிலுள்ளதையு மறிவதில்லை" என்றும் படிக்கப்படுகிறது. அங்கு ஸம்சய முண்டாகிறது. அதாவது:—இந்த நாடி முதலியன ஒன்றையொன்று எதிர்பாராது வேறுபட்டனவாய் ஸுஷுப்திஸ்தானங்களாக வாகின்றனவா? அல்லது ஒன்றை யொன்று எதிர்பார்த்து ஒரேஸுஷுப்தி ஸ்தானமாக வாகின்றதா? என்பதாம். முதலிற் கிடைப்பதாவது—வேறுபட்டன வென்பதே யாம். ஏன்? ஒரே பயனுள்ளனவாக விருப்பதே அதன் காரணமாகும். ஒரேபயனுள்ளவைகளான வ்ரீஹி யவம் முதலியவற்றுக்கு ஓரிடத்திலும் ஒன்றை யொன்று

ड्यादीनां त्वेकार्थता सुषुप्तौ दृश्यते—'नाडीषु सृप्तो भवति' (छा० ८।६।३) 'पुरीतति शेते' (बृ० २।१।१९) इति च तत्र तत्र सप्तमीनिर्देशस्य तुल्यत्वात्। ननु नैवं सति सप्तमीनिर्देशो दृश्यते—'सता सोम्य तदा संपन्नो भवति' (छा० ६।८।१) इति नैष: दोष:। तत्रापि सप्तम्यर्थस्य गम्यमानत्वात्। वाक्यशेषो हि तत्रायतनैषी जीव: सदुपसर्पतीत्याह—'अन्यत्रायतनमलब्ध्वा प्राणमेवोपश्रयते' (छा० ६।८।२) इति प्राणशब्देन तत्र प्रकृतस्य सत उपादानात्। आयतनं च सप्तम्यर्थ:। सप्तमीनिर्देशोऽपि तत्र वाक्यशेषे दृश्यते—'सति संपद्य न विदु: सति संपद्यामहे' (छा० ६।९।२) इति। सर्वत्र च विशेषविज्ञानोपरमलक्षणं सुषुप्तं न विशिष्यते। तस्मादेकार्थत्वान्नाड्यादीनां विकल्पेन कदाचित्किञ्चित्स्थानं स्वापायोपसर्पतीति। एवं प्राप्ते—

प्रतिपाद्यते— तदभावो नाडीष्वात्मनि चेति। तदभाव इति तस्य प्रकृतस्य स्वप्नदर्शनस्याभाव: सुषुप्तमित्यर्थ:। नाडीष्वात्मनि चेति समुच्चयेनैतानि नाड्यादीनि स्वापायो-

---

எதிர்பார்த்தல் காணப்படவில்லை யன்றோ. நாடி முதலியவற்றுக்கு ஸுஷுப்தியில் ஒரேபயனுள்ளனவாக விருத்தல் காணப்படுகிறது. "நாடிகளிற் சென்றவனாக வாகின்றான்" "புரீதத்தில் படுக்கிறான்" என்பதாய் ஆங்காங்கு ஸப்தமீ நிர்த்தேசம் (ஏழாம் வேற்றுமை சொல்லியிருத்தல்) பொதுவாகக் காணக்கிடக்கிறது.

சங்கை—அங்ஙனமாயின் "ஸத்பதப்பொருளுடன் ஹேஸோம்ய அப்பொழுது நன்கு கலந்தவனாக வாகின்றான்" என்றவிடத்தில் ஸத்பதப்பொருளில் ஏழாம்வேற்றுமை காணப்படவில்லையே எனின்?

உத்தரம்—இந்தத் தோஷமில்லை. அவ்விடத்திலுங்கூட ஏழாம் வேற்றுமையின் பொருள் தோற்றத்தான் செய்கிறது. மேலுள்ள வாக்கியமோ வெனில் அதில் இருப்பிடத்தை விரும்பும் ஜீவன் ஸத்பதப்பொருளை யடைகிறான் எனவுபதேசிக்கிறது "வேறிடத்தில் ஆயதநத்தை (ஸ்தானத்தை) அடையாது ப்ராணனையே யடைந்தவனாக வாகிறான்" என்பதாய் ப்ராண என்ற சப்தத்தால் அவ்விடத்தில் முன்னிருந்து தொடர்ந்துள்ள ஸத்தை (ஸத்பதப்பொருளைச்) சொல்லியுமிருக்கிறது. அங்குள்ள ஆயதநம் என்பது ஏழாம் வெற்றுமைப் பொருளாகும். ஸப்தமீ நிர்த்தேசமும் அங்குள்ள வாக்கியசேஷத்தில் "ஸத்தில் ஏகீபாவத்தை (ஒன்றுபட்டிருத்தலை) யடைந்து ஸத்தில் ஸம்பத்தியை (ஒன்றுபட்டிருத்தலை) யடைந்தோமென எண்ணுகின்றனரில்லை" என்பதாய் காணவும்படுகிறது. எல்லாவிடத்திலும் தனிப்பட்ட அறிவின் குறைவுவுருவமான ஸுஷுப்தமானது வேறுபடுவதில்லை. ஆனதுபற்றி நாடிமுதலியன ஒரேபயனுள்ளனவாக விருப்பனபற்றி மாறிமாறி ஒருஸமயத்தில் ஒவ்வொரு ஸ்தானமாக ஸ்வாபத்துக்குவேண்டிச் செல்லுகிறான் என்றும். என இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்தமாகவே "ததபாவோ நாடீஷு ஆத்மநிச" என்றதால் (ஸித்தாந்தம்) சொல்லப்படுகிறது— ததபாவः என்றதற்கு ப்ரகிருதமான ஸ்வப்நதர்சனத்தினுடைய அபாவம் அதாவது: ஸு

पैति न विकल्पेनेत्यर्थः । कुतः—तच्छ्रुतेः । तथाहि—सर्वेषामेव नाड्यादीनां तत्र तत्र सुषुप्तिस्थानत्वं श्रूयते तच्च समुच्चये सङ्गृहीतं भवति । विकल्पे ह्येषां पक्षे बाधः स्यात् । नन्वेकार्थत्वाद्विकल्पो नाड्यादीनां व्रीहियवादिवद्युक्तम् । नेत्युच्यते । नह्येकविभक्तिनिर्देशमात्रेणैकार्थत्वं विकल्पश्चापतति । नानार्थत्वसमुच्चययोरप्येकविभक्तिनिर्देश दर्शनात्प्रासादे शेते पर्यङ्के शेत इत्येवमादिषु । तथेहापि नाडीषु पुरीतति ब्रह्मणि च स्वपितीत्येतदुपपद्यते समुच्चयः । तथाच श्रुतिः—'तासु तदा भवति यदा सुप्तः स्वप्नं न कञ्चन पश्यत्यथास्मिन्प्राण एवैकधा भवति' (कौषी० ४ । १९.) इति समुच्चयं नाडीनां प्राणस्य च सुषुप्तौ श्रावयत्येकवाक्योपादानात् । प्राणस्य च ब्रह्मत्वं समधिगतम्—'प्राणस्तथानुगमात्' (ब्र० सू० १ । १ । २८) इत्यत्र । यत्रापि निरपेक्षा इव नाडीः सुप्तिस्थानत्वेन

ஷுப்தி என்பது பொருள். நாடிகளிலும் ஆத்மாவினுமாக வேன ஸமுச்சிதமாகச் (சேர்ந்து) இந்த நாடி முதலியவற்றை ஸ்வாபத்துக்கு வேண்டி யடைகின்றானே யொழிய விகல்பமாக (நாடிகளையாவது, ஆத்மாவையாவது அடைகிறான் என்பதாக) வில்லை. ஏன்? அத்தகைய ஸ்ருதியிருப்பதே அதன் காரணமாகும் அதை விளக்குவாம். நாடி முதலிய எல்லாவற்றுக்கும் ஆங்காங்கு ஸுஷுப்திஸ்தானமாகவிருத்தல் ஸ்ருதியில் காணப்படுகிறது. அதுவும் ஸமுச்சயமாகச் சொல்லுங்கால் ஒத்ததாக வாகிவிடுகிறது. விகல்பஞ் சொன்னாலோ இவற்றுக்கு ஒரு ஸமயத்தில் இல்லாமை வரத்தெரியும்.

சங்கை—நாடி முதலியன ஒரேபயனுள்ளன பற்றி வ்ரீஹியவங்களுக்குப் போல விகல்பம் ஸம்பவிக்கலாம் எனச் சொல்லப்பட்டிருக்கிறதன்றோ எனின்?

உத்தரம்—அவ்விதமில்லையென்று சொல்லப்படுகிறது. ஒத்த ஒரேவிபக்தி (வேற்றுமை) யுள்ளனவாகச் சொல்லியிருப்பதைக் கொண்டு மட்டும் ஒரேபயனுள்ளனவாக விருத்தலும் விகல்பமும் வந்துவிட மாட்டாதன்றோ. வெவ்வேறு பயனுள்ள வற்றுக்கும் ஸமுச்சயமுள்ளவற்றுக்கும் "மாடியில் படுத்துறங்குகிறான்" "கட்டிலில் படுத்துறங்குகிறான்" என்றதாதியானவிடங்களில் ஒரேமாதிரியான விபக்தியின் (வேற்றுமையின்) நிர்த்தேசங்காணப்படுவதே அதன் காரணமாகும். அதுபோல இங்கும் நாடிகளிலும், புரீதத்திலும், ப்ரம்ஹத்தினிடத்திலும் தூங்குகிறான் என இவ்வித ஸமுச்சயமானது பொருந்தக் கூடியதாகவே ஆகிவிடுகிறது. அவ்விதமே ஸ்ருதியும் "அவைகளில் அப்பொழுது இருக்கிறான் ஸுப்தன் எப்பொழுது ஒருவித ஸ்வப்நத்தையும் பார்ப்பதில்லையோ பிறகு இந்த ப்ராணனிடத்திலேயே ஒன்றுபட்டவனாக வாகிவிடுகிறான்" என்பதாய் நாடிகளுக்கும், ப்ராணனுக்கும் ஸுஷுப்தியில் ஸமுச்சயத்தைத் தெரிவிக்கிறது. ஒத்த ஒரே வாக்கியத்தில் சொல்லியிருப்பதே அதன் காரணமாகும். "ப்ராண: ததாநுகமாத்" என்ற விடத்தில் ப்ராணனுக்கும் ப்ரம்ஹத்வமானது சொல்லப்பட்டு மிருக்கிறது. எவ்விடத்தில் பிறவொன்றை எதிர்பாராதன போன்று நாடிகளை ஸு

श्रावयति—‘आसु तदा नाडीषु सृप्तो भवति’ (छा० ८। ६। ३) इति। तत्रापि प्रदेशान्तरप्रसिद्धस्य ब्रह्मणोऽप्रतिषेधान्नाडीद्वारेणैव ब्रह्मण्येवावतिष्ठत इति प्रतीयते। नचैवमपि नाडीषु सप्तमी विरुध्यते। नाडीद्वारापि ब्रह्मोपसर्पन्सृप्त एव नाडीषु भवति। यो हि गङ्गया सागरं गच्छति गत एव स गङ्गायां भवति॥

अपिचात्र रश्मिनाडीद्वारात्मकस्य ब्रह्मलोकमार्गस्य विवक्षितत्वान्नाडीस्तुत्यर्थं सृप्तिसङ्कीर्तनम्। ‘नाडीषु सृप्तो भवति’ (छा० ८। ६। ३) इत्युक्त्वा ‘तं न कश्चन पाप्मा स्पृशति’ (छा० ८। ६। ३) इति ब्रुवन्नाडीः प्रशंसति। ब्रवीति च पाप्मस्पर्शाभावे हेतुम्—‘तेजसा हि तदा संपन्नो भवति’ (छा० ८। ६। ३) इति। तेजसा नाडीगतेन पित्ताख्येनाभिव्याप्तकरणो न बाह्यान्विषयानीक्षत इत्यर्थः। अथवा तेजसेति ब्रह्मण एवायं निर्देशः श्रुत्यन्तरे—‘ब्रह्मैव तेज एव’ (बृ० ४। ४। ७) इति तेजःशब्दस्य ब्रह्मणि प्रयुक्तत्वात्। ब्रह्मणा हि तदा संपन्नो भवति नाडीद्वारेणातस्तं न कश्चन पाप्मा स्पृशतीत्यर्थः। ब्रह्मसंपत्तिश्च पाप्मस्पर्शाभावे हेतुः समधिगतः—‘सर्वे पाप्मानोऽतो निवर्तन्तेऽपहतपाप्मा ह्येष

ஷுப்திஸ்தானமாக ‘‘அப்பொழுது இந்த நாடிகளில் சென்றவனாக வாகிறான்’’ என்பதாய் ஶ்ருதி சொல்லுகிறதோ அவ்விடத்திலுங்கூட வேறு இடத்தில் (வாக்கியத்தில்) பிரஸித்தமான ப்ரம்ஹமானது மறுக்கப்படாததால் நாடிவாயிலாகவே ப்ரம்ஹத்தினிடத்திலேயே நிலைபெறுகிறான் எனத் தோற்றமேற்படுகிறது. இவ்விதம் சொன்ன போதிலுங்கூட நாடிகளில் செய்த ஸப்தமீ விபக்தி (ஏழாம் வேற்றுமை) யானது முறண்படவும் மாட்டாது. நாடிவாயிலாக ப்ரம்ஹத்தை யடைபவனும் நாடியிலும் சென்றவனாகவே தானாகிறான். எவனொருவன் கங்கையினால் ஸமுத்திரத்தை யடைகிறானோ அவன் கங்கையிற் சென்றவனாகவே தானாகிறான்.

மேலும், இவ்விடத்தில் கிரணம், நாடியின் துவாம் இவைவடிவமான ப்ரம்ஹ லோகமார்க்கத்தைச் சொல்லவிருப்பங் கொண்டிருப்பதுபற்றி நாடியைத் துதிக்க வேண்டியே அதில் செல்லுதற் சொல்லப்பட்டது. “நாடிகளில் சென்றவனாக வாகிறான்” என வுபதேசித்து “அவனை ஒருபாபமும் தொடருவதில்லை” என்று கூறும் வேதம் நாடிகளை ஸ்துதித்துமிருக்கிறது. “தேஜஸ்ஸுடனன்றோ அப்பொழுது கலந்தவனாகவாகிறான்” என்பதாய் பாபப்பற்றில்லாமைக்குக் காரணத்தைச் சொல்லியுமிருக்கிறது. பித்தமெனப் பெயரிய நாடியையடைந்த தேஜஸ்ஸினால் நாலாபக்கத்திலும் பரவின கரணமுள்ளவனாய் வெளியிலுள்ள விஷயங்களைப் பார்க்கின்றானில்லை என்பது அதன் பொருள். அல்லது வேறு ஶ்ருதியில் “ப்ரம்ஹமே தேஜஸ்” என்பதாய் தேஜஸ் சப்தமானது ப்ரம்ஹத்தினிடத்தில் பிரயோகிக்கப்பட்டிருப்பதால் “தேஜஸா” என்றதால் ப்ரம்ஹத்தைச் சொன்னதாக வேதானுசம். ‘அப்பொழுது நாடிகள் வாயிலாக ப்ரம்ஹத்துடனன்றோ ஒன்றுபட்டவனாகவாகிறான், ஆதல்பற்றி அவனை ஒருவிதபாபமும் பற்றுவதில்லை’ என்பது அதன் பொருள். ப்ரம்ஹ ஸம்பத்தியும் பாபஸம்பந்தமின்மையில் காரண

ब्रह्मलोकः' (छा० ८। ४। २) इत्यादिश्रुतिभ्यः। एवञ्च सति प्रदेशान्तरप्रसिद्धेन ब्रह्मणा सुषुप्तिस्थानेनानुगतो नाडीनां समुच्चयः समधिगतो भवति। तथा पुरीततोऽपि ब्रह्म-प्रक्रियायां सङ्कीर्तनात्तदनुगुणमेव सुप्तिस्थानत्वं विज्ञायते—'य एषोऽन्तर्हृदय आकाशस्त-स्मिञ्छेते' (बृ० २। १। १७) इति हृदयाकाशे सुप्तिस्थाने प्रकृत इदमुच्यते 'पुरीतति शेते' (बृ० २। १। १९) इति। पुरीतदिति हृदयपरिवेष्टनमुच्यते। तदन्तर्वर्तिन्यपि हृद-याकाशे शयानः शक्यते पुरीतति शेत इति वक्तुम्। प्राकारपरिक्षिप्तेऽपि पुरे वर्तमानः प्राकारे वर्तत इत्युच्यते। हृदयाकाशस्य च ब्रह्मत्वं समधिगतम्—'दहर उत्तरेभ्यः' (ब्र० सू० १। ३। १४) इत्यत्र। तथा नाडीपुरीतत्समुच्चयोऽपि—'ताभिः प्रत्यवसृप्य पुरीतति शेते' (बृ० २। १। १९) इत्येकवाक्योपादानादवगम्यते। सत्प्राज्ञयोश्च प्रसिद्धमेव ब्रह्म-त्वम्। एवमेतासु श्रुतिषु त्रीण्येव सुषुप्तिस्थानानि सङ्कीर्तितानि नाड्यः पुरीतद्ब्रह्म चेति। तत्रापि द्वारमात्रं नाड्यः पुरीतच्च, ब्रह्मैव त्वेकं सुषुप्तिस्थानम्॥

மாக "எல்லாப்பாபங்களும் இவனிடமிருந்து விலகிவிடுகின்றன. இவன் பாப ஸம்பந்தமற்ற ப்ரம்ஹலோகமன்றோ [அநுபவ (சுக) ரூபமான ப்ரம்ஹமாகவன்றோ] ஆகிறான்" என்றதாதி ஶ்ருதிகளாலறியக் கிடக்கிறது. இவ்விதமேற்படுங்கால் வேறு வாக்கியத்தில் பிரஸித்தமானதும் ஸுஷுப்தியை ஸ்தானமாகவுடையதுமான ப்ரம்ஹத்துடன் நாடிகளுக்கு ஸமுச்சயமானது அறியப்பட்டதாக வாகிவிடுகிறது. அவ்விதமே ப்ரம்ஹத்தைச் சொல்லுமிடத்தில் புரீதத் என்ற நாடியையும் சொல்லியிருப்பதால் அதற்கு ஒத்ததாகவே ஸுஷுப்தி ஸ்தானமும் அறியக் கிடக்கிறது. அதாவது:—"அந்தர் ஹிருதயத்திலுள்ள யாதொரு இந்த ஆகாசமுண்டோ அதில் சயனித்திருக்கிறான்" என்பதாய் பிரகிருதமாயுள்ள ஹிருதயாகாசமாகிற ஸுஷுப்திஸ்தானத்தில் "புரீதத்தில் சயனிக்கிறான்" என்ற இது சொல்லப்பட்டது. புரீதத் என்றதால் ஹிருதயத்தைச் சுற்றியுள்ள (ஒரு சிறு) நாடியானது சொல்லப்படுகிறது. அதனுள்ளிலிருக்கின்ற ஹிருதயாகாசத்தில் சயனித்திருப்பவனுங்கூட புரீதத்தில் சயனித்திருக்கிறான் எனச் சொல்லக்கூடியவனாகவே ஆகிவிடுகிறான். நாலாபக்கத்திலும் மதிலாற்சூழப்பெற்ற பட்டினத்திலிருப்பினுங்கூட ப்ராகாரத்தில் (மதிலில்) இருக்கிறான் எனச் சொல்லப்படுவதுண்டு. ஹிருதயாகாசத்துக்கு ப்ரம்ஹத்வமானது "தஹர உத்தரேப்ய:" (அ 1. பா 3. சூ 14.) என்றவிடத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமே நாடி, புரீதத் இவைகளின் ஸமுச்சயமும் "அவற்றின் வழியால் வந்து புரீதத்தில் சயனிக்கிறான்" என்ற விடத்தில் ஒரேவாக்கியத்தில் சொல்லியிருப்பதிலிருந்து அறியக்கிடக்கிறது. ஸத், ப்ராக்ஞன் இவர்களுக்கும் ப்ரம்ஹத்வமானது பிரஸித்தமாகவே இருக்கிறது. இவ்விதம் இந்த ஶ்ருதிகளில் நாடிகள், புரீதத், ப்ரம்ஹம் என மூன்று ஸுஷுப்திஸ்தானங்களே சொல்லப்பட்டன. அங்குங்கூட நாடிகளும், புரீதத்தும் வாயிலாகமட்டுமேதானாகும். ப்ரம்ஹம் ஒன்றேதான் ஸுஷுப்திஸ்தானமாகவாகிறது.

अपिच नाड्यः पुरीतद्वा जीवस्योपाध्याधार एव भवति तत्रास्य करणानि वर्तन्त इति । नह्युपाधिसंबन्धमन्तरेण स्वत एव जीवस्याधारः कश्चित्संभवति, ब्रह्माऽव्यतिरेकेण स्वमहिमप्रतिष्ठितत्वात् । ब्रह्माधारत्वमप्यस्य सुषुप्ते नैवाधाराधेयभेदाभिप्रायेणोच्यते कथं तर्हि तादात्म्याभिप्रायेण । यत आह—'सता सोम्य तदा संपन्नो भवति स्वमपीतो भवति' (छा० ६ । ८ । १) इति । स्वशब्देनात्माभिलप्यते, स्वरूपमापन्नः सुप्तो भवतीत्यर्थः । अपिच न कदाचिज्जीवस्य ब्रह्मणा संपत्तिर्नास्ति स्वरूपस्यानपायित्वात् । स्वप्नजागरितयोस्तूपाधिसंपर्कवशात्पररूपापत्तिमिवापेक्ष्य तदुपशमात्सुषुप्तेः स्वरूपापत्तिर्वक्ष्यते । अतश्च सुप्तावस्थायां कदाचित्सता संपद्यते कदाचिन्न संपद्यत इत्ययुक्तम् । अपि च स्थानविकल्पाभ्युपगमेऽपि विशेषविज्ञानोपशमलक्षणं तावत्सुषुप्तं न क्वचिद्विशिष्यते । तत्र सति

மேலும், நாடிகளோ, புரீதத்தோ ஜீவனது உபாதியினுடைய (மனத்தினுடைய) ஆதாரமாக மட்டுமேதானாகிறது. அவ்விடத்தில் இவனுடைய கரணங்களிருப்பதே அதன் காரணமாகும். உபாதியின் ஸம்பந்தமின்றி ஸ்வயமாகவே ஜீவனுக்கு ஆதாரமொன்றும் ஸம்பவிக்காதன்றோ. ப்ரம்ஹத்தைவிட வேறுப்படாதவனாகவிருத்தல்பற்றி ஸ்வமஹிமையில் (சொந்தஸ்வரூபத்தில்) நிலைபெறுபவனாகவிருப்பதே அதன் காரணமாகும். ஸுஷுப்தியில் ப்ரம்ஹம் இவனுக்கு ஆதாரமாகவாவதுங்கூட ஆதாரதேயத்தன்மையைக் கருத்திற்கொண்டு சொல்லப்படவில்லை. பின்னை என்னையோவெனில்? பிரிதில்லாச்சம்பந்தத்தைக் கருத்திற்கொண்டே சொல்லப்பட்டது. "ஓஸோம்ய! அதுபோழ்து (ஸுஷுப்தியில்) ஸத்பதப்பொருளுடனன்றோ ஒன்றுபட்டவனாகின்றான். அதாவது:— தன்னையடைந்தவனாகின்றான்" என இவ்விதமன்றோ ஶ்ருதி உபதேசிக்கிறது என்றால். இங்குள்ள ஸ்வம் என்ற சப்தத்தால் ஆத்மா சொல்லப்படுகிறது. ஸ்வரூபத்தையடைந்து ஸுப்தனாகவாகின்றான் என்பது அதன்பொருள். மேலும் ஜீவனுக்கு ஒருபொழுதும் ஸம்பத்தியானது (ஒன்றுபட்டிருத்தலானது) இல்லையென்பதில்லை. ஸ்வரூபத்துக்கு அபாயம் (அழிவு) இல்லாதிருப்பதே அதன் காரணமாகும். ஸ்வப்பிந ஜாகரிதங்களிலோ வெனில் உபாதிஸம்பந்தவசத்தால் பிறவற்றின் ஸ்வரூபாபத்தியிருப்பதுபோன்ற தோற்றத்தையபேக்ஷித்து ஸுஷுப்தியில் அந்த உபாதியானது ஒடுங்கிவிடுவதிலிருந்து ஸுஷுப்தியில் ஸ்வரூபாபத்தி (ப்ராப்தி) யானது சொல்லப்படப்போகிறது. ஆனதுபற்றியும் ஸுஷுப்தாவஸ்தையில் ஒருஸமயத்தில் ஸத்பதப்பொருளுடன் ஒன்றுபட்டவனாகவாகிறான். ஒருஸமயத்தில் ஒன்றுபட்டவனாகவாவதில்லை என்று கூறுவது பொருத்தமற்றதேயாகும்.

மேலும், * ஸ்தானங்களின் விகல்பத்தை ஒத்துக்கொண்டபோதிலுங்கூட விசேஷவிக்ஞானத்தின் ஓய்வுருபமான ஸுஷுப்தம் என்ற இது ஒருவிடத்திலும் மாறுபடுவதில்லை. அவ்விடத்தில் ஸத்தில் (ஸத்பதப்பொருளில்) ஒன்றுபட்

---

* நாடிகளிலோ, ப்ரம்ஹத்திலோ என ஸுஷுப்திஸ்தானங்களின் விகல்பத்தை என்று பொருள்.

संपन्नस्तावत्तदेकत्वान्न विजानातीतियुक्तम् । 'तत्केन कं विजानीयात्' (बृ० २।४।१४) इति श्रुतेः । नाडीषु पुरीतति च शयानस्य न किञ्चिदविज्ञाने कारणं शक्यं विज्ञातुं, भेदविषयत्वात् 'यत्र वा अन्यदिव स्यात्तत्रान्योऽन्यत्पश्येत्' (बृ० ४।३।३१) इति श्रुतेः ॥

ननु भेदविषयस्याप्यतिदूरादिकारणमविज्ञाने स्यात् । बाढम् । एवं स्याद्यदि जीवः स्वतः परिच्छिन्नोऽभ्युपगम्येत, यथा विष्णुमित्रः प्रवासी स्वगृहं न पश्यति । नतु जीवस्योपाधिव्यतिरेकेण परिच्छेदो विद्यते । उपाधिगतमेवातिदूरादिकारणमविज्ञान इति यद्युच्येत तथाप्युपाधेरुपशान्तत्वात्सत्येव संपन्नो न विजानातीति युक्तम् । नच वयमिह तुल्यवन्नाड्यादिसमुच्चयं प्रतिपादयामः । नहि नाड्यः सुप्तिस्थानं पुरीतद्वेत्यनेन विज्ञानेन किञ्चित्प्रयोजनमस्ति । नह्येतद्विज्ञानप्रतिबद्धं किञ्चित्फलं श्रूयते । नाप्येतद्विज्ञानं फलवतः कस्यचिदङ्गमुपदिश्यते । ब्रह्म त्वनपायि सुप्तिस्थानमित्येतत्प्रतिपादयामः । तेन तु विज्ञा-

---

டவன் அதுடன் ஒன்றுபட்டுவிட்டபடியின் (விசேஷ) அறிவற்றவனாக வாகிறான் என்பது பொருந்துகிறது. "அதுபோழ்து எதைக்கொண்டு எதைக்காணக்கூடும்" என ஶ்ருதியிருப்பதே அதன் காரணமாகும். நாடிகளிலோ, புரீதத்திலோ சயனித்திருப்பவனுக்கு ஒன்றையுமறியாதிருப்பதில் காரணமொன்றையு மறியமுடியாது. பேதத்தை (த்வைதத்தை) விஷயமாகக்கொண்டிருப்பதும், "எதுபோழ்து வேறு போல வாகிறானோ அதுபோழ்து அந்நியனாக விருந்துகொண்டு அந்நியத்தைப் பார்க்கக்கூடும்" என ஶ்ருதியிருப்பதுமே அதன் காரணமாகும்.

சங்கை—பொருள் வேறுபடுமிடத்திலுங்கூட அதையறியாமைக்கு (அது) வெகுதூரத்திலிருப்பது முதலியன காரணமாகவாகலாமன்றோ? எனின்.

உத்தரம்—வெளிதேசஞ் சென்றிருந்த விஷ்ணுமித்திரன் தனதுவீட்டைப் பார்ப்பதில்லை என்பது எவ்விதமோ இவ்விதமே ஜீவன் இயற்கையில் பரிச்சின்னனாக (ப்ரம்ஹத்தைவிட வேறுபட்டவனாக) ஒப்பப்படுவானாயின் அவ்விதம் சொல்லுவது பொருந்தலாந்தான். ஆனாலோ ஜீவனுக்கு உபாதியைவிட வேறொன்றினாலும் பரிச்சேதம் கிடையாதன்றோ. உபாதியைச்சார்ந்ததாகவேயுள்ள வெகு தூரத்திலிருத்தல் முதலியகாரணத்தைச் சொல்லுவாயேல் அப்பொழுதுங்கூட (ஸுஷுப்தியில்) உபாதியானது உபசாந்தமாக (தனதுகாரணத்திலொடுங்கிவிட்டதாக) வாகிவிட்டதுபற்றி ஸத்பதப்பொருளிலேயே ஒன்றுபட்டவனைக் கொண்டு பேதக்ஞானத்தையடைவதில்லை என்று கூறுவதுதான் பொருந்தக்கூடியதாக வாகிறது. மேலும், நாம் இங்கு நாடியாதிகளின் ஸமுச்சயத்தை துல்யமாகவே சொல்லுகின்றோமில்லை. நாடிகள் ஸுஷுப்திஸ்தானமா? புரீதத்தா? என்ற இந்த விக்ஞானத்தினால் ஒருவிதப்பயனுமில்லையன்றோ. இத்தகைய விக்ஞானத்துடன் கலந்த பயன் ஒன்றும் ஶ்ருதியிற்சொல்லப்படவுமில்லை. இத்தகைய விக்ஞானமானது பயனுள்ள ஒன்றுக்கு அங்கமாகவுங்கூட உபதேசிக்கப்படவுமில்லை. ஆகவே ப்ரம்ஹமே அழிவற்ற ஸுஷுப்திஸ்தானம் என்ற இதைவிளக்குகி

नेन प्रयोजनमस्ति जीवस्य ब्रह्मात्मत्वावधारणं स्वप्नजागरितव्यवहारविमुक्तत्वावधारणं च। तस्मादात्मैव सुप्तिस्थानम् ॥ ७ ॥

अतः प्रबोधोऽस्मात् ॥ ८ ॥

यस्माच्चात्मैव सुप्तिस्थानमत एव च कारणान्नित्यवदेवास्मादात्मनः प्रबोधः स्वापाधिकारे शिष्यते—'कुत एतदागात्' (बृ० २।१।१६) इत्यस्य प्रश्नस्य प्रतिवचनावसरे 'यथाग्नेः क्षुद्रा विस्फुलिङ्गा व्युच्चरन्त्येवमेवैतस्मादात्मनः सर्वे प्राणाः' (बृ० २।१।२०) इत्यादिना। 'सत आगम्य न विदुः सत आगच्छामहे' (छा० ६।१०।२) इति च। विकल्प्यमानेषु तु सुषुप्तिस्थानेषु कदाचिन्नाडीभ्यः प्रतिबुध्यते कदाचित्पुरीततः कदाचिदात्मन इत्यशासिष्यत्। तस्मादप्यात्मैव सுप्तिस्थानमिति ॥ ८ ॥

ளும். அத்தகைய விக்ஞானத்தாலோ ஜீவனுக்கு ப்ரம்ஹாத்மத்வ நிஶ்சயமும் ஸ்வப்பின ஜாகரிதவியவஹாரங்களினின்றும் விடுபட்டவனுகவாகிவிடுதலும் ஆகிய பயன் இருக்கவே இருக்கிறது. ஆனதுபற்றி ஆத்மாவே ஸுஷுப்திஸ்தானமாக வாகிறது. (7) (எ—று)

(ஸூ) அத: ப்ரபோதோ அஸ்மாத் (8)

(ப—ரை) **अतः** (அத:)=(எக்காரணம்பற்றி ஆத்மாவே ஸுஷுப்திஸ்தான மாகிறதோ) அக்காரணம்பற்றியே **अस्मात्** (அஸ்மாத்)=இந்த ஆத்மாவினிடமிருந்து **प्रबोधः** (ப்ரபோத:)=விழித்தெழுதல் சொன்னது பொருந்திவிடுகிறது. (8) (எ—று)

பாஷ்யம்.—எக்காரணம்பற்றி ஆத்மாவே ஸுஷுப்திஸ்தானமோ அக்காரணம் பற்றியே இந்த ஆத்மாவினிடமிருந்தே எப்பொழுதுமே விழித்தெழுதல் ஸ்வாபம் (தூக்கம்) சொல்லுமிடத்துச் சுருதியிலுபதேசிச்கப்படுகிறது. "எங்கிருந்து இம்மாதிரிவந்தான்" என்ற இந்தக்கேள்விக்குப் பதில்சொல்லும் ஸந்தர்ப்பத்தில் "நெருப்பினின்றும் அற்பங்களான பொறிகள் எவ்விதம் சிதறியோடுகின்றனவோ இவ்விதமே இந்த ஆத்மாவினிடமிருந்து எல்லாப்ராணன்களும் (வெளிப்போந்தன)" என்றதாதியாலும் "ஸத்தினின்றும் வெளிவந்து ஸத்தினிடமிருந்து வந்தோமென அறிகின்றனரில்லை" என்றதாதியாலும் ஶ்ருதி உபதேசித்திருக்கிறது. ஸுஷுப்திஸ்தானங்கள் விகல்பிக்கப்படுமாயின் (வெவ்வேறுகச்சொல்லப்படுமாயின்) 'சிலஸமயத்தில் நாடிகளினின்றும் விழித்தெழுகிறுன். ஒருஸமயத்தில் புரீதத்தினின்றும் விழித்தெழுகிறுன். ஒருஸமயத்தில் ஆத்மாவினின்றும் விழித்தெழுகிறுன்' எனவுபதேசித்திருக்கும். (அவ்விதமோ உபதேசிக்கவில்லை) ஆனது பற்றி ஆத்மாவேதான் ஸுஷுப்திஸ்தான மாகவாகிறது. (8) (எ—று)

இரண்டாவது ததபாவாதிகரணம் முற்றிற்று.

३ कर्मानुस्मृतिशब्दविध्यधिकरणम् । सू० ९

स एव तु कर्मानुस्मृतिशब्दविधिभ्यः ॥ ९ ॥

यः कोप्यनियमेनात्र बुद्ध्यते सुप्त एव वा । उदबिन्दुरिवाशक्तेर्नियन्तु कोपि बुद्ध्यते ॥ १ ॥

कर्माविद्यापरिच्छेदादुदबिन्दुविलक्षणः । स एव बुद्ध्यते शास्त्रात्तदुपाधेः पुनर्भवात् ॥ २ ॥

तस्याः पुनः सत्संपत्तेः प्रतिबुध्यमानः किं य एव सत्संपन्नः स एव प्रतिबुध्यत उत स वाऽन्यो वेति चिन्त्यते । तत्र प्राप्तं तावदनियम इति । कुतः—यदा हि जलराशौ कश्चिज्जलबिन्दुः प्रक्षिप्यते जलराशिरेव स तदा भवति पुनरुद्धरणे च स एव जलबिन्दु-

---

கர்மாநுஸ்மிருத்யதிகரணம் 3.

(அ—கை) எவன் ஸுஷுப்தியை யடைந்தானோ அவனைவிட மற்றவனும் எழுந்திருக்கக் கூடும் என்ற ஆசங்கைவர அதைப் போக்கவேண்டி ஒரே சூத்திரங்கொண்ட இந்த அதிகரண மாரம்பிக்கப்படுகிறது—

ரூபமுள்ளவனுக ஆத்மா அறியப்படுகின்ருனேயொழிய சுத்தசைதன்னிய ரூபத்தாலன்று என்று கருத்து.) ஆயினும் ஹரயஃ=இந்திரியங்களும் அயம் வை=இவனேதான். தஶ ச=பத்துக்களும், ஸஹஸ்ராணி=ஆயிரங்களும், பஹூநி=வெகுக்களும் அநந்தாநி ச=அநந்தங்களுமாக வுள்ளவையாவும் அயம் வை=இந்த ஆத்மாவேதானுகும். (ப்ரக்ஞானகனுன இந்த ஆத்மாவைவிட பத்துக் கணக்காகவோ ஆயிரக்கணக்காகவோ அநந்தங்களாகவோவுள்ள இந்திரியங்களும் அவற்ருல் அறியப்படும் விஷயங்களும் உண்மையில் வேறுபட்டனவன்று என்றுகருத்து.) என்ற இதுமுதலான யாதொரு விரிவுரைகள் காணப்படுகின்றனவோ அவைகளும் ப்ரம்ஹத்தினிடத்தில் அவற்றுக்கு லயஞ் சொல்லவேண்டியே ஏற்பட்டனவாகும். ஏன்? "அந்த இவையாவும் தனக்கொரு காரணமற்றதும், தனக்கொரு காரியமற்றதும், தனக்கிடையில் வேறு ஜாதியற்றதும், தனக்கு வெளியிலெதுவுமற்றதுமான ப்ரம்ஹமேயாகும்" என முடிவில் கூறியிருப்பதே அதன் காரணமாகும்.

உபாஸனையை விதிக்குமிடத்தில் "மனேமயன், ப்ராணசரீரன், பாரூபன்" என்ற இதுமுதலான யாதொரு விரிவுரைகள் காணப்படுகின்றனவோ அவை ப்ரம்ஹத்தினிடத்தில் லயத்துக்காகச் சொல்லப்பட்டன வெனக் கொள்ளல் நியாயமாகவாகாது. ஏன்? "அத்தகைய ஶமகுணம் வாய்ந்தவன் உபாஸனையைச் செய்வானுக" என்ற இம்மாதிரியான ப்ரகிருதமாயுள்ள உபாஸனுவிதியுடன் அவற்றுக்கு ஸம்பந்தமிருப்பதே அதன் காரணமாகும். இம்மாதிரியான குணங்களுக்கு முக்கியவிருத்தியினுல் உபாஸனுர்த்தத்வமேற்படுங்கால் லக்ஷணமுறையினுல் ப்ரம்ஹத்தினிடத்தில் லயம் சொல்லுதல் பொருத்தமுள்ளதாகவாகமாட்டாது. எல்லாவற்றுக்குமே ப்ரம்ஹத்தினிடத்தில் லயம் சொல்லப்படுமானுல் "(1) அரூபவதேவஹி தத்ப்ரதாநத்வாத்" என்றதால் பிரித்துப் பொருள் கொள்ளுவதற்குரிய காரணத்தைச் சொல்லும் வசனம் பொருளற்றதாக வாகிவிடும். இவற்றின் பயனும் ஆங்காங்கு உபதேசித்திருப்பதற்குத் தக்கபடி சிலவிடத்தில் பாபநிவிருத்

---

(1) இதன் பொருளை 83-வது பக்கத்திற் காண்க.

कथं चैषामेकवाक्यतोत्प्रेक्ष्यत इति वक्तव्यम् । एकनियोगप्रतीतेः प्रयाजदर्शपूर्णमास वाक्यवदिति चेत्। न । ब्रह्मवाक्येषु नियोगाभावात्। वस्तुमात्रपर्यवसायीनि हि ब्रह्मवाक्यनि न नियोगोपदेशीनीत्येतद्विस्तरेण प्रतिष्ठापितं 'तत्तु समन्वयात्' (ब्र० सू० १।१।४)

தியும், சிலவிடத்தில் ஐஸ்வர்யப்ராப்த்தியும், சிலவிடத்தில் க்ரமமுக்தியும் அறியப்பட்டே யிருக்கிறது. ஆனது பற்றி உபாஸனாவாக்கியங்களுக்கும், ப்ரம்ஹவாக்கியங்களுக்கும் வெவ்வேறான பொருளுள்ளதன்மை சொல்லுவதுதான் நியாயமாக வாகிறதேயொழிய ஏகவாக்யத்வம் (ஒரே பொருளுள்ளதன்மை) சொல்லுவது நியாயமுள்ளதாக வாகாது.

இவற்றுக்கு (ஏகவாக்யதை) ஒரேபொருளுள்ள தன்மை எவ்விதம் ஊஹிக்கப்படுகிறது என்ற கேள்விக்கு நீ பதில்சொல்லவேண்டும். (1)ப்ரயாஜதர்ஸபூர்ணமாஸவாக்கியங்களிற் போல ஏகநியோகப்ரதிபத்தி (ஒரேபயனுள்ளவிதியின் தோற்றம்) ஏற்படுவதால் ஏகவாக்கியத்துவம் சொல்லுகிறோம் எனின். அவ்விதம் சொல்லுவது பொருந்தாது. ஏன்? ப்ரம்ஹவாக்கியங்களில் விதியில்லாதிருப்பதே அதன் காரணமாகும். ப்ரம்ஹத்தைச் சொல்லும் வாக்கியங்கள் பொருளை யுபதேசிப்பதோடுமட்டும் முடிவடைகின்றனவே யொழிய விதியையுபதேசிக்கின்றனவன்று என்ற இது விரிவாக "தத்துஸமந்வயாத்" என்றவிடத்தில் நிலைநாட்டப்பட்டிருக்கி

---

(1) ஆக்னேயம், உபாம்சுயாஜம், அக்னீஷோமீயம் என்ற மூன்றுபிரதானகர்மங்கள் பௌர்ணமாஸீகாலத்திலும், ஆக்னேயம், ஐந்த்ரததியாகம், ஐந்த்ரபயோயாகம் என்ற மூன்றுபிரதானகர்மங்கள் அமாவாஸ்யா காலத்திலுமனுஷ்டிக்கவேண்டியனவாக யதாக்நேய: என்பதுமுதலாய வாக்கியங்களால் விதிக்கப்பட்டிருக்கின்றன. பௌர்ணமாஸீ காலத்தில் அனுஷ்டிக்கப்படும் 3கர்மங்களுக்கும், பூர்ணமாஸமென்றும், அமாவாஸ்யா காலத்தில் அனுஷ்டிக்கப்படும் 3கர்மங்களுக்கும் தர்சமென்றும் பெயர். இவற்றுக்கு தர்சபூர்ணமாஸாப்யாம் ஸ்வர்ககாமோயஜேத என்றதால் ஸ்வர்க்கரூபபலஸம்பந்தம் போதிக்கப்படுகின்றது. இந்தவாக்கியத்தில் தர்சத்துக்கு முதலிலும், பூர்ணமாஸத்துக்குப் பிந்தியும் குறிப்பிடுதலிருந்தாலும் அது சப்தசாஸ்திரவிதியை அனுஸரித்து ஏற்பட்டிருப்பதால் அதன்படி செய்யாது முதலில் பூர்ணமாஸத்தையும், பிறகுதர்சத்தையும் அனுஷ்டிக்கவேண்டும். பொதுவில் எல்லாவிதிஸ்தலங்களிலும் பலம், ஸாதனம்,ஸாதனுக்கிராஹகம் என்ற மூன்றுக்கு ஆகாங்க்ஷையுண்டாகின்றது. பிரகிருதஸ்தலத்திலும் அம்மூன்றுவிதமான ஆகாங்க்ஷைவருங்கால் ஸ்வர்க்கம் பலமாகவும், தர்சபூர்ணமாஸம் ஸாதனமாகவும், ஸமிதோயஜதி முதலியவாக்கியங்களால் விதிக்கப்பட்ட ப்ரயாஜாத்யங்கங்கள் கரணனுக்ராஹகமாகவுமாகின்றன. ஆகவே ப்ரயாஜாத்யங்கங்களால் உபகரிக்கப்பட்ட தர்ச பூர்ணமாஸங்கள் ஸ்வர்க்கரூபமானபயனுக்கு ஸாதனம் என்று ஏற்பட்டது. அனுஷ்டித்தவுடன் நாசமடையக்கூடிய இக்கர்மங்களுக்கு காலாந்தரத்திலுண்டாகும் ஸ்வர்க்காதி பலன்களுக்குச் சாதனமாகுதல் நேரில் ஸம்பவிக்காதாகையால் இவற்றினின்றும் பரமாபூர்வம் என்று ஒன்று கர்த்தாவான ஆத்மாவினிடம் உண்டாவதாயும் அது பலத்தைக் கொடுப்பதாயுமங்கீகரிக்கப்படுகின்றது. ஆகவே பலனுள்ளதான பரமாபூர்வமாகிற ப்ரயோஜனம் ஒன்றாவதால் ப்ரயாஜதர்ச பூர்ணமாஸவாக்கியங்களுக்கு ஏகவாக்கியதை கொள்ளப்படுகின்றது.

इत्यत्र। किंविषयश्चात्र नियोगोऽभिप्रेयत इति वक्तव्यम्। पुरुषो हि नियुज्यमानः कुर्विति स्वव्यापारे कस्मिंश्चिन्नियुज्यते। ननु द्वैतप्रपञ्चप्रविलयो नियोगविषयो भविष्यति। अप्रविलापिते हि द्वैतप्रपञ्चे ब्रह्मतत्त्वावबोधो न भवत्यतो ब्रह्मतत्त्वावबोधप्रत्यनीकभूतो द्वैतप्रपञ्चः प्रविलाप्यः। यथा स्वर्गकामस्य यागोऽनुष्ठातव्य उपदिश्यत एवमपवर्गकामस्य प्रपञ्चप्रविलयः। यथाच तमसि व्यवस्थितं घटादितत्त्वमवबुभुत्समानेन तत्प्रत्यनीकभूतं तमः प्रविलाप्यत एवं ब्रह्मतत्त्वमवबुभुत्समानेन तत्प्रत्यनीकभूतः प्रपञ्चः प्रविलापयितव्यः। ब्रह्मस्वभावो हि प्रपञ्चो न प्रपञ्चस्वभावं ब्रह्म, तेन नामरूपप्रपञ्चप्रविलापनेन ब्रह्मतत्त्वावबोधो भवतीति। अत्र वयं पृच्छामः—कोऽयं प्रपञ्चप्रविलयो नाम। किमग्निप्रतापसंपर्काद्घृतकाठिन्यप्रविलय इव प्रपञ्चप्रविलयः कर्तव्यः, आहोस्विदेकस्मिंश्चन्द्रे तिमिरकृतानेकचन्द्रप्रपञ्चवदविद्याकृतो ब्रह्मणि नामरूपप்रपञ्चो विद्यया प्रविलापयितव्य

றது. மேலும், எவ்விஷயமான விதி இங்கு கருதப்படுகிறது என்பதற்கு நீபதில் சொல்லவேண்டும். உலகில் புருஷனே "நீ இதைச் செய்" என ஏவப்பட்டவனாய் தனது வேலையொன்றில் பிரவிருத்திக்கிறான்.

சங்கை—த்வைதப்ரபஞ்சத்தின் ப்ரவிலயம் நியோகத்துக்கு விஷயமாகவாகலாம். த்வைதப்ரபஞ்சமானது ப்ரவிலாபஞ் செய்யப்படாவிடில் (த்வைதப்ரபஞ்சத்தின் தோற்றமில்லாமற் செய்யப்படாவிடில்) ப்ரம்ஹதத்துவக்ஞானம் வருவதற்கிடமில்லை. ஆனது பற்றி ப்ரம்ஹதத்துவ க்ஞானத்துக்கு விரோதியான த்வைதப்ரபஞ்சமானது தோற்றமறச் செய்யவேண்டியதாக வாகிறது. ஸ்வர்க்கத்திலாசை யுள்ளவனுக்கு யாகம் அநுஷ்டிக்கவேண்டுவதாக எவ்விதமுபதேசிக்கப்படுகிறதோ இவ்விதமே அபவர்க்க (மோக்ஷ) காமனுக்கு ப்ரபஞ்சத்தோற்றமின்மை யாகிறது. மேலும், இருளிலிருக்கும் குடம் முதலியபொருளை யறியவிருப்பமுள்ளவனால் அதற்கு விரோதியான இருள் போக்கப்படவேண்டுவதாகவாவது எவ்விதமோ இவ்விதமே ப்ரம்ஹதத்துவத்தை யறியவிருப்பமுள்ளவனால் அதற்கு விரோதியான ப்ரபஞ்சமானது தோற்றமறச் செய்யவேண்டுவதாக வாகிறது. *ப்ரபஞ்சம் ப்ரம்ஹத்தின் ஸ்வரூபமாகுமேயொழிய ப்ரபஞ்சத்தின் ஸ்வரூபமாக ப்ரம்ஹம் ஆகாது. அதனால் நாமரூபப்ரபஞ்ச ப்ரவிலாபநத்தினால் ப்ரம்ஹதத்துவக்ஞான முண்டாகிறது என்கிறோம் எனின்?

உத்தரம்—இவ்விஷயத்தில் நாம் கேட்கிறோம். அதாவது:—ப்ரபஞ்ச ப்ரவிலயம் என்பது யாது? நெருப்பினது சூட்டின் சேர்க்கையினால் நெய் கட்டியின் உருக்கம் போன்று ப்ரபஞ்ச ப்ரவிலயம் செய்யவேண்டுமா? அல்லது ஒரே சந்திரனிடத்தில் திமிரமென்ற நேத்திர ரோகத்தினாற் செய்யப்பட்ட வெகு சந்திரப்பிர

* காரணப்பொருளோ காரியத்தினுடைய ஸ்வரூபமாகிறது. ஆனதுபற்றி காரியத்தின் நாசமேற்படினுங்கூட காரணப்பொருளுக்கு லயம் ஏற்படுவதில்லை. காரியமான குடம் நாசமடைந்தபோதிலுங்கூட காரணமான மண் காணவேபடுகிறது. என்பது இந்தப் பாஷ்யத்தின்கருத்து.

इति। तत्र यदि तावद्विद्यमानोऽयं प्रपञ्चो देहादिलक्षण आध्यात्मिको बाह्यश्च पृथिव्यादिलक्षणः प्रविलापयितव्य इत्युच्येत स पुरुषमात्रेणाशक्यः प्रविलापयितुमिति तत्प्रविलयोपदेशोऽशक्यविषय एव स्यात्। एकेनचादिमुक्तेन पृथिव्यादिप्रविलयः कृत इतीदानीं पृथिव्यादिशून्यं जगदभविष्यत्। अथाविद्याध्यस्तो ब्रह्मण्येकस्मिन्नयं प्रपञ्चो विद्यया प्रविलाप्यत इति ब्रूयात्। ततो ब्रह्मैवाविद्याध्यस्तप्रपञ्चप्रत्याख्यानेनावेदयितव्यम् 'एकमेवाद्वितीयं ब्रह्म,तत्सत्यं स आत्मा तत्त्वमसि' (छा० ६। ८। ७) इति तस्मिन्नावेदिते विद्या स्वयमेवोत्पद्यते तया चाविद्या बाध्यते, ततश्चाविद्याध्यस्तः सकलोऽयं नामरूपप्रपञ्चः स्वप्नप्रपञ्चवत्प्रविलीयते। अनावेदिते तु ब्रह्मणि ब्रह्मविज्ञानं कुरु प्रपञ्चप्रविलयं चेति शतकृत्वोऽप्युक्ते, न ब्रह्मविज्ञानं प्रपञ्चप्रविलयो वा जायते ॥

नन्वावेदिते ब्रह्मणि तद्विज्ञानविषयः प्रपञ्चविलयविषयो वा नियोगः स्यात्। न।

பஞ்சம் போன்று ப்ரம்ஹத்தினிடத்தில் அவித்யாகிருதமான நாமரூப ப்ரபஞ்சமானது வித்தையினல் (ப்ரம்ஹக்ஞானத்தினல்) ப்ரவிலாபனம் (தோன்ருமல்) செய்யவேண்டுமா? என்ரும். அவ்விடத்தில் தோற்றத்தையடைகின்ற தேஹாதிரூபமான ஆத்யாத்மிகப் பிரபஞ்சமும், பிருதிவியாதிரூபமான வெளியிலுள்ள ப்ரபஞ்சமும் பிரவிலாபம் (தோன்ருமல்) செய்யவேண்டுவதாகவாகிறது எனச் சொல்லப்படுமானல் அத்தகைய ப்ரபஞ்சமானது எந்தப் புருஷனுலும் பிரவிலாபனஞ் செய்ய (தோன்ருமற் செய்ய) முடியாதானதுபற்றி அவ்விஷயத்தைப்பற்றிய பிரவிலயோபதேசமானது முடியாத விஷயமுள்ளதாகவேயாகும். ஆதியிலுள்ள ஒருமுக்தனல் ப்ரபஞ்ச பிரவிலயமானது செய்யப்பட்டிருக்கலாமானதுபற்றி இதுபோழ்துஜகத்தானது ஆகாசாதிகளற்றதாகவே இருக்கவேண்டும்.

அல்லது ப்ரம்ஹம் ஒன்றில் அவித்தையினல் அத்யஸ்தமான இந்த ப்ரபஞ்சமானது வித்தையினல் ப்ரவிலாபனஞ் செய்யவேண்டுவதாகவாகிறது என்று சொல்லுவாயேல்? அப்பொழுது ப்ரம்ஹமே அவித்யையினல் அத்யஸ்தமான (ஆரோபிதமான) ப்ரபஞ்சத்தை நிராகரணஞ் செய்யும் வாயிலாக அறிவிக்கவேண்டுவதாகவாகிறது. "ஏகமேவா த்விதீயம் ப்ரம்ஹ" "தத்ஸத்யம் ஸ ஆத்மா தத்த்வமஸி" என்றும், அந்த ப்ரம்ஹம் அறிவிக்கப்பட்டதும் வித்யை (க்ஞானம்) தானகவே உண்டாகிவிடுகிறது. அந்த வித்யையினல் அவித்யையானது பாதிக்கப்படுகிறது. அதன் பிறகு அவித்யையினல் ஆரோபிக்கப்பட்ட ஸகலமான இந்த நாமரூப ப்ரபஞ்சமானது ஸ்வப்ந ப்ரபஞ்சமானது போல நாசமடைந்துவிடுகிறது. ப்ரம்ஹம் அறிவிக்கப்படாவிட்டாலோ ப்ரம்ஹ விக்ஞானத்தைச்செய், ப்ரபஞ்ச ப்ரவிலயத்தைச்செய் என நூறுதடவை சொல்லப்பட்ட போதிலுங்கூட ப்ரம்ஹவிக்ஞானமோ ப்ரபஞ்ச ப்ரவிலயமோ உண்டாவதற்கிடமில்லை.

சங்கை—ப்ரம்ஹம் அறிவிக்கப்பட்டபோதிலுங்கூட ப்ரம்ஹக்ஞானத்தை விஷயமாகக்கொண்டதும், ப்ரபஞ்ச ப்ரவிலயத்தை விஷயமாகக் கொண்டதுமான விதியானது ஏற்படலாமன்ருே எனின்?

निष्प्रपञ्चब्रह्मात्मत्वावेदनेनैवोभयसिद्धेः। रज्जुस्वरूपप्रकाशनेनैव हि तत्स्वरूपविज्ञानमविद्याध्यस्तसर्पादिप्रपञ्चप्रविलयश्च भवति। नच कृतमेव पुनः क्रियते। नियोज्योऽपि च प्रपञ्चावस्थायां योऽवगम्यते जीवो नाम स प्रपञ्चपक्षस्यैव वा स्याद्ब्रह्मपक्षस्यैव वा। प्रथमे विकल्पे निष्प्रपञ्चब्रह्मतत्त्वप्रतिपादनेन पृथिव्यादिवज्जीवस्यापि प्रविलापितत्वात्कस्य प्रपञ्चविलये नियोग उच्येत कस्य वा नियोगनिष्ठतया मोक्षोऽवाप्तव्य उच्येत। द्वितीयेऽपि ब्रह्मैवानियोज्यस्वभावं जीवस्य स्वरूपं जीवत्वं त्वविद्याकृतमेवेति प्रतिपादिते ब्रह्मणि नियोज्याभावान्नियोगाभाव एव। द्रष्टव्यादिशब्दा अपि परविद्याधिकारपठितास्तत्त्वाभिमुखीकरणप्रधाना न तत्त्वावबोधविधिप्रधाना भवन्ति। लोकेऽपीदं पश्येदमाकर्णयेति चैवञ्जातीयकेषु निर्देशेषु प्रणिधानमात्रं कुर्वित्युच्यते न साक्षाज्ज्ञानमेव कुर्विति। ज्ञेयाभिमुखस्यापि ज्ञानं कदाचिज्ज्ञायते कदाचिन्न जायते तस्मात्तं प्रति ज्ञानविषय एव दर्शयितव्यो

உத்தரம்—அதுபொருந்ாது. ப்ரபஞ்ச ஸம்பந்தமற்ற ப்ரம்ஹாத்மத்வோபதேசத்தினாலேயே இரண்டும் ஸித்தித்துவிடுவதே அதன் காரணமாகும். பழுதையின் ஸ்வரூபத்தைப்பிரகாசப்படுத்துவதாலேயே மட்டுமன்றோ அதன் ஸ்வரூபக்ஞானமும், அவித்யையினால் ஆரோபிக்கப்பட்ட ஸர்ப்பாதிப்ரபஞ்சப்ரவிலயமும் ஏற்படுவதைக்காண்கிறோம். செய்யப்பட்டதையே திரும்பவும் செய்வதில்லையன்றோ? விதிக்கு விஷயமாகவுள்ளவனும் ஜீவனெனப்பெயருள்ளவனுமான எவன் ப்ரபஞ்சாவஸ்தையில் அறியப்படுகின்றானோ அவன் ப்ரபஞ்சபக்ஷத்தைச் சேர்ந்தவனா? ப்ரம்ஹபக்ஷத்தைச் சேர்ந்தவனா? என்று கேட்கிறோம். முதலாவது விகல்பத்தில் ப்ரபஞ்ச ஸம்பந்தமற்ற ப்ரம்ஹதத்துவோபதேசஞ் செய்வதன்மூலம் ப்ருதிவ்யாதிகள் போன்று ஜீவனும் ப்ரவிலாபிதனாகவாவதால் ப்ரபஞ்சலயமேற்பட்டதும் எவனுக்கு நியோகமானது (விதியானது) சொல்லப்படும். விதிக்குக்கட்டுப்பட்டிருப்பதுபற்றி எவனுக்கு மோக்ஷமானது அடையவேண்டுவதாகச் சொல்லப்படும். இரண்டாவது விகல்பத்தில் விதிக்குக் கட்டுப்படாத ஸ்வரூபமுள்ள ப்ரம்ஹமே ஜீவனது ஸ்வரூபமாகும். ஜீவத்தன்மையோ அவித்யையினால் செய்யப்பட்டதே என ப்ரம்ஹம் விளக்கப்படுங்கால் நியோஜ்யன் (விதிக்கு இலக்கானவன்) இல்லாமைபற்றி விதியே இல்லையென்று தானேற்படும். (ஆத்மாவா அரே த்ரஷ்டவ்ய:=ஆத்மாவானது காணத்தகுந்தது என்றதாதியான விடத்திலுள்ள) பரவித்யையைச் சொல்லுமிடத்திற் படிக்கப்பட்ட "த்ரஷ்டவ்ய:" என்றதாதியான சப்தங்கள் தத்துவநோக்கைச் செய்வதில் கருத்துள்ளனவே அன்றி தத்துவக்ஞான விஷயமானவிதியை முக்கியமாகக்கொண்டனவன்று. உலகிலுங்கூட "இதைப்பார்" "இதைக்கேள்" என்ற இம்மாதிரியான விடங்களில் "செய்" என்றதால் மனப்பற்றுமட்டும் சொல்லப்படுகிறதே யொழிய நேரில் க்ஞானத்தையே செய் எனவுபதேசிப்பதாகக் காணப்படவில்லை. அறியவேண்டிய விஷயத்துக்கு எதிரிலிருப்பவனுக்குங்கூட விஷயத்தைப் பற்றிய க்ஞானமானது ஒருஸமயத்திலுண்டாகின்றது மற்றொரு ஸமயத்திலுண்டாவதில்லை. ஆனதுபற்றி

ज्ञापयितुकामेन। तस्मिन्दर्शिते स्वयमेव यथाविषयं यथाप्रमाणं च ज्ञानमुत्पद्यते। नच प्रमाणान्तरेणान्यथाप्रसिद्धेऽर्थेऽन्यथाज्ञानं नियुक्तस्याप्युपपद्यते। यदि पुनर्नियुक्तोऽहमित्यन्यथा ज्ञानं कुर्यान्न तु तज्ज्ञानं किं तर्हि मानसी सा क्रिया। स्वयमेव चेदन्यथोत्पद्येत भ्रान्तिरेव स्यात्। ज्ञानं तु प्रमाणजन्यं यथाभूतविषयं च न तन्नियोगशतेनापि कारयितुं शक्यते। नच प्रतिषेधशतेनापि वारयितुं शक्यते। नहि तत्पुरुषतन्त्रं, वस्तुतन्त्रमेव हि तत्। अतोऽपि नियोगाभावः। किञ्चान्यत्, नियोगनिष्ठतयैव पर्यवस्यत्याम्नाये यदभ्युपगतमनियोज्यब्रह्मात्मत्वं जीवस्य तदप्रमाणकमेव स्यात्॥

अथ शास्त्रमेवानियोज्यब्रह्मात्मत्वमप्याचक्षीत तदवबोधे च पुरुषं नियुञ्जीत ततो ब्रह्मशास्त्रस्यैकस्य द्व्यर्थपरता विरुद्धार्थपरता च प्रसज्येयाताम्। नियोगपरतायां च श्रुतहानिरश्रुतकल्पना कर्मफलवन्मोक्षस्यादृष्टफलत्वमनित्यत्वं चेत्येवमादयो दोषा न केनचित्प-

---

அவன் விஷயத்தில் க்ஞாபகப் படுத்த விருப்பமுள்ளவனால் க்ஞானத்துக்கு விஷயமான பொருள் மட்டுந்தான் காட்டவேண்டுவதாக வாகிறது. அவ்விஷயம் காண்பிக்கப்பட்டதும் விஷயத்துக்குத் தக்கபடியும், ப்ரமாணத்துக்குத்தக்கபடியும் தானாகவே க்ஞானமானது உண்டாகி விடுகின்றது. வேறுப்ரமாணத்தால் வேறு விதமாகப் பிரஸித்திபெற்ற பொருளில் வேறுவிதமான க்ஞானமானது நியுக்தனுக்கு முண்டாக மாட்டாதன்றோ? நான் நியுக்தனாக விருக்கின்றேன் என வேறுவிதமான க்ஞானத்தை யடைவானாயின் அது (அவ்விஷயத்தைப் பற்றிய உண்மையான) க்ஞானமன்று. பின்னையோவென்னில் அது மானஸமானக்ரியையாகவே ஆகிறது. அல்லது இயற்கையாகவே வேறுவிதமாகவே க்ஞானமுண்டாகுமானால் அதுப்ராந்தி (மயக்க) யாகவேதானாகும். க்ஞானமோ ப்ரமாணமூலமுண்டாவதும் உள்ளபடி இருக்கின்ற பொருளை விஷயமாகக் கொண்டதாகவுமிருப்பதால் அது நூற்றுக்கணக்கான விதியினால் செய்விக்ககூடியதுமன்று. நூற்றுக்கணக்கான விலக்கினால் மறுக்கக்கூடியதுமன்று. அது புருஷதந்திரமாக (புருஷனை எதிர்பார்த்துண்டாவதாக) இல்லாததுடன் வஸ்துதந்திரமாக (பொருளிருப்பதற்கேற்றபடி யுண்டாவதாக) வன்றோ இருக்கிறது. ஆனதுபற்றியும் (க்ஞானத்தில்) விதிஸம்பவிப்பதற்கிடமில்லை.

மேலும், வேதமானது விதியிலேயே முக்கியநோக்குடையதாகத் தீர்மானிக்கப்படுங்கால் ஜீவன் விதிக்குவிஷயமாகாத ப்ரம்ஹத்தின் ஸ்வரூபம் எனயாதொன்று ஒப்பட்டதோ அது ப்ரமாணமற்ற கொள்கையே யாகும். அல்லது சாஸ்திரமே நியோகத்து (விதி) க்கு விஷயமாகவாகாத ப்ரம்ஹஸ்வரூபனாக ஜீவனைச் சொல்லி அவ்விஷயமான க்ஞானத்தில் புருஷனை ஏவுமானால் அதுபோழ்து சாஸ்திரமானது இரண்டு பொருளைச் சொல்லுவதாகவும், முறண்பாடுள்ள பொருளைச் சொல்லுவதாகவும் ஆகிவிடத்தெரியும். சாஸ்திரத்துக்கு விதிபரத்வம் சொன்னாலோ ஶ்ருதமான பொருளை விடுதல், அஶ்ருதமான பொருளைக் கற்பித்தல் கர்மபலன் போல மோக்ஷத்துக்கு அதிருஷ்டபலனாகும் தன்மை, அநித்யமாகுந் தன்மை என

रिहतुं शक्याः । तस्मादवगतिनिष्ठान्येव ब्रह्मवाक्यानि न नियोगनिष्ठानि । अतश्चैकनियोगप्रतीतेरेकवाक्यतेत्ययुक्तम् । अभ्युपगम्यमानेऽपि च ब्रह्मवाक्येषु नियोगसद्भावे तदेकत्वं निष्प्रपञ्चोपदेशेषु सप्रपञ्चोपदेशेषु चासिद्धम् । नहि शब्दान्तरादिभिः प्रमाणैर्नियोगभेदेऽवगम्यमाने सर्वत्रैको नियोग इति शक्यमाश्रयितुम् । प्रयाजदर्शपूर्णमासवाक्येषु त्वधिकारांशेनाभेदाद्युक्तमेकत्वम् । नत्विह सगुणनिर्गुणचोदनासु कश्चिदेकत्वाधिकारांशोऽस्ति । नहि भारूपत्वादयो गुणाः प्रपञ्चप्रविलयोपकारिणः । नापि प्रपञ्चप्रविलयो भारूपत्वादिगुणोपकारी, परस्परविरोधित्वात् । नहि कृत्स्नप्रपञ्चप्रविलापनं प्रपञ्चैकदेशापेक्षणं चैकस्मिन्धर्मिणि युक्तं समावेशयितुम् । तस्मादस्मदुक्त एव विभाग आकारवदनाकारोपदेशानां युक्तर इति ॥ २१ ॥

வரும் இம்மாதிரியான தோஷங்கள் எவராலும் மறுக்கவியலாது. ஆகவே ப்ரம்ஹ வாக்கியங்கள் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தில் மட்டும் நோக்குடையனவே அன்றி விதியில் நோக்குடையனவன்று. ஆனதுபற்றி ஒரேவிதியின் தோற்றமேற்படுவதன் மூலம் ஒரே பொருளுள்ள தன்மை சொன்னது பொருத்தமற்றதேயாகும்.

மேலும் ப்ரம்ஹ வாக்கியங்களில் விதியிருப்பதாக வொப்பினபோதிலுங்கூட நிர்க்குணோபதேசஞ் செய்யுமிடங்களிலும், ஸகுணோபதேசஞ் செய்யுமிடத்திலும் ஏகவாக்கியத்துவமானது ஏற்படமாட்டாது. வேறு சப்தம் இருத்தல் முதலிய ப்ரமாணங்களால் விதி வேறுபாடு அறியப்படுங்கால் எல்லாவிடங்களிலும் விதியொன்றே என வோப்புவது பொருந்தாததேயாகும். ப்ரயாஜ தர்ஶபூர்ணமாஸ வாக்கியங்களிலோவெனில் அதிகாராம்சத்தால் அபேதந் தோன்றுவதால் ஏகவாக்கியத்துவமானது பொருந்தலாம். இவ்விடத்தில் ஸகுண நிர்க்குண விதிவாக்கியங்களில் ஒன்றுபட்டிருத்தலுக்குரிய அதிகாராம்ஶம் ஒன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. (ப்ரம்ஹத்துக்குச் சொல்லிய) பாரூபத்வம் முதலிய குணங்கள் ப்ரபஞ்ச ப்ரவிலயத்துக்கு உபகாரிகளன்று. (அதுபோல) ப்ரபஞ்ச ப்ரவிலயமும் பாரூபத்வம் முதலிய குணங்களுக்கு உபகாரியன்று. ஒன்றுக்கொன்று விரோதமுள்ள தாயிருப்பதே அதன் காரணமாகும். ஒரே தர்மியான வஸ்துவினிடத்தில் முழு ப்ரபஞ்ச ப்ரவிலாபநமும், ப்ரபஞ்சத்தினது ஏகதேசமிருத்தலும் என்ற இது பொருந்தக் கூடியதாகவாகமாட்டாது. ஆனதுபற்றி ஆகாரமுள்ளதாகவும் ஆகாரமற்றதாகவுமுள்ளவுபதேசங்களுக்கு நம்மால் சொல்லப்பட்ட விபாகந்தான் பொருந்தக்கூடியதாகிறது என்பது நிர்ணீதமாகவாகிறது. (21) (எ—று)

ஐந்தாவது உபயலிங்காதிகரணம் முற்றிற்று.

ப்ரகிருதைதாவத்வாதிகரணம் 6.

(அ—கை) சென்ற அதிகரணத்தில் எவ்வித விசேஷமுமற்ற சிந்மாத்திரமா
யுள்ளது ப்ரம்ஹம் என வுபதேசிக்கப்பட்டது. 9ஸூத்திரங்கள் கொண்ட இந்த
அதிகரணத்தில் எவ்வித நிஷேதத்துக்கும் (மறுப்புக்கும்) அவதி (எல்லை) யாகவுள்

६ प्रकृतैतावत्त्वाधिकरणम् । सू० २२-३०

प्रकृतैतावत्त्वं हि प्रतिषेधति ततो ब्रवीति च भूयः ॥ २२ ॥

ब्रह्मापि नेतिनेतीति निषिद्धमथवा नहि । द्विरुक्त्या ब्रह्मजगती निषिद्धयेते उभे अपि ॥ १ ॥

वीप्सेयमितिशब्दोक्ता सर्वदृश्यनिषिद्धये । अनिदं सत्यसत्यञ्च ब्रह्मैकं शिष्यतेऽवधिः ॥ २ ॥

'द्वे वाव ब्रह्मणो रूपे मूर्तं चैवामूर्तं च' (बृ० २ । ३ । १) इत्युपक्रम्य पञ्चमहाभूतानि द्वैराश्येन प्रविभज्यामूर्तरसस्य च पुरुषशब्दोदितस्य माहारजनादीनि रूपाणि दर्शयित्वा पुनः पठ्यते—'अथात आदेशो नेति नेति नह्येतस्मादिति नेत्यन्यत्परमस्ति' (बृ०

ளது ப்ரம்ஹம் எனவுபதேசிக்கப்படுகின்றது. அவற்றின் முதல் ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ப்ரகிருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேததி ததோ ப்ரவீதி ச பூய: (22)

(ப-ரை) [**अथात आदेशो नेति नेति** (அதாத ஆதேஶோ நேதி நேதி)=பிறகு ஆகையினல் இது இல்லை இது இல்லை என்பதே ப்ரம்ஹத்தினது உபதேசமாகும்.] என்ற விடத்திலுள்ள **नेति नेति** (நேதி நேதி)=என்ற சப்தமானது **प्रकृतैतावत्त्वं हि** (ப்ரகிருதைதாவத்த்வம் ஹி)=முன்னுள்ளக் கிரந்தத்தில் இவ்வளவென வகுத்துக் காட்டப்பட்ட மூர்த்தமென்றும் அமூர்த்தமென்றுமான ப்ரம்ஹத்தினது ரூபம் யாதுண்டோ அதையேயன்றோ **प्रतिषेधति** (ப்ரதிஷேததி)=மறுத்துக்கூறுகிறது. **ततः** (தத:)=அதற்குப் பிறகு **भूयः** (பூய:)=திரும்பவும் **ब्रवीति च** (ப்ரவீதி ச)= மூர்த்தா மூர்த்த ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வேறாகவொன்றிருக்கிறது எனவுபதேசித்துமிருக்கிறது. (22) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) இது இல்லை இது இல்லை என்றதால் ப்ரம்ஹமும் நிஷேதிக்கப்படுகிறதா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். "நேதி நேதி" என இரண்டு தடவை சொல்லியிருப்பதால் ப்ரம்ஹம், ஜகத் ஆகிய இரண்டுமேதான் நிஷேதிக்கப்படுகின்றன என்பது பூர்வபக்ஷம். இதி என்ற சப்தத்தாற் சொல்லப்படும் வீப்ஸையானது (இரண்டு தடவை படித்தலானது) எல்லா திருஶ்யத்தையும் நிஷேதிக்கவேண்டியே ஏற்பட்டது. இதுவெனச் சொல்லவியலாததும் ஸத் என்றும் த்யத் என்றும் சொல்லப்படும் மூர்த்தா மூர்த்த ப்ரபஞ்சத்தைச் காட்டிலும் ஸத்தியமானதுமான (முக்காலமழிவில்லாததுமான) ப்ரம்ஹமொன்றே அவதியாக (முடிவிடமாக) எஞ்ஜிநிற்கிறது என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—"மூர்த்தமென்றும் அமூர்த்தமென்றும் சொல்லப்படுகின்ற இவ்விரண்டுமே ப்ரம்ஹத்தினது ரூபங்களாகும்" என்று தொடங்கி ஐந்து மஹா பூதங்களையும் இரண்டு வகுப்பாகப் பிரித்து புருஷ சப்தத்தாற் சொல்லப்பட்ட அமூர்த்தத்தின் ஸாரத்துக்கு மாஹாரஜனம் (மஞ்சள் நிறம்) முதலிய ரூபங்களைக்

२ । ३ । ६) इति । तत्र कोऽस्य प्रतिषेधस्य विषय इति जिज्ञासामहे । नह्यत्रेदं तदिति विशेषितं किञ्चित्प्रतिषेध्यमुपलभ्यते । इति शब्देनत्वत्र प्रतिषेध्यं किमपि समर्प्यते नेति नेतीतीतिपरत्वान्नञ्प्रयोगस्य । इतिशब्दश्चायं सन्निहितालम्बन एवंशब्दसमानवृत्तिः प्रयुज्यमानो दृश्यते 'इति ह स्मोपाध्यायः कथयति' इत्येवमादिषु । सन्निहितं चात्र प्रकरणसामर्थ्याद्रूपद्वयं सप्रपञ्चं ब्रह्मणस्तच्च ब्रह्म यस्यैते द्वे रूपे । तत्र नः संशय उपजायते—किमयं प्रतिषेधो रूपे रूपवच्चोभयमपि प्रतिषेधत्याहोस्विदेकतरम् । यदाप्येकतरं तदापि किं ब्रह्म प्रतिषेधति रूपे परिशिनष्ट्याहोस्विद्रूपे प्रतिषेधति ब्रह्म परिशिनष्टीति । तत्र प्रकृतत्वाविशेषादुभयमपि प्रतिषेधतीत्याशङ्कामहे । द्वौ चैतौ प्रतिषेधौ द्विर्नेतिशब्दप्रयोगात् । तयोरेकेन

காண்பித்துப் பிறகு படிக்கப்படுகிறது. அதாவது:—"அத=பிரபஞ்சோபதேசத்துக்குப் பிறகு அதः=நிஷேதத்துக்கு வேண்டியே ப்ரம்ஹத்தினிடத்தில் ப்ரபஞ்சாரோபஞ் செய்யப்பட்டிருப்பதால் நேதி நேதி=இதில்லை இதில்லை என ஆதேசः=நிஷேதத்தினாலுபதேசமானது செய்யப்படுகிறது. இதில்லையென வுபதேசிப்பதைவிட வேறானவுபதேசமுறையொன்றில்லையன்றோ" என்பதாம். அவ்விடத்தில் இந்த நிஷேதத்துச்கு விஷயம் யாதென விசாரிக்கப்படுகிறது. இவ்விடத்தில் இதுதான் அது எனத் தனித்துக்கூறக் கூடிய மறுக்கப்படும் பொருளொன்றுமில்லையன்றோ? இவ்விடத்திலோ இதி=என்ற சப்தத்தினால் நிஷேதிக்கப்படும் பொருள் ஒன்று காட்டப்படுகிறது. ஏன்? நேதி நேதி=இதில்லை இதில்லை என்பதாய் நஞ்=ப்ரயோகமானது இதி என்றதைப் பரமாகக் கொண்டிருப்பதாலென்க. ஸமீபத்திலுள்ளதைக் கூறுகின்ற இந்த இதி என்ற சப்தமும் (இவ்விதம் என்ற பொருளுள்ள) ஏவம் என்ற சப்தத்துக்கொத்த பொருளுள்ளதாக "இவ்விதமன்றோ உபாத்தியாயர் சொன்னார்" என்றதாதியான விடங்களில் பிரயோகஞ்செய்யப்படுவதாகக் காணக்கிடக்கின்றது. இவ்விடத்திலோ முன்னுள்ள ப்ரகரணஸாமர்த்தியத்தையொட்டி அதன் விரிவுடன் கூடின ப்ரம்ஹத்தினுடைய இரண்டு ரூபங்களும், இந்த இரண்டு ரூபங்களும் எதனுடையதோ அந்த ப்ரம்ஹமுமே ஸந்நிஹிதமாக (முன்னர் கூறப்பட்டதாகக்) காணப்படுகிறது. அவ்விஷயத்தில் நமக்கு ஸம்ஶயமுதயமாகின்றது. அதாவது:—இந்த நிஷேதமானது இரண்டு ரூபங்கள், இவ்விரு ரூபங்களுமுள்ள பொருள் ஆகிய இரண்டையும் நிஷேதிக்கிறதா? அல்லது இரண்டனுள் ஒன்றைமட்டும் நிஷேதிக்கிறதா? என்பதாம். எதுபோழ்து இரண்டனுளொன்றை நிஷேதிக்குமோ அதுபோழ்து ப்ரம்ஹத்தை நிஷேதித்து ரூபங்களை மிச்சப்படுத்துகிறதா? அல்லது ரூபங்களை நிஷேதித்து ப்ரம்ஹத்தை மிச்சப்படுத்துகிறதா? என்றுமாம். அவ்விஷயத்தில் ப்ரகிருதமாக இருத்தல் (முன்னர் படிக்கப்பட்டிருத்தல்) பொதுவாகவிருப்பதால் இரண்டையுமேதான் நிஷேதிக்கிறது என ஆசங்கிக்கிறோம். இரண்டுதடவை நேதி என்ற சப்தப் பிரயோகமிருப்பதைக்கொண்டு இவை இரண்டு நிஷேதங்களாகவாகின்றன. அவ்விரண்டனுள் ஒன்றினால் அதைப்பற்றின விசேஷத்துடன் கூடின ப்ரம்ஹத்தினுடைய ரூபமும், மற்றொன்றினால் ரூபமுள்ள ப்ரம்ஹமும் மறுக்கப்படுகிறது என எண்ணமுண்டாகிறது,

सप्रपञ्चं ब्रह्मणो रूपं प्रतिषिध्यतेऽपरेण रूपवद्ब्रह्मेति भवति मतिः। अथवा ब्रह्मैव रूपवत्प्रतिषिध्यते तद्धि वाङ्मनसातीतत्वादसंभाव्यमानसद्भावं प्रतिषेधार्हम्। नतु रूपप्रपञ्चः प्रत्यक्षादिगोचरत्वात्प्रतिषेधार्हः। अभ्यासस्त्वादरार्थ इति॥

एवं प्राप्ते ब्रूमः—न तावदुभयप्रतिषेध उपपद्यते शून्यवादप्रसङ्गात्। किञ्चिद्धि परमार्थमालम्ब्यापरमार्थः प्रतिषिध्यते यथा रज्ज्वादिषु सर्पादयः। तच्च परिशिष्यमाणे कस्मिंश्चिद्भावेऽवकल्प्यते। उभप्रतिषेधे तु कोऽन्यो भावः परिशिष्येत्। अपरिशिष्यमाणे चान्यस्मिन्य इतरः प्रतिषेद्धुमारभ्यते प्रतिषेद्धुमशक्यत्वात्तस्यैव परमार्थत्वापत्तेः प्रतिषेधानुपपत्तिः। नापि ब्रह्मप्रतिषेध उपपद्यते 'ब्रह्म ते ब्रवाणि' (बृ० २। १। १) इत्याद्युपक्रमविरोधात्। 'असन्नेव स भवति। असद्ब्रह्मेति वेद चेत्' (तैत्ति० २। ६। १) इत्यादिनिन्दाविरोधात्। 'अस्तीत्येवोपलब्धव्यः' (कठ० ६। १३) इत्यवधारणविरोधात्। सर्ववेदान्तव्याकोपप्रसङ्गाच्च। वाङ्मनसातीतत्वमपि ब्रह्मणो नाभावाभिप्रायेणाभिधीयते।

அல்லது ரூபமுள்ள ப்ரம்ஹமே மறுக்கப்படுகிறது. அந்த ப்ரம்ஹம் தான் வாக்கு மனம், இவற்றைக் கடந்திருப்பதால் இருப்பதாகக்கூட எண்ணமுடியாதிருப்பதுபற்றி நிஷேதிப்பதற்குத்தகுதியுள்ளதாகவாகிறது. ரூபப்ரபஞ்சமோ ப்ரத்யக்ஷாதிகளுக்கு விஷயமாகவிருப்பதால் நிஷேதிப்பதற்குத் தகுதியுள்ளதாகவாகாது. அப்யாஸமோ (இரண்டு தடவை நேதி என்று படித்ததோ) ஆதரவினுலேற்பட்டதாகவாகிறது. எனப் (பூர்வபக்ஷம்) பிராப்தமாகவே (ஸித்தாந்தம்) சொல்லுகிறோம். இரண்டையும் (ரூபம், ரூபமுள்ள ப்ரம்ஹம் இரண்டையும்) நிஷேதிப்பதென்பது பொருந்தாது. சூன்யவாதம் வரக்கூடியதாகவிருப்பதே அதன் காரணமாகும். உண்மை நிலையிலுள்ளவொன்றைப் பற்றிக்கொண்டு, உண்மை நிலையில்லாத பொருள் மறுக்கப்படுவதென்பது பொருத்தமுடையது. பழுதை முதலியவற்றில் பாம்பு முதலியன போன்றும். அதுவும் ஒரு பொருள் எஞ்சியிருக்கும்பொழுது தான் பொருத்தமுடையதாகவாகும். இரண்டும் மறுக்கப்படுமாயின் வேறு எந்தப் பொருள் எஞ்சியிருக்கக் கூடும். மற்றொன்று எஞ்சியிராதபோழ்து எந்த மற்றொன்று மறுக்கவெண்ணப்படுகின்றதோ அது மறுக்கவியலாதிருப்பதுபற்றி அதற்கே பரமார்த்தத்துவம் (உண்மையாகவிருத்தல்) பிராப்த்தமாகவாவதால் மறுத்தல் ஸம்பவிக்க இடமில்லை.

மேலும் "ப்ரம்ஹத்தை உனக்குச் சொல்லுகிறேன்" என்ற உபக்கிரமத்துக்கு விரோதம் வருமாதலால் ப்ரம்ஹத்தின் ப்ரதிஷேதமானது பொருத்தமுள்ளதாகவுமாகமாட்டாது. "ப்ரம்ஹமில்லையென எண்ணுவானுயின் அவன் அஸத்தாகவே ஆகிறான்" என்றதாதி நிந்தைக்கு விரோதமும்வந்துவிடும். "இருக்கு என்றேதான் அறியவேண்டும்" என்ற வுறுதிமொழிக்கு விரோதமும் வந்துவிடக்கூடும். எல்லா வேதாந்தங்களுடைய விரோதமும் ப்ரஸக்தமாகும். ப்ரம்ஹத்துக்கு வாக்கு மனம் இவற்றைக் கடந்திருத்தல் கூறினது இல்லையென்ற அபிப்பிராயத்தாற் சொல்லப்பட்டதன்று. மஹத்தானப் பிரயாஸையெடுத்துக்கொண்டு "ப்ரம்ஹவித்தானவன்

नहि महता परिकरबन्धेन ‘ब्रह्मविदाप्नोति परम्’ (तै० २।१।१), ‘सत्यं ज्ञानमनन्तं ब्रह्म’ (तै० २।१।१) इत्येवमादिना वेदान्तेषु ब्रह्म प्रतिपाद्य तस्यैव पुनरभावोऽभिलप्येत। ‘प्रक्षालनाद्धि पङ्कस्य दूरादस्पर्शनं वरम्’ इति हि न्यायः। प्रतिपादनप्रक्रिया त्वेषा ‘यतो वाचो निवर्तन्ते। अप्राप्य मनसा सह’ (तै० २।४।१) इति। एतदुक्तं भवति—वाङ्मनसातीतमविषयान्तःपाति प्रत्यगात्मभूतं नित्यशुद्धबुद्धमुक्तस्वभावं ब्रह्मेति। तस्माद्ब्रह्मणो रूपप्रपञ्चं प्रतिषेधति परिशिनष्टि ब्रह्मेत्यभ्युगन्तव्यम्। तदेतदुच्यते प्रकृतैतावत्त्वं हि प्रतिषेधतीति॥

प्रकृतं यदेतावदियत्तापरिच्छिन्नं मूर्तामूर्तलक्षणं ब्रह्मणो रूपं तदेष शब्दः प्रतिषेधति। तद्धि प्रकृतं प्रपञ्चितं च पूर्वस्मिन्ग्रन्थेऽधिदैवतमध्यात्मं च, तज्जनितमेव च वासनालक्षणमपरं रूपममूर्तरसभूतं पुरुषशब्दोदितं लिङ्गात्मव्यपाश्रयं माहारजनाद्युपमाभिर्दर्शितम्। अमूर्तरसस्य पुरुषस्य चक्षुर्ग्राह्यरूपयोगित्वानुपपत्तेः। तदेतत्सप्रपञ्चं ब्रह्मणो रूपं

பரத்தையடைகிறான்” என்றும், “உண்மையறிவாநந்த ரூபம் ப்ரம்ஹம்” என்றதாதியாலும் வேதாந்தங்களில் ப்ரம்ஹத்தைச்சொல்லி அதற்கே திரும்பவும் அபாவமானது சொல்லப்படமாட்டாதன்றோ? “சேற்றையலம்புவதைக் காட்டிலும் அதைத் தொடாதிருப்பதே நலம்” என்றல்லவோ நியாயமிருக்கிறது. “வாக்குகள் மனத்துடன் கூட அதையடையாது எங்கிருந்து திரும்புகின்றனவோ” என்றவிது ப்ரம்ஹத்தையுபதேசிக்கும் முறையேயாகும். இதனால் பின்வருமாறு சொல்லப்பட்டதாகவாகிறது. அதாவது:—ப்ரம்ஹமானது வாக்கு மனது இவற்றைக் கடந்ததும், விஷயத்திற் சேராததும், ப்ரத்யகாத்மாவாகவானதும், நித்ய சுத்த புத்த முக்த ஸ்வபாவமுள்ளதுமாகவாகும் என்றாம். ஆனதுபற்றி ப்ரம்ஹத்தினது ரூபப்ரபஞ்சத்தை மறுத்து ப்ரம்ஹத்தை மிச்சப்படுத்திக் காட்டுகிறதெனக் கொள்ளவேண்டிவருகிறது. அந்த இது “ப்ரகிருதைதாவத் த்வம் ஹி ப்ரதிஷேததி” என்றதாற் சொல்லப்படுகிறது. ப்ரகிருதமான=தொடர்ந்துவருகின்ற யாதொரு ஏதாவத்த்வம்=இவ்வளவெனக் கூறப்படும் மூர்த்தாமூர்த்தரூபமான ப்ரம்ஹத்தினது ரூபமுண்டோ அதை இந்தச் சப்தமானது (நேதி நேதி என்ற சப்தமானது) மறுக்கிறது. அஃதன்றோ முன்னுள்ளக் கிரந்தத்தில் அத்யாத்மத்திலும், அதிதைவத்திலுமாக ப்ரகிருதமாகவும் விரிக்கப்பட்டதாகவுமிருக்கிறது. அதனாலுண்டுபண்ணப்பட்டதும், வாஸனாரூபமானதும், அமூர்த்தத்தின் ரஸ (ஸார) மாகவானதும், புருஷ என்ற சப்தத்தாற் சொல்லப்பட்டதும், ஸூக்ஷ்ம சரீரத்தை ஆஶ்ரயித்ததுமான வேறு ரூபமானது மாஹாரஜனம்=மஞ்சள் நிறம் முதலிய உவமைகளாற் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அமூர்த்தரஸனான புருஷனுக்கு கண்ணினாற் கிரஹிக்கக் கூடிய ரூபமுள்ளவனாகவிருத்தல் பொருந்தக் கூடியதுமன்று. அந்த இந்த ஸப்ரபஞ்சமான (விரிவுடன் கூடின) ப்ரம்ஹத்தினது ரூபமானது ஸமீபத்திலுள்ளதைக் கூறும் இதி என்ற சப்தத்தால் மறுப்புக்கூறும் ந என்ற சப்தத்துக்கு விஷயமாக்கப்படுவதாகத்தெரிகிறது.

सन्निहितालम्बनेनेत्तिकरणेन प्रतिषेधकं नञं प्रत्युपनीयत इति गम्यते। ब्रह्म तु रूपविशेषणत्वेन षष्ठ्या निर्दिष्टं पूर्वस्मिन्ग्रन्थे न स्वप्रधानत्वेन। प्रपञ्चिते च तदीये रूपद्वये रूपवतः स्वरूपजिज्ञासायामिदमुपक्रान्तम् 'अथात आदेशो नेति नेति' (बृ० २। ३। ६) इति। तत्र कल्पितरूपप्रत्याख्यानेन ब्रह्मणः स्वरूपावेदनमिदमिति निर्णीयते। तदास्पदं हीदं समस्तं कार्यं नेति नेतीति प्रतिषिद्धम्। युक्तं च कार्यस्य वाचारम्भणशब्दादिभ्योऽसत्त्वमिति नेति नेतीति प्रतिषेधनं, नतु ब्रह्मणः। सर्वकल्पनामूलत्वात्। नचात्रेयमाशङ्का कर्तव्या—कथं हि शास्त्रं स्वयमेव ब्रह्मणो रूपद्वयं दर्शयित्वा स्वयमेव पुनः प्रतिषेधति—'प्रक्षालनाद्धि पङ्कस्य दूरादस्पर्शनं वरम्' इति। यतो नेदं शास्त्रं प्रतिपाद्यत्वेन ब्रह्मणो रूपद्वयं निर्दिशति, लोकप्रसिद्धं त्विदं रूपद्वयं ब्रह्मणि कल्पितं परामृशति प्रतिषेध्यत्वाय

ப்ரம்ஹமோ ரூபத்துக்கு விசேஷணமாகவாகும் முறையில் *ஆறும் வேற்றுமையினால் முன்னுள்ளக் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய ஸ்வப்ரதானமாக (சொந்த முறையில் முக்கியமானதாக) ச் சொல்லப்படவில்லை. ப்ரம்ஹத்தினுடைய இரண்டு ரூபங்களும் விரிவாகச் சொல்லவும்பட்டன. இவ்விரு ரூபங்களுமுள்ள ப்ரம்ஹத்தினுடைய ஸ்வரூபம் யாதெனவறிய ஆவல் கொள்ளுங்கால் "அதாத ஆதேச: நேதி நேதி" என்ற இது ஆரம்பிக்கப்பட்டது. அவ்விடத்தில் கல்பிதமான ரூபங்களை மறுக்கும்வாயிலாக ப்ரம்ஹத்தினுடைய ஸ்வரூபத்தை இது தெரிவிக்கின்றதென அறியக்கிடக்கிறது. அதையாஶ்ரயித்துள்ள இந்த எல்லாக் காரியமுமன்றோ நேதிநேதி என்றதால் மறுக்கப்பட்டது. காரியமானது (1) வாசாரம்பண சப்தாதிகள் மூலம் உண்மையில்லாததாகவிருப்பதுபற்றி அதை நேதி நேதி என்றதால் மறுத்தது பொருத்தமுள்ளதாகவாகுமேயொழிய ப்ரம்ஹத்தினது மறுப்புக் கூறுவதாகச் சொல்லுவது பொருந்தாது. (ப்ரம்ஹம்) எல்லாவிதமான கல்பனைக்கும் காரணமாக (அதிஷ்டானமாக) இருப்பதே அதன் காரணமாகும். சாஸ்திரமானது தானே ப்ரம்ஹத்துக்கு இரண்டு ரூபங்களையுமுபதேசித்து தானே அந்த ரூபங்களை எவ்விதம் நிஷேதிக்கும் "சேற்றையலம்புவதைக் காட்டிலும் வெகுதூரத்தில் அதைத் தொடாதிருப்பதேயன்றோ மேலானது" என்பதாய் இத்தகைய ஆசங்கை கொள்ளுவது பொருந்தாது. ஏன்? இந்தச் சாஸ்திரமானது ப்ரம்ஹத்துக்கு இவ்விரண்டு ரூபங்களுமிருப்பதாக விளக்கவரவில்லை. பின்னையோவெனில் லோகப்ரஸித்தமாகவுள்ளதும் ப்ரம்ஹத்தினிடத்தில் கற்பிக்கப்பட்டதுமான இந்த இரண்டு ரூபங்களையும் மறுக்கவேண்டியும், சுத்தமான ப்ரம்ஹ ஸ்வரூபத்தையுபதேசிக்கவேண்டியுமே அவற்றை இங்கு சொல்லியிருப்பதாகவேற்படுவதால் தோஷமெதுவுமில்லையென்க. (நேதி நேதி என்ற) இவ்விரு

---

* "த்வே வாவ ப்ரம்ஹணோ ரூபே மூர்த்தஞ்சைவா மூர்த்தஞ்ச" என்றவிடத்தில் ப்ரம்ஹண: என்றது ஆறும் வேற்றுமையுள்ள சப்தமாகும்.

(1) "வாசாரம்பணம் விகாரோ நாமதேயம்" விகார:-காரியமானது, வாசாரம்பணம்-வாக்கினால் மட்டும் வியவஹரிக்கப்படுவதுபற்றி வெறும் நாமதேயம் (பெயர் மட்டும்) ஆகுமேயொழிய உண்மையாகவுள்ளதன்று என்பது சுருதியின் கருத்து.

शुद्धब्रह्मस्वरूपप्रतिपादनाय चेति निरवद्यम्। द्वौ चैतौ प्रतिषेधौ यथासङ्ख्यन्यायेन द्वे अपि मूर्तामूर्ते प्रतिषेधतः। यद्वा पूर्वः प्रतिषेधो भूतराशिं प्रतिषेधत्युत्तरो वासनाराशिम्। अथवा 'नेति नेति' (बृ० २। ३। ६) इति वीप्सेयम्, इतीति यावत्किंचिदुत्प्रेक्ष्यते तत्सर्वं न भवतीत्यर्थः। परिगणितप्रतिषेधे हि क्रियमाणे यदि नैतद्ब्रह्म किमन्यद्ब्रह्म भवेदिति जिज्ञासा स्यात्। वीप्सायां तु सत्यां समस्तस्य विषयजातस्य प्रतिषेधादविषयः प्रत्यगात्मा ब्रह्मेति जिज्ञासा निवर्तते। तस्मात्प्रपञ्चमेव ब्रह्मणि कल्पितं प्रतिषेधति परिशिनष्टि ब्रह्मेति निर्णयः॥

इतश्चैष एव निर्णयः। यतस्ततः प्रतिषेधाद्भूयो ब्रवीति 'अन्यत्परमस्ति' (बृ० २। ३। ६) इति। अभावावसाने हि प्रतिषेधे क्रियमाणे किमन्यत्परमस्तीति ब्रूयात्। तत्रैषाक्षरयोजना—नेति नेतीति ब्रह्मादिश्य तमेवादेशं पुनर्निर्वक्ति। नेति नेतीत्यस्य कोऽर्थः। नह्येतस्माद्ब्रह्मणो व्यतिरिक्तमस्तीत्यतो नेति नेतीत्युच्यते न पुनः स्वयमेव नास्ती-

---

மறுப்புகளும் யதா ஸங்க்யநியாயத்தால் (முறையே பொருள் கொள்ளல் என்ற யுக்தியால்) மூர்த்தா மூர்த்தங்களான இரண்டு ரூபங்களையுமே மறுக்கின்றன.

அல்லது முதலிலுள்ள (நேதி என்ற) மறுப்பானது பூதக்கூட்டத்தை மறுக்கின்றது. அதற்கடுத்துள்ள (நேதி என்ற) மறுப்பானது வாஸனாராசியை மறுக்கின்றது. அல்லது நேதி நேதி என்ற இது வீப்ஸையாகும். (இரண்டு தடவை கூறப்பட்டதாகவாகும்) ஆகவே இந்த இந்த மாதிரியாக எவ்வளவு பொருள்கள் உத்ப்ரேக்ஷிக்கப்படுகின்றனவோ, அவையாவும்(ப்ரம்ஹத்தினிடத்தில்)இல்லை என்பது அதன் பொருள். குறிப்பான சிலவற்றின் மறுப்புமட்டும் செய்யப்படுமாயின் இது ப்ரம்ஹமாக இல்லாவிடில் வேறு எது ப்ரம்ஹமாகவாகும் என்ற சங்கை நிகழும். வீப்ஸை செய்யப்பட்டாலோ எல்லா விஷயஸமூஹமும் மறுக்கப்படுவதால் எவ்வித விஷயமுமற்ற ப்ரத்யகாத்மாவானது ப்ரம்ஹம் என்று ஆகி முற்கூறிய சங்கை நிவிருத்தியை யடைகின்றது. ஆகையினால் ப்ரம்ஹத்தினிடத்தில் கற்பிக்கப்பட்ட ப்ரபஞ்சத்தையே மறுத்து ப்ரம்ஹத்தை மிச்சப்படுத்துகின்றது என்ற நிர்ணயமுண்டாகின்றது. எக்காரணம்பற்றி அத்தகைய மறுப்புக்குப் பின்னர் ஶ்ருதியானது "மூர்த்தா மூர்த்தங்களைக் காட்டிலும் வேறுபட்ட பரமான பொருள் இருக்கின்றது" என உபதேசிக்கின்றதோ அக்காரணம்பற்றியும் முற்கூறிய நிர்ணயமே உண்டாகின்றது. அபாவத்தை முடிவிலுள்ளதாக மறுப்புச் செய்யப்படுமானால் வேறான பரப்பொருளிருப்பதாக எவ்விதமுபதேசிக்கக்கூடும். நேதி நேதி என்றவிடத்திலுள்ள அக்ஷரங்களைப் பொருத்திப் பொருள் கொள்ளும் முறை பின்வருமாறு—நேதி நேதி (இது இல்லை இது இல்லை) என ப்ரம்ஹத்தை உபதேசித்து அதே உபதேசத்தைத் திரும்பவும் விளக்குகின்றது. நேதி நேதி (இதில்லை இதில்லை) என்ற இதன்பொருள் யாதெனின்? கூறுவாம். இந்த ப்ரம்ஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட பொருள் இல்லை என்ற இக்காரணத்தால் இது

स्यर्थः। तच्च दर्शयत्यन्यत्परमप्रतिषिद्धं ब्रह्मास्तीति। यदा पुनरेवमक्षराणि योज्यन्ते नह्येतस्मादिति नेति (नेति) नहि प्रपञ्चप्रतिषेधरूपादादेशनादन्यत्परमादेशनं ब्रह्मणोऽस्तीति। तदा 'ततो ब्रवीति च भूय' इत्येतन्नामधेयविषयं योजनितव्यम्। 'अथ नामधेयम् सत्यस्य सत्यमिति प्राणा वै सत्यं तेषामेष सत्यम्' (बृ० २। ३। ६) इति हि ब्रवीतीति। तच्च ब्रह्मावसाने प्रतिषेधे समञ्जसं भवति। अभावावसाने तु प्रतिषेधे किं सत्यस्य सत्यमित्युच्येत। तस्माद्ब्रह्मावसानोऽयं प्रतिषेधो नाभावावसान इत्यध्यवस्यामः॥

तदव्यक्तमाह हि॥ २३॥

यत्प्रतिषिद्धात्प्रपञ्चजातादन्यत्परं ब्रह्म तदस्ति चेत्कस्मान्न गृह्यत इति। उच्यते—तदव्यक्तमनिन्द्रियग्राह्यं सर्वदृश्यसाक्षित्वात्। आह ह्येवं श्रुतिः—'न चक्षुषा गृह्यते नापि

இல்லை இது இல்லை என உபதேசிக்கப்படுகிறதேயொழிய ப்ரப்ஹமே இல்லை என்பது அதன் பொருளல்ல. அதையும் சுருதியானது 'வேறுபட்டதும் மறுக்கப்படாததுமான ப்ரம்ஹமிருக்கின்றது' என உபதேசிக்கின்றது. நஹ்யே தஸ்மாதிதி நேதி என்றவிடத்திலுள்ள அக்ஷரங்கள் எதுபோழ்து பின்வருமாறு பொருத்திப் பொருள் கொள்ளப்படுகின்றனவோ அதாவது:—ப்ரபஞ்சத்தை நிஷேதஞ்செய்தல் ரூபமான உபதேசத்தைக்காட்டிலும் வேறுபட்ட மேலான உபதேசமுறை ப்ரம்ஹத்துக்கு இல்லை என்பதாம். அதுபோழ்து ததோப்ரவீதி சபூய: என்ற ஸூத்திரபாகமானது நாமதேயத்தை (பெயரை) விஷயமாகக் கொண்டதெனப் பொருள் கொள்ளவேண்டுவதாகவாகிறது. ஶ்ருதியில் "ஸத்யத்துக்கு ஸத்யமென்பது ப்ரப்ஹத்தின் நாமதேயம் (பெயர்)" என்று தொடங்கி "ப்ராணன்களே ஸத்யமாகும் அந்தப்ராணன்களுக்கு இதுஸத்யமாகும்" என்றல்லவோ உபதேசங்காண்கின்றது. அந்த நாமோபதேசமும் ப்ரம்ஹத்தை முடிவாகக்கொண்ட மறுப்பு சொல்லப்பட்டால் தான் பொருத்தமுள்ளதாகவாகும். அபாவத்தை முடிவில் கொண்ட மறுப்பு சொல்லப்படுமாயின் ஸத்யத்துக்கு ஸத்யம் என எது சொல்லப்படும். ஆகவே இந்த மறுப்பானது ப்ரம்ஹத்தை முடிவில் கொண்டதேயல்லாது அபாவத்தை முடிவிற் கொண்டதன்று என உறுதியாகத் தீர்மானிக்கிறோம். (22)

(ஸூ) ததவ்யக்த மாஹ ஹி (23)

(ப-ரை) **तत् (தத்)**=அந்த ப்ரம்ஹமானது **अव्यक्तम् (அவ்யக்தம்)**=இந்திரியங்களுக்குப் புலப்படாதது. **हि (ஹி)**=யாது காரணத்தால் **आह (ஆஹ)**=இவ்விதமே ஶ்ருதியுபதேசிக்கின்றதோ அக்காரணம்பற்றியே என்க. (23) (எ-று)

பாஷ்யம்.—ப்ரதிஷித்தமான (மறுக்கப்பட்ட) ப்ரபஞ்ச ஸமூஹத்தைக்காட்டிலும் வேறுபட்டதான யாதொரு பரம் ப்ரப்ஹமுண்டோ அது இருக்குமாயின் ஏன் அறியப்படுவதில்லை எனின்? (பதில்) சொல்லப்படுகிறது—அது அவ்யக்தமானது=இந்திரியங்களாற் கிரஹிக்கக்கூடியதன்று. எல்லா த்ருஶ்யங்களுக்கும் ஸாக்ஷியாகவிருப்பதே அதன்காரணமாகும். இவ்விதமேயன்றே "கண்ணினுல் கிர

वाचा नान्यैर्देवैस्तपसा कर्मणा वा' (मुण्ड० ३।१।८) 'स एष नेति नेत्यात्माऽगृह्यो नहि गृह्यते' (बृ० ३।९।२६) 'यत्तदद्रेश्यमग्राह्यम्' (मुण्ड० १।१।६) 'यदा ह्येवैष एतस्मिन्नदृश्येऽनात्म्येऽनिरुक्तेऽनिलयने' (तै० २।७।१) इत्याद्या। स्मृतिरपि—'अव्यक्तोऽयमचिन्त्योऽयमविकार्योऽयमुच्यते' (भ० गी० २।२५) इत्याद्या ॥ २३ ॥

अपि च संराधने प्रत्यक्षानुमानाभ्याम् ॥ २४ ॥

अपिचैनमात्मानं निरस्तसमस्तप्रपञ्चमव्यक्तं संराधनकाले पश्यन्ति योगिनः। संराधनं च भक्तिध्यानप्रणिधानाद्यनुष्ठानम्। कथं पुनरवगम्यते संराधनकाले पश्यन्तीति। प्रत्यक्षानुमानाभ्यां श्रुतिस्मृतिभ्यामित्यर्थः। तथाहि श्रुतिः—'पराञ्चि खानि व्यतृणत्स्वयंभूस्तस्मात्पराङ् पश्यति नान्तरात्मन्। कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृत-

---

ஹிக்கப்படுவதில்லை. வாக்கினாலும் கிரஹிக்கப்படுவதில்லை. வேறு இந்திரியங்களாலும் தபஸ்ஸினாலும், கர்மத்தினாலும் கிரஹிக்கப்படுவதில்லை." "இதில்லை இதில்லையென வுபதேசிக்கப்படும் அந்த ஆத்மா எதனாலும் அறியக்கூடாதவனாயிருப்பதுபற்றி எதனாலும் அறியப்படுகிறானில்லை" "யாதொரு அந்த ப்ரம்ஹமுண்டோ அது கண்ணாற் பார்க்கக்கூடாததாகவும், வேறு இந்திரியங்களாற் கிரஹிக்கக்கூடாததாகவுமிருக்கிறது" "எதுபோழ்து இவன் அதிருஶ்யமும், அநாத்மியமும், அநிருக்தமும், அநிலயனமும் [ஆன பொருளில் பயமற்று (பயஹேதுவான த்வைதப் பொருளற்று) நிலைபெறுகிறானோ"] என்றதாதியான ஶ்ருதியானது உபதேசிக்கிறது. "இந்த ஆத்மா அவ்யக்தனும், அசிந்த்யனும், அவிகார்யனுமாகச் சொல்லப்படுகிறான்" என்றதாதியான ஸ்மிருதியுமிருக்கிறது. (23) (எ-று)

(அ-கை) அவ்விதமாயின் எப்பொழுது கிரஹிக்கக் கூடியதாகவாகும் என்ற சங்கைக்குப்பதில் சொல்லவேண்டிப் பின்வரும் ஸூத்திரம் தொடங்கப்படுகிறது—

(ஸூ) அபி ச ஸம்ராதநே ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம் (24)

(ப-ரை) **अपि च** (அபி ச)=ஆத்மா அவ்யக்தனாயினுங்கூட இவனை **संराधने** (**ஸம்ராதநே**)=சாஸ்திர ஸம்ஸ்காரம் பெற்றமனத்தில் [**पश्यन्ति योगिनः** (பஶ்யந்தி யோகிந:)=யோகிகள் பார்க்கின்றனர்.] **प्रत्यक्षानुमानाभ्याम्** (ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்)=ஶ்ருதி ஸ்மிருதிகள் அவ்விதமிருப்பதே அதன் காரணமாகும். (24) (எ-று)

பாஷ்யம்.—எல்லாவிதமான ப்ரபஞ்ச ஸம்பந்தமற்றதும் அவ்யக்தமுமான இந்த ஆத்மாவை ஸம்ராதன காலத்தில் யோகிகள் பார்க்கின்றனர். பக்தி, தியானம், ப்ரணிதானம் முதலியவற்றின் அநுஷ்டானம் ஸம்ராதனமெனப்படும். ஸம்ராதனகாலத்தில் பார்க்கின்றனர் என்பது எவ்விதமறியப்படுகிறது எனின்? ப்ரத்யக்ஷாநுமானங்களாலென்கிறோம். ஶ்ருதி ஸ்மிருதிகளால் என்பது அதன் பொருள். அதாவது:—"ஈஶ்வரன் இந்திரியங்களை வெளி நோக்குள்ளனவாகச்செய்து நாசப்படுத்தினார். ஆனதுபற்றியே வெளி நோக்கையடைகின்றானேயொழிய அந்தராத்மாவை (ப்ரத்யகாத்மாவை) ப்பார்ப்பதில்லை. ஆயினும் ஒரு தீரன் (புத்தி

त्वमिच्छन्' (क० ४ । १) इति । 'ज्ञानप्रसादेन विशुद्धसत्त्वस्ततस्तु तं पश्यते निष्कलं ध्यायमानः' (मु० ३ । १ । ८) इति चैवमाद्या । स्मृतिरपि—'यं विनिद्रा जितश्वासाः संतुष्टाः संयतेन्द्रियाः । ज्योतिः पश्यन्ति युञ्जानास्तस्मै योगात्मने नमः ॥ योगिनस्तं प्रपश्यन्ति भगवन्तं सनातनम्' इति चैवमाद्या ॥ २४ ॥

ननु संराध्यसंराधकभावाभ्युपगमात्परेतरात्मनोरन्यत्वं स्यादिति । नेत्युच्यते—

प्रकाशादिवच्चावैशेष्यं प्रकाशश्च कर्मण्यभ्यासात् ॥ २५ ॥

यथा प्रकाशाकाशसवितृप्रभृतयोऽङ्गुलिकरकोदकप्रभृतिषु कर्मसूपाधिभूतेषु सविशेषा इवावभासन्ते, नच स्वाभाविकीमविशेषात्मतां जहति, एवमुपाधिनिमित्त एवायमात्मभेदः स्वतस्त्वैकात्म्यमेव । तथाहि—वेदान्तेष्वभ्यासेनासकृज्जीवप्राज्ञयोरभेदः प्रतिपाद्यते ॥

யைத் தன்வசமாக்கினவன்) அமிருதத்வத்தை விரும்பினவனாய் இந்திரியங்களை உள்ளில் திருப்பினவனாய் ப்ரத்யகாத்மாவைப் பார்க்கிறான்" என்றும், "கர்மத்தினால் சுத்த சித்தமுள்ளவனாய் க்ஞானமென்ற சித்தத்தெளிவினால் தியானிப்பவனாய்க் கொண்டு அந்த நிஷ்களனான பரமாத்மாவைப் பார்க்கிறான்" என்றதாதியுமான ஶ்ருதி சொல்லுகிறது. ஸ்மிருதியும் "விநித்ரர்களும், ஶ்வாஸஜப மடைந்தவர்களும், ஸந்துஷ்டர்களும் (வைராக்கிய முள்ளவர்களும்) இந்திரிய ஜயமுள்ளவர்களுமான யோகிகள் எந்த ஜ்யோதிர் வடிவனான ஆத்மாவைப் பார்க்கின்றனரோ அந்த யோகாத்மாவுக்கு (யோகத்தாலடையத்தக்க ஆத்மாவுக்கு) நமஸ்காரம்" "யோகிகள் ஸநாதனனான அந்தப் பகவானைப் பார்க்கின்றனர்" என்றதாதியாலுபதேசிக்கிறது. (24) (எ—று)

அவதாரிகா பாஷ்யம்.—ஆராத்யனாகவிருக்குந் தன்மையையும், ஆராதனஞ் செய்பவனாகவிருக்குந் தன்மையையும் ஒப்புவதிலிருந்து பரமாத்ம ஜீவாத்மாக்களுக்குப் பேதம் வரக்கூடுமன்றோ எனின்? இல்லையெனச் சொல்லப்படுகிறது—

(ஸூ) ப்ரகாசாதிவத்ச அவைசேஷ்யம் ப்ரகாச:ச கர்மணி அப்யாஸாத் (25)

(ப—ரை) **प्रकाशादिवच्च** (ப்ரகாஶாதிவத்ச) = ப்ரகாசம் முதலியவைபோல **प्रकाशश्च** (ப்ரகாஶஶ்ச)=சிதாத்மாவும், **कर्मणि** (கர்மணி)=த்யானம் முதலிய கர்மாவில் பேதத்தையடைகிறது. இயற்கையிலோ **अवैशेष्यम्** (அவைஶேஷ்யம்)=மாறுபாடற்றிருத்தல் ஏற்படுகிறது. ஏன்? **अभ्यासात्** (அப்யாஸாத்)=ஶ்ருதியானது தத்த்வமஸி என ஒன்பதுதடவை அபேதத்தையுபதேசஞ் செய்திருப்பதே அதன் காரணமாகும். (25) (எ—று)

பாஷ்யம்.—ஒளி, ஆகாசம், சூரியன் முதலியன முறையே விரல், கரகம் (ஓர்வகை குடம்) ஜலம் முதலிய உபாதியாகவான கர்மங்களில் (பொருள்களில்) ஸவிஶேஷங்கள் போல (மாறுபாடுள்ளனபோன்று) தோற்றுகின்றனவேயொழிய இயற்கையிலமைந்துள்ள எவ்விதமாறுபாடுமற்ற நிலையைவிட்டு நீங்குவதில்லை என்

अतोऽनन्तेन तथाहि लिङ्गम् ॥ २६ ॥

अतश्च स्वाभाविकत्वादभेदस्याविद्याकृतत्वाच्च भेदस्य विद्ययाऽविद्यां विधूय जीवः परेणानन्तेन प्राज्ञेनात्मनैकतां गच्छति। तथाहि लिङ्गम्—'स यो ह वै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति' (मु० ३। २। ९) 'ब्रह्मैव सन्ब्रह्माप्येति' (बृ० ४। ४। ६) इत्यादि ॥२६॥

उभयव्यपदेशात्त्वहिकुण्डलवत् ॥ २७ ॥

तस्मिन्नेव संराध्यसंराधकभावे मतान्तरमुपन्यस्यति स्वमतविशुद्धये। क्वचिज्जी-

---

பது எவ்விதமோ இவ்விதமே இந்த ஆத்மபேதமும் உபாதிநிமித்தமாகவே ஏற்படுகிறது. இயற்கையில் ஐகாத்மியமேதான் உள்ளது. அதாவது:—வேதாந்தங்களில் அப்யாஸத்தினால் (பலதடவை யுபதேசத்தினால்) அடிக்கடி ஜீவபரமாத்மாக்களின் அபேதமே உபதேசிக்கப்பட்டிருக்கிறது. (25) (எ—று)

(ஸூ) அதோ அநந்தேந ததாஹி லிங்கம் (26)

(ப—ரை) **अतः** (அத:)=இதனால் ஜீவன் **अनन्तेन** (அநந்தேந)=தேசகாலவஸ்து பரிச்சேதமற்ற ப்ராஜ்ஞாத்மாவுடன் ஏகத்வத்தை யடைகிறான். **तथाहि लिङ्गम्** (**ததாஹி லிங்கம்**)=அவ்விதமேயன்றோ ஶ்ருதியில் ஜீவனுக்கு ப்ரஹ்மாத்மத்வபலரூபமான லிங்கம் காணவும் படுகிறது. (26) (எ—று)

பாஷ்யம்.—இதனால் அதாவது:—அபேதம் இயற்கையிலமைந்துள்ளதாகவும், பேதம் அவித்யை மூலமேற்பட்டதாகவு மிருப்பதால் ஜீவன் வித்யையினால் அவித்யையைப்போக்கிப் பரனும் அநந்தனுமான ப்ராஜ்ஞாத்மாவுடன் ஏகத்வத்தையடைகிறான். அவ்விதமேயன்றோ "எவனொருவன் அந்தப் பரம்ப்ரஹ்மத்தை யறிவானோ அவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்" "ப்ரஹ்மமாகவே இருந்து கொண்டு ப்ரஹ்மத்தையடைகிறான்" என்றதாதியான லிங்கமுமிருக்கிறது. (26) (எ—று)

(அ—கை) ஶ்ருதியில் பரமாத்மாவைக்கர்மாவாகவும், ஜீவனைக்கர்த்தாவாகவும் சொல்லியிருப்பதிலிருந்து பேதம் அபேதம் இரண்டுமே வாஸ்தவமாகும் என 27, 28, இந்த இரண்டு ஸூத்திரங்களால் பூர்வபக்ஷம் செய்து 29-வது ஸூத்திரத்தால் பேதம் உபாதி மூலமேற்படுகிறதென்றும், அபேதம் இயற்கையினுள்ளதென்றும் சொல்லவெண்ணங்கொண்டு ஸூத்திரக்காரர் பேதம் அபேதம் இரண்டும் உண்மையாகவுள்ளது என்று கூறும் பூர்வபக்ஷத்தை இரண்டு ஸூத்திரங்களாற் சொல்லத் தொடங்குகிறார். அதன் முதல்ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) உபயவ்யபதேசாத்து அஹிகுண்டலவத் (27)

(ப—ரை) **उभयव्यपदेशात्तु** (உபயவ்யபதேசாத்து)=சிலவிடத்தில் பேதமும், சிலவிடத்தில் அபேதமும் ஶ்ருதியில் சொல்லியிருப்பதால் **अहिकुण्डलवत्** (**அஹிகுண்டலவத்**)=பாம்பும், அதன் குண்டலமும் (சுருண்டநிலையும்) போல தத்துவமிருக்கலாம். (27) (எ—று)

பாஷ்யம்.—அதேஸம்ராத்ய ஸம்ராதகத்தன்மையில் சொந்தமான மதம் சுத்

वप्राज्ञयोर्भेदो व्यपदिश्यते 'ततस्तु तं पश्यते निष्कलं ध्यायमानः' (मुण्ड० ३।१।८) इति ध्यातृध्यातव्यत्वेन द्रष्टृद्रष्टव्यत्वेन च। 'परात्परं पुरुषमुपैति दिव्यम्' (मु० ३।२।८) इति गन्तृगन्तव्यत्वेन। 'यः सर्वाणि भूतान्यन्तरो यमयति' इति नियन्तृनियन्तव्यत्वेन। क्वचित्तु तयोरेवाभेदो व्यपदिश्यते 'तत्त्वमसि' (छा० ६।८।७) 'अहं ब्रह्मास्मि' (बृ० १।४।१०) 'एष त आत्मा सर्वान्तरः' (बृ० ३।४।१) 'एष त आत्मान्तर्याम्यमृतः' (बृ० ३।७।३) इति। तत्रैवमुभयव्यपदेशे सति यद्यभेद एवैकान्ततो गृह्यते भेदव्यपदेशो निरालम्बन एव स्यात्। अत उभयव्यपदेशदर्शनादहिकुण्डलवदत्र तत्त्वं भवितुमर्हति। यथाहिरित्यभेदः कुण्डलाभोगप्रांशुत्वादीनीति तु भेद एवमिहापीति ॥२७॥

प्रकाशाश्रयवद्वा तेजस्त्वात् ॥ २८ ॥

தப்படுவதற்கு வேண்டி வேறுமதத்தைச் சொல்லுகிறார். ஶ்ருதியில் சிலவிடத்தில் "பிறகு தியானிப்பவனைக் கொண்டு அந்த நிஷ்களரூபத்தைப் பார்க்கிறான்" என்றதால் தியானிப்பவனாக விருத்தல் தியானஞ் செய்யப்படுவதாகவிருத்தல் இவற்றாலும், பார்ப்பவனாகவிருத்தல் பார்க்கப்படுவதாக விருத்தல் இவற்றாலும் ஜீவபரமாத்மாக்களின் பேதமானது உபதேசிக்கப்படுகிறது. "காரியவர்க்கத்தை விடமேலான மாயையைக் காட்டிலும் வேறுபட்டவரும் திவ்யரும் (ஸ்வப்ரகாசரும்) ஆன புருஷனை அடைகிறான்" என்றதால் அடைபவன், அடையப்படுவது இவற்றாலும், "எவர் எல்லாப் பூதங்களையும் உள்நின்று நியமனஞ் செய்கின்றாரோ" என்றதால் நியந்தாவாக விருத்தல், நியந்தவ்யமாக (நியமனஞ் செய்யக்கூடியதாக) விருத்தல் இவற்றாலும் பேதமானது உபதேசிக்கப்படுகிறது. சிலவிடத்திலோ "அதாக நீ இருக்கிறாய்" "நான் ப்ரம்ஹமாகவிருக்கிறேன்" "இந்த உனது ஆத்மா ஸர்வாந்தரமானது" "இந்த உனது ஆத்மா அந்தர்யாமியும் அமிருதமுமாகும்" என்றதால் ஜீவபரமாத்மாக்களுக்கே அபேதமானது உபதேசிக்கப்படுகிறது. ஆகவே இவ்விதம் பேதம் அபேதம் என்ற இரண்டையும் விஷயமாகக்கொண்ட உபதேசமிருக்குங்கால் அபேதமே முக்கியமாகக் கொள்ளப்படுமானால் பேதத்தை யுபதேசித்தது பயனற்றதேயாகிவிடும். ஆனதுபற்றி உபயவ்யபதேசம் (பேதாபேதவுபதேசம்) காணப்படுவதிலிருந்து இங்கு தத்துவமானது பாம்பும், அதன் குண்டலமும்போல வாவதுதான் பொருத்தமுடையதாகவாகிறது. பாம்பென்றதால் அபேதமும், வட்டமாக விருத்தல், வக்கிரமாகவிருத்தல், நீண்ட கொம்புபோலிருத்தல் முதலியவற்றால் பேதமும் எவ்விதமோ இவ்விதமே இங்கும் இருக்கலாம். (27)

(ஸூ) ப்ரகாசாச்ரயவத்வா தேஜஸ்த்வாத் (28)

(ப—ரை) ஜீவபரமாத்மாக்களுக்கு तेजस्त्वात् (தேஜஸ்த்வாத்)=சைதன்யவடிவமாகவிருத்தல் பொதுவாகவிருப்பதுபற்றி प्रकाशाश्रयवद्वा (ப்ரகாஶாஶ்ரயவத்வா)=ப்ரகாசத்துக்கும் (ஒளிக்கும்) ஆஶ்ரயத்துக்கும் (சூரியாதிகளுக்கும்) போல பேதாபேத வ்யபதேசம் பொருந்தலாம். (28) (எ—று)

अथवा प्रकाशाश्रयवदेतत्प्रतिपत्तव्यम् । यथा प्रकाशः सावित्रस्तदाश्रयश्च सविता नात्यन्तभिन्नावुभयोरपि तेजस्त्वाविशेषात् । अथ च भेदव्यपदेशभाजौ भवत एवमिहापीति ॥ २८ ॥

पूर्ववद्वा ॥ २९ ॥

यथा वा पूर्वमुपन्यस्तं प्रकाशादिवच्चावैशेष्यमिति तथैवैतद्भवितुमर्हति । तथाह्यविद्याकृतत्वाद्बन्धस्य विद्यया मोक्ष उपपद्यते । यदि पुनः परमार्थत एव बद्धः कश्चिदात्माहिकुण्डलन्यायेन परस्यात्मनः संस्थानभूतः प्रकाशाश्रयन्यायेन चैकदेशभूतोऽभ्युपगम्येत ततः पारमार्थिकस्य बन्धस्य तिरस्कर्तुमशक्यत्वान्मोक्षशास्त्रवैयर्थ्यं प्रसज्येत, नचात्रोभावपि भेदाभेदौ श्रुतिस्तुल्यवद्व्यपदिशति । अभेदमेव हि प्रतिपाद्यत्वेन निर्दिशति भेदं तु पूर्वप्रसिद्धमेवानुवदत्यर्थान्तरविवक्षया । तस्मात्प्रकाशादिवच्चावैशेष्यमित्येष एव सिद्धान्तः ॥ २९ ॥

பாஷ்யம்.—அல்லது ப்ரகாசமும் அதன் ஆஸ்ரயமும் போல இதையறிந்து கொள்ளவேண்டும். ஸூரியனுடையதான ப்ரகாசமும், அதற்கு ஆஸ்ரயமான சூரியனும் ஆகிய இரண்டும் தேஜோரூபமாகவிருப்பதுபற்றி முற்றிலும் வேறுபட்டதாக எவ்விதமாகாதோ பேதாபேத வியபதேசத்தை யடைகின்றனவாகவுமாகுமோ, இவ்விதமே இங்கும் (ஜீவபரமாத்மாக்கள் ஆகலாம்) என்று. (28) (எ—று)

(அ—கை) இவ்விதம் இரண்டு ஸூத்திரங்களால் பேதம் அபேதம் இரண்டுமே உண்மையாக ஸம்பவிக்கலாமெனப் பூர்வபக்ஷம் செய்து அதற்குப் பதில் சொல்ல வேண்டி இந்த ஸூத்திரமாரம்பிக்கப்படுகிறது—

(ஸூ) பூர்வவத்வா (29)

(ப—ரை) पूर्ववत् (பூர்வவத்) वा (வா)="ப்ரகாசாதிவத்ச அவைசேஷ்யம்" என்ற 25-வது ஸூத்திரத்தில் எவ்விதம் சொல்லப்பட்டதோ அவ்விதமேதான் இவ்விஷயத்தில் பொருள் காணவேண்டும். (29) (எ—று)

பாஷ்யம்.—"ப்ரகாசாதிவத்ச அவைஶேஷ்யம்" என்றதால் எவ்விதஞ்சொல்லப்பட்டதோ அவ்விதம் இது இருப்பதுதான் பொருந்தக்கூடியதாகவாகும். அதாவது:—பந்தமானது அவித்யையினுல் செய்யப்பட்டதாகவிருப்பதால் வித்யையினுல் மோக்ஷமேற்படுவது பொருத்தமுள்ளதாகவாகிறது என்றும். உண்மையிலேயே பந்தத்தையடைந்தவனுவொரு ஆத்மா, பாம்பும் அதன் குண்டலமும் என்ற யுக்தியையொட்டிப் பரமாத்மாவினது வேறுவிதமான நிலையிலுள்ளவனுகவும், ப்ரகாசமும் அதன் ஆஸ்ரயமும் என்ற யுக்தியையொட்டி ஏகதேச (அவயவ) பூதனுகவும் வொப்பப்படுவானுயின் அதுபோழ்து உண்மையாகவமைந்துள்ள பந்தம் விலக்க வியலாததுபற்றி மோக்ஷ சாஸ்திரமானது பயனற்றதாகவே ஆகிவிடும். இங்கு ஶ்ருதியானது பேதம் அபேதம் இரண்டையுமே ஒன்றுபோல வுபதேசிக்கவுமில்லை. அபேதத்தையே சாஸ்திர தாத்பரிய விஷயமாகவுபதேசித்து

प्रतिषेधाच्च ॥ ३० ॥

इतश्चैष एव सिद्धान्तः । यत्कारणं परस्मादात्मनोऽन्यं चेतनं प्रतिषेधति शास्त्रम्— 'नान्योऽतोऽस्ति द्रष्टा' (बृ० ३।७।२३) इत्येवमादि । 'अथात आदेशो नेति नेति' (बृ० २।३।६), 'तदेतद्ब्रह्मापूर्वमनपरमनन्तरमबाह्यम्' (बृ० २।५।१९) इति च ब्रह्मव्यतिरिक्तप्रपञ्चनिराकरणाद्ब्रह्ममात्रपरिशेषाच्चैष एव सिद्धान्त इति गम्यते ॥ ३० ॥

७ पराधिकरणम् ॥ सू० ३१—३७

परमतः सेतून्मानसंबन्धभेदव्यपदेशेभ्यः ॥ ३१ ॥

முன்னரே (அவித்யா மூலம்) கிடைத்த பேதத்தைத் தானும் அநுவதிக்கிறது. (திருப்பிக்கூறுகிறது) ஆனதுபற்றி "ப்ரகாசாதிவத்ச அவைசேஷ்யம்" என்ற இதுவே ஸித்தாந்தமாகவாகும். (29) (எ—று)

(ஸூ) ப்ரதிஷேதாத்ச (30)

(ப—ரை) **प्रतिषेधाच्च** (ப்ரதிஷேதாத்ச)=பரமாத்மாவைக் காட்டிலும் வேறு சேதனனைச் சாஸ்திரம் மறுத்திருப்பதுமே மற்றொரு காரணமாகும். (30) (எ—று)

பாஷ்யம்.—இதனாலும் இதுவே ஸித்தாந்தமான பொருளாகவாகும். எக்காரணம்பற்றி ஸ்ருதியானது "த்ரஷ்டாவாகவுள்ளவன் இந்தப் பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவனல்லன்" என்றதாதியால் பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட சேதனனை மறுத்துக்கூறுகிறதோ அக்காரணம்பற்றியே என்க. "பிறகு ஆனதுபற்றி இதில்லைஇதில்லை என்பதே (ப்ரம்ஹத்தின்) உபதேசமாகும்" "அந்த இந்த ப்ரம்ஹம் தனக்குமுன் (காரணம்) அற்றதும், பின் (காரியம்) அற்றதும், உள்ளற்றதும், வெளியற்றதும் ஆகும்" என்றும் ப்ரம்ஹத்தைவிட வேறுபட்ட ப்ரபஞ்சத்தை மறுத்துக் கூறுவதாலும், ப்ரம்ஹத்தைமட்டுமே மிச்சப்படுத்தியிருப்பதாலுமே இதுவேதான் ஸித்தாந்தமான பொருளெனவறியக்கிடக்கிறது. (30) (எ—று)

ஆறுவது ப்ரகிருதைதாவத்த்வாதிகரணம் முற்றிற்று.

பராதிகரணம் 7.

(அ—கை) வெகு ஸ்ருதிகளிருப்பதன்மூலம் ப்ரம்ஹத்தை விடவேறுபட்ட தத்துவமில்லை என நிலைநாட்டப் பட்டது. ஆயினும் "யாதொரு ஆத்மாவுண்டோ இது விதாரகமான ஸேதுவாக (அணையாக) வாகும்" என்றதாதிகளான ஸ்ருதிகள் மூலம் முற்கூறிய ஸித்தாந்தத்தில் மேலெழுந்தவாரியாக விரோதம் காணப்படுவதால் அந்த விரோதத்தைப் போக்கவேண்டி 7ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணமானது தொடங்கப்படுகிறது. அதன் முதலிலுள்ள பூர்வபக்ஷ ஸூத்திரம் பின்வருமாறு—

अस्त्यन्यद्ब्रह्मणो नो वा विद्यते ब्रह्मणोऽधिकम् । सेतुत्वोन्मानवत्वाच्च संबन्धाद्भेदवत्त्वतः ॥ १ ॥

धारणात् सेतुतोन्मानमुपास्त्यै भेदसंगती । उपाद्ध्युद्भवनाशाभ्यां नान्यदन्यनिषेधतः ॥ २ ॥

यदेतन्निरस्तसमस्तप्रपञ्चं ब्रह्म निर्धारितमस्मात्परमन्यत्तत्त्वमस्ति नास्तीति श्रुतिविप्रतिपत्तेः संशयः । कानिचिद्धि वाक्यान्यापातेनैव प्रतिभासमानानि ब्रह्मणोऽपि परमन्यत्तत्त्वं प्रतिपादयन्तीव तेषां हि परिहारमभिधातुमयमुपक्रमः क्रियते । परमतो ब्रह्म-

---

(ஸூ) பரம் அத: ஸேதூந்மான ஸம்பந்தபேதவ்யபதேசேப்ய: (31)

(ப—ரை) **अत:** (அத:)=இந்த ப்ரம்ஹத்தைக் காட்டிலும் **परम्** (பரம்)=வேறான தத்த்வமானது இருக்கவேண்டுவது அவஶ்யமாகவாகிறது. ஏன்? **सेतून्मानसंबन्धभेदव्यपदेशेभ्य:** (ஸேதூந்மானஸம்பந்தபேதவ்யபதேசேப்ய:)= **सेतुव्यपदेश** (ஸேதுவ்யபதேஶ)=“யாதொரு ஆத்மாவுண்டோ அது விதாரகமான ஸேதுவாகவாகும்” என்றதால் ஆத்மாவை ஸேதுவாக (அணையாகச்) சொல்லியிருப்பதும், **उन्मानव्यपदेश** (உந்மாநவ்யபதேஶ)=அந்த இந்த ப்ரம்ஹம் “நான்கு காலுள்ளதும் எட்டுக்குளம்புள்ளதும், பதினாறு கலைகளுள்ளதுமாகும்” என்றதால் நிறையளவு சொல்லியிருப்பதும், **संबन्धव्यपदेश** (ஸம்பந்தவ்யபதேஶ)=“ப்ராக்ஞனை ஆத்மாவுடன் நன்கு கலந்தவனாய்” என்றதால் ஸம்பந்தம் சொல்லியிருப்பதும், **भेदव्यपदेश** (பேதவ்யபதேஶ)=“ஸூரியமண்டலத்தில் யாதொரு புருஷனுண்டோ சரீரத்தில் கருவிழியில் யாதொரு புருஷனுண்டோ” என்றதால் பேதம் சொல்லியிருப்பதுமே அதன் காரணமாகும். (31) (எ—று)

வையாஸிக ந்யாயமாலை.

(க—ரை) ப்ரம்ஹத்தைக் காட்டிலும் வேறான பொருளுண்டா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். ஸேதுத்தன்மையும், நிறையளவுள்ள தன்மையும், ஸம்பந்தமும், பேதமும் சொல்லியிருப்பதிலிருந்து ப்ரம்ஹத்தைக்காட்டிலும், வேறான பொருளிருப்பதாகத்தான் சொல்லவேண்டும் என்பது **பூர்வபக்ஷம்.** ப்ரம்ஹமானது ஸர்வத்துக்கும் ஆதாரமாகவிருப்பதுபற்றி ஸேதுத்தன்மையும், உபாஸ்திக்குவேண்டி நிறையளவும், பேதமும், உபாதியின் உத்பத்தி அதன் நாசம் இவற்றைக்கொண்டு ஸம்பந்தமும் சொல்லப்படுகிறதேயொழிய வேறு பொருளிருப்பதாகக் கொண்டன்று. வேறு பொருளைச் சாஸ்திரம் நிஷேதித்திருப்பதே அதன் காரணமாகும் என்பது **ஸித்தாந்தம்.** (எ—று)

பாஷ்யம்.—ப்ரம்ஹமானது எவ்வித ப்ரபஞ்ச ஸம்பந்தமுமற்றதென யாதொன்று உறுதி செய்யப்பட்டதோ அந்த ப்ரம்ஹத்தைக் காட்டிலும் வேறு தத்வமுண்டா? அல்லது இல்லையா? என ஶ்ருதிகளுக்கு முறண்பாடு காணப்படுவதைக்கொண்டு ஸந்தேஹமுதயமாகிறது. சில வேதாந்த வாக்கியங்கள் மேலெழுந்தவாக்காகப் பொருள் கொள்ளப்படுகின்றனவாய் ப்ரம்ஹத்தைக் காட்டிலுங்கூட

णोऽन्यस्तत्त्वं भवितुमर्हति। कुतः—सेतुव्यपदेशादुन्मानव्यपदेशात्संबन्धव्यपदेशाद्भेदव्यपदेशाच्चेति। सेतुव्यपदेशस्तावत्—'अथ य आत्मा स सेतुर्विधृतिः' (छा० ८। ४। १)इत्यात्मशब्दाभिहितस्य ब्रह्मणः सेतुत्वं सङ्कीर्तयति। सेतुशब्दश्च हि लोके जलसन्तानविच्छेदकरे मृद्दार्वादिप्रचये प्रसिद्धः। इह तु सेतुशब्द आत्मनि प्रयुक्त इति लौकिकसेतोरिवात्मसेतोरन्यस्य वस्तुनोऽस्तित्वं गमयति। 'सेतुं तीर्त्वा' (छा० ८। ४। २) इति च तरतिशब्दप्रयोगात्। यथा लौकिकं सेतुं तीर्त्वा जाङ्गलमसेतुं प्राप्नोत्येवमात्मानं सेतुं तीर्त्वाऽनात्मानमसेतुं प्राप्नोतीति गम्यते। उन्मानव्यपदेशश्च भवति 'तदेतद्ब्रह्म चतुष्पादष्टाशफं षोडशकलमिति।

வேறானதொரு தத்த்வமிருப்பதாக விளக்குகின்றனபோன்று தோற்றத்தையடைகின்றன. அந்த வாக்கியங்களுக்குப்பரிஹாரம் தேடவேண்டி இந்த ஆரம்பஞ் செய்யப்படுகின்றது. இந்த ப்ரம்ஹத்தைக் காட்டிலுங்கூட வேறுபட்டதொரு தத்வமிருக்கவேண்டுவது அவஶ்யமாகவாகிறது. ஏன்? ஸேதுவாகச் சொல்லியிருப்பதும், உந்மானம் (நிறையளவு) சொல்லியிருப்பதும், ஸம்பந்தம் சொல்லியிருப்பதும், பேதம் சொல்லியிருப்பதுமே அதன் காரணமாகும். அவற்றுள் முதலாவதான ஸேது வ்யபதேசமாவது:—"பின்னர் யாதொரு ஆத்மாவுண்டோ அது ஸேதுவாகவும், விதாரகமாகவுமாகும்" என்றதல் ஆத்ம சப்தத்தாற் சொல்லப்படும் ப்ரம்ஹத்துக்கு ஸேதுத்தன்மையைச் சொல்லுகிறது. உலகில் ஸேது (அணை) சப்தமோ ஜலத்தொடர்பைத் தடைசெய்கின்ற மண் மரம் இவற்றின் ஸமூஹத்தில் பிரஸித்தமாகவிருக்கிறது. இவ்விடத்திலோ ஸேது என்ற சப்தமானது ஆத்மாவினிடத்தில் பிரயோகிக்கப்பட்டிருப்பதுபற்றி உலகிலுள்ள ஸேது (அணைக்கு) வுக்குப்போல ஆத்ம ஸேதுவுக்கும் அன்னியமான வஸ்துவினது இருப்பை அறிவிக்கிறது. "ஸேதுவைக்கடந்து" என்றவிடத்தில் (தாண்டி என்ற பொருளுள்ள) தீர்த்வா என்ற சப்தப் பிரயோகம் காணப்பட்டுமிருக்கிறது. உலகிலுள்ள அணையைத்தாண்டி அணையற்ற ஜலக்கசிவுள்ள ப்ரதேசத்தை எவ்விதமடைகின்றானோ இவ்விதமே ஆத்மாவைத்தாண்டி ஸேதுவாகவில்லாத அனாத்மாவையடைகிறான் எனத்தோற்றமேற்படுகிறது. உந்மான ப்ரயோகமும் காணப்படுகிறது. அதாவது:—"அந்த ப்ரம்ஹமானது *நான்கு பாதங்களுள்ளதும், எட்டுக் கொளம்புக

---

* நான்கு திக்குகளும் கலைகளாகும். அது ப்ரகாசமெனப்பெயரிய ப்ரம்ஹத்தினது பாதமாகும். பூமி, அந்தரிக்ஷம், த்யுலோகம், ஸமுத்திரம் இவை அநந்தமெனப் பெயரிய ப்ரம்ஹத்தினது பாதமாகும். அக்கினி, ஸூரியன், சந்திரன், மின்னல் இவை ஜ்யோதிஷ்மான் எனப்பெயரிய ப்ரம்ஹத்தினது பாதமாகும். சக்ஷுஸ், சுரோத்திரம், வாக், மனஸ் இவை ஆயதநமெனப்பெயரிய ப்ரம்ஹத்தினது பாதமாகும். ஆகவே ப்ரம்ஹமானது ப்ரகாசவான் என்றும், அநந்தவான் என்றும், ஜ்யோதிஷ்மான் என்றும், ஆயதநவான் என்றுமான நான்கு பாதங்களுள்ளதாகவாகின்றது. இத்தகைய நான்கு பாதங்களுடையவும் பாதிபாதி பாகங்களால் எட்டுக் குளம்புள்ளதாகவாகின்றது. ஒவ்வொரு பாதங்களிலும் நான்கு நான்கு கலைகள் வீதம் நான்கு பாதங்களிலுமாகச் சேர்ந்து பதினாறு கலைகள் ஏற்படுவதால் ப்ரம்ஹம் பதினாறு கலைகளுள்ளதாகவாகிறது என்பது சுருதியின் பொருள்.

इत्यादिना। छन्दोगास्तु तं नामनन्ति पञ्चसङ्ख्ययैव च त उपसंहरन्ति 'अथ ह य एतानेवं पञ्चाग्नीन्वेद' (छा० ५।१०।१०) इति। येषां च स गुणोऽस्ति येषां च नास्ति कथमुभयेषामेका विद्योपपद्येत। नचात्र गुणोपसंहारः शक्यते प्रत्येतुं, पञ्चसङ्ख्याविरोधात्। तथा प्राणसंवादे श्रेष्ठादन्यांश्चतुरः प्राणान्वाक्चक्षुःश्रोत्रमनांसि छन्दोगा आमनन्ति। वाजसनेयिनस्तु पञ्चममप्यामनन्ति 'रेतो वै प्रजापतिः प्रजायते ह प्रजया पशुभिर्य एवं वेद' (बृ० ६।१।६) इति। आवापोद्वापभेदाच्च वेद्यभेदो भवति, वेद्यभेदाच्च विद्याभेदो द्रव्यदेवताभेदादिव यागस्येति चेत्। नैष दोषः। यत एकस्यामपि विद्यायामेवञ्जातीयको गुणभेद उपपद्यते। यद्यपि षष्ठस्याग्नेरुपसंहारो न संभवति तथापि द्युप्रभृतीनां पञ्चानामग्नीनामुभयत्र प्रत्यभिज्ञायमानत्वान्न विद्याभेदो भवितुमर्हति। नहि षोडशिग्रहणाग्रहणयोरतिरात्रो भिद्यते। पठ्यतेऽपि

ருன ஆருவது அக்னியைப் படிக்கின்றனர். சந்தோகர்களோவெனில் அந்த ஆருவது அக்னியைப்படிப்பதில்லை "பிறகு எவனொருவன் இந்த ஐந்து அக்னிகளை உபாஸிக்கின்ருனோ" என்றதால் ஐந்து எண்ணுடனேயே முடிக்கின்றனர். எவர்க்கு அந்தக்குணம் (ஆருவது அக்கினி) இருக்கின்றதோ, எவர்களுக்கு இல்லையோ இவ்விருவருக்கும் வித்யை ஒன்று என்பது எவ்விதம் பொருந்தும் ? இவ்விடத்தில் குணோபஸம்ஹாரமிருப்பதாக வறியமுடியாது. ஐந்து என்ற எண் விரோதப்படுவதே அதன் காரணமாகும். அவ்விதமே ப்ராணோபாஸ்தி சொல்லுமிடத்தில் முக்கிய ப்ராணனைக்காட்டிலும் வேறுபட்ட வாக், சக்ஷுஸ் ஸ்ரோத்ரம், மனஸ் என்ற நான்கு ப்ராணன்களைச் சந்தோகர் படிக்கின்றனர். வாஜஸநேயிகளோ "ரேதஸ்ஸே ப்ரஜாபதியாகும். எவனொருவன் இவ்வித முபாஸிக்கின்ருனோ ப்ரஜைகளுடனும், பசுக்களுடனும் பிறக்கிருன்" என்றதால் ஐந்தாவதான பொருளையும் படிக்கின்றனர். ஒருவர் ஆருவது அக்னியைச் சேர்த்துக் கொளுதல் என்ற ஆவாபமும், மற்றவர் அதை விடுதல் என்ற உத்வாபமும் இருப்பதன் மூலம் பேதம் வருவதிலிருந்து வேத்யமானது (உபாஸ்யமானது) பேதப்படுகிறது. உபாஸ்யம் பேதப்படுவதிலிருந்து த்ரவ்ய தேவதைகள் பேதப்படுவதிலிருந்து யாகத்துக்குப் பேதம் வருவதுபோல வித்யாபேதம் ஏற்படுகிறது என்கிருேம் எனின்.

இது தோஷமாகாது. ஏன் ? ஒரே வித்யையிலுங்கூட இம்மாதிரியான குணபேதமானது பொருந்தக் கூடியதாகவாவதே அதன் காரணமாகும். வாஜஸநேயிகள் சொல்லும் ஆருவது அக்னிக்குச்சந்தோகர்கள் சொல்லும் பஞ்சாக்னி வித்யையில் உபஸம்ஹாரம் (சேர்த்துப் பொருள்கொள்ளல்) முடியாததான் ஆயினும் த்யுலோகம் முதலிய ஐந்து அக்னிகள் இரண்டிடத்திலும் ஒத்துக்காணப்படுவதால் வித்யாபேதமேற்படுவதற்கிடமில்லை. அதிராத்ரம் என்ற யாகம் ஷோடசியின் க்ரஹணம், அஃதின்மை இவற்ருல் வேறுபடமாட்டாதன்ருே. சந்தோகர்களால் ஆருவது அக்னியும் "இவ்வுலகினின்றும் லோகாந்தரத்தை யடைந்தவனை ஞாதிகள் அக்னியின் பொருட்டுக் கொண்டுபோகின்றனர்" என்றதால் படிக்கப்

च षष्ठोऽग्निश्छन्दोगैः—'तं प्रेतं दिष्टमितोऽग्नय एव हरन्ति' (छा० ५।९।२) इति। वाजसनेयिनस्तु सांपादिकेषु पञ्चस्वग्निष्वनुवृत्तायाः समिद्धूमादिकल्पनाया निवृत्तये 'तस्याग्निरेवाग्निर्भवति समित्समित्' (बृ० ६।२।१४) इत्यादि समामनन्ति स नित्यानुवादः। अथाप्युपासनार्थ एष वादस्तथापि स गुणः शक्यते छन्दोगैरप्युपसंहर्तुम्। नचात्र पञ्चसङ्ख्याविरोध आशङ्क्यः। सांपादिकाग्न्यभिप्राया ह्येषा पञ्चसङ्ख्या नित्यानुवादभूता न विधिसमवायिनीत्यदोषः। एवं प्राणसंवादेष्वप्यधिकस्य गुणस्येतरत्रोपसंहारो न विरुध्यते। नचावापोद्वापभेदाद्वेद्यभेदो विद्याभेदश्चाशङ्क्यः। कस्यचिद्वेद्यांशस्यावापोद्वापयोरपि भूयसो वेद्यराशेरभेदावगमात्। तस्मादैकविद्यमेव ॥ २ ॥

பட்டிருக்கிறது. வாஜஸநேயிகளோவெனில் *ஸாம்பாதிகங்களான (உபாஸனைக்கு வேண்டி கற்பிக்கப்பட்ட) ஐந்து அக்னிகளில் தொடர்ந்துவருகின்ற ஸமித், தூமம் முதலியவற்றின் கற்பனைக்கு நிவிருத்தியேற்படவேண்டி "அவனுக்கு ப்ரஸித்த மான அக்னியேதான் அக்னியாகவாகிறது, ப்ரஸித்தமான ஸமித்தேதான் ஸமித் தாகவாகிறது" என்ற தாதியைப் படிக்கின்றனர். அவ்விதம் படிப்பது (1) நித் யாநுவாதமாகும். உபாஸனைக்கு வேண்டியே அவ்விதஞ் சொல்லப்பட்டது எனக் கொண்டபோதிலும் அந்தக் குணமானது சந்தோகர்களாற் சேர்த்துக் கொள்ளக் கூடியதாகவுமாகலாம். அவ்விதமாயின் சந்தோகர்களுடைய இந்த அக்னிகள் விஷயத்தில் ஐந்து என்ற எண்ணுக்கு விரோதம் வருமென ஆசங்கிக்க இடமில்லை. என்? இங்கு கூறிய இந்த ஐந்து என்ற எண்ணனது ஸாம்பாதிகங்க ளான=(உபாஸனைக்குவேண்டிக் கற்பிதங்களான) அக்கினியைப்பற்றியதாய் நித்யா நுவாத முறையாற் கூறப்பட்டதாகவாகுமேயொழிய பஞ்சாக்னி உபாஸ்தி விதி யைச் சேர்ந்ததாகவாகமாட்டாது. ஆனதுபற்றித் தோஷம் வருவதற்கிடமில்லை. இவ்விதமே ப்ராணனைப்பற்றிச் சொல்லுமிடங்களிலும் அதிகமான குணத்தை வேறிடத்திற் சேர்த்துக்கொள்ளுவது முறண்படவும் மாட்டாது. மேலும், ஓரி டத்தில் ஒன்றைச் சேர்த்தலும், மற்றோரிடத்தில் ஒன்றை விடுதலும் என்ற வேற் றுமை காணப்படுவதைக் கொண்டு உபாஸ்யத்தின் பேதமோ, உபாஸனையின் பேதமோ வருவதாக ஆசங்கிக்கவேண்டுவதவசியமில்லை. உபாஸ்யமான ஸ்வல்ப அம்சத்துக்கு ஓரிடத்தில் அதிகமான பாடமும் மற்றோரிடத்தில் அஃதின்மையும் காணப்படினுங்கூட உபாஸ்யமாகச் சொல்லப்பட பெரும்பாலானவற்றுக்கு அபே தமும் (ஒற்றுமையும்) காணப்படுகிறது. ஆனதுபற்றி உபாஸ்தி ஒன்றேயாகும்.

---

*ஆறுவதான அக்னியையும், அதைப்பற்றின விசேஷத்தையும் அநுவாதமுறையாற் கூறியிருப்பதிலிருந்து அவை உபாஸ்யங்களாக இல்லாததால் இரண்டிடத்திலும் ஐந்து அக்னிகளே உபாஸ்யங்களாகவாவதால் ரூபபேதம் வருவதற்கிடமில்லை என்பது பாஷ்யத் தின் கருத்து.

(1) எவ்வித விதியுமில்லாமல் இயற்கையில் கிடைத்தபொருளைத் தானுஞ் சொல் லுவது நித்தியாநுவாதமெனப்படும்,

स्वाध्यायस्य तथात्वेन हि समाचारेऽधिकाराच्च सववच्च तन्नियमः ॥ ३ ॥

यदप्युक्तमाथर्वणिकानां विद्यां प्रति शिरोव्रताद्यपेक्षणादन्येषां च तदनपेक्षणाद्विद्याभेद इति तत्प्रत्युच्यते। स्वाध्यायस्यैष धर्मो न विद्यायाः। कथमिदमवगम्यते। यतस्तथात्वेन स्वाध्यायधर्मत्वेन समाचारे वेदव्रतोपदेशपरे ग्रन्थ आथर्वणिका इदमपि वेदव्रतत्वेन व्याख्यातमिति समामनन्ति। 'नैतदचीर्णव्रतोऽधीते' (मु० ३। २। ११) इति चाधिकृतविषयादेतच्छब्दादध्ययनशब्दाच्च स्वोपनिषदध्ययनधर्म एवैष इति निर्धार्यते।

(அ—கை) இதுவரையுள்ளக் கிரந்தத்தால் ரூபபேதத்தால் வித்யாபேதம் வர மாட்டாது எனவுபதேசித்து இந்தச் சூத்திரத்தால் தர்மம் மாறுபட்டபோதிலும் வித்யை மாறுபடுவதற்கில்லை என்பதை உபதேசிக்கிறார்—

(ஸூ) ஸ்வாத்யாயஸ்ய ததாத்வேந ஹி ஸமாசாரே அதி காராத்ச ஸவவத்ச தந்நியம: (3)

(ப—ரை) **स्वाध्यायस्य** (ஸ்வாத்யாயஸ்ய)=சிரோவ்ரதம் என்ற தர்மம் அதர்வ வேதத்தினுடையதாக சொல்லப்பட்டதாகக் கொள்ளவேண்டும். **समाचारे** (ஸமா சாரே)=வேதாத்யயனஞ் செய்வதற்குவேண்டிய தர்மத்தையுபதேசிக்கும் கிரந்தத் தில் சிரோவ்ரதமென்ற இந்தத் தர்மத்தை **तथात्वेन हि** (ததாத்வேந ஹி)=வேதாத்ய யன தர்மமாகவன்றோ ஆதர்வணிகர்கள் சொல்லுகின்றனர். **अधिकाराच्च** (அதி காராத்ச)=ஶ்ருதியில் "**नैतदचीर्णव्रतोऽधीते** (நைததசீர்ணவ்ரதோ அதீதே)=என்ற விடத்தில் துடர்ந்துவரும் முண்டகோபநிடதத்தைச் சொல்லும் **एतत्** (ஏதத்)= என்ற சப்தமிருப்பதும், **अधीते** (அதீதே)=என்றதால் அத்யயனம் சொல்லப்பட் டிருப்பதுமே மற்றொரு காரணமாகும். **सववच्च** (ஸவவத்ச)=ஸௌர்யம் என்ற ஹோமந்தொடங்கி ஶதௌதநம் வரையுள்ள 7 ஹோமங்கள் அதர்வவேதாத்யய னஞ் செய்பவர்க்கே சொல்லப்படுவது எவ்விதமோ அவ்விதமே **तन्नियमः** (தந்நிய ம:)=முண்டகோபநிடதத்தை அத்யயனஞ் செய்பவர்க்கே தலையில் நெருப்புத்தண லின் தாரணமானது நியமமாகவாகும். (3) (எ—று)

பூாஷ்யம்.—ஆதர்வணிகர்களுக்கு ப்ரம்ஹவித்யையைக் குறித்து சிரோவ்ர தம் முதலியவற்றின் அபேக்ஷை இருப்பதாலும், மற்றவர்க்குச் சிரோவ்ரதாதிகளின் அபேக்ஷையில்லாதிருப்பதாலும், வித்யையின் (உபாஸனத்தின்) பேதம் ஏற்படுகி றது எனயாதொன்று சொல்லப்பட்டதோ அதற்குப்பதில் சொல்லப்படுகிறது. இந் தத் தர்மமானது வேதத்தினுடையதே யொழிய வித்யையினுடையதாகவாகாது. இது எவ்விதமறியப்படுகிறது எனின்? யாதுகாரணம்பற்றி ததாத்வேந வேதாத்ய யனத்தின் தர்மமாக, ஸமாசாரத்தில்=வேதவ்ரதத்தையுபதேசிக்கும் கிரந்தத்தில் ஆதர்வணிகர்கள் இதையும்=இந்த சிரோவ்ரதத்தையும், வேதத்தின் வ்ரதமாக வியாக்கியானஞ் செய்யப்பட்டதெனச் சொல்லுகின்றனரோ (அக்காரணம்பற்றியே என்க.) விரதத்தை (சிரோவ்ரதத்தை) யனுஷ்டிக்காதவன் "இதை (ப்ரகிருதமான முண்டகோபநிடதத்தை) அத்யயனஞ் செய்தல் கூடாது" என்றவிடத்தில் துடர்

ननु च 'तेषामेवैतां ब्रह्मविद्यां वदेत शिरोव्रतं विधिवद्यैस्तु चीर्णम्' (मुण्ड० ३। २। १०) इति ब्रह्मविद्यासंयोगश्रवणादेकैव सर्वत्र ब्रह्मविद्येति सङ्कीर्यतैष धर्मः। न। तत्राप्येतामिति प्रकृतप्रत्यवमर्शात्। प्रकृतत्वं च ब्रह्मविद्याया ग्रन्थविशेषापेक्षमिति ग्रन्थविशेषसंयोग्येवैष धर्मः। सववच्च तन्नियम इति निदर्शननिर्देशः। यथाच सवाः सप्त सौर्यादयः शतौदन-पर्यन्ता वेदान्तरोदितत्रेताग्न्यनभिसंबन्धादाथर्वणोदितैकाग्न्यभिसंबन्धाच्चाथर्वणिकानामेव नियम्यन्ते तथैवायमपि धर्मः स्वाध्यायविशेषसंबन्धात्तत्रैव नियम्यते। तस्मादप्यनवद्यं विद्यैकत्वम् ॥ ३ ॥

दर्शयति च ॥ ४ ॥

ந்துவரும் முண்டகோபநிடதத்தைச் சொல்லும் ஏதத்=என்ற சப்தமும், அதீதே= என்பதாய் அத்யயனத்தைச் சொல்லும் சப்தமும் காணப்படுவதிலிருந்து அவர்க்குச்சொந்தமான உபநிடதத்தின் அத்யயனத்துக்குரியதாகவே இந்தத் தர்மமாகும் என வுறுதி செய்யப்படுகிறது.

சங்கை—"அவர்க்கே இந்த ப்ரம்ஹ வித்யையைச் சொல்லவேண்டும் எவர்களால் சிரோவ்ரதமானது முறைப்படி அநுஷ்டிக்கப்பட்டதோ" என்றவிடத்தில் ப்ரம்ஹவித்யையின் ஸம்பந்தம் இந்த சிரோவ்ரதத்துக்கிருப்பதாகத் தெரிவதால் எல்லாவிடத்திலும் ப்ரம்ஹவித்தையானது ஒன்றே. ஆனதுபற்றி இந்தச் சிரோவ்ரதமென்ற தர்மமானது எல்லாப்ரம்ஹவித்யையிலும் வரத்தான் வரும் எனின்?

உத்தரம்—அவ்விதம் சொல்லமுடியாது. அவ்விடத்திலுங்கூட "ஏதாம்" (இந்த) என்பதாய் ப்ரகிருதமான ப்ரம்ஹவித்தையைக் கூறியிருப்பதே அதன் காரணமாகும். ப்ரம்ஹவித்தைக்கு ப்ரகிருதமாக விருத்தலானது கிரந்தவிசேஷத்தை யபேக்ஷித்தேற்படுவதால் கிரந்தவிசேஷத்தை (முண்டகோபநிடதத்தைச்) சேர்ந்ததாகவே தான் இந்தத் தர்மமாகும்.* ஸூத்திரத்தில் "ஸவவத்ச தந்நியம:" என்றதால் திருஷ்டாந்தம் சொல்லப்பட்டதாக வாகிறது. ஸௌர்யம் முதல் ஶதௌதனம் முடியவுள்ள ஏழு ஸவங்கள்=ஹோமங்கள், வேறுவேதங்களிற் சொல்லியத்ரேதாக்னி (கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்னி) களின் ஸம்பந்தம் காணப்படாததாலும், அதர்வவேதத்திற் சொல்லப்பட்ட ஏகாக்னிஸம்பந்தம் காணப்படுவதாலும் ஆதர்வணிகர்களுக்குமட்டுமே என எவ்விதம்நியமமாகக் கொள்ளப்படுகின்றனவோ அதுபோலவே இந்தத்தர்மமும் (தலையில் அங்காரதாரணமும்) வேதாத்யயன விசேஷஸம்பந்தமிருப்பதை யொட்டி அவ்விஷயத்திலேயே (முண்டகோபநிடதாத்யயன விஷயத்திலேயே) நியமமாகக் கொள்ளப்படுகிறது. ஆனது பற்றியும் வித்தை யொன்று தானென்பது தோஷமற்றதாகவாகிறது. (3) (எ—று)

(ஸூ) தர்சயதி ச (4)

---

* ஆகவே ப்ரம்ஹவித்யாபதத்துக்கு ப்ரம்ஹவித்தையைச் சொல்லும் கிரந்தமென பொருள் கொள்ளவேண்டுமென்பது பாஷ்யத்தின் கருத்து.

दर्शयति च वेदोऽपि विद्यैकत्वं सर्ववेदान्तेषु वेद्यैकत्वोपदेशात् 'सर्वे वेदा यत्पदमामनन्ति' (क० २।१५) इति। तथा 'एतं ह्येव बह्वृचा महत्युक्थे मीमांसन्त एतमग्नावध्वर्यव एतं महाव्रते छन्दोगा:' इति च। तथा 'महद्भयं वज्रमुद्यतम्' (क० ६।२) इति काठक उक्तस्येश्वरगुणस्य भयहेतुत्वस्य तैत्तिरीयके भेददर्शननिन्दायै परामर्शो दृश्यते 'यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते। अथ तस्य भयं भवति। तत्त्वेव भयं विदुषोऽमन्वनस्य' (तै० २।७।१) इति। तथा वाजसनेयके प्रादेशमात्रसंपादितस्य वैश्वानरस्य छान्दोग्ये सिद्धवदुपादानम् 'यस्त्वेतमेवं प्रादेशमात्रमभिविमानमात्मानं वैश्वानरमुपास्ते' (छा० ५।१८।१) इति। तथा सर्ववेदान्तप्रत्ययत्वेनान्यत्र विहितानामुक्थादीनामन्यत्रो-

---

(ப—ரை) உபாஸ்யமானது ஒன்ருக விருப்பதிலிருந்து உபாஸனமும் ஒன்றேதாஞகும் என வேதமானது **दर्शयति च** (தர்சயதி ச)=காண்பித்து மிருக்கிறது.

பாஷ்யம்.—"எல்லாவேதாந்தங்களும் எதை † யறியத்தகுந்ததாகச் சொல்லுகின்றனவோ" என்பதாய் வேதமானது எல்லாவேதாந்தங்களிலும் வேத்யமானது ஒன்றென வுபதேசிப்பதிலிருந்து வித்தையும் ஒன்றேயாகும் எனத் தெரிவித்திருக்கிறது. அதுபோலவே "இவரையேயன்றே பஹ்வ்ருசர்கள் (ருக்வேதிகள்) மஹத்தான உக்தத்தில் (சஸ்திரத்தில்) விசாரிக்கவெண்ணுகின்றனர். இவரை அத்வர்யுக்கள் (யஜுர்வேதிகள்) மஹத்தான அக்னியிலும் (அத்வர்யு செய்யுங்கர்மத்திலும்) இவரைச் சந்தோகர்கள் (ஸாமவேதிகள்) மஹாவ்ரதத்திலும் (ஸ்தோத்திரத்திலும்) விசாரிக்கவெண்ணுகின்றனர்" எனப் படிக்கப்படுகிறது. அவ்விதமே "உயரெடுக்கப்பட்ட வஜ்ராயுதம் போன்று (ப்ரம்ஹம்) மஹத்தான பயத்தைத் தரக்கூடியது" எனக் கடோபநிடதத்திற் சொல்லப்பட்ட பயஹேதுவாக விருத்தல் என்ற ஈஸ்வரகுணத்துக்குத் தைத்திரீயோபநிடதத்தில் "எது போழ்து இவன் இதனிடத்தில் (ப்ரம்ஹத்தினிடத்தில்) அற்பமாயுள்ள பேதத்தையும் பார்க்கின்றுனே அதுபோழ்து அவனுக்குப் பயம் (ஸம்ஸாரம்) உண்டாகிறது. அதுவே யன்றே யறியாதவனுன வித்வானுக்கு பயஹேதுவாகவாகிறது" என்றதால் பேததர்சனத்தை நிந்திக்கவேண்டி பராமர்சம் காணப்படுகிறது. அதுபோலவே ப்ருஹதாரண்யகத்தில் ப்ராதேச (ஒட்டையளவு) மாத்திரமாகக் கற்பிக்கப்பட்ட வைஸ்வாநரனுக்குச் சாந்தோக்கியத்தில் "(1) எவனெருவன் இவ்விதம் ப்ராதேசமாத்திரனுகவும் அபிவிமானனுகவும் இந்த வைஸ்வாநர ஆத்மாவை உபாஸிக்கிருனே" என்றதால் ஸித்தமாகவே எடுத்துக் கூறல் காணப்படுகிறது. அவ்விதமே எல்லாவேதாந்தங்களாலும் அறியப்படுவதுபற்றி வேறிடத்தில் விதிக்கப்பட்ட உக்

---

† சுருதியானது வேத்யம் ஒன்ருவதிலிருந்து நிர்க்குணப்ரம்ஹவித்தையின் ஐக்கியத்தைச் சொல்லுகிறது. ஆயினும், ப்ரகரணபாடத்தையொட்டி ஸகுணப்ரம்ஹவித்தைகளுக்குங்கூட எல்லாச் சாகைகளிலும் ஐக்கியமானது ஸித்திக்கிறது என வெண்ணி ஸூத்திரம் செய்யப்பட்டது என ராமாநந்த வியாக்கியானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) இந்தச் சுருதியின்பொருளை முதலாவது அத்தியாயம் 269-வது பக்கத்தில் பரக்கக் காண்க.

पासनविधानायोपादानात्प्रायदर्शनन्यायेनोपासनानामपि सर्ववेदान्तप्रत्ययत्वसिद्धिः॥४॥

२ उपसंहाराधिकरणम्। सू० ५

उपसंहारोऽर्थाभेदाद्विधिशेषवत्समाने च ॥ ५ ॥

एकोपास्तावनाहार्या आहार्या वा गुणाः श्रुतौ। अनुक्तत्वादनाहार्या उपकारः श्रुतैर्गुणैः ॥ १ ॥

श्रुतत्वादन्यशाखायामाहार्या अग्निहोत्रवत्। विशिष्टविद्योपकारः स्वशाखोक्तगुणैः समः ॥ २ ॥

தம் முதலியவற்றுக்கும் வேறிடத்திலுபாஸனத்தை விதிக்கவேண்டி உபதேசம் காணப்படுவதிலிருந்து அவற்றைப் பற்றிய உபாஸனங்களுக்கும் ஸர்வவேதாந்தங்களாலும் விதிக்கப்படும் தன்மையானது பூயோநுக்கிரஹ (வெகுவாக இருப்பதையே கிரஹிக்கவேண்டும் என்ற) நியாயத்தையொட்டி ஸித்திக்கிறது. (4)

ஒன்றாவது ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணம் முற்றிற்று.

உபஸம்ஹாராதிகரணம் 2.

(அ—கை) எல்லா வேதாந்தசாகைகளிலுமுள்ள வித்தையானது ஒன்றேயாகும் என விசாரிப்பதன் பலனை ஒரே ஸூத்திரங்கொண்ட இந்த அதிகரணத்தாலுபதேசிக்கிறார்.—

(ஸூ) உபஸம்ஹாரோ அர்த்தாபேதாத் விதிசேஷவத் ஸமாநே ச (5)

(ப—ரை) வேறிடத்திற் சொல்லப்பட்ட விக்ஞானகுணங்களுக்கு **समाने च** (ஸமாநே ச)=வேறிடத்திற் சொல்லப்பட்ட ஒரேமாதிரியான உபாஸனத்தில் **उप-संहार:** (உபஸம்ஹார:)=உபஸம்ஹாரமானது சேர்த்துக்கொள்ளுதலானது அவஶ்யமாக வாகிவிடுகிறது. **अर्थाभेदात्** (அர்த்தாபேதாத்)=பலன் ஒன்றாகவிருப்பதே அதன் காரணமாகும். **विधिशेषवत्** (விதிசேஷவத்)=விதிசேஷங்களான அக்னிஹோத்ராதி தர்மங்களுக்கு ஒரே அக்னிஹோத்ராதி கர்மங்களில் உபஸம்ஹாரம் செய்து கொள்ளுவது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காண்க.

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ஒரே உபாஸ்திவிஷயமாக வேறிடத்திற் சொல்லப்பட்ட குணங்களை வேறிடத்திற் சேர்த்துக் கொள்ளவேண்டுமா? அல்லது சேர்த்துக் கொள்ள வேண்டுவதில்லையா? என்பது ஸந்தேஹம். ஶ்ருதியில் ஓரிடத்திற் சொல்லப்பட்டவைமற்றவிடத்தில் சொல்லப்படாமைபற்றி அவ்விடத்தில் வேறிடத்திற் சொல்லப்பட்டகுணங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுவதில்லை. எவ்வளவு குணங்கள் எங்கு ஶ்ருதியிற் படிக்கப்பட்டனவோ அவற்றால் மட்டுமே அங்கு கூறப்பட்ட உபாஸனத்துக்கு உபகாரமானது ஏற்பட்டுவிடலாம் என்பது பூர்வ

इदं प्रयोजनसूत्रम्। स्थिते चैवं सर्ववेदान्तप्रत्ययत्वे सर्वविज्ञानानामन्यत्रोदितानां विज्ञानगुणानामन्यत्रापि समाने विज्ञान उपसंहारो भवति। अर्थाभेदात्। य एव हि तेषां गुणानामेकत्रार्थो विशिष्टविज्ञानोपकारकः स एवान्यत्रापि। उभयत्रापि हि तदेवैकं विज्ञानं तस्मादुपसंहारः। विधिशेषवत्। यथाहि विधिशेषाणामग्निहोत्रादिधर्माणां तदेवैकमग्निहोत्रादि कर्म सर्वत्रेत्यर्थाभेदादुपसंहरणमेवमिहापि। यदि हि विज्ञानभेदो भवेत्ततो विज्ञानान्तरनिबद्धत्वाद्गुणानां प्रकृतिविकृतिभावाभावाच्च न स्यादुपसंहारः। विज्ञानैकत्वे तु नैवमिति। अस्यैव तु प्रयोजनसूत्रस्य प्रपञ्चः सर्वाभेदादित्यारभ्य भविष्यति ॥ ५ ॥

பக்ஷம். ஶ்ருதியில் வேறுசாகையில் கூறப்பட்டிருப்பதுபற்றி வேறு சாகையிலும் அக்குணங்களை அக்னிஹோத்திரகர்மாவில் போலச் சேர்த்துக்கொள்ள வேண்டுவது அவஶ்யமே யாகும். சொந்தசாகையில் சொல்லப்பட்ட குணங்களுக்கும் வேறுசாகையில் சொல்லப்பட்ட குணங்களுக்கும் பிரதானமான வித்யோபகாரகத்வமானது ஒன்றாகவே இருக்கின்றது என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—இது பயனைச் சொல்லும் ஸூத்திரமாகும். எல்லா உபாஸனங்களும் எல்லாவேதாந்தங்களாலும் விதிக்கப்படுகின்றன வென்பது நிலைத்த பின்னர் வேறிடத்திற் சொல்லப்பட்ட விக்ஞானகுணங்களுக்கு வேறிடத்திலும் ஸமானமான (ஒரேமாதிரியாகவான) உபாஸனத்தில் உபஸம்ஹாரமானது (சேர்த்துக்கொள்ளுதலானது) ஏற்படுகிறது. பலன் ஒன்றாகவிருப்பதே அதன் காரணமாகும். அந்தக் குணங்களுக்கு ஒருவிடத்தில் ப்ரதானமான விக்ஞான உபகாரத்தைச் செய்தல் என்றபலன் எதுவோ அதேபலன்தான் வேறிடத்திலுமேற்படுகிறது. அந்த ஒரேவிக்ஞானமன்றோ இரண்டிடத்திலும் காணப்படுகிறது. ஆனது பற்றி உபஸம்ஹாரமானது ஏற்படுகிறது. விதிசேஷமானது போலவாம். அதாவது:—விதிசேஷங்களான அக்னிஹோத்ராதி தர்மங்களுக்கு அதேவொரு அக்னிஹோத்ராதி கர்மந்தான் எல்லாவிடத்திலும் என்பதுபற்றி (உபகாரலக்ஷணமான) பலன் ஒன்றாகிவிடுவதிலிருந்து உபஸம்ஹாரம் ஏற்படுவது எவ்விதமோ இவ்விதமே இங்குமாகும். விக்ஞானபேதமிருக்குமாயின் அப்பொழுது குணங்கள் வேறுவிக்ஞானத்தைச் சேர்ந்தனவாக விருப்பதுபற்றியும் ப்ரகிருதி விகிருதிபாவமில்லாமையாலும் அவற்றுக்கு உபஸம்ஹாரமேற்படமாட்டாது. விக்ஞானமொன்றாகவிருந்தாலோ இவ்விதமில்லை. இந்தப்ரயோஜனஸூத்திரத்துக்கே "ஸர்வாபேதாத்" என்றுதொடங்கி விஸ்தாரமானது சொல்லப்படப்போகிறது. (5)

இரண்டாவது உபஸம்ஹாராதிகரணம் முற்றிற்று.

அந்யதாத்வாதிகரணம் 3.

(ஸூ) அந்யதாத்வம்சப்தாத் இதிசேத்ந அவிசேஷாத் (6)

(ப-ரை) சாந்தோக்யம், ப்ருஹதாரண்யகம் இவ்விரண்டிலும் சொல்லப்

३ अन्यथात्वाधिकरणम् । सू० ३–८

अन्यथात्वं शब्दादिति चेन्नाविशेषात् ॥ ६ ॥

एका भिन्नाथवोद्गीथविद्या छान्दोग्यकाण्वयोः । एका स्यान्नामसामान्यात्संग्रामादिसमत्वतः ॥ १ ॥

उद्गीथावयवोंकार उद्गातेत्युभयोर्भिदा । वेद्यभेदेऽर्थवादादिसाम्यमत्राप्रयोजकम् ॥ २ ॥

वाजसनेयके 'ते ह देवा ऊचुर्हन्तासुरान्यज्ञ उद्गीथेनात्ययामेति' (बृ० १ । ३ । १) 'ते ह वाचमूचुस्त्वं न उद्गाय' (बृ० १ । ३ । २) इति प्रक्रम्य वागादीन्प्राणानसुरपाप्मविद्धत्वेन निन्दित्वा मुख्यप्राणपरिग्रहः पठ्यते—'अथ हेममासन्यं प्राणमूचुस्त्वं न उद्गायेति तथेति तेभ्य एष प्राण उदगायत्' (बृ० १ । ३ । ७) इति । तथा छान्दोग्येऽपि—

படும் உத்கீதவித்யைக்கு **अन्यथात्वम्** (அந்யதாத்வம்)=பேதமானது அறியத்தகுந்தது. ஏன்? **शब्दात्** (ஶப்தாத்)=பிருஹதாரண்யகத்தில் **त्वं न उद्गाय** (த்வம் ந உத்காய)=நீ ஔத்காத்ரம் என்ற கர்மத்தைச் செய்வாயாக என்றதால் ப்ராணனை உத்கீதத்துக்குச் கர்த்தாவாகவும், சாந்தோக்கியத்தில் **तमुद्गीथमुपासाञ्चक्रिरे** (தமுத்கீதமுபாஸாஞ்சக்ரிரே)=அந்த ப்ராணனை உத்கீதமாகவுபாஸித்தனர் என்றதால் ப்ராணனை உத்கீதரூபமாகவும் சொல்லும் சப்தமிருப்பதே அதன் காரணமாகும். **इति चेत्** (இதிசேத்)=என்றுலோ **न** (ந)=அது பொருந்தாது. **अविशेषात्** (அவிசேஷாத்)=இரண்டிடத்திலும் ஒரேவித்யைதான் சொல்லப்படுகிறது என்பதற்குரிய காரணங்கள் வெகுவாகவிருப்பதே அதன் காரணமாகும்.

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) சாந்தோக்யம், பிருஹதாரண்யகம் இரண்டிலுமுள்ள உத்கீதவித்யை ஒன்று? அல்லது வேறுபட்டதா? என்பது ஸந்தேஹம். இரண்டிடத்திலும் உத்கீதவித்யை என்றபெயர் ஒத்திருப்பதாலும், இந்திரியங்கள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டன வென்பதாய் சொல்லப்படும் இந்திரியங்களின் சண்டை முதலியன இரண்டிடத்திலும் பொதுவாக விருப்பதாலும் இரண்டிடத்திலுமுள்ள உத்கீதவித்யை ஒன்றேயாகும் என்பது பூர்வபக்ஷம். ஓரிடத்தில் உத்கீதாவயவமான ஓங்காரமென்றும், ஓரிடத்தில் உத்கீதகர்த்தா என்றுமாக ப்ராணன் சொல்லப்படுவதால் இரண்டும் வேறுபட்டதே யாகும். வேத்யமான (உபாஸ்யமான) பொருள் வேறுபடுங்கால் அர்த்தவாதாதிகள் ஸமமாகவிருப்பது வித்யை ஒன்றென்ற விஷயத்தில் காரணமாகவாகமாட்டாது என்பது **ஸித்தாந்தம்**. (எ—று)

பாஷ்யம்.—வாஜஸநேயக (ப்ருஹதாரண்யக) த்தில் "அந்தத்தேவர்கள் (ஸாத்விகங்களான இந்திரியவிருத்திகளுக்கு அபிமானிதேவதைகள்) இதுபோழ்து அஸுரர்களை (ரஜஸ்தமோ ரூபங்களான இந்திரியவிருத்திகளுக்கு அபிமானிதேவதைகளை) யாகத்தில் உத்கீதத்தினுல் (உத்கீதமெனப் பெயரிய ஸாமகானத்தினுல்) ஜயிப்போமாக எனச் சொல்லினர். அதுபோழ்து அந்தத்தேவர்கள் நீ உத்கானம் செய்வாயாக என வாகிந்திரியத்தைச் சொல்லினர்" என்று தொடங்கி வாகாதிகளான இந்திரியங்கள் ஆஸுரமான பாபத்தினுல் (காமத்தினுல்) கவரப்பட்டன

'तद्ध देवा उद्गीथमाजग्मुरनेनैनानभिभविष्याम:' (छा० १।२।१) इति प्रक्रम्येतरान्प्राणानसुरपाप्मविद्धत्वेन निन्दित्वा तथैव मुख्यप्राणपरिग्रहः पठ्यते—'अथ ह य एवायं मुख्यः प्राणस्तमुद्गीथमुपासाञ्चक्रिरे' (छा० १।२।७) इति। उभयत्रापि च प्राणप्रशंसया प्राणविद्याविधिरध्यवसीयते। तत्र संशय:—किमत्र विद्याभेदः स्यादाहोस्विद्विद्यैकत्वमिति। किं तावत्प्राप्तं, पूर्वेण न्यायेन विद्यैकत्वमिति। ननु न युक्तं विद्यैकत्वं प्रक्रमभेदात्। अन्यथा हि प्रक्रमन्ते वाजसनेयिनोऽन्यथा छन्दोगाः 'त्वं न उद्गाय' (बृ० १।३।२) इति वाजसनेयिन उद्गीथस्य कर्तृत्वेन प्राणमामनन्ति। छन्दोगास्तूद्गीथत्वेन 'तमुद्गीथमुपासाञ्चक्रिरे (छा० १।२।७) इति। तत्कथं विद्यैकत्वं स्यादिति चेत्। नैष दोषः। न ह्येतावता विशेषेण विद्यैकत्वमपगच्छति। अविशेषस्यापि बहुतरस्य प्रतीयमान-

---

என்பதாய் அவற்றை நிந்தித்து விட்டு "பிறகு ஆஸ்யனென (முகத்தின் மத்தியிலிருப்பவனை) இந்தப்ராணனை நோக்கி (ப்ராணாபிமானிதேவதையை நோக்கி) நீ எங்கள்விஷயத்தில் உத்கானஞ் செய்வாயாக என்று சொல்லின. அவ்விதமேயாகட்டுமென முக்கியப்ராணன் அந்த வாகாதி இந்திரியங்களையும் பொருட்டு உத்கானஞ்செய்தது" என்றதால் முக்கிய ப்ராணனுடைய பரிக்ரஹமானது படிக்கப்படுகிறது. அது போலவே சாந்தோக்கியத்திலும் "ஒருவரை யொருவர் பங்கப்படுத்தும் நோக்கங்கொண்டு தொடங்கப்பட்ட யுத்தத்தில் தேவர்கள் இதனால் அஸுரர்களை ஜயிப்போம் என்பதாய் உத்கீதத்தையனுஷ்டித்தனர்" என்று தொடங்கி வேறுப்ராணன்களை ஆஸுரபாப ஸம்பந்தம்பெற்றவர்களென்பதாய் நிந்தித்து "பிறகு யாதொரு இந்த முக்கியப்ராணனுண்டோ அவனை உத்கீதமாக உபாஸித்தனர்" என்பதாய் முக்கியப்ராண பரிக்ரஹமானது படிக்கப்படுகிறது. இரண்டிடத்திலும் ப்ராணனைப்பற்றிய ப்ரஸம்ஸை (புகழுரை) இருப்பதனால் ப்ராணவித்யையின் (உபாஸ்தியின்) விதியானது நிஸ்சயிக்கப்படுகிறது. அங்கு ஸம்சயமுண்டாகிறது. இவ்விடத்தில் வித்யைவேறுபடுமா? அல்லது வித்யையொன்றுபடுமா? என்றும். முந்தின அதிகரணத்திற் சொல்லிய நியாயத்தினால் வித்யை ஒன்றுதான் என வேற்படுகிறது.

சங்கை—தொடக்கம் வேறுபட்டிருப்பதால் வித்யை யொன்றுபட்டதாகவாகமுடியாது. வாஜஸநேயிகள் வேறுவிதமாகவும், சந்தோகர்கள் வேறுவிதமாகவும் தொடங்குகின்றனர். அதாவது:—"நீ எங்களுக்கு உத்காநத்தைச் செய்" என்பதாய் வாஜஸநேயிகள் ப்ராணனை உத்கீதத்துக்குக் கர்த்தாவாகச் சொல்லுகின்றனர். சந்தோகர்களோ "அவனை (ப்ராணனை) உத்கீதமாக உபாஸித்தனர்" என்பதாய் உத்கீதமாக ப்ராணனைச் சொல்லுகின்றனர் என்பதாம். இவ்விதமிருக்க வித்யை ஒன்று என்று எவ்விதமேற்படும் என்றாலோ?

உத்தரம்—இது தோஷமாகாது. இந்த விசேஷத்தினால் (வேற்றுமையினால்) மட்டும் வித்யையின் ஏகத்வமானது ஓடிப்போய் விடாது. பலதரப்பட்ட வேற்று

त्वात्। तथाहि—देवासुरसङ्ग्रामोपक्रमत्वमसुरात्ययाभिप्राय उद्गीथोपन्यासो वागादिसङ्कीर्तनं तन्निन्दया मुख्यप्राणव्यपाश्रयस्तद्वीर्याच्चासुरविध्वंसनमश्मलोष्टनिदर्शनेनेत्येवं बहवोऽर्था उभयत्राप्यविशिष्टाः प्रतीयन्ते। वाजसनेयकेऽपि चोद्गीथसामानाधिकरण्यं प्राणस्य श्रुतम्—'एष उ वा उद्गीथः' (बृ० १। ३। २३) इति। तस्माच्छान्दोग्येऽपि कर्तृत्वं लक्षयितव्यम्। तस्माच्च विद्यैकत्वमिति ॥ ६ ॥

न वा प्रकरणभेदात्परोवरीयस्त्वादिवत् ॥ ७ ॥

न वा विद्यैकत्वमत्र न्याय्यम्। कस्मात्। प्रकरणभेदादिति प्रक्रमभेदादित्यर्थः।

மையின்மையின்காரணமும் காணவே படுகிறது. அதாவது:—தேவாஸுர ஸங்கிராமத்தின் உபக்ரமம், அஸுரர்களை விரட்டுவதில் நோக்கம், உத்கீதத்தின் உபன்னியாஸம், வாகாதிகளைச் சொல்லல், அவற்றை நிந்திக்கும் வாயிலாக முக்கிய ப்ராணனை யாஶ்ரயித்தல், அம்முக்ய ப்ராணனுடைய வீர்யத்தினல் கற்பாறையில் மோதின மண்ணுங்கட்டி நாசமடைவதைத் திருஷ்டாந்தமாகக் காட்டும்வாயிலாக ஆஸுரமான பாபத்தை யழித்தல், என்ற இம்மாதிரியான பலஸமாசாரங்கள் இரண்டிடங்களிலும் பொதுவாகவே காணப்படுகின்றன. பிருஹதாரண்யகத்திலுங் கூட ப்ராணனுக்கு உத்கீத ஸாமானாதிகரண்யமானது (உத்கீத சப்தத்தாற் சொல்லப்படுதலானது) "இவனே (ப்ராணனே) தான் உத்கீதம்" என்ற விடத்திற் காணப்படுகிறது. * ஆனதுபற்றிச் சாந்தோக்கியத்திலுங்கூட ப்ராணனுக்கு லக்ஷணைமுறையால் கர்த்திருத்வத்தைக் கொள்ளவேண்டுவதவஶ்யமாகிறது. ஆகவே வித்யை யொன்று பட்டதே யாகும். (6) (எ—று)

(அ—கை) இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது—

(ஸூ) நவாப்ரகரணபேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்(7)

(ப—ரை) இவ்விடத்தில் [**विद्यैकत्वम्** (வித்யைகத்வம்)=ஒரேவித்யை எனக் கொள்ளுவது] **नवा** (நவா)=பொருத்தமுள்ளதாகவாகாது. **प्रकरणभेदात्** (ப்ரகரணபேதாத்)=தொடக்கம் வேறுபட்டிருப்பதே அதன் காரணமாகும். **परोवरीयस्त्वादिवत्** (பரோவரீயஸ்த்வாதிவத்)=பரோவரீயஸ்த்வம் முதலிய குணங்களுடன் கூடின உத்கீதோபாஸனமானது, அதே இடத்திற் சொல்லப்படும் வேறு உத்கீதோபாஸ்தியைவிட வேறுபட்டதாக எவ்விதம் கொள்ளப்படுகிறதோ அவ்விதமே இங்கும் சாண்க. (7) (எ—று)

பாஷ்யம்.—இவ்விடத்தில் வித்யைகத்வமானது நியாயமுள்ளதாக வாகாது. வித்யா பேதமேதான் நியாயமுள்ளதாகவாகும். என்? ப்ரகரணபேதத்தாலென்றும். ப்ரக்ரமத்தின் (தொடக்கத்தின்) பேதமிருப்பதால் என்பது அதன் பொ

---

* ஆகவே பூர்வபக்ஷத்தில் ப்ராணனிடத்தில் உத்கீதத்வம், உத்காதிருத்வம் இரண்டிற்கும் ஸமுச்சயத்தை அங்கீகரிக்கவேண்டும் என்பது பாஷ்யத்தின் கருத்தென ப்ரம்ஹ வித்யாபரணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

तथाहि—इह प्रक्रमभेदो दृश्यते। छान्दोग्ये तावत्—'ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत' (छा० १। १। १) इत्येवमुद्गीथावयवस्योङ्कारस्योपास्यत्वं प्रस्तुत्य रसतमादिगुणोपव्याख्यानं तत्र कृत्वा 'अथ खल्वेतस्यैवाक्षरस्योपव्याख्यानं भवति' (छा० १। १। १०) इति पुनरपि तमेवोद्गीथावयवमोङ्कारमनुवर्त्य देवासुराख्यायिकाद्वारेण तम् 'प्राणमुद्गीथमुपासाञ्चक्रिरे' (छा० १। २। २) इत्याह। तत्र यद्युद्गीथशब्देन सकला भक्तिरभिप्रेयेत तस्याश्च कर्तोद्गातर्त्विक्तत उपक्रमश्चोपरुध्येत लक्षणा च प्रसज्येत। उपक्रमानुरोधेन चैक-

---

ருள். அதாவது:—இங்கு (இவ்விருஸ்தலங்களிலும்) ப்ரக்ரமத்தின் (தொடக்கத்தின்) பேதமானது காணக்கிடக்கிறது. சாந்தோக்கியத்திலோ "ஓம் என்ற உத்கீதத்தின் அவயவமான இந்த அக்ஷரத்தை (எழுத்தை) உபாஸிப்பாயாக" என இவ்விதம் உத்கீதாவயவமான ஓங்காரத்துக்கு உபாஸ்யத்துவத்தைச் சொல்லத் தொடங்கி அந்த ஓங்காரத்தினிடத்தில் ரஸதமத்வம், ஆப்தி, ஸமிருத்தி, என்ற குணங்களை "பிறகு இதே அக்ஷரத்துக்கு உபவ்யாக்யானம் (இத்தகைய உபாஸனம் இத்தகைய மஹிமை யுள்ளது, என்ற விளக்கம்) பின்வருமாறு ஏற்படுகின்றது" என்றதாலுபதேசித்துத் திரும்பவும் அந்த உத்கீதாவயவமான ஓங்காரத்தையே அநுவர்த்தித்துக் கொண்டு (திரும்பவும் வாங்கிக்கொண்டு) தேவாஸுரர்கள் சண்டையிடத் தொடங்கினர் என்ற ஆக்யாயிகையைச் (கதையை) சொல்லும் வாயிலாக அந்த "உத்கீதாவயவமான ஓங்காரத்தை ப்ராணனுக வுபாஸித்தனர்" என்பதாய்ச் சொல்லப்படுகிறது. அவ்விடத்திலுள்ள உத்கீத என்ற சப்தத்தால் எல்லா * ஸாமபக்தியும் (ஸாமகானப்பிரிவும்) சொல்லப்படுகிறதென்றும், அந்த எல்லாப்பக்திகளையும் கானஞ் செய்யும் ருத்விக்கான உத்காதாவும் சொல்லப்படுகிருன் என்றும் கருதப்படுமானுல் அப்பொழுது ஓங்காரோபாஸ்தியைச் சொல்லவெண்ணங்கொண்ட உபக்கிரமம் வீணுவதுடன், உத்கீதம் என்ற பதத்தில் †கர்த்

---

* யாககாலத்தில் தேவதையை ஸ்துதிப்பதற்காக ஸாமத்தைக் கானஞ் செய்யும்கால் அதை ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதநம் என ஐந்து பக்திகளாகப் (பிரிவுகளாகப்) பிரித்து கானஞ்செய்யவேண்டுமென விதியிருக்கிறது. அந்த ஐந்து பக்திகளுள் இரண்டாவது பக்தியான (ஸாமகானப்பிரிவான) உத்கீதத்தைக் கானஞ்செய்யுங்கால் ஒவ்வொரு பதங்களுடனும் ஓம் என்ற ப்ரணவத்தைச் சேர்த்துக்கொண்டு அதாவது:—"ஓம் தத்ஸவிதுர்வரேணியோம், ஓம் பார்கோ தேவஸ்ய தீமாஹி, ஓம் தியோ யோ ந: ப்ரசோ என்ற மாதிரியாகக்கானஞ்செய்யுமிடத்தில் ஒவ்வொரு பதத்துக்குமிடையிலுள்ள ஓம் என்ற ப்ரணவமானது உத்கீதமெனச் சொல்லப்படுகிறது. ஆயினும் உத்கீதமென்ற பக்தியின் (ஸாமகானப்பிரிவின்) இடையிலுள்ள ஓங்காரத்தில் ப்ராணபுத்தியோ, ப்ரம்ஹபுத்தியோ, செய்யவேண்டுமென்பது அதன் பொருள். ஆகவே உத்கீதம் என்று சுருதி சொல்லியிருப்பதைக் கொண்டு 1-வதான ப்ரஸ்தாவபக்தி, 3-வதான ப்ரதிஹாரபக்தி, 4-வதான உபத்ரவபக்தி 5-வதான நிதநபக்தி இவைகளும் கிரஹிக்கப்படுகிறதென்றும், அந்த எல்லாப் பக்திகளை கானஞ்செய்யும் ருத்வித் உத்காதா என்று சொல்லப்படுகிருன் என்றும் கொள்ளப்படுமானுல் உபக்கிரமத்துக்கு விரோதம் வருவதுடன் லக்ஷணையும் சொல்லவேண்டி வரும் என்பது பாஷ்யத்தின் கருத்து.

† ஓமித்யேததக்ஷா முத்கீதமுபாஸீத எனத் தொடக்கத்திலுள்ள உத்கீத என்ற

स्मिन्वाक्य उपसंहारेण भवितव्यम्। तस्मादत्र तावदुद्गीथावयव ओङ्कारे प्राणदृष्टिरुपदिश्यते। वाजसनेयकेतूद्गीथशब्देनावयवग्रहणे कारणाभावात्सकलैव भक्तिरावेद्यते। 'त्वं न उद्गाय' (बृ० १। ३। २) इत्यपि तस्याः कर्तोद्गातर्त्विक्प्राणत्वेन निरूप्यत इति प्रस्थानान्तरम्। यदपि तत्रोद्गीथसामानाधिकरण्यं प्राणस्य तदप्युद्गातृत्वेनैव दिदर्शयिषितस्य प्राणस्य सर्वात्मत्वप्रतिपादनार्थमिति न विद्यैकत्वमावहति। सकलभक्तिविषय एव च तत्राप्युद्गीथशब्द इति वैषम्यम्। नच प्राणस्योद्गातृत्वमसंभवेन हेतुना परित्यज्यत उद्गीथभाववदुद्गातृभावस्याप्युपासनार्थत्वेनोपदिश्यमानत्वात्। प्राणवीर्येणैव चोद्गातौद्गात्रं करोतीति नास्त्यसंभवः। तथाच तत्रैव श्रावितम्—'वाचा च ह्येव स प्राणेन चोदगायत्' (बृ० १। ३। २४) इति। नच विवक्षितार्थभेदेऽवगम्यमाने वाक्यच्छायानुकारमात्रेण समा-

---

திருலக்ஷணையும் செய்யவேண்டிவரும். ஒரு வாக்கியத்தில் உபக்கிரமத்தை யொட்டியே தான் உபஸம்ஹாரமும் (அதன் முடிவும்) இருக்கவேண்டுவது அவஸ்ய மாகும். ஆகவே இவ்விடத்தில் (சாந்தோக்கியத்தில்) உத்கீதாவயவமான ஓங்காரத்தில் ப்ராணபுத்தி செய்யவேண்டுவதாக வுபதேசிக்கப்படுகிறது. வாஜஸநேயகத்திலோ உத்கீதசப்தத்தால் அதனுடைய அவயவத்தைக் கிரஹிப்பதற்குரிய காரணமில்லாமைபற்றி எல்லாஸாமபக்தியுமே அறிவிக்கப்படுகிறது "நீ உத்கானஞ் செய்வாயாக" என்றதால் அந்த எல்லாப் பக்திகளுக்கும் (ஸாமாகானஞ் செய்யும் முறைக்கும்) கர்த்தாவான (எல்லா ஸாமபக்திகளையும் கானஞ்செய்கிற) உத்காதாவாகிற ருத்விக்கானவன் ப்ராணனாகச் சொல்லப்படுகிறான் என்பது பற்றி இங்கு உபதேசிக்கும் முறை வேறுவிதமாகக் காணப்படுகிறது. பிருஹதாரண்யகத்தில் "இந்த ப்ராணனே தான் உத்கீதம்" என்பதாய் ப்ராணன் உத்கீத என்ற பதத்தாற் சொல்லப்படுவதாக யாதொன்று சொல்லப்பட்டதோ அதுவும் உத்காதாவாகவே சொல்ல விரும்பப்பட்ட ப்ராணனுக்கு ஸர்வாத்மத்வத்தை ப்ரதிபாதிக்க (விளக்க) வேண்டியே. ஆதலால் அது வித்யை ஒன்றென்பதைச் சொல்ல மாட்டாது. அவ்விடத்திலுள்ள உத்கீதசப்தமானது ஸாமபக்தியாவையுமே விஷயமாகக் கொண்டது என்பது பற்றி வைஷம்யமிருக்கிறது. மேலும் ப்ராணனுக்கு உத்காதாவாக விருக்குந்தன்மையானது ஸம்பவிக்க முடியாது என்ற காரணத்தால் பரித்யாகஞ் செய்யக்கூடியது மன்று. ப்ராணனுக்கு உத்கீதபாவம் போலவே உத்காதாவாக விருக்குந்தன்மையும் உபாஸனைக்கு வேண்டி உபதேசிக்கப் படுவதாக விருப்பதே அதன் காரணமாகும். ப்ராணனுடைய வீர்யத்தை (வலுவைக்) கொண்டே உத்காதாவானவன் ஔத்காத்ரம் என்ற கர்மாவைச் செய்வதால் இது ஸம்பவிக்காது என்பது மில்லை. அவ்விதமே அதே இடத்தில் "அந்த உத்காதாவானவன் வாக்கினாலும் ப்ராணனாலுமே உத்கானஞ் செய்தான்" எனச்

பதத்தால் உத்கீதபக்தியின் அவயவமான ஓங்காரமென்ற எழுத்தை ப்ரம்ஹமாக உபாஸிக்கவேண்டும் என்று இயற்கையாகக் கிடைக்கும் பொருளை விடுத்து உத்கீதம் என்பதற்கு ஸாமகானஞ் செய்பவர் என்பதாய் லக்ஷணைமுறையை யாசிரயித்துப் பொருள் கொள்ளவேண்டிவரும். இதுவோ ஙியாயமாகவாகாது என்பது கருத்து.

नार्थत्वमध्यवसातुं युक्तम्। तथाह्यभ्युदयवाक्ये पशुकामवाक्ये च—'त्रेधा तण्डुलान्विभ-

சொல்லப்பட்டு மிருக்கிறது. மேலும், சாஸ்திரம் சொல்ல விருப்பங்கொண்ட பொருளின் பேதமானது காணப்படுங்கால் வாக்கியத்தின் போக்கு ஒத்துவருவது போலக் காணப்படுவதைக் கொண்டுமட்டும் ஸமானமான பொருளுள்ள தன்மையை நிஶ்சயிப்பது யுக்தமாகவு மாகாது. அவ்விதமே * அப்யுதய வாக்யத்தி

*''விவா ஏதம் ப்ரஜயா பசுபிரர்த்தயதி, வர்த்தயத்யஸ்ய ப்ராத்ருவ்யம்,யஸ்ய ஹவிர்நிருப்தம் புரஸ்தாச்சந்த்ரமா அப்யுதேதி த்ரேதாதண்டுலாந்விபஜேத் யே மத்ய மா:ஸ்யு: தாநக்நயே தாத்ரே புரோடாசமஷ்டாகபாலம் குர்யாத், யேஸ்தவிஷ்ட்டா: தாநிந்த்ராயப்ரதாத்ரே ததந் சரும், யேணிஷ்ட்டாஸ்தாந்விஷ்ணவே சிபிவிஷ்டாய ச்ருதே சரும்'' என்பது அப்யுதயவாக்கிய மெனப்படும். இதன் பொருள் பின் வருமாறு—எந்த யஜமானன் சதுர்த்தசீ தினத்தன்று அமாவாஸ்யை எனப் பிரமித்து பிரதமைதினம் செய்யவேண்டிய தர்சம் என்ற கர்மத்துக்கு வேண்டிப் பிரவிருத்தித்து முதல்நாளே தர்சகர்மத்தின் தேவதைகளான அக்னியாதிகளையும் பொருட்டு தண்டுலம் (அரிசி) தயிர், பால் இவைகளாகிற ஹவிஸ்ஸை நிர்வாபம் (பிரித்தலை) செய்கின்ருனே அவ்விதம் அவன் நிர்வாபஞ்செய்தபின்னர் சந்திரனுதயத்தை யடைவானுயின், காலத்தைத் தவருக எண்ணின குற்றத்துக்காக அந்த யஜமானனை நிர்வாபம் செய்த அந்த ஹவிஸ்ஸே ப்ரஜைகளைவிட்டுப் பிரித்து விடுவதுடன் சத்துருக்களையும் இவனுக்கு விருத்திசெய்து விடுகிறது. ஆகவே இந்த யஜமானன் மத்யமம், ஸ்தவிஷ்டம், அணிஷ்டம் என மூன்றுவிதமாக விருக்கின்ற அரிசிகளையும், தயிர் பால் இவைகளையும் அக்னியாதி தேவதைகளினின்றும் விபாகஞ்செய்தல் வேண்டும். அவ்விதம் பிரித்து தாத்ருத்வம் முதலிய குணங்களுடன் கூடினவர்களும் தர்சம் என்ற கர்மத்தின் தேவதைகளைக் காட்டிலும் வேறுபட்டவர்களுமான அக்னியாதிதேவதைகளையும் பொருட்டு நிர்வாபஞ் செய்யவேண்டும் என்றும். அந்தப் பங்குகளுள் ஸ்தூலமான தண்டுலத்தாலாயசருவைத் தயிரிலும், நுட்பமான (சிறிதான) தண்டுலசருவைப் பாலிலும், தயாரிக்கவேண்டும் என்பது அதன் பொருளாம். இந்த விடத்தில் காலமாறுபாடுரூபமான அபராதம் நேர்ந்த காலத்தில் வேறுதேவதையுடன் கூடினதும், ப்ராயச்சித்தரூபமாக வானதும்,தர்சம் என்ற கர்மத்தை விடவேறுபட்டதுமான கர்மாவானது விதிக்கப்படுகிறது எனப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ''யேமத்யமா'' என்ற தாதிவாக்கியத்தால் தண்டுலங்களின் மூன்றுபங்கானபிரிவை அநுவாதஞ் செய்து கொண்டு, ''விபஜேத்'' என்றதால் ஹவிஸ்ஸுக்கு ப்ரகிருதமான தர்சகர்மதேவதையைவிட்டுப் பிரித்தலைமட்டும் செய்து அந்தத் தர்சம் என்ற கர்மத்திலேயே வேறுதேவதையின் ஸம்பந்தம் மட்டும் விதிக்கப்படுகிறதே யொழிய தனியான தொருகர்மம் விதிக்கப்படவில்லை என ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே அப்யுதயவாக்கியத்தில் காலமாறுபாட்டுடன் தொடக்கம் காணப்படுவது கொண்டு நிர்வாபஞ்செய்த ஹவிஸ்ஸை முன்னர் ஸங்கல்பிதமான தேவதையினின்றும் பிரித்தல் மட்டும் உபதேசிக்கப்பட்டதாக மட்டுந்தான் தீர்மானிக்கப்படுகிறது. பசு காமவாக்கியத்திலோ வெனில் நிர்வாபம் செய்யப்பட்ட தண்டுலம் முதலியவற்றுள் மிக்க ஸ்தூலமான பாகங்களை ஸநிமான் என்ற குணமுள்ள அக்னியைக் குறித்து அஷ்டாகபாலத்தில் (எட்டுமடக்கில்) வைத்து ஸம்ஸ்காரஞ்செய்து புரோடாசத்தை நிர்வாபஞ் செய்யவேண்டுமென்றும், நடுத்தரமான தண்டுல பாகங்களை சிபிவிஷ்டர் என்ற குணமுள்ள விஷ்ணு என்ற தேவதையைக் குறித்து காய்ச்சின பாலில் சருவாகச்செய்து நிர்வாபஞ் செய்யவேண்டும்

जेद्ये मध्यमा: स्युस्तानग्नये दात्रे पुरोडाशमष्टाकपालं कुर्यात्' इत्यादिनिर्देशसाम्येऽप्युपक्रमभेदादभ्युदयवाक्ये देवतापनयोऽध्यवसित:, पशुकामवाक्ये तु यागविधि:। तथेहाप्युपक्रमभेदाद्विद्याभेद:। परोवरीयस्त्वादिवत्। यथा परमात्मदृष्ट्यध्याससाम्येऽपि 'आकाशो ह्येवैभ्यो ज्यायानाकाश: परायणम्' (छा० १।९।१) 'स एष परोवरीयानुद्गीथ: स एषोऽनन्त:' (छा० १।९।२) इति परोवरीयस्त्वगुणविशिष्टमुद्गीथोपासनमक्ष्यादि-

---

லும், பசு காமவாக்கியத்திலும் "தண்டுலங் (அரிசி) களை மூன்றுபங்காகப் பிரிக்கவேண்டும். அவற்றுள் நடுத்தரமான பங்குகள் எவையுண்டோ அவற்றை தாத்ருத்வம் என்றகுணமுள்ள அக்னியின் பொருட்டு அஷ்டாகபால புரோடாசமாக்கிக் (எட்டுமடக்கில் வைத்து ஸம்ஸ்காரஞ்செய்யப்பட்ட புரோடாசமாகச் செய்து) கொள்ளவேண்டும்" என்ற தாத்யுபதேசத்தின் ஸாம்யமிருந்தபோதிலுங்கூட அப்யுதயவாக்கியத்தில் உத்தேஶ்யதேவதையின் பரித்யாகமானது நிஶ்சயிக்கப்பட்டிருக்கிறது. பசு காமவாக்கியத்திலோயாகவிதியானது நிஶ்சயிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே இங்கும் உபக்ரமபேதத்தால் வித்தையின் பேதமானது ஏற்படுகிறது. பரோவரீயஸ்த்வாதி போலவே இதுவுமாகும். அதாவது:—உத்கீதத்தில் பரமாத்ம திருஷ்டி செய்யவேண்டும் (உத்கீதத்தைப் பரமாத்மாவாக வுபாஸிக்கவேண்டும்) என்பது பொதுவாக விருந்த போதிலுங்கூட "ஆகாசமே யன்றோ (ஆகாசமெனப் பெயரிய பரமாத்மாவே அன்றோ) இவற்றைக் காட்டிலும் மேலானவர். ஆகாசமே பராயணம் (முக்கியமான ப்ராப்த்திஸ்தானம்)" என்றும், "அந்த இந்த பரோவரீயானே (மேலானவற்றுக்கெல்லாம் மேலானவரே அதாவது: பரமாத்மாவே) உத்கீதமாகும். அந்த இந்த உத்கீதம் அநந்தனும் (அநந்தனான பரமாத்மாவும்) ஆகும்" என்று மானவிடத்தில் பரோவரீயஸ்த்வம் என்ற குணவிசிஷ்டமான உத்கீதோபாஸனமானது அக்ஷி (கண்) ஆதித்யன் (ஸூரியன்) முதலியவற்றை யடைந்த ஹிரண்யஶ்மஶ்ருத்வம் (தங்கம் போன்ற மீசையை யுடையவராகவிருத்தல்) முதலிய குணங்களுடன் கூடின உத்கீதோபாஸனத்தை விடவேறுபட்டதாக வாவது எவ்விதமோ அவ்விதமே இங்கும் கொள்ளவேண்டும் என்னும்

என்றும், தண்டுலத்தின் நுட்பமான பங்குகளை ப்ரதாத்ருத்வம் என்ற குணமுள்ள இந்திரன் என்ற தேவதையைக் குறித்து தயிரில் தயாரித்த சருவை நிர்வாபஞ் செய்யவேண்டும் என்றுமான உபதேசமானது அப்யுதயவாக்கியத்துடன் ஒத்ததாகக் காணப்பட்ட போதிலுங்கூட "எவனுக்குப் பசுவில் விருப்பமிருக்கிறதோ அவன் அமாவாஸ்யையை (தர்சகர்மத்தைச்) செய்துவிட்டு கன்றுகளை அதன் தாயை விட்டுப் பிரித்துக் கட்டவேண்டும்" என்பதாய் நித்யகர்மாவான தர்சத்தைச் செய்துவிட்டுத் திரும்பவும் பால் கரக்கவேண்டி வத்ஸங்களைத் தாயைவிட்டுப் பிரித்துக் கட்டவேண்டும் என்று விதியுடன் உபக்கிரமித்திருப்பதால் பசுவில் விருப்பமுள்ள யஜமானனுக்குத் தனிப்பட்ட தொருயாகம் விதிக்கப்படுகிறதே யொழிய அப்யுதயவாக்கியத்தில் போல தர்சகர்மத்திலேயே வேறுதேவதை விதிக்கப்படுவதில்லை. ஆகவே அது போலவே இவ்விடத்திலும் நிர்த்தேசம் ஒற்றிருப்பதானது வித்யை ஒன்று என்பதற்குக் காரணமாக வாகமாட்டாது என்பது பாஷ்யத்தின் கருத்து.

त्यादिगतहिरण्यश्मश्रुत्वादिगुणविशिष्टोद्गीथोपासनाद्भिन्नम् । नचेतरेतरगुणोपसंहार एकस्यामपि शाखायां तद्वच्छाखान्तरस्थेष्वप्येवञ्जातीयके षूपासनेष्विति ॥ ७ ॥

संज्ञातश्चेत्तदुक्तमस्ति तु तदपि ॥ ८ ॥

अथोच्येत संज्ञैकत्वाद्विद्यैकत्वमत्र न्याय्यमुद्गीथविद्येति ह्युभयत्राप्येका संज्ञेति । तदपि नोपपद्यते । उक्तं ह्येतत्—'न वा प्रकरणभेदात्परोवरीयस्त्वादिवत्' (ब्र० सू० ३ । ३ । ७) इति । तदेव चात्र न्याय्यतरं श्रुत्यक्षरानुगतं हि तत्संज्ञैकत्वं तु श्रुत्यक्षरबाह्यमुद्गीथशब्दमात्रप्रयोगाल्लौकिकैर्व्यवहर्तृभिरुपचर्यते । अस्ति चैतत्संज्ञैकत्वं प्रसिद्धभेदेष्वपि परोवरीयस्त्वाद्युपासनेषूद्गीथविद्येति । तथा प्रसिद्धभेदानामप्यग्निहोत्रदर्शपूर्णमासादीनां का-

---

சாகை ஒன்றாக விருப்பினுங்கூட ஓரிடத்திற் சொல்லிய குணங்களுக்கு அதே சாகையில் வேறிடத்தில் உபஸம்ஹாரமானது எவ்விதம் கிடையாதோ அதுபோல வே வேறுசாகைகளிற் சொல்லிய இம்மாதிரியான உபாஸனங்களிலும் குணுப ஸம்ஹாரம் கண்டுகொள்ளவேண்டுவது அவஸ்யமாகிறது என்றும். (7) (எ—று)

(ஸூ) ஸம்க்ஞாத:சேத் ததுக்தம் அஸ்திது ததபி (8)

(ப—ரை) **संज्ञातश्चेत्** (ஸம்க்ஞாதஃசேத்)=உத்கீதவித்யை என்ற பெயர் இரண்டிடத்திலும் ஒன்றாக விருப்பதிலிருந்து இரண்டுவித்யையும் ஒன்றேதானுகும். எனின்? **तदुक्तम्** (ததுக்தம்)=அவ்விஷயத்தில் "நவாப்ரகரணபேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்" என்ற முந்தின ஸூத்திரத்தால் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. **तदपि** (ததபி)=அந்த ஒரே விதமானபெயரும் **अस्ति तु** (அஸ்திது)=ப்ரஸித்தமான பேதமுள்ளவைகளான பரோவரீயஸ்த்வம் முதலிய குணவிசிஷ்ட உபாஸனங்களில் உத்கீதவித்யை என்பதாய் காணவே படுகிறது. (8) (எ—று)

பாஷ்யம்.—பெயரொன்றாக விருப்பதுபற்றி வித்யையும் இங்கு ஒன்று என்பதுதான் நியாயமானதாக வாகும். உத்கீதவித்யை என்றல்லவோ இரண்டிடத்திலும் ஒரேபெயர் காணப்படுகிறது எனச் சொல்லப்படுமானல் அதுவும் பொருந்தாது. "நவா ப்ரகரணபேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்" என்ற முந்தின ஸூத்திரத்தில் இதற்குப்பதில் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? அதுவே தான் (வித்யாபேதம் தான்) இங்கு நியாயமானதாகவாகும். ஶ்ருதியிலுள்ள அக்ஷரத்துக்கு ஒத்ததாகவன்றோ அது ஆகிறது. ஸக்ஞை ஒன்றாயிருப்பதோவெனில் ஶ்ருதியின் அக்ஷரங்களுக்கு வெளியிலுள்ளதாகவும், உத்கீதம் என்ற சப்தப்ரயோகம் மட்டும் செய்திருப்பதைக் கொண்டு உலகிலுள்ள வியவஹாரஞ்செய்கின்றவர்களால் உபசாரமுறையாற் கூறப்படுவதாகவு மிருக்கிறது. ப்ரஸித்தமான பேதமுள்ள பரோவரீயஸ்த்வம் முதலியகுணம் வாய்ந்த உபாஸனங்களில் உத்கீத வித்யை என்பதாய் ஸக்ஞை ஒன்றாகவே காணவும் படுகின்றது. அதுபோலவே ப்ரஸித்தமான பேதமுள்ளவைகளான அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம் முதலியன காடகமென்ற ஒரேகிரந்தத்தில் படிக்கப்படுவதுபற்றி காடக மென ஒரே பெயருள்ளனவாகவே காணவும்படுகிறது. அவ்விதமே இங்கும் ஆகலாம். எந்த

ठकैकग्रन्थपरिपठितानां काठकसंज्ञैकत्वं दृश्यते तथेहापि भविष्यति। यत्र तु नास्ति कश्चिदेवञ्जातीयको भेदहेतुस्तत्र भवतु संज्ञैकत्वाद्विद्यैकत्वं यथा संवर्गविद्यादिषु॥ ८॥

४ व्याप्त्यधिकरणम्। सू० ९

व्याप्तेश्च समञ्जसम्॥ ९॥

किमध्यासोऽथवा बाध ऐक्यं वाथ विशेष्यता। अक्षरस्यात्र नास्त्यैक्यं नियतं हेत्वभावतः॥ १॥

वेदेषु व्याप्त ओंकार उद्गीथेन विशिष्यते। अध्यासादौ फलं कल्प्यं सन्निकृष्टांशलक्षणा॥ २॥

விடத்தில் இதுபோன்ற வேற்றுமைக்குரிய காரணமொன்று மில்லையோ அவ்விடத்தில் ஸம்வர்க்கவித்யை முதலியவிடங்களில் போல ஸம்க்ஞை ஒன்றுக விருப்பது பற்றி வித்யைக்கு ஐக்யமானது இருக்கட்டும் (8) (எ—று)

மூன்ருவது அங்யதாத்வாதிகரணம் முற்றிற்று.

வ்யாப்த்யதிகரணம் 4.

(ஸூ) வ்யாப்தே: ச ஸமஞ்ஜஸம் (9)

(ப—ரை) व्याप्तेः (வ்யாப்தேஶ்ச)='ஓம்' என்ற அக்ஷரத்துக்கு எல்லாவேதங்களிலும் வியாப்தியிருப்பதால் அவ்விதம் ஸர்வவேத வியாபியான ஓங்காரத்தை இவ்விடத்தில் கிரஹிக்காதிருக்கவேண்டி ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत (ஓமித்யேததக்ஷரமுத்கீதமுபாஸீத)=என்ற விடத்தில் उद्गीथम् (உத்கீதம்)=என ஓம் என்ற அக்ஷரத்துக்குக் கொடுத்த விஶேஷணமானது (அடைமொழியானது) समञ्जसम् (ஸமஞ்ஜஸம்)=பொருத்தமுள்ளதாக வாகிவிடுகிறது. ஆகவே च (ச)=விஶேஷணத்தை விட வேறுபட்ட பாதம், அத்யாஸம், ஐக்கியம் என்ற பக்ஷங்கள் பொருந்தக்கூடியன வன்று. (9) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) (ஓமித்யேததக்ஷரமுத்கீதமுபாஸீத) என்றவிடத்தில் ஓம் என்ற அக்ஷரத்தில் உத்கித புத்தியின் அத்யாஸம் செய்யப்படுகிறதா? அல்லது பாதமா? (அதாவது:—ஓம் என்பதில் ஏற்பட்ட அக்ஷரபுத்தியானது உத்கீதபுத்தியினுல் போக்கப்படுகிறதா என்பதாம்.) அல்லது ஐக்கியமா? (அதாவது:—ஓம் என்கிற அக்ஷரந்தான் உத்கிதம், உத்கீதந்தான் ஓம் என்ற அக்ஷரம் என்பதாய் இரண்டும் ஒன்றென்ற எண்ண முண்டுபண்ணப்படுகிறதா? என்றும்.) அல்லது:—ஓம் என்ற அக்ஷரத்துக்கு உத்கீதம் என்பது விஶேஷணமாகச் சொல்லப்படுகிறதா? (அதாவது:—எல்லாவேதங்களிலுமுள்ள ஓம் என்ற அக்ஷரத்தை விலக்கி உத்கீதம் என்ற ஸாமபக்தியிலுள்ள ஓம் என்றதை மட்டும் கிரஹிக்கவேண்டும் என்பதாக விலக்குவிதி கூறப்படுகிறதா? என்றும்) என்பது ஸந்தேஹம். இவ்விடத்தில் ஐக்கியமானது நியதமாக (நிஶ்சிதமாகக்) கொள்ளமுடியாது. அதற்குரிய காரண

'ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत' (छा० १। १। १) इत्यत्राक्षरोद्गीथशब्दयोः सामानाधिकरण्ये श्रूयमाणेऽध्यासापवादैकत्वविशेषणपक्षाणां प्रतिभासनात्कतमोऽत्र पक्षो न्याय्यः स्यादिति विचारः। तत्राध्यासो नाम द्वयोर्वस्तुनोरनिवर्तितायामेवान्यतरबुद्धावन्यतरबुद्धिरध्यस्यते। यस्मिन्नितरबुद्धिरध्यस्यतेऽनुवर्तत एव तस्मिंस्तद्बुद्धिरध्यस्तेतरबुद्धावपि। यथा नाम्नि ब्रह्मबुद्धावध्यस्यमानायामप्यनुवर्तत एव नामबुद्धिर्न ब्रह्मबुद्ध्या निवर्तते। यथावा प्रतिमादिषु विष्ण्वादिबुद्ध्यध्यासः। एवमिहाप्यक्षर उद्गीथबुद्धिरध्यस्यत उद्गीथे वाऽक्षरबुद्धिरिति। अपवादो नाम यत्र कस्मिंश्चिद्वस्तुनि पूर्वनिविष्टायां मिथ्याबुद्धौ निश्चितायां पश्चादुपजायमाना यथार्था बुद्धिः पूर्वनिविष्टाया मिथ्याबुद्धेर्निव-

---

மில்லாதிருப்பதே அதன்காரணமாகும். ஆகவே அத்யாஸம், பாதம், விஶேஷணம், ஏகத்வம் இவற்றுள் யாதானுமொன்றைத்தான் கிரஹிக்கவேண்டும் என்பது பூர்வ பக்ஷம் வேதங்களில் வியாப்தமான (எல்லாவேதங்களிலும் படிக்கப்படுகின்ற) ஓங்காரமானது உத்கீதம் என்பதால் விஶேஷிக்க(தனித்துக் காட்ட)ப்படுகிறது. அதாவது:—ஓம் என்ற அக்ஷரத்துக்கு உத்கீதம் என்பது விஶேஷணமாகச் சொல்லப் படுகிறது என்றும். அத்யாஸம் முதலிய பக்ஷங்களிலோ பலன் கல்பிக்க வேண்டி வருகிறது. விசேஷணபக்ஷத்திலும் அவயவலக்ஷணை செய்யவேண்டிவருகிறதுதாயினும் அது ஸங்கிகிருஷ்டாம்ச லக்ஷணையாகவாவதால் தோஷமாகவாகாது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"ஓமித்யேத தக்ஷர முத்கீத முபாஸீத" என்ற இந்த விடத்தில் அக்ஷரம், உத்கீதம் என்ற இவ்விரு சப்தங்களுக்கும் ஸாமாநாதிகரண்யமானது (ஒத்த ஒருபொருளுள்ளதாயிருக்குந்தன்மையானது) ஶ்ருதியில் காணப்படுவது பற்றி அத்யாஸம், அபவாதம், ஏகத்வம், விஶேஷணம் என்ற நான்கு பக்ஷங்கள் தோன்றுவதால் இவற்றுள் எந்த வொருபக்ஷம் (முறை) நியாயமானதாக வாகிறது என்பதாய் விசாரமானது ஏற்படுகிறது. அப்பக்ஷங்களுள் அத்யாஸ மாவது:—(எந்த விடத்தில்) இரண்டு பொருள்களுள் ஒருபொருளைப்பற்றிய புத்தி (எண்ணம்) நிவர்த்திக்க (விலக்க)ப்படாதிருக்கும்பொழுதே மற்றொன்றன புத்தி (எண்ணம்) அத்யஸிக்க (ஏற்றிக்காட்ட) ப்படுகிறதோ அதாவது:—எதில் வேறு பொருளின் புத்தி அத்யஸிக்க (ஏற்றிக்காட்ட) ப்படுகிறதோ அதில் அத்யஸிக்கப் பட்ட வேறுபொருளின் புத்தி (தோற்றம்) இருந்தபோதிலுங் கூட அதைப்பற்றிய புத்தியும் (எண்ணமும்) தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றதோ என்றும். (அங்கு அத்யாஸமாகும்) உதாஹரணமாய் எவ்விதம் நாமாவில் ப்ரம்ஹபுத்தியின் அத்யாஸம் காணப்படினுங் கூட அதில் நாமபுத்தியும் தொடர்ந்துவருகிறதே யொழிய ப்ரம்ஹபுத்தியால் அந்த நாமபுத்தியானது நிவர்த்திக்க (விலக்க) ப்படுவதில்லையோ, ப்ரதிமாதிகளில் விஷ்ணுபுத்தியின் அத்யாஸம் எவ்விதமோ அவ்விதமே இங்கும் ஓம் என்ற அக்ஷரத்தில் உத்கீதபுத்தி அத்யஸிக்கப்படுகிறது, அல்லது உத்கீதத்தில் ஓம் என்ற அக்ஷரபுத்தியானது அத்யஸிக்க (ஏற்றிக்கூற) ப்படுகிறது

र्तिका भवति। यथा देहेन्द्रियसङ्घात आत्मबुद्धिरात्मन्येवात्मबुद्ध्या पश्चाद्भाविन्या 'तत्त्वमसि' (छां० ६। ८। ७) इत्यनया यथार्थबुद्ध्या निवर्त्यते। यथा वा दिग्भ्रान्तिबुद्धिर्दिग्याथात्म्यबुद्ध्या निवर्त्यते। एवमिहाप्यक्षरबुद्ध्योद्गीथबुद्धिर्निवर्त्यत उद्गीथबुद्ध्या वाक्षरबुद्धिरिति। एकत्वं त्वक्षरोद्गीथशब्दयोरनतिरिक्तार्थवृत्तित्वम्। यथा द्विजोत्तमो ब्राह्मणो भूमिदेव इति। विशेषणं पुनः सर्ववेदव्यापिन ओमित्येतस्याक्षरस्य ग्रहणप्रसङ्ग औद्गात्रविशेषस्य समर्पणम्। यथा नीलं यदुत्पलं तदानयेति। एवमिहाप्युद्गीथो य ओङ्कारस्तमुपासीतेति। एवमेतस्मिन्सामानाधिकरण्यवाक्ये विमृश्यमान एते पक्षाः प्रतिभान्ति तत्रान्यतमनिर्धारणकारणाभावादनिर्धारणप्राप्ताविदमुच्यते— व्याप्तेश्च समञ्जसमिति ॥

चशब्दोऽयं तु शब्दस्थाननिवेशी पक्षत्रयव्यावर्तनप्रयोजनः। तदिह त्रयः पक्षाः सावद्या इति पर्युदस्यन्ते। विशेषणपक्ष एवैको निरवद्य इत्युपादीयते। तत्राध्यासे तावद्या

என்று கொள்ளுதலாம். அபவாதமாவது:—யாதானுமொருபொருளில் முன்னர் ஏற்பட்ட பொய்யான புத்தியானது நிஸ்சிதமாக இருக்குங்கால் (அதைபற்றியே) பின்னருண்டாகின்ற உண்மையான புத்தியானது முன்னர் ஏற்பட்ட பொய்யான புத்தியை விலக்குவதாகவாகிறது. தேஹேந்திரிய ஸங்காதத்திலுண்டான ஆத்ம புத்தியானது "அது வாக நீ இருக்கின்றாய்" என்ற இந்தப் பின்னருண்டான ஆத்மவிஷயமாகவே உள்ள உண்மையான ஆத்மபுத்தியால் நிவிருத்திக்கப்படுவது எவ்விதமோ, திக்குகளைப் பற்றியுண்டாகும் மயக்கமான எண்ணமானது திக்விஷயமான உண்மையான புத்தியால் போக்கப்படுவது எவ்விதமோ இவ்விதமே இங்கும் "ஓம்" என்ற அக்ஷரபுத்தியினால் உத்கீதபுத்தியானது நிவர்த்திக்கப்படுகிறது, அல்லது உத்கீதபுத்தியினால் அக்ஷரபுத்தி நிவிருத்திக்கப்படுகின்றது என்று கொள்ளுதலாம். ஏகத்வமாவது:—அக்ஷரம் உத்கீதம் என்ற இரண்டுசப்தங்களுக்கும் வேறுபட்ட பொருளற்றதாயிருத்தலாம். த்விஜோத்தமன் என்பதும், ப்ராம்ஹணன் என்பதும், பூமிதேவன் என்பதும் எவ்விதமோ அவ்விதமே இங்கும் காண்க. விசேஷணமோவெனில்:—எல்லா வேதங்களிலும் பரவி இருக்கின்ற ஓம் என்ற இந்த அக்ஷரத்தின் கிரஹணம் ப்ரஸக்தமாகவே ஔத்காத்ரமென்ற கர்மாவிலுள்ள ஓம் என்ற அக்ஷரத்தைமட்டும் அறிவிப்பதாம். "நீலமான யாதொரு உத்பலமுண்டோ அதைக்கொண்டுவா" என்றவிடத்தில் எவ்விதமோ இவ்விதமே இங்கும் உத்கீதமான யாதொரு ஓங்காரமுண்டோ அதை உபாஸிப்பாயாக என்றும்.

இவ்விதம் ஒற்ற ஒருபொருளைக்கூறும் இந்த வாக்கியத்தை ஆலோசிக்குங்கால் இந்நான்குபக்ஷங்கள் தோற்றுகின்றன. அவற்றுள் யாதானுமொன்றைத்தான் கொள்ளவேண்டுமென உறுதிசெய்வதற்குரிய காரணமில்லாமையால் எந்தப் பக்ஷத்தை வேண்டுமானாலும் கொள்ளலாம் என ப்ராப்தமாகவே "வ்யாப்தேஸ்ச ஸமஞ்ஜஸம்" என இந்த ஸூத்திரம் படிக்கப்படுகிறது. ஸூத்திரத்திலுள்ள ச என்ற இந்த சப்தமானது து என்ற சப்தத்தின் ஸ்தானத்தில் படிக்கப்படுவதாய் மற்ற மூன்றுபக்ஷங்களையும் மறுப்பதை பயனாகவுடையதாகவாகிறது. ஆகவே

बुद्धिरितरत्राध्यस्यते तच्छब्दस्य लक्षणावृत्तित्वं प्रसज्येत तत्फलं च कल्प्येत । श्रूयत एव फलम् 'आपयिता ह वै कामानां भवति' (छा० १।१।७) इत्यादीति चेत् । न । तस्यान्यफलत्वात् । आप्त्यादिदृष्टिफलं हि तन्नोद्गीथाध्यासफलम् । अपवादेऽपि समानः फलाभावः। मिथ्याज्ञाननिवृत्तिः फलमिति चेत् । न । पुरुषार्थोपयोगानवगमात् । नच कदाचिदप्योङ्कारादोङ्कारबुद्धिर्निवर्तेत उद्गीथाद्वोद्गीथबुद्धिः । नचेदं वाक्यं वस्तुतत्त्वप्रतिपादनपरम् । उपासनाविधिपरत्वात् । नाप्येकत्वपक्षः सङ्गच्छते निष्प्रयोजनं हि तदा शब्दद्वयोच्चारणं स्यात् । एकेनैव विवक्षितार्थसमर्पणात् । नच हौत्रविषय आध्वर्यवविषये वाऽक्षर ओङ्कारशब्दवाच्य उद्गीथशब्दप्रसिद्धिरस्ति । नापि सकलायां साम्नो द्वितीयायां भक्तावुद्गीथ-

---

இங்கு மூன்றுபக்ஷங்கள் குற்றமுள்ளன பற்றி மறுக்கப்படுகின்றன. விசேஷண பக்ஷமொன்றே குற்றமற்றிருப்பதுபற்றி ஏர்க்கப்படுகிறது. அவற்றுள் முதலாவதான அத்யாஸபக்ஷத்தில் எந்தப் புத்தியானது வேறிடத்தில் அத்யஸிக்க (ஏற்றிக் கூறப்) படுகிறதோ அத்தகைய அறிவைத்தரும் சப்தத்துக்கு லக்ஷணைமுறையால் அத்தகைய பெருளுள்ள தன்மை கல்பிக்கவேண்டிவரும். அவ்வித கல்பனைக்குப் பலனும் கல்பிக்கவேண்டிவரும்.

சங்கை—"காமங்களை அது அடைவிக்கின்றதாகவே இருக்கின்றது" என்றதாதியான பலன் ஶ்ருதியில் கூறப்பட்டே இருக்கின்றது எனின்?

உத்தரம்—அது பொருந்தாது. அந்தப்பலன் வேறொன்றினுடையதாக விருத்தலே அதன் காரணமாகும். ஓங்காரத்தை ஆப்தி என்றும் ஸமிருத்தி என்றுமான குணங்களுடன் சேர்த்துச் செய்யுமுபாஸனையின் பலனாக அது சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய உத்கீதாத்யாஸத்தின் பலனாக அது சொல்லப்படவில்லை அன்றோ? இரண்டாவதான அபவாதபக்ஷத்திலும் பயனின்மை ஸமானமாகவிருக்கின்றது. பொய்யான க்ஞானநிவிருத்தி பயனாகலாமென்றாலோ, அது பொருந்தாது. புருஷார்த்தத்துக்கு உபயோகப்படுவதாக அறியப்படாததே அதன் காரணமாகும். ஓங்காரத்தினிடமிருந்து ஓங்காரபுத்தியாவது, உத்கீதத்தினிடமிருந்து உத்கீதபுத்தியாவது ஒருபொழுதேனும் நிவிருத்தியை அடையமாட்டாதன்றோ? மேலும், இந்த வாக்கியமானது வஸ்துவினது தத்துவத்தை (உண்மையான ஸ்வரூபத்தை) க்கூறவந்ததுமன்று. உபாஸனையை விதிக்கவேண்டியன்றோ இந்த வாக்கியம் ஏற்பட்டது. ஏகத்வம் என்ற மூன்றாவது பக்ஷமும் பொருந்தாது. அப்பொழுது இரண்டு சப்தங்களின் உச்சாரணமானது நிஷ்ப்ரயோஜனமாகவன்றோ ஆகிவிடும். ஒரு சப்தத்தினாலேயே விரும்பின பொருள் கிடைத்துவிடுவதே அதன் காரணமாகும். ஓம் என்ற சப்தத்தால் சொல்லப்படுகின்றதும், ஹௌத்ரம் (யாகத்தில் ருக்வேதிகள் சொல்லும் சஸ்திராதிகளுக்கு ஹௌத்ரம் என்று பெயர்) என்ற கர்மத்திலோ, ஆத்வர்யவ(யஜுர்வேதிகள் செய்யும் கர்மம்)த்திலோ உச்சரிக்கப்படுகின்ற அக்ஷரத்தில் உத்கீதசப்த ப்ரஸித்தியுமில்லை. உத்கீதசப்தத்தால் சொல்லப்படும் இரண்டாவது பக்திமுழுதிலும் ஓங்காரசப்தப்ரஸித்தி இல்லை. அவ்விதமிருந்தாலன்றோ அபின்னமான (ஐக்யமான) பொருள் ஏற்படக்கூடும். (மூன்று

शब्दवाच्यायामोङ्कारशब्दप्रसिद्धिर्येनानतिरिक्तार्थता स्यात्। परिशेषाद्विशेषणपक्षः परिगृह्यते। व्याप्तिः सर्ववेदसाधारण्यात् सर्वव्याप्यक्षरमिह मा प्रसञ्जीत्यत उद्गीथशब्देनाक्षरं विशेष्यते कथं नामोद्गीथावयवभूत ओङ्कारो गृह्येतेति। नन्वस्मिन्नपि पक्षे समाना लक्षणा। उद्गीथशब्दस्यावयवलक्षणार्थत्वात्। सत्यमेवमेतत्। लक्षणायामपि तु सन्निकर्षविप्रकर्षौ भवत एव। अध्यासपक्षे ह्यर्थान्तरबुद्धिरर्थान्तरे निक्षिप्यत इति विप्रकृष्टा लक्षणा विशेषणपक्षे त्ववयविवचनेन शब्देनावयवः समर्प्यत इति सन्निकृष्टा। समुदायेषु हि प्रवृत्ताः शब्दा अवयवेष्वपि प्रवर्तमाना दृष्टाः पटग्रामादिषु। अतश्च व्याप्तेर्हेतोरोमित्येतदक्षरमित्येतस्योद्गीथमित्येतद्विशेषणमिति समञ्जसमेतन्निरवद्यमित्यर्थः ॥ ९ ॥

५ सर्वाभेदाधिकरणम्। सू० १०

सर्वाभेदादन्यत्रेमे ॥ १० ॥

பக்ஷங்களும் ஸம்பவிக்காது போகவே) எஞ்சி இருப்பதைக் கொண்டு விசேஷண பக்ஷமே இங்கு கிரஹிக்கப்படுகிறது. ஓங்காரத்துக்கு வ்யாப்தியானது (நிறைந்திருத்தலானது) எல்லாவேதங்களுக்கும் பொதுவாகவே இருப்பதால் எல்லா வேதங்களிலும் நிறைந்திருக்கும் ஓம் என்ற அக்ஷரத்தின் கிரஹணம் இங்கு வராமலிருப்பதற்குவேண்டி ஓம் என்ற அக்ஷரமானது உத்கீத சப்தத்தால் விலக்கிக் காட்டப்படுகிறது. உத்கீதாவயமான ஓங்காரமானது எவ்விதம் கிரஹிக்கப்படுமோ அவ்விதம் சொல்லப்படுகின்றது என்றும்.

சங்கை—இந்த விசேஷணபக்ஷத்திலும் கூட லக்ஷணை பொதுவாகவே இருக்கின்றது. அதாவது: உத்கீத என்ற சப்தத்துக்கு லக்ஷணைமுறையால் அதன் அவயவம் என்ற பொருள் கொள்ளவேண்டிவருகிறது என்றும். எனின்?

உத்தரம்—இவ்விதம் வருவது உண்மைதானாயினும் லக்ஷணைசொல்லும் விஷயத்திலும் கூட ஸமீபத்துள்ளதைக் கிரஹித்தல், விலகியுள்ளதைக் கிரஹித்தல் என்ற மாறுபாடு இருக்கின்றது. அத்யாஸபக்ஷத்திலோ வேறுபொருளைப்பற்றிய புத்தியானது வேறுபொருளில் செய்யப்படுகின்றது என்பதுபற்றி அங்குள்ள லக்ஷணையானது விப்ரகிருஷ்டமாக (விலகியுள்ள பொருளைப் பற்றியதாக) வாகிறது. விசேஷணபக்ஷத்திலோ அவயவியைச்சொல்லும் சப்தத்தால் அவயவமானது கொள்ளப்படுவதுபற்றி லக்ஷணைஸந்நிகிருஷ்டமாக (ஸமீபித்துள்ளதைக் கூறுவதாக) வாகிறது. துணி, க்ராமம் முதலிய விடங்களில் ஸமுதாயங்களைச் சொல்லும் சப்தங்கள் அதன் அவயவங்களையும் கூறுகின்றனவாகக் காணப்படுகின்றன. ஆகவே ஓங்காரத்துக்கு வ்யாப்தி இருக்கும் காரணமாக "ஓமித்யேததக்ஷரம்" என்ற இதற்கு உத்கீதம் என்ற இந்தப் பதம் விசேஷணமாக வாவதால் இது ஸமஞ்ஜஸமாக(எவ்விதக் குற்றமுமற்றதாக)வாகிறது என்று பொருள். (9) (எ-று)

நான்காவது வ்யாப்த்யதிகரணம் முற்றிற்று.

वसिष्ठत्वाद्यनाहार्यमाहार्यं वैवमित्यतः । उक्तस्यैव परामर्शादनाहार्यमनुक्तितः ॥ १ ॥
प्राणद्वारेण बुद्धिस्थं वसिष्ठत्वादि नेतरत् । एवंशब्दपरामर्शयोग्यमाहार्यमिष्यते ॥ २ ॥

ஸர்வாபேதாதிகரணம் 5.

(அ-கை) பிருஹதாரண்யகம், சாந்தோக்கியம் இரண்டிலும் ப்ராண (இந்திரிய) ஸம்வாதம்சொல்லுமிடத்தில் வாகிந்திரியமானது முக்கிய ப்ராணனைப்பார்த்து "நான் வஸிஷ்ட்டத்வம் என்ற குணமுள்ளதாக இருப்பது யாதுண்டோ நீயே தான் வஸிஷ்டனாக (வஸிஷ்டத்வம் என்ற குணமுள்ளதாக) இருக்கிறாய்" என்பதாய் தன்னிடத்திலுள்ள வஸிஷ்டத்வம் என்ற குணம் முக்கிய ப்ராணன் மூலமாகவே ஏற்படுவதுபற்றி அந்த வஸிஷ்டத்வமென்றகுணம் முக்கியப்ராணனுடையதேயாகும் எனத் தெரிவித்தது என்று தொடங்கி சக்ஷுரிந்திரியமானது தன்னிடத்திலுள்ள **ப்ரதிஷ்ட்டாத்வம்** என்ற குணம் முக்கிய ப்ராணன் மூலமேற்படுவதால் அந்த ப்ரதிஷ்டாத்வம் என்ற குணம் முக்கியப்ராணனுடையதே தானாகும் எனத் தெரிவித்தது, இவ்விதமே சுரோத்திரேந்திரியமானது என்னிடமுள்ள **ஸம்பத்** என்ற குணமானது முக்கியப்ராணன் மூலமேற்படுவதுபற்றி அந்த ஸம்பத் என்ற குணம் முக்கிய ப்ராணனுடையதேதானாகும் எனத்தெரிவித்தது,இவ்விதமே மனஸ்ஸானது தனக்கு **ஆயதநத்வம்** என்ற குணமானது முக்கிய ப்ராணன் மூலமேற்படுவதுபற்றி அந்த ஆயதநத்வம் என்ற குணமானது முக்கிய ப்ராணனுடையதே தானாகும் எனத் தெரிவித்தது என்பதாய் முக்கிய ப்ராணனே தானுபாஸ்யமான வஸ்து என உபாஸ்யமான முக்கிய ப்ராணனுக்கு (1) வஸிஷ்ட்டத்வம், (2) ப்ரதிஷ்ட்டாத்வம், (3) ஸம்பத், (4) ஆயதநத்வம் என்ற குணங்களைச் சொல்லியிருக்கிறது. ஆனால் கௌஷீதகி உபநிஷத் முதலியவிடத்தில் இம்மாதிரியான ப்ராண ஸம்வாதஞ் சொல்லுமிடத்தில் முக்கிய ப்ராணனுக்கு **ஶ்ரைஷ்ட்யம்** என்ற குணம் மட்டும் சொல்லப்படுகிறதே யொழிய முற்கூறிய வஸிஷ்ட்டத்வம் முதலிய குணங்கள் சொல்லப்படவில்லை. ஆகவே சாந்தோக்கிய ப்ருஹதாரண்யகங்களிற் சொல்லிய வஸிஷ்ட்டத்வாதி குணங்களைக் கௌஷீதகி சாகையிலும் சேர்த்துக்கொண்டு உபாஸனஞ் செய்யவேண்டுமா? அல்லது வேண்டாமா? என ஸந்தேஹம்வர சேர்த்துக்கொள்ளவேண்டுவதில்லை எனப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே எல்லா உபநிடதங்களிலும் உபாஸ்யமான ப்ராணன் ஒன்றாகவே இருப்பதால் ஓரிடத்தில் சொல்லப்படாவிடினும் கூட வேறிடத்திற் சொல்லியதை இங்கும் சேர்த்துக் கொண்டுதான் முக்கிய ப்ராணோபாஸனம் செய்யவேண்டும் என ஒரே ஸூத்திரங் கொண்ட இந்த அதிகரணத்தை ஆரம்பிக்கிறார்—

(ஸூ) ஸர்வாபேதாத் அந்யத்ர இமே (10)

(ப-ரை) **सर्वाभेदात्** (ஸர்வாபேதாத்)=எல்லாவிடங்களிலும் உபாஸ்ய வஸ்துவில் வேற்றுமை இல்லாதிருப்பதுபற்றி **अन्यत्र** (அந்யத்ர)=வேறு கௌஷீதகி உபநிடதத்திலுங்கூட **इमे** (இமே)=இந்த வஸிஷ்ட்டத்வம் முதலிய குணங்கள் [**उपसंहर्तव्याः** (உபஸம்ஹர்த்தவ்யா:)=சேர்த்துக்கொள்ளத்தக்கனவே யாகும்.] (10)

वाजिनां छन्दोगानां च प्राणसंवादे श्रैष्ठ्यगुणान्वितस्य प्राणस्योपास्यत्वमुक्तम् । वागादयोऽपि हि तत्र वसिष्ठत्वादिगुणान्विता उक्ताः ते च गुणाः प्राणे पुनः प्रत्यर्पिताः— 'यद्वा अहं वसिष्ठाऽस्मि त्वं तद्वसिष्ठोऽसि' (बृ० ६ । १ । १४) इत्यादिना । अन्येषामपि तु शाखिनां कौषीतकिप्रभृतीनां प्राणसंवादेषु 'अथातो निःश्रेयसादानम्', एता ह वै देवता अहंश्रेयसे विवदमानाः' (कौ० २ । १४) इत्येवञ्जातीयकेषु प्राणस्य श्रैष्ठ्यमुक्तं न त्विमे वसिष्ठत्वादयोऽपि गुणा उक्ताः । तत्र संशयः—किमिमे वसिष्ठत्वादयो गुणाः

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) சாந்தோக்ய ப்ருஹதாரண்யகத்தில் ப்ராணஸம்வாதம் சொல்லுமிடத்திலுள்ள முக்கிய ப்ராணனுக்குச் சொல்லிய வஸிஷ்டத்வாதி குணங்களைக் கௌஷீதகி உபநிடதத்திற் சொல்லிய ப்ராணோபாஸ்தியில் சேர்த்துக்கொள்ள வேண்டுவதில்லையா? அல்லது சேர்த்துக்கொள்ளவேண்டுமா? என்பது ஸந்தேஹம். ஸ்ருதியில் ஏவம் வித்வான் (இவ்விதமுபாஸிப்பவன்) என்றவிடத்தில் ஏவம் என்று சொல்லியிருப்பதிலிருந்து அங்கு சொல்லியிருப்பதற்குமட்டுமே கிரஹண மேற்படுமாதலாலும், அங்கு (கௌஷீதகியில்) வஸிஷ்டத்வாதி குணங்கள் சொல்லப்படாததாலும், கௌஷீதகியில் வஸிஷ்டத்வாதிகுணங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுவதில்லை என்பது பூர்வபக்ஷம். உபாஸ்யமான ப்ராணன் வாயிலாக புத்தியிலிருக்கும் வஸிஷ்டத்வாதி குணங்கள் ஏவம் என்ற சப்தத்தால் கிரஹிக்கப்படுவதற்கு யோக்கியமாகுமேயொழிய பிறவை ஆகாதாகையால் கௌஷீதகியிலும் வஸிஷ்டத்வாதிகளைச் சேர்த்துக்கொண்டே உபாஸிக்கவேண்டுமென்றேற்படுகிறது என்பது ஸித்தாந்தம். (எ—று)

2-வது உதாஹரணமாவது:—பொதுவாய் சந்தஸ்ஸை தேவச்சந்தஸ்ஸென்றும், அஸுரச் சந்தஸ் என்றும் இரண்டாகப் பிரித்து ஒன்பது எழுத்துள்ள சந்தஸ்ஸுகள் ஆஸுரங்களென்றும், மற்றவை தேவச்சந்தஸ்ஸென்றும் சொல்லப்படும். பொதுவாக 'சந்தஸ்ஸுகளால் ஸ்துதிக்கவேண்டும்' என்று சொல்லியவிடத்தில் முற்கூறிய தேவாஸுர சந்தஸ்ஸுகளுக்கு நியமமின்றி பௌர்வாபர்யம் ப்ராப்தமாகவே தேவச்சந்தாம்ஸி பூர்வாணி தேவச்சந்ஸ்ஸுகள் முன்னர் படிக்கவேண்டியன என்ற சாகாந்தரவாக்கியத்தைக்கொண்டு தேவச்சந்தஸ்ஸுக்கு முன்னர் பாடமறியப்படுகின்றது.

उपायनमनाहार्यं हानायाह्रियतेऽथवा । अश्रुतत्वादनाक्षेपाद्विद्याभेदाच्च नाहृतिः ॥ १ ॥
विद्याभेदे प्यर्थवाद आहार्यः स्तुतिसाम्यतः । हानस्य प्रत्यभिज्ञानादेकविंशादिवादवत् ॥ २ ॥

विधूननं चालनं स्याद्धानं वा चालनं भवेत् । दोधूयन्ते ध्वजाग्राणीत्यादौ चालनदर्शनात् ॥ १ ॥
हानमेव भवेद्वाक्यशेषेऽन्योपायनश्रवात् । कर्त्रा न ह्यपरित्यक्तमन्यः स्वीकर्तुमर्हति ॥ २ ॥

छन्दः स्तुत्युपगनवत् (குசா, சந்தஸ், ஸ்துதி, உபகானவத்)=குசை, சந்தஸ், ஸ்துதி, உபகானம் இவைபோலவாம். **तदुक्तम्** (ததுக்தம்)=அவ்விதமே பூர்வமீமாம்ஸையிலுமுபதேசிக்கப் பட்டிருக்கிறது. (26)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ஶ்ருதியில் எந்தவிடத்தில் ஸுக்ருத துஷ்க்ருதங்களின் ஹாநம் (பரித்யாகம்) மட்டுமே சொல்லப்படுகிறதோ அங்கு உபாயனத்தையும் (பிறர் அதை யெடுத்துக்கொள்ளுதலையும்) சேர்த்துக்கொள்ளவேண்டாமா? அல்லது ஹாநத்துக்குவேண்டியே எடுத்துக் கொள்ளப்படுகின்றதா? என்பது ஸந்தேஹம். அந்தச் சுருதியில் உபாயநம் சொல்லப்படாததாலும், ஹானத்தினுல் உபாயனமானது ஆக்ஷேபமூலம் கிடைக்காததுபற்றியும், ஸகுணம் நிர்க்குணம் என்ற வித்யாபேதமிருப்பது கொண்டும், அவற்றைப் பிறர் எடுத்துக் கொள்ளுவதில்லை என்பது பூர்வபக்ஷம். வித்யா பேதமிருப்பினுங் கூட ஸ்துதியானது பொதுவாக விருப்பதிலிருந்து ஓரிடத்திலுள்ள அர்த்தவாதமானது வேறிடத்திலும் சேர்த்துக் கொள்ளப் படுவதாகக் காணப்படுகிறது. சூரியன் இருபத்தொன்றுவதாக வாகிறுன் என்ற அர்த்தவாதத்தில் வேறு அர்த்தவாதமானது சேருவதுபோல ஹாநத்துக்கு ப்ரத்யபிக்ஞை (ஐக்யக்ஞானம்) இருப்பதாலும் ஹாநம்மட்டும் சொல்லியவிடத்திலும் உபாயநமும் ஏற்படத்தான் செய்யும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

3-வது உதாஹரணமாவது:—அதிராத்ரம் என்ற யாகத்தில் ஷோடசீ என்ற பாத்திரத்தைப்பற்றிய ஸ்தோத்திரத்தைப் படிப்பது எதுபோழ்து? எனச் சந்தோகர்களுக்கு அறிய ஆவலுண்டாகுங்கால் காலவிசேஷநியமம் சில சாகிகளுக்கு இல்லாமல் போகவே "ஸமயாத்யுஷிதே ஸூர்யே" சூரியன் உதயஸமயத்தை யடையுங்கால் அந்த ஸ்தோத்திரத்தைச் செய்தல் வேண்டும் என ருக்வேதத்திற் சொல்லியிருப்பதைக்கொண்டு காலவிசேஷக் கிரஹணம் ஏற்படுவதைக் காண்கிறோம்.

4-வது உதாஹரணமாவது:—"ருத்விக்குகள் உபகானஞ் செய்கின்றனர்" எனப் பொதுவாக ஶ்ருதி சொல்லியிருப்பதற்கு "நாத்வர்யு ருபகாயதி" அத்வர்யு உபகானஞ் செய்யக்கூடாது என்ற விசேஷ வசனத்தைக்கொண்டு அத்வர்யுவைத் தவிர மீதமுள்ள ருத்விக்குகள் உபகானஞ் செய்பவராவர் எனக் கொள்ளுவதைக் காண்கிறோம். ஆகவே இந்நான்கு உதாஹரணங்களிலும் ஒரு சாகையிற் கூறியவற்றுக்கு வேறுசாகையிலுள்ள விசேஷத்தைக் கொண்டு நிர்த்தாரணஞ் செய்து கொள்ளுவது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காணவேண்டும் என்றேற்படுகிறது.

अस्ति ताण्डिनां श्रुतिः—'अश्व इव रोमाणि विधूय पापं चन्द्र इव राहोर्मुखात्प्रमुच्य धूत्वा शरीरमकृतं कृतात्मा ब्रह्मलोकमभिसंभवामि' (छा० ८।१३।१) इति। तथाथर्वणिकानाम् 'तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम्' (मुण्ड० ३।२।८) इति। तथा शाट्यायनिनः पठन्ति 'तस्य पुत्रा दायमुपयन्ति सुहृदः साधुकृत्यां द्विषन्तः पापकृत्याम्' इति। तथैव कौषीतकिनः 'तत्सुकृतदुष्कृते विधूनुते तस्य प्रिया ज्ञातयः सुकृतमुपयन्त्यप्रिया दुष्कृतम्' (कौ० १।४) इति। तदिह क्वचित्सुकृतदुष्कृतयोर्हानं श्रूयते क्वचित्तयोरेव विभागेन प्रियैरप्रियैश्चोपायनं क्वचित्तूभयमपि हानमुपायनं च। तद्यत्रोभयं श्रूयते तत्र तावन्न किंचिद्वक्तव्यमस्ति। यत्राप्युपायनमेव श्रूयते न हानं तत्राप्यर्थादेव हानं सन्निपतति। अन्यैरात्मीययोः सुकृतदुष्कृतयोरुपेयमानयोरावश्यकत्वा-

---

இரண்டாவது வர்ணகம்.

(க—ரை) "விதூயபாபம்" என்ற விடத்தில் விதூய என்றதால் விதூனன மானது வெரும் சாலனம் (அசைதல்) மட்டுமா? அல்லது ஹானமா (பரித்யாகமா?) என்பது ஸந்தேஹம். விதூநநமானது சாலனமேதான் ஆகும். கொடி மரத்தின் நுனிகள் தோதூயந்தே என்றவிடத்தில் விதூநநமானது சாலனமாக (வெரும் அசைத்தலாக) மட்டும் காணப்படுவதே அதன் காரணமாகும் என்பது பூர்வபக்ஷம். இங்குள்ள விதூநநமானது ஹாநமே (பரித்யாகமே) தானுகும். ஏன்? வாக்கியசேஷத்தில் பிறர் எடுத்துக் கொள்ளுவதாகச் சொல்லியிருப்பதும் கர்த்தாவினுல் விடப்படாததை பிறர் எடுத்துக் கொள்ளமுடியாததாக விருப்பதுமே அதன் காரணமாகும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"(1)அஸ்வ இவ ரோமர்ணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய தூத்வா சரீரம் அகிருதம் கிருதாத்மா ப்ரம்ஹலோக மபிஸம்பவிதாஸ்மி" எனத் தாண்டி ஸ்ருயும் "(2)ததாவித்வான் நாமரூபாத் விமுக்த: பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்" என ஆதர்வணிகஸ்ருதியும் "(3) தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹிருத: ஸாது கிருத்யாம் த்விஷந்த: பாபகிருத்யாம்" என ஆதர்வணிகஸ்ருதியும், "அப்பொழுது ஸுகிருத துஷ்கிருதங்களை விதூநநஞ் செய்கிறுன். ப்ரியர்களான அவனது க்ஞாதிகள் புண்ணியத்தை யடைகின்றனர். அப்ரியர்கள் துஷ்கிருதத்தை யடைகின்றனர்" எனக் கௌஷீதகி ஸ்ருதியும் கூறுகிறது. ஆகவே இங்கு சிலவிடத்தில் ஸுகிருத துஷ்கிருதங்களுடைய ஹானமும், சிலவிடத்தில் அவற்றுக்கே ப்ரியர்களாலும் அப்ரியர்களாலும் பிரித்து உபாயனமும் (ப்ராப்தியும்) சிலவிடத்தில் ஹானம், உபாயனம் ஆகிய இரண்டும் சொல்லப்படுகிறது. அவற்றுள் எங்கு இரண்டும் சொல்லப்படுகிறதோ அவ்விடத்தில் சொல்லவேண்டியது ஒன்றுமே இல்லை. எந்தவிடத்தில் உபாயனம் மட்டுமே சொல்லப்பட்டு ஹானமானது சொல்லப்படவில்லையோ அவ்விடத்திலும் உபாயனஞ் சொல்லியிருப்பதிலிருந்தே ஹானமும் ஏற்பட்டு விடுகிறது. ஏன்? பிறர் தனது ஸுகிருததுஷ்கிருதங்களை எடுத்துக்கொள்ளுங்கால் அவற்றை இவன்

---

(1) (2) (3) இந்தச் சுருதிகளின் பொருளை அவதாரிகையில் காண்க.

त्तद्धानस्य। यत्र तु हानमेव श्रूयते नोपायनं तत्रोपायनं सन्निपतेद्वा न वेति विचिकित्सायामश्रवणादसन्निपातः। विद्यान्तरगोचरत्वाच्च शाखान्तरीयस्य श्रवणस्य। अपिचात्मकर्तृकं सुकृतदुष्कृतयोर्हानं परकर्तृकं तूपायनं तयोरसत्यावश्यकभावे कथं हानेनोपायनमाक्षिप्येत। तस्मादसन्निपातो हानावुपायनस्येति। अस्यां प्राप्तौ पठति—

हानौ त्विति। हानौ त्वेतस्यां केवलायामपि श्रूयमाणायामुपायनं सन्निपतितुमर्हति। तच्छेषत्वात्। हानशब्दशेषो ह्युपायनशब्दः समधिगतः कौषीतकिरहस्ये। तस्मादन्यत्र केवलहानशब्दश्रवणेऽप्युपायनानुवृत्तिः। यदुक्तमश्रवणाद्विद्यान्तरगोचरत्वादनावश्यकत्वाच्चासन्निपात इति, तदुच्यते। भवेदेषा व्यवस्थोक्तिर्यद्यनुष्ठेयं किञ्चिदन्यत्र श्रुतमन्यत्र नि-

---

அவச்யமாய் விடவேண்டியவனாக ஆகிவிடுவதே அதன் காரணமாகும். எவ்விடத்தில் ஹாநம் மட்டுமே சொல்லப்பட்டு உபாயநம் சொல்லப்படவில்லையோ அங்கு உபாயநமானது (பிறர் அதை எடுத்துக்கொள்ளுதலானது) ஏற்படுமா? அல்லது ஏற்படாதா? என்ற விசாரம் ப்ராப்தமாகுங்கால் ஶ்ருதியில்லாதிருப்பது பற்றி உபாயநத்துக்கு அங்கு ப்ராப்த்தியில்லை என்கிறோம். வேறு சாகையிற் சொல்லிய உபாயநமானது வேறுவித்யையை (ஸகுணநிர்குணப்ரம்ஹவித்யையை) விஷயமாகக் கொண்டிருப்பதே அதன் காரணமாகும். மேலும், ஸுகிருததுஷ்கிருதங்களின் ஹானமே உபாஸகனால் செய்யப்படுகிறது. அவற்றின் உபாயநமோ பிறராற் செய்யப்படுகிறது. அவ்விரண்டுக்கும் ஆவஶ்யகத்தன்மை இல்லாதிருக்கும் பொழுது (ஒருவர் விடுவதை மற்றவர் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற அவஶ்யமில்லாத பொழுது) ஹானத்தால் உபாயனமானது எவ்விதமாக்ஷேபிக்க (விரும்ப)ப்படும். ஆகவே ஹானம் மட்டும் சொல்லியவிடத்தில் உபாயனத்துக்குச் சேர்க்கையில்லை என இவ்விதம் ப்ராப்தமாகவே "ஹாநௌது" என்ற இதைப் படிக்கிறார்.

(ஶ்ருதியில்) தனித்த ஹானம் மட்டும் சொல்லப்படினுங்கூட உபாயனமும் சேர்த்துக்கொள்ளக் கூடியதாகத்தானேற்படுகிறது. அதன் சேஷமாக விருப்பதாலென்க. அதாவது:—கௌஷீதகி ரஹஸ்யத்தில் ஹான என்ற சப்தத்தின் சேஷமாக உபாயந சப்தம் அறியப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். ஆனதுபற்றி வேறிடத்தில் ஹான என்ற சப்தம் மட்டும் தனித்துப் படிக்கப்படினுங்கூட உபாயநத்துக்கும் அநுவிருத்தியானது ஏற்படத்தான் செய்யும். ஶ்ருதியில் படிக்கப்படாததாலும், (ஸகுணமும், நிர்க்குணமும் என்ற) வேறு வித்யைகளில் அவ்விஷயம் சொல்லப்பட்டிருப்பதாலும், உபாயநம் அவஶ்யமாகவில்லாதிருப்பதாலும் (ஹாநம் மட்டும் சொல்லியவிடத்தில்) உபாயநத்துக்குச் சேர்க்கையில்லை என யாதொன்று சொல்லப்பட்டதோ, அவ்விஷயத்திற் சொல்லப்படுகிறது. அநுஷ்டேயமாகவுள்ள ஒன்று வேறிடத்தில் படிக்கப்பட்டு அதை வேறிடத்திற் சேர்க்க விருப்பங்கொள்ளப்படுமாயின் இவ்விதம் வறையறுத்துக் கூறுவது ஏற்படலாம் தான். இவ்விடத்தில் ஹானமோ உபாயநமோ அநுஷ்டேயமாகச் சொல்லப்படவில்லை. இவ்விரண்டையும் சொன்னது வித்யையின் ஸ்துதிக்குவேண்டியேதா

नीष्येत। नत्विह हानमुपायनं वानुष्ठेयत्वेन सङ्कीर्त्यते। विद्यास्तुत्यर्थं त्वनयोः सङ्कीर्तनम्। इत्थं महाभागा विद्या यत्सामर्थ्यादस्य विदुषः सुकृतदुष्कृते संसारकारणभूते विधूयेते ते चास्य सुहृद्द्विषत्सु निविशेते इति। स्तुत्यर्थे चास्मिन्सङ्कीर्तने हानानन्तरभावित्वेनोपायनस्य क्वचिच्छ्रुतत्वादन्यत्रापि हानश्रुतावुपायनानुवृत्तिं मन्यते स्तुतिप्रकर्षलाभाय। प्रसिद्धा चार्थवादान्तरापेक्षार्थवादान्तरप्रवृत्तिः—'एकविंशो वा इतोऽसावादित्यः' (छा० २। १०। ५) इत्येवमादिषु। कथं ह्येकविंशतादित्यस्याभिधीयेतानपेक्ष्यमाणेऽर्थवादान्तरे 'द्वादश मासाः पञ्चर्तवस्त्रय इमे लोका असावादित्य एकविंशः' इत्येतस्मिन्। तथा 'त्रिष्टुभौ भवतः सेन्द्रियत्वाय' इत्येवमादिवादेषु 'इन्द्रियं वै त्रिष्टुप्' इत्येवमाद्यर्थवादान्तरापेक्षा दृश्यते। विद्यास्तुत्यर्थत्वाच्चास्योपायनवादस्य कथमन्यदीये सुकृतदुष्कृते अन्यैरुपेयेते इति नातीवाभिनिवेष्टव्यम्। उपायनशब्दशेषत्वादिति तु शब्दशब்दं समुच्चारयन्स्तु-

---

ருகும். அதாவது:—வித்யையானது இவ்விதம் மஹாமஹிமையுள்ளதாகவாகிறது. அதாவது:—எதன் ஸாமர்த்தியத்தினுல் இந்த உபாசகனுடைய ஸம்ஸார காரணங்களான ஸுகிருததுஷ்கிருதங்கள் விலகுகின்றனவோ. அவையும் இந்த உபாஸகனுடைய மித்திரன் சத்துரு இவர்களிடத்தில் ப்ரவேசிக்கின்றனவோ என்றும். ஸ்துதிக்கு வேண்டி இவ்விதஞ் சொன்னவிடத்தில் ஹாநத்துக்கு (பரித்யாகத்துக்கு) ப்பிறகு ஏற்பட வேண்டுவதாக உபாயநமானது சிலவிடத்திற் சொல்லப்பட்டிருப்பதால் ஹாநம் மட்டும் சொல்லிய வேறிடத்திலுங் கூட ஸ்துதியின் ஆதிக்யம் ஏற்படவேண்டி உபாயநத்தின் அநுவிருத்தியை (தொடர்பை) எண்ணுகிருர். "இந்த ஸூரியன் இங்கிருந்து இருபத்தொன்ருவதாக வாகிருன்" என்ற இம்மாதிரியான விடங்களில் வேறு அர்த்தவாதத்தை யபேக்ஷித்து வேறு அர்த்தவாதப் பிரவிருத்தி யேற்படுவதைக் காண்கிருேம். "மாதங்கள் 12. ருதுக்கள் 5, லோகங்கள் 3. இந்தச் சூரியன் 21வதாக வாகிருன்" என்ற இந்த வேறு அர்த்தவாதமானது அபேக்ஷிக்கப்படாவிடில் ஸூரியனுக்கு இருபத்தொன்ருவதாக விருத்தல் எவ்விதம் சொல்லமுடியும்.

அவ்விதமே "* த்ரிஷ்டுபங்கள் இந்திரியத்துடன் கூடியிருத்தல் ஸித்திக்க வேண்டி கிரஹித்துக்கொள்ளத்தக்கன" என்ற இம்மாதிரியான அர்த்தவாதங்களில் "இந்திரியமேதான் திரிஷ்டுப்" என்ற வேறு அர்த்தவாதத்தின் அபேக்ஷையானது காணப்படுகிறது. வித்யையின் ஸ்துதிக்குவேண்டி இந்த உபாயநார்த்தவாதம் ஏற்பட்டிருப்பதால் பிறருடைய ஸுகிருததுஷ்கிருதங்கள் மற்றவர்களால் எவ்விதமெடுத்துக் கொள்ளப்படும் என அதிகம் † பிடிவாதஞ் செய்யவேண்டிய அவஶ்ய

---

* "த்ரிஷ்டுப்" என்பது ஒரு சந்தஸ்ஸாகும். இது எவ்விதம் இந்திரியங்களாகவாகும் என ஆசங்கைவர "இந்திரியமே தான் த்ரிஷ்டுப்" என்ற யஜுர்வேதத்திலுள்ள அர்த்தவாதமூலம் அவ்வித நிர்ணயமேற்படுவதாகக் காணப்படுகிறது என்ரும்.

† பாஷ்யத்தில் நாதீவாபிநிவேஷ்டவ்யம் என்று கூறியதின் கருத்து பின்வருமாறு. அதாவது:—உபாஸகனே ஸேவித்தல், த்வேஷித்தல் இவற்ருல் உபாஸகனிடத்துள்ள புண்ணியபாபங்களுக்கொப்பான புண்ணியபாபங்கள் ஸேவிப்பவர் த்வேஷிப்பவர்

त्यर्थामेव हानावुपायनानुवृत्तिं सूचयति। गुणोपसंहारविवक्षायां ह्युपायनार्थस्यैव हानानुवृत्तिं ब्रूयात्। तस्माद्गुणोपसंहारविचारप्रसङ्गेन स्तुत्युपसंहारप्रदर्शनार्थमिदं सूत्रम्। कुशाछन्दस्तुत्युपगानवदित्युपमोपादानम्। तद्यथा भाल्लविनाम्—'कुशा वानस्पत्याः स्थ ता मा पात' इत्येतस्मिन्निगमे कुशानामविशेषेण वनस्पतियोनित्वेन श्रवणे शाट्यायनिनामौदुम्बराः कुशा इति विशेषवचनादौदुम्बर्यः कुशा आश्रीयन्ते। यथाच कचिद्देवासुरच्छन्दसामविशेषेण पौर्वापर्यप्रसङ्गे 'देवच्छन्दांसि पूर्वाणि' इति पैङ्ग्याम्नानात्प्रतीयन्ते। यथाच षोडशिस्तोत्रे केषांञ्चित्कालाविशेषप्राप्तौ 'समयाध्युषिते सूर्ये' इत्यार्चश्रुतेः का-

---

மில்லை. "உபாயந ஶப்தசேஷத்வாத்" என்றவிடத்தில் ஶப்த என்ற சப்தத்தைப் பிரயோகித்த ஸூத்திரக்காரர் ஹாநஞ்சொல்லுமிடத்தில் உபாயநத்தின் அநுவிருத்தி ஸ்துதிக்குவேண்டி சொல்லப்பட்டதென்றே குறிப்பிடுகிறார். ஸூத்திரக்காரர் உபாயநத்தைச் சொல்லவிருப்பங் கொண்டிருப்பாராயின் ஸூத்திரத்தில் உபாயநரூபமான பொருளுக்கே ஹானிசொல்லுமிடத்தில் அநுவிருத்தியைச் சொல்லியிருப்பார் (அவ்விதமல்லாத ஶப்தத்துக்கு அநுவிருத்தியைச் சொல்லியதிலிருந்து இது ஸ்துதிக்கென்றே என்பது அவர் கருத்தாகத் தெரிகிறது.) ஆகவே குணோபஸம்ஹார விசாரம் செய்யுமிடத்து ஸ்துதிக்கும் உபஸம்ஹாரமுண்டு என்பதைக் காட்டவேண்டியே இந்த ஸூத்திரமேற்பட்டதெனக் கொள்ளவும். குசா, சந்தஸ், ஸ்துதி, உபகாநம், என்ற இவற்றால் உவமை சொல்லப்பட்டதாகவாகிறது. அதாவது:—பால்லவிகளுடைய சாகையில் "ஹேகுசைகளே! நீங்கள் காட்டிலுள்ள பெரிய மரங்களினின்று முண்டானவர்களாக இருக்கின்றீர்கள். அத்தகைய தாங்கள் என்னைக் காருங்கள்" என யாகஞ்செய்பவர் ப்ரார்த்திக்கும் மந்திரத்தில் குசைகள் பொதுவாக பெரிய மரங்களினின்று முண்டானவையாகக் காணப்படுங்கால், சாட்யாயனிகளுடைய சாகையில் "குசங்கள் அத்திக்கட்டையினின்றும் உண்டானவை" என விசேஷவசனமிருப்பது கொண்டு குசைகள் ஔதும்பரிகளாக (அத்திக்கட்டையினின்று முண்டானவைகளாக) ?வ கொள்ளப்படுகின்றன. சிலவிடத்தில் தேவச்சந்தஸ், (1) அஸுரச்சந்தஸ், இவற்றுக்குப் பொதுவாகப் பௌர்வாபர்யமானது (முன்பின்னதாகப் படித்தலானது) ப்ராப்த்தமாகவே "தேவச் சந்தஸ்ஸுகள் முன்னருள்ளன" எனப் பைங்கிரஹஸ்யப்ராம்ஹணமூலம் தேவச் சந்தஸ்ஸுகள் முன்னர் படிக்கவேண்டியவைகளாகக் கொள்ளப்படுகின்றன. அதிராத்ரத்தில் ஷோடசீ என்ற பாத்திரத்தைப் பற்றிய ஸ்தோத்திரத்தை எப்பொழுது செய்கிறது என (சந்தோகர்களுக்கு) சந்தேஹம் வர '(2)ஸூரியன் உதயஸமயத்திலிருக்குங்கால்" என ருக்வேதிகளின் விசேஷ

இவர்கட்குண்டாகின்றன. ஆகவே அவ்விதமுண்டான அவற்றின் பயனை இவர் அநுபவிப்பதால் உபாயநமானது பலித்துவிடுகிறது என்றும்.

(1) ஒன்பது எழுத்துக்கள் கொண்டச் சந்தஸ் அஸுரச் சந்தஸ்ஸென்றும். மற்றவை தேவச் சந்தஸ்ஸென்றும் சொல்லப்படும்.

(2) ஸமயாத்யுஷிதபத்துக்கு ரத்னப்ரபை என்ற வியாக்யனத்தில் உதயத்துக்கு

लविशेषप्रतिपत्तिः। यथैव चाविशेषेणोपगानं केचित्समामनन्ति विशेषेण भाल्लविनः। यथैतेषु कुशादिषु श्रुत्यन्तरगतविशेषान्वय एवं हानावप्युपायनान्वय इत्यर्थः। श्रुत्यन्तरकृतं हि विशेषं श्रुत्यन्तरेऽनभ्युपगच्छतः सर्वत्रैव विकल्पः स्यात्। स चान्याय्यः सत्यां गतौ। तदुक्तं द्वादशलक्षण्याम्—'अपि तु वाक्यशेषत्वादितरपर्युदासः स्यात्प्रतिषेधे विकल्पः स्यात्' इति॥

ஶ்ருதியைக் கொண்டு காலவிசேஷ ப்ரதிபத்தியேற்படுவதைக் காண்கிறோம். சிலர் "ருத்விக்குகள் உபகானஞ் செய்யவேண்டும்" எனப் பொதுவாகப் படிப்பினும், "அத்வர்யு உபகானம் செய்யக்கூடாது" என விசேஷ ஶ்ருதியிருப்பதைக் கொண்டு அத்வர்யுவைத் தவிர மீதமுள்ள ருத்விக்குகள் உபகானஞ் செய்வதாக உபகானத்தில் கர்த்திருவிசேஷ நிஶ்சயம் செய்யப்படுவதைக் காண்கிறோம். ஆகவே இந்தக் குசாதிகளில் வேறு ஶ்ருதியிலுள்ள விசேஷத்துக்கு அந்வயம் (சேர்க்கை) ஏற்படுவது எவ்விதமோ இவ்விதமே ஹானி சொல்லுமிடத்திலும் உபாயநத்தைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்பது அதன் பொருள். வேறு ஶ்ருதியிலுள்ள விசேஷத்தை வேறு ஶ்ருதியில் அங்கீகாரஞ் செய்யாதவர்க்கு எங்கும் விகல்பமே வந்துவிடத்தெரியும். கதியிருக்குங்கால் அவ்வித விகல்பத்தைச் சொல்லுவது அந்நியாயமாகவாகும். அது பூர்வமீமாம்ஸையில் "(1)அபிதுவாக்ய சேஷத்வாத் இதரபர்யுதாஸ: ஸ்யாத் ப்ரதிஷேதே விகல்ப: ஸ்யாத்" என்றதால் சொல்லப் பட்டிருக்கிறது.

அருகிலுள்ள காலம் என்றும், ப்ரம்ஹவித்யாபரணத்தில் அஸ்தமனத்துக்கு அருகிலுள்ள காலம் என்றும் பொருள் எழுதப் பட்டிருக்கிறது.

(1) அக்னிஷ்டோம ப்ரகரணத்தில் "தீக்ஷிதோ நஜுஹோதி" தீக்ஷிதன் ஹோமஞ் செய்தல்கூடாது எனச் சொல்லப்பட்டிருக்கிறது. வேறிடத்தில் "யாவத்ஜீவம் அக்னிஹோத்ரம் ஜுஹுயாத்" உயிருள்ளவரை அக்னிஹோத்ர ஹோமத்தைச் செய்யவேண்டும் என விதியிருக்கிறது. அவ்விடத்தில் 'தீக்ஷிதோ நஜுஹோதி' என்ற வாக்கியமானது ஹோமத்தை நிஷேதஞ் செய்வதாக விருக்குமானல் அப்பொழுது க்ரத்வர்த்தமாகையினல் நிஷேதமாவது அநுஷ்டேயமாகவாகும். 'யாவத்ஜீவ' விதியினல் ஹோமமாவது அநுஷ்டேயமாகவாகும், அது 8வித தோஷமுள்ளதாகையால் நியாயமற்றதாகவாகும். **அபிது ஆனலோ, வாக்ய சேஷத்வாத்** யாவஜ்ஜீவ வாக்கியத்துக்கு தீக்ஷிதவாக்கியமானது சேஷமாகவாவதால் 'தீக்ஷிதோ நஜுஹோதி' என்றவிடத்திலுள்ள ந என்றதால் **இதரபர்யுதாஸ:** தீக்ஷிதனைவிட வேறுபட்டவனை லக்ஷணை முறையால் போதித்தல் ஸ்யாத் ஏற்படுகிறது. அதாவது:—தீக்ஷிதனல்லாதவன் யாவஜ்ஜீவ ஹோமத்தைச் செய்தல் வேண்டும் என்றும். ப்ரதிஷேதே தீக்ஷிதனை மறுத்தாலோ விகல்பஃ விகல்பமானது ஸ்யாத் வரும் என்பது ஜைமினி ஸூத்திரத்தின் பொருள். ஆகவே யாவஜ்ஜீவ வாக்யத்துக்கும் தீக்ஷிதவாக்யத்துக்கும் ஏகவாக்யதை (ஒத்த ஒரேபொருள்) ஸம்பவிக்குங்கால் எட்டுவித தோஷம் வாய்ந்த விகல்பம் சொல்லுவது பொருந்தாது என்பது ஸூத்திரத்தின் கருத்து.

अथवैतास्वेव विधूननश्रुतिष्वेतेन सूत्रेणैतच्चिन्तयितव्यम्। किमनेन विधूननवचनेन सुकृतदुष्कृतयोर्हानमभिधीयते किंवाऽर्थान्तरमिति। तत्र चैवं प्रापयितव्यम्। न हानं विधूननमभिधीयते 'धूञ् कम्पने' इति स्मरणात्। 'दोधूयन्ते ध्वजाग्राणी' इति च वायुना चाल्यमानेषु ध्वजाग्रेषु प्रयोगदर्शनात्। तस्माच्चालनं विधूननमभिधीयते। चालनं तु सुकृतदुष्कृतयोः कञ्चित्कालं फलप्रतिबन्धनादित्येवं प्रापय्य प्रतिवक्तव्यम्। हानावेवैष विधूननशब्दो वर्तितुमर्हति। उपायनशब्दशेषत्वात्। नहि परपरिग्रहभूतयोः सुकृतदुष्कृतयोरप्रहीणयोः परैरुपायनं संभवति। यद्यपीदं परकीययोः सुकृतदुष्कृतयोः परैरुपायनं नाञ्जसं संभाव्यते तथापि तत्सङ्कीर्तनात्तावत्तदानुगुण्येन हानमेव विधूननं नामेति निर्णेतुं शक्यते। क्वचिदपि चेदं विधूननसन्निधावुपायनं श्रूयमाणं कुशाच्छन्दस्तुत्युपगानवद्विधूननश्रुत्या सर्वत्रापेक्षमाणं सार्वत्रिकं निर्णयकारणं संपद्यते। नच चालनं ध्वजाग्रवत्सुकृतदुष्कृ-

---

இரண்டாவது வர்ணகம்.

அல்லது இந்த விதூநந ஸ்ருதிகளிலேயே இந்த ஸூத்திரத்தினால் பின்வருமாறு சிந்திக்கவேண்டும். அதாவது:—விதூநந வசனத்தினால் ஸுகிருத துஷ்கிருதங்களுடைய ஹாநஞ் சொல்லப்படுகிறதா? அல்லது வேறுபொருள் கொள்ளப்படுகிறதா? என்றும். அவ்விஷயத்தில் இவ்விதம் பூர்வபக்ஷம் காணவேண்டும். விதூய என்றதால் ஹாநஞ் சொல்லப் படமாட்டாது. என்? தூஞ் கம்பனே என்ற தாதுவானது கம்பனத்தில் (அசைதலில்) பிரயோகிக்கப்படும் என ஸ்மிருதி இருப்பதால் என்றும். 'கொடியின் நுனிகள் அசைக்கப் படுகின்றன' என்பதாய் வாயுவினால் அசைக்கப்படும் த்வஜக்தின் நுனிகளில் தூஞ் தாது ப்ரயோகஞ் செய்யப்படுவதைக் காண்கிறோம். ஆகவே விதூநநமானது சாலனமெனச் சொல்லப்படுகிறது. ஸுகிருத துஷ்கிருதங்களுடைய சாலனமோவெனில் சில காலம் அதன் பலன் தடைபடுவதால் என்றும் எனப் பூர்வபக்ஷத்தைச் செய்து கொண்டு அதற்குப் பதில் சொல்லவேண்டும். ஹாநியிலேயே இந்த விதூநந சப்தமிருப்பதுதான் பொருந்தக் கூடியதாக விருக்கிறது. ஹாநமானது உபாயந சப்தத்தைச் சேஷமாகக் கொண்டிருப்பதே அதன் காரணமாகும். பிறரெடுத்துக் கொள்ளும் நிலையிலுள்ள ஸுகிருத துஷ்கிருதங்கள் கர்த்தாவினால் விடப்படாத வரை பிறரால் எடுத்துக் கொள்ளக் கூடியதாக எவ்விதமாகமுடியும். பிறருடைய தான ஸுகிருத துஷ்கிருதங்களைப் பிறர் எடுத்துக்கொள்ளுவதென்பது ஒழுங்கான முறையில் பொருத்தமுள்ளதாக வாகமாட்டாது என்பது உண்மைதானாயினும் அதை ஸ்ருதி சொல்லியிருப்பதைக்கொண்டு அதற்கு அநுகுணமாக ஹானமே தான் விதூநநமாகும் என நிஸ்சயிக்கக் கூடியதாகவாகிறது. ஓரிடத்தில் விதூநந ஸன்னிதியில் படிக்கப்படினுங்கூட இந்த உபாயநமானது குசை, சந்தஸ், ஸ்துதி, உபகாநம் இவைபோல விதூநந ஸ்ருதியினால் எல்லாவிடத்திலும் அபேக்ஷிக்கப் படுவதாய்க் கொண்டு எல்லாவிடத்துக்குமுரிய நிர்ணயகாரணமாக வாகிவிடுகிறது. ஸுகிருத துஷ்கிருதசாலனமானது துவஜாக்ரத்துக்குப் போல முக்கியமாகவாகா

तयोर्मुख्यं संभवति। अद्रव्यत्वात्। अश्वश्च रोमाणि विधून्वानस्त्यजत्रज: सहैव तेन रोमाण्यपि जीर्णानि शातयति 'अश्व इव रोमाणि विधूय पापम्' (छा० ८।१३।१) इति च ब्राह्मणम्। अनेकार्थत्वाभ्युपगमाच्च धातूनां न स्मरणविरोध:। तदुक्तमिति व्याख्यातम् ॥ २६ ॥

१६ सांपरायाधिकरणम्। सू० २७–२८

सांपराये तर्तव्याभावात्तथा ह्यन्ये ॥ २७ ॥

कर्मत्यागो मार्गमध्ये यदि वा मरणात्पुरा। उत्तीर्य विरजां त्यागस्तथा कौषीतकिश्रुतेः ॥ २ ॥

कर्मप्राप्यफलाभावात्मध्ये साधनवर्जनात्। ताण्डिश्रुतेः पुरा त्यागो बाध्यः कौषीतकिक्रमः ॥ २ ॥

தன்றோ? த்ரவ்யமாக வில்லாதிருப்பதே அதன் காரணமாகும். அஸ்வமும் கூட உரோமங்களை உதறுகின்றதாய்க் கொண்டு புழுதியைக் கழிக்கின்றதாய் அதனுடன் கூடவே பழைய உரோமங்களையும் கழித்துவிடுகிறது. "அஸ்வமானது உரோமங்களைப் போலப் பாபத்தைப் போக்கி" என ப்ராம்ஹண வாக்கியமுமிருக்கிறது. தாதுவுக்கு வெகுபொருள் ஒப்பப் பட்டிருப்பதால் [தூஞ்கம்பனே] என்ற பாணினிஸ்மிருதிக்கு விரோதமுமில்லை. ஸூத்திரத்திலுள்ள **ததுக்தம்** என்றதற்கு முன்னரே வியாக்கியானஞ் செய்யப்பட்டுவிட்டது. (26) (எ–று)

பதினைந்தாவது ஹாங்யதிகரணம் முற்றிற்று.

ஸாம்பராயாதிகரணம் 16.

(ஸூ) ஸாம்பராயே தர்த்தவ்யாபாவாத் ததாஹ்யந்யே (27)

(ப–ரை) **सांपराये** (ஸாம்பராயே)=மரணத்துக்கு முந்தியே [**सुकृतदुष्कृतहानं भवति** (ஸுகிருதது஼ஷ்கிருதஹாநம் பவதி)=புண்ணிய பாபங்களின் ஹாநமானது ஏற்படுகிறது] ஏன்? **तर्तव्याभावात्** (தர்த்தவ்யாபாவாத்)=வித்யையுடன் பரலோகஞ் செல்லுபவர்க்கு இடையில் ஸுகிருததுஷ்கிருதங்களால் அடையக்கூடியதொன்றுமில்லாதிருப்பதே அதன் காரணமாகும். **तथाह्यन्ये** (ததாஹ்யங்யே)=அவ்விதமேயன்றோ தாண்டிகளும், சாட்யாயனிகளும் படிக்கின்றனர். (27) (எ–று)

வையாஸிக நியாயமாலை.

(க–ரை) வித்வானுக்குக் கர்மத்யாகமானது வழியின் நடுவிலா? அல்லது மரணத்துக்கு முன்னரேயா? என்பது ஸந்தேஹம். விரஜா என்ற நதியைத் தாண்டின பிறகே கர்மங்களின் தியாக மேற்படுகிறது. அவ்விதம் கௌஷீதகி ஸ்ருதிசொல்லுவதே அதன் காரணமாகும் என்பது பூர்வபக்ஷம். மரணத்துக்குப் பின்னர் விரஜாநதியைத் தாண்டும்வரை இடையில் கர்மாவினால் ஏற்படக்கூடிய பலன் ஒன்றுமில்லாததாலும் நடுவில் கர்மத்யாகத்துக்குரிய ஸாதனமில்லாதிருப்பதாலும் அவ்விதமே தாண்டிகளின் ஸ்ருதி கூறுவதாலும் மரணத்துக்கு

देवयानेन पथा पर्यङ्कस्थं ब्रह्माभिप्रस्थितस्य व्यध्वनि सुकृतदुष्कृतयोर्वियोगं कौषीतकिनः पर्यङ्कविद्यायामामनन्ति 'स एतं देवयानं पन्थानमासाद्याग्निलोकमागच्छति' (कौ० १। ३) इत्युपक्रम्य 'स आगच्छति विरजां नदीं तां मनसैवात्येति तत्सुकृतदुष्कृते विधूनुते' (कौ० १। ४) इति। तत्किं यथाश्रुतं व्यध्वन्येव वियोगवचनं प्रतिपत्तव्यमाहोस्विदादावेव देहादपसर्पण इति विचारणायां श्रुतिप्रामाण्याद्यथाश्रुति प्रतिपत्तिप्रसक्तौ पठति—सांपराय इति। सांपराये गमन एव देहादपसर्पण इदं विद्यासामर्थ्यात्सुकृतदुष्कृतहानं भवतीति प्रतिजानीते। हेतुं चाचष्टे तर्तव्याभावादिति। नहि विदुषः संपरेतस्य विद्यया ब्रह्म संप्रेप्सतोऽन्तराले सुकृतदुष्कृताभ्यां किञ्चित्प्राप्तव्यमस्ति यदर्थं कतिचित्क्षणानक्षीणे ते कल्पेयाताम्। विद्याविरुद्धफलत्वात्तु विद्यासामर्थ्येन तयोः क्षयः स च यदैव विद्या फलाभिमुखी तदैव भवितुमर्हति। तस्मात्प्रागेव सन्नयं सुकृतदुष्कृतक्षयः

முன்னரேதான் கர்மத்யாகஞ் சொல்லவேண்டும். ஆகவே கௌஷீதகிகள் சொல்லிய கர்மத்யாகக்கிரமமானது பாதிக்கக்கூடியதாகவே தானாகிறது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—தேவாயநமார்க்கத்தினால் பர்யங்கத்திலிருக்கும் ப்ரம்ஹத்தைக் குறித்துக் கிளம்பினவர்க்கு நடுவழியில் ஸுகிருததுஷ்கிருதங்களின் ஹானியைக் கௌஷீதகிகள் பர்யங்கவித்யையில் படிக்கின்றனர். அதாவது:—"அந்த உபாஸகன் தேவயாநமார்க்கத்தை யடைந்து அக்னிலோகத்தை யடைகிறான்" எனத் தொடங்கி "அவன் விரஜா என்ற நதியை யடைகிறான். அதை மனத்தினாலேயே தாண்டுகிறான். அதனால் ஸுகிருததுஷ்கிருதங்களை விதூநநஞ் செய்கிறான் (விடுகிறான்)" என்றும். ஆகவே ஶ்ருதியிற் சொல்லியபடி நடுவழியிலேயே வியோகவசனத்தைப் பொருட்படுத்திக் கொள்ளவேண்டுமா? அல்லது ஆதியிலேயே தேஹத்தினின்றும் நீங்கும் காலத்திலேயா? என விசாரம் வருங்கால் ஶ்ருதி ப்ராமாண்யத்தை யொட்டி ஶ்ருதியிருப்பதற்கேற்பக் கொள்ளவேண்டுவதாக ப்ராப்தமாகவே "ஸாம்பராயே" என்ற இதை ஸூத்திரக்காரர் படிக்கிறார். ஸாம்பராயத்தில்=கமநத்திலேயே அதாவது:—தேஹத்தினின்றும் கிளம்புங்காலத்திலேயே வித்யையின் ஸாமர்த்தியத்தினால் இந்த ஸுகிருததுஷ்கிருதங்களின் ஹாநமானது ஏற்படுகிறது என ப்ரதிக்ஞை செய்கிறார். தர்த்தவ்யாபாவாத் என்றதால் ஹேதுவையும் (காரணத்தையும்) சொல்லுகிறார். சரீரத்தை விட்டுக் கிளம்பினவனும் வித்யையினால் ப்ரம்ஹத்தை யடையவிருப்பங்கொண்டவனுமான உபாஸகனுக்கு இடையில் ஸுகிருததுஷ்கிருதங்களால் அடையவேண்டுவது ஒன்றுமில்லை யன்றோ. அவ்விதமிருந்தாலன்றோ அந்த ஸுகிருததுஷ்கிருதங்கள் அழியாமல் சில க்ஷணங்களிருப்பனவாகக் கல்பிக்கக்கூடும். (கர்மங்கள்) வித்யைக்கு விருத்தமான பலனுள்ளனபற்றி வித்யையின் ஸாமர்த்தியத்தினால் அவற்றுக்கு க்ஷயம் (நாசம்) ஏற்படுகிறது. அந்த நாசமும் வித்யையானது எது போழ்து பலனைக் கொடுக்க வாரம்பஞ்செய்கிறதோ அதுபொழுதே (புண்ணியபாபநிவிருத்தி) ஏற்படுவதுதான் பொருத்தமுள்ளதாகவாகிறது. ஆனதுபற்றி முன்னரே இருக்கும் இந்த ஸுகிருத

पश्चात्पठ्यते । तथाह्यन्येऽपि शाखिनस्ताण्डिनः शाट्यायनिनश्च प्रागवस्थायामेव सुकृतदुष्कृतहानमामनन्ति 'अश्व इव रोमाणि विधूय पापम्' (छा० ८।१३।१) इति, 'तस्य पुत्रा दायमुपयन्ति सुहृदः साधुकृत्यां द्विषन्तः पापकृत्याम्' इति च ॥ २७ ॥

छन्दत उभयाविरोधात् ॥ २८ ॥

यदि च देहादपसृप्तस्य देवयानेन पथा प्रस्थितस्यार्धपथे सुकृतक्षयोऽभ्युपगम्येत ततः पतिते देहे यमनियमविद्याभ्यासात्मकस्य सुकृतदुष्कृतक्षयहेतोः पुरुषप्रयत्नस्येच्छातोऽनुष्ठानानुपपत्तेरनुपपत्तिरेव तद्धेतुकस्य सुकृतदुष्कृतक्षयस्य स्यात् । तस्मात्पूर्वमेव साधकावस्थायां छन्दतोऽनुष्ठानं तस्य स्यात्। तत्पूर्वकं च सुकृतदुष्कृतहानमिति द्रष्टव्यम्। एवं निमित्तनैमित्तिकयोरुपपत्तिस्ताण्डिशाट्यायनिश्रुत्योश्च सङ्गतिरिति ॥ २८ ॥

துஷ்கிருத க்ஷயமானது பின்னர் படிக்கப்பட்டது. அவ்விதமே யன்றோ வேறு சாகிகளான தாண்டிகளும், சாட்யாயனிகளும் மரணத்துக்கு முந்திய நிலையிலேயே ஸுகிருததுஷ்கிருதங்களின் ஹானியைப் படிக்கின்றனர். அதாவது:— "அஶ்வமானது உரோமங்களைப் போல பாபத்தை விலக்கி" என்றும் "அவனது புத்திரர்கள் தனத்தை யடைகின்றனர். ஸுஹிருத்துக்கள் நற்காரியத்தை (புண்ணியத்தை)யும், துவேஷிப்பவர் பாபகாரியத்தையும் அடைகின்றனர்" என்றும் கூறுகின்றனர் என்றும். (27) (எ-று)

(ஸூ) சந்தத உபயாவிரோதாத் (28)

(ப-ரை) छन्दतः (சந்ததः)=தனது இஷ்டப்படி யமநியமவித்யாப்யாஸரூபமானதும் ஸுகிருத துஷ்கிருதங்களை நசிக்கச்செய்கின்றதுமான ஹேதுவுக்கு இவனது ஜீவத்தசையிலேயே ஸம்பவமேற்படக் கூடுமாதலாலும், **उभयाविरोधात्** (உபயாவிரோதாத்)=இவ்விதம் பொருள்கொள்ளுவதில் தாண்டி, சாட்யாயனி ஶ்ருதிகளுக்கும், காரணகாரியங்களுக்கும் விரோதம் வராதிருப்பதாலும் மரணத்துக்கு முன்னரே ஸுகிருததுஷ்கிருதக்ஷயம் சொல்லுவதுதான் பொருந்துகிறது. (28)

பாஷ்யம்—தேஹத்தினின்றும் விலகினவனும் தேவயாந மார்க்கத்தினால் செல்லுகின்றவனுமானவனுக்கு நடுவழியில் ஸுகிருததுஷ்கிருதங்களின் தேய்தலானது அங்கீகரிக்கப்படுமானால் அதுபோழ்து தேஹமானது விழுந்து விட்டமையின் ஸுகிருத துஷ்கிருதங்களின் தேய்தலுக்கு ஹேதுவானதும், யம, நியம, வித்யாப்யாஸ ரூபமானதுமான புருஷப்பிரயத்தினத்துக்கு தனது இஷ்டப்படி அனுஷ்டானம் ஸம்பவிக்க முடியாமைபற்றி அவற்றைக் காரணமாகக் கொண்ட ஸுகிருததுஷ்கிருதங்களின் தேய்தலுக்கு இடமில்லாமலேபோகத்தெரியும். ஆனதுபற்றி முன்னரே ஸாதகாவஸ்தையில் தனது இஷ்டப்படி அவற்றின்(யமநியம வித்யாப்யாஸாதிகளின்) அனுஷ்டானஞ் சொல்லவேண்டும். அவற்றை முன்னிட்டு ஸுகிருத துஷ்கிருதங்களின் பரித்யாகம் ஏற்படுகிறதெனக் கண்டுகொள்ளவேண்டும். இவ்விதங்கொள்ளுவதால் காரணகாரியங்களுக்குப் பொருத்தமும் தாண்டி சாட்யாயனி ஶ்ருதிகளுக்குப் பொருத்தமும் ஏற்படுகிறது. (28) (எ-று)

१७ गतेरर्थवत्त्वाधिकरणम् । सू० २९-३०

गतेरर्थवत्त्वमुभयथाऽन्यथा हि विरोधः ॥ २९ ॥

उपास्तिबोधयोर्मार्गः समो यद्वा व्यवस्थितः । सम एवोत्तरो मार्ग एतयोः कर्महानवत् ॥ १ ॥
देशान्तरफलप्राप्त्यै युक्तो मार्ग उपास्तिषु । आरोग्यवद्बोधफलं तेन मार्गो व्यवस्थितः ॥ २ ॥

क्वचित्पुण्यपापहानसन्निधौ देवयानः पन्थाः श्रूयते क्वचिन्न। तत्र संशयः—किं हानावविशेषेणैव देवयानः पन्थाः सन्निपतेदुत विभागेन क्वचित्सन्निपतेत् क्वचिन्नेति। यथा तावद्धानावविशेषेणैवोपायनानुवृत्तिरुक्तैवं देवयानानुवृत्तिरपि भवितुमर्हतीत्यस्यां प्राप्तावाचक्ष्महे। गतेर्देवयानस्य पथोऽर्थवत्त्वमुभयथा विभागेन भवितुमर्हति क्वचिदर्थवती गतिः

கதேரர்த்தவத்வாதிகரணம் 17.

(ஸூ) கதே: அர்த்தவத்வம் உபயதா அந்யதாஹி விரோத: ()

(ப-ரை) **गतेः** (கதே:)=தேவயாநமார்க்கத்துக்கு **अर्थवत्त्वम्** (அர்த்தவத்வம்)=பயனுள்ளதன்மையானது **उभयथा** (உபயதா)=இரண்டுவிதமான பிரிவினுல் ஏற்படுகிறது. அதாவது:—சிலவிடத்தில் பயனுள்ளதாகவும், சிலவிடத்தில் பயனற்றதாகவும் ஆகிறது என்ரும். **अन्यथा** (அந்யதா)=இவ்விதம் இரண்டுவிதமாகப் பிரித்துப் பொருள் கொள்ளாவிடில் **विरोधो हि** (விரோதோ ஹி)=ஶ்ருதி விரோதமன்ரே வந்துவிடும். (29) (எ-று)

வையாஸிக ந்யாயமாலே.

(க-ரை) உபாஸனம், ப்ரம்ஹாத்மைக்யக்ஞானம் இரண்டுக்கும் வழி ஸமமானதா? அல்லது வெவ்வேறு? என்பது ஸந்தேஹம். இவ்விரண்டுக்கும் உத்தராயண மார்க்கமானது கர்மங்களின் பரித்யாகமானதுபோல ஸமமானதேயாகும் என்பது பூர்வபக்ஷம். உபாஸ்திகளில் வேறுதேசத்தில் பலனே யடைவதற்கு வேண்டி மார்க்கம் சொல்லுவது பொருந்தலாம். ப்ரம்ஹாத்மைக்யக்ஞானத்தின் பலனே ஆரோக்யமானது போலவாகிறது. ஆனது பற்றி மார்க்கமானது இரண்டுக்கும் வேறுபட்டதாகவே யாகிறது என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—சிலவிடத்தில் புண்ணியபாபஹாநஞ் சொல்லுமிடத்து தேவயாந மார்க்கமானது சொல்லப்படுகிறது. சிலவிடத்தில் சொல்லப்படவில்லே. அங்கு ஸம்சயமுண்டாகிறது. அதாவது:—புண்யபாபஹாநி சொல்லுமிடத்திலெல்லாம் பொதுவாகவே தேவயாநமார்க்கத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமா? அல்லது சிலவிடத்தில் தேவயாநமார்க்கம் சேரக்கூடும், சிலவிடத்தில் சேருவதில்லே எனப் பிரித்துப் பொருள் கொள்ளவேண்டுமா? என்ரும். ஹாநஞ் சொல்லுமிடத்திலெல்லாம் பொதுவாகவே உபாயநத்தின் அநுவிருத்தியானது எவ்விதஞ்சொல்லப்பட்டதோ இவ்விதமே தேவயாநமார்க்கத்தின் அநுவிருத்தியும் வரத்தான்வரும் என ஆசங்கை ப்ராப்த்தமாகவே பதில் சொல்லுகிரும். கதிக்கு=தேவயாந மார்க்கத்துக்கு, அர்த்தவத்வமானது உபயதா=வெவ்வேருக வருவதுதான் பொருந்து

क्वचिन्नेति नाविशेषेण। अन्यथा ह्यविशेषेणैवैतस्यां गतावङ्गीक्रियमाणायां विरोधः स्यात्। ‘पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति’ (मु० ३। १। ३) इत्यस्यां श्रुतौ देशान्तरप्रापणी गतिर्विरुध्येत। कथं हि निरञ्जनोऽगन्ता देशान्तरं गच्छेत्। गन्तव्यं च परमं साम्यं न देशान्तरप्राप्त्यायत्तमित्यानर्थक्यमेवात्र गतेर्मन्यामहे ॥ २९ ॥

उपपन्नस्तल्लक्षणार्थोपलब्धेर्लोकवत् ॥ ३० ॥

उपपन्नश्चायमुभयथाभावः क्वचिदर्थवती गतिः क्वचिन्नेति। तल्लक्षणार्थोपलब्धेः। गतिकारणभूतो ह्यर्थः पर्यङ्कविद्यादिषु सगुणेषूपासनेषूपलभ्यते। यत्र हि पर्यङ्कारोहणं पर्यङ्कस्थेन ब्रह्मणा संवदनं विशिष्टगन्धादिप्राप्तिश्चेत्येवमादि बहु देशान्तरप्राप्त्यायत्तं फलं श्रूयते तत्रार्थवती गतिः। नहि सम्यग्दर्शने तल्लक्षणार्थोपलब्धिरस्ति। नह्यात्मैकत्वदर्शि-

---

கிறது. அதாவது:—சிலவிடத்தில் கதியானது (மார்க்கமானது) பயனுள்ளதென்றும், சிலவிடத்தில் பயனற்றதென்றுமே யொழிய இரண்டுக்கும் பொதுவாக வாகாதென்றாம். அந்யதா=பொதுவாகவே இந்தக் கதியா (மார்க்கமா) னது அங்கீகரிக்கப்படுமானால் விரோதமானது வந்துவிடுமன்றோ. “புண்யபாபங்களைப் போக்கி அஸங்கனாகி பரமஸாம்யத்தை (ப்ரம்ஹத்தை) அடைகிறான்” என்ற இந்த ஶ்ருதியில் தேசாந்தரத்தை யடைவிக்கும் கதியா (மார்க்கமா) னது விரோதப்படும். எத்துடனும் ஸங்கமற்றவனும், கதியற்றவனுமானவன் வேறுதேசத்தை எவ்விதம் அடையக்கூடும். இவன் அடையவேண்டிய பரமமான ஸாம்யமானது (அதாவது ப்ரம்ஹமானது) தேசாந்தரப்ராப்தியால் கிடைக்கக் கூடியதன்று. ஆனதுபற்றி இவ்விஷயத்தில் கதியானது பயனற்றதென்றே எண்ணுகிறோம். (29) (எ-று)

(ஸூ) உபபந்ந: தல்லக்ஷணார்த்தோபலப்தே: லோகவத் (30)

(ப-ரை) கதிக்குச் சொல்லிய இரண்டுவிதமான தன்மையானது அதாவது: ஓரிடத்தில் பயனுள்ளதென்றும், மற்றவிடத்தில் பயனற்றதென்றும் சொன்னதானது **उपपन्नः** (உபபந்ந:)=பொருத்தமுள்ளதேயாகும். ஏன் ? **तल्लक्षणार्थोपलब्धेः** (தல்லக்ஷணார்த்தோபலப்த்தே:)=அத்தகைய கதி காரணமாகக் கிடைக்கக்கூடிய பொருளின் தோற்றமேற்படுவதே அதன் காரணமாகும். **लोकवत्** (லோகவத்)= உலகில் போலவே இங்கும் காணவேண்டும் என்றோம். (30) (எ-று)

பாஷ்யம்—கதியானது சிலவிடத்தில் பயனுள்ளதென்றும், சிலவிடத்திற் பயனற்றதென்றுமான இந்த இரண்டுவிதமாகப் பிரித்துப் பொருள் கொள்ளுவதானது பொருந்தக்கூடியதே யாகும். தல்லக்ஷணார்த்தோபலப்தியிருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—கதிக்குக் காரணமாகவான யாதொரு பொருளுண்டோ அது பர்யங்கவித்யை முதலிய ஸகுணமான உபாஸனங்களில் காணப்படுகிறது. எந்தவிடத்திலோவெனில் பர்யங்கத்தில் (கட்டிலில்) ஏறுதல், பர்யங்கத்திலுள்ள ப்ரம்ஹத்துடன் ஸம்வாதம் செய்தல், தனிப்பட்ட நறுமணம் முதலியவற்றின் ப்ராப்தி என்ற இதுமுதலான தேசாந்தரப்ராப்தியால் கிடைக்கக் கூடிய வெகுபலன் ஶ்ருதியிற் சொல்லப்படுகிறதோ அங்கு கதியானது (மார்க்க

नामाप्तकामानामिहैव दग्धाशेषक्लेशबीजानामारब्धभोगकर्माशयक्षपणव्यतिरेकेणापेक्षितव्यं किञ्चिदस्ति तत्रानर्थिका गतिः। लोकवच्चैष विभागो द्रष्टव्यो यथा लोके ग्रामप्राप्तौ देशान्तरप्रापणः पन्था अपेक्ष्यते नारोग्यप्राप्तावेवमिहापीति। भूयश्चैनं विभागं चतुर्थाध्याये निपुणतरमुपपादयिष्यामः ॥ ३० ॥

१८ अनियमाधिकरणम्। सू० ३१

अनियमः सर्वासामविरोधः शब्दानुमानाभ्याम् ॥ ३१ ॥

मार्गः श्रुतस्थलेष्वेव सर्वोपास्तिषु वा भवेत्। श्रुतेष्वेव प्रकरणात् द्विःपाठोऽस्य वृथाऽन्यथा ॥ १ ॥

प्रोक्तो विद्यान्तरे मार्गो ये चेम इति वाक्यतः। तेन बाध्यं प्रकरणं द्विःपाठश्चिन्तनाय हि ॥ २ ॥

மானது) பயனுள்ளதாகவாகும். ஸம்யக்தரிசனத்தில் (ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரத்தில்) கதியைக் காரணமாகக்கொண்ட பொருளின் ப்ராப்தியானது இல்லையன்றோ. ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரத்தை யடைந்தவர்களும், ஆனதுபற்றியே ஆப்தகாமர்களும், இப்பிறவியிலேயே கிலேசத்துக்குரிய பீஜங்கள் யாவையும் பொசுக்கினவர்களுமானவர்க்கு ஆரம்பிக்கப்பட்ட போகத்தையுடைய கர்மாசயத்தைக் கழிப்பதைத் தவிர்த்து அபேக்ஷிக்கக்கூடியது ஒன்றுமே இல்லையன்றோ? ஆகவே அங்கு கதியானது பயனற்றதாகவாகிவிடுகிறது. உலகில் போலவே இந்தப் பிரிவைக் காணவேண்டும். அதாவது:—உலகில் கிராமத்தை யடையும் விஷயத்தில் தேசாந்தரத்தை யடைவிக்கும் வழியானது அபேக்ஷிக்கப்படுகிறதேயொழிய ஆரோக்ய ப்ராப்த்தியில் இல்லை என்பது போலவே இங்கும் காணவேண்டும் என்றும். திரும்பவுமே இந்த விபாகத்தை (பிரிவை) வெகுதெளிவாக நான்காவது அத்தியாயத்தில் சொல்லவும் போகிறோம். (30) (எ—று)

பதினேழாவது கதேரர்த்தவத்வாதிகரணம் முற்றிற்று.

அநியமாதிகரணம் 18.

(ஸூ) அநியம: ஸர்வாஸாம் அவிரோத: சப்தாநுமாநாப்யாம் (31)

(ப—ரை) **सर्वासाम्** (ஸர்வாஸாம்)=எல்லா ஸகுனப்ரம்ஹ வித்யைகளுக்கும் [**अविशेषेण देवयानगतिर्वक्तव्या** (அவிசேஷேண தேவயாநகதிர்வக்தவ்யா)=பொதுவாகவே தேவயாந மார்க்கஞ் சொல்லவேண்டுமேயல்லாது] **अनियमः** (அநியம:)=எங்கு கதி சொல்லப்படுகிறதோ அங்குதான் என்ற நியமமில்லை. இவ்விதஞ்சொல்லுவதில் **अविरोधः** (அவிரோத:)=ப்ரகரண விரோதமும் கிடையாது. என்? **शब्दानुमानाभ्याम्** (ஶப்தாநுமாநாப்யாம்)=ஶ்ருதி ஸ்மிருதிகளிருப்பதே அதன் காரணமாகும். (31) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) மார்க்கமானது ஶ்ருதியிற் சொல்லிய இடங்களில் மட்டுந்தானா?

सगुणासु विद्यासु गतिरर्थवती न निर्गुणायां परमात्मविद्यायामित्युक्तम्। सगुणास्वपि विद्यासु कासुचिद्गतिः श्रूयते यथा पर्यङ्कविद्यायामुपकोसलविद्यायां पञ्चाग्निविद्यायां दहरविद्यायामिति। नान्यासु यथा मधुविद्यायां शाण्डिल्यविद्यायां षोडशकलविद्यायां वैश्वानरविद्यायामिति। तत्र संशयः—किं यास्वेवैषा गतिः श्रूयते तास्वेव नियम्येतोतानियमेन सर्वाभिरेवञ्जातीयकाभिर्विद्याभिरभिसंबध्येतेति। किं तावत्प्राप्तं, नियम इति। यत्रैव श्रूयते तत्रैव भवितुमर्हति। प्रकरणस्य नियामकत्वात्। यद्यन्यत्र श्रूयमाणापि गतिर्विद्यान्तरं गच्छेच्छ्रुत्यादीनां प्रामाण्यं हीयेत सर्वस्य सर्वार्थत्वप्रसङ्गात्। अपिचार्चिरादिकैकैव गतिरुपकोसलविद्यायां पञ्चाग्निविद्यायां च तुल्यवत्पठ्यते तत्सर्वार्थत्वेऽनर्थकं पुनर्वचनं स्यात्। तस्मान्नियम इत्येवं प्राप्ते पठति—अनियम इति। सर्वासामेवाभ्युदयप्राप्ति-

---

அல்லது எல்லா உபாஸ்திகளிலுமா? என்பது ஸந்தேஹம். வித்யா ப்ரகரணத்தைக்கொண்டு ஶ்ருதி சொல்லியவிடங்களில் மட்டுந்தான் மார்க்கம் சொல்லவேண்டும். அவ்விதஞ் சொல்லாவிடில் இந்த மார்க்கத்தை ஶ்ருதியில் இரண்டிடத்தில் படித்தது வீணாகிவிடும் என்பது பூர்வபக்ஷம். "யேசேமேரண்யேஶ்ரத்தாதப இத்யுபாஸதே" என்ற வாக்கியத்தினால் வேறு வித்யையிலும் மார்க்கமானது சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் வித்யா ப்ரகரணமானது பாதிக்கப்படுகிறது. இரண்டுதடவை படித்தலானது உபாஸகன் அந்த உபாஸனத்தில் மார்க்கத்தையும் சிந்தனம் செய்யவேண்டும் என்பதற்கு வேண்டியாம் என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—கதியானது ஸகுணவித்யைகளில் பயனுள்ளதேயொழிய நிர்க்குணமான பரமாத்மவித்யையில் பயனுள்ளதன்று எனச்சொல்லப்பட்டது. ஸகுணவித்யைகளான பர்யங்கவித்யை, உபகோஸலவித்யை, பஞ்சாக்னிவித்யை, தஹரவித்யை முதலிய சிலவிடங்களிலுங்கூட கதியானது சொல்லப்பட்டிருக்கிறது. மதுவித்யை, சாண்டில்யவித்யை, ஷோடஶகலவித்யை, வைஶ்வாநரவித்யை என்ற வேறுவிடங்களில் (மார்க்கமானது) சொல்லப்படவில்லை. அங்கு ஸம்சயமுதயமாகிறது. அதாவது: இந்தக்கதியானது எந்தவித்யைகளில் மட்டும் சொல்லப்படுகிறதோ அங்குமட்டுந்தான் என நியமனஞ்செய்யப்படுகிறதா? அல்லது பொதுவாகவே இம்மாதிரிகளான எல்லா வித்யைகளுடனுமே ஸம்பந்தப்படுகிறதா? என்றும். முதலில் கிடைப்பதுயாதென்னில்? நியமமாகத்தான் கதி சொல்லவேண்டும் என்றும். எந்தவிடத்தில் மட்டும் சொல்லப்படுகிறதோ அந்தவிடத்தில் மட்டுந்தான் ஏற்படுவது பொருந்துகிறது. ப்ரகரணமானது நியாமகமாக (வியவஸ்தையை செய்வதாக) இருப்பதே அதன் காரணமாகும். வேறிடத்தில் படிக்கப்படுங் கதி (மார்க்கம்) கூட வேறு வித்யையுடனும் ஸம்பந்தத்தை யடையுமானால் அதுபோழ்து ஶ்ருதிலிங்காதிகளுக்கு ப்ராமாண்யமானது இல்லாமல் போகத்தெரியும். அத்துடன் எதுவும் எல்லா ப்ரயோஜனத்துக்கு வேண்டியுமாகும் என வந்துவிடத்தெரியும். மேலும் அர்ச்சிஸ்ஸை ஆதியாகவுடைய ஒரே மார்க்கமே உபகோஸல வித்யையிலும், பஞ்சாக்னி வித்யையிலும் துல்யமாகவே படிக்கப்படுகிறது. எதுவும் எல்லாவற்றுக்குமாகும் என்றால் (ஒரு கதியையே) இரண்டு தடவைப்படித்தது வீணாக ஆகி

फलानां सगुणानां विद्यानामविशेषेणैषा देवयानाख्या गतिर्भवितुमर्हति। नन्वनियमाभ्युपगमे प्रकरणविरोध उक्तः। नैषोऽस्ति विरोधः। शब्दानुमानाभ्यां श्रुतिस्मृतिभ्यामित्यर्थः। तथाहि श्रुतिः—'तद्य इत्थं विदुः' (छा० ५। १०। १) इति पञ्चाग्निविद्यावतां देवयानं पन्थानमवतारयन्ती 'ये चेमेऽरण्ये श्रद्धातप इत्युपासते' (छा० ५। १०। १) इति विद्यान्तरशीलिनामपि पञ्चाग्निविद्याविद्भिः समानमार्गतां गमयति। कथं पुनरवगम्यते विद्यान्तरशीलिनामियं गतिरिति। ननु श्रद्धातपःपरायणानामेव स्यात्तन्मात्रश्रवणात्। नैष दोषः। नहि केवलाभ्यां श्रद्धातपोभ्यामन्तरेण विद्याबलमेषा गतिर्लभ्यते 'विद्यया तदारोहन्ति यत्र कामाः परागताः। न तत्र दक्षिणा यन्ति नाविद्वांसस्तपस्विनः' इति

விடத்தெரியும். ஆகவே நியமந்தான் சொல்லவேண்டும் என இவ்விதம் ப்ராப்தமாகவே அநியம: என (ஸித்தாந்தத்தை) ப் படிக்கிறார்—அப்யுதய ப்ராப்தியை (ப்ரம்ஹலோக ப்ராப்தியை) பலனாகவுடைய ஸகுணங்களான எல்லா வித்யைகளுக்குமே பொதுவிலே தேவயானமெனப்பெயரிய இந்தக் கதியானது ஏற்படுவதுதான் பொருந்தும்.

சங்கை—அநியமஞ் சொன்னால் ப்ரகரண விரோதம் வருவதாகச் சொல்லப்பட்டதன்றோ எனின்?

உத்தரம்—இந்த விரோதமில்லை. ஏன்? சப்தாநுமானங்கள்=ஶ்ருதி ஸ்மிருதிகள் இருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—"வித்யா ப்ரவிருத்தி உள்ளவர்களுள் எவர் (கிருஹஸ்தர்) இவ்விதம் பஞ்சாக்னிகளை உபாஸ்தி செய்கின்றனரோ" என்றதால் பஞ்சாக்னி உபாஸனஞ் செய்பவர்க்குத் தேவயானமார்க்கத்தைச் சொல்லுகின்ற ஶ்ருதியானது "யாதொரு இவர் அரண்யத்தில் (உபாஸனத்துக்கு எவ்வித இடையூறுமற்றவிடத்தில்) இருந்துகொண்டு சிரத்தை, தபஸ் இவற்றால் உபலக்ஷணை முறையால் குறிக்கப்பட்ட ப்ரம்ஹத்தை உபாஸிக்கின்றனரோ" என்பதாய் வேறு உபாஸ்திப் பழக்கமுள்ளவர்க்குங்கூட பஞ்சாக்னி வித்யையுள்ளவர்களுடன் ஸமமான மார்க்கத்தைத் தெரிவிக்கிறது.

சங்கை—வேறு உபாஸ்தி செய்பவர்க்கு இந்த மார்க்கம் என்பது எவ்விதமறியப்படுகிறது. ஶ்ரத்தை தபஸ், இவற்றில் முக்கிய நோக்குடையவர்க்கு மட்டுமேதானிருக்கலாம். அவ்வளவுமட்டும் ஶ்ருதி சொல்லியிருப்பதே அதன் காரணமாகும் எனின்?

உத்தரம்—இது தோஷமாகாது. வித்யையின் வலுவில்லாமல் தனித்த சிரத்தை தபஸ் இவற்றினால் மட்டும் இந்தக் கதியானது அடையமுடியாதன்றோ. "எவ்விடத்தில் காமங்கள் பராகதங்களோ (கிடையாவோ) அந்த ப்ரம்ஹலோகத்தை வித்யை (உபாஸனை) யினால் அடைகின்றனர். கேவலம் கர்மாநுஷ்டானத்தைமட்டும் செய்பவர் எத்துணை தபஸ்விகளாயினுங்கூட உபாஸனஞ் செய்யாமைபற்றி அவ்விடத்திற் சொல்லுவதில்லை." என வேறு ஶ்ருதியிருப்பதே அதன் காரணமா

श्रुत्यन्तरात्। तस्माद्धि श्रद्धातपोभ्यां विद्यान्तरोपलक्षणम्। वाजसनेयिनस्तु पञ्चाग्निविद्याधिकारेऽधीयते—'य एवमेतद्विदुर्ये चामी अरण्ये श्रद्धां सत्यमुपासते' (बृ० ६।२।१५) इति। तत्र श्रद्धाळवो ये सत्यं ब्रह्मोपासत इति व्याख्येयम्। सत्यशब्दस्य ब्रह्मण्यसकृत्प्रयुक्तत्वात्। पञ्चाग्निविद्याविदां चेत्थंवित्तयैवोपात्तत्वाद्विद्यान्तरपरायणानामेवैतदुपादानं न्याय्यम्। 'अथ य एतौ पन्थानौ न विदुस्ते कीटाः पतङ्गा यदिदं दन्दशूकम्' (बृ० ६। २। १६) इति च मार्गद्वयभ्रष्टानां कष्टामधोगतिं गमयन्ती श्रुतिर्देवयानपितृयाणयोरेवैनानन्तर्भावयति। तत्रापि विद्याविशेषादेषां देवयानप्रतिपत्तिः। स्मृतिरपि—'शुक्लकृष्णे गती ह्येते जगतः शाश्वते मते। एकया यात्यनावृत्तिमन्ययावर्तते पुनः' (भ. गी. ८। २६) इति। यत्पुनर्देवयानस्य पथो द्विराम्नानमुपकोसलविद्यायां पञ्चाग्निविद्यायां च तदुभयत्राप्यनुचिन्तनार्थम्। तस्माददनियमः ॥ ३१ ॥

கும். ஆனதுபற்றி சுருதியிலுள்ள ஸ்ரத்தை தபஸ் இவற்றால் வேறு வித்யையானது உபலக்ஷணமுறையாற் சொல்லப்படுகிறது. வாஜஸநேயிகளோவெனில் பஞ்சாக்னி வித்யை சொல்லுமிடத்து "எவர் இவ்விதம் இதை உபாஸிக்கின்றனரோ, யாதொரு இவர் அரண்யத்தில் சிரத்தையையடைந்து ஸத்யத்தை (ப்ரம்ஹத்தை) உபாஸிக்கின்றனரோ" எனப் படிக்கின்றனர். அவ்விடத்தில் எவர் சிரத்தையுள்ளவர்களாய் ஸத்யமான ப்ரம்ஹத்தை யுபாஸிக்கின்றனரோ என வியாக்கியானஞ் செய்து கொள்ளவேண்டும். ஸத்யம் என்ற சப்தமானது அடிக்கடி ப்ரம்ஹத்தினிடத்தில்ப்ரயோகஞ் செய்யப்படுவதுபற்றியே என்க. பஞ்சாக்னி வித்யோபாஸகர்களை "எவர் இவ்விதமுபாஸிக்கின்றனரோ" என்றதாலேயே சொல்லிவிட்டபடியால் வேறு வித்யோபாஸனஞ் செய்பவர்களே ஸ்ரத்தாம் ஸத்யம் உபாஸதே என்றதால் சொல்லப்படுகின்றனர் என்பதுதான் இங்கு நியாயமானதாகவாகிறது. "பின்னர் எவர் இவ்வழிகளை யுபாஸனையிற் சேர்த்துத் தியானிப்பதில்லையோ அவர் கீடங்களாகவும், வெட்டுப் பூச்சிகளாகவும், பாம்பாகவும்" ஜனிக்கின்றனர் என்பதாய் இரண்டு மார்க்கங்களினின்றும் நழுவினவர்களுக்குக்கஷ்டமான அதோகதியை (தாழ்ந்த பிறவியை) ச் சொல்லுகின்ற ஸ்ருதியானது தேவயான பிதிருயானங்களிலேயே இவர்களைச் சேர்த்து உபதேசஞ் செய்திருப்பதாகத் தெரிகிறது. அங்குங்கூட வித்யையின் விசேஷத்தால் இவர்க்கு தேவயாந ப்ராப்தியேற்படுகிறது. ஸ்மிருதியுங்கூட "இந்தச் சுக்ல கிருஷ்ணகதிகள் (அர்ச்சிராதி தூமாதி மார்க்கங்கள்) உலகுக்கு நிலைபெற்றவைகளென எண்ணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றினால் மறுபடியும் திரும்புதலில்லாதவாறு கார்யமான ப்ரம்ஹத்தையடைகிறான். மற்றொன்றினால் மறுபடியும் திரும்புகிறான்" என உபதேசிக்கிறது. உபகோஸல வித்யையிலும், பஞ்சாக்னி வித்யையிலும் தேவயாநமார்க்கமானது இரண்டுதடவை படிக்கப்படுவது யாதுண்டோ அதுவும் இரண்டு வித்யைகளில் இம்மார்க்கத்தையும் உபாஸனையுடன் சேர்த்துத் தியானிப்பதற்குவேண்டியே எனக் கண்டு கொள்ளவேண்டும். ஆகவே நியமமானது கிடையாது. (31) (எ-று)

பதினெட்டாவது அநியமாதிகரணம் முற்றிற்று.

१९ यावदधिकाराधिकरणम् । सू० ३२

यावदधिकारमवस्थितिराधिकारिकाणाम् ॥ ३२ ॥

ब्रह्मतत्त्वविदां मुक्तिः पाक्षिकी नियताऽथवा । पाक्षिक्यपान्तरतमःप्रभृतेर्जन्मकीर्तनात् ॥ १ ॥

नानादेहोपभोक्तव्यमीशोपास्तिफलं बुधाः । भुक्त्वाधिकारिपुरुषा मुच्यन्ते नियता ततः ॥ २ ॥

विदुषो वर्तमान देहपातानन्तरं देहान्तरमुत्पद्यते नवेति चिन्त्यते—ननु विद्यायाः साधनभूतायाः संपत्तौ कैवल्यनिर्वृत्तिः स्यान्न वेति नेयं चिन्तोपपद्यते । नहि पाकसाधनसंपत्तावोदनो भवेन्न वेति चिन्ता संभवति । नापि भुञ्जानस्तृप्येन्न वेति चिन्त्यते ।

யாவததிகாராதிகரணம் 19.

(அ—கை) நிர்க்குண ப்ரம்ஹ ஸாக்ஷாத்கார விஷயத்தில் கதியானது பயனற்றது. அது முக்திரூப பலனைத் தருவதாகவிருப்பதே அதன் காரணமாகும். ஸகுண ப்ரம்ஹ வித்யைகளிலோவெனில் எல்லாவிடங்களிலும் கதியானது பயனுள்ளதாகவேதானாகும். அவை ப்ரம்ஹலோக ப்ராப்த்தியைப் பலனாகவுடையதாயிருப்பதே அதன் காரணமாகும் என வியவஸ்தை செய்யப்பட்டது. அது பொருந்தாது. தத்துவக்ஞானிகளுக்குங்கூட இதிஹாஸ புராணாதிகளில் புனர்ஜன்மமானது காணப்படுவதிலிருந்து க்ஞானத்துக்குச் சொல்லிய முக்திரூப பல நியமானது எவ்விதம் பொருந்தும் என ஆக்ஷேபம் ப்ராப்த்தமாகவே அதற்கு வேண்டி இந்த அதிகரணமானது ஆரம்பிக்கப்படுகிறது—

(ஸூ) யாவததிகாரம் அவஸ்திதி: ஆதிகாரிகாணாம் (32)

(ப—ரை) **आधिकारिकाणाम्** (ஆதிகாரிகாணாம்)=லோகஸ்திதிக்கு ஹேதுக்களான வேத ப்ரவர்த்தனம் முதலிய அதிகாரத்தில் ஈஶ்வரனால் ஏவப்பட்ட அபாந்தரதமஸ் முதலிய மஹான்களுக்கு **यावदधिकारम्** (யாவததிகாரம்)=தமது அதிகார ப்ராப்தமுள்ளவரை **अवस्थितिः** (அவஸ்திதி:)=அதிகார ப்ராப்த சரீரத்துடனிருத்தல் ஏற்படுகிறது. (32) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ப்ரம்ஹதத்வ ஸாக்ஷாத்காரமுள்ளவர்க்கு முக்தியானது பாக்ஷிகியா? (அதாவது:—ஏதோவொரு ஸமயத்தில் மட்டும் வரக்கூடியதா?) அல்லது நியதமா? (அதாவது:—நித்தியமாகவுள்ளதா?) என்பது ஸந்தேஹம். அபாந்தரதமஸ் முதலியோருக்குப் பிறவி சொல்லியிருப்பதிலிருந்து முக்தியானது பாக்ஷிகியேயாகும் என்பது பூர்வபக்ஷம். ஆதிகாரிகர்களான ஞானிகள் பல தேஹங்களில் அநுபவிக்கவேண்டிய ஈஶ்வரோபாஸ்தி பலனை அநுபவித்துப் பின்னர் முக்தியையடைகின்றனர். ஆனதுபற்றி முக்தியானது நியதமேயாகும் என்பது ஸித்தாந்தம்.

பாஷ்யம்.—க்ஞானிகளுக்கு க்ஞானோதயகாலத்திலுள்ள தேஹம் போனபிறகு வேறு தேஹமுண்டாகிறதா? இல்லையா? என விசாரிக்கப்படுகிறது. அதாவது:—ஸாதனமாகவான வித்யையின் பூர்த்தியேற்பட்டதும் கைவல்ய நிர்விருத்தி (ப்ராப்த்தி) யானது உண்டாகின்றதா? அல்லது இல்லையா? என்றும்.

उपपन्ना त्वियं चिन्ता, ब्रह्मविदामपि केषाञ्चिदितिहास पुराणयोर्देहान्तरोत्पत्तिदर्शनात्। तथाह्यपान्तरतमा नाम वेदाचार्यः पुराणर्षिर्विष्णुनियोगात्कलिद्वापरयोः सन्धौ कृष्णद्वैपायनः संबभूवेति स्मरन्ति। वसिष्ठश्च ब्रह्मणो मानसः पुत्रः सन्निमिशापादपगतपूर्वदेहः पुनर्ब्रह्मादेशान्मित्रावरुणाभ्यां संबभूवेति। भृग्वादीनामपि ब्रह्मण एव मानसपुत्राणां वारुणे यज्ञे पुनरुत्पत्तिः श्रूयते। सनत्कुमारोऽपि ब्रह्मण एव मानसः पुत्रः स्वयं रुद्राय वरप्रदानात्स्कन्दत्वेन प्रादुर्बभूव। एवमेव दक्षनारदप्रभृतीनां भूयसी देहान्तरोत्पत्तिः कथ्यते तेन तेन निमित्तेन स्मृतौ। श्रुतावपि मन्त्रार्थवादयोः प्रायेणोपलभ्यते। ते च केचित्पतिते पूर्वदेहे देहान्तरमाददते केचित्तु स्थित एव तस्मिन्योगैश्वर्यवशादनेकदेहादानन्यायेन। सर्वे चैते समधिगतसकलवेदार्थाः स्मर्यन्ते तदेतेषां देहान्तरोत्पत्तिदर्शनात्प्राप्तं ब्रह्मविद्यायाः पाक्षिकं मोक्षहेतुत्वमहेतुत्वं वेति। अत उत्तरमुच्यते।

சங்கை—இந்த விசாரமானது பொருத்தமானதன்று. ஏன்? பாகத்துக்குரிய ஸாதனத்தின் பூர்த்தி நிகழ்ந்த காலத்து ஓதனம் (அன்னம்) உண்டாகுமா? அல்லது உண்டாகாதா? என்ற விசாரம் ஸம்பவிப்பதில்லையன்றோ. சாப்பிடுகிறவன் திருப்தியை அடைவானா? மாட்டானா? என்று விசாரிக்கப் படுவதில்லையன்றோ? எனின்?

உத்தரம்—இந்த விசாரமானது பொருந்தக் கூடியதேயாகும். ப்ரம்ஹ ஸாக்ஷாத்காரமுள்ளவர்களுக்குங்கூட சிலர்க்கு இதிஹாஸ புராணங்களில் தேஹோத்பத்தி காணப்படுவதே அதன் காரணமாகும். அதாவது:—அபாந்தர தமஸ் என்ற வேதாசாரியரான புராண ருஷியானவர் விஷ்ணுவினுடைய உத்தரவினால் கலியுகம், துவாபரயுகம் இரண்டினுடையவும் ஸந்தியில் கிருஷ்ணத்வைபாயனராக (வேதவியாஸராக) வந்தார் என்றும், வஸிஷ்டரும் ப்ரம்ஹ தேவனது மானஸ புத்திரராக இருந்தும் நிமி சக்கிரவர்த்தியின் ஸாபத்தினால் முந்தின தேஹத்தை இழந்து திரும்பவும் ப்ரம்ஹதேவனுடைய உத்தரவினால் மித்திரா வருணர்கள் மூலம் பிறவியை அடைந்தார் என்றும் ஸ்மிருதிகள் கூறுகின்றன. ப்ரம்ஹ தேவனுக்கே மானஸ புத்திரர்களான பிருகு முதலியவர்களுக்கு வாருணமான யாகத்தில் திரும்பவும் உத்பத்தியானது ஶ்ருதியில் காணப்படுகிறது. ப்ரம்ஹ தேவனுடைய மானஸ புத்திரராகவேயுள்ள ஸநத்குமாரருங்கூட தான் ருத்திரனுக்கு வரன் கொடுத்ததை முன்னிட்டு ஸ்கந்தனாக ப்ராதுர்பாவத்தை யடைந்தார். (அவதரித்தார்) இவ்விதமே தக்ஷர், நாரதர் முதலியோருக்கும் அந்தந்த நிமித்தத்தினால் பலவிதமான தேஹோத்பத்தியானது ஸ்மிருதியில் சொல்லப்படுகிறது. ஶ்ருதியிலும் மந்திரார்த்த வாதங்களில் பெரும்பாலும் காணப்படுகிறது. அவர்களில் சிலர் முன்னுள்ள தேஹம் போனதும் வேறு தேஹத்தை எடுக்கின்றனர். சிலரோ முன்னுள்ள தேஹமிருக்கும்பொழுதே யோகைஸ்வர்ய பலத்தால் அநேக தேஹத்தை எடுக்கும் நியாயத்தையொட்டி வேறு தேஹத்தை எடுக்கின்றனர். இவர்கள் யாவரும் எல்லாவேதார்த்தங்களையும் அறிந்தவர்களென ஸ்மிருதியிற் சொல்லப்படுகின்றனர். ஆகவே இவர்களுக்கு வேறு தேஹத்தினுத்பத்தி காணப்படுவ

न। तेषामपान्तरतमःप्रभृतीनां वेदप्रवर्तनादिषु लोकस्थितिहेतुष्वधिकारेषु नियुक्तानामधिकारतन्त्रत्वास्थितेः। यथासौ भगवान्सविता सहस्रयुगपर्यन्तं जगतोऽधिकारं चरित्वा तदवसान उदयास्तमयवर्जितं कैवल्यमनुभवति 'अथ तत ऊर्ध्व उदेत्य नैवोदेता नास्तमेतैकल एव मध्ये स्थाता' (छा० ३। ११। १) इति श्रुतेः। यथाच वर्तमाना ब्रह्मविद आरब्धभोगक्षये कैवल्यमनुभवन्ति। 'तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्येऽथ संपत्स्ये' (छा० ६। १४। २) इति श्रुतेः। एवमपान्तरतमःप्रभृतयोऽपीश्वराः परमेश्वरेण तेषु तेष्वधिकारेषु नियुक्ताः सन्तः सत्यपि सम्यग्दर्शने कैवल्यहेतावक्षीणकर्माणो यावदधिकारमवतिष्ठन्ते, तदवसाने चापवृज्यन्त इत्यविरुद्धम्। सकृत्प्रवृत्तमेव हि ते फलदानाय कर्माशयमतिवाहयन्तः स्वातन्त्र्येणैव गृहादिव गृहान्तरमन्यमन्यं देहं सञ्चरन्तः स्वाधिकारनिर्वर्तनायापरिमुषितस्मृतय एव देहेन्द्रियप्रकृतिवशित्वान्निर्माय देहान्युगपत्क्रमेण वाधितिष्ठन्ति॥

தால் ப்ரப்ஹவித்யைக்குப் பாக்ஷிகமான மோக்ஷ ஹேதுத்வமோ, மோக்ஷஹேதுவாக இல்லாமையோதான் ப்ராப்தமாகிறது எனப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே (பதில்) ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது. அந்தத் தோஷமில்லை. ஏன்? வேத ப்ரவர்த்தனம் முதலிய லோகஸ்திதி ஹேதுக்களான அதிகாரங்களில் நியுக்தர்களான அபாந்தர தமஸ் முதலிய அவர்களுக்கு அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருத்தல் அவஶ்யமாகவிருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—பகவானான இந்த ஸூரியன் ஆயிரம் யுகம் முடியும்வரை ஜகத்தினுடைய அதிகாரத்தை நடத்திக் கொண்டு அதன் முடிவில் உதயாஸ்தமனமில்லாத கைவல்யத்தை அனுபவிக்கிறான். "ப்ராரப்த க்ஷயத்துக்குப் பின்னர் பிறகு விலக்ஷணனாக=கேவல ப்ரம்ஹஸ்வரூபனாக விருந்துகொண்டு ப்ராரப்த தேஹத்தைவிட்ட பின்னர் உதயமாவதுமில்லை, அஸ்தமனமடைவதுமில்லை. ஏகலனாகவே=அத்விதீயனாகவே, உதாஸீனாத்ம ஸ்வரூபத்தில் இருக்கப் போகிறான்" எனச் சுருதியுமிருக்கிறது. இதுபோழ்துள்ள ப்ரம்ஹவித்துக்கள் ப்ராரப்த்த கர்மாநுபவம் முடிந்ததும் கைவல்யத்தை யடைகின்றனர். "அந்த ப்ரம்ஹவித்துக்கு அவ்வளவே (ப்ராரப்த கர்மமுள்ளவரைதான்) விளம்பம். பிறகு=ப்ராரப்தகர்மம் முடிந்ததும் ப்ரம்ஹத்துடன் இரண்டறக் கலக்கிறான்" எனச் சுருதியுமிருக்கிறது என்பது எவ்விதமோ, இவ்விதமே அபாந்தர தமஸ் முதலியோர் அணிமாத்யைஶ்வர்ய முள்ளவராயினுங்கூட பரமேஶ்வரனால் அந்தந்த அதிகாரங்களில் நியுக்தர்களாக விருந்துகொண்டு கைவல்யஹேதுவான ஸம்யக்தரிசனமிருந்தபோதிலுங்கூட கர்மத்தின் குறைவையடையாதவர்களாய் தமது அதிகாரமுள்ளவரை இருக்கின்றனர். அக்கர்மத்தின் முடிவில் முக்தியை அடைகின்றனர் என்பது விரோதப்படமாட்டாது. அவர்கள் ஒரே தடவை ப்ரவிருத்தித்ததாகவே உள்ள கர்மவாஸனையை அநுபவிக்கின்றவர்களாய் வீட்டினின்றும் வேறுவீட்டைப் போல ஸ்வதந்திரமாகவே வேறு வேறுதேஹத்தில் தனது அதிகாரத்தை நடத்தவேண்டி ஸஞ்சரிக்கின்றவர்களாய் தமது பூர்வக்ஞான நினைவிற்குக் குறைவில்லாதவர்களாகவே தேஹம், இந்திரியம், இவற்றின்

नचैते जातिस्मरा इत्युच्यन्ते 'त एवैते' इति स्मृतिप्रसिद्धेः। यथाहि सुलभा नाम ब्रह्मवादिनी जनकेन विवदितुकामाऽव्युदस्य स्वं देहं जानकं देहमाविश्य व्युद्य तेन पश्चात्स्वमेव देहमाविवेशेति स्मर्यते। यदि ह्युपयुक्ते सकृत्प्रवृत्ते कर्मणि कर्मान्तरारम्भकारणमाविर्भवेत्ततोऽन्यदप्यदग्धबीजं कर्मान्तरं तद्वदेव प्रसज्येतेति ब्रह्मविद्यायाः पाक्षिकं मोक्षहेतुत्वमहेतुत्वं वाशङ्क्येत, नत्वियमाशङ्का युक्ता, ज्ञानात्कर्मबीजदाहस्य श्रुतिस्मृतिप्रसिद्धत्वात्। तथाहि श्रुतिः—'भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः। क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे' (मुण्ड० २। २। ८) इति। 'स्मृतिलम्भे सर्वग्रन्थीनां विप्रमोक्षः' (छा० ७। २६। २) इति चैवमाद्या। स्मृतिरपि—'यथैधांसि समिद्धोऽग्निर्भस्मसात्कुरुतेऽर्जुन। ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा' (भ. गी. ४। ३७)

ப்ரகிருதி இவற்றைத் தன் வசமாக்கிக்கொண்டு தேஹங்களை ஸிருஷ்டித்துக்கொண்டு ஒரே ஸமயத்திலோ, முறையாகவோ வேறு தேஹத்தை யடைகின்றனர். இவர்கள் * ஜாதி ஸ்மரர் எனச் சொல்லவும் முடியாது. ஏன்? "அவர்களேதான் இவர்கள்" என ஸ்மிருதி ப்ரஸித்தியிருப்பதாலென்க. ஸுலபை என்ற ப்ரம்ஹவாதினியானவள் ஜனகருடன் விவாதிக்க வெண்ணங்கொண்டவளாய் தனது தேஹத்தைவிடாமலே ஜனகருடைய தேஹத்தில் நுழைந்து அவருடன் விவாதஞ்செய்து பிறகு சொந்தமாகவே உள்ள தேஹத்தில் பிரவேசித்தாள் என ஸ்மிருதியிலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஒருதடவை ப்ரவிருத்தித்த கர்மமானது உபயுக்தமாகவானதும் வேறு தேஹத்தினது ஆரம்பத்துக்குக் காரணமான வேறு கர்மமானது ஆவிர்பவிக்குமானல் அதற்குப் பிறகு பொசுக்கப்படாத பீஜத்தை (விதையை) யுடைய வேறு கர்மமானது அதுபோலவே ப்ரஸக்தமாகவாகும் என்பதுபற்றி ப்ரம்ஹ வித்யைக்குப் பாக்ஷிகமான மோக்ஷஹேதுத்வமோ, (மோக்ஷ) ஹேதுவாக இல்லாதிருத்தலோ ஆசங்கிக்கப்படும். ஆனாலோ இந்த ஆசங்கை பொருத்தமுள்ளதாக வாகமாட்டாது. (ஏன்?) ஞானத்தினின்றும் (ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரத்தினின்றும்) ஸர்வ கர்மத்தினுடையவும் பீஜத்துக்கு நாசமுண்டாவது ஶ்ருதி ஸ்மிருதிகளில் ப்ரஸித்தமாகக் காணப்படுவதே அதன் காரணமென்க. அவ்விதமே பராவரமான அந்த ப்ரம்ஹமானது ஸாக்ஷாத்கரிக்கப்பட்டவுடன் "ஹிருதயத்தினது கிரந்தியானது (மூலாக்ஞானமானது) நாசத்தையடைகிறது. (அதனின்றும்) எல்லா ஸம்சயங்களும் நாசத்தையடைகின்றன. இவனது கர்மங்கள்யாவும் தேய்ந்தும் விடுகின்றன" என்றும், "ஸ்மிருதி ப்ராப்த்தியுண்டானதும் எல்லாவிதக் கிரந்திகளுடையவும் விடுதலேற்படுகிறது" என்ற தாதியுமான சுருதியுமிருக்கிறது. ஸ்மிருதியும் "ஹே அர்ஜுன! நன்கு வளர்க்கப்பட்ட நெருப்பானது விரகுகளை எவ்விதம் சாம்பலாக்குகிறதோ அவ்விதமே க்ஞானக்னியானது ஸர்வகர்மங்களையும் சாம்பலாக்குகிறது"

---

* முன்னுள்ள தேஹத்தின் பெயர், அதுவேதானிது என்ற ஐக்யக்ஞானம் இவையற்றவர்களும், ஆனதுபற்றியே கர்ம பரதந்திரர்களும், தேஹாதிகளில் அபிமானத்துடன் கூடினவர்களுமே ஜாதிஸ்மரர் எனப்படுவர்.

'बीजान्यग्न्युपदग्धानि न रोहन्ति यथा पुनः । ज्ञानदग्धैस्तथा क्लेशैर्नात्मा संपद्यते पुनः' इति चैवमाद्या । नचाविद्यादिक्लेशदाहे सति क्लेशबीजस्य कर्माशयस्यैदेकशदाह एकदेशप्ररोहश्चेत्युपपद्यते । नह्यग्निदग्धस्य शालिबीजस्यैकदेशप्ररोहो दृश्यते । प्रवृत्तफलस्य तु कर्माशयस्य मुक्तेषोरिव वेगक्षयान्निवृत्तिः। 'तस्य तावदेव चिरम्' (छा० ६ । १४ । २) इति शरीरपातावधि क्षेपकरणात् । तस्मादुपपन्ना यावदधिकारमाधिकारिकाणामवस्थितिः ॥

नच ज्ञानफलस्यानैकान्तिकता । तथाच श्रुतिरविशेषेणैव सर्वेषां ज्ञानान्मोक्षं दर्शयति 'तद्यो यो देवानां प्रत्यबुध्यत स एव तदभवत्तथर्षीणां तथा मनुष्याणाम्' (बृ० १ । ४ । १०) इति । ज्ञानान्तरेषु चैश्वर्यादिफलेष्वासक्ताः स्युर्महर्षयः । ते पश्चादैश्वर्यक्षयदर्शनेन निर्विण्णाः परमात्मज्ञाने परिनिष्ठाः कैवल्यं प्रापुरित्युपपद्यते । 'ब्रह्मणा सह ते सर्वे संप्राप्ते प्रतिसञ्चरे । परस्यान्ते कृतात्मानः प्रविशन्ति परं पदम्' इति स्मरणात् । प्रत्यक्ष-

---

என்றும், "அக்னியினால் பொசுக்கப்பட்ட விதைகள் திரும்பவும் எவ்விதம் முளைப்பதில்லையோ அவ்விதமே க்ஞானத்தால் பொசுக்கப்பட்ட கிலேசங்களுடன் (அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேஶம், இவை கிலேசங்களெனப்படும்) திரும்பவும் ஸம்பந்தப்படுவதில்லை." என்றதாதியுமிருக்கிறது. அவித்யாதிகளான கிலேசங்களுக்குத் தாஹம்(நாசம்) ஏற்படுங்கால் கிலேசத்துக்குப் பீஜமான (காரணமான) கர்மாசயத்தினுடைய ஒரு பாகமானது பொசுக்கப்படுவதாகவும், ஒரு பாகமானது முளைக்கின்றதாகவும் சொல்லுவது பொருந்தமாட்டாதன்றோ. அக்னியினால் பொசுக்கப்பட்ட சம்பாநெல்விதையில் ஒருபாகம் முளைப்பதாகக் காணப்படவில்லையன்றோ. பலனைக்கொடுக்கவாரம்பித்த கர்மாசயத்துக்கோவெனில் (வில்லினின்றும்) விடுபட்ட அம்புக்குப்போல வேகக்குறைவால் நிவிருத்தியானது ஏற்பட்டுவிடுகிறது. "ஆத்மக்ஞானிக்கு அதுவரைதான் விளம்பம்" என்றதால் சரீரத்தினுடைய பாதத்தை எல்லையாகக்காட்டி (ப்ராரப்தகர்மத்துக்கு) நாசஞ் சொல்லப்பட்டுமிருக்கிறது. ஆகவே ஆதிகாரிக புருஷர்களுக்கு அதிகாரமுள்ளவரை இருப்புச் சொன்னது பொருத்தமுள்ளதேயாகும். அவ்விதமே ஶ்ருதியும் "ஆனதுபற்றி தேவர்களுக்குள்ளோ, அதுபோலவே ருஷிகளுக்குள்ளோ, அதுபோலவே மனிதர்களுக்குள்ளோ எவனெவன் ப்ரதிபோதத்தை (ப்ரம்ஹக்ஞானத்தை) யடைவானோ அவனே அதுவாக (ப்ரம்ஹமாக) ஆகிறான்" என்றதால் ஶ்ருதியானது பொதுவாகவே எல்லாருக்கும் க்ஞானத்தால் மோக்ஷத்தைத் தெரிவிக்கிறது. மஹருஷிகள் ஐஶ்வர்யாதிகளைப் பலனாகவுடைய வேறு உபாஸனங்களில் ஆஸக்தி(பற்று)உள்ளவர்களாக ஆயினர். அவர்களும் பின்னர் ஐஶ்வர்யாதிகளைக் கண்டதும் வைராக்யத்தையடைந்தவர்களாய்க் கொண்டு பரமாத்மக்ஞானத்தி லீடுபட்டவர்களாய்க் கைவல்யத்தை யடைகின்றனர் என்பதும் பொருத்தமுடையதே யாகின்றது. "அவர்கள் யாவரும் மஹாப்ரளயமானது ப்ராப்தமானதும் ப்ரம்ஹதேவனுடன் கூடவே ஹிரண்யகர்ப்பருடைய அதிகாரத்தின் முடிவில் ஆத்மஸாக்ஷாத்காரத்தை யடைந்தவர்களாய் பரமானபதத்தை (ப்ரம்ஹஸாக்ஷாத்காரத்தை) அடைகின்றனர்." என ஸ்மிருதியு மிருக்கிறது. க்ஞானத்தின்

फलत्वाच्च ज्ञानस्य फलविरहाशङ्कानुपपत्तिः । कर्मफले हि स्वर्गादावनुभवानारूढे स्यादाशङ्का भवेद्वा न वेति । अनुभवारूढं तु ज्ञानफलम् 'यत्साक्षादपरोक्षाद्ब्रह्म' (बृ० ३ । ४ । १) इति श्रुतेः 'तत्त्वमसि' (६ । ८ । ७) इति च सिद्धवदुपदेशात् । नहि 'तत्त्वमसि' इत्यस्य वाक्यस्यार्थस्तत्त्वं मृतो भविष्यसीत्येवं परिणेतुं शक्यः । 'तद्धैतत्पश्यन्नृषिर्वामदेवः प्रतिपेदेऽहं मनुरभवं सूर्यश्च' (बृ० १ । ४ । १०) इति च सम्यग्दर्शनकालमेव तत्फलं सर्वात्मत्वं दर्शयति । तस्मादैकान्तिकी विदुषः कैवल्यसिद्धिः ॥ ३२ ॥

२० अक्षरध्यधिकरणम् । सू० ३३

अक्षरधियां त्ववरोधः सामान्यतद्भावाभ्यामौपसदवत्तदुक्तम् ॥ ३३ ॥

பலன் ப்ரத்யக்ஷமாகையால் பலாபாவசங்கை செய்வது பொருந்தாது. அநுபவத்தில் வராத கர்மபலரூபமான ஸ்வர்க்காதிவிஷயத்திலோ வெனில் அது இருக்குமோ இருக்காதோ என்ற ஆசங்கைவருவது பொருந்தலாம். "எந்த ப்ரம்ஹமானது ஸாக்ஷாத் (எதனுலும் மறைக்கப்படாததாயும்) அபரோக்ஷாத் (அகௌணமாயும்) உள்ளதோ" எனச் சுருதியுமிருக்கிறது. "அதுவாக நீ இருக்கிருய்" என சித்தவத்தான உபதேசமே இருக்கிறது "அதுவாக நீ இருக்கின்ருய்" என்ற இந்த வாக்யத்துக்குச் செத்த பிறகு நீ அதாகப்போகிருய் எனப் பொருள் கொள்ளுவது பொருந்தாதன்ரே. "வாமதேவ ருஷியானவர் அந்த இந்த ப்ரம்ஹத்தை ஸாக்ஷாத்கரித்தவராய் நான் மனுவாகவும், ஸூரியனுகவும் ஆயினன்" என்றதாய் ஸம்யக்தரிசன காலத்திலேயே அதன் பலனுன ஸர்வாத்மபாவத்தை ஶ்ருதி காண்பித்திருக்கிறது. ஆனதுபற்றி க்ஞானிகளுக்குண்டாகும் கைவல்ய ஸித்தியானது எவ்விதத் தடையுமற்றது என்றேற்பட்டது. (32) (எ—று)

பத்தொன்பதாவது யாவததிகாராதிகரணம் முற்றிற்று.

அக்ஷராதிகரணம் 20.

(ஸூ) அக்ஷரதியாந்த்வரோத: ஸாமாந்யதத்பாவாப்யாம் ஔபஸதவத்ததுக்தம் (33)

(ப—ரை) अक्षरधियाम् (அக்ஷரதியாம்)=अक्षर (அக்ஷர)=அக்ஷரமான ப்ரம்ஹத்தினது धियाम् (தியாம்)=புத்தியை=க்ஞானத்தை யுண்டுபண்ணும் "अस्थूलमनणु" (அஸ்தூலமநணு)=यत्तदद्रेश्यमग्राह्यम् (யத்ததத்ரேஶ்யமக்ராஹ்யம்)=என்றதாதி த்வைதநிஷேதஞ் செய்யும் சப்தங்களுக்கு अवरोधः (அவரோத:)=அக்ஷரத்தை யுபதேசிக்கும் எல்லாவிடங்களிலும் உபஸம்ஹாரமானது செய்து கொள்ளத்தக்கது. என்? सामान्यतद्भावाभ्याम् (ஸாமான்யதத்பாவாப்பாம்)=எல்லா ப்ரபஞ்சத்தையும் நிஷேதஞ்செய்யும் வாயிலாக ப்ரம்ஹத்தை யுபதேசித்தலென்பது எல்லாச் சாகைகளிலும் பொதுவாக விருப்பதும், அந்த அக்ஷரப்ராம்ஹமானது எல்

निषेधानामसंहारः संहारो वा न संहृतिः । आनन्दादिवदात्मत्वं नैषां सम्भाव्यते यतः ॥ १ ॥

श्रुतानामश्रुतानाञ्च निषेधानां समा यतः । आत्मलक्षणता तस्माद्दार्ढ्यायास्तूपसंहृतिः ॥ २ ॥

वाजसनेयके श्रूयते—'एतद्वै तदक्षरं गार्गि ब्राह्मणा अभिवदन्त्यस्थूलमनण्वह्रस्वमदीर्घमलोहितमस्नेहम्' (बृ० ३।८।८) इत्यादि। तथाथर्वणे श्रूयते—'अथ परा यया तद-

---

லாச் சாகைகளிலும் ப்ரதிபாத்யமாகவிருப்பதுமே அதன் காரணமாகும். **औपसदवत्** (ஔபஸதவத்)=நான்கு தினங்கள் செய்து முடிக்கவேண்டிய ஜாமதக்ன்ய மென்ற அஹீநத்தில் (யாகத்தில்) **पुरोडाशिन्य उपसदो भवन्ति** (புரோடாசின்ய உபஸதோ பவந்தி) = உபஸத்துக்கள்=இஷ்டிகள் புரோடாசத்தினால் செய்யத்தக்கனவாகவாகின்றன என தைத்திரீயகத்தில் விதிக்கப்பட்டவிடத்தில் அந்த இஷ்டிகள் அத்வர்யுவினால் செய்யவேண்டுவதாக இருப்பதால் அந்த இஷ்டிகளில் ஸாமவேதோத்பன்னங்களான **अग्नेर्वेर्होत्रं वेरध्वरं** (அக்னேர்வேர்ஹோத்ரம் வேரத்வரம்)= என்றதாதி பன்னிரண்டு மந்திரங்களுக்குப் புரோடாசப்ரதானத்தில் விநியோகம் காணப்படினும் அவற்றை அத்வர்யு உச்சாரணஞ் செய்யவேண்டுமே யொழிய ஸாமவேதியான உத்காதா உச்சாரணஞ் செய்தல் கூடாது என்பது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காணவேண்டும். **तदुक्तम्** (ததுக்தம்)=அவ்விஷயம் பூர்வமீமாம்ஸையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது:—அங்கங்கள் வேறு எந்த சாகையில் படிக்கப்படினும் கூட ப்ரதானத்தையொட்டியே அங்கத்தை நயனம் (நிர்ணயம்) செய்யவேண்டுமே யொழிய வேறு சாகையில் படிக்கப்பட்டிருப்பதற்காக அவை ப்ரதானத்துக்கு புறம்பட்டனவாக வொருபொழுதுமாகமாட்டா என்றும். (33) (எ—று)

குறிப்பு—மற்றும் இங்கு சொல்லவேண்டிய விஷயங்களை இந்த ஸூத்திரத்தின் பாஷ்யமொழிபெயர்ப்பின் முடிவில் எழுதியிருப்பதால் அங்கு காண்க.

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ஓரிடத்தில் ஶ்ருதியிற்சொல்லிய த்வைத நிஷேதங்களுக்கு எல்லாவிடங்களிலுமுபஸம்ஹாரமுண்டா? அல்லது இல்லையா? என்பது **ஸந்தேஹம்.** யாதுகாரணம்பற்றி இந்த த்வைதநிஷேதங்களுக்கு ஆநந்தாதிகளுக்குப்போல ஆத்மத்துவமிருப்பதாக எண்ணப்படவில்லையோ அக்காரணம்பற்றி ஓரிடத்திற்சொல்லிய த்வைதநிஷேதங்களுக்கு வேறிடத்திலுபஸம்ஹாரம் கிடையாது என்பது **பூர்வபக்ஷம்.** ஶ்ருதங்களாகவோ அஶ்ருதங்களாகவோ உள்ள த்வைத நிஷேதங்களுக்கு ஆத்மலக்ஷணமாக விருத்தல் ஸமமாக (பொதுவாக) இருப்பதால் ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிய திருடநிஶ்சய மேற்படுவதற்கு வேண்டி உபஸம்ஹாரமேற்படத்தான் செய்கிறது என்பது **ஸித்தாந்தம்.** (எ—று)

பாஷ்யம்.—வாஜஸநேயகத்தில் "ஹேகார்க்கி! அதே இந்த அக்ஷரத்தை (ப்ரம்ஹத்தை) ப்ராம்ஹணர்கள் ஸ்தூலமற்ற தென்றும், அணுவற்றதென்றும்,

क्षरमधिगम्यते यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णम्' (मु० १ । १ । ५) इत्यादि । तथैवान्यत्रापि विशेषनिराकरणद्वारेणाक्षरं परं ब्रह्म श्राव्यते। तत्र च क्वचित्केचिदतिरिक्ता विशेषाः प्रतिषिध्यन्ते। तासां विशेषप्रतिषेधबुद्धीनां किं सर्वासां सर्वत्र प्राप्तिरुत व्यवस्थेति संशये श्रुतिविभागाद्व्यवस्थाप्राप्तावुच्यते—अक्षरविषयास्तु विशेषप्रतिषेधबुद्धयः सर्वाः सर्वत्रावरोद्धव्याः सामान्यतद्भावाभ्याम्—समानो हि सर्वत्र विशेषनिराकरणरूपो ब्रह्मप्रतिपादनप्रकारः। तदेव च सर्वत्र प्रतिपाद्यं ब्रह्माभिन्नं प्रत्यभिज्ञायते । तत्र किमित्यन्यत्र कृता बुद्धयोऽन्यत्र न स्युः । तथाच 'आनन्दादयः प्रधानस्य' (ब्र० सू० ३ । ३ । ११) इत्यत्र व्याख्यातम् । तत्र विधिरूपाणि विशेषणानि चिन्तितानीह प्रतिषेधरूपाणीति विशेषः । प्रपञ्चार्थश्चायं चिन्ताभेदः । औपसदवदिति निदर्शनम् । यथा जामदग्न्येऽहीने पुरोडाशि-

---

ஹ்ரஸ்வமற்றதென்றும், தீர்க்கமற்றதென்றும், ரக்தமற்றதென்றும், ஸ்னேஹமற்றதென்றும் சொல்லுகின்றனர்" என்றதாதி படிக்கப்படுகிறது. அவ்விதமே ஆதர்வண (முண்டகோபநிடத)த்தில் "அத்ரேஶ்யமும், அக்ராஹ்யமும், அகோத்ரமும், அவர்ணமும் எதுவோ அந்த அக்ஷரம் (ப்ரம்ஹம்) எதனுல் அறியப்படுமோ அந்தப் பரவித்யை பின்னருபதேசிக்கப் படுகிறது" எனப் படிக்கப்படுகிறது. அவ்விதமே வேறிடத்திலுங்கூட விசேஷத்தை (த்வைதப்ரபஞ்சத்தை) மறுக்கும் வாயிலாக பரம்ப்ரம்ஹமானது உபதேசிக்கப்படுகிறது. அவ்விடங்களுள் சிலவிடத்தில் அதிகமான சில விசேஷங்கள் (த்வைதப்ரபஞ்சங்கள்) மறுக்கப்படுகின்றன. விசேஷத்தைமறுக்கும் அந்த எல்லாப்புத்திகளுக்கும் எல்லாவிடத்திலும் ப்ராப்தி உண்டா? அல்லது அந்தந்தவிடத்திலுள்ளதை அந்தந்தவிடத்தில் தான் கொள்ள வேண்டும் என்ற வியவஸ்தை சொல்லப்படுகிறதா? என ஸந்தேஹமுதயமாகவே ஶ்ருதி வெவ்வேருகவிருப்பதிலிருந்து வியவஸ்தைதான் சொல்லவேண்டும் என ப்ராப்தமாகவே சொல்லப்படுகிறது. அக்ஷர விஷயங்களான விசேஷப்ரதிஷேத புத்திகள் யாவும் எல்லாவிடங்களிலும் சேர்த்துக்கொள்ளக் கூடியனவேயாகும் ஸாமான்யதத்பாவமிருப்பதே அதன் காரணமாகும். எல்லாவிடங்களிலும் விசேஷத்தை மறுத்தல் ரூபமான ப்ரம்ஹோபதேச முறையானது ஸமானமாகவன்ருே இருக்கிறது. ப்ரதிபாத்யமான அந்த ப்ரம்ஹமும் எல்லாவிடங்களிலும் அபின்னமாகவே (ஒன்ருகவே) காணவும்படுகிறது. அவ்விதமிருக்க வேறிடத்திற் செய்யப்பட்ட புத்திகள் வேறிடத்தில் ஏன் வரமாட்டா. அவ்விதமே "ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய" (ப்ர. ஸூ. 3, 3, 11) என்றவிடத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் விதிரூபங்களான விசேஷணங்கள் சிந்திக்கப்பட்டன. இவ்விடத்தில் ப்ரதிஷேதரூபங்களான விசேஷணங்கள் சிந்திக்கப்பட்டன என விசேஷமிருக்கிறது. விரிவுக்குவேண்டி இந்தச் சிந்தாபேதமேற்பட்டது. "ஔபஸதவத்" என்பது திருஷ்டாந்தமாகும். அதாவது:—*ஜாமதக்ன்யமான (ஜமதக்னி மஹருஷி

---

* "ஜமதக்நி: புஷ்டிகாமச்ச தூராத்ரோணயஜத" தேஹபுஷ்டியில் விருப்பங்கொண்ட ஜமதக்னி என்ற மஹருஷியானவர் நான்குதினங்களிற் செய்துமுடிக்கக்கூடிய அஹீனம் என்ற யாகத்தைச் செய்தார் என்று தொடங்கி சுருதியில் விதிக்கப்பட்டதும்,

नीषूपसत्सु चोदितासु पुरोडाशप्रदानमन्त्राणाम् 'अग्नेर्वैर्होत्रं वेरध्वरम्' इत्येवमादीनामुद्गातृवेदोत्पन्नानामप्यध्वर्युभिरभिसंबन्धो भवति। अध्वर्युकर्तृकत्वात्पुरोडाशप्रदानस्य प्रधानतन्त्रत्वाच्चाङ्गानाम्। एवमिहाप्यक्षरतन्त्रत्वात्तद्विशेषणानां यत्र क्वचिदप्युत्पन्नानामक्षरेण सर्वत्राभिसंबन्ध इत्यर्थः। तदुक्तं प्रथमे काण्डे—'गुणमुख्यव्यतिक्रमे तदर्थत्वान्मुख्येन वेदसंयोगः' (जै० सू० ३। ३। ८) इत्यत्र ॥ ३३ ॥

யாற் செய்யப்பட்ட) † அஹீநத்தில் (நான்குதினங்களில் செய்துமுடிக்கக்கூடிய யாகத்தில்) விதிக்கப்பட்ட புரோடாசினிகளான=புரோடாச ஸாத்யங்களான, உபஸத்துக்களில்=இஷ்டிகளில் "அக்னேர்வேர்ஹோத்ரம் வேரத்வரம்" என்றதாதிகளான ஸாமவேதோத்பன்ன மந்திரங்களுக்குக்கூட அத்வர்யுக்களுடன் ஸம்பந்தமானது (அத்வர்யுவினல் உச்சரிக்கப்படுதலானது) காணப்படுகிறது. புரோடாச ப்ரதானமானது அத்வர்யுவினல் (யஜுர்வேதியானருத்விக்கினல்) செய்யக்கூடியதாக விருப்பதும், அங்கமானது ப்ரதானத்துக்கு அடங்கினதாக இருப்பதுமே அதன் காரணமாகும் என்பது எவ்விதமோ, இவ்விதமே இங்கும் (த்வைதநிஷேதரூபமான) விசேஷணங்கள் (ப்ரதானமான) அக்ஷர(ப்ரம்ஹ)த்தை யொட்டியதாக விருப்பதால் யாதானுமொருவிடத்தில் படிக்கப்படினுங்கூட அக்ஷர (ப்ரம்ஹ) த்துடன் எல்லாவிடங்களிலும் ஸம்பந்தத்தை யடையத்தான் செய்யும் என்பது அதன் பொருள். அதுவிஷயம் முதல் காண்டத்தில் (பூர்வமீமாம்ஸையில்) "(1) குண

ஜமதக்னியினல் செய்யப்பட்டதும், நான்கு தினங்கள் செய்யவேண்டுவதுமான யாகம் "ஜாமதக்ன்ய அஹீனம்" எனப்படும். அந்த யாகத்தில் "புரோடாசிந்ய: உபஸதோபவந்தி" உபஸத:-இஷ்டிகள் புரோடாசின்ய:-புரோடாச ஸாத்தியங்களாக பவந்தி-ஆகின்றன என இஷ்டிகள் தைத்திரீயக சாகையில் விதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த இஷ்டிகளில் "அக்நேர்வேர்ஹோத்ரம் வேரத்வரம்" வே:-தேவகணத்தினுடைய ஹோத்ரம்-ஹோத்ரமென்றகர்மாவும், வே:-தேவகணத்தினுடைய அத்வரம்-அத்வரமென்ற கர்மாவும் அக்நே:-அக்னியான உன்னிடமிருந்தே யேற்படுகிறது என்ற இந்த ஸாமவேதோத்பன்னமான புரோடாசப்ரதான மந்திரத்துக்கு அத்வர்யுவுடன் ஸம்பந்தமானது சொல்லப் படுகிறது. புரோடாச ப்ரதானமானது அத்வர்யுவினல் செய்யக்கூடியதாகவிருப்பதே அதன் காரணமாகும்.

† பொதுவாய் அஹீநம் என்பது ஒருயாகத்தைச் சொல்லும். ஆனல் அது ஏகதின ஸாத்ய அஹீநமென்றும், இரண்டுதின ஸாத்ய அஹீநமென்றும், மூன்றுதின ஸாத்ய அஹீநமென்றும், நான்குதின ஸாத்தியம், ஐந்துதின ஸாத்யம், ஆறுதின ஸாத்தியம், எழுதின ஸாத்யம், எட்டுதின ஸாத்தியம், ஒன்பதுதின ஸாத்தியம், பத்துதின ஸாத்யம், பதினேருதின ஸாத்யம், பன்னிரண்டுதின ஸாத்தியாம் எனப் பன்னிரண்டுவிதங்களாகப் பூர்வமீமாம்ஸையில் சொல்லப் பட்டிருக்கிறது. அதற்கு மேல்பட்டதினங்களில் ஸாத்தியமாயுள்ளயாகம் ஸத்ரம் என்றும், 12தினங்களில் ஸாத்தியமாயுள்ள யாகம் ஸத்திரமென்றும், அஹீநமென்றும் சொல்லப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

(1) "அக்நேர்வேர்ஹோத்ரம் வேரத்வரம் ஆவிதூரம் வைச்வாநரம் அவஸ்கேரிநீத்ராயதேவேப்யோ ஜுஷதாம் ஹவி:ஸ்வாஹா" என்றதாதிகளான 12மந்திரங்கள்

२१ इयदधिकरणम् । सू० ३४

முக்யவ்யதிக்ரமேததர்த்தத்வாந்முக்யேந வேதஸம்யோக:" என்றவிடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. (33) (எ—று)

இருபதாவது அக்ஷராதிகரணம் முற்றிற்று.

இயததிகரணம் 21.

(அ-கை) முந்தின அதிகரணத்தில் ப்ரதானமான அக்ஷரம் (ப்ரம்ஹம்) எங்கும் ஒன்ருக விருப்பதால் அதைப்பற்றின விசேஷங்கள் வெவ்வேறு இடங்களில் படிக்கப்படினுங்கூட அவற்றை ப்ரதானமான அக்ஷரத்தைக்கூறும் எல்லாவிடங்களிலும் உபஸம்ஹாரஞ் செய்துகொள்ளல் வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டது. "த்வா ஸுபர்ணு ஸயுஜா ஸகாயா" என்றவிடத்திலும், "ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே குஹாம் ப்ரவிஷ்டௌ பரமே பரார்த்யே" என்றவிடத்திலும், ப்ரதிபாத்யமானது ஒன்ருகக் காணப்படவில்லை. இரண்டாவது மந்திரத்தில் இரண்டுக்குப் பாதிருத்வமும் (பானஞ்செய்பவனுகவிருக்கும் தன்மையும்) ஆதியில்

ஸாமவேதத்தில் படிக்கப்பட்டிருக்கின்றன. அந்தமந்திரங்கள் உபஸத்துக்கு-இஷ்டிக்கு, அங்கமாகவான புரோடாசத்துடன் ஸம்பந்தமுள்ளனவாக இருப்பனபற்றி அவை ஸூத்திரத்திலுள்ள ஔபஸத என்ற பதத்திஞற் சொல்லப்படுகின்றன. ஆகவே இப்பன்னிரண்டுமந்திரங்கள் விஷயமாகவரும் ஸந்தேஹத்தைப் பின்வரும் ஸூத்திரம் விளக்கும் முறை பின்வருமாறு—அதாவது: அம்மந்திரங்கள் உத்காதாவினது வேதமான ஸாமவேதத்தில் படிக்கப்படுவதால் அவற்றை உத்காதாவானவன் உச்சரிக்கலாம் என்றும், யஜுர்வேதத்தில் விதிக்கப்பட்ட உபஸத்துக்கு (இஷ்டிக்கு) அங்கமாகவாவதால் ப்ரதானத்தையொட்டி யஜுர்வேதியான அத்வர்யு உச்சரிக்கலாம் என்றும் ஏற்படுகிறது. என்? ஔத்காத்ரமானது ஸாமவேதோத்பன்னமென்றும், ஆத்வர்யவமானது யஜுர்வேதோத்பன்னமென்றும் வியவஸ்தை ஏற்பட்டிருப்பதே அதன் காரணமாகும். மந்திரங்களின் உத்பத்தியானது கர்மாவுக்கு முந்தியேற்பட்டதாயிருப்பதால் ஸாமவேதோத்பன்னங்களான இந்தப் பன்னிரண்டுமந்திரங்களையும் உத்காதாதான் படிக்கவேண்டும் எனப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ஸூத்திரத்தாற் பின்வருமாறு ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது—குணமுக்யவ்யதிக்ரமே குணங்களாகவான முற்கூறிய 12மந்திரங்களுக்கும், முக்கியங்களான உபஸத்துக்களுக்கும் தர்மவிரோதம் ப்ராப்த்தமாகவே ததர்த்தத்வாத் ப்ரதானத்துக்கு வேண்டி குணங்கள் ஏற்பட்டனபற்றி முக்யேந ப்ரதானத்துடன் வேதஸம்யோக: வேதத்தின்சேர்க்கை யேற்படுகிறது. அதாவது:—ப்ரதாநத்துக்குரிய வேதத்தின் ஸம்பந்தமுள்ள கர்த்தா எவனே அவனேதான் இம்மந்திரோச்சாரணத்திலும் கர்த்தாவாகவாவான் என்ரும். மந்திரங்களின் உத்பத்தி முதலிலேற்படுவது உண்மைதாஞயினும் அவ்வுத்பத்தியானது ப்ரயோகவிதிக்கு அங்கமாகவாவதாலும், ப்ரயோகமானது யஜுர்வேதத்திலேயே செய்யப்பட்டிருப்பதாலும் யஜுர்வேதியான அத்வர்யுவேதான் மந்திரோச்சாரணத்தில் கர்த்தாவாகவாகிறுன் என்பது ஸித்தாந்தியின்கருத்து. என ப்ரம்ஹவித்யாபரண வியாக்யானத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

इयदामननात् ॥ ३४ ॥

पिबन्तौ द्वासुपर्णेति द्वे विद्ये अथर्वेवृता । भोक्तारौ भोक्त्रभोक्तारावविति विद्ये उभे इमे ॥ १ ॥
पिबन्तौ भोक्त्रभोक्तारावित्युक्तं हि समन्वये । इयत्ता प्रत्यभिज्ञानाद्विद्यैका मन्त्रयोर्द्वयोः ॥ २ ॥

'द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते । तयोरन्यः पिप्पलं स्वाद्वत्त्यनश्नन्नन्यो अभिचाकशीति' (मु० ३ । १ । १) इत्यध्यात्माधिकारे मन्त्रमाथर्वणिकाः

ஒன்றுக்கு அநசிதிருத்வமும்(அசனமற்றிருக்கும் தன்மையும்)சொன்னதிலிருந்து பேதம்(வேற்றுமை)காணப்படுகிறது. ஆகவே இரண்டு வித்யைகளுக்கும் ஐக்கியமானது ஸம்பவிக்காது எனப் பூர்வபக்ஷம். ப்ராப்த்தமாகவே அதை ஸித்தாந்தப்படுத்தவேண்டி ஒரே ஸூத்திரங்கொண்ட இந்த அதிகரணமாரம்பிக்கப் படுகிறது—

(ஸூ) இயதாமனனாத் (34)

(ப-ரை) इयदामननात् (இயதாமனனாத்)=வித்யையின் உத்பத்தி ஸமயத்திலேயே இரண்டுமந்திரங்களிலும் "द्वौ (த்வௌ)=என்றும் "पिबन्तौ (பிபந்தௌ)=என்றுமாக த்வித்வரூபமான இயத்தையானது=இரண்டாக இருத்தலானது சொல்லப் பட்டிருப்பதால் அதன் மூலம் அறியப்பட்ட வித்யைக்யத்தை யொட்டி பிறவற்றை மாற்ற வேண்டுவது அவஸ்யமாகவாவதால் இங்கு வித்யைக்யம் கொள்ளுவது தான் பொருந்தும். (34) (எ-று)

வையாஸிக ந்யாயமாலே.

(க-ரை) "ருதம் பிபந்தௌ" என்றும் "த்வா ஸுபர்ணா" என்றும் சொல்லப்படுவது இரண்டு வித்யைகளா? அல்லது இரண்டும் ஒரேவித்யைதானா? என்பது ஸந்தேஹம். ஓரிடத்தில் இரண்டு போக்தாக்களென்றும், மற்றோரிடத்தில் ஒன்று போக்தா மற்றொன்று அபோக்தா வென்றும் காணப்படுவதால் இவ்விரண்டும் வெவ்வேறுவித்தைகளாகும் என்பது பூர்வபக்ஷம். முதலாவது ஸமன்வயாத்தியாயத்தில் போக்தா அபோக்தாஇரண்டுமே ஸுக்ருதபலபோக்தாக்கள் எனச் சொல்லப்பட்டது. இரண்டிடத்திலும் த்வித்வரூப இயத்தையானது ஐக்யக்ஞானமுறையால் அறியப்படுவதால் இருமந்திரங்களிலும் வித்யையொன்றே சொல்லப்படுகிறது. என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—ஆதர்வணிகர்களும், ஸ்வேதாஸ்வதரர்களும் ஆத்மாவைப்பற்றிச் சொல்லுமிடத்து "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோ ரந்ய:பிப்பலம் ஸ்வாத்வத்தி அநஸ்நந் அந்யோ அபிசாகசீதி" (ஒன்றுடனொன்று சேர்ந்தவைகளும் ஒன்றுக் கொன்று ஸகாக்களுமான இரண்டு கருடபக்ஷிகள் (ஜீவபரமாத்மாக்கள்) ஸமானமான விருக்ஷத்தை (தேஹத்தை)தழுவிக் கொண்டிருக்கின்றன. அவ்விரண்டனு ளொன்று கர்மபலனை ருசிபார்த்து அநுபவிக்கிறது. மற்றது கர்மபலனை அநுபவிக்காது ஸாக்ஷியாகப்பார்த்துக் கொண்டிருக்கிறது எனப் படிக்கின்றனர். அவ்விதமே கடர்கள் "கர்மபலனை அநுபவிப்பவர்களும், ஸுக்ருதத்தின் பலபூதமான சரீரத்தில் ப்ரஹ்மத்தினது ஸ்தானங்

श्वेताश्वतराश्च पठन्ति। तथा कठाः 'ऋतं पिबन्तौ सुकृतस्य लोके गुहां प्रविष्टौ परमे परार्धे। छायातपौ ब्रह्मविदो वदन्ति पञ्चाग्नयो ये च त्रिणाचिकेताः' (क० ३। १) इति। किमत्र विद्यैकत्वमुत विद्यानानात्वमिति संशयः। किं तावत्प्राप्तं, विद्यानानात्वमिति। कुतः। विशेषदर्शनात्। द्वा सुपर्णेत्यत्र ह्येकस्य भोक्तृत्वं दृश्यते एकस्य चाभोक्तृत्वं दृश्यते। ऋतं पिबन्तावित्यत्रोभयोरपि भोक्तृत्वमेव दृश्यते तद्वेद्यरूपं भिद्यमानं विद्यां भिन्द्यादित्येवं प्राप्ते ब्रवीति विद्यैकत्वमिति। कुतः—यत उभयोरप्यनयोर्मन्त्रयोरियत्तापरिच्छिन्नं द्वित्वोपेतं वेद्यरूपमभिन्नमामनन्ति। ननु दर्शितो रूपभेदः। नेत्युच्यते। उभावप्येतौ मन्त्रौ जीवद्वितीयमीश्वरं प्रतिपादयतो नार्थान्तरम्। 'द्वा सुपर्णा' इत्यत्र तावत् 'अनश्नन्नन्यो अभिचाकशीति' इत्यशनायाद्यतीतः परमात्मा प्रतिपाद्यते। वाक्यशेषेऽपि च स एव प्रतिपाद्यमानो दृश्यते। 'जुष्टं यदा पश्यत्यन्यमीशमस्य महिमानम्' (श्वे० ४। ७)

களுக்குள் சிறந்த ஹிருதயகுஹையில் பிரவேசித்திருப்பனவுமான பொருளை த்ரிணசிகேதர்களானயாதொரு பஞ்சாக்னிகள் நிழலும் வெய்யிலும் போல வெனச் சொல்லுகின்றனர்" எனப் படிக்கின்றனர். இவ்விரண்டிடத்திலுமுள்ள வித்யை ஒன்றா? வித்யை வெவ்வேறா? என ஸம்சயமுதயமாகிறது. ஏன்? வேற்றுமை காணப்படுவதே அதன் காரணமென்க. அதாவது:— "த்வா ஸுபர்ணா" என்ற இந்த விடத்திலோ வெனில் ஒன்றுக்குப் போக்த்திருத்வமும், மற்றொன்றுக்கு அபோக்திருத்வமும் காணக்கிடக்கின்றது. "ருதம்பிபந்தௌ" என்ற விந்த விடத்திலோ இரண்டுக்கும் போக்திருத்வமே காணக்கிடக்கின்றது. ஆனது பற்றி பேதப்படும் வேத்யத்தின் ரூபமானது வித்யையையும் பேதப்படுத்தத் தான் செய்யும் என ப்ராப்தமாகவே வித்யைகத்வமே சொல்லவேண்டு மெனச்சொல்லுகிறார். ஏன்? எக்காரணம் பற்றி இவ்விரண்டு மந்திரங்களிலும் இவ்வளவெனச் சொல்லப்பட்டதோ அதாவது:—த்வித்வத்துடன் கூடிய வேத்யத்தின் ரூபமானது அபின்னமாகவே (ஒன்றாகவே) சொல்லப்பட்டதோ (அக்காரணம் பற்றியே என்க.)

சங்கை—ரூபபேத மிருப்பதாகக் காண்பிக்கப் பட்டிருக்கிறதே எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை எனச் சொல்லப்படுகிறது. இவ்விரண்டு மந்திரங்களும் ஜீவனுக்கு இரண்டாவதாகவான ஈஸ்வரனைச் சொல்லுகின்றனவே அன்றி வேறுபொருளைச் சொல்லவில்லை. "த்வா ஸுபர்ணா" என்ற விடத்திலோ வெனில் "மற்றவன் கர்ம பலானுபவமில்லாதவனாய் ஸாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறான்" என்றதால் அஸநாயாதிகளைக் கடந்த பரமாத்மா சொல்லப்படுகிறார். மேலுள்ள வாக்கியத்திலும் "தியானாதிகளினால் ஸேவிக்கப்பட்டவரும் தியானபரிபாகதசையில் ஈசனும் (உண்மையில்) விசிஷ்டரூபத்தை விட வேறுபட்டவரும், அதாவது:—சோதிக்கப்பட்ட சின்மாத்திரனுமான பொருளை ப்ரத்யக்காக எப்பொழுது அனுபவிக்கின்றானோ அப்பொழுது இவரது ஸ்வரூபத்தை யடைகிறான்" என்றதால் அவரே உபதேசிக்கப்படுவதாகத் தெரிகிறது. "ருதம் பிபந்தௌ" என்ற விடத்திலோ ஜீவன் பானஞ்செய்யுங்கால் அசனாயாதிகளைக் கடந்தவரான பரமாத்

इति। 'ऋतं पिबन्तौ' इत्यत्र तु जीवे पिबत्यशनायाद्यतीतः परमात्मापि साहचर्याच्छत्रिन्यायेन पिबतीत्युपचर्यते। परमात्मप्रकरणं ह्येतत् 'अन्यत्र धर्मादन्यत्राधर्मात्' (क० २। १४) इत्युपक्रमात्। तद्विषय एव चात्रापि वाक्यशेषो भवति 'यः सेतुरीजानानामक्षरं ब्रह्म यत्परम्' (क० ३। २) इति। 'गुहां प्रविष्टावात्मानौ हि—' (ब्र० सू० १।२।११) इत्यत्र चैतत्प्रपञ्चितम्। तस्मान्नास्ति वेद्यभेदस्तस्माच्च विद्यैकत्वम्। अपिच त्रिष्वप्येतेषु वेदान्तेषु पौर्वापर्यालोचने परमात्मविद्यैवावगम्यते। तादात्म्यविवक्षयैव जीवोपादानं नार्थान्तरविवक्षया। नच परमात्मविद्यायां भेदाभेदविचारावतारोऽस्तीत्युक्तम्। तस्मात्प्रपञ्चार्थ एवैष योगः। तस्माच्चाधिकधर्मोपसंहार इति ॥ ३४ ॥

२२ अन्तराधिकरणम्। सू० ३५–३६

अन्तरा भूतग्रामवत्स्वात्मनः ॥ ३५ ॥

மாவும் கூடவிருப்பதுபற்றி * சத்ரிநியாயத்தினால் பானஞ்செய்கிறார் என உபசார முறையால் கூறப்படுகிறது. பரமாத்மப்ரகரணமன்றோ இது. "தர்மத்தை விட வேறானது "அதர்மத்தைவிட வேறானது" என உபக்கிரமமிருப்பதே அதன் காரணமாகும். "எது ஈஜானர்களுக்கு ஸேதுவோ எது பரம்ப்ரம்ஹமான அக்ஷரமோ" என்பதாய் இவ்விடத்திலுங் கூட பரமாத்மவிஷயமாகவே உள்ள வாக்ய சேஷமு மிருக்கிறது. "குஹாம்ப்ரவிஷ்டா வாத்மாநௌஹி" என்ற விடத்தில் இது விரிக்கப்பட்டுமிருக்கிறது. ஆனது பற்றி வேத்யபேதமில்லை. ஆனது பற்றியும் வித்யை ஒன்றாகவே ஆகிறது. மேலும், இம்மூன்று வேதாந்தங்களிலும் முன்பின் பரியாலோசனஞ் செய்யுங்கால் பரமாத்ம வித்யையே அறியப்படுகிறது. தாதாத்மியம் சொல்லவெண்ணங் கொண்டு ஜீவோபாதானஞ் செய்யப்பட்டதேயொழிய வேறுபொருளைச் சொல்லவெண்ணங் கொண்டல்ல. பரமாத்மவித்யையில் பேதாபேதவிசாரத்துக்கு இடமில்லை யென்று சொல்லவும் பட்டிருக்கிறது. ஆகவே விஸ்தாரத்துக்குவேண்டியே இந்த ஸூத்திரமேற்பட்டது. ஆனதுபற்றியும் அதிகமான தர்மத்தின் உபஸம்ஹார மேற்படுகிறது.

இருபத்தொன்றாவது இயததிகரணம் முற்றிற்று.

அந்தராதிகரணம்.

(ஸூ) அந்தரா பூதக்ராமவத் ஸ்வாத்மநः (35)

(ப—ரை) स्वात्मन (ஸ்வாத்மனः)=ஆத்மாவொருவனுக்கே, अन्तरा (அந்தரா)= ஸர்வாந்தரத்வமானது பொருந்தும். भूतग्रामवत् (பூதக்கிராமவத்)=எல்லாப் பூதங்

---

* "சத்ரிணோகச்சந்தி" குடையுள்ளவர் போகின்றனர் என்ற விடத்தில் ஒரு கூட்டத்தில் ஒருவனே குடைபிடித்துச் சென்றபோதிலும் யாவரும் குடைபிடித்துச் சொல்லுவதாகச் சொல்லப்படுவதே சத்ரிநியாய மெனப்படும்,

विद्याभेदोऽथ विद्यैक्यं स्यादुषस्तकहोळयोः । समानस्य द्विराम्नानाद्विद्याभेदः प्रतीयते ॥ १ ॥

सर्वान्तरत्वमुभयोरस्ति विद्यैकता ततः । शङ्काविशेषनुत्त्यै द्विः पाठस्तत्त्वमसीतिवत् ॥ २ ॥

'यत्साक्षादपरोक्षाद्ब्रह्म य आत्मा सर्वान्तरः' (बृ० ३ । ४ । १–३ । ५ । १) इत्येवं द्विरुपस्तकहोलप्रश्नयोर्नैरन्तर्येण वाजसनेयिनः समामनन्ति । तत्र संशयः—विद्यैकत्वं वा स्याद्विद्यानानात्वं वेति । विद्यानानात्वमिति तावत्प्राप्तम् । अभ्याससामर्थ्यात् । अन्यथा ह्यन्यूनानतिरिक्तार्थे द्विराम्नानमनर्थकमेव स्यात् । तस्माद्यथाभ्यासात्कर्मभेद एवमभ्यासाद्विद्याभेद इत्येवं प्राप्ते प्रत्याह—अन्तराम्नानाविशेषात्स्वात्मनो विद्यैकत्वमिति । सर्वान्तरो हि स्वात्मोभयत्राप्यविशिष्टः पृच्छ्यते च प्रत्युच्यते च । नहि द्वावात्मानावेकस्मि-

---

களிலும் ஆத்மாவொருவனே ஸர்வாந்தரனாகச் சொல்லப்படுவது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காண்க (35) (எ—று)

வையாஸிக நியாயமாலை

(க—ரை) பிருஹதாரண்யகத்தில் உஷஸ்தர், கஹோளர், என்ற மஹருஷிகளின் ப்ரஶ்னத்தில் சொல்லப்படும் வித்யை வெவ்வேறு? அல்லது ஒன்று? என்பது ஸந்தேஹம். ஸமானமாயுள்ளவனையே இரண்டுதடவை சொல்லியிருப்பது கொண்டு வித்யை வெவ்வேறுஎன்றுதான் தோன்றுகிறது என்பது பூர்வபக்ஷம். இரண்டிடத்திலு முள்ள ஆத்மாவுக்கும் ஸர்வாந்தரத்வமிருக்கிறது. அதனால் வித்யை ஏகத்வமானது ஸித்திக்கிறது. சங்காவிசேஷத்தைப் போக்கவேண்டியே தத்த்வமஸி என்பது போல இரண்டுதடவை படிக்கப்பட்டது. என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—வாஜஸநேயிகள் உஷஸ்த கஹோளப்ரஶ்னங்களில் "எந்தப்ரம்ஹம் ஸாக்ஷாத்தாயும் (அகௌணமாயும்) அபரோக்ஷாத் (அவ்யவஹிதமாயும்) உள்ளதோ எந்த ஆத்மா ஸர்வாந்தரமோ" என இவ்விதம் இடைபெறாது இரண்டு தடவை படிக்கின்றனர். அங்கு ஸம்சய முண்டாகிறது அதாவது:—வித்யை ஒன்று? அல்லது வித்யை வெவ்வேறு? என்றும். வித்யை வெவ்வேறென்றே முதலில் ப்ராப்தமாகிறது. அப்யாஸம் (அடிக்கடி உபதேசம்) காணப்படுவதே அதன் காரணமாகும். இவ்விதமில்லாவிடிலோ ஏற்றத்தாழ்வற்ற பொருளில் இரண்டு தடவை படித்தலானது பயனற்றதாகவே ஆகிவிடும். ஆனதுபற்றி இரண்டுதடவை படிக்கப்படுவதை யொட்டி கர்மபேத மேற்படுவது எவ்விதமோ இவ்விதமே அப்யாஸத்தால் வித்யாபேதந்தான் சொல்லவேண்டும் என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ஸித்தாந்தஞ் சொல்லுகிறார்—ஸ்வாத்மாவுக்கு ஸர்வாந்தரத்வம் சொன்னதில் விசேஷமெதுவு மில்லாதிருப்பதால் வித்யை ஒன்றென்றே ஏற்படுகிறது. ஸர்வாந்தரனான ஸ்வாத்மாவோ இரண்டிடத்திலும் பொதுவாகக் கேட்கவும் படுகிறது பதிலும் சொல்லப்படுகிறது. இரண்டு ஆத்மாக்கள் ஒரு தேஹத்தில் ஸர்வாந்தரர்களாக இருக்கமுடியாதன்றோ. அப்பொழுதோ ஒருவனுக்கே ஸர்வாந்தரத்வமானது முக்யமாக ஏற்படும். ஒருவனுக்கோ பூதஸமூஹத்துக்குப் போல ஸர்வாந்த

न्देहे सर्वान्तरौ संभवतः। तदा ह्येकस्याक्षसं सर्वान्तरत्वमवकल्प्येत। एकस्य तु भूतग्रामवन्नैव सर्वान्तरत्वं स्यात्। यथाच पञ्चभूतसमूहे देहे पृथिव्या आपोऽन्तरा अद्भ्यस्तेजोऽन्तरमिति सत्यप्यापेक्षिकेऽन्तरत्वे नैव मुख्यं सर्वान्तरत्वं भवति तथेहापीत्यर्थः। अथवा भूतग्रामवदिति श्रुत्यन्तरं निदर्शयति। यथा—'एको देवः सर्वभूतेषु गूढः सर्वव्यापी सर्वभूतान्तरात्मा' (श्वे० ६। ११) इत्यस्मिन्मन्त्रे समस्तेषु भूतग्रामेष्वेक एव सर्वान्तर आत्माम्नायते। एवमनयोरपि ब्राह्मणयोरित्यर्थः। तस्माद्विद्यैक्याद्विद्यैकत्वमिति ॥३५॥

अन्यथा भेदानुपपत्तिरिति चेन्नोपदेशान्तरवत् ॥ ३६ ॥

अथ यदुक्तमनभ्युपगम्यमाने विद्याभेद आम्नानभेदानुपपत्तिरिति तत्परिहर्तव्यम्। अत्रोच्यते—नायं दोषः। उपदेशान्तरवदुपपत्तेः। यथा ताण्डिनामुपनिषदि षष्ठे प्रपाठके—'स आत्मा तत्त्वमसि श्वेतकेतो' (छा० ६। ८। ७) इति नवकृत्वोऽप्युपदेशे न विद्या-

---

ரத்வமானது ஸம்பவிக்கவே மாட்டாது. ஐந்து பூதங்களின் ஸமூஹமான தேஹத்தில் பிருதிவியைக் காட்டிலும் ஜலம் ஆந்தரமானது, ஜலத்தைக்காட்டிலும் தேஜஸ் ஆந்தரமானது, என ஆபேக்ஷிகமான அந்தரத்வமானது இருந்தபோதிலுங்கூட முக்கியமான ஸர்வாந்தரத்வமானது எவ்விதம் ஸம்பவிப்பதில்லையோ அதுபோலவே இங்குமென்று பொருள். அல்லது பூதக்ராமவத் என்றதால் வேறு சுருதியைத் திருஷ்டாந்தமாகக் காட்டுகிறார் "ஒரே தேவன் ஸர்வபூதங்களிலும் மறைந்தவனாகவும், ஸர்வவியாபியாகவும், ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாகவுமாகிறார்" என்ற இந்தமந்திரத்தில் எல்லாப் பூதஸமூஹங்களிலும் ஒரே ஸர்வாந்தர ஆத்மா சொல்லப்படுவது எவ்விதமோ இவ்விதமே இவ்விருப்ராம்ஹணங்களிலும் என்பது அதன் பொருள். ஆகவே வேத்யமானது ஒன்றாயிருப்பதால் வித்யைகத்வந்தான் சொல்லவேண்டும். (35) (எ-று)

(ஸூ) அந்யதா பேதாநுபபத்திரிதி சேத் ந உபதேசாந்தரவத் (36)

(ப-ரை) **अन्यथा** (அந்யதா)=வித்யாபேதமொப்பாத பக்ஷத்தில் **भेदानुपपत्तिः** (பேதாநுபபத்தி:)=ஶ்ருதியிலுள்ள உபதேசபேதமானது பொருத்தமற்றதாக வாகிவிடும். **इतिचेत्** (இதிசேத்)=என்றாலோ **न** (ந)=அதுபொருந்தாது. **தத்த்வமஸி** என்பதாய் ஒன்பது தடவை உபதேசஞ் செய்திருப்பது போலவே இங்கு மிருக்கலாம். (36) (எ-று)

பாஷ்யம்.—வித்யாபேதமானது ஒப்பப்படாவிடில் உபதேசபேதமானது பொருத்தமற்றதாக வாகிவிடும் என யாதொன்று சொல்லப்பட்டதோ அதைப் பரிஹரிக்கவேண்டும். இவ்விஷயத்திற் சொல்லப்படுகிறது. இந்தத் தோஷமில்லை. வேறு உபதேசம் போல பொருந்தக்கூடியதாக விருப்பதே அதன் காரணமாகும். தாண்டிகளுடைய உபநிடதத்தின் ஆறாவதுப்ரபாடகத்தில் "அது ஆத்மா ஹேஶ்வேதகே

भेदो भवत्येवमिहापि भविष्यति। कथं च नवकृत्वोऽप्युपदेशे विद्याभेदो न भवति। उपक्रमोपसंहाराभ्यामेकार्थतावगमात्। 'भूय एव मा भगवान्विज्ञापयतु' (छा० ६।५।४) इति चैकस्यैवार्थस्य पुनः पुनः प्रतिपिपादयिषितव्यत्वेनोपक्षेपात्। आशङ्कान्तरनिराकरणेन चासकृदुपदेशोपपत्तेः। एवमिहापि प्रश्नरूपाभेदात् 'अतोऽन्यदार्तम्' (बृ० ३।४।२-३।५।१) इति च परिसमाप्त्यविशेषादुपक्रमोपसंहारौ तावदेकार्थविषयौ दृश्येते। 'यदेव साक्षादपरोक्षाद्ब्रह्म' (बृ० ३।५।१) इति द्वितीये प्रश्न एवकारं प्रयुञ्जानः पूर्वप्रश्नगतमेवार्थमुत्तरत्रानुकृष्यमाणं दर्शयति। पूर्वस्मिंश्च ब्राह्मणे कार्यकरणव्यतिरिक्तस्यात्मनः सद्भावः कथ्यते, उत्तरस्मिंस्तु तस्यैवाशनायादिसंसारधर्मातीतत्वं कथ्यते, इत्येकार्थतोपपत्तिः। तस्मादेका विद्येति ॥ ३६ ॥

தோ! நீ அதாக இருக்கிறாய்" என ஒன்பது தடவை உபதேசம் காணப்படினுங் கூட வித்யாபேதமானது எவ்விதமேற்படுவதில்லையோ இவ்விதமே இங்கு மாக லாம். ஒன்பதுதடவை உபதேசிக்கப்படினுங்கூட வித்யாபேதம் என் வருவதில்லை எனின்? உபக்ரமோப ஸம்ஹாரங்களினால் ஒரே பொருளுள்ளதா யிருக்குந் தன்மை அறியப்படுவதாலென்க "திரும்பவுமே என்னைப் பெரியாருபதேசிக்கட் டும்" என ஒரே பொருளுக்கு அடிக்கடி உபதேசிக்கப்படவேண்டுவதின் தன்மை யுடன் சொல்லல் காணப்படுகிறது. வேறு ஆசங்கையை நிராகரணஞ் செய்யும் வாயிலாக அடிக்கடி செய்யப்படும் உபதேசம் பொருந்தக்கூடியதாகவு மாகிறது. இவ்விதம் இங்கும் ப்ரஶ்னத்தின் ரூபம் ஒன்றாக விருப்பதாலும் "இதைவிட வேறுபொருள் அழியக்கூடியது" என்பதாய் முடிப்பதில் வேற்றுமை யில்லா திருப்பதாலும் உபக்ரமோபஸம்ஹாரங்கள் ஒரேபொருளைப் பற்றியனவாகக் காணக் கிடக்கின்றன. எந்த ப்ரம்ஹமே ஸாக்ஷாத்தாயும்(அகௌணமாயும்)அபரோக்ஷாத் (அவ்யவஹிதமாயும்) இருக்கின்றதோ" என்ற இரண்டாவது கேள்வியில் ஏவகா ரத்தை (ஏவ என்ற சப்தத்தை) ப்ரயோகஞ்செய்கின்ற ஶ்ருதியானது முந்தின ப்ரஶ்னத்திலிருக்கின்றதாகவே யுள்ள அர்த்தத்தையே மேலுள்ள விடத்திலும் தொடர்ந்து சேர்த்துக்கொள்ளப்படுவதாகக் காண்பிக்கிறது. முந்தினப்ராம்ஹ ணத்திலோ காரியகரணத்தை விட வேறுபட்ட ஆத்மாவுக்கு ஸத்பாவமானது சொல்லப்பட்டது, மேலுள்ளப்ராம்ஹணத்திலோ அந்த ஆத்மாவுக்கே அஶநா யாதிகளான ஸம்ஸார தர்மங்களைக் கடந்திருத்தல் சொல்லப்படுகிறது, என்பது பற்றி ஏகார்த்தத்வமானது பொருந்தக்கூடியதாகவே ஆகிறது. ஆகவே வித்யை ஒன்றென்றே ஏற்படுகிறது. (36) (எ-று)

இருபத்திரண்டாவது அந்தரத்வாதிகரணம் முற்றிற்று.

வ்யதிஹாராதிகரணம் 23.

(ஸூ) வ்யதிஹாரோ விசிம்ஷந்தி ஹி இதரவத் (37)

२३ व्यतिहाराधिकरणम् । सू० ३७

व्यतिहारो विशिंषन्ति हीतरवत् ॥ ३७ ॥

व्यतिहारे स्वात्मरव्योरेकधा धीरुत द्विधा । वस्त्वैक्यादेकधैक्यस्य दार्ढ्याय व्यतिहारगीः ॥ १ ॥

ऐक्येऽपि व्यतिहारोक्त्या धीर्द्वेधेशस्य जीवता । युक्तोपास्त्यै वाचनिकी मूर्तिवद्दार्ढ्यमार्थिकम् ॥ २ ॥

यथा—'तद्योऽहं सोऽसौ योऽसौ सोऽहम्' इत्यादित्यपुरुषं प्रकृत्यैतरेयिणः समामनन्ति, तथा जाबालाः 'त्वं वा अहमस्मि भगवो देवतेऽहं वै त्वमसि' इति । तत्र संशयः—किमिह व्यतिहारेणोभयरूपा मतिः कर्तव्योतैकरूपैवेति । एकरूपैवेति तावदाह । नह्यत्रात्मन ईश्वरेणैकत्वं मुक्त्वान्यत्किञ्चिच्चिन्तयितव्यमस्ति । यदि चैवं चिन्तयितव्यो

(ப–ரை) **व्यतिहारः** (வ்யதிஹாரः) = ஜீவேஶ்வரர்களுக்கு பரஸ்பரம் விசேஷண விசேஷ்யபாவமானது ஆத்யானத்துக்கு வேண்டி ஶ்ருதியிற் சொல்லப் படுகிறது. **इतरवत्** (இதரவத்)=ஸத்யகாமத்வம் முதலியகுணங்கள் ஆத்யானத்துக்கு வேண்டி சொல்லப்படுவது எவ்விதமோ அவ்விதமே இங்குங் காண்க. அவ்விதமே **विशिंषन्तिहि** (விசிம்ஷந்திஹி)= "நீயாக நானிருக்கிறேன் நானாகநீர் இருக்கிறீர்" என்பதாய் ஜீவேஶ்வரர்களுக்கு விசேஷண விசேஷ்யபாவங் கொடுத்துக் கூறுகின்றன ரன்றோ? (37) (எ–று)

வையாஸிக நியாயமாலே.

(க–ரை) சொந்த ஆத்மாவுக்கும் ஸூரியனுக்கும் (ஸூர்யாந்தவர்த்தி ஈஶ்வரனுக்கும்) வ்யதிஹாரம் (விசேஷண விசேஷ்யபாவம்) சொன்ன விடத்தில் உள்ள புத்தியானது ஒன்றா? அல்லது இரண்டுவிதமானதா? என்பது ஸந்தேஹம். வஸ்து ஒன்றாக விருப்பதால் புத்தி ஒன்றேதானாகும். ஐக்கியத்தைத் திருடப்படுத்துவதற்கு வேண்டி வ்யதிஹாரம் (விசேஷணவிசேஷ்யபாவம்) சொல்லப்படுகிறது என்பது பூர்வபக்ஷம். ஐக்யமிருந்தபோதிலுங் கூட வ்யதிஹாரஞ் சொல்லியிருப்பதிலிருந்து புத்தியானது இரண்டேதானாகும். ஈஶ்வரனுக்கு ஜீவத்வமானது உபாஸ்திக்கு வேண்டி சாஸ்திரமுபதேசிப்பதால் பொருந்தக்கூடியதாக வாகலாம். மூர்த்தியானது போல ஐக்கிய தார்ட்யமானது ஆர்த்திகமாக (இவ்விதஞ்சொன்னதிலிருந்து ஏற்படுவதாக) ஆகிறது என்பது ஸித்தாந்தம். (எ–று)

பாஷ்யம்.—"ஆகவே யாதொரு நானுண்டோ அவர் இவரே. யாதொரு இவருண்டோ அவரே நான்" என்பதாய் ஆதித்யமண்டலாபிமானி புருஷனைச் சொல்லத் தொடங்கி ஐதரேயிகள் எவ்விதமோ அவ்விதமே "ஓபகவானான தேவதையே! நீராகவே நானிருக்கிறேன், நானாகவே நீர் இருக்கிறீர்" என்று ஜாபாலர்களும் படிக்கின்றனர். அவ்விடத்தில் ஸம்சயமுண்டாகிறது. அதாவது:—இங்கு விசேஷண விசேஷ்யபாவத்துடன் இரண்டு ரூபமுள்ளதான புத்தி செய்ய வேண்டுமா? அல்லது ஒரே ரூபமுள்ள புத்தி செய்யவேண்டுமா? என்றும். ஏக ரூபமான புத்தியேதான் செய்யவேண்டும் என்கிறார். இவ்விடத்தில் ஆத்மாவுக்கு

विशेषः परिकल्प्येत संसारिणश्चेश्वरात्मत्वमीश्वरस्य संसार्यात्मत्वमिति । तत्र संसारिणस्तावदीश्वरात्मत्व उत्कर्षो भवेदीश्वरस्य तु संसार्यात्मत्वे निकर्षः कृतः स्यात् । तस्मादैकरूप्यमेव मतेः । व्यतिहाराम्नायस्त्वेकत्वदृढीकारार्थ इति । एवं प्राप्ते प्रत्याह—व्यतिहारोऽयमाध्यानायाम्नायते इतरवत् । यथेतरे गुणाः सर्वात्मत्वप्रभृतय आध्यानायाम्नायन्ते तद्वत् । तथाहि विशिषन्ति समाम्नातार उभयोच्चारणेन 'त्वमहमस्म्यहं च त्वमसि' इति । तच्चोभयरूपायां मतौ कर्तव्यायामर्थवद्भवति । अन्यथा हीदं विशेषेणोभयाम्नानमनर्थकं स्यात् । एकेनैव कृतत्वात् । ननूभयाम्नानस्यार्थविशेषे परिकल्प्यमाने देवतायाः संसार्यात्मत्वापत्तेर्निकर्षः प्रसज्येतेत्युक्तम् । नैष दोषः । ऐकात्म्यस्यैवानेन प्रकारेणानुचिन्त्यमान-

---

ஈஸ்வரனுடன் ஏகத்வத்தை விடுத்து வேறு ஒன்றும் சிந்திக்கக்கூடியதாகவில்லையன்றோ? ஸம்ஸாரிக்கு ஈஸ்வராத்மத்வமும் ஈஸ்வரனுக்கு ஸம்ஸார்யாத்மத்வமும் என்ற விசேஷமானது சிந்திக்க வேண்டுவதாகவாகிறது என இவ்விதம் கல்பிக்கப் படுமானல் அவ்வித கல்பனையில் ஸம்ஸாரிக்கு ஈஸ்வராத்மத்வஞ் சொல்லுவதில் உத்கர்ஷமும், ஈஸ்வரனுக்கு ஸம்ஸார்யாத்மத்வஞ் சொல்லுவதில் நிகர்ஷமும் செய்யப்பட்டதாகவாகும். ஆனது பற்றி புத்திக்கு ஐகரூப்யமே தான் பொருந்துகிறது. வ்யதிஹாரஞ் சொன்னதோ வெனில் ஏகத்வத்தைத் திருடப்படுத்துவதற்கு வேண்டியே என இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்தமாகவே பதில் (ஸித்தாந்தம்) சொல்லுகிருர். இந்தவ்யதிஹாரமானது (விசேஷண விசேஷ்யபாவமானது) ஆத்யானத்துக்கு வேண்டி சொல்லப்படுகிறது. இதரம் போலவாம். அதாவது:—ஸர்வாத்மத்வம் முதலிய வேறு குணங்கள் ஆத்யானத்துக்கு வேண்டி சொல்லப்படுவது எவ்விதமோ அவ்விதமேயாம். அவ்விதமே யன்றோ "நீராக நானிருக்கிறேன். நானுக நீர் இருக்கிறீர்" என்பதாய் உபய (ஜீவப்ரம்ஹ) உச்சாரணத்தினல் ஶ்ருதிகள் விசேஷித்துக் கூறுகின்றன. அதுவும் இரண்டு ரூபமான புத்திசெய்யும் பொழுது பயனுள்ளதாக வாகிறது. அவ்வித மில்லாவிடில் விசேஷமாகச் சொல்லிய இந்த உபாயோபதேசமானது பயனற்றதாக வாகிவிடும். ஒன்றினுலேயே (நீராக நானிருக்கிறேன் என்பதால் மட்டுமே) போதுமானதாகவாவதே அதன் காரணமாகும்.

சங்கை—உபயாம்னுனத்துக்கு (ஒன்றுக்கே விசேஷண விசேஷ்யபாவங் கொடுத்துக் கூறியதற்கு) அர்த்தவிசேஷம் கல்பிக்கப்படுமானல் தேவதைக்கு ஸம்ஸார்யாத்மத்வம் வருவதன் மூலம் நிகர்ஷம் (இழிவு) வந்து விடத்தெரியும் எனச் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ எனின்?

உத்தரம்—இந்தத் தோஷமில்லை. இம்முறையினுல் ஐகாத்மியமே அநுசிந்த்யமாக விருப்பதே அதன் காரணமாகும்.

சங்கை—இவ்விதமாயின் அதே ஏகத்வ திருடீகாரமேயன்றோ வரத்தெரியும் எனின்?

உத்தரம்—நாம் ஏகத்வ திருடீகாரத்தை மறுக்கின்றோமில்லை. பின்னையோ வென்னில் விசேஷணவிசேஷ்யபாவத்தினுல் இங்கு வசனப்ராமாண்யத்தை முன்

त्वात्। नन्वेवं सति स एवैकत्वदृढीकार आपद्येत। न वयमेकत्वदृढीकारं वारयामः, किं तर्हि व्यतिहारेणेह द्विरूपा मतिः कर्तव्या वचनप्रामाण्यान्नैकरूपेत्येतावदुपपादयामः फलतस्त्वेकत्वमपि दृढीभवति। यथाध्यानार्थेऽपि सत्यकामादिगुणोपदेशे तद्गुण ईश्वरः प्रसिध्यति तद्वत्। तस्मादयमाध्यातव्यो व्यतिहारः समाने च विषय उपसंहर्तव्यो भवतीति॥

२४ सत्याद्यधिकरणम्। सू० ३८

सैव हि सत्यादयः॥ ३८॥

னிட்டு இரண்டு ரூபமுள்ள புத்திசெய்ய வேண்டுமேயல்லாது ஏகரூபமான புத்தியல்ல என இவ்வளவு மட்டும் சொல்லுகிறோம். பலத்தினல் (இவ்விதம் தியானிப்பதன் மூலம்) ஏகத்வமும் திருடமாக வேற்பட்டுவிடுகிறது. ஆத்யானத்துக்கு வேண்டி ஸத்யகாமத்வாதி குணோபதேசஞ் செய்திருப்பினுங் கூட அத்தகைய குணம் வாய்ந்தவராக ஈஸ்வரன் ஸித்திப்பது எவ்விதமோ அவ்விதமேயாம். ஆகவே இந்த ஆத்யானஞ் செய்ய வேண்டுவதாகவுள்ள விசேஷண விசேஷ்யபாவமானது ஸமானமானவிஷயத்திலும் சேர்த்துக்கொள்ளக்கூடியதாக வாகிறது என்பதாம்.

இருபத்துமூன்ருவது வ்யதிஹாராதிகரணம் முற்றிற்று.

ஸத்த்யாத்யதிகரணம் 24.

(அ—கை) முந்தின அதிகரணத்தில் வ்யதிஹாரத்தினல் பேதநிர்தேசம் செய்திருப்பதிலிருந்து திருஷ்டிபேதமானது சொல்லப்பட்டது. "யாதானுமொரு அதிகாரியானவன் மஹத்தும்=வியாபகமும், யக்ஷம்=பூஜ்யமும், ப்ரதமஜம்=பௌதிகங்களுள் முதலிலுண்டானதுமான,(ஹிரண்யகர்ப்பரூபமான)ப்ரம்ஹத்தை ஸத்= என்றும் த்யத் என்றும் உபாஸிக்கின்ருனே அவன் இவ்வுலகங்களை யடைகிருன்" என ஸத்த்யவித்யையைச் சொல்லத்தொடங்கி "அத்தகைய யாதொரு அந்த ஸத்த்யமுண்டோ இவன் அந்த ஆதித்யனே, அதாவது: இந்த மண்டலத்தில் யாதொரு புருஷனுண்டோ இவனே. அவனுக்கு அஹர் என்பது ரஹஸ்ய நாமமாகும். "எவன் இவ்வித முபாஸிக்கிருனே" என்றவிடத்திலும், "வலது கண்ணில் யாதொரு புருஷனுண்டோ அவனுக்கு அஹம் என்பது ரஹஸ்ய நாமமாகும் எவன் இவ்விதமுபாஸிக்கிருனே அவன் பாபத்தை நாசஞ்செய்து விலக்குகிருன்" என்றவிடத்திலும் பலபேதம் காணப்படுவதால் வித்யாபேத மிருக்கட்டும் எனப் பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே அதைப் போக்கவேண்டி இந்த அதிகரணம் ஆரம்பிக்கப்படுகிறது.—

(ஸூ) ஸைவஹி ஸத்த்யாதய: (38)

(ப—ரை) **सैव** (ஸைவ)="ஸயோஹைதம்" என்றதாதியால் ஸ தி யம் என மூன்று அக்ஷரங்களுடன் கூடின யாதொரு உபாஸனஞ் சொல்லப்பட்டதோ அது

द्वे सत्यविद्ये एका वा यक्ष स्त्याद्विवाक्ययोः । फलभेदादुभे लोकजयात्पापहतेः पृथक् ॥ १ ॥

प्रकृताकर्षणादेका पापाघातोऽङ्गधीफलम् । अर्थवादोऽथवा मुख्यो युक्तोऽधिकृतिकल्पकः ॥ २ ॥

'स यो हैतं महद्यक्षं प्रथमजं वेद सत्यं ब्रह्म' (बृ० ५ । ४ । १) इत्यादिना वाजसनेयके सत्यविद्यां सनामाक्षरोपासनां विधायानन्तरमाम्नायते—'तद्यत्तत्सत्यमसौ स आदित्यो य एष एतस्मिन्मण्डले पुरुषो यश्चायं दक्षिणेऽक्षन्पुरुषः' (बृ० ५ । ५ । २) इत्यादि । तत्र संशयः—किं द्वे एते सत्यविद्ये किंवैकैवेति । द्वे इति तावत्प्राप्तम् । भेदेन हि फलसंयोगो भवति 'जयतीमाँल्लोकान्' (बृ० ५ । ४ । १) इति पुरस्तात् । 'हन्ति पाप्मानं

வே ஆதித்யன் அக்ஷி இரண்டையும் அதிகரணமாக உடையதும் அஹ: என்றும், அஹம் என்றுமான குணங்களுள்ளதும் ஆக விதிக்கப்படுகிறதே யொழிய வேறுபட்டதாக வன்று. **हि** (ஹி)=யாதுகாரணத்தால் உபாஸ்யமான ஒருப்ரம்ஹத்துக்கே "தத்யத் ஸத்த்யம் அஸௌ ஸ:" என்றதாதிபால் **सत्याद्यः** (ஸத்த்யாதய:)= ஸத்த்யம் முதலியனவிசேஷணங்களாகச் சொல்லப்படுகின்றனவோ அக்காரணம் பற்றியே என்க. (38) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) "மஹத் யக்ஷம் ப்ரதமஜம் வேத" என்றவாக்கியத்திலும் "ஸ ஆதித்யோ ய ஏஷ ஏதஸ்மின் மண்டலே புருஷ:" என்ற தாதிவாக்கியத்திலும் இரண்டு ஸத்த்யவித்யைகள் சொல்லப்படுகின்றனவா? அல்லது ஒன்றா? என்பது ஸந்தேஹம். லோகப்ராப்த்தியும், பாபநிவிருத்தியும் தனியாகச் சொல்லியிருப்பதிலிருந்து பலபேதமிருப்பதால் இரண்டு வித்யைகள் என்றுதான் சொல்லவேண்டும் என்பது பூர்வபக்ஷம். ஆதித்யவாக்யத்தில் தொடர்ந்துவரும் பொருளைக் கூறும் "தத்யத், தத்" என்றதாதி ஸர்வநாமசப்தங்களால் தொடர்ந்த பொருள் சொல்லப்படுவதால் வித்யை ஒன்றேதானாகும் "அங்கத்தில் கூறப்படும் பயன் அர்த்தவாதமாகும்" என்றபடி பாபநிவிருத்திசொன்னது அங்க க்ஞானத்தின் பலனாகையால் அர்த்தவாதமாகும். அல்லது அதிகாரத்தைக் கல்பிப்பதுபற்றி பாபநிவிருத்தியானது முக்கியமாகவும் ஆகலாம் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"* ஸ யோ ஹைதம் மஹத் யக்ஷம் ப்ரதமஜம் வேத" என்றதாதியால் வாஜஸநேயகத்தில் நாமாக்ஷரோபாஸனத்துடன் கூடின ஸத்த்யவித்யையை விதித்துப் பிறகு "†தத்யத் தத் ஸத்த்யம் அஸௌ ஸ ஆதித்ய: ய ஏஷ ஏதஸ்மின் மண்டலே புருஷஃ யஶ்சாயம் தக்ஷிணேऽக்ஷன் புருஷஃ" என்றதாதி படிக்கப்படுகிறது. அங்குஸம்சயமுதயமாகிறது. இவை இரண்டு ஸத்த்ய வித்யைகளா? அல்லது ஒரேஸத்த்ய வித்யையா? என்றாம். இரண்டு வித்யைகள் என்றே முதலில் ப்ராப்த்தமாகிறது. "இவ்வுலகங்களை ஜயிக்கிறான்" என முன்னரும் "பாபங்களை நாசஞ் செய்து நீக்குகிறான்" எனப் பின்னருமாக வேறாகவன்றோ பல ஸம்பந்தம் காணப்படுகிறது. ("தத்யத் தத்" என்றதாதி ஸர்வநாம சப்தங்களால்) தொடர்ந்த

---

* இம்மந்திரத்தின் பொருளை அவதாரிகையிற் காண்க.

† இதன் பொருளையும் அவதாரிகையிற் காண்க.

जहाति च' (बृ० ५। ५। ३। ४) इत्युपरिष्टात्। प्रकृताकर्षणं तूपास्यैकत्वादिति। एवं प्राप्ते ब्रूमः—एकैवेयं सत्त्यविद्येति। कुतः—'तद्यत्तत्सत्त्यम्' (बृ० ५। ५। २) इति प्रकृताकर्षणात्। ननु विद्याभेदेऽपि प्रकृताकर्षणमुपास्यैकत्वादुपपद्यत इत्युक्तम्। नैतदेवम्। यत्र तु विस्पष्टात्कारणान्तराद्विद्याभेदः प्रतीयते तत्रैतदेवं स्यात्। अत्र तूभयथा संभवे तद्यत्तत्सत्त्यमिति प्रकृताकर्षणात्पूर्वविद्यासंबद्धमेव सत्त्यमुत्तरत्राकृष्यत इत्येकविद्यात्वनिश्चयः। यत्पुनरुक्तं फलान्तरश्रवणाद्विद्यान्तरमिति। अत्रोच्यते—तस्योपनिषदहरहमिति चाङ्गान्तरोपदेशस्य स्तावकमिदं फलान्तरश्रवणमित्यदोषः। अपिचार्थवादादेव फले कल्पयितव्ये सति विद्यैकत्वे चावयवेषु श्रूयमाणानि बहून्यपि फलान्यवयविन्यामेव विद्यायामुपसंहर्तव्यानि भवन्ति। तस्मात्सैवेयमेका सत्त्यविद्या तेन तेन विशेषेणोपेताम्नातेत्यतः सर्व एव सत्त्यादयो गुणा एकस्मिन्नेव प्रयोग उपसंहर्तव्याः॥

பொருளைக் கூறியிருப்பதோ வெனில் உபாஸ்யமான பொருள் ஒன்றாக விருப்பது பற்றியேயாம் என இவ்விதம்(பூர்வபக்ஷம்)ப்ராப்த்தமாகவே இந்த ஸத்த்ய வித்யை ஒன்றென்றே சொல்லுகிறோம். ஏன்? “தத்யத் தத் ஸத்த்யம்” எனப்ரகிருதமான (தொடர்ந்து வருகின்ற) பொருளைக் கூறியிருப்பதே அதன் காரணமாகும்.

சங்கை—வித்யாபேத மிருப்பினுங் கூட உபாஸ்யமானது ஒன்றாக விருப்பதால் ப்ரகிருதாகர்ஷணஞ் செய்திருப்பது பொருந்தலாமெனச் சொல்லப்பட்டதன்றோ எனின்?

உத்தரம்—இது இவ்விதமாகாது. எவ்விடத்தில் மிகத்தெளிவானகாரணாந்தரத்தால் வித்யாபேதமானது அறியக்கிடக்கிறதோ அங்கு இது இவ்விதமிருக்கலாம். இவ்விடத்திலோ வெனில் இரண்டுவிதமாகவும் ஸம்பவிக்குங்கால் “தத்யத் தத் ஸத்த்யம்” என ப்ரகிருதமான பொருளை ஆகர்ஷணஞ் செய்திருப்பதால் முந்தின வித்யையில் ஸம்பந்தம் பெற்றதாகவே உள்ள ஸத்த்யப்பொருளானது மேலுள்ள விடத்திலுங் கூட ஆகர்ஷிக்கப்படுகிறது என்றேற்படுவது பற்றி ஏகவித்யாத்வநிஸ்சயமேற்படுகிறது. வேறுபலன் காணப்படுவது பற்றி வேறுவித்யையாகக் கொள்ளவேண்டுமென யாதொன்று சொல்லப்பட்டதோ இவ்விஷயத்திற் சொல்லப்படுகிறது. அதாவது:—“அதற்கு அஹ:” என்பதும், “அஹம்” என்பதும் ரஹஸ்யநாமமாகும் என்ற வேறு அங்கத்தை யுபதேசஞ்செய்ததற்கு இந்த வேறு பலஶ்ரவணமானது ஸ்தாவகமாக (அர்த்தவாதமாக) வாகும் என்பது பற்றி முற் கூறிய தோஷமில்லை என்றோம். மேலும் அர்த்தவாதத்தைக் கொண்டு பலனானது கல்பிக்கவேண்டி வரும் பொழுதும், வித்யைகத்வமிருக்கும் பொழுதும் அவயவங்களில் காணப்படும் பலன் வெகுவாக இருந்த போதிலுங்கூட அவயவியான வித்யையில் சேர்த்துக்கொள்ளக்கூடியனவாகவே ஆகின்றன. ஆகவே அந்த இந்த ஸத்த்யவித்யை ஒன்றே அந்தந்தவிசேஷத்துடன் கூடினதாகச் சொல்லப்பட்டது என்ற இக்காரணத்தால் ஸத்த்யாதிகளான குணங்கள் யாவுமே ஒரே ப்ரயோகத்திலேயே சேர்த்துக்கொள்ளத்தக்கன.

केचित्पुनरस्मिन्सूत्र इदं च वाजसनेयकमक्ष्यादित्यपुरुषविषयं वाक्यम्, छान्दोग्ये च—'अथ य एषोऽन्तरादित्ये हिरण्मयः पुरुषो दृश्यते' (छा० १।६।६) 'अथ य एषोऽक्षिणि पुरुषो दृश्यते' (छा० ४।१५।१) इत्युदाहृत्य सैवेयमक्ष्यादित्यपुरुषविषया विद्योभयत्रैकैवेति कृत्वा सत्यादीन्गुणान्वाजसनेयिभ्यश्छन्दोगानामुपसंहार्यान्मन्यन्ते। तन्न साधु लक्ष्यते। छान्दोग्ये हि ज्योतिष्टोमकर्मसंबन्धिनीयमुद्गीथव्यपाश्रया विद्या विज्ञायते। तत्र ह्यादिमध्यावसानेषु हि कर्मसंबन्धिचिह्नानि भवन्ति 'इयमेवर्गग्निः साम' (छा० १।६।१) इत्युपक्रमे, 'तस्यर्क्च साम च गेष्णौ तस्मादुद्गीथः' (छा० १।५।८) इति मध्ये, 'य एवं विद्वान्साम गायति' (छा० १।७।९) इत्युपसंहारे। नैवं वाजसनेयके किञ्चित्कर्मसंबन्धि चिह्नमस्ति। तत्र प्रक्रमभेदाद्विद्याभेदे सति गुणव्यवस्थैव युक्तेति॥

२५ कामाद्यधिकरणम्। सू० ३९

வேறு சிலர் இந்த ஸூத்திரத்தில் வாஜஸநேயகத்திலுள்ள அக்ஷ்யாதித்ய புருஷவிஷயமான இந்த வாக்கியத்தையும், சாந்தோக்கியத்திலுள்ள "பிறகு ஆதித்யனுக்குள்ளில் யாதொரு இந்த ஹிரண்மயபுருஷன் காணப்படுகின்ருனே" "பிறகு கண்ணில் யாதொரு இந்தப் புருஷன் காணப்படுகின்ருனே" என்ற இந்த வாக்கியத்தையும் உதாஹரித்து அதே இந்த அக்ஷ்யாதித்ய புருஷ விஷயமாகவுள்ள வித்யையானது இரண்டிடத்திலும் ஒன்றே என வைத்துக் கொண்டு ஸத்யாதிகளான குணங்களை வாஜஸநேயிகளிடமிருந்து சந்தோகர்களுக்கு உபஸம்ஹாரம் செய்யத்தக்கனவாக எண்ணுகின்றனர். அது ஸாதுவாகப் படவில்லை. சாந்தோக்கியத்திலோவெனில் ஜ்யோதிஷ்டோமமென்ற கர்மஸம்பந்தமுள்ளதும், உத்கீதத்தை யாஸ்ரயித்ததுமாக இந்த வித்யையானது அறியப்படுகிறது. அவ்விடத்தில் ஆதிமத்ய அவஸானங்களில் கர்மஸம்பந்தத்துக்குரிய லிங்கங்கள் இருக்கின்றன. அவையாவன—"இந்தப் பூமியேதான்ருக், அக்கினியானது ஸாமம்" என உபக்கிரமத்திலும் "அவனுக்குருக்கும், ஸாமமும் கானஸாதனங்கள் ஆனது பற்றி அது உத்கீதமாகும்" என நடுவிலும், "இவ்விதமறிந்த எவன் ஸாமத்தைக் கானம் செய்கின்ருனே" என உபஸம்ஹாரத்திலுமாம். வாஜஸநேயகத்தில் இவ்விதம் கர்மஸம்பந்தமுள்ள அடையாளம் கொஞ்சமும் கிடையாது. அவ்விடத்தில் உபக்ரமபேதத்தைக் கொண்டே வித்யாபேத மேற்படுங்கால் குணங்களுக்கு வியவஸ்தை (ஆங்காங்குள்ளது ஆங்காங்கே இருக்குமே அல்லாது வேறு இடத்தில் வராதென்பது) தான் பொருந்தும் என்ரும். (39) (எ-று)

இருபத்துநான்காவது ஸத்யாதிகரணம் முற்றிற்று.

காமாத்யதிகரணம் 25.

(ஸூ) காமாதி இதரத்ர ச ஆயதநாதிப்ய: (39)

(ப-ரை) कामादि (காமாதி) சாந்தோக்யத்திலுள்ள ஸத்யகாமத்வமும் முதலி

कामादीतरत्र तत्र चायतनादिभ्यः ॥ ३९ ॥

असंहृतिः संहतिर्वा व्योम्नोर्दहरहार्दयोः। उपास्यज्ञेयभेदेन तद्गुणानामसंहृतिः ॥ १ ॥

उपस्त्यै क्वचिदन्यत्र स्तुतये चास्तु संहृतिः। दहराकाश आत्मैव हृदाकाशोऽपि नेतरः ॥ २ ॥

'अथ यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तराकाशः' (छा० ८।१।१) इति प्रस्तुत्य छन्दोगा अधीयते—'एष आत्माऽपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः' (छा० ८।१।५) इत्यादि। तथा वाजसनेयिनः—'स वा एष महानज आत्मा योऽयं विज्ञानमयः प्राणेषु य एषोऽन्तर्हृदय आकाशस्तस्मिञ्छेते सर्वस्य वशी' (बृ० ४।४।२२) इत्यादि। तत्र विद्यैकत्वं परस्परगुणयोगश्च किं वा नेति संशये विद्यैकत्वमिति। तत्रेदमुच्यते—कामादीति। सत्य-

---

யன इतरत्र (இதரத்ர)=வாஜஸநேயகத்திலும் तत्र (தத்ர)=வாஜஸநேயகத்தி லுள்ள வசித்வம் முதலியன [इतरत्र (இதரத்ர)=சாந்தோக்யத்திலும் சேர்த்துக்கொள்ளத் தக்கன] ஏன்? आयतनादिभ्यः (ஆயதநாதிப்ய:)=ஹிருதயத்தை ஆயதநமாகக் கொண்டிருத்தல் முதலியன இரண்டிடத்திலும் ஸமானமாக விருப்பதே அதன் காரணமாகும் (40) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) தஹராகாசத்தினது குணத்துக்கும் ஹார்தாகாசத்தினது குணத்துக்கும் உபஸம்ஹாரமுண்டா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். உபாஸ்யத்துக்கும் க்ஞேயத்துக்கும் பேதமிருப்பதால் அதன் குணங்களுக்கு உபஸம்ஹாரம் கிடையாது என்பது பூர்வபக்ஷம். சிலவிடத்தில் உபாஸ்திக்கு வேண்டியும் வேறிடத்தில் ஸ்துதிக்கு வேண்டியும் குணங்கள் சொல்லப்படுவதால் உபஸம்ஹார மிருக்கட்டும். தஹராகாசமானது ஆத்மாவே யாகும். ஹிருதயாகாசமும் வேறானதன்று என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"பின்னர் இந்த ப்ரம்ஹபுரத்தில் (சரீரத்தில்) யாதொரு இந்த ஸூக்ஷ்மமான புண்டரீகமானவேஸ்ம உண்டோ இதில் உள்ளில் ஸூக்ஷ்மமான ஆகாச மிருக்கிறது" எனத் தொடங்கிச் சந்தோகர்கள் "இந்த ஆத்மா பாபஸம்பந்தமற்றவனும், ஜரையற்றவனும், மிருத்யுவற்றவனும், சோகமற்றவனும், பசியற்றவனும், தாஹமற்றவனும், ஸத்யகாமனும், ஸத்யஸங்கல்பனு மாவான்" என்றதாதி படிக்கின்றனர். அவ்விதமே வாஜஸநேயிகள் "யாதொரு இவன் ப்ராணன்களுக்குள் விக்ஞானமயனோ அவனே மஹானும் அஜனுமான ஆத்மாவாகிறான். ஹிருதய புண்டரீகத்தின் நடுவில் யாதொரு இந்த ஆகாசமுண்டோ அதில் இருக்கிறான். அவன் ஸர்வத்தையும் வசபாக்கிக் கொண்டவனுமாவான்." என்றதாதி படிக்கின்றனர். அவ்விரண்டிடத்திலும் வித்யைகத்வமும் ஒவ்வொன்றிலும் சொல்லப்படும் குணங்களுக்குச் சேர்க்கையும் உண்டா? அல்லது இல்லையா? என ஸம்சயமுதயமாகவே வித்யைகத்வந்தான் சொல்லவேண்டும் எனவே அவ்விஷயத்தில் இந்த ஸூத்

कामादीत्यर्थः। यथा देवदत्तो दत्तः सत्यभामा भामेति। यदेतच्छान्दोग्ये हृदयाकाशस्य सत्यकामत्वादिगुणजातमुपलभ्यते तदितरत्र वाजसनेयके 'स वा एष महानज आत्मा' इत्यत्र संबध्येत। यच्च वाजसनेयके वशित्वाद्युपलभ्यते तदपीतरत्र छान्दोग्ये 'एष आत्माऽपहतपाप्मा' (छा० ८।१।५) इत्यत्र संबध्यते। कुतः—आयतनादिसामान्यात्। समानं ह्युभयत्रापि हृदयमायतनं समानश्च वेद्य ईश्वरः समानं च तस्य सेतुत्वं लोकासंभेदप्रयोजनमित्येवमादि बहु सामान्यं दृश्यते॥

ननु विशेषोऽपि दृश्यते छान्दोग्ये हृदयाकाशस्य गुणयोगो वाजसनेयके त्वाकाशाश्रयस्य ब्रह्मण इति। न। 'दहर उत्तरेभ्यः' (ब्र० सू० १।३।१४) इत्यत्र छान्दोग्येऽप्याकाशशब्दं ब्रह्मैवेति प्रतिष्ठापितत्वात्। अयं त्वत्र विद्यते विशेषः। सगुणा हि ब्रह्मविद्या छान्दोग्य उपदिश्यते 'अथ य इहात्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान्कामान्' (छा० ८।१।६) इत्यात्मवत्कामानामपि वेद्यत्वश्रवणात्। वाजसनेयके तु निर्गुणमेव परं ब्रह्मो-

---

திரம் சொல்லப்படுகிறது. ஸூத்திரத்தில் காமாதி=என்பதற்கு ஸத்யகாமாதிகள் என்றுபொருள். தேவதத்தன் என்பவன் தத்தன் என்றும், ஸத்யபாமா என்பவள் பாமா என்றும் சொல்லப்படுவது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காண்க. சாந்தோக்கியத்தில் ஹிருதயாகாசத்துக்கு யாதொரு இந்த ஸத்யகாமத்வம் முதலிய குணஸமூஹமானது காணப்படுகிறதோ அது வேறிடத்தில் அதாவது:—வாஜஸநேயகத்தில் "ஸவா ஏஷ மஹானஜ ஆத்மா" என்ற விடத்திலும் ஸம்பந்தத்தையடையும். வாஜஸநேயகத்திலும் யாதொரு வசித்வாதி(குணஸமூஹங்)கள் காணப்படுகின்றனவோ அவையும் **இதரத்ர** சாந்தோக்யத்தில் "ஏஷ ஆத்மா அபஹதபாப்மா" என்றவிடத்திலும் ஸம்பந்தத்தையடையும். ஏன்? ஆயதநாதி ஸாம்யமிருப்பதாலென்க. இரண்டிடத்திலும் ஹிருதயமாகிற ஆயதநம் ஸமானமாகவும், வேத்யனுனஈஸ்வன் ஸமானனுகவும், லோகத்தின் அஸம்பேதத்தைப் (அழிவில்லாமையை) பயனுகவுடைய அவரது ஸேதுத்வம் ஸமானமாகவும் இருத்தல் என்ற இது முதலான வெகு ஒத்துமை காணக்கிடக்கிறது பற்றியேயாம்.

சங்கை—சாந்தோக்கியத்தில் ஹிருதயாகாசத்துக்குக் குணங்களின் (ஸத்யகாமத்வாதிகளின்) யோகமும், வாஜஸநேயகத்திலோ ஆகாசத்தை யாஶ்ரயித்த ப்ரம்ஹத்துக்கு (வசித்வாதி) குணயோகமும் இருப்பதால் வெகுபேதம் காணப்படுகிறதன்ரோ எனின்?

உத்தரம்—அவ்விதமில்லே. "**தஹர உத்தரேப்ய:**" என்ற விடத்தில் சாந்தோக்கியத்திலும் ஆகாசஶப்தத்தாற் சொல்லப்படுவது ப்ரம்ஹமே என நிலேநாட்டப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். இவ்விடத்திலோ இவ்வித விசேஷமிருக்கிறது. அதாவது: ஸகுணமான ப்ரம்ஹவித்யையன்ரோ சாந்தோக்கியத்தி லுபதேசிக்கப்படுகிறது. "பிறகு எவன் இவ்விதம் ஆத்மாவையும் இந்த ஸத்யங்களான காமங்களேயுமறிந்து உபாஸிக்கின்ருனே" என ஆத்மாவுக்குப் போல காமங்களுக்கும் வேத்யவத்வம் சொல்லப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். வாஜஸநேய

पदिश्यमानं दृश्यते 'अत ऊर्ध्वं विमोक्षाय ब्रूहि' (बृ० ४।३।१४), 'असङ्गो ह्ययं पुरुषः' (बृ० ४।३।१५) इत्यादिप्रश्नप्रतिवचनसमन्वयात्। वशित्वादि तु तत्स्तुत्यर्थमेव गुणजातं वाजसनेयके सङ्कीर्त्यते। तथाचोपरिष्टात् 'स एष नेति नेत्यात्मा' (बृ० ३।९।२६) इत्यादिना निर्गुणमेव ब्रह्मोपसंहरति। गुणवतस्तु ब्रह्मण एकत्वाद्विभूतिप्रदर्शनायायं गुणोपसंहारः सूत्रितो नोपासनायेति द्रष्टव्यम् ॥ ३९ ॥

२६ आदराधिकरणम्। सू० ४०–४१

கத்திலோ வெனில் நிர்க்குணமாகவே உள்ளபரப்ரம்ஹமானது உபதேசிக்கப்படுவதாகத் தெரிகிறது. "இதற்கு மேல் மோக்ஷத்தைக் குறித்தே உபதேசிப்பீராக" "இப்புருஷன் அஸங்கனன்றோ" என்றதாதி ப்ரஸ்னப்ரதிவசன ஸமன்வயமிருப்பதே அதன் காரணமாகும். வாஜஸநேயகத்திலோ வசித்வம் முதலிய குணஸமூஹமானது அந்த ப்ரம்ஹத்தை ஸ்துதிக்கவேண்டியே சொல்லப்படுகிறது. அவ்விதமே மேலுள்ளவிடத்தில் "அந்த இந்த ஆத்மா இதில்லை இதில்லை என வறியத்தக்கவன்" என்ற தாதியால் நிர்குணமாகவே உள்ள ப்ரம்ஹத்தை உபஸம்ஹாரஞ் செய்திருக்கிறது. குணமுள்ளதான ப்ரம்ஹமானது ஒன்றாகவிருப்பதால் (அதன்) விபூதியை (மஹிமையைக்) காட்டவேண்டியே இந்தக்குணோபஸம்ஹாரம் ஸூத்திரத்திற் சொல்லப்பட்டதே யொழிய உபாஸனைக்கு வேண்டியன்று எனக் கண்டுக் கொள்ளவேண்டும். (39) (எ—று)

இருபத்தைந்தாவது காமாத்யதிகரணம் முற்றிற்று.

ஆதராதிகரணம் 26.

(அ—கை) ப்ராணாக்னிஹோத்ரவிஷயமான ஸந்தேஹத்தை நிவிருத்திசெய்ய வேண்டி இரண்டு ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரண மாரம்பிக்கப் படுகிறது. அவற்றுள் முதலாவது ஸூத்திரம் பூர்வபக்ஷமாகவும், இரண்டாவது ஸூத்திரம் ஸித்தாந்தமாகவுமாகும். ப்ராணாக்னிஹோத்ரம் பின்வருமாறு அதாவது:—சாந்தோக்கியத்தில் போஜனத்துக்கு முந்திபோஜனத்துக்கு வேண்டி பரிமாறப்பட்ட அன்னதை "ப்ராணாயஸ்வாஹா, வ்யாநாயஸ்வாஹா, அபாநாயஸ்வாஹா, ஸமாநாய ஸ்வாஹா, உதாநாய ஸ்வாஹா" என்ற ஐந்துமந்திரங்களைச் சொல்லி வாயில் போட்டுக்கொள்ளுதலாம். இவ்விஷயத்தில் முதலில் போஜன பாத்திரத்தில் பரிமாறப்பட்ட காலத்தில் அந்த அன்னத்தைக் கொண்டு முற்கூறிய ஐந்து ஹோமங்களையும் செய்யவேண்டுமோ? அல்லது அன்ன மில்லாவிட்டாலுங் கூட ஜலத்தினாலோ, முறண்படாத யாதானுமொரு அன்னப்ரதிநிதியான (அன்னத்துக்குப்பதிலான) பொருளினாலோ முற்கூறிய ஐந்து ஆஹுதிகளையும் அவஸ்யம் செய்தே தீரவேண்டுமோ? என ஸந்தேஹமுதயமாகவே ஜாபாலஸ்ருதியில் 'அதிதி (விருந்தாளி) வரின் அவருக்கு முந்திதான் (யஜமானன்) ப்ராணாக்னி

आदरादलोपः ॥ ४० ॥

न लुप्यते लुप्यते वा प्राणाहुतिरभोजने । न लुप्यतेऽतिथेः पूर्वं भुञ्जीतेत्यादरोक्तितः ॥ १ ॥
भुज्यर्थान्नोपजीवित्वात्तल्लोपे लोप इष्यते । भुक्तिपक्षे पूर्वभुक्तावादरोऽप्युपपद्यते ॥ २ ॥

छान्दोग्ये वैश्वानरविद्यां प्रकृत्य श्रूयते—'तद्यद्भक्तं प्रथममागच्छेत्तद्धोमीयं स यां प्रथमामाहुतिं जुहुयात्तां जुहुयात्प्राणाय स्वाहा' (छा० ५ । १९ । १) इत्यादि । तत्र पञ्च

ஹோத்ரம் செய்யவேண்டும். அவ்வித மில்லாவிடில் தான் அக்னிஹோத்திரஞ் செய்வதை விடுத்துப் பிறர்க்கு அக்னிஹோத்ரஞ் செய்வது எவ்விதமோ அவ்விதமே இதுவுமாகும்" என்றதால் அதிதி போஜனத்துக்கு முந்தி யஜமானனுடைய போஜனமானது விதிக்கப்பட்டதி லிருந்து ப்ராணாக்னிஹோத்திரத்தில் அதிகம் ஆதரவு காண்பிக்கப்பட்டதாக ஏற்படுவதால் அன்னம் கிடைக்கின் அதைக்கொண்டும், அன்னம் கிடைக்காவிடின் அன்னப்ரதிநிதியான யாதானுமொருபொருளைக் கொண்டும் ப்ராணாக்னிஹோத்ரம் செய்து தான் தீரவேண்டும் என முதல்ஸூத்திரத்தால் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே இரண்டாவது ஸூத்திரத்தினால் "போஜனத்துக்காகப் பரிமாறப்பட்ட அன்னம் எதுவோ அது ஹோமத்ரவ்யமாகும்" எனஸ்ருதியிருப்பதைக் கொண்டு போஜனகாலத்தில் தான் போஜ்யமான அன்னத்தைக் கொண்டு ப்ராணாக்னிஹோத்திரஞ் செய்யவேண்டுமே யொழிய மற்றகாலத்தில் இல்லை என ஸித்தாந்தம் செய்யப்படுகிறது. பூர்வபக்ஷஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ஆதராத் அலோப: (40)

(ப—ரை) आदरात् (ஆதராத்)=ஜாபாலஸ்ருதியில் ப்ராணாக்னிஹோத்ரத்தில் ஆதரவுகாணப்படுவதால் अलोपः (அலோப:)=ப்ராணாக்னிஹோத்ரத்துக்கு எந்த ஸமயத்திலும் லோபமானது (இல்லாமையானது) கிடையாது. (40) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) போஜனமில்லாத காலத்தில் ப்ராணாஹுதியானது லோபத்தை யடைவதில்லையா? அல்லது லோபத்தை யடைகிறதா? என்பது ஸந்தேஹம் "அதிதிக்குமுந்திப் போஜனஞ்செய்வாயாக" என ப்ராணாக்னிஹோத்திரத்தில் ஜாபாலஸ்ருதியானது ஆதரவுகாட்டியிருப்பதால் போஜன மில்லாவிடினுங்கூட ப்ராணாக்னி ஹோத்ரத்துக்கு லோபமானது கிடையாது என்பது பூர்வபக்ஷம். ப்ராணாக்னிஹோத்ரமானது போஜனத்துக்கு வேண்டியேற்பட்ட அன்னத்தை யாஸ்ரயித்திருப்பதால் போஜன மில்லாவிடில் ப்ராணாக்னிஹோத்திரத்துக்கும் லோபந்தான் விரும்பப்படுகிறது. போஜனம் ஸம்பவிக்குங்கால் "அதிதிக்கு முந்தி போஜனஞ்செய்யவேண்டும்" என ஜாபாலஸ்ருதியில் காணப்படும் ஆதரவும் பொருத்தமுள்ளதாகவே ஆகிவிடுகிறது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—சாந்தோக்கியத்தில் வைஸ்வாநரவித்யையைச் சொல்லத்தொடங்கி "ப்ராணாக்னிஹோத்ரத்தின் ஸாமக்ரியை ஸம்பாதித்த பிறகு எந்த அன்னமானது முதலில்வருமோ அது ஹோமத்ரவியமாகவாகிறது. அந்த ப்ராணோபாஸகன் முத

प्राणाहुतयो विहिताः। तासु च परस्तादग्निहोत्रशब्दः प्रयुक्तः 'य एतदेवं विद्वानग्निहोत्रं जुहोति' (छा० ५। २४। २) इति, 'यथेह क्षुधिता बाला मातरं पर्युपासते। एवं सर्वाणि भूतान्यग्निहोत्रमुपासते' (छा० ५। २४। ५) इति च। तत्रेदं विचार्यते—किं भोजनलोपे लोपः प्राणाग्निहोत्रस्योतालोप इति। तद्यद्भक्तमिति भक्तागमनसंयोगश्रवणाद्भक्तागमनस्य च भोजनार्थत्वाद्भोजनलोपे लोपः प्राणाग्निहोत्रस्येति। एवं प्राप्ते न लुप्येतेति तावदाह। कस्मात्। आदरात्। तथाहि वैश्वानरविद्यायामेव जाबालानां श्रुतिः—

லாவதான யாதொரு ஹோமத்தைச் செய்வானோ அதை ப்ராணாயஸ்வாஹா என ஹோமஞ்செய்யவேண்டும்" என்றதாதி காணப்படுகிறது. அவ்விடத்தில் ஐந்து ப்ராணாஹுதிகள் விதிக்கப்பட்டன. அவ்வாஹுதிகளில் முடிவில் "எந்த வைஶ்வாநரோபாஸகன் இதை இவ்விதமறிந்து அக்னிஹோத்ரத்தைச் செய்வானோ" என்றும் இவ்வுலகில் பசிப்பிணியுள்ள பாலர் அன்னையை ஸேவிப்பது எவ்விதமோ இவ்விதமே எல்லாப்பிராணிகளும் அக்னிஹோத்ரத்தை யண்டிப்பிழைக்கின்றன" என்றும் அக்னிஹோத்ர சப்தம் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. அவ்விஷயத்தில் பின்வருமாறு விசாரிக்கப்படுகிறது. போஜனலோப மேற்பட்டதும் ப்ராணாக்னிஹோத்ரத்துக்கும் லோபமா? அல்லது இல்லையா? என்றும். "அக்னிஹோத்ரம் ஸம்பாதிக்கப்பட்டதும் எந்த அன்னம்" என்பதாய் அன்னாகமனத்தின் ஸம்யோகம் சொல்லப்படுவதாலும், அன்னத்தின் ஆகமனமானது போஜனத்துக்கு வேண்டியேற்பட்டதாதலாலும், போஜனலோப மேற்படுமாயின் ப்ராணாக்னிஹோத்திரத்துக்கும் லோபந்தான் என ப்ராப்தமாகவே ப்ராணாக்னிஹோத்ரமானது லோபத்தை யடையாதென (பூர்வபக்ஷம்) சொல்லுகிறார். ஏன்? ஆதரவிருப்பதாலென்க. அதாவது:—வைஶ்வாநரவித்யை சொல்லுமிடத்திலேயே ஜாபாலஸ்ருதியானது "அதிதிகளுக்கு முன்னர் * போஜனஞ் செய்யவேண்டும்" (அவ்விதஞ் செய்யா

---

* "அதிதிகளுக்கு முந்தி போஜனஞ் செய்யவேண்டும்" என்ற இந்த வாக்கியமானது அதிதிக்கு முந்தி யஜமானன் புஜிக்கவேண்டும் என்பதை விதிக்கவந்ததல்ல. அங்ஙனமாயின் "அதிதிபோஜனத்துக்கு பின்னர் யஜமானன் புஜிக்கவேண்டும்" என விதிக்கும் சாஸ்திரம் வீணாகிவிடத்தெரியும். ஆனதுபற்றி ப்ராணாக்னிஹோத்ரத்தையே இந்த வாக்கியம் விதிப்பதாகவாகும். ப்ராணாக்னிஹோத்ர மிருப்பினுங்கூட சுருதியில் "அச்நீயாத்" என்றது பொருத்தமற்றதாகவு மாகாது. "ஆஸ்யம் (முகம்) ஆஹவனீயமாகிறது" என்ற வாக்கியத்தினால் ப்ரகிருத ப்ராணாக்னிஹோத்திரத்தை முகத்தில் செய்யவேண்டுவதாக விதிப்பதன் மூலம் அசனரூபத்வம் தோன்றுவதை முன்னிட்டும், "தான் அக்னிஹோத்ரத்தைச் செய்யாமல் பிறர்க்குச் செய்வது எவ்விதமோ அவ்விதமே இதுவுமாகும்" என்ற வாக்கிய சேஷத்தை முன்னிட்டும் "அச்நீயாத்" என்றதற்கு ஹோமபரத்வமானது அறியக்கிடக்கிறது, தான் நித்யாக்னிஹோரத்தைச் செய்யாது பிறருடைய அக்னிஹோத்ரத்தைச் செய்வது எவ்விதமோ இவ்விதமே ப்ராணாக்னிஹோத்ரத்துக்கு முந்தி அன்ன மிடுதலுமாகும். ஆகவே திருஷ்டாந்தத்தில் நித்யாக்னிஹோத்ரத்தைச்சொன்னதிலிருந்து தார்ஷ்டாந்திகத்திலும் "அச்நீயாத்" என்பது அக்னிஹோத்ரபரமென்றே அறியப்படுகிறது. ஆகவே யஜமானன் திருப்திக்குவேண்டி அதிதிபோஜ

'पूर्वोऽतिथिभ्योऽश्नीयात्। यथा ह वै स्वयमहुत्वाऽग्निहोत्रं परस्य जुहुयादेवं तत्' इत्यतिथिभोजनस्य प्राथम्यं निन्दित्वा स्वामिभोजनं प्रथमं प्रापयन्ती प्राणाग्निहोत्र आदरं करोति। या हि न प्राथम्यलोपं सहते नतरां सा प्राथम्यवतोऽग्निहोत्रस्य लोपं सहेतेति मन्यते। ननु भोजनार्थभक्तागमनसंयोगाद्भोजनलोपे लोपः प्रापितः। न। तस्य द्रव्यविशेषविधानार्थत्वात्। प्राकृते ह्यग्निहोत्रे पयःप्रभृतीनां द्रव्याणां नियतत्वादिहाप्यग्निहोत्रशब्दात्कौण्डपायिनामयनवत्तद्धर्मप्राप्तौ सत्यां भक्तद्रव्यैकतागुणविशेषविधानार्थमिदं वाक्यं तद्य-

---

விடில்) ஸ்வயம் (தான்) அக்னிஹோத்ரத்தைச் செய்யாது பிறர்க்கு அக்னிஹோத்ரம் செய்வது எவ்விதமோ இவ்விதமே அது ஆகும்." என்பதாய் அதிதி போஜனத்துக்கு முதன்மையை நிந்தித்து ஸ்வாமியின் (யஜமானனின்) போஜனத்தை முதலில் விதிக்கின்றதாய் ப்ராணாக்னி ஹோத்திரத்தில் ஆதரவைச் செய்கிறது. எந்த ஶ்ருதியானது முதன்மையின் லோபத்தைப் பொறுப்பதில்லையோ அது முதன்மையுள்ள (முதலில் செய்யவேண்டிய) அக்னிஹோத்திரத்தினுடைய லோபத்தை நிஶ்சயமாகப் பொறுக்கமாட்டாதென எண்ணப்படுகிறது.

சங்கை—போஜனத்தைப் பயனாக வுடைய அன்னத்தினது ஆகமனஸம்யோக மிருப்பதால் போஜனலோபமேற்படுங்கால் (அக்னிஹோத்ரத்துக்கும்) லோபம் வருமெனச் சொல்லப்பட்டதன்றோ எனின்?

உத்தரம்—இவ்விதமில்லை. அந்த அன்னாகமனஸம்யோகமானது த்ரவ்யவிசேஷத்தை விதிக்கவேண்டி ஏற்பட்டிருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—ப்ராகிருதமான (நித்யமான) அக்னிஹோத்ரத்திலோ பால் முதலிய திரவியங்கள் நியதமாக (நித்யமாக) இருப்பதாலும், இங்கும் அக்னிஹோத்ர சப்தமிருப்பதாலும் † கௌண்டபாயினம் அயனத்திற் போல நித்யாக்னிஹோத்ர தர்மங்களின் ப்ராப்தியானது வருங்கால் அன்னமாகிற திரவியமொன்றையே கொண்டுள்ளதானகுணத்தை விதிக்கவேண்டியே "தத்யத்பக்தம்" என்ற இந்தச் சாந்தோக்

காணப்படுமோ அவ்விடத்திற்றான் வெறும் உபதேசமாக மட்டுமுள்ளவற்றுக்கு அர்த்தவாதத்வம் சொல்லுவது பொருந்தும். இவ்விடத்திலோ தெளிவாக வேறு விதிகள் காணப்படாமையால் வெறும் உபதேசம் மட்டும் செய்திருப்பதைக்கொண்டே இவற்றுக்கு உபாஸனவிதானம் கல்பிக்கவேண்டிவருகிறது. சொல்லியிருப்பதற்கேற்றபடியேதான் கல்பிக்கக்கூடும் என்பது பற்றி இடையறுதிருத்தல் காணப்படுவதைக் கொண்டு அவ்விதமே தான் கல்பிக்கப் படுகிறது. அத்தகைய ஸாமர்த்திரியமூலம் இந்தமனஶ்சிதாதிகளுக்கு ஸ்வாதந்திரியமானது (க்ரியாப்ரவேசமில்லாமையானது) ஸித்திக்கிறது. இதனால் "எல்லாப்ராணிகளுடையவும் மனோவிருத்திகளினால் என்னுடைய அக்னிகள் எப்பொழுதும் சயனஞ் செய்யப்படுகின்றன என்ற திருட நிஶ்சயமேற்பட்டதும் எல்லாப்ராணிகளும் மனத்தால் யாதானுமொன்றைத் தியானித்தபோதிலும் அவ்வக்னிகளுடைய கரணமாகவே தானாகும்." என்றதாதிகள் விளக்கப்பட்டனவாக வாகின்றன. அவ்விதமே "இவ்வித உபாஸகனையும் பொருட்டு" என்ற வாக்கியமும் இவற்றுக்குப்புருஷனுடன் விசேஷஸம்பந்தத்தையே சொல்லுகின்றதாய் கிரது (யாக) ஸம்பந்தத்தைப் பொருக்கமாட்டாது. ஆகவே ஸ்வாதந்திரியபக்ஷமே (இவற்றுக்குக்ரியாப்ரவேசங் கிடையாது என்றபக்ஷமே) தான் மேலானது. (19) (எ—று)

(ஸூ) அநுபந்தாதிப்ய: ப்ரக்ஞாந்தரப்ருதக்த்வவத்திருஷ்ட: ச ததுக்தம் (50)

(ப—ரை) **मनश्चितादयः स्वतन्त्राः** (மனஶ்சிதாதய: ஸ்வதந்த்ரா:)=மனஶ்சிதாதிகளான அக்னிகள் ஸ்வதந்திரங்களாகவே (கர்மாங்கமாகவாகாதனவாகவே) தானாகும். **अनुबन्धादिभ्यः** (அநுபந்தாதிப்ய:)=சுருதியானது **अनुबन्ध** (அநுபந்த)= (1) ஸம்பதுபாஸ்தியையும் பொருட்டு மனோவிருத்திகளில் கிரியாங்கங்களை யோஜனஞ் செய்திருப்பதும், **आदि** (ஆதி)=க்ரியாமயமான அக்னியின் மஹிமையை ஞானமயங்களான அக்னிகளில் அதிதேசம் செய்திருப்பதுமே (எற்றிக்கூறியிருப்பதுமே) அதன் காரணமாகும். **प्रज्ञान्तरपृथक्त्ववत्** (ப்ரக்ஞாந்தரப்ருதக்த்வவத்)= ஶாண்டில்ய வித்யைமுதலியவற்றுக்கு கர்மங்களைக் காட்டிலும், வேறு உபாஸனங்களைக் காட்டிலுமே தனியாகஸ்வாதந்திரியம் சொல்லியிருப்பது போல

---

(1)ஸம்பதுபாஸ்தி இன்னதென்பதை முதலாவது அத்தியாயம் 55-வது பக்கத்தில் காண்க.

इतश्च प्रकरणमुपमृद्य स्वातन्त्र्यं मनश्चिदादीनां प्रतिपत्तव्यम्। यत्क्रियावयवान्मन आदिव्यापारेष्वनुबध्नाति—'ते मनसैवाधीयन्त मनसाचीयन्त मनसैव ग्रहा अगृह्यन्त मनसाऽस्तुवन्मनसाऽशंसन्यत्किञ्च यज्ञे कर्म क्रियते यत्किञ्च यज्ञियं कर्म मनसैव तेषु तन्मनोमयेषु मनश्चित्सु मनोमयमेव क्रियते' इत्यादिना। संपत्फलो ह्ययमनुबन्धः। नच प्रत्यक्षाः क्रियावयवाः सन्तः संपदा लिप्सितव्याः। नचात्रोद्गीथाद्युपासनवत्क्रियाङ्ग-संबन्धात्तदनुप्रवेशित्वमाशङ्कितव्यं श्रुतिवैरूप्यात्। नह्यत्र क्रियाङ्गं किञ्चिदादाय तस्मिन्नदो नामाध्यवसितव्यमिति वदति। षट्त्रिंशत्सहस्राणि तु मनोवृत्तिभेदानादाय तेष्वग्नित्वं

வாம். **दृष्टश्च** (திருஷ்டஶ்ச)=ராஜஸூயயாகப்ரகரணத்தில் படிக்கப்பட்டிருக்கும் **அவேஷ்டிக்கு** அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்கு கொண்டுபோகுதல் காணப் பட்டுமிருக்கிறது. **तदुक्तम्** (ததுக்தம்)=அவ்விஷயம் பூர்வமீமாம்ஸையில் சொல்லப் பட்டுமிருக்கிறது. (50) (எ-று)

பாஷ்யம்.—பின்வரும் காரணத்தாலும் ப்ரகரணத்தை விடுத்து மனஶ்சிதாதி (அக்னி) களுக்கு ஸ்வாதந்திரியம் கொள்ளவேண்டுவது அவஶ்யமாகிறது. அதாவது:—"அவை மனத்தினுலேயே ஆதானஞ் செய்யப்படுகின்றன. மனத்தினுல் சயனஞ் செய்யப்படுகின்றன, மனத்தினுலேயே க்ரஹங்கள் (ஸோமரஸங்கள்) கிரஹிக்கப்படுகின்றன, மனத்தினுல் ஸ்தோத்திரஞ் செய்யப்படுகின்றன, மனத்தினுல் ஶஸ்திரஞ் சொல்லப்படுகின்றன, மேலும் எந்தக்கர்மம் யாகத்தில் செய்யப்படுமோ, யாகத்தைச் சார்ந்த கர்மம் யாதுண்டோ அது மனோமயங்களான மநஶ்சிதாதிகளில் மனத்தினுல் மனோமயமாகவே செய்யப்படுகிறது" என்றதாதியால் சுருதியானது எக்காரணம்பற்றிக் கிரியாவயவங்கள் யாவையும் மனம் முதலியவியாபாரங்களில் யோஜனஞ்செய்து (சேர்த்துக்கூறி) இருக்கிறதோ அக்காரணம் பற்றியே என்க. இந்த அநுபந்தமானது=சேர்த்துக்கூறி யிருப்பதானது (1) ஸம்பதுபாஸ்தியைப் பலமாகக்கொண்டதாகவல்லவோ ஆகிறது. ப்ரத்யக்ஷங்களான க்ரியாவயவங்கள் ஸம்பத்தினுல் (தியானத்தினுல்) அடையவிரும்பப்பட மாட்டாவன்றோ.

மேலும் உத்கீதாத்யுபாஸனங்களுக்குப் போல க்ரியையினது அங்கஸம்பந்தத்தை யடையும் வாயிலாக க்ரியையில் அநுப்ரவேசம் வரட்டும் என ஆசங்கிப்பதும் பொருத்தமாகாது. என்? ஶ்ருதியில் மாறுபாடுகாணப்படுவதே அதன் காரணமாகும். இவ்விடத்தில் க்ரியையின் அங்கமொன்றை எடுத்துக் கொண்டு அதில் இம்மாதிரியான ஒன்றை அத்யாஸஞ் செய்யவேண்டுமெனச் சுருதிசொல்லவில்லையன்றே. பின்னையோவெனில் முப்பத்தாறுயிரம் மனோவிருத்திபேதங்களை எடுத்துக்கொண்டு அவற்றில் அக்னித்வத்தையும், க்ரஹாதிகளையும் புருஷயக்ஞாதிகளில் போல கல்பித்திருக்கிறது. முப்பத்தாறுயிரமென்ற இந்த எண்ணுனது புருஷனது ஆயுளினுடைய நாட்களில் காணப்பட்டதாய்க் கொண்டு அதன்ஸம்பந்தம் பெற்ற மனோவிருத்திகளில் ஏற்றிக் கூறப்படுவதாகக் கண்டு கொள்ளவேண்டும்.

---

(1) முதலாவது அத்தியாய மொழிபெயர்ப்பு 55-வது பக்கம் பார்க்கவும்.

ग्रहादींश्च कल्पयति पुरुषयज्ञादिवत्। सङ्ख्या चेयं पुरुषायुषस्याहःसु दृष्टा सती तत्संबन्धिनीषु मनोवृत्तिष्वारोप्यत इति द्रष्टव्यम्। एवमनुबन्धात्स्वातन्त्र्यं मनश्चिदादीनाम्। आदिशब्दादतिदेशाद्यपि यथासंभवं योजयितव्यम्। तथाहि—'तेषामेकैक एव तावान्यावानसौ पूर्वः' इति क्रियामयस्याग्नेर्माहात्म्यं ज्ञानमयानामेकैकस्यातिदिशन्क्रियायामनादरं दर्शयति॥

नच सत्येव क्रियासंबन्धे विकल्पः पूर्वेणोत्तरेषामिति शक्यं वक्तुम्। नहि येन व्यापारेणाहवनीयधारणादिना पूर्वः क्रियायामुपकरोति तेनोत्तर उपकर्तुं शक्नुवन्ति। यत्तु पूर्वपक्षेऽप्यतिदेश उपोद्बलक इत्युक्तं सति हि सामान्येऽतिदेशः प्रवर्तत इति तदस्मत्पक्षेऽग्नित्वसामान्येनातिदेशसंभवात्प्रत्युक्तम्। अस्ति हि सांपादिकानामप्यग्नीनामग्नित्वमिति। श्रुत्यादीनि च कारणानि दर्शितानि। एवमनुबन्धादिभ्यः कारणेभ्यः स्वातन्त्र्यं मनश्चिदादीनाम्। प्रज्ञान्तरपृथक्त्ववत्। यथा प्रज्ञान्तराणि शाण्डिल्यविद्याप्रभृतीनि स्वेन स्वेनानुबन्धेनानुबध्यमानानि पृथगेव कर्मभ्यः प्रज्ञान्तरेभ्यश्च स्वतन्त्राणि भवन्त्येव-

---

இவ்வித அநுபந்த மூலம் மனஸ்சிதாதிகளுக்கு ஸ்வாதந்திரியம் ஏற்படுகிறது. ஸூத்திரத்தில் ஆதி என்ற சப்தத்தால் அதிதேசாதிகளையும் (ஏற்றிக்கூறுதல் முதலியவற்றையும்) நேருவதற்கேற்றபடி பொருத்திக்காணவேண்டும் எனச் சொன்னதாய்க் கண்டுகொள்ளவேண்டும். அதாவது:—"முன்னருள்ள க்ரியாமயமான அக்னியானது எவ்வளவோ அவ்வளவே அவற்றுள் ஒவ்வொன்றுமாகும்" என்பதாய் க்ரியாமயமான அக்னியினுடைய மாஹாத்மியத்தை ஞானமயங்களான அக்னிகளுள் ஒவ்வொன்றுக்கும் ஏற்றிக் கூறுகின்ற வேதமானது க்ரியையில் அனாதரவை (பற்றின்மையைத்) தெரிவிக்கிறது. க்ரியையுடன் ஸம்பந்த மிருக்கும் பொழுதே முன்னுள்ளக்ரியாக்னியுடன் மேலுள்ள க்ஞானமயாக்னிகளுக்கு விகல்பத்தைச் சொல்லவும் முடியாது. முன்னுள்ள அக்னியானது ஆஹவனீயதாரணம் முதலிய எந்தவியாபாரத்தினால் க்ரியையில் உபகாரத்தைச் செய்கிறதோ அந்த வியாபாரத்தினால் மேலுள்ள க்ஞானக்னியினால் உபகரிக்கமுடியாதன்றோ. பூர்வ பக்ஷத்திலுங்கூட ஸாதிருஸ்யமிருந்தாலன்றோ அதிதேசமானது ப்ரவிருத்திக்கும் என்பதாய் அதிதேசமானது உதவிபுரிவதாக யாதொன்று சொல்லப்பட்டதோ அதுவும் எங்கள் பக்ஷத்தில் அக்னித்தன்மை ஸமானமாக விருப்பதன்மூலம் அதிதேசம் ஸம்பவிக்கக்கூடும் என்பதாய் மறுக்கப்பட்டதாக வாகிவிட்டது. ஸாம்பாதிகங்களான (கல்பிதங்களான) அக்னிகளுக்குங்கூட அக்னித்தன்மையானது இருக்கின்றதன்றோ என்றும். சுருத்யாதிகளான காரணங்களும் காட்டப்பட்டன. இவ்விதம் அநுபந்தம் முதலிய காரணங்களைக் கொண்டும் மனஸ்சிதாதி அக்னிகளுக்கு ஸ்வாதந்திரியமானது ஸித்திக்கிறது. வேறு உபாஸனங்கள் கர்மாவைவிட வேறுபட்டனவாக விருப்பனபோலவாம். அதாவது:—ஶாண்டில்யவித்யை முதலிய வேறு உபாஸனங்கள் தத்தமக்குரிய வற்றுடன் சேர்ந்தனவாய்க் கொண்டு கர்மங்களைக் காட்டிலும், வேறு உபாஸனங்களைக் காட்டிலுமும் தனியாகவே ஸ்வ

मिति। दृष्टश्चावेष्टे राजसूयप्रकरणपठितायाः प्रकरणादुत्कर्षो वर्णत्रयानुबन्धाद्राजयज्ञत्वाच्च राजसूयस्य। तदुक्तं प्रथमे काण्डे—'क्रत्वर्थायामिति चेन्न वर्णत्रयसंयोगात्' (जै॰ सू॰ ११।४।७) इति॥५०॥

न सामान्यादप्युपलब्धेर्मृत्युवन्नहि लोकापत्तिः॥५१॥

தந்திரங்களாக வாவது எவ்விதமோ அவ்விதமே இங்குமாகும். ராஜஸூயம் என்ற யாகப்ரகரணத்தில் படிக்கப்பட்ட * அவேஷ்டிக்கு மூன்றுவர்ணங்களின் ஸம்பந்தமிருப்பதை முன்னிட்டு ராஜஸூய ப்ரகரணத்தினின்றும் உத்கர்ஷமானது (வேறு இடத்துக்குக் கொண்டுபோகுதலானது) காணவும் படுகிறது. ராஜஸூய யாகமானது ராஜன் மட்டும் செய்யவேண்டுவதாகவிருப்பதே அதன்காரணமாகும். அவ்விஷயம் பூர்வமீமாம்ஸையில் "க்ரத்வர்த்தாயாமிதி சேத் ந வர்ணத்ரயஸம்யோகாத்" என்றதாற் சொல்லவும் பட்டிருக்கிறது. (50) (எ—று)

(அ—கை) அவிவாக்யமான பத்தாவது அஹஸ்ஸில் மானஸமானக்ரஹத்துக்கு (ஸோமரஸத்துக்கு) க்ரியாப்ரவேசமானது காணப்படுவதாலும், மனஸ்சிதாதி அக்னிகளும் மானஸங்களாக இருப்பதாலும் மானஸத்வமானது (மனத்தாற் செய்யப்படுதலானது) ஸமமாயிருப்பதை முன்னிட்டு மனஸ்சிதாதி அக்னிகளும் க்ரியாப்ரவேசமுள்ளனவாகவே தானாகும் என 45வது ஸூத்திரத்தால் யாதொரு பூர்வபக்ஷமானது சொல்லப்பட்டதோ அதற்கு இந்தஸூத்திரத்தால் பதில் சொல்லப்படுகிறது—

(ஸூ) ந ஸாமான்யாதபி உபலப்தே: ம்ருத்யுவத் நஹி லோகாபத்தி: (51)

(ப—ரை) सामान्यादपि (ஸாமான்யாதபி)=மனஸ்சிதாதி அக்னிகளுக்கு மானஸத்வமானது (மனத்தாற் செய்யக்கூடியதாயிருத்தலானது) ஸமானமாக இருந்தபோதிலும் கூட न (ந)=க்ரியாப்ரவேசமானது கிடையாது. என்? उपलब्धेः

---

* ராஜஸூய ப்ரகரணத்தில் "ஆக்நேயமஷ்டாகபாலம் நிர்வபதி ஹிரண்யம் தக்ஷிணு, ஐந்த்ரமேகாதசகபாலம் விருஷபோ தக்ஷிணு, வைச்வதேவம் சரும் பிசங்கீ பஷ்டௌஹீ தக்ஷிணு, மைத்ராவருணீ மாமிக்ஷாம் வசா தக்ஷிணு, பார்ஹஸ்பத்யம் சரும் சிதிப்ருஷ்டோ தக்ஷிணு" என்றவசனங்களால் அவேஷ்டி எனப்பெரிய 5 இஷ்டிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் ராஜஸூயத்தில் தனித்தனி ப்ரயோகமாய் அனுஷ்டிக்கப் படுகின்றன. அவற்றிற்கே "யதி ப்ராம்ஹணே யஜேத பார்ஹஸ்பத்யம் மத்யேநிதாய ஆஹுதிமாஹுதிம் ஹுத்வா தமபிகாரயேத், யதி ராஜந்ய: ஐந்த்ரம், யதி வைச்யோ வேச்வதேவம்" என்றதால் ப்ராம்ஹணுதிகர்த்ருகமான சேர்ந்த ப்ரயோகமும் அந்நாத்யம் என்ற பலனையுத்தேசித்து விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரயோகமானது ப்ராம்ஹணுதி கர்த்ருபேதத்தை அனுஸரித்து ராஜஸூயத்துக்கு வெளியே அனுஷ்டிக்கக்கூடியதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமே இங்கும் அநுபந்தம் முதலியகாரணங்களால் மனச்சிதாதிகளுக்கும் ப்ரகரணத்தினின்றும் உத்கர்ஷ மேற்பட்டு தனியே அனுஷ்டானமே தான் பொருந்துகிறது என்பது கருத்து.

यदुक्तं मानसवदिति तत्प्रत्युच्यते । न मानसग्रहसामान्यादपि मनश्चिदादीनां क्रियाशेषत्वं कल्प्यम् । पूर्वोक्तेभ्यः श्रुत्यादिहेतुभ्यः केवलपुरुषार्थत्वोपलब्धेः। नहि किञ्चित्कस्यचित्केनचित्सामान्यं न संभवति। नच तावता यथास्वं वैषम्यं निवर्तते। मृत्युवत्। यथा 'स वा एषएव मृत्युर्य एष एतस्मिन्मण्डले पुरुषः' इति 'अग्निर्वै मृत्युः' (बृ० ३।२।१०) इति चाग्न्यादित्यपुरुषयोः समानेपि मृत्युशब्दप्रयोगे नात्यन्तसाम्यापत्तिः। यथा च 'असौ वाव लोको गौतमाग्निस्तस्यादित्य एव समित्' (छा० ५।४।१) इत्यत्र न समिदादिसामान्याल्लोकस्याग्निभावापत्तिस्तद्वत् ॥ ५१ ॥

(உபலப்தே:)=முன்னர் சொன்ன சுருத்யாதி ஹேதுக்களைக் கொண்டு தனித்த புருஷார்த் தத்துவத்தின் தோற்றமேற்படுவதே அதன் காரணமாகும் **मृत्युवत्** (ம்ருத்யுவத்)="இந்த ஸூரியமண்டலத்தில் யாதொரு புருஷனுண்டோ அவனே தான் இந்த ம்ருத்யு" என்றும், "அக்னியேதான் ம்ருத்யு" என்றுமான விடங்களில் அக்னி ஆதித்ய புருஷர்களிடத்தில் ம்ருத்யு என்ற சப்தப்ரயோகமானது ஸமானமாக இருந்தபோதிலுங்கூட ஜனங்களின் ஸம்ஹாரத்துக்கு ஹேதுவாக விருத்தல் உண்மையான யமனுக்கேயொழிய அக்னி ஆதித்ய புருஷர்களுக்கில்லை என்பது பற்றி ம்ருத்யுத்தன்மையானது முற்றிலும் ஸமானமுள்ளதாக எவ்விதம் காணப்படுவதில்லையோ, **न हि लोकापत्तिः** (ந ஹி லோகாபத்தி:)="ஹேகௌதம! இந்த லோகமே அக்னியாகும் அந்த அக்னிக்கு ஆதித்யனே ஸமித்தாகிறது" என்றவிடத்தில் லோகத்துக்கு வாஸ்தவமான (உண்மையான) அக்னித்வப்ராப்த்தியானது எவ்விதமில்லையோ அவ்விதமே இங்கும் காணவேண்டும். (51) (எ-று)

பாஷ்யம்—பூர்வபக்ஷத்தில் "மானஸவத்" என்பதாய் யாதொன்று சொல்லப்பட்டதோ அதுமறுக்கப்படுகிறது. மானஸமான க்ரஹத்துக்கு (ஸோமரஸத்துக்கு) மானஸமாக விருப்பதைக் கொண்டு மட்டும் மனச்சிதாதி அக்னிகளுக்கு க்ரியாசேஷத்வமானது (கர்மாங்கத்வமானது) கல்பிக்கமுடியாது. முன்னர் சொல்லப்பட்ட சுருதிமுதலிய ஹேதுக்களைக் கொண்டு கேவல (தனித்தனி) புருஷார்த்தன்மையின் தோற்றமேற்படுவதே அதன் காரணமாகும். எந்தப் பொருளும் யாதானுமொரு ஒத்துமையைக் கொண்டு எந்தப் பொருளுக்கும் ஸமானமில்லாததாக இருக்கமாட்டாதன்றோ. அதற்காக அதற்கமைந்துள்ள வைஷம்யமானது (மாறுபாடானது) நிவிருத்தியாகிவிட மாட்டாது. மிருத்யு சப்தம் போலவாம். அதாவது:—"இந்த ஸூரியமண்டலத்தில் காணப்படும் யாதொரு இந்தப் புருஷனுண்டோ அவனே இந்த ம்ருத்யுவாவான்" என்றும், "அக்னியே ம்ருத்யு" என்றுமாக ஆதித்ய அக்னிபுருஷர்களிடத்தில் ம்ருத்யுசப்தப்ரயோகமானது ஸமானமாக (பொதுவாக) இருந்தபோதிலுங்கூட முற்றிலும் ஸாம்யப்ராப்த்தியானது கிடையாதன்றோ. மேலும் "ஹேகோதம! இந்த லோகமே தான் அக்னி. அதற்கு ஆதித்யனேதான் ஸமித்து" என்றவிடத்தில் ஸமிதாதிகள் ஸமானமாக இருந்தபோதிலும் இந்தலோகத்துக்கு அக்னிபாவாபத்தியானது எவ்விதம் வரமாட்டாதோ அவ்விதமே இங்கும் காணவேண்டும். (51) (எ-று)

परेण च शब्दस्य ताद्विध्यं भूयस्त्वात्त्वनुबन्धः ॥ ५२ ॥

परस्तादपि 'अयं वाव लोक एषोऽग्निश्चित:' इत्यस्मिन्ननन्तरे ब्राह्मणे ताद्विध्यं केवलविद्याविधित्वं शब्दस्य प्रयोजनं लक्ष्यते न शुद्धकर्माङ्गविधित्वम्। तत्र हि—'विद्यया तदारोहन्ति यत्र कामाः परागताः। न तत्र दक्षिणा यन्ति नाविद्वांसस्तपस्विनः' इत्यनेन श्लोकेन केवलं कर्म निन्दन्विद्यां च प्रशंसन्निदं गमयति। तथा पुरस्तादपि 'यदेतन्मण्डलं तपति' इत्यस्मिन्ब्राह्मणे विद्याप्रधानत्वमेव लक्ष्यते 'सोऽमृतो भवति मृत्युर्ह्यस्यात्मा भवति' इति विद्याफलेनैवोपसंहारान्न कर्मप्रधानता तत्सामान्यादिहापि तथा-

---

(ஸூ) பரேணச சப்தஸ்ய தாத்வித்யம் பூயஸ்த்வாத்து அநுபந்த: (52)

(ப—ரை) परेण (பரேண)=மேலுள்ள ப்ராம்ஹணத்தினால் शब्दस्य (ஶப்தஸ்ய)= சப்தத்துக்கு ताद्विध्यम् (தாத்வித்யம்)=கேவலவித்யையை விதிக்கும் தன்மையானது காணப்படுகிறது. भूयस्त्वात्तु (பூயஸ்த்வாத்து)=வித்யையில் கல்பிக்கவேண்டிய அக்னியின் அவயவங்கள்அதிகமாக விருப்பதன் மூலமன்றோ अनुबन्धः (அநுபந்த:)=வித்யைக்கு அக்னியுடன் ஸம்பந்தமானது உபதேசிக்கப்படுறது. (52)

பாஷ்யம்—மேலுள்ள "இந்த லோகமேயன்றோ சயனஞ் செய்யப்பட்ட இந்த அக்னியாகிறது" என்ற அடுத்துள்ள ப்ராம்ஹணத்தில் தாத்வித்யமானது= கேவலவித்யா விதித்வமானது சப்தத்துக்கு ப்ரயோஜனமாகக் காணப்படுகிறதே யொழிய சுத்தமான கர்மாங்க விதித்வமன்று. அவ்விடத்திலோவெனில் "எவ்விடத்தில் காமங்கள் நிவிருத்தியடைகின்றனவோ அந்தவிடத்தை வித்யையினால் அடைகின்றனர். அவித்வான்களும்=உபாஸனஞ்செய்யாதவர்களும்,தபஸ்வில்லாதவர்களுமான தக்ஷிணாயன மார்க்கத்தில் செல்லுகின்றவர்கள் அவ்விடத்திற் செல்லுவதில்லை" என்ற இந்த ஶ்லோக (மந்திர) த்தினால் கேவல (தனித்த) கர்மத்தை நிந்திக்கின்றதாய்க் கொண்டும் வித்யையை (உபாஸனத்தைப்) புகழ்கின்றதாய்க் கொண்டும் இதை (முன்சொன்னவற்றை)த் தெரிவிக்கின்றது. அவ்விதமே முன்னுள்ள விடத்திலும் "யாதொரு இந்தமண்டலமானது ப்ரகாசிக்கின்றதோ" என்ற இந்தப் ப்ராம்ஹணத்தில் வித்யாப்ரதானத்துவமே (வித்யைதான் முக்கியமென்பதே) காண்பிக்கப்படுகிறது "அவன் (உபாஸகன்) அமிருதனாக வாகிறான். மிருத்யுவானவன் இவனுக்கு ஆத்மாவாகவன்றோ ஆகிறான்" என்றதால் வித்யையின்பலனினாலேயே முடிவு காணப்படுவதால் கர்மப்ரதானத்துவமானது (கர்மாவுக்கு முக்கியத்தன்மையானது) சொல்லப்படவில்லை. அவ்வித ஒத்துமையைக் கொண்டு இவ்விடத்திலுங்கூட கேவலவித்யாவிதித்வம் சொல்லுவதுதான் பொருந்துகிறது, வித்யையில் (இந்த மனஶ்சிதாதி உபாஸனத்தில்) அதிகமான அக்னியின் அவயவங்கள் கல்பிக்கவேண்டிவருகின்றன என்ற இந்தக் காரணத்தினால் அக்னியுடன் வித்யையானது ஸம்பந்தப்படுகிறதே யொழிய கர்மாங்கமாகவாவது

त्वम्। भूयांसस्त्वश्यवयवाः संपादयितव्या विद्यायामित्येतस्मात्कारणादग्निनानुबध्यते विद्या न कर्माङ्गत्वात्। तस्मान्मनश्चिदादीनां केवलविद्यात्मकत्वसिद्धिः ॥ ५२॥

३० ऐकात्म्याधिकरणम्। सू० ५३-५४

एक आत्मनः शरीरे भावात् ॥ ५३ ॥

आत्मा देहस्तदन्यो वा चैतन्यं मदशक्तिवत्। भूतमेळनजं देहे नान्यत्रात्मा वपुस्ततः ॥ १ ॥

भूतोपलब्धिर्भूतेभ्यो विभिन्ना विषयित्वतः। सवात्मा भौतिकाद्देहादन्योसौ परलोकभाक् ॥ २ ॥

देहव्यतिरिक्तस्यात्मनः सद्भावः समर्थ्यते बन्धमोक्षाधिकारसिद्धये। नह्यसति देह-

---

பற்றி யன்று. ஆனதுபற்றி மனஸ்சிதாதி அக்னிகளுக்கு கேவல (தனித்த) வித்யாத்மகத்வமானது ஸித்திக்கிறது. (52) (எ—று)

இருபத்தோன்பதாவது லிங்கபூயஸ்த்வாதிகரணம் முற்றிற்று.

ஐகாத்ம்யாதிகரணம் 30.

(அ—கை) தேஹத்தை விட ஆத்மா வேருக இருக்கிருன் என்பது இரண்டு ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணத்தால் உபதேசிக்கப்படுகிறது. அதன் முதல் பூர்வபக்ஷஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ஏக ஆத்மநः சரீரேபாவாத் (53)

(ப—ரை) [देह एव चेतनश्च आत्मा च भवितुमर्हति (தேஹ ஏவ சேதநஸ்ச ஆத்மாச பவிதுமர்ஹதி) = தேஹமேதான் சேதனனும் ஆத்மாவுமாகவாகிறது] ஏன்? आत्मनः शरीरे भावात् (ஆத்மநः சரீரே பாவாத்)=தேஹமிருக்கும்பொழுது ஆத்மா விருப்பதே அதன் காரணமாகும். (53)

வையாஸிக நியாயமாலே.

(க—ரை) ஆத்மா தேஹமேதானு? அல்லது தேஹத்தைவிட வேறுபட்டவனு? என்பது ஸந்தேஹம். தேஹத்திற் காணப்படும் சைதன்னியமானது மதசக்தியானது போல பஞ்சபூதங்களின் சேர்க்கையினு லுண்டானதாகுமேயொழிய வேறிடத்தில் தனியாகவிருப்பதில்லே. ஆகவே தேஹமேதான் ஆத்மாவாகும் என்பது பூர்வபக்ஷம். பஞ்சபூதங்களைப்பற்றிய உபலப்தி (தோற்றம்) யானது பஞ்சபூதங்களைக்காட்டிலும் வேறுபட்டதேயாகும். ஆத்மாவிஷயியாக (அவற்றை யறிகின்றவனுக) இருப்பதால் அந்த உபலப்திரூபமாகவேயுள்ள இந்த ஆத்மாவானவன் பௌதிகமான தேஹத்தைக்காட்டிலும் வேறுபட்டவனுகிறுன். அவனே பரலோகத்தை யடைகின்றவனுகவு மாகிறுன் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—பந்தமோக்ஷாதிகாரஸித்திக்கு வேண்டி இந்த அதிகரணத்தில் தேஹத்தைக் காட்டிலும் வேருக ஆத்மாவின் இருப்பானது ஸாதிக்கப்படுகிறது. தேஹத்தைவிட வேருக ஆத்மா இல்லாவிடில் பரலோகத்தைப் பலனுகக் கொண்ட

व्यतिरिक्तात्मनि परलोकफलाश्चोदना उपपद्येरन्कस्य वा ब्रह्मात्मत्वमुपदिश्येत। ननु शास्त्रप्रमुख एव प्रथमे पादे शास्त्रफलोपभोगयोग्यस्य देहव्यतिरिक्तस्यात्मनोऽस्तित्वमुक्तम्। सत्यमुक्तं भाष्यकृता नतु तत्रात्मास्तित्वे सूत्रमस्ति। इह तु स्वयमेव सूत्रकृता तदस्तित्वमाक्षेपपुरःसरं प्रतिष्ठापितम्। इत एव चाकृष्याचार्येण शबरस्वामिना प्रमाणलक्षणे वर्णितम्। अतएव च भगवतोपवर्षेण प्रथमे तन्त्र आत्मास्तित्वाभिधानप्रसक्तौ शारीरके वक्ष्याम इत्युद्धारः कृतः। इह चेदं चोदनालक्षणेषूपासनेषु विचार्यमाणेष्वात्मास्तित्वं विचार्यते कृत्स्नशास्त्रशेषत्वप्रदर्शनाय। अपिच पूर्वस्मिन्नधिकरणे प्रकरणोत्कर्षाभ्युपगमेन मनश्चिदादीनां पुरुषार्थत्वं वर्णितं कोऽसौ पुरुषो यदर्था एते मनश्चिदादय इत्यस्यां प्रसक्ताविदं देहव्यतिरिक्तस्यात्मनोऽस्तित्वमुच्यते। तदस्तित्वाक्षेपार्थं चेदमादिमं सूत्रम्। आक्षेपपूर्विका हि

விதிகள் பொருந்தமாட்டாவன்றோ. ப்ரஹ்மாத்மத்துவமும் எவனுக்கு உபதேசிக்கப்படும்.

சங்கை—கர்மகாண்டத்தின் தொடக்கத்திலேயே முதலாவது பாதத்தில் சாஸ்திரீயமான பலனை யநுபவிக்கத் தகுதியுள்ளவனும் தேஹத்தைவிட வேறுபட்டவனுமான ஆத்மாவிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ எனின்?

உத்தரம்—உண்மைதான். அது பாஷ்யகாரராற் (சபரஸ்வாமியால்) சொல்லப்பட்டதேயொழிய அவ்விடத்தில் ஆத்மா இருக்கின்றதென்ற விஷயத்தில் ஸூத்திரமில்லை. இவ்விடத்திலோ வெனில் ஸூத்திரக்காரரால் தன்னாலேயே ஆத்மாஸ்தித்வமானது ஆக்ஷேபத்தை முன்னிட்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இங்கிருந்து எடுத்துக்கொண்டே ஆசார்ய ஶபரஸ்வாமியினால் ப்ரமாணலக்ஷணத்தில் (பூர்வமீமாம்ஸை 1-வது அத்தியாயத்தில்) உபதேசிக்கப்பட்டது. ஆனதுபற்றியேதான் (ஸூத்திரமில்லாமையாற்றான்) பகவானான * உபவர்ஷரால் முதலாவது தந்திரத்தில் (பூர்வமீமாம்ஸையில்) (சரீரத்தைவிடவேறாக) ஆத்மா இருக்கிறான் என்பதைச் சொல்ல ஸமயம்வந்தகாலத்தில் "சாரீரகத்தில் (உத்தரமீமாம்ஸையில்) சொல்லப்போகிறோம்" என நெருத்திக் கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலோ எல்லாச் சாஸ்திரங்களுக்கும் சேஷத்வத்தை (உபயோகமாகவிருத்தலைக்) காண்பிக்கவேண்டி விதிவிஹிதங்களான உபாஸனங்கள் விசாரிக்கப்படுங்கால் இந்த ஆத்மாஸ்தித்வமானது விசாரிக்கப்படுகிறது.

மேலும், முந்தின அதிகரணத்தில் ப்ரகரணோத்கர்ஷத்தை யொப்புக்கொள்ளும் வாயிலாக மனஸ்சிதாதிகளான அக்னிகளுக்கு புருஷார்த்தத்துவமானது (புருஷனுக்குப்பயன் படக்கூடியதாக விருத்தலானது) சொல்லப்பட்டது. எவனுக்குப் பயன்தரக்கூடியனவாக இந்த மனஸ்சிதாதிகள் சொல்லப்பட்டனவோ அந்தப் புருஷன் யார் என்ற (வாசங்கை) வருங்கால் தேஹத்தைவிட வேறுபட்டவனான ஆத்மாவினுடைய அஸ்தித்வமா (இருப்பா) னது சொல்லப்படுகிறது. அவனது இருப்பை ஆக்ஷேபிக்க வேண்டி இந்த முதலாவது ஸூத்திரமேற்பட்

---

* இவர் பூர்வோத்தரமீமாம்ஸைகளுக்கு விருத்தி செய்தவராவர்.

परिहारोक्तिर्विवक्षितेऽर्थे स्थूणानिखननन्यायेन दृढांबुद्धिमुत्पादयति। अत्रैके देहमात्रात्मदर्शिनो लोकायतिका देहव्यतिरिक्तस्यात्मनोऽभावं मन्यमानाः समस्तव्यस्तेषु बाह्येषु पृथिव्यादिष्वदृष्टमपि चैतन्यं शरीराकारपरिणतेषु भूतेषु स्यादिति संभावयन्तस्तेभ्यश्चैतन्यं मदशक्तिवद्विज्ञानं चैतन्यविशिष्टः कायः पुरुष इति चाहुः। न स्वर्गगमनायापवर्गगमनाय वा समर्थो देहव्यतिरिक्त आत्मास्ति यत्कृतं चैतन्यं देहे स्यात्। देह एव तु चेतनश्चात्मा चेति प्रतिजानते। हेतुं चाचक्षते शरीरे भावादिति। यद्धि यस्मिन्सति भवत्यसति च न भवति तत्तद्धर्मत्वेनाध्यवसीयते यथाऽग्निधर्मावौष्ण्यप्रकाशौ। प्राणचेष्टाचैतन्यस्मृत्यादयश्चात्मधर्मत्वेनाभिमता आत्मवादिनां तेऽप्यन्तरेव देह उपलभ्यमाना बहिश्चानुपलभ्यमाना असिद्धे देहव्यतिरिक्ते धर्मिणि देहधर्मा एव भवितुमर्हन्ति। तस्मादव्यतिरेको देहा-

---

டது. ஆக்ஷேபத்தை முன்னிட்ட பரிஹாரோக்தியானது சொல்ல வெண்ணங்கொண்ட பொருளில் கம்பத்தை நாட்டும் நியாயத்தால் நிலைத்த புத்தியை (அறிவை) உண்டாக்குமன்றோ? இவ்விஷயத்தில் தேஹத்தைமட்டுமே ஆத்மாவாக வெண்ணுகின்ற (1)லோகாயதிகர்கள் தேஹத்தைவிடவேறாக ஆத்மா இல்லை என வெண்ணுகின்றவர்களாயும் சேர்ந்தோ தனியாகவோ உள்ள வெளியிலுள்ள பூமி முதலியவற்றில் சைதன்யமானது காணப்படாவிடினுங்கூட(பிருதிவீமுதலிய)பூதங்கள் சரீரவடிவமான பரிணாமத்தை(மாறுதலை)யடையுங்கால் உண்டாகின்றது என வெண்ணுகின்றவர்களாயும் கொண்டு †மதத்தைத்தரும் சக்தியானது போல அந்தப் பிருதிவியாதி பூதங்களினின்றும் சைதன்யமுண்டாகிறது. ஆகவே விக்ஞானம் ஸங்காதத்தினின்றுமுண்டாகிறது. சைதன்யத்துடன் கூடின தேஹமேதான் புருஷனாகிறான் எனச்சொல்லுகின்றனர். ஸ்வர்க்கத்தை யடையும் பொருட்டோ மோக்ஷத்தையடையும் பொருட்டோ சக்தியுள்ளவனும் தேஹத்தைவிட வேறுபட்டவனுமான ஆத்மா இல்லையன்றோ. அவ்விதமிருந்தாலன்றோ அவனாற்செய்யப்பட்ட சைதன்யமானது தேஹத்திலிருக்ககூடும். தேஹமேதான் சேதனனும் ஆத்மாவுமாகும் என நிஸ்சயிக்கின்றனர். "சரீரமிருக்குங்கால் இருப்பதால்" என்பதால் காரணத்தையும் சொல்லுகின்றனர். எது எதிருக்கும் பொழுது இருக்குமோ இல்லாவிடி லிராதோ அது அதனுடைய தர்மமென்றேதான் நிஸ்சயிக்கப்படும். அதாவது: அக்னியின் தர்மங்களான சூடும் ஒளியும் போலவாம். ஆத்மவாதிகளுக்கு ஆத்மாவின் தர்மங்களாக வெண்ணப்பட்ட ப்ராணசேஷ்டை சைதன்யம் ஸ்மிருதி (நினைவு) முதலியனவும் தேஹத்தினுள்ளேயே காணப்படுவதாலும் வெளியில் காணப்படாதபடியாலும் தேஹத்தைவிட வேறான தர்மியானவன் ஸித்திக்காதபொழுது அவை தேஹத்தின் தர்மங்களாகவாவதுதான் பொருந்துகிறது. ஆகவே ஆத்மா தேஹத்தைவிட வேறுபடாதவனே யாகிறான். (53) (எ—று)

---

(1) புத்தரின் சிஷ்யருள் ஒருவர் லோகாயதிகர் எனப்படுவர்.

† வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு முதலியவற்றில் தனியே மதத்தைத்தரும் சக்தியானது காணப்படாவிடினுங்கூட அவற்றின் சேர்க்கையினால் உண்டாவதை அனுபவத்தில் காண்பதுபோலவாம்.

दात्मन इति ॥ ५३ ॥ एवं प्राप्ते ब्रूमः—

व्यतिरेकस्तद्भावाभावित्वान्न तूपलब्धिवत् ॥ ५४ ॥

नत्वेतदस्ति यदुक्तमव्यतिरेको देहादात्मन इति। व्यतिरेक एवास्य देहाद्भवितुमर्हति तद्भावाभावित्वात्। यदि देहभावे भावाद्देहधर्मत्वमात्मधर्माणां मन्येत ततो देहभावेऽप्यभावादतद्धर्मत्वमेवैषां किं न मन्येत। देहधर्मवैलक्षण्यात्। ये हि देहधर्मा रूपादयस्ते यावद्देहं भवन्ति। प्राणचेष्टादयस्तु सत्यपि देहे मृतावस्थायां न भवन्ति। देहधर्माश्च रूपादयः परैरप्युपलभ्यन्ते नत्वात्मधर्माश्चैतन्यस्मृत्यादयः। अपिच सति हि तावद्देहे जीवदवस्थायामेषां भावः शक्यते निश्चेतुं नत्वसत्यभावः। पतितेऽपि कदाचिदस्मिन्देहे देहा

அவதாரிகாபாஷ்யம்.—இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ஸித்தாந்தம் சொல்லுகிறோம்—

(ஸூ) வ்யதிரேக: தத்பாவாபாவித்வாத் நது உபலப்தி வத் (54)

(க—ரை) **नतु** (நது)=தேஹத்தைவிட ஆத்மா வேறுபட்டவனன்று என யாதொன்று சொல்லப்பட்டதோ அது பொருந்தாது. **व्यतिरेकः** (வ்யதிரேக:)=தேஹத்தைவிட வேறுபட்டிருத்தல் சொல்லுவதுதான் பொருந்துகிறது. ஏன்? **तद्भावाभावित्वात्** (தத்பாவாபாவித்வாத்)=தேஹ மிருக்கும்பொழுதே (அதாவது மரித்ததேஹத்தில்) சைதன்யம் காணப்படாதிருப்பதே அதன் காரணமாகும். **उपलब्धिवत्** (உபலப்த்திவத்)=பூதபௌதிக பதார்த்தங்களை விஷயமாகக் கொண்ட (அவற்றையறிகின்ற) உபலப்த்தியா (அறிவா) னது உண்மையில் பூதபௌதிகங்களைவிட வேறுபட்டதென்பது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காணவேண்டும் என்றும். (54) (எ—று)

பாஷ்யம்.—தேஹத்தைக்காட்டிலும் ஆத்மாவுக்கு வேறுபட்டிருத்தலானது கிடையாது என யாதொன்று சொல்லப்பட்டதோ இது பொருந்தாது. இவனுக்குத் தேஹத்தைக்காட்டிலும் வேறுபாடு சொல்லுவதுதான் பொருந்துகிறது. தேஹமிருக்கும்பொழுது சைதன்னியமில்லாதிருப்பதுதான் அதன் காரணமாகும். தேஹமிருக்கும்பொழுது இருப்பது கொண்டு ஆத்மதர்மங்களுக்குத் தேஹதர்மத்துவமானது எண்ணப்படுமானால் அதுபோழ்து தேஹமிருக்கும் பொழுதுங்கூட இல்லாதிருப்பதுபற்றி இவை தேஹதர்மங்களன்று என ஏன் எண்ணப் படமாட்டாது. தேஹதர்மங்களுக்கு மாறுபட்டிருப்பதாலென்க. தேஹதர்மங்களான ரூபம் முதலியன எவையுண்டோ அவை தேஹமுள்ளவரை இருப்பதைக் காண்கிறோம். ப்ராணசேஷ்டை முதலியனவோ வெனில் தேஹமிருந்த போதிலுங்கூட மரணமடைந்த நிலையில் இருப்பதில்லை. தேஹதர்மங்களான ரூபாதிகளோவெனில் பிறராலுமறியப் படுகின்றன. ஆத்மதர்மங்களான சைதன்யஸ்மிருத்யாதிகளோ வெனில் இவ்விதம் காணப்படவில்லை. மேலும் தேஹமிருக்கும் பொழுதுங்கூட ஜீவதவஸ்தையில் (உயிருடனிருக்கும் நிலையில்) இவற்றின் இருப்பு நிஸ்சயிக்க

न्तरसञ्चारेणात्मधर्मा अनुवर्तेरन्। संशयमात्रेणापि परपक्षः प्रतिषिध्यते। किमात्मकं च पुनरिदं चैतन्यं मन्यते यस्य भूतेभ्य उत्पत्तिमिच्छतीति परः पर्यनुयोक्तव्यः। नहि भूतचतुष्टयव्यतिरेकेण लोकायतिकः किञ्चित्तत्त्वं प्रत्येति। यदनुभवनं भूतभौतिकानां तच्चैतन्यमिति चेत्। तर्हि विषयत्वात्तेषां न तद्धर्मत्वमश्नुवीत स्वात्मनि क्रियाविरोधात्। नह्यग्निरुष्णः सन्स्वात्मानं दहति। नहि नटः शिक्षितः सन्स्वस्कन्धमधिरोक्ष्यति। नहि भूतभौतिकधर्मेण सता चैतन्येन भूतभौतिकानि विषयीक्रियेरन्। नहि रूपादिभिः स्वरूपं पररूपं वा विषयीक्रियते। विषयीक्रियन्ते तु बाह्याध्यात्मिकानि भूतभौतिकानि चैतन्येन। अतश्च यथैवास्या भूतभौतिकविषयाया उपलब्धेर्भावोऽभ्युपगम्यत एवं व्यतिरेकोऽप्यस्यास्तेभ्योऽभ्युपगन्तव्यः। उपलब्धिस्वरूप एव च न आत्मेत्यात्मनो देहव्यतिरिक्तत्वम्। नित्यत्वं चोपलब्धेरैकरूप्यात्। अहमिदमद्राक्षमिति चावस्थान्तरयोगेऽप्युपलब्धृत्वेन प्रत्य-

---

முடியுமே யொழிய தேஹமில்லாத பொழுது இல்லையென நிஸ்சயிக்கமுடியாது. ஒருஸமயத்தில் இந்தத் தேஹமானது விழுந்துவிடினுங்கூட வேறுதேஹஸஞ்சாரத்தினால் ஆத்மதர்மங்கள் தொடர்ந்து வரக்கூடும். ஸம்சயமிருப்பதைக் கொண்டு மட்டுமே பிறரது பக்ஷமானது மறுக்கப்படுகிறது.

எதற்குப் பிருதிவியாதி பூதங்களினின்றும் உத்பத்தியை லோகாயதிகன் விரும்புகின்றானோ அந்தச் சைதன்யமானது என்னவுருவமுள்ளது என லோகாயதிகன் கேட்கவேண்டியவனாகிறான். லோகாயதிகனோ நான்கு பூதங்களைத் தவிர்த்து வேறாக தத்துவம் ஒன்றையும் இருப்பதாக எண்ணுகின்றானில்லையன்றோ. பூதபௌதிகங்களின் அநுபவம் யாதுண்டோ அதுவேதான் சைதன்யம் என்பானேல் அது போழ்து பூதபௌதிகங்கள் (சைதன்யத்துக்கு) விஷயமாகவாவதால் சைதன்யமானது பூதபௌதிகங்களின் தர்மமாக விருத்தலை அடையமாட்டாது. தன்னிடத்தில் (சொந்த ரூபத்தில்) க்ரியையேற்படுவது முறண்பாடுடையதாக விருப்பதே அதன் காரணமாகும். அக்னியானது உஷ்ண ஸ்வபாவமுள்ளதாயிருந்து கொண்டு தன்னையே சுட்டுக்கொள்ளமாட்டாதன்றோ. நர்த்தனமாடுபவன் சிக்ஷிதனாக இருந்தபோதும் கூட தனதுதோளில் தானே ஏறமாட்டானன்றோ. பூதபௌதிகங்களின் தர்மமாக இருக்கும் சைதன்னியத்தினால் (தர்மிகளான) பூதபௌதிகங்கள் விஷயீகரிக்க (கிரஹிக்கப்) படமாட்டாவன்றோ. ரூபம் முதலியவற்றினால் சொந்தரூபமோ பிறவற்றின் ரூபமோ விஷயீகரிக்க (க்கிரஹிக்க) ப்படுவதில்லை யன்றோ. தனக்கு வெளியிலும் சரீரத்திலுமுள்ள பூதபௌதிகங்கள் சைதன்னியத்தினால் விஷயீகரிக்க (கிரஹிக்க) ப்படுவதைக் காண்கிறோம். ஆகவே பூதபௌதிகங்களை விஷயீகரிக்கின்ற இந்த உபலப்தியினுடைய (சைதன்னியத்தினுடைய) இருப்பானது எவ்விதம் ஒப்பப்படுகின்றதோ இவ்விதமே இந்த உபலப்தியானது பூதபௌதிகங்களைக் காட்டிலும் வேறுபட்டதென்பதையும் ஒப்பவேண்டுவது அவஸ்யமாகவே தானாகிறது. உபலப்தி (சைதன்னிய) ஸ்வரூபமேதான் நாங்கள் கூறும் ஆத்மா என்பதுபற்றி ஆத்மாவுக்குத் தேஹத்தைவிட வேறுபட்டிருத்தலும் ஸித்தித்து விடுகிறது. உபலப்தி ஒன்றாகவே இருப்பதி

भिज्ञानात्। स्मृत्याद्युपपत्तेश्च। यत्तूक्तं शरीरे भावाच्छरीरधर्म उपलब्धिरिति तद्वर्णितेन प्रकारेण प्रत्युक्तम्। अपिच सत्सु प्रदीपादिषूपकरणेषूपलब्धिर्भवत्यसत्सु न भवति। नचैतावता प्रदीपादिधर्म एवोपलब्धिर्भवति। एवं सति देह उपलब्धिर्भवत्यसति च न भवतीति न देहधर्मो भवितुमर्हति। उपकरणत्वमात्रेणापि प्रदीपादिवद्देहोपयोगोपपत्तेः। नचात्यन्तं देहस्योपलब्धावुपयोगोऽपि दृश्यते निश्चेष्टेऽप्यस्मिन्देहे स्वप्ने नानाविधोपलब्धिदर्शनात्। तस्मादनवद्यं देहव्यतिरिक्तस्यात्मनोऽस्तित्वम्॥ ५४॥

விருந்து நித்யத்துவமும் ஸித்தித்து விடுகிறது. "நான் இதைப் பார்த்தேன்" என்பதாய் வேறுநிலையேற்படுங் காலத்திலுங்கூட தானே அறிந்தவன் என்ற ப்ரத்யபிக்ஞை (ஐக்யக்ஞானம்) ஏற்படுவதே அதன் (உபலப்தி ஒன்றாகவிருத்தலின்) காரணமாகும். நினைவுமுதலியன பொருந்தக்கூடியதாகவு மிருப்பதும் மற்றொரு காரணமாகும். "சரீரமிருக்கும் பொழுதே காணப்படுவதால் சரீரத்தின் தர்மமே தான் உபலப்த்தி" என யாதொன்று சொல்லப்பட்டதோ அது இதுவரை சொன்ன முறையினால் மறுக்கப்பட்டதாக வாகிறது.

மேலும், விளக்குமுதலிய உதவிகருவிகளிருக்குங்கால் உபலப்தி (அறிவு) உண்டாகிறது. அவையில்லாவிடில் உண்டாவதில்லை இதைக் கொண்டுமட்டும் உபலப்தியானது விளக்குமுதலியவற்றின் தர்மமாகவே ஆகமாட்டாதன்றோ. ஆகவே தேஹமிருக்குங்கால் உபலப்தி இருக்கின்றது தேஹமில்லாவிடில் உபலப்தி இருப்பதில்லை என்ற இதைக் கொண்டுமட்டும் உபலப்தி தேஹதர்மமாக வாகமாட்டாது. விளக்கு முதலியன போன்று உபகரணமாக (உதவிகருவியாக) இருப்பதைக் கொண்டுமட்டுமே தேஹத்தின் உபயோகமானது உபலப்தியில் பொருந்தக்கூடியதாக வாகலாம். மேலும், தேஹத்துக்கு உபலப்திவிஷயத்தில் முற்றிலும் உபயோக மிருப்பதாகவும் காணப்படவுமில்லை. இந்தத் தேஹமானது எவ்வித வேலையு மற்றதாக விருப்பினுங்கூட ஸ்வப்பினத்தில் பற்பல உபலப்தி (தோற்ற) மேற்படுவதாகக் கணக்கிடப்படுவதே அதன் காரணமாகும். ஆகவே தேஹத்தைவிட வேறாக ஆத்மா இருப்பதாகச் சொன்னது குற்றமற்றதாகவே ஆகிவிடுகிறது. (54)

குறிப்பு—இந்தத் தேஹாத்மவாதகண்டன விஷயமாக ஸ்வாராஜ்ய ஸித்தி என்றக் கிரந்தத்தில் சொல்லியுள்ள நான்கு சுலோகங்களைமட்டும் அடியில் எழுதுகிறோம்—

कश्चिद्दुःखी स्वजन्मप्रभृति सुखयुतश्चापरः कस्य हेतोः
कस्मादाद्या प्रवृत्तिस्तनुरपि च कुतः किन्न वेत्ति प्रमीतः।
स्वाभाव्यं हेतुसाम्ये सममिति विदितं दीपबीजाङ्कुरादौ
वैषम्यं कर्मजन्यं यदि वदसि जनेः पूर्वमप्यात्मसिद्धिः॥ १॥

मानं प्रत्यक्षमेकं यदि कथय कथं भाषितं ते प्रमाणं
संभाव्यार्थं सदोषं यदि तदपि बली किन्न वेदो विदोषः।

३१ अङ्गावबद्धाधिकरणम् । सू० ५५-५६

अङ्गावबद्धास्तु न शाखासु हि प्रतिवेदम् ॥ ५५ ॥

नह्यक्ष्यक्षं विनाक्षैर्नच तव सुगमा मानताऽध्यक्षमात्रे
ज्ञानं नान्यस्य बोद्धुं प्रभवति च भवांस्तेन मिथ्याप्रलापी ॥ २ ॥
गौरस्स्थूलो युवाहं पटुरिति च तनावात्मबुद्धिर्जनानां
स्वाभाव्यादेव सिद्धेत्यधिगमयदिदं निष्फलं दर्शनं ते ।
वेदद्वेषात्प्रवृत्तं यदि वत नतरां द्वेषमूलं प्रमाणं
दैवान्नष्टस्त्वमेकः किमिति शठ! परान् हन्त हन्तुं प्रवृत्तः ॥ ३ ॥
रेतोरक्तप्रसूतं जडमशनचितं षड्विकारं त्वगस्थि-
स्नायुक्रव्यान्त्रमज्जारुधिरमयमतिस्वल्पमाध्यामयाढ्यम् ।
प्राणापाये मृदादिप्रतिममपिच विट्कीटभस्मावशेषं
देहं तं मूढ! कस्मादहमिति मनुषे केन वा वञ्चितोऽसि ॥ ४ ॥

முப்பதாவது ஐகாத்மியாதிகரணம் முற்றிற்று.

அங்காவபத்தாதிகணரம் 31.

(அ-கை) "ஓமித்யேததக்ஷர முத்கீதமுபாஸீத" ஓம் என்ற உத்கீதாவயவமான அக்ஷரத்தை ப்ராணனாக உபாஸிப்பாயாக என்றும், ப்ருதிவீஹிம்கார:* அக்னி: ப்ரஸ்தாவ: அந்தரிக்ஷமுத்கித: ஆதித்யஃ ப்ரதிஹார: த்யௌ: நிதநம்" என்றவிடத்தில் **ஹிம்** என்ற அக்ஷரத்தில் பிருதிவீலோகதிருஷ்டியும், **ப்ரஸ்தாவம்** என்ற ஸாமபக்தியில் அக்னிலோக திருஷ்டியும், **உத்கீதம்** என்ற ஸாமபக்தியில் அந்தரிக்ஷலோகதிருஷ்டியும், **ப்ரதிஹாரம்** என்ற ஸாமபக்தியில் ஆதித்ய லோக திருஷ்டியும், **நிதநம்** என்ற ஸாமபக்தியில் த்யுலோகதிருஷ்டியும் செய்யவேண்டுமென்றும், **உக்தம்** எனப் பெயரிய சஸ்திரத்தில் பிருதிவீதிருஷ்டியும், இஷ்டகாசிதமான அக்னியில் லோகதிருஷ்டியும் செய்யவேண்டுமென்றுமாக **உத்கீதம்** முதலிய கர்மாங்கஸம்பந்தங்களான உபாஸனங்கள் ஒவ்வொரு வேதங்களிலுமுள்ள வெவ்வேறு சாகைகளிலும் சொல்லப்படுகின்றன. அவை அந்தந்தச் சாகைகளிலுள்ள உத்கீதாதிகளில் மட்டும் செய்யவேண்டுவனவா? அல்லது எல்லாவேதங்களிலுமுள்ள எல்லாச் சாகைகளிலுமுள்ள உத்கீதாதிகளிலும் செய்யவேண்டுவனவா? என ஸந்தேஹம் வர அந்தந்தச் சாகைகளிலுள்ளதை அந்தந்த சாகைகளில் மட்டுந்தான் செய்யவேண்டும் எனப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே எல்லா

* ஹிம் என்பது ஸாமகானஞ் செய்யுங்கால் உச்சரிக்கப்படும் அக்ஷரமாகும். ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், நிதனம் என்பன ஸாமகானஞ் செய்வதில் ஓர் முறையாகும்.

उक्थादिधीः स्वशाखाङ्गेष्वेवान्यत्रापि वा भवेत् । सान्निध्यात् स्वस्वशाखाङ्गेष्वेवासौ व्यवतिष्ठते॥१॥
उक्थोद्गीथादिसामान्यं तत्तच्छब्दैः प्रतीयते । श्रुत्या च सन्निधेर्बाधस्ततोऽन्यत्रापि यात्यसौ ॥ २ ॥

समाप्ता प्रासङ्गिकी कथा, संप्रति तु प्रकृतामेवानुवर्तामहे—'ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत' (छा० १।१।१) 'लोकेषु पञ्चविधं सामोपासीत' (छा० २।२।१), 'उक्थमुक्थमिति वै प्रजा वदन्ति तदिदमेवोक्थम्', 'इयमेव पृथिवी', 'अयं वाव लोक एषोऽग्निश्चितः' इत्येवमाद्या य उद्गीथादिकर्माङ्गावबद्धाः प्रत्ययाः प्रतिवेदं शाखाभेदेषु विहितास्ते तत्तच्छाखागतेष्वेवोद्गीथादिषु भवेयुरथवा सर्वशाखागतेष्विति विशयः।

வேதசாகைகளிலும் அந்தத் திருஷ்டிகள் செய்யத்தக்கன என ஸித்தாந்தப்படுத்த வேண்டி இரண்டு ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணம் ஆரம்பிக்கப்படுகிறது. அதன் முதல் சூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) அங்காவபத்தாஸ்து நசாகாஸு ஹி ப்ரதிவேதம்(55)

(ப-ரை) **अङ्गावबद्धास्तु** (அங்காவபத்தாஸ்து)=அங்காவபத்தங்களான. உபாஸனைகள் **प्रतिवेदम्** (ப்ரதிவேதம்)=ஒவ்வொருவேதத்திலுமுள்ளது **शाखासु** (சாகாஸு)=அந்தந்தச் சாகைகளில்மட்டுந்தான் செய்யவேண்டுவன என்பது **न** (ந)= கிடையாது. (55)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) உக்தம் முதலிய புத்தியானது தத்தமது சாகையிலுள்ள அங்கங்களில் மட்டிலும் தான் செய்யவேண்டுமா? அல்லது வேறு சாகையிலுள்ள உத்கீதாதி அங்கங்களிலுஞ் செய்யலாமா? என்பது ஸந்தேஹம். ஸான்னித்யத்தை (ஸமீபபாடத்தை) முன்னிட்டு தத்தமது சாகையிலுள்ள அங்கங்களில் மட்டுமே தான் இந்தப் புத்தியானது ஏற்படும் என்பது பூர்வபக்ஷம். உக்தத்வம் உத்கீதத்வம் என்றதாதி ஜாதியானது அந்தந்தவிடங்களிலுள்ள உக்த உத்கீதசப்தங்களால் தோற்றத்தை யடைகிறது. ஆகவே ஜாதிபோதக சுருதியைக்கொண்டு ஸன்னிதியென்ற ஸ்தானபாடமானது பாதிக்கப்படுகிறது. ஆனதுபற்றி ஓரிடத்திலுள்ள இந்தப் புத்தியானது வேறிடத்திலும் வரத்தான் வரும் என்பது ஸித்தாந்தம்.

பாஷ்யம்.—ப்ராஸங்கிகமான கதை (உபதேசம்) முடிந்துவிட்டது. இது போழ்தோ ப்ரகிருதமான கதையையே தொடங்குகிறோம்—"ஓம் என்ற உத்கீதாவயவமான இந்த எழுத்தை யுபாஸிக்கவேண்டும்" "ஐந்துவிதமான ஸாமத்தை லோகங்களில் உபாஸிக்கவேண்டும்" "உக்தம் உக்தமென ப்ரஜைகள் சொல்லுகின்றனரே அந்த உக்தமானது இதுவே யாகும்" "இதே பிருதிவியும் அதே லோகமும், சயனஞ்செய்யப்பட்ட இந்த அக்னியும்" என்ற இது முதலான உத்கீதம் முதலிய கர்மாங்க ஸம்பத்தங்களான யாதொரு உபாஸனங்கள் ஒவ்வொரு வேதத்திலுமுள்ள சாகைகளில் விதிக்கப்பட்டனவோ அவை அந்தந்தச் சாகைகளிலுள்ள உத்கீதாதிகளில் மட்டும் ஏற்படுகின்றனவா? அல்லது எல்லாச் சாகை

प्रतिशाखं च स्वरादिभेदादुद्गीथादिभेदानुपादायायमुपन्यासः। किं तावत्प्राप्तम्। स्वशाखागतेष्वेवोद्गीथादिषु विधीयेरन्निति। कुतः—सन्निधानात्। 'उद्गीथमुपासीत' (छा० १।१।१) इति हि सामान्यविहितानां विशेषाकाङ्क्षायां सन्निकृष्टेनैव स्वशाखागतेन विशेषेणाकाङ्क्षादिनिवृत्तेः। तदतिलङ्घनेन शाखान्तरविहितविशेषोपादाने कारणं नास्ति। तस्मात्प्रतिशाखं व्यवस्थेति। एवं प्राप्ते ब्रवीत्यङ्गावबद्धास्त्विति। तुशब्दः पक्षं व्यावर्तयति। नैते प्रतिवेदं स्वशाखास्वेव व्यवतिष्ठेरन्। अपितु सर्वशाखास्वनुवर्तेरन्। कुतः—उद्गीथादिश्रुत्यविशेषात्। स्वशाखाव्यवस्थायां ह्युद्गीथमुपासीतेति सामान्यश्रुतिरविशेषप्रवृत्ता सती सन्निधानवशेन विशेषे व्यवस्थाप्यमाना पीडिता स्यात्। नचैतन्न्याय्यम्। सन्निधानात्तु श्रुतिर्बलीयसी। नच सामान्याश्रयः प्रत्ययो नोपपद्यते। तस्मात्स्वरादिभेदे सत्यप्युद्गीथत्वाद्यविशेषात्सर्वशाखागतेष्वेवोद्गीथादिष्वेवञ्जातीयकाः प्रत्ययाः स्युः ॥५५॥

களிலுமுள்ள உத்கீதாதிகளிலும் ஏற்படுகின்றனவா? என்பது ஸந்தேஹம். ஒவ்வொரு சாகையிலும் ஸ்வரம் முதலியன வேறுபடுவதால் ஏற்படும் உத்கீதாதி பேதங்களை முன்னிட்டு இந்த ஸந்தேஹமேற்படுகிறது. முதலில் கிடைப்பது யாதென்னில் சொந்தசாகைகளிலுள்ள உத்கீதாதிகளிற்றான் இந்த உபாஸனங்கள் விதிக்கப்படும் என்றாம். ஏன்? ஸன்னிதியை (ஸ்தான ப்ரமாணத்தைக்) கொண்டாம். "உத்கீதமுபாஸீத"=உத்கீதத்தை யுபாஸிக்கவேண்டும் எனப் பொதுவாக விதிக்கப்பட்டவற்றுக்கு விசேஷாகாங்க்ஷை வருங்கால் ஸமீபத்திலுள்ளதும் சொந்த சாகையிலுள்ளதுமான விசேஷத்தினாலேயே ஆகாங்க்ஷை முதலியவற்றின் நிவிருத்தி யேற்படுவதே அதன்காரணமாகும். அதைவிடுத்து வேறுசாகையில் விதிக்கப்பட்ட விசேஷத்தைக் கொள்ளுவதில் காரணம் கிடையாது. ஆகவே ஒவ்வொரு சாகையிலும் வியவஸ்தை (தனித்தனி) என்பது தான் பொருந்துகிறது. என இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்தமாகவே "அங்காவபத்தாஸ்து" என்றதால் பதில் சொல்லுகிறார்—ஸூத்திரத்திலுள்ள து என்ற சப்தமானது பூர்வபக்ஷத்தை மறுக்கிறது. இந்த ப்ரத்யயங்கள் ஒவ்வொரு வேதத்திலுமுள்ள சொந்த சாகைகளில் மட்டுந்தான் வரும் என்பது கிடையாது. ஏன்? உத்கீதாதி ஶ்ருதிபொதுவாகவிருப்பதாலென்க. சொந்த சாகையில்மட்டுந்தான் எனக் கட்டுபாடு சொன்னாலோ "உத்கீதத்தை உபாஸிக்கவேண்டும்" எனப் பொதுவாய் ப்ரவிருத்தித்த ஸாமான்ய ஶ்ருதியானது (உத்கீதசப்தமானது) ஸன்னிதிவசத்தால் (ஸமீபத்தில் பாடமிருப்பதைக்கொண்டு) விசேஷத்தில் கட்டுப்படுத்தப்படுவதாய்க் கொண்டு பீடிக்கப்பட்டதாகவாகிவிடும். இது நியாயமாகவுமாகாது. ஸன்னிதியைக் காட்டிலும் ஶ்ருதியானது வலுவுள்ளதன்றோ. ஸாமான்யத்தை யாஶ்ரயித்து ப்ரத்யயம் (உபாஸனம்) ஏற்படுவது பொருந்தாததாகவுமாகமாட்டாது, ஆகவே ஸ்வரம் முதலியன வேறுபடினுங்கூட உத்கீதத்வம் (உத்கீதத்தன்மை) பொதுவாகவிருப்பதால் எல்லாசாகைகளிலுமுள்ள உத்கீதாதிகளிலேயே இப்மாதிரியான உபாஸனங்கள் ஏற்படுகின்றன. (55) (எ—று)

मन्त्रादिवद्वाऽविरोधः ॥ ५६ ॥

अथवा नैवात्र विरोधः शङ्कितव्यः । कथमन्यशाखागतेषूद्गीथादिष्वन्यशाखाविहिताः प्रत्यया भवेयुरिति । मन्त्रादिवदविरोधोपपत्तेः । तथाहि मन्त्राणां कर्मणां गुणानां च शाखान्तरोत्पन्नानामपि शाखान्तर उपसङ्ग्रहो दृश्यते । येषामपि हि शाखिनां कुटरुरसीत्यश्मादानमन्त्रो नाम्नातस्तेषामप्यसौ विनियोगो दृश्यते कुक्कुटोऽसीत्यश्मानमादत्ते कुटरुरसीति वेति । येषामपि समिदादयः प्रयाजा नाम्नातास्तेषमपि तेषु गुणविधिराम्नायते—'ऋतवो वै प्रयाजाः समानत्र होतव्याः' इति । तथा येषामपि 'अजोऽग्नीषोमीयः' इति जातिविशेषोपदेशो नास्ति तेषामपि तद्विषयो मन्त्रवर्ण उपलभ्यते—

(ஸூ) மந்த்ராதிவத்வா அவிரோத: (56)

(ப-ரை) **वा** (வா)=அல்லது **मन्त्रादिवत्** (மந்த்ராதிவத்)=வேறு சாகையிலுள்ள மந்த்ரம் குணம், கர்மம் இவற்றுக்கு வேறுசாகையில் ஸம்பந்தமானது காணப்படுவதுபோல **अविरोधः** (அவிரோத:)=விரோதமின்மையானது ஏற்படலாம். (56)

பாஷ்யம்.—அல்லது இவ்விடத்தில் வேறுசாகையிலுள்ள உத்கீதாதிகளில் வேறுசாகையில் விதிக்கப்பட்ட உபாஸனங்கள் எவ்விதம் வரும் என்ற விரோத சங்கையே கொள்ளவேண்டுவதில்லை. மந்திராதிகள் போலவிரோதமின்மை பொருத்தமாவதால் என்க. அதாவது:—மந்திரங்களும், கர்மங்களும், குணங்களும் வேறுசாகையிலுள்ளன வாயினுங் கூட அவற்றுக்கு வேறுசாகையில் எடுத்துக் கொள்ளல்காணவும் படுகின்றது. (1) எந்தச் சாகிகளுக்கு "குடருரஸி" என்ற அஸ்மாதான (கல்லையெடுக்கும்) மந்திரம் படிக்கப்படவில்லையோ அவர்களுக்குங் கூட "குக்குடோஸி" என்றும் அஸ்மாதானத்தைச் செய்யலாம் "குடருரஸி" என்றுமாவது அஸ்மாதானத்தைச்செய்யலாம் என விநியோகம் காணப்படுகிறது. எந்த மைத்ராயணீய சாகிகளுக்கு (2) ஸமித்முதலிய ப்ரயாஜங்கள் சொல்லப்படவில்லையோ அவர்களுக்குங்கூட அந்த ஹோமங்களில் குணவிதியானது "ருதவோ வை ப்ரயாஜா: ஸமானத்ரஹோதவ்யா:" என்றதாற் சொல்லப்படுகிறது. அதுபோலவே எந்த யஜுர்வேதிகளுக்கு "அஜோக்னீஷோமீய:"=(அக்னீஷோமதேவதையை யுத்தேசித்த பசு அஜமாகும்) என்பதாய் பசுவின் ஜாதிவிசேஷத்தைப்

(1) யஜுர்வேதிகளுக்கு தண்டுலத்தை (அரிசியை) அரைப்பதற்காகக்கல்லை எடுக்குமிடத்தில் "குக்குடோஸி" என்ற மந்திரம் படிக்கப் படுகிறதே யொழிய "குடருரஸி" என்ற மந்திரம் படிக்கப்படுவதில்லை. ஆயினும் அவ்விடத்தில் முற்கூறிய இரண்டுமந்திரங்களுக்கும் விகல்பமாக(இரண்டனுளொன்றைப் படித்து கல்லை எடுக்கலாம் என்பதாக) விதியிருப்பதால் யஜுஸ் சாகையில் படிக்கப்படாத "குடருரஸி" என்ற மந்திரத்துக்கும் அதில் ப்ராப்தியேற்படுகிறது.

(2) "ஸமிதோ யஜதி, தநூநபாதம் யஜதி, இடோ யஜதி, பர்ஹிர்யஜதி, ஸ்வாஹாகாரம் யஜதி" என்பதாய் ஸமிதாதிகளான ஐந்துப்ரயாஜங்கள் யஜுர்வேதிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. மைத்ராயணீய சாகையில் அவை சொல்லப்படவில்லை. ஆயினும்

'छागस्य वपाया मेदसोऽनुब्रूहि' इति। तथा वेदान्तरोत्पन्नानामपि 'अग्नेर्वैहोत्रं वेरध्वरम्' इत्येवमादिमन्त्राणां वेदान्तरे परिग्रहो दृष्टः। तथा बह्वृचपठितस्य सूक्तस्य 'यो जात एव प्रथमो मनस्वान्' (ऋ० सं० २। ६। ७) इत्यस्य 'अध्वर्यवे सजनीयं शस्यम्' इत्यत्र परिग्रहो दृष्टः। तस्माद्यथाश्रयाणां कर्माङ्गानां सर्वत्रानुवृत्तिरेवमाश्रितानामपि प्रत्ययानामित्यविरोधः॥ ५६॥

பற்றியவுபதேசமானது காணப்படவில்லையோ அவர்களுக்குங்கூட ஜாதிவிசேஷ வாசகமான (ஜாதிவிசேஷத்தைக் கூறும்) மந்த்ரவர்ணமானது "சாகஸ்ய வபாயா மேதஸோநுப்ரூஹி" என்றதால் பசுவின் ஜாதி விசேஷத்தைத் தெரிவித்திருக்கிறது. அவ்விதமே வேறுவேதங்களில் படிக்கப்பட்ட (3)"அக்னேர்வேர்ஹோத்ரம் வேரத்வரம்" என்றதாதிமந்திரங்களுக்கு வேறு வேதத்தில் எடுத்துக் கொள்ளல் காணவும் படுகிறது. அவ்விதமே ருக்வேதத்தில் படிக்கப்பட்ட (4) "யோ ஜாத ஏவ ப்ரதமோமனஸ்வான்" என்ற ஸூக்தத்துக்கு (5) "அத்வர்யவே ஸஜநீயம் ஶஸ்யம்" என்றதால் யஜுர்வேதியான அத்வர்யு செய்யும் ப்ரயோகத்தில் ஶஸ்திரஞ் சொல்லுமிடத்தில் சேர்த்துக் கொள்ளல் காணப்படுகிறது. ஆகவே ஆஶ்ரயங்களான கர்மாங்கங்களுக்கு எல்லாவிடத்திலும் சேர்த்துக்கொள்ளல் எவ்விதமோ இவ்விதமே இவற்றை யாஶ்ரயித்த ப்ரத்யயங்களுக்கும் (உபாஸனங்களுக்கும்) ஏற்படலாமானதுபற்றி விரோதமெதுவும் வருவதற்கில்லை. (56) (எ-று)

முப்பத்தோன்ருவது அங்காவபத்தாதிகரணம் முற்றிற்று.

: 'ருதவோவை ப்ரயாஜா: ஸமாநத்ரஹோதவ்யா:" என்றதால் குணவிதியானது சொல்லப்படுகிறது. அதாவது:—வஸந்தம், க்ரீஷ்மம், வர்ஷா, சரத், ஹேமந்தம் சிசிரம் என ஆறு ருதுக்களுண்டு. அவற்றுள் ஹேமந்தம், சிசிரம் என்ற இரண்டு ருதுக்களையும் ஒன்ருகக் கொண்டால் ருதுக்கள் ஐந்துகளாகின்றன. ஆகவே ருதுக்கள்போல ஐந்து எண்களுள்ள ப்ரயாஜஹோமங்களை ஸமாநத்ர—துல்யமான கர்மஸ்தலத்தில், செய்யவேண்டும் என்பதாய் ப்ரயாஜஹோமத்துக்கு பஞ்சத்வம் (5ந்தாகவிருத்தல்) என்ற குணத்தையொட்டி விதியிருப்பதால் இத்தகைய பஞ்சத்வம் என்ற குணம் வாய்ந்த வேறுசாகையில் விதிக்கப்பட்ட ஹோமங்களின் ஸம்பந்தமேற்படுகிறது என்ரும்.

(3)இதன்பொருளை 3-வது அத்தியாயம் மூன்ருவதுபாதம் 33-வது ஸூத்திரபாஷ்ய மொழிபெயர்ப்பில் 227வது பக்கத்திற்காண்க.

(4)ய: எவன் ஜாதஏவ பாலனுகவிருக்கும் பொழுதேப்ரதம: குணங்கள் நிறைந்தவனுகவும், மனஸ்வான்: விவேகமுள்ளவனுகவும் இருந்தானே அந்த இந்திரன் இத்தகைய குணமுள்ளவன் என ஹேஜனங்களே! நீங்களறிந்து கொள்ளுங்கள் என்பது அதன் பொருள்.

(5) "ஸஜநாஸஇந்த்ர" என்றுகூறப்பட்ட ருக்வேத ஸூக்தமானது "ஸஜநீயம்" என்றதாற்சொல்லப்படுகிறது. அந்த ஸூக்தத்தைக்கொண்டு யஜுர்வேதியான அத்வர்யுவானவன் சஸ்த்ரம் சொல்லவேண்டும் என்பது அதன் பொருள்.

३२ भूमज्यायस्त्वाधिकरणम् । सू० ५७

भूम्नः क्रतुवज्ज्यायस्त्वं तथाहि दर्शयति ॥ ५७ ॥

ध्येयो वैश्वानरांशोपि ध्यातव्यः कृत्स्न एव वा । अंशेषूपास्तिफलयोरुक्तेरस्त्यंशधीरपि ॥ १ ॥

उपक्रमावसानाभ्यां समस्तस्यैव चिन्तनम् । अंशोपास्तिफले स्तुत्यै प्रत्येकोपास्तिनिन्दनात् ॥ २ ॥

'प्राचीनशाल औपमन्यवः' (छा० ५ । ११ । १) इत्यस्यामाख्यायिकायां व्यस्तस्य समस्तस्यच वैश्वानरस्योपासनं श्रूयते । व्यस्तोपासनं तावत् 'औपमन्यव कं त्वमात्मानमु-

---

பூமஜ்யாயஸ்த்வாதிகரணம் 32.

(ஸூ) பூம்நः க்ரதுவத் ஜ்யாயஸ்த்வம் ததாஹி தர்சயதி (57)

(ப—ரை) भूम्नः (பூம்நः)=பதார்த்தங்களின் பெருக்கையடைந்த ஸமஸ்தமான வைஶ்வாநரோபாஸனத்துக்கும், ज्यायस्त्वं (ஜ்யாயஸ்த்வம்)=ப்ராதான்யமானது, வைஶ்வாநரோபாஸனங்கூறுமிந்த வாக்கியத்தில் சொல்லப்படுவதாகக் கொள்ளல் வேண்டும். क्रतुवत् (க்ரதுவத்)=தர்சபூர்ணமாஸம் முதலிய யாகங்களில் அங்கம் ப்ரதானம் (அங்கி) இவற்றுடன் கூடியதாய் சேர்ந்த ஓரேப்ரயோகஞ் செய்யப்படுகிறதே யொழிய அங்கங்களான ப்ரயாஜாதிகளுக்குத் தனிப்பிரயோகமானது எவ்விதம் கிடையாதோ அவ்விதமே இங்குங்காண்க. तथाहि दर्शयति (ததாஹி தர்சயதி)=அவ்விதமே யன்றோ சுருதியானது ஸமஸ்த வைஶ்வாநரோபாஸனத்துக்கு ப்ராதான்யத்தை யுபதேசித்து மிருக்கிறது. (57) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) வைஶ்வாநரனுடைய அவயவமும் தியானஞ் செய்யத்தகுந்ததா? அல்லது முழுவதுமே (அதாவது: ஸமஸ்த அவயவங்களுடனும் கூட அவயவியான வைஶ்வாநரனே) தியானஞ் செய்யத்தக்கதா? என்பது ஸந்தேஹம். அம்சங் (அவயவங்) களில் உபாஸ்தியும் அதற்குப்பலனும் சொல்லப்பட்டிருப்பதைக் கொண்டு அவயவங்களின் உபாஸ்தியு முண்டு என்பது பூர்வபக்ஷம். உபக்ரமோபஸம்ஹாரங்களைக்கொண்டு ஸமஸ்த வைஶ்வாநரோபாஸனந்தான் சொல்லப்பட்டதாகக் கொள்ளவேண்டும் ப்ரத்யேகோபாஸ்தியும் (தனித்தனி அவயவங்களிற் சொல்லிய உபாஸனமும்) அதற்குச் சொல்லியபலனும் ஸ்துதியின் பொருட்டே சொல்லப்பட்டதாகவாகும். என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—சாந்தோக்கியத்தில் (1) "ப்ராசீனசால ஔபமன்யவ:" என்று தொடங்கிப் படிக்கப்படும் கதையில் வ்யஸ்தமாகவும் (தனித்தனியாகவும்) ஸமஸ்தமாகவும் (சேர்ந்தும்) உள்ள வைஶ்வாநரனுடைய உபாஸனமானது சொல்லப்படுகிறது. தனித்த உபாஸனமாவது—"ஹே ஔபமன்யவ! நீர் எந்த ஆத்மாவை உபாஸிக்கின்றீர்? எனவே ஓபெரியீர் அரசனே! த்யுலோகத்தையே

---

(1) இக்கதைகூறும் மந்திரத்தின் பொருளை முதலாவது அத்தியாயம் 2-வது பாதம் 24-வது ஸூத்திரத்தின் அவதாரிகையில் காண்க.

पास्स इति दिवमेव भगवो राजन्निति होवाचैष वै सुतेजा आत्मा वैश्वानरो यं त्वमात्मानमुपास्से' (छा० ५।१२।१) इत्यादि। तथा समस्तोपासनमपि 'तस्य ह वा एतस्यात्मनो वैश्वानरस्य मूर्धैव सुतेजाश्चक्षुर्विश्वरूपः प्राणः पृथग्वर्त्मात्मा सन्देहो बहुलो बस्तिरेव रयिः पृथिव्येव पादौ' (छा० ५।१८।२) इत्यादि। तत्र संशयः—किमिहोभयथाप्युपासनं स्याद्व्यस्तस्य समस्तस्य चोत समस्तस्यैवेति। किं तावत्प्राप्तम्। प्रत्यवयवं सुतेजःप्रभृतिषूपास्स इति क्रियापदश्रवणात् 'तस्मात्तव सुतं प्रसुतमासुतं कुले दृश्यते' (छा० ५।१२।१) इत्यादिफलभेदश्रवणाच्च व्यस्तान्यप्युपासनानि स्युरिति प्राप्तम्! ततोऽभिधीयते—भूम्नः पदार्थोपचयात्मकस्य समस्तस्य वैश्वानरोपासनस्य ज्यायस्त्वं प्राधान्यमस्मिन्वाक्ये विवक्षितं भवितुमर्हति न प्रत्येकमवयवोपासनानामपि। क्रतुवत्। यथा क्रतुषु दर्शपूर्णमासप्रभृतिषु सास्मत्येन साङ्गप्रधानप्रयोग एवैको विवक्ष्यते न व्यस्तानामपि प्रयोगः प्रयाजादीनाम्। नाप्येकदेशाङ्गयुक्तस्य प्रधानस्य तद्वत्। कुत एतद्भूमैव ज्यायानिति। तथाहि श्रुतिर्भूम्नो ज्यायस्त्वं दर्शयति एकवाक्यतावगमात्। एकं हीदं वाक्यं वैश्वानरविद्याविषयं पौर्वापर्यालोचनात्प्रतीयते। तथाहि—प्राचीनशालप्रभृतय उद्दालकावसानाः षड्ऋषयो वैश्वानरविद्यायां परिनिष्ठामप्रतिपद्यमाना अश्वपतिं कैकेयं

(உபாஸிக்கிறேன்) எனவே யாதொரு ஆத்மாவை நீர் உபாஸிக்கின்றீரோ இதுவோ ஸுதேஜஸ் எனப் பெயரிய வைப்வாநர ஆத்மாவாகும்" என்றதாதியாம். அவ்விதமே ஸமஸ்தோபாஸனமும் "அந்த இந்த வைப்வாநர ஆத்மாவுக்கு தலையே ஸுதேஜஸ்ஸாகும், சக்ஷுஸ் விஸ்வரூபமாகும், ஸந்தேஹமானது=தேஹ மத்யபாகமானது பகுளமாகும், பஸ்தியேரயியாகும், ப்ருதிவியே பாதங்களாகும்" என்றதாதியாம். அவ்விடத்தில் ஸம்சய முதயமாகிறது. அதாவது:—இங்கு தனித்தும் சேர்த்துமான இரண்டுவித உபாஸனம் சொல்லப்படுகிறதா? எல்லாவற்றுடனும் சேர்ந்த ஒரே உபாஸனம் மட்டும் சொல்லப்படுகிறதா? என்றும். முதலில் கிடைப்பது யாதென்னில் யாதானு மொருஅங்கத்துடன் கூடின ப்ரதானத்துக்கு (தர்சபூர்ணமாஸாதிகளுக்கு) பிரயோகம் காணப்படவில்லை என்பது எவ்விதமோ அவ்விதமேயாம். இஃது எவ்விதமெனின்? பூமாவே=ஸமஸ்தப்ரயோகமே, முக்கியமாகக் காணப்படுவதாலென்க. அதாவது:—சுருதியானது பூமாவுக்கு=ஸமஸ்தோபாஸனத்துக்கு, ஜ்யாயஸ்த்வத்தை=ப்ராதான்யத்தை, யன்றோ தெரிவிக்கிறது. ஏகவாக்யதை (ஒற்ற ஒரே பொருளுள்ளதாயிருத்தல்) அறியப்படுவதாலென்க. வைப்வாநரவித்யாவிஷயமான இந்தவாக்கியமானது முன்பின்னாலோசனையினின்றும் ஒன்றென்றல்லவோ தோற்றுகின்றது. அதாவது:—ப்ராசீனசாலர்தொடங்கி உத்தாலகர் முடியவுள்ள ஆறுருஷிகள் வைப்வாநரவித்யையில் நிர்ணயத்தை யடையாதவர்களாய் அப்வபதியான கைகேயராஜனை யடைந்தனர் என்று தொடங்கி த்யுலோகம் முதலியவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ருஷியினுடையவும் உபாஸ்யப்பொருளெனச் சொல்லக்கேட்டு (க்கைகேயராஜன்) "இது வைப்வாநராத்மாவினுடைய தலையாகமட்டுமல்லவோ ஆகும் என்றான்" என்றதாதி

राजानमभ्याजग्मुरित्युपक्रम्यैकैकस्यर्षेरुपास्यं द्युप्रभृतीनामेकैकं श्रावयित्वा 'मूर्धा त्वेष आत्मन इति होवाच' (छा० ५।१२।२) इत्यादिना मूर्धादिभावं तेषां विदधाति। 'मूर्धा ते व्यपतिष्यद्यन्मां नागमिष्यः' (छा० ५।१२।२) इत्यादिना च व्यस्तोपासनमेवानुवर्त्य 'सर्वेषु लोकेषु सर्वेषु भूतेषु सर्वेष्वात्मस्वन्नमत्ति' (छा० ५।१८।१) इति भूमाश्रयमेव फलं दर्शयति। यत्तु प्रत्येकं सुतेजःप्रभृतिषु फलभेदश्रवणं तदेवं सत्यङ्गफलानि प्रधान एवाभ्युपगतानीति द्रष्टव्यम्। तथोपास्स इत्यपि प्रत्यवयवमाख्यातश्रवणं पराभिप्रायानुवादार्थं न व्यस्तोपासनविधानार्थम्। तस्मात्समस्तोपासनपक्ष एव श्रेयानिति। केचित्त्वत्र समस्तोपासनपक्षं ज्यायांसं प्रतिष्ठाप्य ज्यायस्त्ववचनादेव किल व्यस्तोपासनपक्षमपि सूत्रकारोऽनुमन्यत इति कथयन्ति। तदयुक्तम्। एकवाक्यतावगतौ सत्यां वाक्यभेदकल्पनस्यान्याय्यत्वात्। 'मूर्धा ते व्यपतिष्यत्' (छा० ५।१२।२) इति चैव-

---

யால் அவற்றுக்கு (த்யுலோகாதிகளுக்கு) தலைமுதலியனவாகவிருத்தலை உபதேசிக்கிறான். "என்னைவந்தடையாதிருப்பீரேல் உமது தலைபோயிருக்கும்" என்றதாதியால் தனித்த உபாஸனத்தை மறுத்துமிருக்கிறான். திருப்பவும் தனித்த உபாஸனத்தை விலக்கி ஸமஸ்த வுபாஸனத்தையே தொடர்ந்து கூறுகின்றவராய் "அவன் (ஸமஸ்தோபாஸனஞ் செய்பவன்) எல்லாவுலகங்களிலும் எல்லாப்பூதங்களிலும் எல்லா ஆத்மாக்களிலும் அன்னத்தைச் சாப்பிடுகிறான்" என்பதாய் ஸமஸ்தோபாஸனத்தை யாஶ்ரயித்ததாகவே உள்ள பலனைத் தெரிவிக்கிறான் என்றாம்.

ஸுதேஜஸ் முதலியவற்றின் பலன் வேறாகச் சொல்லப்பட்டிருப்பது யாதுண்டோ அது இம்முறையில் பார்க்குங்கால் அங்கங்களிற் காணும் பலன்கள் ப்ரதானத்தி (ஸமஸ்தோபாஸனத்தி) லேயே வருவனவாகக் கொள்ளப்பட்டனவென்று கண்டுகொள்ளவேண்டும். இவ்விதமே ஒவ்வொரு அவயவந்தோறும் காணப்படும் "உபாஸ்ஸே" உபாஸிக்கின்றீர் என்ற திஙந்த சப்தஶ்ரவணமானது பிறரது அபிப்பிராயத்தை அனுவாதம் செய்ய (தானும் திருப்பிக்கூற) வேண்டி ஏற்பட்டதேயொழிய தனித்த உபாஸனத்தை விதிக்கவேண்டியன்று. ஆகவே ஸமஸ்தோபாஸன பக்ஷமே தான் மேலானது.

இவ்விடத்தில் வேறு சிலர் ஸமஸ்தோபாஸனபக்ஷம் முக்கியமானதென நிர்ணயித்து "ஜ்யாயஸ்த்வம்" என்ற வசனப் பிரயோகம் செய்திருப்பதைக்கொண்டு ஸூத்திரக்காரர் வ்யஸ்தோபாஸனபக்ஷத்தையும் அங்கீகரித்திருக்கிறார் எனச் சொல்லுகின்றனர். அது பொருந்தாது. ஏகவாக்யதை (ஒத்த ஒரேபொருளுள்ள தன்மை) தோன்றுங்கால் வாக்யபேதகல்பனம் (வெவ்வேறுபொருளைக்கற்பித்தல்) நியாயமாகவாக மாட்டாது. "உமது தலை விழுந்திருக்கும்" என்றதாதியான (வ்யஸ்தோபாஸனத்தை) நிந்திக்கும் வசனத்துக்கு விரோதமும் வரும். ஸமஸ்தோபாஸனத்தின் தோற்றமானது உபஸம்ஹாரம் செய்யுமிடத்தில் தெளிவாய் காணப்படும்பொழுது ஸமஸ்தோபாஸனத்தின் அபாவத்தைப் பூர்வபக்ஷத்தில் சொல்லுவது அயுக்தமாகவுமாகும். ஸூத்திரத்திலுள்ள "ஜ்யாயஸ்த்வம்" என்ற

मादिनिन्दावचनविरोधात्। स्पष्टे चोपसंहारस्थे समस्तोपासनावगमे तदभावस्य पूर्वपक्षे वक्तुमशक्यत्वात्। सौत्रस्य च ज्यायस्त्ववचनस्य प्रमाणवत्त्वाभिप्रायेणाप्युपपद्यमानत्वात्॥

३३ शब्दादिभेदाधिकरणम्। सू० ५८

नाना शब्दादिभेदात्॥ ५८॥

नभिन्ना उतभिद्यन्ते शाण्डिल्यदहरादयः। समस्तोपासनश्रैष्ठ्याद्ब्रह्मैक्यादप्यभिन्नता॥ १॥

कृत्स्नोपास्तेरशक्यत्वाद्गुणैर्ब्रह्मापृथक्कृतम्। दहरादीनि भिद्यन्ते पृथक्पृथगुपक्रमात्॥ २॥

पूर्वस्मिन्नधिकरणे सत्यामपि सुतेजःप्रभृतीनां फलभेदश्रुतौ समस्तोपासनं ज्याय इत्युक्तम्। अतः प्राप्ता बुद्धिरन्यान्यपि भिन्नश्रुतीन्युपासनानि समस्योपाशिष्यन्त इति। अपिच नैव वेद्याभेदे विद्याभेदो विज्ञातुं शक्यते। वेद्यं हि रूपं विद्याया द्रव्यदैवतमिव

வசனத்துக்கு ஸமஸ்தோபாஸனமானது ப்ரமாணமுள்ளது என்ற பொருளே பொருந்தக்கூடியதாக வாகிவிடுகிறது. (58) (எ—று)

முப்பத்திரண்டாவது பூமஜ்யாயஸ்த்வாதிகரணம் முற்றிற்று.

சப்தாதி பேதாதிகரணம் 33.

(ஸூ) நாநாசப்தாதிபேதாத் (53)

(ப—ரை) உபாஸ்யமானது ஒன்ருக விருந்தபோதிலும் கூட வேறுசுருதிகளில் சொல்லப்பட்ட இம்மாதிரியான உபாஸனங்கள் नाना (நாநா) = வேறுபட்டனவேயாகும். ஏன்? शब्दादिभेदात् (ஶப்தாதிபேதாத்)="வேத" "உபாஸீத" என்றதாதி சப்தங்களும், ஆங்காங்கு சொல்லிய குணம்முதலியனவும் வேறுபட்டிருப்பதே அதன் காரணமாகும். (53) (எ—று)

வையாஸிக நியாயமாலே.

(க—ரை) சாண்டில்யவித்யை, தஹரவித்யை முதலியன வேறுபட்டனவா? அல்லது ஒரேவித்யையா? என்பது ஸந்தேஹம். ஸமஸ்தோபாஸனம் செய்வது சிறந்ததாகையாலும், உபாஸ்யமான ப்ரம்ஹம் ஒன்ருக விருப்பதாலும் எல்லா வித்யைகளும் ஒன்ருகவேதாகுைம் என்பது பூர்வபக்ஷம். எல்லாஉபாஸ்திகளேயும் ஒன்றுசேர்த்துச் செய்வதென்பது முடியாதாகையால் ஆங்காங்குள்ள குணங்கள்மூலம் ப்ரம்ஹமானது வேறுபடுத்திக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் வெவ்வேருன உபக்கிரமமிருப்பது கொண்டு தஹராதிகளான உபாஸனங்கள் வேறுபட்டனவேயாகும். (எ—று)

பாஷ்யம்.—முந்தின அதிகரணத்தில் ஸுதேஜ்முதலியவற்றுக்கு வெவ்வேறு பலனேச் சொல்லும் சுருதியானது இருந்த போதிலுங்கூட ஸமஸ்தோபாஸனஞ் செய்வதுதான் சிறந்தது எனச் சொல்லப்பட்டது. இதனின்றும் வெவ்வேறு சுருதிகளிற் சொல்லப்படும் வேறு உபாஸனங்களும் கூட சேர்ந்தேதான் செய்யக்கூடியன என்ற எண்ணம் ப்ராப்தமாகிறது. மேலும்— இவ்விடத்தில் வேத்ய

यागस्य। वेद्यश्चैक एवेश्वरः श्रुतिनानात्वेऽप्यवगम्यते 'मनोमयः प्राणशरीरः' (छा० ३।१४।२, 'कं ब्रह्म खं ब्रह्म' (छा० ४।१०।५) 'सत्यकामः सत्यसङ्कल्पः' (छा० ८।१।५) इत्येवमादिषु। तथा 'एक एव प्राणः' 'प्राणो वाव संवर्गः' (छा० ४।३।३) 'प्राणो वाव ज्येष्ठश्च श्रेष्ठश्च' (छा० ५।१।१) 'प्राणो ह पिता प्राणो माता' (छा० ७।१५।१) इत्येवमादिषु। वेद्यैकत्वाच्च विद्यैकत्वम्। श्रुतिनानात्वमप्यस्मिन्पक्षे गुणान्तरपरत्वान्नानर्थकम्। तस्मात्स्वपरशाखाविहितमेकवेद्यव्यपाश्रयं गुणजातमुपसंहर्तव्यं विद्याकार्त्स्न्यायेति। एवं प्राप्ते प्रतिपाद्यते—नानेति। वेद्याभेदेऽप्येवञ्जातीयका विद्या भिन्ना भवितुमर्हति। कुतः—शब्दादिभेदात्। भवति हि शब्दभेदः 'वेद' 'उपासीत' 'स क्रतुं कुर्वीत' (छा० ३।१४।१) इत्येवमादिः। शब्दभेदश्च कर्मभेदहेतुः समधिगतः पुरस्तात् 'शब्दान्तरे कर्मभेदः कृतानुबन्धत्वात्' (जै० सू० २।२।१) इति। आदिग्रहणाद्गुणादयोऽपि यथा संभवं भेदहेतवो योजयितव्याः॥

(உபாஸ்ய) ப்ரம்ஹமொன்றாக விருப்பதால் உபாஸ்தி பேதமிருப்பதாக வெண்ணவும் முடியாது. யாகத்துக்கு த்ரவ்யமும் தேவதையும் போல வித்யைக்கு (உபாஸ்திக்கு) வேத்யமானது (ப்ரம்ஹமானது) ஸ்வரூபமாக வன்றோவாகிறது. சுருதி வெவ்வேறாக விருந்தபோதிலுங்கூட வேத்யனான ஈஸ்வரன் ஒருவனென்றே அறியக்கிடக்கிறது. அதாவது:—"மனோமய: ப்ராணசரீர:" என்றும், "கம் ப்ரம்ஹ, (खं) ப்ரம்ஹ" என்றும், "ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:" என்றுமான விடங்களில் சொல்லப்படுவதாம். அவ்விதமே "ப்ராணன் ஒருவனே" என்றும், "ப்ராணனே தான் ஸம்வர்க்கம்" என்றும், "ப்ராணனே ஜ்யேஷ்டனும் ஶ்ரேஷ்டனுமாவான்" என்றும், "ப்ராணனே பிதா ப்ராணனே மாதா" என்றுமான விடங்களில் சொல்லப்படுவதாம். வேத்யம் (உபாஸ்யம்) ஒன்றாக விருப்பதிலிருந்தும் வித்யையும் (உபாஸனமும்) ஒன்றாகவே தானாகும். இந்தப் பக்ஷத்தில் சுருதிகள் வெவ்வேறாக இருப்பதுங் கூட வேறுவேறு குணங்களை அவை சொல்லுவதால் பயனற்றதாக வாகமாட்டாது. ஆகவே சொந்தச் சாகையிலோ வேறு சாகையிலோ விதிக்கப்பட்டதும் ஒரேவேத்யத்தை யாஶ்ரயித்ததுமான குணஸமூஹமானது வித்யைக்குப் பூர்த்தி ஸித்திக்கவேண்டி உபஸம்ஹாரஞ் செய்யவேண்டுவதாகவே தானாகிறது. என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே "நாநா" என்பதாய் ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது—வேத்யமானது ஒன்றாக இருந்தபோதிலுங் கூட இம்மாதிரியான வித்யையானது வேறுபட்டதாக வாவது தான் பொருத்தமுள்ளது. என்? சப்தாதிகள் வேறுபடுவதே அதன் காரணமாகும். "வேத" என்றும், "உபாஸீத" என்றும், "ஸ க்ரதும் (தியானத்தை) குர்வீத" என்றுமான இம்மாதிரியான சப்தபேதமானது இருப்பதாலென்க. சப்தம் வேறுபடுவதானது கர்மவேறுபாட்டுக்குக் காரணமாகும் எனப் பூர்வமீமாம்ஸையில் "சப்தம் வேறுபடுங்கால் அத்துடன் ஸம்பந்தம் பெற்றிருப்பதுபற்றி கர்மமும் வேறுபட்டதாகவே தானாகும்" என்றதாலுபதேசிக்கப்பட்டிருக்கிறது. ஸூத்

ननु वेदेत्यादिषु शब्दभेद एवावगम्यते न यजतीत्यादिवदर्थभेदः सर्वेषामेवैषां मनोवृत्त्यर्थत्वाभेदात् अर्थान्तरासंभवाच्च। तत्कथं शब्दभेदाद्विद्याभेद इति। नैष दोषः। मनोवृत्त्यर्थत्वाभेदेऽप्यनुबन्धभेदाद्वेद्यभेदे सति विद्याभेदोपपत्तेः। एकस्यापीश्वरस्योपास्यस्य प्रतिप्रकरणं व्यावृत्ता गुणाः शिष्यन्ते। तथैकस्यापि प्राणस्य तत्र तत्रोपास्यस्याभेदेऽप्यन्यादृग्गुणोऽन्यत्रोपासितव्योऽन्यादृग्गुणश्चान्यत्रेत्येवमनुबन्धभेदाद्वेद्यभेदे सति विद्याभेदो विज्ञायते। नचात्रैको विद्याविधिरितरे गुणविधय इति शक्यं वक्तुम्। विनिगमनायां हेत्वभावात्। अनेकत्वाच्च प्रतिप्रकरणं गुणानां प्राप्तविद्यानुवादेन विधानानुपपत्तेः। नचास्मिन्पक्षे समानाः सन्तः सत्यकामादयो गुणा असकृच्छ्रावयितव्याः। प्रतिप्रकरणं चेदङ्कामेनेदमुपासितव्यमिदङ्कामेन चेदमिति नैराकाङ्क्ष्यावगमान्नैकवाक्यतापत्तिः। नचात्र वैश्वा-

---

திரத்தில் 'ஶ்ருதி" என்று சொன்னதிலிருந்து வேறுபாட்டுக்குக் காரணங்களான குறிகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றேற்படுகிறது.

சங்கை—"வேத" "உபாஸீத" என்றதாதிவிடங்களில் சப்தம் மட்டும் வேறுபடுகிறதேயொழிய "யஜதி" என்றதாதிவிடங்களிற்போல பொருளில் வேறுபாடுகாணப்படவில்லை. "வேத" என்றும், "உபாஸீத" என்றும், "க்ரதும் குர்வீத" என்றுமான இவை எல்லாவற்றுக்கும் மனோவிருத்திரூபமான பொருள் ஒன்றாகவே இருக்கிறது. இவற்றுக்கு வேறு பொருள் ஸம்பவிக்கவும் மாட்டாது. அவ்விதமிருக்க சப்தபேதமூலம் வித்யாபேதம் சொன்னது எவ்விதமெனின்?

உத்தரம்—இது தோஷமாகவாகாது. மனோவிருத்திரூபமான பொருளுள்ளதாக விருத்தல் ஒன்றாக விருந்தபோதிலுங்கூட அவற்றின் ஸம்பந்தத்திலுள்ள பேதத்தை யொட்டி வேத்யத்தின் (உபாஸ்யத்தின்) பேதமேற்படுங்கால் வித்யையிலும் பேதமேற்படுவது பொருந்தக்கூடியதேயாகும். உபாஸ்யரான ஈஶ்வரன் ஒருவராயினுங்கூட ஒவ்வொரு ப்ரகரணத்திலும் தனிப்பட்ட (ஒன்றுடனொன்றொட்டாத) குணங்கள் சுருதியில் சொல்லப்படுகின்றன. அவ்விதமே ஆங்காங்கு உபாஸ்யனாகவுள்ள ப்ராணன் ஒன்றாகவிருந்தபோதிலுங் கூட வேறுமாதிரியான குணமுள்ளவன் வேறிடத்தில் உபாஸிக்கக் கூடியவனென்றும், வேறுமாதிரியான குணமுள்ளவன் வேறிடத்தில் உபாஸிக்கக்கூடியவனென்றுமான இம்மாதிரியான ஸம்பந்தவேறுபாட்டினால் வேத்யபேதமேற்படுங்கால் வித்யாபேதமும் அறியத்தான் படுகிறது. இவ்விடத்திலொன்றுதான் வித்யையைவிதிப்பதென்றும் மற்றவை குணங்களை விதிப்பவை என்றும் சொல்லவியலாது. அவ்விதம் கட்டுப்படுத்துவதற்குப் போதிய காரணமில்லாதிருப்பதே அதன் காரணமாகும். ஒவ்வொரு ப்ரகரணத்திலும் குணங்கள் அனேகங்களாக இருப்பதால் ப்ரமாணப்ராப்தமான வித்யையை அநுவாதஞ் செய்து கொண்டு இவற்றுக்கு விதிசொல்லுவது பொருந்தக்கூடியதாகவுமாகாது. வித்யையை ஒன்றாகச் சொல்லுமிந்தப் பக்ஷத்தில் ஒரே மாதிரியான ஸத்யகாமத்வம் முதலிய குணங்கள் அடிக்கடி சொல்லவேண்டிய அவஶ்யமுள்ளனவாக வாகமாட்டா. மேலும் ஒவ்வொருப்ரகரணத்திலும் இதில் ஆசையுள்ளவன் இதை யுபாஸிக்கவேண்டும், இதில் ஆசையுள்ளவன் இதை

नरविद्यायामिव समस्तचोदनापरास्ति यद्बलेन प्रतिप्रकरणवर्तीन्यवयवोपासनानि भूत्वैकवाक्यतामियुः। वेद्यैकत्वनिमित्ते च विद्यैकत्वे सर्वत्र निरङ्कुशे प्रतिज्ञायमाने समस्तगुणोपसंहारोऽशक्यः प्रतिज्ञायेत। तस्मात्सुष्ठूच्यते नाना शब्दादिभेदादिति। स्थिते चैतस्मिन्नधिकरणे सर्ववेदान्तप्रत्ययमित्यादि द्रष्टव्यम्॥ ५८॥

३४ विकल्पाधिकरणम्। सू० ५९

विकल्पोऽविशिष्टफलत्वात्॥ ५९॥

யுபாஸிக்கவேண்டும் என்பதாய் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமின்மை தோன்றுவதிலிருந்து ஏகவாக்யத்வ ப்ரதீதி ஏற்படவே மாட்டாது.

மேலும் வைஸ்வாநர வித்யையிற் போல வேறானஸமஸ்தோபாஸனையின் விதியானது காணப்படவுமில்லை. அவ்விதம் காணப்பட்டாலன்றோ அதன் வலுக்கொண்டு ஒவ்வொருப்ரகரணங்களிலும் உள்ளனவெல்லாம் அவயவோபாஸனங்களாக வாகி ஏகவாக்யதையை அடையக்கூடும். வேத்யம் ஒன்றாக விருப்பதைக் காரணமாகக்கொண்ட வித்யைகத்வத்தை எங்கும் தங்குதடையின்றி ஒப்புக்கொண்டால் ஒருபொழுதும் முடியாத எல்லாக்குணங்களினுடையவும் உபஸம்ஹாரமானது ப்ரதிக்ஞை செய்யப்பட்டதாகவாகிவிடும். ஆகவே "நாநாஸப்தாதி பேதாத்" என்று சொன்னது சிறந்ததாகவே யாகிறது. இந்த அதிகரணத்துக்குப் பிறகே ஸர்வவேதாந்தப்ரத்யாதிகாரணமிருக்கவேண்டும். ஆயினும் ஒன்றினின்றும் எழும் சங்கையைப் போக்கவேண்டி இங்கு இது படிக்கப்பட்டது. (58) (எ—று)

முப்பத்துமூன்றாவது சப்தாதிபேதாதிகரணம் முற்றிற்று.

விகல்பாதிகரணம் 34.

(அ—கை) இதுவரையுள்ள அதிகரணங்களால் வித்யாபேதமானது உபதேசிக்கப்பட்டது. அவற்றுள் சிலவுபாஸனங்கள் விகல்பமாகவும், சிலவுபாஸனங்கள் இச்சைக்குத் தக்கபடியும் அனுஷ்டிக்கக் கூடியன என்பதை யுபதேசிக்கவேண்டி மூன்று அதிகரணங்கள் உபதேசிக்கப்படுகின்றன. பொதுவாய் உபாஸனங்கள் (1)அஹங்கிரஹோபாஸனமென்றும், ப்ரதீகோபாஸனமென்றும், கர்மாங்காவபத்தவுபாஸனமென்றும் மூன்றுவிதங்களாகும். அவற்றுள் ஒரேஸூத்திரங்கொண்ட இந்த அதிகரணத்தில் உபாஸ்யமான ப்ரம்ஹத்தின் ஸாக்ஷாத்காரத்தைப் பலனாகவுடைய அஹங்க்ரஹோபாஸனங்களில் விகல்பமானது = யாதானுமொன்றையே தான் செய்யவேண்டுமென்பதானது, உபதேசிக்கப்படுகிறது.

(ஸூ) விகல்போ அவிசிஷ்டபலத்வாத். (59)

(க—ரை) அஹங்க்ரஹோபாஸனங்களில் विकल्पः (விகல்ப:)=விகல்பமானது= யாதானுமொன்றைத் தான் செய்யவேண்டும் என்றநியமமானது அங்கீகரிக்கத்தக்

---

(1) அஹங்கிரஹம் முதலியவுபாஸனங்களின் ஸ்வரூபமின்னதென்பதை முதலாவது அத்தியாயம், 1-வது பாதம் மொழிபெயர்ப்பில் 21-வது ஸூத்திரத்தில் பரக்கக்காண்க.

अहंग्रहेष्विनियमो विकल्पनियमोऽथवा । नियामकस्याभावेन यथाकाम्यं प्रतीयताम् ॥ १ ॥

ईशसाक्षात्कृतेस्त्वेकविद्ययैव प्रसिद्धितः । अन्यानर्थक्यविक्षेपौ विकल्पस्य नियामकौ ॥ २ ॥

स्थिते विद्याभेदे विचार्यते किमासामिच्छया समुच्चयो विकल्पो वा स्यात्, अथवा विकल्प एव नियमेनेति । तत्र स्थितत्वात्तावद्विद्याभेदस्य न समुच्चयनियमे किञ्चित्कारणमस्ति । ननु भिन्नानामप्यग्निहोत्रदर्शपूर्णमासादीनां समुच्चयनियमो दृश्यते । नैष दोषः । नित्यताश्रुतिर्हि तत्र कारणं नैवं विद्यानां काचिन्नित्यताश்रुतिरस्ति । तस्मान्न समुच्चयनियमः । नापि विकल्पनियमः । विद्यान्तराधिकृतस्य विद्यान्तराप्रतिषेधात् । पारिशेष्याद्या-

---

கது. ஏன்? **अविशिष्टफलत्वात्** (அவிசிஷ்டபலத்வாத்)=பலன் பொதுவாகவிருப்பதே=உபாஸ்யமான தேவதையின் ஸாக்ஷாத்காரமென்ற பலன் எல்லா அஹங்க்ரஹோபாஸனங்களுக்கும் ஒன்றாகவிருப்பதே, அதன் காரணமாகும். (59)

வையாஸிக ந்யாயமாலை.

(க—ரை) அஹங்க்ரஹோபாஸனங்களில் நியமமில்லையா? (ஒரேஸமயத்தில் அனேகமுபாஸனங்களைச் செய்யலாமா?) அல்லது யாதானுமொன்றைத் தான் செய்யலாம் என்ற விகல்பநியமமுண்டா? என்பது ஸந்தேஹம். இவ்வளவைத்தான் செய்யவேண்டுமெனக் கட்டுப்படுத்துவதற்குறிய காரணமில்லையாதலால் தமது இஷ்டப்படியே உபாஸனஞ் செய்யலாம் என்பது பூர்வபக்ஷம். ஈஶ்வரஸாக்ஷாத்கார ரூபபலனை ஒரே அஹங்க்ரஹோபாஸனத்தினாலேயே நன்கு ஸித்திப்பதாலும் அத்தகைய பலனை யுத்தேசித்துப் பிறவற்றைச் செய்வதில் பயனில்லாததுடன் சித்தத்துக்கு விக்ஷேபமும் ஏற்படுமாதலாலும் இவையே யாதானுமொரு உபாஸனத்தைமட்டுமே செய்யவேண்டுமென வற்புருத்தக்கூடியனவாக வாகிறது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—உபாஸனாபேத மேற்பட்டபின்னர் இவ்வுபாஸனங்களுக்கு இஷ்டப்படி ஸமுச்சயமா? அல்லது விகல்பமா? (யாதானுமொன்றையோ, அல்லது சேர்த்தோ செய்யலாமா?) அல்லது யாதானுமொன்றைத் தான் செய்யவேண்டுமென்ற நியமமா? என்பது விசாரிக்கப்படுகிறது. அவற்றுள் உபாஸனாபேதமானது நிலைத்துவிட்டமையினால் ஸமுச்சயநியமத்தில் (கட்டாயமாக அனேகத்தைச் சேர்த்துத்தான் செய்யவேண்டுமென்பதில்) காரணமொன்று மிருக்கவில்லை.

சங்கை—அக்னிஹோத்ரம் தர்ஶபூர்ணமாஸம் முதலியன பின்னங்களாக (வேறுபட்டனவாக) விருந்தபோதிலுங்கூட அவற்றுக்கு ஸமுச்சயநியமமானது காணப்படுகின்றதன்றோ எனின்?

உத்தரம்—இந்தத் தோஷமில்லை. அக்னிஹோத்ரம் தர்ஶபூர்ணமாஸம் இவற்றுக்கு நித்யத்வத்தை (அவஶ்யமனுஷ்டேயமென்பதை) ச் சொல்லும் சுருதியே அதில் காரணமாகிறது. இவ்விதம் உபாஸனங்களுக்கு நித்யத்வத்தைச் சொல்லும் சுருதியானது காணப்படவில்லை. ஆகவே ஸமுச்சய நியமமில்லை. விகல்ப நியமமும் (யாதானுமொன்றைத்தான் செய்யவேண்டுமென்பதும்) இல்லை. வேறுவித்

थाकाम्यमापद्यते। नन्वविशिष्टफलत्वादासां विकल्पो न्याय्यः। तथाहि—'मनोमयः प्राणशरीरः' (छा० ३।१४।२) 'कं ब्रह्म खं ब्रह्म' (छा० ४।१०।५) इत्येवमाद्यास्तुल्यवदीश्वरप्राप्तिफला लक्ष्यन्ते। नैष दोषः। समानफलेष्वपि स्वर्गादिसाधनेषु कर्मसु याथाकाम्यदर्शनात्। तस्माद्याथाकाम्यप्राप्तावुच्यते विकल्प एवासां भवितुमर्हति न समुच्चयः। कस्मात्। अविशिष्टफलत्वात्। अविशिष्टं ह्यासां फलमुपास्यविषयसाक्षात्करणम्। एकेन चोपासनेन साक्षात्कृत उपास्ये विषय ईश्वरादौ द्वितीयमनर्थकम्। अपि चासंभवः साक्षात्करणस्य। समुच्चयपक्षे चित्तविक्षेपहेतुत्वात्। साक्षात्करणसाध्यं च विद्याफलं दर्शयन्ति श्रुतयः—'यस्य स्यादद्धा न विचिकित्सास्ति' (छा० ३।१४।४) इति, 'देवो

யையில் அதிகாரப்பெற்றவனுக்கு வேறுவித்யையானது மறுக்கப்படாததே அதன்
காரணமாகும். எஞ்ஜியதைக் கொண்டு யோஜிக்குங்கால் யாதாகாம்மியம்(தமதிஷ்
டப்படி செய்யலாம்) என்பது தானேற்படுகிறது.

சங்கை—பயனில் விசேஷமில்லாதபடியால் இவற்றுக்கு விகல்பம் சொல்லு
வது (யாதானுமொன்றைச் செய்யவேண்டுமெனச் சொல்லுவது) நியாயமாகவாகு
மன்றோ? அதாவது:—"மனோமய: ப்ராணசரீர:" என்றும், "கம்ப்ரஹ்ம க்கம்
ப்ரம்ஹ" என்றும், "ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:" என்றுமான இதுமுதலிய
உபாஸனங்கள் ஒரேமாதிரியாக ஈஶ்வரப்ராப்தியையே பயனாகவுடையனவாகக்
காணக்கிடக்கின்றன என்றும் எனின்?

உத்தரம்—இந்தத் தோஷமில்லை. ஸ்வர்க்காதிகளைப் பயனாகவுடைய கர்மங்
கள் ஸமானமான பயனுள்ளனவாக விருப்பினுங் கூட ஆவை விஷயத்தில் யாதா
காம்யமானது(தனதிஷ்டப்படி செய்தலானது)காணவும்படுகிறது. ஆகவே வித்யா
விஷயத்திலும் யாதாகாம்யந்தான் கொள்ளவேண்டும் எனப்(பூர்வபக்ஷம்)ப்ராப்த்த
மாகவே (ஸித்தாந்தம்) சொல்லப்படுகிறது.

இந்த வித்யைகளுக்கு விகல்பமே யொழிய ஸமுச்சயமானது கிடையாது.
ஏன்? பயனில் விசேஷமில்லாதிருப்பதே அதன் காரணமாகும். இவ்வுபாஸ
னங்களுக்கு உபாஸ்யவிஷய ஸாக்ஷாத்காரரூபமான பலன்யாதுண்டோ அது
துல்யமாகவே யன்றோ இருக்கின்றது. ஒருவுபாஸனத்தினால் உபாஸ்யர்களும்,உபா
ஸனைக்குவிஷயர்களுமான ஈஶ்வராதிகள் ஸாக்ஷாத்கரிக்க(கண்கூடாகக்காண)ப்படும்
பொழுது இரண்டாவது உபாஸனம் பயன்படாதன்றோ?(ஸமுச்சயபக்ஷத்தில்)ஸா
க்ஷாத்கரணமானது ஸம்பவிக்கவுமிடமில்லை. ஸமுச்சயம் சொல்லும்பக்ஷத்தில் அது
சித்தத்தின் விக்ஷேபத்துக்கு ஹேதுவாகவாவதே அதன் காரணமாகும். சுருதி
களோ வித்யையின் பலனை ஸாக்ஷாத்கரணத்தால் ஸாத்தியமெனத் தெரிவிக்கவும்
செய்கின்றன. அவையாவன—"எந்த அஹங்க்ரஹோபாஸகனுக்கு உபாஸ்ய
தேவதா ஸாக்ஷாத்காரமானதுண்டாகின்றதோ, எவனுக்கு ஸம்சயமுண்டாவதில்லை
யோ" என்றும், "உபாஸனா காலத்தில் உபாஸ்ய தேவனாகத்தானாகி (உபாஸ்ய
னான தேவனுக்கும் தனக்கும் எவ்விதபேதமுமில்லை என்ற திருடபாவனையை
யடைந்தவனாகவாகிப்) பின்னர் தேவர்களை யடைகிறான்" என்றும், "எப்பொழு

भूत्वा देवानप्येति ' (बृ० ४ । १ । २) इति चैवमाद्याः । स्मृतयश्च—'सदा तद्भावभावितः' (छा० ८ । ६) इत्येवमाद्याः । तस्मादविशिष्टफलानां विद्यानामन्यतमामादाय तत्परः स्याद्यावदुपास्यविषयसाक्षात्करणेन तत्फलं प्राप्तमिति ॥ ५९ ॥

३५ काम्याधिकरणम् । सू० ६०

काम्यास्तु यथाकामं समुच्चीयेरन्न वा पूर्वहेत्वभावात् ॥ ६० ॥

प्रतीकेषु विकल्पः स्याद्याथाकाम्येन वा मतिः । अहं ग्रहेष्विवैतेषु साक्षात्कृत्यै विकल्पनम् ॥ १ ॥
देवो भूत्वेतिवन्नात्र काचित्साक्षात्कृतौ मितिः । याथाकाम्यमतोऽमीषां समुच्चयविकल्पयोः ॥ २ ॥

अविशिष्टफलत्वादित्यस्य प्रत्युदाहरणम् । यासु पुनः काम्यासु विद्यासु 'स य

தும் அவ்விஷயமான பாவனை யுடன்கூடினவனுய்" என்றுமானவைகளாம். ஆகவே துல்யமான பலனையுடைய வித்யைகளுள் (உபாஸனங்களுள்) யாதானுமொன்றை எடுத்துக் கொண்டு உபாஸ்யவிஷயமான ஸாக்ஷாத்கரணத்தால் அப்பலன் கிடைக்கும் வரை அவ்வுபாஸனத்திலேயே ஈடுபட்டிருத்தல் வேண்டும் என்றேற்பட்டது என்றும். (59) (எ—று)

முப்பத்துநான்காவது விகல்பாதிகரணம் முற்றிற்று.

காம்யோபாஸனுதிகரணம் 35.

(ஸூ) காம்யாஸ்து யதாகாமம் ஸமுச்சீயேரன் நவா பூர்வஹேத்வபாவாத் (60)

(ப—ரை) **काम्यास्तु** (காம்யாஸ்து) = காம்யமான உபாஸனங்களோவெனில் **यथाकामं समुच्चीयेरन्** (யதாகாமம் ஸமுச்சீயேரன்)=இஷ்டப்படி சேர்த்து உபாஸிக்கக்கூடியனவாக வாகலாம். **नवा** (நவா)=அவ்விதமில்லாமலு மிருக்கலாம். **पूर्वहेत्वभावात्** (பூர்வஹேத்வபாவாத்)=முன்னர் சொன்ன பலைக்யரூபமான காரணமின்மையே அதன் காரணமாகும். (60) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ப்ரதீகோபாஸனங்களில் முற்கூறியபடி விகல்பமா? தனது இஷ்டப்படி உபாஸனஞ் செய்யவேண்டுமோ? என்பது ஸந்தேஹம். அஹங்க்ரஹோபாஸனங்களிற் போலவே இந்த ப்ரதீகோபாஸனங்களிலும் ஸாக்ஷாத்காரத்தையும் பொருட்டு விகல்பம் சொல்லத்தான் வேண்டும் என்பது பூர்வபக்ஷம். அவ்விடத்தில் "தேவனுக ஆகிப் பின்னர் தேவனை யடைகிறுன்" என்ற வசனம் காணப்படுவதுபோல இவ்விடத்தில் ஸக்ஷாத்காரத்தையும் பொருட்டு ப்ரமாணமொன்றுமில்லை. ஆகவே இந்த ப்ரதீகோபாஸனங்களில் ஸமுச்சயம் விகல்பம் இவற்றுள் இஷ்டப்படி எதைவேண்டுமானுலும் செய்துகொள்ளலாம் என்பது ஸித்தாந்தம்.

பாஷ்யம்.—"அவிசிஷ்டபலத்வாத்" (பலன் ஒன்றுக விருப்பதால்) என்றதற்கு எதிரடையான உதாஹரணமாக இது ஆகிறது. "எவனெருவன் இந்த

एतमेवं वायुं दिशां वत्सं वेद न पुत्ररोदं रोदिति' (छां० ३।१५।२) 'स यो नाम ब्रह्मेत्युपास्ते यावन्नाम्नो गतं तत्रास्य यथाकामचारो भवति' (छां० ७।१।५) इति चैवमाद्यासु क्रियावददृष्टेनात्मनात्मीयं फलं साधयन्तीषु साक्षात्करणापेक्षा नास्ति। ता यथाकामं समुच्चीयेरन्न वा समुच्चीयेरन्पूर्वहेत्वभावात्। पूर्वस्याविशिष्टफलत्वादित्यस्य विकल्पहेतोरभावात् ॥ ६० ॥

३६ यथाश्रयभावाधिकरणम्। सू० ६१–६६

अङ्गेषु यथाश्रयभावः ॥ ६१ ॥

வாயுவை திக்குகளின் கன்றாக வுபாஸிப்பானோ அவன் புத்ரவிஷயமான அழுகையைச் செய்யான்" என்றும், "நாமத்தை (நாமப்ரபஞ்சமான வேதத்தை) ப்ரம்ஹமாக எவன் உபாஸிக்கின்றானோ நாமம் (வேதம்) எதுவரை சென்றிருக்கிறதோ அவ்விடத்தில் இவ்வுபாஸகனுக்கு இஷ்டப்படிக்கான ஸஞ்சாரமானது ஏற்படுகிறது" என்றும் கிரியையானதுபோலவே அதிருஷ்ட ஸ்வரூபத்தினாலேயே தனதுபலனைச் சாதிக்கின்றனவுமான இம்மாதிரியான எத்தகைய காம்யமான வுபாஸனங்களில் ஸாக்ஷாத்காரத்தின் அபேக்ஷையானது கிடையாதோ அவை இஷ்டப்படி சேர்த்து செய்யப்படவோ, சேர்க்காமலே செய்யப்படவோ கூடும். முன்னர் கூறிய ஹேது இல்லாதிருப்பதே அதன் காரணமாகும். அதாவது:— முன்னர் கூறிய "பலன் ஒன்றாகவே யிருப்பதால்" என்ற விகல்பஹேதுவானது இல்லாதிருப்பதால் என்றாம் (60) (எ–று)

முப்பத்தைந்தாவது காம்யாதிகரணம் முற்றிற்று.

யதாச்ரயபாவாதிகரணம் 36.

(அ–கை) கர்மாங்காவபத்த உபாஸனங்களின் அநுஷ்டானக் கிரமத்தைச் சொல்லவேண்டி 6 ஸூத்திரங்கள்கொண்ட இந்த அதிகரணமானது ஆரம்பிக்கப்படுகிறது. இவற்றுள் 61, 62, 63, 64. இந்த நான்குஸூத்திரங்கள் பூர்வபக்ஷத்தையும், 65, 66. இந்த இரண்டுஸூத்திரங்கள் ஸித்தாந்தத்தையும் சொல்லுகின்றன. அவற்றுள் முதலாவது பூர்வபக்ஷஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) அங்கேஷு யதாச்ரயபாவ: (61)

(ப–ரை) **अङ्गेषु** (அங்கேஷு)=கர்மாங்கங்களானஉத்கீதாதிகளில் **यथाश्रयभावः** (யதாஸ்ரயபாவః)=யாகானுஷ்டானங்களில் யாகத்தை யாஸ்ரயித்துள்ள அங்கங்களை அங்கியான யாகத்துடன் சேர்த்தே அனுஷ்டிக்கவேண்டுமென்ற நியமமானது போல அந்த யாகாங்கமான உத்கீதாதிகளை யாஸ்ரயித்த இந்த வுபாஸனங்களையும் சேர்த்தேதான் செய்யவேண்டும். ஆகவே **यथाश्रयभावः** (யதாஸ்ரயபாவ:)=**यथाश्रय** (யதாஸ்ரய)=என்றதற்கு உபாஸனங்களுக்கு ஆஸ்ரயமான உத்கீதாதிகளுக்கு கர்மாவுடன் சேர்த்து அனுஷ்டான மேற்படுவதுபோல **भावः** (பாவః)=உபாஸ்தி

समुच्चयोऽङ्गबद्धेषु याथाकाम्येन वा मतिः। समुच्चितत्वादङ्गानां तद्बद्धेषु समुच्चयः ॥ १ ॥
ग्रहं गृहीत्वा स्तोत्रस्यारम्भ इत्यादिवन्नहि। श्रूयते सहभावोऽत्र याथाकाम्यं ततो भवेत् ॥ २ ॥

कर्माङ्गेषूद्गीथादिषु य आश्रिताः प्रत्यया वेदत्रयविहिताः किं ते समुच्चीयेरन्किंवा यथाकामं स्युरिति संशये यथाश्रयभाव इत्याह यथैवैषामाश्रयाः स्तोत्रादयः संभूय भवन्त्येवं प्रत्यया अपि आश्रयतन्त्रत्वात्प्रत्ययानाम् ॥ ६१ ॥

शिष्टेश्च ॥ ६२ ॥

यथा वाश्रयाः स्तोत्रादयस्त्रिषु शिष्यन्त एवमाश्रिता अपि प्रत्ययाः। नोपदेशकृतोऽपि कश्चिद्विशेषोऽङ्गानां तदाश्रयाणां च प्रत्ययानामित्यर्थः ॥ ६२ ॥

களுக்கும் சேர்த்து அனுஷ்டானம் சொல்லுவதுதான் பொருத்தமானது என்று பொருளேற்படுகிறது. (61) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) அங்காவபத்த வுபாஸனங்களில் ஸமுச்சயமா? அல்லது இஷ்டப்படிக்கான புத்திசெய்யவேண்டுமோ? என்பது ஸந்தேஹம். அங்கங்கள் கர்மங்களுடன் ஸமுச்சிதங்களாக விருப்பதுபற்றி அத்தகைய அங்கங்களிற் செய்யப்படும் உபாஸனங்களுக்கும் ஸமுச்சயந்தான் சொல்லவேண்டும் என்பது பூர்வபக்ஷம். "க்ரஹத்தை க்ரஹித்துக் கொண்டு ஸ்தோத்திரத்துக்கு ஆரம்பம் செய்யவேண்டும்" என்றதாதி போல இவ்விடத்தில் ஸமுச்சயமானது காணப்படவில்லை. ஆகவே இஷ்டப்படிக்கென்றுதானேற்படுகிறது என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—கர்மாவின் அங்கங்களான உத்கீதாதிகளை ஆம்ரயித்தனவாயும், மூன்றுவேதங்களில் விதிக்கப்பட்டனவாயுமுள்ள யாதொரு உபாஸனங்களுண்டோ, அவையாவும் சேர்த்தே அநுஷ்டிக்கவேண்டுவனவா? அல்லது இஷ்டப்படியா என்று ஸம்சயமுண்டாகுங்கால் ஆம்ரயத்தைப் போலவே ஆகும் எனப் (பூர்வபக்ஷம்) சொல்லுகிறார். இந்த உபாஸனங்களின் ஆம்ரயங்களான ஸ்தோத்திரம் முதலியன எவ்விதம் சேர்த்தே கர்மங்களில் அநுஷ்டிக்கப்படுகின்றனவோ அவ்விதமே தான்உபாஸனங்களுமாகும். உபாஸனங்கள் ஆம்ரயத்தை அண்டினவாக இருப்பதே அதன் காரணமாகும். (61) (எ—று)

(ஸூ) சிஷ்டே: ச (62)

(ப—ரை) **शिष्टेश्च** (சிம்டேம்ச)=விதியிருப்பதாலும் உபாஸனத்துக்கு ஸமுச்சயந்தான் சொல்லவேண்டும். (62) (எ—று)

பாஷ்யம்.—உபாஸனங்களுக்கு ஆம்ரயங்களான ஸ்தோத்திரம் முதலியன எவ்விதம் மூன்று விடங்களில் விதிக்கப்படுகின்றனவோ இவ்விதமே அவற்றை யாம்ரயித்த ப்ரத்யயங்களும் (உபாஸனங்களும்) ஆகும். அங்கங்களுக்கோ அவற்றை யாம்ரயித்த வுபாஸனங்களுக்கோ உபதேசமூலமேற்பட்ட விசேஷமொன்றுமில்லை என்பது பொருள். (62) (எ—று)

समाहारात् ॥ ६३ ॥

'होतृषदनाद्धैवापि दुरुद्गीथमनुसमाहरति' (छा० १। ५। ५) इति च प्रणवोद्गीथैकत्वविज्ञानमाहात्म्यादुद्गाता स्वकर्मण्युत्पन्नं क्षतं हौत्रात्कर्मणः प्रतिसमादधातीति ब्रुवन्वेदान्तरोदितस्य प्रत्ययस्य वेदान्तरोदितपदार्थसंबन्धसामान्यात्सर्ववेदोदितप्रत्ययोपसंहारं सूचयतीति लिङ्गदर्शनम् ॥ ६३ ॥

गुणसाधारण्यश्रुतेश्च ॥ ६४ ॥

विद्यागुणं च विद्याश्रयं सन्तमोङ्कारं वेदत्रयसाधारणं श्रावयति—'तेनेयं त्रयी विद्या वर्तत ओमित्याश्रावयत्योमिति शंसत्योमित्युद्गायति' (छा० १। १। ९) इति च। तत-

---

(ஸூ) ஸமாஹாராத் (63)

(ப-ரை) समाहारात् (ஸமாஹாராத்)=எல்லாவேதங்களிலுமுள்ள வுபாஸனங்களுக்கும் சேர்க்கையைக் கூறும் லிங்கம் (அறிகுறி) இருப்பதும் மற்றொரு காரணமாகும். (63) (எ-று)

பாஷ்யம்.—"ஹோதிருஷதனத்திலிருந்து (அதாவது:—ஹோதா எங்கிருந்துகொண்டு ஶஸ்திரம் சொல்லுகிறானோ அந்தவிடம் ஹோத்ருஷதனமெனப்படும், இதனால் ஹௌத்ரம் என்ற கர்மமானது லக்ஷணைமுறையாற் கொள்ளப்படுகிறது. ஆகவே நன்கு அனுஷ்டிக்கப்பட்ட ஹௌத்ரம் என்றகர்மாவின் மூலம் என்றும்.) உத்காதாவானவன் தனது உத்கீதகானத்திலுண்டான தவறைப் போக்கிக் கொள்ளுகிறான்" என்பதாய் ப்ரணவம், உத்கீதம் இரண்டையுமொன்றெனவெண்ணும் மஹிமையினால் உத்காதாவானவன் (ஸாமவேதகானஞ்செய்பவன்) தனது கர்மத்திலுண்டான தவறை ஹௌத்ரம் என்ற கர்மத்தின் மூலம் போக்கிக்கொள்ளுகிறான் எனவுபதேசிக்கும் வேதமானது வேறுவேதத்திற் சொல்லப்பட்ட வுபாஸனத்துக்கு வேறுவேதத்திற் சொல்லப்பட்ட பதார்த்தத்துடன் பொதுவான ஸம்பந்தமிருப்பதை முன்னிட்டு எவ்லாவேதங்களிலுமுள்ள உபாஸனங்களுக்கும் சேர்க்கையை ஸூசிப்பிக்கிறது என்றகாரணத்தினால் இது லிங்கதர்சனமாக வாகின்றது. (63)

(ஸூ) குணஸாதாரண்யச்ருதே: ச (64)

(ப-ரை) **गुणसाधारण्यश्रुतेश्च** (குணஸாதாரண்ய ஶ்ருதேஶ்ச)=ஓம்காரத்துக்கு வித்யைக்கு யாஶ்ரயமாயிருத்தல் என்ற குணத்தையும், மூன்றுவேதங்களுக்கும் பொதுவாகவிருத்தலையும் சுருதி சொல்லியிருப்பதும் மற்றொரு லிங்கதர்சனமாகும். (64) (எ-று)

பாஷ்யம்.—ஶ்ருதியானது வித்யைக்கு ஆஶ்ரயமாயும் வித்யாரூப குணத்தையுடையதாயுமிருக்கிற ஓங்காரத்தை மூன்று வேதங்களுக்கும் பொதுவானதென்பதையும் "அந்த அக்ஷரத்தினால் இந்த த்ரயீயான வித்யையானது (மூன்று வேதங்களிலும் விதிக்கப்படும் கர்மமானது) ஏற்படுகிறது. அதாவது:— ஓம் என்று

श्चाश्रयसाधारण्यादाश्रितसाधारण्यमिति लिङ्गदर्शनमेव। अथवा गुणसाधारण्यश्रुतेश्चेति। यदीमे कर्मगुणा उद्गीथादयः सर्वे सर्वप्रयोगसाधारणा न स्युर्न स्यात्ततस्तदाश्रयाणां प्रत्ययानां सहभावः। ते तूद्गीथादयः सर्वाङ्गग्राहिणा प्रयोगवचनेन सर्वे सर्वप्रयोगसाधारणाः श्राव्यन्ते। ततश्चाश्रयसहभावात्प्रत्ययसहभाव इति ॥ ६४ ॥

न वा तत्सहभावाश्रुतेः ॥ ६५ ॥

न वेति पक्षव्यावर्तनम्। न यथाश्रयभाव आश्रितानामुपासनानां भवितुमर्हति। कुतः—तत्सहभावाश्रुतेः। यथा हि त्रिवेदीविहितानामङ्गानां स्तोत्रादीनां सहभावः श्रूयते—'ग्रहं वा गृहीत्वा चमसं वोन्नीय स्तोत्रमुपाकरोति स्तोत्रमनुशंसति प्रस्तोतः

சொல்லியே ஆஸ்ராவஞ் செய்கிறான். ஓம் என்று சொல்லியே ஶஸ்திரஞ் சொல்லுகிறான். ஓம் என்று சொல்லியே உத்காதா கானஞ் செய்கிறான்" என்பதாற் தெரிவித்திருக்கிறது. அதிலிருந்து ஆஸ்ரயமானது (ப்ரணவமானது) ஸாதாரணமாக (பொதுவாக) வாவதிலிருந்து ப்ரணவத்தை யாஸ்ரயித்த உபாஸனத்துக்குப் பொதுவான தன்மை ஏற்படுகிறது என்பதுபற்றி ஸமுச்சயத்துக்கு லிங்கதர்சனமாகவே தானாகிறது.

அல்லது "குணஸாதாரண்ய ஸ்ருதேஸ்ச" என்பதற்கு வேறுபொருள் கொள்ளலாம். அதாவது:—கர்மாவின் குணங்களான இந்த உத்கீதாதிகள் யாவும் எல்லாப்ரயோகத்துக்கும் பொதுவானவைகளாக வாகாவிடில் அவ்வவற்றை ஆஸ்ரயமாகக் கொண்ட உபாஸனங்களுக்கு ஸஹபாவமானது (சேர்க்கையானது) ஏற்படமாட்டாது தான். அந்த உத்கீதாதிகளோ வெனில் எல்லா அங்கங்களையும் கிரஹிக்கின்றப்ரயோகவசனத்தினால் எல்லாம் எல்லாப்ரயோகத்துக்கும் ஸாதாரணங்கள் (பொதுவானவை) எனச் சுருதியிற் சொல்லப்படுகின்றன. அதனின்றும் ஆஸ்ரயமானது சேர்ந்திருப்பதன் மூலம் அவற்றிற் செய்யப்படும் ப்ரத்யயங்களும் (உபாஸனங்களும்) சேர்ந்துள்ளனவாகவே தானாகும் என்றாம். (64) (எ—று)

(அ—கை) இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே பின்வரும் 2 ஸூத்திரங்களினால் ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது—

(ஸூ) நவா தத்ஸஹபாவாச்ருதே: (65)

(ப—ரை) **नवा** (நவா)=இதுவரைசொன்ன பூர்வபக்ஷம் பொருந்தாது ஏன்? **तत्सहभावाश्रुतेः** (தத்ஸஹபாவாஸ்ருதே:)=அவ்வுபாஸனங்களின் சேர்க்கையைச் சொல்லும் சுருதியில்லாதிருப்பதே அதன் காரணமாகும். (65) (எ—று)

பாஷ்யம்.—ஸூத்திரத்திலுள்ள "நவா" என்பது பூர்வபக்ஷத்தை மறுப்பதாகும். ஆஸ்ரயத்தை யொட்டிய தன்மையானது அவற்றை யாஸ்ரயித்த வுபாஸனங்களுக்குக் கொள்ளுவது பொருந்தாது. என்? அவற்றுடன்சேர்க்கையைச் சொல்லும் சுருதியில்லாதிருப்பதே அதன் காரணமாகும். மூன்று வேதங்களிலும் விதிக்கப்பட்ட ஸ்தோத்திரம் முதலிய அங்கங்களுக்குச் சேர்க்கையானது "க்ரஹத்தைக்கிரஹித்தோ சமஸத்தை உந்நயநம் செய்தோஸ்தோத்திரத்தைத்

साम गाय होतरेतद्यज' इत्यादिना। नैवमुपासनानां सहभावश्रुतिरस्ति। ननु प्रयोगवचन एषां सहभावं प्रापयेत्। नेति ब्रूमः—पुरुषार्थत्वादुपासनानाम्। प्रयोगवचनो हि क्रत्वर्थानामुद्गीथादीनां सहभावं प्रापयेत्। उद्गीथाद्युपासनानि क्रत्वर्थाश्रयाण्यपि गोदोहनादिवत्पुरुषार्थानीत्यवोचाम 'पृथग्घ्यप्रतिबन्धः फलम्' (ब्र० सू० ३।३।४२) इत्यत्र। अयमेव चोपदेशाश्रयो विशेषोऽङ्गानां तदालम्बनानां चोपासनानां यदेकेषां क्रत्वर्थत्वमेकेषां पुरुषार्थत्वमिति। परं च लिङ्गद्वयमकारणमुपासनसहभावस्य श्रुतिन्यायाभावात्। नच प्रतिप्रयोगमाश्रयकात्स्न्योपसंहारादाश्रितानामपि तथात्वं विज्ञातुं शक्यम्। अतत्प्रयु-

---

தொடங்குகிறான், ஸ்தோத்திரத்தைச் சொல்லுகிறான், ஹேப்ரஸ்தோதாவே! ஸாமத்தைக்கானஞ்செய்வாயாக, ஹேஹோதாவே! ஶஸ்திரஞ் சொல்லுவாயாக' என்றதாதியால் எவ்விதம் சுருதியிற் சொல்லப்படுகிறதோ, இவ்விதம் உபாஸனங்களுக்கு ஸஹபாவத்தை (சேர்க்கையை) ச் சொல்லும் சுருதியானது கிடையாது.

சங்கை—ப்ரயோகத்தைச் சொல்லும் வசனமானது இவற்றுக்கு (உபாஸனங்களுக்கு) சேர்க்கையைச் சொல்லும் என்கிறோம் எனின்?

உத்தரம்—இல்லையென்று சொல்லுகிறோம். உபாஸனங்கள் புருஷார்த்தங்களாக (புருஷனுக்குவேண்டி யேற்பட்டனவாக) இருப்பதே அதன் காரணமாகும். ப்ரயோகவசனமோ வெனில் யாகார்த்தங்களான (யாகத்துக்குவேண்டியேற்பட்ட) உத்கீதாதிகளுக்கு ஸஹபாவத்தை (சேர்க்கையைச்) சொல்லக்கூடும். உத்கீதாதி உபாஸனங்கள் கிரத்வர்த்தங்களானவற்றை ஆஶ்ரயித்துச் செய்யப்படுகின்றனவாயினுங்கூட கோதோஹனம் (என்றபாத்திரம்) போல புருஷார்த்தங்களாகவே தானாகும் என்பதாய் "ப்ருதக்ஹி அப்ரதிபந்த: பலம்" (அ—3—பா—3—சூ—42) என்ற விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கங்களுக்குள்ளும், அந்த அங்கத்தை யாஶ்ரயித்த உபாஸனங்களுக்குள்ளும் சிலவற்றுக்கு க்ரத்வர்த்தத்துவமும், சிலவற்றுக்குப் புருஷார்த்தத்துவமும் என்பதாய் யாதொன்றுண்டோ இதுவேதான் உபதேசத்தை யாஶ்ரயித்துள்ள விசேஷமாக வாகிறது. மேலும் உபாஸனத்தைச் சேர்த்துச் செய்யவேண்டுமென்பதற்கு (1) முற்கூறிய இரண்டு லிங்கங்களும் (2) காரணமாகவாகமாட்டாது. சுருதியோ நியாயமோ இல்லாதிருப்பதே அதன் காரணமாகும். மேலும் ஒவ்வொரு ப்ரயோகந்தோறும் எல்லா ஆஶ்ரயங்களுக்கும் (உத்கீதாதிகளுக்கும்) உபஸம்ஹாரம் காணப்படுவதிலிருந்து அவற்றை யாஶ்ரயித்துள்ள உபாஸனங்களுக்கும் அவ்வித சேர்க்கையிருப்பதாக எண்ணிவிடமுடியாது. உபாஸனங்கள் ஆஶ்ரயமூலமேற்படுவதாக இல்லாதிருப்பதே

---

(1) 63–64-வது ஸூத்திரங்களாற் சொல்லப்பட்ட

(2) அந்த இரண்டு ஸூத்திரங்களாலுஞ் சொல்லியலிங்கமானது வேறுப்ரமாணத்தால் கிடைக்கும் பொருளுக்குச் சூசகமாகமட்டுமோகுமே யொழிய ஸ்வயமாக ஒரு பொருளை ஸாதிக்கக் கூடியதாகவாகமாட்டாது. அர்த்தவாத வாக்கியத்திலிருப்பதே அதன் காரணமாகும்.

क्त्वादुपासनानाम् । आश्रयतन्त्राण्यपि ह्युपासनानि काममाश्रयाभावे मा भूवन्न त्वाश्रयसहभावेन सहभावनियममर्हन्ति तत्सहभावाश्रुतेरेव । तस्माद्यथाकाममेवोपासनान्यनुष्ठीयेरन् ॥ ६५ ॥

दर्शनाच्च ॥ ६६ ॥

दर्शयति च श्रुतिरसहभावं प्रत्ययानाम्—'एवंविद्ध वै ब्रह्मा यज्ञं यजमानं सर्वांश्चर्त्विजोऽभिरक्षति' (छा० ४ । १७ । १०) इति । सर्वप्रत्ययोपसंहारे हि सर्वे सर्वविदः इति न विज्ञानवता ब्रह्मणा परिपाल्यत्वमितरेषां सङ्कीर्त्येत । तस्माद्यथाकाममुपासनानां समुच्चयो विकल्पो वेति ॥ ६६ ॥

इति श्रीगोविन्दभगवत्पूज्यपादशिष्य श्रीमच्छङ्करभगवत्पूज्यपादकृतौ
श्रीमच्छारीरकमीमांसाभाष्ये तृतीयाध्यायस्य तृतीयः पादः ॥ ३ ॥

அதன் காரணமாகும். அதாவது:—உபாஸனங்கள் ஆஸ்ரயாதீனங்களாக (உத்கிதாதிகளை யாஸ்ரயித்தனவாக) இருந்தபோதிலுங் கூட ஆஸ்ரயமில்லாவிடில் இல்லாமல் வேண்டுமானால் போகுமேயொழிய ஆஸ்ரயங்கள் சேர்ந்திருப்பனபற்றி உபாஸனங்களும் சேர்ந்தனவாகத்தானாகும் என்ற நியமத்தை எவ்விதமடையும். ஆகவே உபாஸனங்கள் இஷ்டப்படியே தான்செய்யக்கூடின வாகவாகும். (65) (எ—று)

(ஸூ) தர்சனாத் ச (66)

(ப—ரை) दर्शनाच्च (தர்சனாத்ச)=உபாஸனங்களுக்கு ஸஹபாவம் (சேர்க்கை) இல்லை என்பது சுருதிமூலமறியப்படுவதே அதன் காரணமாகும். (66) (எ—று)

பாஷ்யம்.—சுருதியானது உபாஸனங்களுக்குச் சேர்க்கையின்மையைத் தெரிவித்துமிருக்கிறது. அதாவது:—"இவ்விதமுபாஸிப்பவனான ப்ரம்ஹாவே(ப்ரம்ஹாவென்ற ஒருருத்விக்கே)யன்றோ யாகத்தையும்,யஜமானனையும் எல்லாருத்விக்குகளையும் காப்பாற்றுகிறான்" என்றும். எல்லா வுபாஸனங்களுக்கும் உபஸம்ஹாரம் (சேர்க்கை) இருக்குமானாலோ யாவருமே எல்லாவுபாஸனமு முள்ளவராயிருப்பது பற்றி உபாஸனமுள்ளவரான ப்ரம்ஹாவினால் மற்றவர்களுக்குக் காப்பாற்றப்படுதல் சொன்னது பொருந்தாது. ஆகவே இஷ்டப்படி உபாஸனங்களுக்கு ஸமுச்சயமோ விகல்பமோ சொல்லுவதுதான் பொருந்தும். (66) (எ—று)

முப்பத்தாறுவது யதாஸ்ரயாதிகரணம் முற்றிற்று.

இவ்விதம் கோவிந்தபகவத்பூஜ்யபாதரின் சிஷ்யர்களான ஸ்ரீமத் சங்கர
பகவத்பூஜ்யபாதர்களின் கிருதியான சாரீரகமீமாம்ஸாபாஷ்யத்தின்
மூன்றாவது அத்தியாயத்தின் மூன்றாவதுபாதம் முற்றிற்று.

சுபம்.

तृतीयाध्याये चतुर्थः पादः।

[अत्र निर्गुणविद्याया अन्तरङ्गबहिरङ्गसाधनविचारः]

१ पुरुषार्थाधिकरणम्। सू० १-१७

पुरुषार्थोऽतःशब्दादिति बादरायणः ॥ १ ॥

क्रत्वर्थमात्मविज्ञानं स्वतन्त्रं वात्मनो यतः। देहातिरेकमज्ञात्वा न कुर्यात् क्रतुगं ततः ॥ १ ॥

மூன்றாவது அத்தியாயம் நான்காவது பாதம்.

புருஷார்த்தாதிகரணம் 1.

(அ-கை) முந்தின பாதத்தில் குணோபஸம்ஹாரம் சொல்லும் வாயிலாக பரவித்யை அபரவித்யை இவற்றின் ஸ்வரூபமானது நிஸ்சயிக்கப்பட்டது. இந்தப் பாதத்தில் அவ்வுபாஸனங்களுக்கு கார்மாங்கமாக இல்லாது புருஷார்த்தத்துக்கு ஹேதுவாகுந்தன்மை யுபதேசிக்கப்படுகிறது. ஆகவே யாகாதிகள் பஹிரங்க ஸாதனங்களாகவும், ஶமதமாதிகள் அந்தரங்க ஸாதனங்களாகவும் ஆகும் முறை இதில் விளக்கப்படுவதிருந்து இவ்விரண்டு பாதங்களும் ஒரேவித்யையை விஷய மாகக் கொண்டன என்பதுவும் தெளிவாய் ஏற்படும். இந்தப் பாதமானது 17 அதிகரணங்களும், 52 ஸூத்திரங்களுங் கொண்டது. அவற்றுள் 17 ஸூத்திரங் கள் கொண்ட முதலாவது அதிகரணமானது ஔபநிஷதமான ஆத்மக்ஞான மானது அதிகாரிவாயிலாகக் கர்மாவிலேயே ப்ரவேசத்தை யடைகிறதா? அல்லது ஸ்வதந்திரமாகவே புருஷார்த்தத்துக்கு ஸாதனமாகிறதா? என ஸந்தேஹம் வர ஸ்வதந்திரமாகவே தான் புருஷார்த்தஸாதனமாக வாகிறது எனச் சொல்லவேண்டி ஸித்தாந்தத்தை முன்னிட்டே ஆரம்பிக்கப்படுகிறது. அதன் முதல் ஸித்தாந்த ஸூத்திரம் பின் வருமாறு—

(ஸூ) புருஷார்த்த: அத: சப்தாத் இதி பாதராயண: (1)

(ப-ரை) **अतः** (அத:)=வேதாந்தமூலமேற்படும் ஸ்வதந்த்ர ஆத்மக்ஞானத்தி லிருந்து **पुरुषार्थः** (புருஷார்த்த:)=மோக்ஷமானது **सिध्यति** (ஸித்யதி) = ஸித்திக் கிறது **इति** (இதி)=என்று **बादरायणः** (பாதராயண:)=பாதராயணரென்ற ஆசிரி யர் எண்ணுகிறார். ஏன்? **शब्दात्** (ஶப்தாத்)=அவ்விதம் சுருதியிருப்பதே அதன் காரணமாகும். (1) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) ப்ரம்ஹாத்மைக்ய ஸாக்ஷாத்காரரூபமான ஆத்மக்ஞானமானது யாகத்துக்கு அங்கமாக வுபதேசிக்கப்படுகிறதா? அல்லது ஸ்வதந்திரமாகவே புரு ஷார்த்தத்தைத் தருவதாக வுபதேசிக்கப்படுகிறதா? என்பது ஸந்தேஹம். ஆத்மா தேஹத்தைவிட வேறுபட்டவன் என்பதை யறியாது யாது காரணத்தால் கர்மா

नाद्वैतधीः कर्महेतुर्हन्ति प्रत्युत कर्म सा । आचारो लोकसंग्राही स्वतन्त्रा ब्रह्मधीस्ततः ॥ २ ॥

अथेदानीमौपनिषदमात्मज्ञानं किमधिकारिद्वारेण कर्मण्येवानुप्रविशत्याहोस्वित्स्वतन्त्रमेव पुरुषार्थसाधनं भवतीति मीमांसमानः सिद्धान्तेनैव तावदुपक्रमते पुरुषार्थोऽत इति । अस्माद्वेदान्तविहितादात्मज्ञानात्स्वतन्त्रात्पुरुषार्थः सिद्ध्यतीति बादरायण आचार्यो मन्यते । कुत एतदवगम्यते शब्दादित्याह । तथाहि—'तरति शोकमात्मवित्' (छा० ७।१।३), 'स यो ह वै तत्परमं ब्रह्म वेद ब्रह्मैव भवति' (मु० ३।२।९), 'ब्रह्मविदाप्नोति परम्' (तै० २।१।१), 'आचार्यवान्पुरुषो वेद तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्येऽथ संपत्स्ये' (छा० ६।१४।२) इति, 'य आत्माऽपहतपाप्मा' (छा० ८।७।१) इत्युपक्रम्य 'सर्वांश्च लोकानाप्नोति सर्वांश्च कामान्यस्तमात्मानमनुविद्य विजानाति' (छा० ८।७।१) इति, 'आत्मा वा अरे द्रष्टव्यः' (बृ० ४।५।६) इत्युपक्रम्य 'एतावदरे खल्वमृतत्वम्'

வைச் செய்யமாட்டானோ அக்காரணம்பற்றி ஆத்மக்ஞானம் கர்மாங்கமே தானாகும் என்பது பூர்வபக்ஷம். அத்வைதாத்ம க்ஞானமானது கர்மாவுக்கு ஹேதுவாக வாகமுடியாது. அம்மட்டுமல்லாது அந்த க்ஞானமானது கர்மாவையே அடியோடு ஒழித்தே விடுகிறது. ஆத்மக்ஞானம் வந்த ஜனகாதிகள் கர்மாவில் பிரவிருத்தித்திருப்பதான ஆசாரம் யாதுண்டோ அது லோகஸங்கிரஹத்துக்கு வேண்டியே யாகும். ஆகவே ப்ரம்ஹக்ஞானமானது ஸ்வதந்திரமாகவே ஆகிவிடுகிறது என்பது ஸித்தாந்தம், (எ-று)

பாஷ்யம்.—பின்னர் இப்பொழுது உபநிடதங்கள் மூலம் வெளியாகும் ஆத்மக்ஞானமானது அதிகாரித்வாராவாக கர்மாவிலேயே ப்ரவேசத்தை யடைகிறதா? அல்லது ஸ்வதந்திரமாகவே புருஷார்த்தஸாதனமாக வாகிறதா? என விசாரிக்க வெண்ணங்கொண்டவராய் "புருஷார்த்தோ அத:" என ஸித்தாந்தத்துடனேயே முதலில் தொடங்குகிறார். வேதாந்தத்தில் விதிக்கப்பட்டதும் ஸ்வதந்திரமுமான துமான ஆத்மக்ஞானத்தினின்றும் புருஷார்த்தமானது ஸித்திக்கின்றது எனப் பாதராயண ஆசிரியர் எண்ணுகிறார். எதனின்றும் இது அறியப்படுகிறது எனின்? சப்தத்தினின்றும் என்று சொல்லுகிறார். அதாவது:—"ஆத்மாவையறிந்தவன் சோகத்தை (ஸம்ஸாரத்தைக்) கடக்கிறான்" "யாதொரு அதிகாரி அந்தப்ரம்ப்ரம்ஹத்தை யறிகின்றானோ அவன் ப்ரம்ஹமாகவே ஆகிவிடுகிறான்" "ப்ரம்ஹத்தை யறிந்தவன் பரத்தை (ப்ரம்ஹத்தை) யடைகிறான்" "சிறந்த ஆசிரியரை யடைந்த புருஷன் ப்ரம்ஹத்தை யறிகிறான். அவ்விதமறிந்தவனுக்கு (முக்திவிஷயத்தில்) அவ்வளவுதான் (ப்ராரப்த்தகர்மாயத்தமான சரீரமுள்ளவரைதான்) தாமதம் எவ்வளவுக்குள் ப்ராரப்த்தகர்மாயத்த சரீரத்தினின்றும் விடுபடுகின்றானோ அப்பொழுதே ப்ரம்ஹமாகவாகி விடுகிறான்" என்றும், "எந்த ஆத்மா பாபஸம்பந்தமற்றதோ" என்றுதொடங்கி "எவன் அந்த ஆத்மாவை சாஸ்திரா சாரியோபதேசத்தையொட்டி முதலிலறிந்து அவ்விதமே அநுபவிக்கிறானோ அவன் எல்லாலோகங்களையும் எல்லாக்காமங்களையும் அடைகிறான்" என்றும், ஹேமைத்ரேயி! ஆத்மாவேதான் ஸாக்ஷாத்கரிக்கத் தக்கது" என்று தொடங்கி "அமிருதத்வமானது) மோக்ஷ

(बृ० ४।५।१५) इत्येवञ्जातीयका श्रुतिः केवलाया विद्यायाः पुरुषार्थहेतुत्वं श्रावयति ॥ १ ॥ अथात्र प्रत्यवतिष्ठते—

शेषत्वात्पुरुषार्थवादो यथाऽन्येष्विति जैमिनिः ॥ २ ॥

कर्तृत्वेनात्मनः कर्मशेषत्वात्तद्विज्ञानमपि व्रीहिप्रोक्षणादिवद्विषयद्वारेण कर्मसंबन्ध्येवेत्यतस्तस्मिन्नवगतप्रयोजन आत्मज्ञाने या फलश्रुतिः सार्थवाद इतिजैमिनिराचार्यो मन्यते यथान्येषु द्रव्यसंस्कारकर्मसु 'यस्य पर्णमयी जुहूर्भवति न स पापꣳश्लोकꣳशृणोति। यदङ्क्ते चक्षुरेव भ्रातृव्यस्य वृङ्क्ते। यत्प्रयाजानुयाजा इज्यन्ते वर्म वा एतद्यज्ञस्य क्रियते वर्म यजमानस्य भ्रातृव्याभिभूत्यै' इत्येवञ्जातीयका फलश्रुतिरर्थवादः। तद्वत्।

மானது) இவ்வளவுபட்டுமே தானன்றோ” என்றுமான இப்மாதிரியான சுருதி கேவலமான (தனித்த) வித்யைக்கு=ஆத்மக்ஞானத்துக்கு, புருஷார்த்தஹேதுத்வத்தை யுபதேசிக்கிறது என்றும். (1)

அவதாரிகா பாஷ்யம்.—பிறகு இவ்விஷயத்தில் பூர்வபக்ஷம் சொல்லப்படுகிறது—

(ஸூ) சேஷத்வாத் புருஷார்த்தவாத: யதா அந்யேஷு இதி ஜைமினி: (2)

(ப—ரை) **शेषत्वात्** (சேஷத்வாத்)=ஆத்மாகர்மாவுக்கு அங்கமாகவாவதால் **पुरुषार्थवादः** (புருஷார்த்தவாதः)=ஆத்மக்ஞானத்தக்குப் புருஷார்த்தத்துவம் சொன்னதானது * **अर्थवादः** (அர்த்தவாதः)=அர்த்தவாதமேயாகும். **अन्येषु** (அந்யேஷு)=த்ரவ்யம், ஸம்ஸ்காரம், கர்மம் இவ்விடங்களில் **यथा** (யதா)=எவ்விதமோ அவ்விதமே இங்கும் என **जैमिनिः** (ஜைமினிः)=ஜைமினி என்ற ஆசிரியர் எண்ணுகிறார்.

பாஷ்யம்.—கர்த்தாவாக விருப்பதன் மூலம் ஆத்மா கர்மாவுக்கு அங்கமாகவாவதால் ஆத்மாவைப் பற்றிய விக்ஞானமும் வ்ரீஹிப்ரோக்ஷணாதிகள் போல விஷயம் வாயிலாக கர்மஸம்பந்தமுள்ளதாகவே தானாகும் என்ற இக்காரணத்தால் அறியப்பட்ட முற்கூறிய ப்ரயோஜனமுள்ள ஆத்மக்ஞானவிஷயத்தில் யாதொரு பலஸ்ருதியுண்டோ அது அர்த்தவாதமே யாகும் என ஜைமினி என்ற ஆசிரியர் எண்ணுகிறார். திரவியம், ஸம்ஸ்காரம், கர்மம் இவற்றில் போலவாம். அதாவது: “எவனது ‡ ஜுஹூவானது பர்ணமயமாக வாகுமோ அவன் பாபமான கீர்த்தியைக் கேட்கமாட்டான்” “கண்ணுக்கு மையிட்டுக்கொள்ளுகிறான்” என்பது யாதுண்டோ அதனால் சத்துருவினுடைய கண்ணையே விலக்கினவனாகிறான்” “ப்ரயாஜாநுயாஜங்களை (ப்ரயாஜாநுயாஜ மென்றகர்மங்களைச்) செய்கிறான் என்பது யாதுண்டோ இது யாகத்துக்குக் கவசமாக வாவதுடன் சத்துருவைத் துலைக்கவேண்டி யஜமானனுக்குக் கவசமாகவுமாகிவிடுகிறது” என்றுமான இம்

---

* ஸூத்திரத்தில் புருஷார்த்தவாத: என்றவிடத்திலுள்ள அர்த்தவாத: என்றதை ஆவிருத்திசெய்து கொண்டு இம்மாதிரி பொருள் கொள்ளவேண்டும்.

‡ ஜுஹூவென்பது ஒருவிதமான ஹோமபாத்திரமாகும்.

कथं पुनरस्यानारभ्याधीतस्यात्मज्ञानस्य प्रकरणादीनामन्यतमेनापि हेतुना विना क्रतुप्रवेश आशङ्क्यते। कर्तृद्वारेण वाक्यात्तद्विज्ञानस्य क्रतुसंबन्ध इति चेत्। न। वाक्याद्विनियोगानुपपत्तेः। अव्यभिचारिणा हि केनचिद्द्वारेणानारभ्याधीतानामपि वाक्यनिमित्तः क्रतुसंबन्धोऽवकल्पते। कर्ता तु व्यभिचारि द्वारं लौकिकवैदिककर्मसाधारण्यात्। तस्मान्न तद्द्वारेणात्मज्ञानस्य क्रतुसंबन्धसिद्धिरिति। न। व्यतिरेकविज्ञानस्य वैदिकेभ्यः कर्मभ्योऽन्यत्रानुपयोगात्। नहि देहव्यतिरिक्तात्मज्ञानं लौकिकेषु कर्मसूपयुज्यते। सर्वथा दृष्टार्थप्रवृत्त्युपपत्तेः। वैदिकेषु तु देहपातोत्तरकालफलेषु देहव्यतिरिक्तात्मज्ञानमन्तरेण प्रवृत्तिर्नोपपद्यत इत्युपयुज्यते व्यतिरेकविज्ञानम्। नन्वपहतपाप्मत्वादिविशेषणादसंसार्यात्मविषय-

---

மாதிரியான பலன் கூறும் சுருதியானது அர்த்தவாதமாக (த்ரவ்ய ஸம்ஸ்கார கர்மங்களைப் புகழுவதாக) ஆவது எவ்விதமோ அவ்விதமேயாம்.

சங்கை—கர்மத்தைச்சொன்ன விடத்தில் படிக்கப்படாத இந்த ஆத்மக் ஞானத்துக்கு ப்ரகரணம் முதலிய வற்றுள் ஒருஹேதுவுமில்லாமல் யாகப்ரவேசமானது எவ்வித மாசங்கிக்கப்படுகிறது எனின்?

உத்தரம்—வாக்கியத்தைக் கொண்டு கர்த்தாவாயிலாக கர்த்திருவிஷயமான விச்ஞானத்துக்கு யாகஸம்பந்தமேற்படுகிறது என்கிறேம். எனின்?

உத்தரம்—* அவ்விதமில்லை. ஏன்? வாக்கியத்தினின்றும் (வாக்கியத்தினல் மட்டும்) விநியோகம் ஸம்பவிக்க முடியாததாலென்க. அவ்யபிசாரியான (யாகத்தைத்தவிர்த்து வேறிடத்தில் ஸம்பந்தமடையக்கூடாத) யாதானுமொருவஸ்துவினன்றே அநாரப்யாதீதங்களுக்கும்=(யாக ப்ரகரணத்தில் படிக்கப்படாதனவற்றுக்கும்) வாச்கிய நிமித்தமாக யாகஸம்பந்தஞ் சொல்லுவது பொருந்தும். (யாக) கர்த்தாவோ லௌகிக கர்மத்துக்கும் வைதிககர்மத்துக்கும் பொதுவாகவிருப்ப தன் மூலம் வ்யபிசாரியான த்வாரமாகிறுன். ஆனதுபற்றி கர்த்தாவாயிலாக ஆத்ம ச்ஞானத்துக்கு யாகஸம்பந்தம் ஸித்திப்பதில்லை.

சங்கை—† அவ்விதம் (ஸித்தாந்தி) சொல்லுவது பொருந்தாது. தேஹாதிகளைவிட ஆத்மா வேறு என்ற க்ஞானத்துக்கு வைதிகங்களான கர்மங்களைக் காட்டிலும் வேறிடத்தி லுபயோகமில்லாதிருப்பதே அதன் காரணமாகும். தேஹத்தை விட ஆத்மா வேறு என்ற ச்ஞானமானது லௌகிகங்களான கர்மங்களில் உபயோகப்பட மாட்டாதன்றே. எம்முறையிலும் (தேஹத்தைவிட ஆத்மா இருப்பினும், இல்லாவிடினும்) திருஷ்டமான பலனை யுத்தேசித்து (லௌகிக) ப்ரவிருத்தியேற்படக்கூடியதாக விருப்பதே அதன் காரணமாகும். இந்தத் தேஹம் போன பிறகு அடுத்த தேஹத்தில் வரக்கூடிய பலனையுடைய வைதிகமான கர்மங்களிலோவெனில் தேஹத்தை விட ஆத்மா வேறு என்ற க்ஞானமில்லாமல் ப்ரவிருத்தியானது ஏற்படுவதில்லை. என்பது பற்றி தேஹத்தைவிட ஆத்மா வேறு என்ற அறிவானது உபயோகப்படத்தான் செய்கிறது.

---

* உத்தரம் ஸித்தாந்தி சொல்லுவதாகும்.

† சங்கை பூர்வபக்ஷி சொல்லுவதாகும்.

मौपनिषदं दर्शनं न प्रवृत्त्यङ्गं स्यात्। न। प्रियादिसंसूचितस्य संसारिण एवात्मनो द्रष्टव्यत्वेनोपदेशात्। अपहतपाप्मत्वादि विशेषणं तु स्तुत्यर्थं भविष्यति। ननु तत्र तत्र प्रसाधितमेतदधिकमसंसारि ब्रह्म जगत्कारणं तदेव च संसारिण आत्मनः पारमार्थिकं स्वरूपमुपनिषत्सूपदिश्यत इति। सत्यं प्रसाधितं तस्यैव तु स्थूणानिखननवत्फलद्वारेणाक्षेपसमाधाने क्रियेते दार्ढ्याय ॥ २ ॥

आचारदर्शनात् ॥ ३ ॥

'जनको ह वैदेहो बहुदक्षिणेन यज्ञेनेजे' (बृ० ३।१।१), 'यक्ष्यमाणो वै भगवन्तोऽहमस्मि' (छा० ५।११।५) इत्येवमादीनि ब्रह्मविदामप्यन्यपरेषु वाक्येषु कर्मसंबन्धदर्शनानि भवन्ति। तथोद्दालकादीनामपि पुत्रानुशासनादिदर्शनाद्गार्हस्थ्यसंबन्धोऽव-

---

சங்கை—‡ எவ்வித பாபஸம்பந்தமுமற்றது என்றதாதி விசேஷண மிருப்பதைக் கொண்டு அஸம்ஸாரியான ஆத்மாவை விஷயமாகக்கொண்ட உபநிடதங்களிற் சொல்லிய ஆத்மக்ஞானமானது ப்ரவிருத்திக்கு அங்கமாக வாகமாட்டாதன்றோ. எனின்?

உத்தரம்—(1) அவ்விதம் சொல்லமுடியாது. ப்ரியாதிகளால் குறிப்பிடப்பட்ட ஸம்ஸாரியான ஆத்மாவுக்கே த்ரஷ்டவ்யத்வோபதேசம் காணப்படுவதே அதன் காரணமாகும். ஆகவே அபஹதபாப்மத்வாதி (எவ்வித பாபஸம்பந்தமுமற்றவன் என்றதாதி) விசேஷணமோ ஸ்துதிக்கு வேண்டியே சொல்லப்பட்டதாகவாகும்.

சங்கை—(2) ஜீவனைக் காட்டிலும் வேறுபட்டதும், அஸம்ஸாரியுமான ப்ரம்ஹமானது ஜகத்காரணமென்றும், அந்த ப்ரம்ஹமே ஸம்ஸாரியான ஆத்மாவுக்கு உண்மையான ஸ்வரூபமென்றும் உபநிடதங்களில் உபதேசிக்கப்படுகிறது என்பதாய் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கின்றதன்றோ எனின்? கூறப்பட்டது உண்மைதான். ஆயினும் அதற்கே தூணைநாட்டும் நியாயத்தை யொட்டி பலனை முன்னிட்டு அது நிலைப்பதற்குவேண்டி ஆக்ஷேபஸமாதானங்கள் செய்யப்படுகின்றன.

(ஸூ) ஆசார தர்சனாத் (3)

(ப—ரை) **आचारदर्शनात्** (ஆசாரதர்ஶனாத்)=ஜனகாதிகளான ப்ரம்ஹவித்துக்களுக்குங்கூட கர்மப்ரவிருத்தியானது காணவும் படுகிறது. (3) (எ—று)

பாஷ்யம்.—"விதேஹதேசத்தரசனான ஜனகரோ வெகு தக்ஷிணையுள்ள யாகத்தைச் செய்தார்." "ஓ பெரியீர்! நான் யாகஞ்செய்யப் போகின்றவனாக வன்றோ இருக்கிறேன்" என்றதாதிகளான கர்மஸம்பந்த தரிசனங்கள் ப்ரம்ஹவித்துக்

---

‡ இது ஸித்தாந்தியின் சங்கையாகும்.

(1) இது பூர்வபக்ஷியின் உத்தரமாகும்.

(2) இது ஸித்தாந்தியின் சங்கையாகும்.

गम्यते। केवलाच्चेज्ज्ञानात्पुरुषार्थसिद्धिः स्यात्किमर्थमनेकायाससमन्वितानि कर्माणि ते कुर्युः 'अत्के चेन्मधु विन्देत किमर्थं पर्वतं व्रजेत्' इति न्यायात्॥ ३॥

तच्छ्रुतेः॥ ४॥

'यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा तदेव वीर्यवत्तरं भवति' (छा० १।१।१०) इति च कर्मशेषत्वश्रवणाद्विद्याया न केवलायाः पुरुषार्थहेतुत्वम्॥ ४॥

समन्वारम्भणात्॥ ५॥

'तं विद्याकर्मणी समन्वारभेते' (बृ० ४।४।२) इति च विद्याकर्मणोः फलारम्भे सहकारित्वदर्शनाच्च स्वातन्त्र्यं विद्यायाः॥ ५॥

तद्वतो विधानात्॥ ६॥

களுக்கும் கூட வித்யையை விதிக்கவந்த வாக்கியங்களில் காணப்படுகின்றன. அது போலவே உத்தாலகர் முதலியோருக்கும் புத்திரனுக்கு (ஶ்வேதகேதுவுக்கு) உபதேசஞ்செய்தல் முதலியன காணப்படுவதிலிருந்து கிருஹஸ்தாஶ்ரம ஸம்பந்தம் காணவும் படுகிறது. கர்மஸம்பந்த மில்லாத க்ஞானத்தினுல் புருஷார்த்த (மோக்ஷ) ஸித்தியேற்படுமாயின் அவர்கள் வெகு ஆயாஸத்துடன் கூடின கர்மங்களைச் செய்ய ஏன் முன்வரவேண்டும். "காலடியில் தேன் கிடைக்குமாயின் மலையில் ஏறுவது ஏற்றுக்கு" என்றல்லவோ ந்யாயமிருக்கிறது. (3) (எ-று)

(ஸூ) தத் சுருதே: (4)

(ப-ரை) तच्छ्रुतेः (தத் சுருதே:)=வித்யையானது கர்மாவுக்கு அங்கமாகிறது எனச்சுருதியு மிருக்கிறது. (4) (எ-று)

பாஷ்யம்.—"எதை வித்யையுடனும், ஶ்ரத்தையுடனும், ரஹஸ்யவிக்ஞானத்துடனுமே செய்கின்றுனே அதுவே அதிகம் வீர்யமுள்ளதாக வாகும்" என்றதால் வித்யைக்குக் கர்மாவுக்கு அங்கமாகவிருத்தல் காணப்படுவதால் கேவல (தனித்த) வித்யைக்கு புருஷார்த்த (மோக்ஷ) ஹேதுத்வமானது ஸித்திக்காது. (4) (எ-று)

(ஸூ) ஸமன்வாரம்பணத் (5)

(ப-ரை) समन्वारंभणात् (ஸமன்வாரம்பணத்)=வித்யை, கர்மம் இரண்டும் சேர்ந்தே பலனைத் தருவதாக காணவும் படுகிறது. (5) (எ-று)

பாஷ்யம்.—"வித்யை, கர்மம் இரண்டுமே (பரலோகம் செல்லும்) அவனைப் பின்தொடர்ந்து செல்லுகின்றன" என்றதால் பலனைத் தரும் விஷயத்தில் வித்யை கர்மம் இவற்றுக்கு ஸஹகாரித்துவம் (சேர்ந்து உபகரித்தல்) ஆனது காணப்படுவதால் வித்யைக்கு ஸ்வாதந்திரியமானது ஸித்திக்க மாட்டாது. (5) (எ-று)

(ஸூ) தத்வதோ விதாநாத் (6)

(ப-ரை) तद्वतः (தத்வத:)=எல்லாவேதத்தினுடையவும் அர்த்தக்ஞான முள்ளவனுக்கு विधानात् (விதாநாத்)=கர்மாவை விதித்திருப்பதால் விக்ஞானமானது ஸ்வதந்திரமாகப் பலனைத்தரமாட்டாது. (6) (எ-று)

'आचार्यकुलाद्वेदमधीत्य यथाविधानं गुरोः कर्मातिशेषेणाभिसमावृत्य कुटुम्बे शुचौ देशे स्वाध्यायमधीयानः' (छा० ८।१५।१) इति चैवञ्जातीयका श्रुतिः समस्तवेदार्थविज्ञानवतः कर्माधिकारं दर्शयति। तस्मादपि न विज्ञानस्य स्वातन्त्र्येण फलहेतुत्वम्। नन्वत्राधीत्येत्यध्ययनमात्रं वेदस्य श्रूयते नार्थविज्ञानम्। नैष दोषः। दृष्टार्थत्वाद्वेदाध्ययनमर्थावबोधपर्यन्तमिति स्थितम्॥ ६॥

नियमाच्च॥ ७॥

'कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतं समाः। एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते

பாஷ்யம்.—"குருவின் சுஶ்ரூஷாரூபமான கர்மாவைச் செய்துகொண்டு எஞ்ஜின காலத்தில் முறைப்படி வேதத்தை அவரிடமிருந்து கற்றுப் பிறகு ஆசாரியனுடைய வீட்டினின்றும்(ப்ரம்ஹசரியத்தினின்றும்)நீங்கி ஸமாவர்த்தனம் என்ற கர்மாவைச் செய்துகொண்டு கார்ஹஸ்த்யத்தில் இருக்கின்றவனாய் ஒவ்வொரு நாளும் சுத்தமான தேசத்திலிருந்துகொண்டு வேதாத்யயனத்தைச் செய்துகொண்டும் நித்யாதிகளான தர்மங்களைச் செய்துகொண்டும் இருப்பவன் ப்ரம்ஹலோகத்தை யடைகிறான்" என்ற இம்மாதிரியான சுருதியானது எல்லாவேதார்த்த விக்ஞானமும் உள்ளவனுக்கே கர்மாதிகாரத்தைத் தெரிவித்திருக்கிறது. ஆனது பற்றியும் வித்யைக்கு ஸ்வதந்திரமாகப் பலனைத்தருந்தன்மை ஸித்திக்காது.

சங்கை—இங்கு अधीत्य (அதீத்ய) என்றதால் வேதத்தின் அத்தியயனம் மட்டும் சொல்லப்படுகிறதே யொழிய அர்த்தக்ஞானமும் சொல்லப்படவில்லை யன்றோ எனின்?

உத்தரம்—இந்தத் தோஷமில்லை. திருஷ்டமான பயனுள்ளதாக இருப்பதால் வேதாத்யயனமானது அர்த்தக்ஞானத்தை முடிவாகக்கொண்டதாக வாகிறது என்பது பூர்வமீமாம்ஸையில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. (6) (எ—று)

(ஸூ) நியமாத் ச (7)

(ப—ரை) नियमाच्च (நியமாத்ச)=உயிருள்ளவரை கர்மாவைச் செய்தே தீர வேண்டும் என்றநியமத்தைச் சுருதி சொல்லியிருப்பதுமே மற்றொரு காரணமாகும். (7) (எ—று)

பாஷ்யம்—"(இஹ)இந்தத் தேஹத்தில்(ஶதம்ஸமா:)நூறுவருஷங்கள் (ஜிஜீவிஷேத்) உயிருடனிருக்க விரும்புவானேல் (கர்மாணி குர்வந்நேவ) கர்மங்களைச் செய்து கொண்டே ஜீவிக்கவிரும்பவேண்டும். (ஏவம்) இவ்விதம் கர்மாவைச் செய்துகொண்டே ஜீவிக்கின்றவனும் (நரே) நான் மனிதன் என்றுமட்டுமபிமானமுள்ளவனுமான (த்வயி) உன்னிடத்தில் (கர்ம) கர்மமானது (நலிப்யதே) லேபத்தை யடையாது. அதாவது: கர்மமூலமான பந்தம் உனக்கேற்படமாட்டாது என்றும். (இதஃ) கர்மாவைச் செய்துகொண்டிருப்பதைக் காட்டிலும் (அன்யதா) வேறுமுறையானது (நாஸ்தி) கிடையாது" என்றும், அதுபோலவே "அக்னிஹோத்ரமென்பது யாதுண்டோ (அது) ஜரைமரணம் இவற்றை எல்லையாகக்

नरे' (ईशा० २) इति। तथा 'एतद्वै जरामर्यं सत्रं यदग्निहोत्रं जरया वा ह्येवास्मान्मुच्यते मृत्युना वा' इत्येवञ्जातीयकान्नियमादपि कर्मशेषत्वमेव विद्याया इति ॥ ७ ॥

एवं प्राप्ते प्रतिविधत्ते—

अधिकोपदेशात्तु बादरायणस्यैवं तद्दर्शनात् ॥ ८ ॥

तुशब्दात्पक्षो विपरिवर्तते। यदुक्तम्—'शेषत्वात्पुरुषार्थवादः' (ब्र० सू० ३।४।२) इति तन्नोपपद्यते। कस्मात्। अधिकोपदेशात्। यदि संसार्येवात्मा शारीरः कर्ता भोक्ता च शरीरमात्रव्यतिरेकेण वेदान्तेषूपदिष्टः स्यात्ततो वर्णितेन प्रकारेण फलश्रुतेरर्थवादत्वं स्यात्। अधिकस्तावच्छारीरादात्मनोऽसंसारीश्वरः कर्तृत्वादिसंसारिधर्मरहितोऽपहतपाप्मत्वादिविशेषणः परमात्मा वेद्यत्वेनोपदिश्यते वेदान्तेषु। नच तद्विज्ञानं कर्मणां प्रवर्तकं भवति, प्रत्युत कर्माण्युच्छिनत्तीति वक्ष्यति 'उपमर्दं च' (ब्र० सू० ३।४।१६) इत्यत्र।

கொண்டது. இந்த அக்னிஹோத்திரத்தினின்றும் ஜரையினுலாவது மரணத்தினுலாவது விடுபடுகிருன்" என்றுமான இம்மாதிரியான நியமத்தினுலும் வித்யையானது கர்மாவுக்கு அங்கமென்றே ஏற்படுகிறது. (7) (எ—று)

அவதாரிகாபாஷ்யம்.—இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே பதில் சொல்லப்படுகிறது.—

(ஸூ) அதிகோபதேசாத்து பாதராயணஸ்ய ஏவம் தத்தர்சனுத் (8)

(ப—ரை) तु (து)=முற்கூறிய பூர்வபக்ஷம் மறுக்கப்படுகிறது. अधिकोपदेशात् (அதிகோபதேசாத்)=சாரீரனைக் காட்டிலும் அதிகனுன ஈஸ்வரனுக்கு வேதாந்தங்களில் வேத்யத்வமானது உபதேசிக்கப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். एवम् (ஏவம்)=இவ்வித உபதேசமிருப்பதால் बादरायणस्य (பாதராயணஸ்ய)=முதல் ஸூத்திரத்தில் சொல்லிய பாதராயணரின் மதமே எஞ்ஜிநிற்கின்றது. तद्दर्शनात् (தத்தர்சனுத்)=அவ்விதம் சுருதியிருப்பதே அதன் காரணமாகும். (8) (எ—று)

பாஷ்யம்.—ஸூத்திரத்திலுள்ள து என்ற சப்தத்தினின்றும் பூர்வபக்ஷமானது விலகுகிறது. "சேஷத்வாத் புருஷார்த்தவாத:" என்றதால் யாதொன்று சொல்லப்பட்டதோ அது பொருத்தமுள்ளதாக வாகமாட்டாது. ஏன்? அதிகோபதேசமிருப்பதாலென்க. சாரீரனும் கர்த்தாவும் போக்தாவுமான ஸம்ஸாரியான ஆத்மாவே சரீரத்தைமட்டும் விடவேருக வேதாந்தங்களில் உபதேசிக்கப்பட்டிருப்பானேல் அப்பொழுது முன்னர்சொன்ன முறையினுல் பலன் கூறும் சுருதிக்கு அர்த்தவாதத்துவம் சொல்லுவது பொருந்தலாம். சாரீரனை ஆத்மாவைக் காட்டிலும் அதிகனும் அஸம்ஸாரியும் ஈஸ்வரனும் கர்த்திருத்வம் முதலிய ஸம்ஸாரி தர்மமற்றவனும் பாபஸம்பந்தமற்றவன் என்றதாதி விசேஷணமுள்ளவனுமான பரமாத்மா வேதாந்தங்களில் வேத்யராக உபதேசிக்கப்படுகிருர். அந்தப் பரமாத்மக்ஞானமானது கர்மாவில் ப்ரவிருத்தியைத் தரக்கூடியதாகவாகாது. பின்னேயோவெனில் "உபமர்தஞ்ச" என்ற விடத்தில் கர்மாக்களேயே அது அழித்துவிடும்

तस्मात् पुरुषार्थोऽतश्शब्दात् (ब्र० सू० ३।४।१) इति यन्मतं भगवतो बादरायणस्य तत्तथैव तिष्ठति न शेषत्वप्रभृतिभिर्हेत्वाभासैश्चालयितुं शक्यते। तथाहि तमधिकं शारीरादीश्वरमात्मानं दर्शयन्ति श्रुतयः—'यः सर्वज्ञः सर्ववित्' (मुण्ड० १।१।९) 'भीषाऽस्माद्वातः पवते' (तै० २।८।१) 'महद्भयं वज्रमुद्यतम्' (कठ० ६।२) 'एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि' (बृ० ३।८।९) 'तदैक्षत बहु स्यां प्रजायेयेति तत्तेजोऽसृजत' (छा० ६।२।३) इत्येवमाद्याः। यत्तु प्रियादिसंसूचितस्य संसारिण एवात्मनो वेद्यतयाऽनुकर्षणम् 'आत्मनस्तु कामाय सर्वं प्रियं भवति। आत्मा वा अरे द्रष्टव्यः' (बृ० २।४।५) 'यः प्राणेन प्राणिति स त आत्मा सर्वान्तरः' (बृ० ३।४।१) 'य एषोऽक्षिणि पुरुषो दृश्यते' (छा० ८।७।४) इत्युपक्रम्य 'एतं त्वेव ते भूयोऽनुव्याख्यास्यामि' (छा० ८।९।३) इति चैवमादि, तदपि 'अस्य महतो भूतस्य निःश्वसितमेतद्यदृग्वेदः' (बृ० २।४।१०) 'योऽशनायापिपासे शोकं मोहं जरां मृत्युमत्येति' (बृ० ३।५।१) 'परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः' (छा० ८।१२।३) इत्येवमादिभिर्वाक्यशेषैः सत्यामेवाधिकोपदिदिक्षायामत्यन्ताभेदाभिप्रायमि-

---

என உபதேசிக்கவும் போகிறார். ஆகவே "புருஷார்த்தோத: சப்தாத்" என்றதாற் சொல்லப்பட்ட பகவானான பாதராயணருடைய மதமானது யாதுண்டோ அது அவ்விதமே இருக்கின்றதே யொழிய சேஷத்வம் முதலிய போலிஹேதுக்களால் அசைக்ககூடியதாக வாகவில்லை. அவ்விதமேயன்றோ அந்த ஈஸ்வரனான ஆத்மாவை சாரீரனைக்காட்டிலும் அதிகனாகச் சுருதிகள் காண்பிக்கின்றன. அவையாவன— "எவர் ஸர்வஜ்ஞனும் ஸர்வவித்துமோ" என்றும், "இவரிடமிருந்து பயத்தினால் காற்று வீசுகிறது" என்றும், "உயரெடுக்கப்பட்ட வஜ்ரம் போன்று அதிகம் பய ஹேதுவானது" என்றும், "ஹே கார்க்கி! இந்த அக்ஷரத்தினுடைய (பரமாத்மாவினுடைய) ஆக்ஞையினாலேயே" என்றும், "அதுவெகுவாவேன் வெளிவருவேன் என ஆலோசித்து அது தேஜஸ்ஸை ஸிருஷ்டித்தது" என்றும், இது முதலான சுருதிகளாம். ப்ரியாதிகளால் நன்கு சூசிப்பிக்கப்பட்ட ஸம்ஸாரியான ஆத்மாவுக்கே வேத்யத்வமிருப்பதாக அனுகர்ஷணஞ் செய்தது யாதுண்டோ அதாவது:—"தன்னுடைய காமத்துக்கு வேண்டியே எல்லாம் ப்ரியமாகவாகிறது. ஹே மைத்ரேயி! ஆத்மாவே ஸாக்ஷாத்கரிக்கத்தக்கது" "எவன் ப்ராணனால் ஜீவிக்கின்றானோ அவனே உனது ஸர்வாந்தர ஆத்மாவாக வாகிறான்" "கண்ணில் யாதொரு இந்தப் புருஷன் காணப்படுகின்றானோ" என்றுதொடங்கி "இவனையே திரும்பவும் உனக்கு வியாக்யானஞ் செய்யப்போகின்றேன்" என்றதாதியானது யாதுண்டோ அதுவும் "ருக்வேதம் யாதுண்டோ இது இந்த மஹத்தான பூதத்தினுடையமூச்சாகும்" "எவர் பசிதாஹங்களையும் சோகத்தையும் மோஹத்தையும் ஜரையையும் மிருத்யுவையும் கடந்தவரோ" "பரமானஜ்யோதிஸ்ஸை யடைந்து சொந்தரூபத்துடன் ப்ரகாசிக்கிறான், அவர் உத்தமபுருஷன்" என்றதாதி வாக்கியசேஷங்களினால் ஸம்ஸாரியான ஆத்மாவைக் காட்டிலும் அதிகோபதேசஞ் செய்ய விருப்பங்கொண்டே

त्यविरोधः। पारमेश्वरमेव हि शारीरस्य पारमार्थिकं स्वरूपम्। उपाधिकृतं तु शारीरात्वम् 'तत्त्वमसि' (छा० ६।८।७) 'नान्यदतोऽस्ति द्रष्टृ' (बृ० ३।८।११) इत्यादिश्रुतिभ्यः। सर्वं चैतद्विस्तरेणास्माभिः पुरस्तात्तत्र तत्र वर्णितम्॥ ८॥

तुल्यं तु दर्शनम्॥ ९॥

यत्तूक्तमाचारदर्शनात्कर्मशेषो विद्येति। अत्र ब्रूमः—तुल्यमाचारदर्शनमकर्मशेषत्वेऽपि विद्यायाः। तथाहि श्रुतिर्भवति—'एतद्ध स्म वै तद्विद्वांस आहुर्ऋषयः कावषेयाः किमर्था वयमध्येष्यामहे किमर्था वयं यक्ष्यामहे। एतद्ध स्म वै तत्पूर्वे विद्वांसोऽग्निहोत्रं न जुहवाञ्चक्रिरे', 'एतं वै तमात्मानं विदित्वा ब्राह्मणाः पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति' (बृ० ३।५।१) इत्येवञ्जातीयका। याज्ञवल्क्यादीनामपि ब्रह्मविदामकर्मनिष्ठत्वं दृश्यते—'एतावदरे खल्वमृतत्वमिति होक्त्वा याज्ञ-

---

அத்யந்தாபேதத்தைக் கருத்திற்கொண்டு ஏற்பட்டது. ஆனதுபற்றி முற்கூறிய விரோதங்கிடையாது. பரமேஶ்வரனுடைய ஸ்வரூபமே யன்றோ சாரீரனது உண்மையான ஸ்வரூபமாகிறது. சாரீரத்துவமோ உபாதிமூல மேற்பட்டது. "அதாக நீ இருக்கின்றாய்" "த்ரஷ்டாவாகக் காணப்படுவது யாதுண்டோ அது பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டதன்று" என்றதாதி சுருதிகளிருப்பதாலென்க. இவை யாவும் விரிவாக நம்மால் முன்னர் ஆங்காங்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

அவதாரிகா பாஷ்யம்.—ஆசாரம் காணப்படுவதைக் கொண்டு வித்யை கர்மாவுக்கு அங்கமானது என யாதொன்று சொல்லப்பட்டதோ இவ்விஷயத்தில் சொல்லுகிறோம்—

(ஸூ) துல்யந்து தர்சனம் (9)

(ப—ரை) வித்யை கர்மாவுக்கு அங்கமன்று என்ற விஷயத்தில் **दर्शनम्** (தர்சனம்)=ஆசாரதர்சனமானது **तुल्यं तु** (துல்யந்து)=துல்யமாகவேயன்றோ காணப்படுகிறது. (9) (எ—று)

பாஷ்யம்.—வித்யையானது கர்மாவுக்கு அங்கமாகவாவதில்லை என்ற விஷயத்தில் ஆசாரதர்சனமானது துல்யமாகவேயன்றோ (கர்மாவுக்கு வித்யை அங்கமாவதில் போலவேயன்றோ) காணப்படுகிறது. அதாவது:—"வித்வான்களும் காவஷேயர்களுமான ருஷிகள் நாம் எதற்கு வேண்டி அத்யயனஞ் செய்யப்போகின்றோம். எதற்கு வேண்டி நாம் யாகஞ்செய்யப் போகின்றோம் என்றல்லவோ சொல்லுகின்றனர். நம்முன்னருள்ள வித்வான்கள் இதே அந்த அக்னிஹோத்ரஹோமத்தைச் செய்தனரில்லை" என்றும், "ப்ராம்ஹணர்கள் இதே அந்த ஆத்மாவை அறிந்து புத்திரேஷணையினின்றும் வித்தேஷணையினின்றும் லோகேஷணையினின்றும் விலகினவர்களாய் பிக்ஷாடனத்தைச் செய்கின்றனர்" என்றதாதியான சுருதியன்றோ இருக்கின்றது. "ஹேமைத்ரேயி! இவ்வளவே யன்றோ அமிருதத்வம் என்று சொல்லி யாக்ஞவல்க்யர் வெளியேறினர் என்றதாதிகளான சுருதிகளினின்றும்

वल्क्यो विजहार' (बृ० ४ । ५ । १५) इत्यादिश्रुतिभ्यः। अपिच 'यक्ष्यमाणो वै भगवन्तोऽहमस्मि' (छा० ५ । ११ । ५) इत्येतल्लिङ्गदर्शनं वैश्वानरविद्याविषयम्। संभवति च सोपाधिकायां ब्रह्मविद्यायां कर्मसाहित्यदर्शनम्। नत्वत्रापि कर्माङ्गत्वमस्ति। प्रकरणाद्यभावात् ॥ ९ ॥ यत्पुनरुक्तम्—'तच्छ्रुतेः' (ब्र० सू० ३ । ४ । ४) इति, अत्र ब्रूमः—

असार्वत्रिकी ॥ १० ॥

'यदेव विद्यया करोति' (छा० १ । १ । १०) इत्येषा श्रुतिर्न सर्वविद्याविषया। प्रकृतविद्याभिसंबन्धात्। प्रकृता चोद्गीथविद्या 'ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत' (छा० १ । १ । १) इत्यत्र ॥ १० ॥

विभागः शतवत् ॥ ११ ॥

यदप्युक्तम्—'तं विद्याकर्मणी समन्वारभेते' (बृ० ४ । ४ । २) इत्येतत्समन्वारम्भ-

---

ப்ரம்ஹவித்துக்களான யாக்ஞவல்கியாதிகளுக்கும் கர்மநிஷ்டத்துவமில்லை யென்பது காண்பிக்கப் பட்டிருக்கிறது. மேலும் "ஓ பெரியீர்! நான் யாகஞ் செய்யப் போகின்றவனாக விருக்கிறேன்" என்ற இந்த லிங்கதரிசனமானது வைஸ்வாநர வித்யாவிஷயமானதாகும். ஸகுணமான ப்ரம்ஹவித்யையில் கர்மாவின் ஸாஹித்ய தர்சனமானது ஸம்பவிக்கவும் கூடும். நிர்க்குண ப்ரம்ஹவித்தைக்கோ கர்மாங்கத்துவம் கிடையாது. ப்ரகரணாதிகள் இல்லாதிருப்பதே அதன் காரணமாகும்.

அவதாரிகாபாஷ்யம்.—"தத்ஸ்ருதே:" என்றதால் யாதொன்று சொல்லப் பட்டதோ இவ்விஷயத்திற் சொல்லுகிறோம்—

(ஸூ) அஸார்வத்ரிகீ (10)

(ப—ரை) **असार्वत्रिकी** (அஸார்வத்ரிகீ)="வித்யையுடன் எதைச் செய்கிறானோ" என்ற சுருதியானது எல்லாவித்யையையும் விஷயமாகக்கொண்டதன்று. (10)

பாஷ்யம்.—"வித்யையுடன் எதைச் செய்கின்றானோ" என்றஸ்ருதியானது எல்லாவித்யையையும் விஷயமாகக் கொண்டதன்று. ஏன்? ப்ரகிருதமான வித்யையுடன் ஸம்பந்தமிருப்பதே அதன் காரணமாகும்". "ஓம் என்ற இந்த உத்கீதாவயமான எழுத்தை ப்ரம்ஹமாக உபாஸிப்பாயாக" என்றவிடத்தில் உத்கீதவித்யையானது ப்ரகிருதமாக விருக்கிறது. (10) (எ—று)

(ஸூ) விபாக: சதவத் (11)

(ப—ரை) **विभागः** (விபாகஃ)=வித்யைவேறு புருஷனையும், கர்மாவானது வேறு புருஷனையும் தொடருகிறது எனப் பிரித்துப்பொருள் கொள்ளவேண்டும். **शतवत्** (சதவத்)=நூறை இருவருக்குக் கொடு என்ற விடத்தில் ஒருவனுக்கு ஐம்பதும் மற்றவனுக்கு ஐம்பதுமாகப் பிரித்துக்கொடுக்கப் படுவது எவ்விதமோ அவ்விதமே இங்குங் காண்க. (11) (எ—று)

பாஷ்யம்.—"அவனை (பரலோகஞ் செல்லுகின்றவனை) வித்யையும் கர்மாவும்

वचनमस्वातन्त्र्ये विद्याया लिङ्गमिति तत्प्रत्युच्यते। विभागोऽत्र द्रष्टव्यो विद्यान्यं पुरुषमन्वारभते कर्मान्यमिति। शतवत्। यथा शतमाभ्यां दीयतामित्युक्ते विभज्य दीयते पञ्चाशदेकस्मै पञ्चाशदपरस्मै तद्वत्। नचेदं समन्वारम्भवचनं मुमुक्षुविषयम् 'इति नु कामयमानः' (बृ० ४।४।६) इति संसारिविषयत्वोपसंहारात्। 'अथाकामयमानः' (बृ० ४।४।६) इति च मुमुक्षोः पृथगुपक्रमात्। तत्र संसारिविषये विद्या विहिता प्रतिषिद्धा च परिगृह्यते विशेषाभावात्। कर्मापि विहितं प्रतिषिद्धं च यथाप्राप्तानुवादित्वात्। एवं सत्यविभागेनापीदं समन्वारम्भवचनमवकल्पते ॥ ११ ॥

பின்தொடருகின்றன" என்ற இந்தத் தொடர்பு கூறும் வசனமானது வித்யை ஸ்வதந்திரமன்று என்பதில் அறிகுறியாகும் என யாதொன்று சொல்லப்பட்டதோ அது மறுக்கப்படுகிறது. வித்யை வேறுபுருஷனையும், கர்மம் வேறுபுருஷனையும் தொடருகிறது என இவ்விஷயத்தில் பிரித்துப் பொருள் கொள்ளல் வேண்டும். நூறுபோலவாம். நூறை இருவர்க்குக் கொடு என்றவிடத்தில் ஐம்பது ஒருவனுக்கும், ஐம்பது மற்றவனுக்குமாகப் பிரித்துக் கொடுக்கப்படுவது எவ்விதமோ அவ்விதமேயாம். *தொடர்பு கூறுமிந்த வசனமானது முமுக்ஷுவை விஷயமாகக் கொண்டதன்று. "இவ்விதமன்றோ காமமுள்ளவன் செல்லுகிறான்" என்பதாய் ஸம்ஸாரிவிஷயமான முடிவு காணப்படுவதே அதன் காரணமாகும்." பிறகுக் காமமில்லாதவனைச் சொல்லுகிறோம்" என முமுக்ஷுவுக்குத் தனியாக உபக்கிரமம் (ஆரம்பம்) காணவும் படுகிறது. அவ்விடத்தில் (வித்யாகர்மாணீ என்ற வாக்கியத்தில்) ஸம்ஸாரிவிஷயத்தில் சாஸ்திரவிஹிதமான உத்கீதாதி வித்யையும், சாஸ்திரநிஷித்தமான நக்ன (இடையில் வஸ்திரமற்ற) ஸ்திரீயை த்யானித்தல் ரூபமாயுள்ள வித்யையும் வித்யா" என்றதால் பொதுவாகச் சொல்லப்படுகிறது. தனித்துச் சொல்லக்கூடிய விசேஷமெதுவு மில்லாதிருப்பதே அதன் காரணமாகும். அங்கு கூறிய கர்மாவும் சாஸ்திர விஹிதமும் சாஸ்திரநிஷித்தமுமே தான் கொள்ளப்படும். (1) வேறு பிரமாணத்தால் கிடைத்ததை அந்த வசனம் அனுவாதஞ் செய்வதே அதன் காரணமாகும். இவ்விதமிருப்பதால் இந்தத் தொடர்பு கூறும் வசனமானது (வித்யாகர்மங்களுக்கு) விபாகமில்லாமலேயே பொருந்தக் கூடியதாகவாகிவிடலாம். (11)

---

* தம் வித்யாகர்மணீ என்ற வாக்கியத்துக்கு முமுக்ஷு விஷயத்வத்தை அங்கீகரித்து ஸூத்திரக்காரரால் பதில் கூறப்பட்டது. பாஷ்யகாரரவர்கள் இந்த வாக்கியத்துக்கு முமுக்ஷு விஷயத்வமே கிடையாதென்பதை இதனால் விளக்குகிறார்.

(1) "அவனை வித்யாகர்மங்கள் பின்தொடருகின்றன" என்றவிடத்திலுள்ள வித்யாபதத்தால் சாஸ்திரவிஹிதமாயும் சாஸ்திர நிஷித்தமாயுமுள்ள வித்யைகளும், கர்ம என்ற பதத்தால் சாஸ்திரவிஹிதமும் நிஷித்தமுமான கர்மங்களுமே சொல்லப்படுகின்றன. ஆகவே விஹிதமாகவோ "நிஷித்தமாகவோ உள்ள வித்யாகர்மங்களுடன் கூடினவன் அததற்குற்ற பலனையனுபவிக்கச் செல்லுகிறான்" என்று சொன்னதாக ஏற்படுமேயல்லாது இன்ன வித்யையுடன், அல்லது இன்னகர்மத்துடன் எனத்தனித்துப் பொருள் கொள்ள அங்கு இடமில்லை என்பது கருத்து.

यच्चैतत् तद्वतो 'विधानात्' (ब्र० सू० ३।४।६) इत्यत उत्तरं पठति—

अध्ययनमात्रवतः ॥ १२ ॥

'आचार्यकुलाद्वेदमधीत्य' इत्यत्राध्ययनमात्रस्य श्रवणादध्ययनमात्रवत एव कर्मविधिरित्यध्यवस्यामः। नन्वेवं सत्यविद्यत्वादनधिकारः कर्मसु प्रसज्येत। नैष दोषः। न वयमध्ययनप्रभवं कर्मावबोधनमधिकारकारणं वारयामः किं तर्ह्यौपनिषदमात्मज्ञानं स्वातन्त्र्येणैव प्रयोजनवत्प्रतीयमानं न कर्माधिकारकारणतां प्रतिपद्यत इत्येतावत्प्रतिपादयामः। यथा च न क्रत्वन्तरज्ञानं क्रत्वन्तराधिकारेणापेक्ष्यत एवमेतदपि द्रष्टव्यमिति ॥ १२ ॥

यदप्युक्तं 'नियमाच्च' (ब्र० सू० ३।४।७) इत्यत्राभिधीयते—

नाविशेषात् ॥ १३ ॥

அவதாரிகாபாஷ்யம்.—"தத்வதோ விதாநாத்" என்றதால் யாதொன்று சொல்லப்பட்டதோ இவ்விஷயத்தில் பதில் சொல்லுகிறார்.—

(ஸூ) அத்யயநமாத்ரவத: (12)

(ப—ரை) अध्ययनमात्रवतः (அத்யயநமாத்ரவத:)="ஆசாரியனுடைய வீட்டினின்றும் வேதத்தை அத்யயநஞ்செய்து" என்றவிடத்தில் அத்யயநம் மட்டும் செய்தவனுக்குக் கர்மமானது விதிக்கப்பட்டிருக்கிறது. (12) (எ—று)

பாஷ்யம்.—"ஆசாரியனுடைய வீட்டினின்றும் வேதத்தை அத்யயநஞ் செய்து" என்றவிடத்தில் அத்யயநம் மட்டுமே சொல்லப்படுவதால் அத்யயநம் மட்டுமுள்ளவனுக்கே கர்மம் விதிக்கப்படுகிறது எனவுறுதிசெய்கிறோம்.

சங்கை—இவ்விதமாயின் வித்யையில்லாதிருப்பதுபற்றிக் கர்மாதிகாரமின்மை ப்ராப்த்தமாகுமன்றோ? எனின்.

உத்தரம்—இந்தத் தோஷமில்லை. அத்யயனத்தினின்றுமுண்டாகும் கர்மாவபோதனமானது கர்மாதிகாரத்துக்குக் காரணம் என்பதை நாம் மறுக்கவில்லை. பின்னையோ வென்னில் உபநிடதமூலமுண்டாகும் ஆத்மக்ஞானமானது ஸ்வதந்திரமாகவே ப்ரயோஜனமுள்ளதாகக் காணப்படுவதால் அது கர்மாதிகாரத்துக்குக் காரணமாக விருக்குந்தன்மையை அடையமாட்டாது என இவ்வளவுமட்டுமே சொல்லுகிறோம். வேறுயாகத்தைப் பற்றிய க்ஞானமானது வேறுயாகத்தின் அதிகாரத்துக்காக அபேக்ஷிக்கப் படுவதில்லை என்பது எவ்விதமோ இவ்விதமே இந்த ப்ரம்ஹக்ஞானமு மாகும் எனக்கண்டு கொள்ளவேண்டும் என்றும்.

அவதாரிகாபாஷ்யம்.—"நியமாத்ச" என்றதால் யாதொன்று சொல்லப்பட்டதோ இவ்விஷயத்திற் சொல்லப்படுகிறது.—

(ஸூ) ந அவிசேஷாத். (13)

(ப—ரை) न (ந)=முற்கூறிய நியமம் பொருந்தாது. अविशेषात् (அவிசேஷாத்)=வித்வானுக்கென விசேஷமெதுவுமில்லாதிருப்பதே அதன் காரணமாகும்.

'कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेत्' (ईशा० २) इत्येवमादिषु नियमश्रवणेषु न विदुष इति विशेषोऽस्ति। अविशेषेण नियमविधानात्॥ १३॥

स्तुतयेऽनुमतिर्वा ॥ १४ ॥

'कुर्वन्नेवेह कर्माणि' (ईशा० २) इत्यत्रापरो विशेष आख्यायते। यद्यप्यत्र प्रकरणसामर्थ्याद्विद्वानेव कुर्वन्निति संबध्येत तथापि विद्यास्तुतये कर्मानुज्ञानमेतद्द्रष्टव्यम्। 'न कर्म लिप्यते नरे' (ईशा० २) इति हि वक्ष्यति। एतदुक्तं भवति। यावज्जीवं कर्म कुर्वत्यपि विदुषि पुरुषे न कर्म लेपाय भवति विद्यासामर्थ्यादिति तदेवं विद्या स्तूयते॥ १४॥

कामकारेण चैके ॥ १५ ॥

अपिचैके विद्वांसः प्रत्यक्षीकृतविद्याफलाः सन्तस्तदवष्टम्भात्फलान्तरसाधनेषु प्रजादिषु प्रयोजनाभावं परामृशन्ति। कामकारेणेति श्रुतिर्भवति वाजसनेयिनाम् 'एतद्ध स्म

பாஷ்யம்.—"குர்வங்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத்" என்றதாதி நியமஶ்ரவணங்களில் வித்வானுக்கு என விசேஷமெதுவும் காணப்படவில்லை. பொதுவாகவே நியமம் காணப்படுகிறது. (13) (எ—று)

(ஸூ) ஸ்துதயே அநுமதிர் வா (14)

(ப—ரை) **वा** (வா)=அல்லது [ப்ரகரணத்தைக் கொண்டு வித்வான்ஸம்பந்தப் படுத்தப்படுவானுயின்] அப்பொழுது **स्तुतये** (ஸ்துதயே)=வித்யையை ஸ்துதிக்க வேண்டி **अनुमतिः** (அநுமதிः)=வித்வானுக்குக் கர்மாவில் ஸம்மதி கொடுக்கப்பட்டது. (14) (எ—று)

பாஷ்யம்.—"குர்வங்நேவேஹ கர்மாணி" என்றவிடத்தில் வேறுவிசேஷமானது சொல்லப்படுகிறது. இவ்விடத்தில் ப்ரகரணஸாமர்த்தியத்தை யொட்டி வித்வானே (ப்ரம்ஹக்ஞானியே) "குர்வங்" என்றதில் ஸம்பந்தப்படுத்தப்படலாமாயினும் வித்யையை ஸ்துதிக்கவேண்டியே இது கர்மாவின் ஸம்மதி எனக் கண்டு கொள்ளவேண்டும். "நகர்ம லிப்யதே நரே" என்றல்லவோ சுருதிசொல்லப்போகிறது. இவ்விதஞ் சொல்லப்பட்டதாக வாகிறது. வித்வானுன புருஷன் உயிருள்ளவரை கர்மத்தைச் செய்தபோதிலும் வித்யையின் ஸாமர்த்தியத்தினுல் கர்மமானது பந்தத்தையும் பொருட்டு அவனுக்கு ஆவதில்லை என்பதாய் அது இவ்விதம் ஸ்துதிக்கப்படுகிறது. (14) (எ—று)

(ஸூ) காமகாரேணச ஏகே (15)

(ப—ரை) **एके** (ஏகே)=தத்வஸாக்ஷாத்காரத்தையடைந்த முக்கியாதிகாரிகள் **कामकारेण च** (காமகாரேண ச)=தமதிஷ்டப்படி வேறுபலத்துக்கு ஸாதனங்களான ப்ராஜாதிகளில் பயனின்மையை யனுபவிக்கின்றனர். (15) (எ—று)

பாஷ்யம்.—மேலும் சிலவித்வான்கள் வித்யாபலனைக் கண்கூடாகக் கண்டவர்களாய்க் கொண்டு அந்தவித்யையின் பிடிப்பால் வேறுபலன்களுக்கு ஸாதனங்களான ப்ரஜைமுதலியவற்றில் ப்ரயோஜனமின்மையை அனுபவிக்கின்றனர். "காம

वै तत्पूर्वे विद्वांसः प्रजां न कामयन्ते किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्माऽयं लोकः' (बृ० ४। ४। २२) इति। अनुभवारूढमेव च विद्याफलं न क्रियाफलवत्कालान्तरभावीत्यसकृदवोचाम। अतोऽपि न विद्यायाः कर्मशेषत्वं नापि तद्विषयायाः फलश्रुतेरयथार्थत्वं शक्यमाश्रयितुम् ॥ १५ ॥

उपमर्दं च ॥ १६ ॥

अपि च कर्माधिकारहेतोः क्रियाकारकफललक्षणस्य समस्तस्य प्रपञ्चस्याविद्याकृतस्य विद्यासामर्थ्यात्स्वरूपोपमर्दमामनन्ति—'यत्र वा अस्य सर्वमात्मैवाभूत्तत्केन कं पश्येत्केनकं जिघ्रेत्' (बृ० २। ४। १४) इत्यादिना। वेदान्तोदितात्मज्ञानपूर्विकां तु कर्माधिकारसिद्धिं प्रत्याशासानस्य कर्माधिकारोच्छित्तिरेव प्रसज्येत। तस्मादपि स्वातन्त्र्यं विद्यायाः ॥ १६ ॥

ऊर्ध्वरेतःसु च शब्दे हि ॥ १७ ॥

காரேண" என்றதால் வாஜஸநேயிகளுடைய சுருதியு மிருக்கிறதெனச்சொல்லப் படுகிறது. அதாவது: "அந்த இந்த ப்ரம்ஹத்தை யறிந்தமுன்னுள்ள வித்வான்கள் அதாவது:-ப்ரம்ஹக்ஞானிகள், எந்த நமக்கு ஆத்மா அபரோக்ஷமாக இருக்கிறதோ இந்த ஆத்மாவே லோகமோ=புருஷார்த்தமோ, அந்த நாம் ப்ரஜையினால் என்ன செய்யப் போகிறோம் எனவாலோசித்து ப்ரஜையை விரும்புவதில்லை. அதாவது: ப்ரஜாதி ஸாத்யமான கர்மாவை விட்டுவிடுகின்றனர் என்றும். மேலும் வித்யா பலனானது அநுபவாரூடமே யொழிய கர்மபலன்போல் காலாந்தரத்தில் வரக்கூடிய தல்ல என அடிக்கடிச் சொல்லியுமிருக்கிறோம். ஆனதுபற்றியும் வித்யையானது கர்மாவுக்கு அங்கமானதன்று. வித்யாவிஷயமான பலன் சொல்லும் சுருதி உண்மையானதன்று என்று சொல்லவும் முடியாது. (15) (எ-று)

(ஸூ) உபமர்த்தம் ச (16)

(ப-ரை) சுருதியானது கிரியாகாரகபலரூபமானதும் அவித்யாகிருதமுமான ஸமஸ்தப்ரபஞ்சத்துக்கும் उपमर्दं च (உபமர்த்தம் ச)=ஸ்வரூபநாசத்தைச் சொல்லியு மிருக்கிறது. (16) (எ-று)

பாஷ்யம்.—மேலும் கர்மாதிகாரத்துக்கு ஹேதுவானதும், கிரியாகாரக பலரூபமானதும், அவித்யாமூல மேற்பட்டதுமான ஸமஸ்தப்ரபஞ்சத்துக்கும் வித்யா ஸாமர்த்தியத்தினால் ஸ்வரூபநாசத்தைச் சுருதி சொல்லியுமிருக்கிறது. அதாவது:- "எந்நிலையில் இவனுக்கு எல்லாம் ஆத்மாவாகவே ஆகுமோ அதபோழ்து எந்த ஸாதனத்தைக் கொண்டு எந்த ஸாத்யத்தைப் பார்ப்பான். எந்த ஸாதனத்தைக் கொண்டு எந்த ஸாத்யத்தை முகருவான்" என்றதாதியாம். வேதாந்தத்திற் சொல்லப்பட்ட ஆத்மக்ஞானத்தை முன்னிட்டு கர்மாதிகார ஸித்தியில் பேராவல் கொள்ளுபவனுக்குக் கர்மாதிகாரத்துக்கே நாசந்தான் ப்ரஸக்தமாகும். ஆனதுபற்றியும் வித்யையானது ஸ்வதந்திரமாகவே தானாகும். (16) (எ-று)

ऊर्ध्वरेतःसु चाश्रमेषु विद्या श्रूयते। नच तत्र कर्माङ्गत्वं विद्याया उपपद्यते। कर्माभावात्। नह्यग्निहोत्रादीनि वैदिकानि कर्माणि तेषां सन्ति। स्यादेतत्। ऊर्ध्वरेतस आश्रमा न श्रूयन्ते वेद इति तदपि नास्ति। तेऽपि हि वैदिकेषु शब्देष्ववगम्यन्ते 'त्रयो धर्मस्कन्धाः' (छा० २।२३।१) 'ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते' (छा० ५।१०।१), 'तपःश्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये' (मु० १।२।११), 'एतमेव प्रव्राजिनो लोकमिच्छन्तः प्रव्रजन्ति' (बृ० ४।४।२२), 'ब्रह्मचर्यादेव प्रव्रजेत्' (जा० ४) इत्येवमादिषु। प्रतिपन्नाप्रतिपन्नगार्हस्थ्यानामपाकृतानपाकृतर्णत्रयाणां चोर्ध्वरेतस्त्वं श्रुतिस्मृतिप्रसिद्धम्। तस्मादपि स्वातन्त्र्यं विद्यायाः ॥१७॥

(ஸூ) ஊர்த்வரேதஸ்ஸு ச சப்தே ஹி (17)

(ப—ரை) ऊर्ध्वरेतः सु च (ஊர்த்வரேதஸ்ஸு ச)=ஸன்னியாஸிகளிடத்திலும் வித்தையானது சுருதியிற் கூறப்படுகிறது. அந்த ஸன்னியாஸாஶ்ரமமோ शब्दे हि (ஶப்தேஹி)=சுருதியிலும் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ. (17) (எ—று)

பாஷ்யம். — ஊர்த்வரேதஸ்ஸுகளான ஆஶ்ரமங்களில் வித்யையானது சுருதியில் காணப்படுகிறது. அங்கு வித்யைக்குக் கர்மாங்கத்வமானது பொருந்தவும் மாட்டாது. கர்மா இல்லாதிருப்பதாலென்க. அக்னிஹோத்ரம் முதலிய வைதிககர்மங்கள் அவர்களுக்கில்லையன்றோ.

இஃதிருக்கட்டும். ஊர்த்வரேதஸ்ஸுகளான ஆஶ்ரமங்கள் வேதத்தில் சொல்லப்படவில்லை என்றாலோ அதுவுமில்லை. அந்த ஆஶ்ரமங்களும் "தர்மஸ்கந்தங்கள் (கர்மத்தை ப்ரதானமாகவுடைய ஆஶ்ரமங்கள்) மூன்று. நான்காவது ப்ரம்ஹஸம்ஸ்தன்" என்றும், "யாதொரு இவர் அரண்யத்தில் (வேதாந்தவிசாரத்துக்கு விரோதியான ஜனமற்ற விடத்தில்) சிரத்தை தபஸ் இவற்றுடன் கூடினவர்களாய் ப்ரம்ஹானுஸந்தானஞ் செய்கின்றனரோ" என்றும், "எவர்கள் தபஸ் ஶ்ரத்தைஇவற்றுடன் கூடினவர்களாய் அரண்யத்தில் வஸிக்கின்றனரோ" என்றும் "துறவிகள் இதே லோகத்தை (ஆத்மானுபவத்தை) இச்சித்துக் கொண்டே துறக்கின்றனர்" என்றும், ப்ரம்ஹ சர்யத்தினின்றுமே துறவியாகலாம்" என்றும் முதலிய வைதிகங்களான சப்தங்களில் அறியவும் படுகின்றன. கிருஹஸ்தாஶ்ரமத்தையடைந்தோ அடையாமலோ மூன்றுகடன்களை போக்கியோ போக்காமலோ உள்ளவர்க்கும் ஸன்னியாஸாஶ்ரமமானது சுருதிஸ்மிருதிகளில் ப்ரஸித்தமாகக் காணக் கிடக்கிறது. ஆனதுபற்றியும் வித்யையானது ஸ்வதந்திரமாகவே தானுகிறது.

ஒன்றுவது புருஷார்த்தாதிகரணம் முற்றிற்று.

பராமர்சாதிகரணம். (2)

(அ—கை) ப்ரம்ஹசாரி என்றும், கிருஹஸ்தன் என்றும், வாநப்ரஸ்தன் என்றும், ஸன்யாஸி என்றும் ஆஶ்ரமிகள் நான்குவிதமாவர். அவர்களுள் காயத்

ரன், ப்ராம்ஹறன் ப்ராஜாபத்யன், ப்ருஹறன் என ப்ரம்ஹசாரி நான்குவிதமாவான். அந்நால்வருள் உபநயநத்துக்குப் பிறகு எவன் உப்பு ஓரப்பில்லாமல் ஆஹாரஞ் செய்து கொண்டு மூன்றுதினங்கள் காயத்ரியை அத்யயனஞ் செய்கின்றுனே அவன் **காயத்ரன்** என்ற ப்ரம்ஹசாரியாகிறுன். எவன் குருவினிடமிருந்து வேதத்தைக் கிரஹிக்கும் வரைப்ரப்ஹசர்யத்தை யனுஷ்டிக்கின்றுனே அவன் **ப்ராம்ஹறன்** என்ற ப்ரம்ஹசாரியாவான். ஒருவருஷம் வேதவ்ரதானுஷ்டானஞ் செய்பவன் **ப்ராஜாபத்யன்** என்ற ப்ரம்ஹசாரியாவான். மரணம்வரை குருகுலத்தில் வஸிப்பவன் நைஷ்டிகன் என்ற வேறுபெயரால் அழைக்கப்படுகின்ற **ப்ருஹறன்** என்ற ப்ரம்ஹசாரியாவான். அதுபோலவே வார்த்தாகன், யாயாவரன், சாலீனன், கோரஸன்யஸிகன் எனக் கிருஹஸ்தன் நான்குவிதமாவான். அவர்களுள் கிருஷி, பசுஸம்ரக்ஷணம் முதலிய வைஶ்யாதிகளின் விருத்தியினுல் ஜீவித்துக்கொண்டு நித்யகர்மங்களை அநுஷ்டிப்பவன் **வார்த்தாகன்** என்ற கிருஹஸ்தனுவான். எவரையும் யாசிக்காதவனுயும் யாகஞ்செய்வித்தல், ஓதுவித்தல், ப்ரதிக்ரஹம் வாங்குதல் இவற்றில் பற்றில்லாதவனுயு முள்ளவன் **யாயாவரன்** என்ற கிருஹஸ்தனுவான் யாஜநம், அத்யாபனம் ப்ரதிக்ரஹம் யாகஞ்செய்தல், அத்யயனஞ் செய்தல், தானங் கொடுத்தல் என்ற ஆறுகர்மங்களுமுள்ளவனும் அவற்றுள் யாகஞ் செய்வித்தல் ஓதுவித்தல் ப்ரதிக்ரஹம் வாங்குதல் இவற்றை விருத்தியாகக் கொண்டு பொருள் தேடுபவனுமானவன் **சாலீனன்** என்ற கிருஹஸ்தனுவான். பூமியினின்றுமெடுக்கப்பட்டதும் நன்குபரிசுத்தஞ் செய்யப்பட்டதுமான தீர்த்தங்களைக் கொண்டு காரியம் செய்பவனும் ஒவ்வொருதினமும் உஞ்சவிருத்தி யெடுப்பவனும் கிராமத்தில் வாஸஞ் செய்பவனுமானவன் **கோரஸன்யஸீகன்** என்ற கிருஹஸ்தனுவான். அதுபோலவே வைகானஸன், ஔதும்பரன், வாலகில்யன், பேனபன் என்ற வானப்ரஸ்தன் நான்குவிதமாவான். அவர்களுள்—உழுது பயிரிடாததும் கிராமத்துக்கு வெளியிலுள்ள விடங்களிலுண்டானது மானவைகளால் அக்னிஹோத்ரம் முதலியவற்றைச் செய்கின்றவன் **வைகானஸன்** என்ற வானப்ரஸ்தனுவான். காலையிலெழுந்ததும் எந்தத் திக்கைப் பார்க்கின்றுனே அந்தத்திக்கிலுண்டான அத்திப்பழம், இலந்தைப் பழம், நீவாரம் (சென்னெல்) ஶ்யாமை முதலியவற்றைக் கொண்டு கர்மத்தைச் செய்பவன் **ஔதும்பரன்** என்ற வானப்ரஸ்தனுவான். ஜடாவல்கலத்தைத் தரித்துக்கொண்டும் எட்டுமாஸங்கள் ஜீவனத்துக்கு வேண்டிய வற்றை ஸம்பாதித்துக் கொண்டும் மீதமுள்ள நான்கு மாஸங்களில் தேடியவற்றைக் கொண்டு ஜீவித்துக் கொண்டும் அதிலும் கார்த்திகை மாஸத்தில் முன்னர் கிரஹிக்கப்பட்ட புஷ்பம் பழம் முதலியவற்றைப் பரித்தியாகஞ் செய்தும் வருபவன் **வாலகில்யன்** என்ற வானப்ரஸ்தனுவான். தானுக உதிர்ந்த காய்ந்த சிரகு பழம் இவற்றைக் கொண்டு ஜீவிப்பவனும் எங்கேனும் ஓரிடத்தில் வாஸஞ் செய்து கொண்டும் கர்மானுஷ்டானஞ் செய்பவன் **பேனபன்** என்ற வானப்ரஸ்தனுவான். அதுபோலவே குடீசகன், பஹூதகன், ஹம்ஸன், பரமஹம்ஸன் என ஸன்யாஸிகள் நான்குவிதமாவர். அவர்களுள் தனது புத்திரனது வீட்டிலேயே பிக்ஷாடனஞ் செய்துகொண்டு த்ரிதண்டிகளாயுள்ளவர் **குடீசர்** என்ற ஸன்னியாஸியாவர். உரி, கமண்டலு, பாதுகை, ஜபாஸனம், சிகை, யக்ஞோபவீதம்,

२ परामर्शाधिकरणम् । सू० १८-२०

परामर्शं जैमिनिरचोदना चापवदति हि ॥ १८ ॥

नास्त्यूर्ध्वरेताः किं वास्ति नास्त्यसावविधानतः । वीरघातो विधेः क्लृप्तावन्धपंग्वादिका स्मृतिः ॥ १ ॥
अस्त्यपूर्वविधेः क्लृप्तिर्वीरहाऽनग्निको गृही । अन्धादेः पृथगुक्तत्वात् स्वस्थानां श्रूयते विधिः ॥ २ ॥

கோவணம், காஷாயவஸ்திரம் இவையுள்ளவர்களாய்க் கொண்டும் தீர்த்தாடனஞ் செய்துகொண்டும், பிக்ஷாடனஞ் செய்துகொண்டும் ஆத்மாவைப் பிரார்த்தித்துக் கொண்டும் (ஆத்மவிசாரம் செய்துகொண்டும்) இருப்பவர் பஹூதகர் என்ற ஸன்னியாஸியாவர். ஒரே தண்டமுள்ளவர்களும் சிகையைத் தவிர்த்து யக்ஞோ பவீதத்தைத் தரிப்பவர்களும், உரி கமண்டலு இவற்றைத் தரிப்பவர்களும், ஒரு கிராமத்தில் ஒரு இரவுமட்டும் வஸிப்பவர்களும், கிருச்ரம் சாந்திராயணம் முத லிய விரதானுஷ்டானஞ் செய்பவருமாயுள்ளவர் ஹம்ஸர் என்ற ஸன்னியாஸி யாவர். ஒரே தண்டத்தைமட்டும் தரிப்பவரும் சிகை யக்ஞோபவீதம் இவையற் றவரும், எல்லாக் கர்மங்களையும் விதிபூர்வகமாகப் பரித்யாகஞ் செய்தவரும் ஆத் மானுஸந்தானத்திலீடுபட்ட வருமாயுள்ளவர் பரமஹஸம் என்ற ஸன்னியாஸி யாவர். எனக் காண்வாயன ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆயினும் சுருதியில் "த்ரயோதர்மஸ்கந்தா:" (தர்மப்ரதானங்களான ஆஶ்ரமங்கள் மூன்று) என்ற விடத்திலுள்ள "ப்ரம்ஹஸம்ஸ்த: அமிருதத்வமேதி" என்றதால் தர்மப்ர தானங்களான மூன்று ஆஶ்ரமங்களைக் காட்டிலும் நான்காவதான ஸன்னியாஸா ஶ்ரமமானது விதிக்கப்படுகிறதா? அல்லது இல்லையா? என ஸந்தேஹம் வர அதைப் போக்கி நான்காவதான ஸன்யாஸாஶ்ரமமானது விதிக்கத்தான் படுகிறது என்பதைச் சொல்லவேண்டி 3 ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணம் ஆரம் பிக்கப்படுகிறது. அவற்றுள் முதலாவது பூர்வபக்ஷ ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) பராமர்சம் ஜைமிநி: அசோதனச அபவததி ஹி (18)

(ப-ரை) **जैमिनिः** (ஜைமினி:)=ஜைமினி என்ற ஆசிரியர் **परामर्शम्** (பராமர் ஶம்)="த்ரயோதர்மஸ்கந்தா:" என்றவிடத்தில் மூன்று ஆஶ்ரமங்களின் அனுவா தம் மட்டும் செய்யப்படுகிறதே யொழிய அவற்றின் விதி சொல்லப்படவில்லை என்கிறார். ஏன்? **अचोदना** (அசோதன)=இவ்விடத்தில் விதியைச் சொல்லும் லிங்முதலியன இல்லாதிருப்பதா லென்க. மேலும், **अपवदति हि** (அபவததி ஹி)= ப்ரத்யக்ஷ ஶ்ருதியானது வேறு ஆஶ்ரமத்தை மறுத்து மிருக்கின்றதன்றோ. (18)

குறிப்பு—"த்ரயோதர்மஸ்கந்தா:" என்ற விடத்தில் ப்ரம்ஹசர்யம் முதலிய ஆஶ்ரமங்களுக்கே விதியில்லாதிருக்கும் பொழுது அதே வாக்கியத்திலுள்ள "ப்ர ம்ஹஸம்ஸ்தஃ" என்பது ஸன்யாஸத்தைச் சொல்லவந்தது என்பதற்கு இடமேது? அத்துடன் வேறு ப்ரத்யக்ஷ ஶ்ருதியானது ஸன்யாஸாஶ்ரமத்தை மறுத்துமிருப் பதிலிருந்து ஸன்யாஸாஶ்ரமமே சுருதிமூலம் ஏற்படுவதற்கிடமில்லை என்பது ஜை மினியாசிரியரின் கருத்தென்றேற்பட்டது. (எ-று)

लोककाम्याश्रमी ब्रह्मनिष्ठामर्हति वा न वा । यथावकाशं ब्रह्मैव ज्ञातुमर्हत्यवारणात् ॥ १ ॥
अनन्यचित्तता ब्रह्मनिष्ठाऽसौ कर्मठे कथम् । कर्मत्यागी ततोब्रह्मनिष्ठामर्हति नेतरः ॥ २ ॥

'त्रयो धर्मस्कन्धाः' (छा० २। २३। १) इत्यादयो ये शब्दा ऊर्ध्वरेतसामाश्रमाणां सद्भावायोदाहृता न ते तत्प्रतिपादनाय प्रभवन्ति । यतः परामर्शमेषु शब्देष्वाश्रमान्तराणां जैमिनिराचार्यो मन्यते न विधिम् । कुतः— नह्यत्र लिङादीनामन्यतमश्चोदनाशब्दोऽस्ति ।

வையாஸிக நியாயமாலை.

முதலாவது வர்ணகம்.

(க—ரை) ஊர்த்வரேதஸ் என்றதாற் சொல்லப்படும் ஸன்னியாஸாஶ்ரமமானது தனியாகவுண்டா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். விதிபோதகங்களான லிங்முதலியன இல்லாதிருப்பதாலும், விதியிருப்பதாகச் சொன்னால் வீரஹத்தி என்ற தோஷம் வருவதாலும் ஸன்யாஸாஶ்ரமத்தைச் சொல்லும் ஸ்மிருதியானது கர்மத்தில் அதிகாரம் பெறாத குருடர் நொண்டி இவர்களைப்பற்றி ஏற்பட்டதாலும் ஸன்னியாஸாஶ்ரமமே கிடையாது என்பது பூர்வபக்ஷம். இந்த வாக்கியத்தில் (1) அபூர்வவிதியானது இருப்பதாலும், கிருஹஸ்தனாக இருந்து அக்னிபரித்யாகஞ்செய்தவனுக்கே வீரஹத்தி என்ற தோஷம்வருமாதலாலும் பொட்டை நொண்டி முதலியோரைப் பற்றித்தனியாகச் சொல்லியிருப்பதாலும் ப்ரம்ஹஸம்ஸ்தர்களுக்கு (ஸன்யாஸிக்கு) விதியிருப்பதாகத் தானேற்படுகிறது என்பது ஸித்தாந்தம். (18) (எ—று)

இரண்டாவது வர்ணகம்.

லோகத்திற் காமனையுள்ளவன் ப்ரம்ஹநிஷ்டைக்கு அர்ஹனா? அல்லது அநர்ஹனா? என்பது ஸந்தேஹம். லோககாமனையுள்ளவன் கிடைத்த அவகாசத்துக்குத் தக்கபடி ப்ரம்ஹத்தை யறிவதற்கு அர்ஹனாகவே தானாகிறான். அதுகூடாதென மறுக்கப்படவுமில்லை. என்பது பூர்வபக்ஷம். வேறிடத்தில் சித்தத்தைச் செலுத்தாதிருத்தலே இந்த ப்ரம்ஹநிஷ்டையாவதால் அத்தகைய ப்ரம்ஹநிஷ்டையானது கர்மடனிடத்தில் ஸம்பவிக்க இடமேது. ஆகவே விதி பூர்வகமாகக் கர்மத்யாகஞ் செய்பவர் ப்ரம்ஹநிஷ்டையை யடைவாரே யொழிய மற்றவர் அதை அடையமாட்டார் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—ஊர்த்தவரேதஸ்ஸுகளான ஆஶ்ரமங்களின் இருப்பைக் காட்ட வேண்டி "த்ரயோதர்மஸ்கந்தா:" என்றதாதிகளான யாதொரு சப்தங்கள் உதாஹரிக்கப்பட்டனவோ அந்தசப்தங்கள் அந்த ஆஶ்ரமங்களைச் சொல்லச் சக்தியுள்ளனவன்று. ஜைமினி என்ற ஆசிரியர் அந்தச் சப்தங்களில் வேறு ஆஶ்ரமங்களின் அனுவாதத்தை எண்ணுகின்றாரே யன்றி அவைவிதிக்கப் படுவதாக எண்ணவில்லை. ஏன்? இவ்விடத்தில் விதிபோதகங்களான லிங்முதலியவற்றுள் (லிங், லோட், தவ்ய ப்ரத்யயங்களுள்) ஒருஶப்தமேனும் காணப்படாததே அதன்காரண

---

(1) அபூர்வவிதி, நியமவிதி பரிஸங்க்யாவிதி, என விதிகள் மூன்று. அவற்றுள் இங்கு அபூர்வவிதி சொல்லப்படுகிறது.

अर्थान्तरपरत्वं चैषु प्रत्येकमुपलभ्यते। त्रयो धर्मस्कन्धा इत्यत्र तावद्यज्ञोऽध्ययनं दानमिति प्रथमस्तप एव द्वितीयो ब्रह्मचार्याचार्यकुलवासी तृतीयोऽत्यन्तमात्मानमाचार्यकुलेऽवसादयन्सर्व एते पुण्यलोका भवन्तीति परामर्शपूर्वकमाश्रमाणामनात्यन्तिकफलत्वं सङ्कीर्त्यात्यन्तिकफलतया ब्रह्मसंस्थता स्तूयते—'ब्रह्मसंस्थोऽमृतत्वमेति' (छा० २। २३। १) इति। ननु परामर्शेऽप्याश्रमा गम्यन्त एव। सत्यं गम्यन्ते। स्मृत्याचाराभ्यां तु तेषां प्रसिद्धिर्न प्रत्यक्षश्रुतेः। अतश्च प्रत्यक्षश्रुतिविरोधे सत्यनादरणीयास्ते भविष्यन्ति। अनधिकृतविषया वा। ननु गार्हस्थ्यमपि सहैवोर्ध्वरेतोभिः परामृष्टं यज्ञोऽध्ययनं दानमिति प्रथम इति। सत्यमेवं तथापि तु गृहस्थं प्रत्येवाग्निहोत्रादीनां कर्मणां विधानाच्छ्रुतिप्रसिद्धमेव हि तदस्तित्वम्। तस्मात्स्तुत्यर्थ एवायं परामर्शो न चोदनार्थः। अपिचापवदति

மாகும். இந்த ஶப்தங்களுள் ஒவ்வொன்றும் வேறுபொருளைக் கூறுவதாகவே காணவும் படுகிறது. முதலில் "த்ரயோதர்மஸ்கந்தா:" என்றவிடத்திலோ "யக்ஞம் அத்யயனம் தானம் என்பது முதலாவதாகும், தபஸ்ஸே இரண்டாவதாகும் ஆசாரியகுலவாஸியும் ஆசாரியகுலத்தில் முற்றிலும் தேஹத்தை யழிப்பவனுமான ப்ரம்ஹசாரி மூன்றாவதாகும். இவர்யாவரும் புண்ணியலோகத்தை யுடையவராகின்றனர்" என்றதால் அநுவாத பூர்வகமாய் ஆஶ்ரமாந்தரங்களுக்கு ஆத்யந்திகமானபலன் (மோக்ஷம்) இல்லை என்பதைச் சொல்லி ஆத்யந்திகபலனுள்ளதாயிருப்பது பற்றி ப்ரம்ஹ ஸம்ஸ்தத்துவமானது "ப்ரம்ஹஸம்ஸ்தன் அமிருதத்வத்தையடைகிறான்" என்றதால் (1) ஸ்துதிக்கப்படுகிறது.

சங்கை—அநுவாதம் செய்திருந்தபோதிலுங் கூட ஆஶ்ரமங்களின் தோற்றமேற்படத்தானே செய்கிறது எனின்?

உத்தரம்—தோற்றத்தை யடைவது உண்மைதான். ஸ்மிருதி ஆசாரம் இவை மூலம் அவற்றின் ஸித்தியேற்படுகிறதே யொழிய அவ்விஷயத்தில் ப்ரத்யக்ஷஶ்ருதியில்லை. ஆகவே ப்ரத்யக்ஷஶ்ருதிவிரோதம் வருங்கால் அவ்வாஶ்ரமங்கள் ஆதரிக்கத்தகாதனவாகவே ஆகின்றன. அல்லது கர்மாதிகாரம் பெறாதவர் விஷயமாகவாகவோ தானாகும்.

சங்கை—கிருஹஸ்தாஶ்ரமங்கூட "யக்ஞோத்யயனம் தானம் என்பது முதலாவதாகும்" என ஊர்த்வரேதஸ்ஸுகளுடன் கூடவே தான் அநுவதிக்கப்பட்டிருக்கிறது எனின்?

உத்தரம்—இது உண்மைதானாயினும் கிருஹஸ்தனைக் குறித்தே அக்னிஹோத்ராதிகளான கர்மங்களின் விதானம் காணப்படுவதால் கிருஹஸ்தாஶ்ரம மிருப்பது சுருதிப்ரஸித்தமாகவே தானிருக்கிறது. ஆகவே இந்த அனுவாதமானது ஸ்துதிக்குவேண்டி ஏற்பட்டதே யொழிய விதிப்பதற்கு வேண்டியன்று. மேலும் "எவன்

---

(1) "த்ரயோதர்மஸ்கந்தா:" என்ற சுருதியில் ப்ரம்ஹஸம்ஸ்ததையை ஸ்துதிக்க வேண்டி வேறுஆச்ரமங்கள் அநுவதிக்கப் படுகின்றனவே அன்றி அவைவிதிக்கப்படவில்லை என்பது கருத்து.

हि प्रत्यक्षा श्रुतिराश्रमान्तरम् 'वीरहा वा एष देवानां योऽग्निमुद्वासयते', 'आचार्याय प्रियं धनमाहृत्य प्रजातन्तुं मा व्यवच्छेत्सीः' (तै० १। ११। १), 'नापुत्रस्य लोकोऽस्तीति तत्सर्वे पशवो विदुः' इत्येवमाद्या। तथा 'ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते' (छा० ५। १०। १) 'तपःश्रद्धे ये ह्युपवसन्त्यरण्ये' (मुण्ड० १। २। ११) इति च देवयानोपदेशो नाश्रमान्तरोपदेशः। सन्दिग्धं चाश्रमान्तराभिधानम् 'तप एव द्वितीयः' (छा० २। २३। १) इत्येवमादिषु। तथा 'एतमेव प्रव्राजिनो लोकमिच्छन्तः प्रव्रजन्ति' (बृ० ४। ४। २२) इति लोकसंस्तवोऽयं न पारिव्राज्यविधिः। ननु ब्रह्मचर्यादेव प्रव्रजेदिति विस्पष्टमिदं प्रत्यक्षं पारिव्राज्यविधानं जाबालानाम्। सत्यमेवमेतत्। अनपेक्ष्य त्वेतां श्रुतिमयं विचार इति द्रष्टव्यम् ॥ १८ ॥

अनुष्ठेयं बादरायणः साम्यश्रुतेः ॥ १९ ॥

அக்னியை விடுகிறானோ இவன் தேவர்களுள் வீரஹத்தி செய்தவனாகவாகிறான்" என்றும், "ஆசாரியனுக்குப் பிரியமான தனத்தைக் கொடுத்து வேறு ஆஶ்ரமக் கிரஹணத்தினால் ப்ரஜையின் தொடர்பை யறுத்து விடாதிருப்பாயாக." என்றும், "புத்திரனில்லாதவனுக்கு லோகமில்லை. ஆகவே புத்திரனில்லாதவர் யாவரும் பசுக்களென்றே எண்ணுகின்றனர்" என்றுமாதிய ப்ரத்யக்ஷஶ்ருதியானது வேறு ஆஶ்ரமத்தை மறுத்துமிருக்கிறது. அவ்விதமே "யாதொரு இவர் அரண்யத்தி லிருந்துகொண்டு ஶ்ரத்தை, தபஸ் இவற்றுடன் கூடினவர்களாய் உபாஸிக்கின்றனரோ" என்பதும் "எவர் தபஸ் ஶ்ரத்தை இவற்றுடன் கூட அரண்யத்தில் வஸிக்கின்றனரோ" என்பதும் தேவயாநமார்க்கத்தி னுபதேசமேயொழிய ஆஶ்ர மாந்தரோபதேசமாக வாகாது. "தபஸ்ஸே இரண்டாவதாக வாகும்" எனறதாதி விடங்களிலோ ஆஶ்ரமாந்தரவிதானமானது ஸந்திக்தமாக (நிர்ணயிக்கமுடியாத தாக) வும் இருக்கிறது. அதுபோலவே "துறப்பவர் இதேலோகத்தை விரும்பின வராகவே துறக்கின்றனர்" என்பது லோகத்தைப் பற்றிய ஸ்துதியே யொழிய ஸன்யாஸத்தின் விதியன்று.

சங்கை—"ப்ரம்ஹ சரியத்தினின்றே துறவியாகவாக வேண்டும்" என்பதாய் ஜாபாலோபநிடதத்தில் ஸன்யாஸவிதானமானது கண்கூடாகவே தெளிவாகக் காணக் கிடக்கின்றதன்றோ எனின்?

உத்தரம்—இது உண்மைதான். இந்த ஶ்ருதியையபேக்ஷிக்காமலே இந்த விசாரமானது செய்யப்படுகிறது எனக் காணவேண்டும். (18) (எ—று)

(ஸூ) அனுஷ்டேயம் பாதராயண: ஸாம்யசுருதே: (19)

(ப—ரை) **बादरायणः** (பாதராயண:)=பாதராயணரென்ற ஆசிரியர் **अनुष्ठेयम्** (அநுஷ்டேயம்)=ஆஶ்ரமாந்தரமானது அனுஷ்டிக்கத்தக்கதென்றே எண்ணுகிறார். ஏன்? **साम्यश्रुतेः** (ஸாம்யஶ்ருதே:)=கிருஹஸ்தாஶ்ரமத்தைப் போலவே ஆஶ்ரமாந் தரத்தையும் சுருதிஅனுவாதம் செய்திருப்பதே அதன் காரணமாகும். (19)

अनुष्ठेयमाश्रमान्तरं बादरायण आचार्यो मन्यते। वेदे श्रवणात्। अग्निहोत्रादीनां चावश्यानुष्ठेयत्वात्तद्विरोधादनधिकृतानुष्ठेयमाश्रमान्तरमिति हीमां मतिं निराकरोति गार्हस्थ्यवदेवाश्रमान्तरमप्यनिच्छता प्रतिपत्तव्यमिति मन्यमानः। कुतः—साम्यश्रुतेः। समा हि गार्हस्थ्येनाश्रमान्तरस्य परामर्शश्रुतिर्दृश्यते 'त्रयो धर्मस्कन्धाः' (छा० २। २३। १) इत्याद्या। यथेह श्रुत्यन्तरविहितमेव गार्हस्थ्यं परामृष्टमेवमाश्रमान्तरमपीति प्रतिपत्तव्यम्। यथाच शास्त्रान्तरप्राप्तयोरेव निवीतप्राचीनावीतयोः परामर्श उपवीतविधिपरे वाक्ये। तस्मात्तुल्यमनुष्ठेयत्वं गार्हस्थ्येनाश्रमान्तरस्य। तथा 'एतमेव प्रव्राजिनो लोकमिच्छन्तः प्रव्रजन्ति, (बृ० ४। ४। २२) इत्यस्य वेदानुवचनादिभिः समभिव्याहारः। 'ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते' (छा० ५। १०। १) इत्यस्य च पञ्चाग्निविद्यया। यत्तूक्तम् 'तप एव द्वितीयः' (छा० २। २३। १) इत्यादिष्वाश्रमान्तराभिधानं सन्दिग्धमिति। नैष दोषः।

பாஷ்யம்.—ஆஸ்ரமாந்தரமும் அனுஷ்டிக்கத் தக்கதென்றே பாதராயணரென்ற ஆசிரியர் எண்ணுகிறார். வேதத்திற் சொல்லப்படுவதே அதன் காரணமாகும். அதாவது:—இஷ்டமில்லாதவனுங்கூட கார்ஹஸ்த்யத்தைப் போலவே வேறு ஆஸ்ரமத்தையும் ஒப்பியே தீரவேண்டும் என எண்ணுகின்றவராய் அக்னிஹோத்ராதிகள் அவஸ்யமனுஷ்டிக்கத் தக்கனவாக விருப்பதிலிருந்து அதற்கு விரோதப்படுவதுபற்றி வேறு ஆஸ்ரமமானது கர்மாவில் அதிகாரம் பெறாதவர்களாலேயே அனுஷ்டிக்கத்தக்கது என்ற இந்த எண்ணத்தை மறுத்துக் கூறுகிறார் என்றும். என்? ஸ்ருதிஸாம்யமிருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—கார்ஹஸ்த்யத்துடன் ஆஸ்ரமாந்தரத்தையும் அனுவாதஞ் செய்துள்ள "த்ரயோதர்மஸ்கந்தா:" என்றதாதியான ஸ்ருதியானது ஸமானமாகவே யன்றோ காணப்படுகின்றது. வேறு சுருதியில் விதிக்கப்பட்டதாகவே யுள்ள கார்ஹஸ்த்யமானது இவ்விடத்தில் அனுவதிக்கப்படுவது எவ்விதமோ இவ்விதமே ஆஸ்ரமாந்தரமுமெனக்கண்டு கொள்ளவேண்டும். வேறு சாஸ்திரத்திற் விதிக்கப்பட்ட (1) நிவீத ப்ராசீனவீதங்களுக்கு உபவீதத்தை விதிக்கும் வாக்கியத்தில் அனுவாதங்காணப் படுவது போலவே இங்கும் கொள்ளவேண்டும். ஆகவே அதற்கொப்பாகவே கிருஹஸ்தாஸ்ரமத்துடன் வேறுஆஸ்ரமத்துக்கு அனுஷ்டேயத்வமானது விதிக்கிறது. அதுபோலவே "துறவிகள் இதேலோகத்தை விரும்பிக் கொண்டே துறக்கின்றனர்" என்ற இதற்கு வேதாநுவசனாதிகளுடன் சேர்த்துப் பாடம் காணவும் படுகிறது. "எவர் அரண்யத்தில் ஸ்ரத்தை தபஸ் இவற்றுடன் கூடினவர்களாய் உபாஸிக்கின்றனரோ" என்ற வாக்கியத்துக்குப் பஞ்சாக்னி வித்யையுடன் சேர்த்துப் பாடமும் காணப்படுகிறது. "தபஸ்ஸே இரண்டாவதாக வாகும்" என்றதாதிவிடங்களில் வேறு ஆஸ்ரமாபிதானம் ஸந்திக்தம் என யாதொன்று சொல்லப்

---

(1) பூநூலைக் கழுத்தில் மாட்டித்தொங்கவிடுவது நிவீதமென்றும், வலதுதொளில் மாட்டி இடது தோள்பக்கமாகப் போட்டுக்கொள்வது ப்ராசீனவீதமென்றும் வழக்கமாக இடதுதோளில் மாட்டி வலது தோள்பக்கமாகத் தொங்கவிடுவது உபவீதமென்றும் சொல்லப்படும்.

निश्चयकारणसद्भावात्। 'त्रयो धर्मस्कन्धाः' (छां० २। २३। १) इति हि धर्मस्कन्धत्रित्वं प्रतिज्ञातम्। नच यज्ञादयो भूयांसो धर्मा उत्पत्तिभिन्नाः सन्तोऽन्यत्राश्रमसंबन्धात्त्रित्वेऽन्तर्भावयितुं शक्यन्ते। तत्र यज्ञादिलिङ्गो गृहाश्रम एको धर्मस्कन्धो निर्दिष्टो ब्रह्मचारीति च स्पष्ट आश्रमनिर्देशस्तप इत्यपि कोऽन्यस्तपःप्रधानादाश्रमाद्धर्मस्कन्धोऽभ्युपगम्येत। 'ये चेमेऽरण्ये' (छां० ५। १०। १) इति चारण्यलिङ्गाच्छ्रुद्धातपोभ्यामाश्रमगृहीतिः। तस्मात्परामर्शेऽप्यनुष्ठेयमाश्रमान्तरम्॥ १९॥

विधिर्वा धारणवत्॥ २०॥

विधिर्वाऽयमाश्रमान्तरस्य न परामर्शमात्रम्। ननु विधित्वाभ्युपगम एकवाक्यताप्रतीतिरुपरुध्येत प्रतीयते चात्रैकवाक्यता पुण्यलोकफलास्त्रयो धर्मस्कन्धा ब्रह्मसंस्थता

பட்டதோ, இந்தத்தோஷமில்லை. நிஸ்சயிக்கக்கூடிய காரணமிருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—"த்ரயோ தர்மஸ்கந்தா:" (தர்மப்ரதானங்களான ஆஸ்ரமங்கள் மூன்று) என்றதாலோ மூன்று தர்மஸ்கந்தங்கள் ப்ரதிக்ஞை செய்யப்பட்டன. யக்ஞாதிகளான வெகுதர்மங்கள் உத்பத்தியிலேயே வேறுபட்டனவாயிருந்து கொண்டு ஆஸ்ரமஸம்பந்தத்தைத் தவிர்த்து வேறுமுறையினால் மூன்றான எண்ணில் அந்தர்பாவஞ் செய்ய (அடக்கிக்கூற) முடியாதனவன்றோ? அவ்விடத்தில் யக்ஞாதிகளை அடையாளமாகக் கொண்ட கிருஹஸ்தாஸ்ரமமானது ஒருதர்மஸ்கந்தமாகக்கூறப்பட்டதாக வாகிறது. ப்ரம்ஹசாரி என்பதால் ஆஸ்ரமநிர்த்தேசமானது தெளிவாகவே யிருக்கிறது. "தப:" என்றதால் தபஸ்ஸை ப்ரதானமாகக் கொண்ட ஆஸ்ரமத்தைக்காட்டிலும் வேறு எந்த தர்மஸ்கந்தமானது அங்கீகரிக்கப்படும். "யே சேமே அரண்யே" என்ற விடத்தில் அரண்யலிங்கமிருப்பதைக் கொண்டு ஸ்ரத்தை தபஸ் இவற்றால் (அவற்றை ப்ரதானமாகக்கொண்ட) ஆஸ்ரமத்தின் க்ரஹணமே ஏற்படுகிறது. ஆகவே அனுவாதம் செய்திருப்பினுங் கூட வேறு ஆஸ்ரமமானது அனுஷ்டேயமாகவே தானாகிறது. (19) (எ-று)

(ஸூ) விதிர்வாதாரணவத் (20)

(ப-ரை) विधिर्वा (விதிர்வா)=இது வேறு ஆஸ்ரமத்தின் விதியேயொழிய அனுவாதம் மட்டுமன்று. ஏன்? धारणवत् (தாரணவத்)=उपरिहि देवेभ्यो धारयति (உபரிஹி தேவேப்யோ தாரயதி)=தேவதைகளைக்குறித்து ஹோமஞ்செய்யுமிடத்தில் ஸ்ருக்என்ற ஹோமபாத்திரத்தின் மேலே ஸமித்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்றுகூறிய விடத்தில் விதத்வநிர்த்தேச மிருப்பதைக் கொண்டு உபரிதாரணத்துக்கும் அபூர்வவிதியானது எவ்விதம் கொள்ளப்படுகிறதோ அவ்விதமே இங்கும் காணவேண்டும் என்றும். (60) (எ-று)

பாஷ்யம்.—இது வேறு ஆஸ்ரமத்துக்கு விதியாகவாகுமே யொழிய அனுவாதமாக மட்டுமாகாது.

சங்கை—விதித்தன்மை யொப்புக்கொண்டால் ஏகவாக்யத்வ ப்ரதீதியானது (ஒற்ற ஒரேபொருளுள்ளதா யிருத்தலின் தோற்றமானது) தடுக்கப்பட்டதாகவாகி

त्वमृतत्वफलेति। सत्यमेतत्। सतीमपि त्वेकवाक्यताप्रतीतिं परित्यज्य विधिरेवाभ्युपगन्तव्योऽपूर्वत्वात्। विध्यन्तरस्यादर्शनात्। विस्पष्टाच्चाश्रमान्तरप्रत्ययाद्गुणवादकल्पनयैकवाक्यत्वयोजनानुपपत्तेः। धारणवत्। यथा 'अधस्तात्समिधं धारयन्ननुद्रवेदुपरि हि देवेभ्यो धारयति' इत्यत्र सत्यामप्यधोधारणेनैकवाक्यताप्रतीतौ विधीयत एवोपरिधारणमपूर्वत्वात्। तथाचोक्तं शेषलक्षणे—'विधिस्तु धारणेऽपूर्वत्वात्' इति। तद्वदिहाप्याश्रमपरामर्शश्रुतिर्विधिरेवेति कल्प्यते। यदापि परामर्श एवायमाश्रमान्तराणां तदापि ब्रह्म-

---

விடும். இவ்விடத்திலோ புண்யலோகத்தைப் பயனுகவுடைய தர்மஸ்கந்தங்கள் மூன்று. ப்ரம்ஹஸம்ஸ்தத்வமோ அமிருதத்வத்தைப் பயனுகவுடையது என்றதால் ஏகவாக்யதையின் தோற்றமேற்படவே செய்கிறது. எனின்?

உத்தரம்— இது வுண்மைதான். ஏகவாக்யதையின் தோற்றமானது இருப்பினுங் கூட அதை விடுத்து வேறு ப்ரமாணங்களால் கிடைக்காதது பற்றி விதியேதான் அங்கீகரிக்கவேண்டியதாக வாகிறது. வேறுவிதியானது காணப்படாமலிருப்பதே அதன் காரணமாகும். மிக்கதெளிவான ஆஸ்ரமாந்தரத் தோற்றமேற்படுவதிலிருந்து குணவாத (அர்த்தவாத) கல்பனுமூலம் ஏகவாக்யத்வ யோஜனஞ் செய்வது பொருந்தவும் மாட்டாது. தாரணம் போலவாம் (1) "கீழில் ஸமித்தை வைத்துக்கொண்டு போகவேண்டும். தேவர்களையும் பொருட்டு மேலேயன்றோ தாரணஞ் செய்யவேண்டும்" என்றவிடத்தில் அதோதாரணத்துடன் (ஹவிஸ்ஸின் கீழ்பாகத்தில் ஸமித்தைத்தரிப்பதுடன்)ஏகவாக்யத்வ ப்ரதீதியானது இருந்தபோதிலுங்கூட அபூர்வமாக(வேறுப்ரமாணத்தினுல் கிடைக்காததாக)இருப்பதுபற்றி ஸ்ருக்குக்கு மேல்பாகத்தில் ஸமித்தைத் தரித்தலே விதிக்கப்படுகிறது. அவ்விதமே பூர்வமீமாம்ஸையில் "அபூர்வமாக இருப்பது பற்றி உபரிதாரணத்தில் விதியேதான் சொல்லவேண்டும்" என்றதாற் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோலவே இங்கும் ஆஸ்ரமத்தை அனுவாதஞ்செய்த ஸ்ருதியானது விதியென்றே கல்பிக்கப்படுகிறது. "த்ரயோதர்மஸ்கந்தாঃ" என்பது வேறு ஆஸ்ரமங்களுக்கு அனுவாதமாகமட்டும் இருந்தபோதிலுங் கூட ப்ரம்ஹஸம்ஸ்தத்வமானது அவஸ்யம் விதிக்கப்படுவதாகவே தான் கொள்ளவேண்டும். அதைப்பற்றிய ஸ்துதியிருப்பதே அதன் காரணமாகும்.

---

(1) மஹாபிதிருயக்ஞத்திலும் ப்ரேதாக்னிஹோத்திரத்திலும் ஸ்ருக் என்ற ஹோம பாத்திரத்தில் வைக்கப்பட்ட ஹவிஸ்ஸை ஆஹவனீயம் என்றஅக்னியைக் குறித்துக் கொண்டுபோகுங்கால் "அந்த ஸ்ருக்குக்குக் கீழ்பாகத்தில் ஸமித்தை வைத்துக்கொண்டு போகவேண்டும்" என்றதால் விதிக்கப்பட்ட அதோதாரணத்தை (ஸ்ருக்குக்குக்கீழில் ஸமித்தை தரிப்பதை) ஸ்துதிக்கவேண்டி "தேவர்களைக் குறித்துச் செய்யப்படும் ஹோமத்தில் ஸ்ருக்குக்கு மேல்பாகத்திலன்றோ ஸமித்தைத் தரிக்கவேண்டும்" என்றதற்கு ஏகவாக்யத்வத்தோற்றம் ஏற்படினுங்கூட அதை விடுத்து ஸ்ருக்குக்கு மேல்பாகத்தில் ஸமித்தைத்தரித்தலானது அபூர்வமாக (வேறுப்ரமாணத்தால் கிடைக்காததாக) இருப்பது பற்றி வாக்யபேதமானது ஜைமினி ஆசிரியரால் மூன்றுவது அத்தியாயத்தில் பூர்வமீமாஸையில் சொல்லப்பட்டிருக்கிறது.

संस्थता तावत्संस्तवसामर्थ्यादवश्यं विधेयाऽभ्युपगन्तव्या। सा च किं चतुर्ष्वाश्रमेषु यस्य कस्यचिदाहोस्वित्परिव्राजकस्यैवेति विवेक्तव्यम्। यदि च ब्रह्मचार्यन्तेष्वाश्रमेषु परामृश्यमानेषु परिव्राजकोऽपि परामृष्टस्ततश्चतुर्णामप्याश्रमाणां परामृष्टत्वाविशेषादनाश्रमित्वानुपपत्तेश्च यः कश्चिच्चतुर्ष्वाश्रमेषु ब्रह्मसंस्थो भविष्यति। अथ न परामृष्टस्ततः परिशिष्यमाणः परिव्राडेव ब्रह्मसंस्थ इति सेत्स्यति। तत्र तपःशब्देन वैखानसग्राहिणा परामृष्टः परिव्राडपीति केचित्। तदयुक्तम्। नहि सत्यां गतौ वानप्रस्थविशेषणेन परिव्राजको ग्रहणमर्हति। यथात्र ब्रह्मचारिगृहमेधिनावसाधारणेनैव स्वेन स्वेन विशेषणेन विशेषितावेवं भिक्षुवैखानसावपीति युक्तम्। तपश्चासाधारणो धर्मो वानप्रस्थानां कायक्लेशप्रधानत्वात्। तपःशब्दस्य तत्र रूढेः। भिक्षोस्तु धर्म इन्द्रियसंयमादिलक्षणो नैव तपःशब्देनाभिलप्यते। चतुष्ट्वेन च प्रसिद्धा आश्रमास्त्रित्वेन परामृश्यन्त इत्यन्याय्यम्॥

अपिच भेदव्यपदेशोऽत्र भवति 'त्रय एते पुण्यलोकभाज एकोऽमृतत्वभाक्' इति।

அந்த ப்ரம்ஹ ஸம்ஸ்தத்வமானது நான்கு ஆஶ்ரமங்களுள் யாதானு மொரு ஆஶ்ரமத்துக்கு மட்டும் சொல்லப்படுகிறதா? அல்லது ஸன்யாஸிக்கு மட்டுமே சொல்லப்படுகிறதா? எனப் பகுத்தறிய வேண்டும். ப்ரம்ஹசாரியை முடிவாகக் கொண்ட ஆஶ்ரமங்கள் அனுவதிக்கப்படுங்கால் ஸன்யாஸியும் அனுவதிக்கப்படுவானாயின் அப்பொழுது நான்கு ஆஶ்ரமங்களுக்கும் அனுவதிக்கப்பட்டிருத்தல் பொதுவாக விருப்பதாலும், யாதானுமொரு ஆஶ்ரமியாகவில்லாதிருத்தல் (ப்ரம் ஹஸம்ஸ்தனுக்கு) பொருந்தாதாகையாலும் அந்த நான்கு ஆஶ்ரமிகளுள் யாதானுமொரு ஆஶ்ரமியே ப்ரம்ஹஸம்ஸ்தனாக வாவான். அந்த ஆஶ்ரமங்களுள் ஸன்யாஸியானவன் "த்ரயோதர்மஸ்கந்தா:" என்றதால் அனுவதிக்கப் படாவிடில் அதுபோழ்து சொல்லவேண்டுவதாக எஞ்ஜியிருக்கின்ற ஸன்யாஸியே ப்ரம்ஹஸம்ஸ்தன் என ஸித்தித்துவிடுகிறது. அவ்விடத்தில் வைகானஸனைச் சொல்லுகின்ற "தப:" என்றசப்தத்தால் ஸன்யாஸியும் அனுவதிக்கப்படுகிறான் எனச் சிலர் சொல்லுகின்றனர். அது பொருந்தாது. வேறுவழியிருக்குங்கால் வானப்ரஸ்தனுடைய விசேஷணத்தினால் ஸன்யாஸியைக் கிரஹிப்பது பொருந்தாது. ப்ரம்ஹசாரியும் கிருஹஸ்தனும் தத்தமக்குரியதாகவேயுள்ள விசேஷணத்தினால் எவ்விதம் விலக்கிக் காட்டப்பட்டனரோ இவ்விதமே ஸன்னியாஸியும் வானப்ரஸ்தனும் காட்டப்படவேண்டும் என்பது தான் பொருத்தமானது. தபஸ்ஸோ வானப்ரஸ்தர்களுக்கு இன்றியமையாத தர்மமாகும். அவர் காயக்லேசத்தை முக்கியமாகக் கொண்டிருப்பதே அதன் காரணமாகும். அந்தக் காயக்லேசத்திலேயே தபஸ் சப்தத்துக்கு ரூடியு மிருக்கிறது. இந்திரியங்களை அடக்குதல் முதலியவற்றை லக்ஷணமாகக் கொண்ட ஸன்யாஸியின் தர்மமோதபஸ் சப்தத்தாற் சொல்லப்படவே மாட்டாது. நான்காக ப்ரஸித்தங்களான ஆஶ்ரமங்கள் மூன்றாக அனுவதிக்கப்படுகின்றன என்பது அந்யாயமானதாகும். மேலும் இவ்விடத்தில் "இந்த மூவரும் புண்ய லோகத்தை யடைகின்றனர் ஒருவன் அமிருதத்வத்தை (மோக்ஷத்தை) யடைகிறான்" எனத்தனியான வுபதேசமு மிருக்கிறது. தனிமையிருந்தால்தான் இந்த

पृथक्त्वे चैष भेदव्यपदेशोऽवकल्पते। नह्येवं भवति देवदत्तयज्ञदत्तौ मन्दप्रज्ञावन्यतरस्त्वनयोर्महाप्रज्ञ इति। भवति त्वेवं देवदत्तयज्ञदत्तौ मन्दप्रज्ञौ विष्णुमित्रस्तु महाप्रज्ञ इति। तस्मात्पूर्वे त्रय आश्रमिणः पुण्यलोकभाजः, परिशिष्यमाणः परिव्राडेवामृतत्वभाक्। कथं पुनर्ब्रह्मसंस्थशब्दो योगात्प्रवर्तमानः सर्वत्र संभवन्परिव्राजक एवावतिष्ठेत। रूढ्यभ्युपगमे चाश्रममात्रादमृतत्वप्राप्तेर्ज्ञानानार्थक्यप्रसङ्ग इति। अत्रोच्यते—ब्रह्मसंस्थ इति हि ब्रह्मणि परिसमाप्तिरनन्यव्यापारतारूपं तन्निष्ठत्वमभिधीयते। तच्च त्रयाणामाश्रमाणां न संभवति। स्वाश्रमविहितकर्माननुष्ठाने प्रत्यवायश्रवणात्। परिव्राजकस्य तु सर्वकर्मसंन्यासात्प्रत्यवायो न संभवत्यननुष्ठाननिमित्तः। शमदमादिस्तु तदीयो धर्मो ब्रह्मसंस्थताया उपोद्बलको न विरोधी। ब्रह्मनिष्ठत्वमेव हि तस्य शमदमाद्युपबृंहितं स्वाश्रमविहितं

பேதநிர்த்தேசம் பொருந்தும். உலகில் தேவதத்தனும் யக்ஞதத்தனும் குறைந்த அறிவுடையவர் இவ்விருவருளொருவர் அதிகமான அறிவுடையவர் என இவ்விதம் சொல்லப்படுவதில்லை யன்றே. பின்னையோ வெனில் தேவதத்த யக்ஞதத்தர்கள் குறைந்த அறிவுடையவர். விஷ்ணுமித்திரனே அதிகமான அறிவுடையவன் எனச் சொல்லப்படுகின்றது. ஆகவே முன்னருள்ள மூன்று ஆஶ்ரமிகளும் புண்யலோகத்தை யடைபவர், எஞ்ஜியுள்ள ஸன்யாஸியே மோக்ஷத்தையடைபவன் என்றேற்படுகிறது.

சங்கை—ப்ரம்ஹஸம்ஸ்த:=ப்ரம்ஹத்திலிருப்பவன்=அதாவது ப்ரம்ஹத்தை இடையறாது த்யானிப்பவன் என்ற அதன் பொருள் கொண்டு ப்ரவிருத்திக்கும் ப்ரம்ஹஸம்ஸ்த சப்தமானது எல்லா ஆஶ்ரமிகளிடத்தும் ஸம்பவிக்கக் கூடியது பற்றி ஸன்யாஸியினிடத்தில் மட்டுந்தான் ப்ரவிருத்திக்கும் என்பது எங்ஙனம்? ரூடியை யொப்புக்கொண்டாலோ ஆஶ்ரமத்தால் மட்டுமே மோக்ஷஸித்தி யேற்படலாமானதால் க்ஞானத்துக்குப் பயனின்மையும் வரத்தெரியும் எனின்?

உத்தரம்—இவ்விஷயத்திற் சொல்லப்படுகிறது. பொதுவாய் ப்ரம்ஹஸம்ஸ்த: என்ற சப்தத்தினால் ப்ரம்ஹத்தினிடத்தில் ஸம்ஸ்தை=முடிவு அதாவது: வேறுவேலையற்று அதனிடத்திலேயே இருத்தல் என்பது சொல்லப்படுகிறது அதுவோ மூன்று ஆஶ்ரமங்களுக்கும் ஸம்பவிக்க முடியாது. அம்மூவர்க்கும் தமது ஆஶ்ரமங்களுக்கு விதிக்கப்பட்ட தர்மங்களை அனுஷ்டானஞ் செய்யாவிடில் தோஷம் கூறப்பட்டிருக்கிறது. ஸன்யாஸிக்கோ எல்லாக் கர்மங்களுடையவும் ஸன்யாஸஞ் சொல்லப்பட்டிருப்பதால் கர்மாவை அனுஷ்டிக்காதிருத்தல் மூலமான தோஷம் ஸம்பவிப்பதற்கிடமில்லை. ஸன்யாஸியினுடையதான சமதமாதிகளான தர்மமோ வெனில் ப்ரம்ஹஸம்ஸ்தைக்கு=வேறுவியாபாரத்தை யொழித்து ப்ரம்ஹானுஸந்தானஞ் செய்தற்கு, உபகாரியாகவாகுமே யொழிய விரோதியாக ஆகமாட்டாது. அவனுக்கோ = ஸன்யாஸிக்கோ, சமதமாதிகளின் உதவியைக் கொண்ட ப்ரம்ஹநிஷ்டத்வமே அவரது ஆஶ்ரமத்துக்கு விதிக்கப்பட்ட கர்மமாகவாகிறது. மற்றவர்க்கோ யாகாதிகள் ஆஶ்ரமவிஹிதமான கர்மங்களாகின்றன. ஆகையால் அவற்றை விடுவதில் அவர்க்குத் தோஷம் வரக்கூடும்.

कर्म, यज्ञादीनि चेतरेषां तद्व्यतिक्रमे च तस्य प्रत्यवायः। तथाच 'न्यास इति ब्रह्मा ब्रह्मा हि परः परो हि ब्रह्मा तानि वा एतान्यवराणि तपांसि न्यास एवात्यरेचयत्' (नारा० ७८), 'वेदान्तविज्ञानसुनिश्चितार्थाः संन्यासयोगाद्यतयः शुद्धसत्त्वाः' (मुण्ड० ३।२।६, नारा० १२।३, कैवल्य० ३) इत्याद्याः श्रुतयः। स्मृतयश्च—'तद्बुद्धयस्तदात्मानस्तन्निष्ठास्तत्परायणाः' (गी० ५।१७) इत्याद्या ब्रह्मसंस्थस्य कर्माभावं दर्शयन्ति ॥

तस्मात्परिव्राजकस्याश्रममात्रादमृतत्वप्राप्तेर्ज्ञानानार्थक्यप्रसङ्ग इत्येषोऽपि दोषो नावतरति। तदेवं परामर्शेऽपीतरेषामाश्रमाणां पारिव्राज्यं तावद्ब्रह्मसंस्थतालक्षणं लभ्यतैव। अनपेक्ष्यैव जाबालश्रुतिमाश्रमान्तरविधायिनीमयमाचार्येण विचारः प्रवर्तितः। विद्यत एव त्वाश्रमान्तरविधिश्रुतिः प्रत्यक्षा। 'ब्रह्मचर्यं परिसमाप्य गृही भवेद्गृही भूत्वा वनी भवेद्वनी भूत्वा प्रव्रजेत्। यदि वेतरथा ब्रह्मचर्यादेव प्रव्रजेद्गृहाद्वा वनाद्वा' (जाबा० ४) इति। न चेयं श्रुतिरनधिकृतविषया शक्या वक्तुम्। अविशेषश्रवणात्। पृथग्विधानाच्चानधि-

---

அவ்விதமே "நியாஸம் என்பது ப்ரம்ஹாவாகும். ப்ரம்ஹாவோ=ஹிரண்ய கர்ப்பரோ பரனாகிறார், பரனன்றோ ப்ரம்ஹா. அந்த இந்தத்தாழ்ந்ததபஸ்ஸுகளை நியாஸமே=ஸன்யாஸமே அதிகரித்து=மேல்நோக்கி நிற்கிறது" என்றும், "வேதாந்தவிக்ஞானத்தால் நன்கு நிஶ்சயிக்கப்பட்ட பயனுள்ளவர்களும், சுத்தமான மனதுள்ளவர்களும், ஸன்யாஸயோகத்தால் யதிகளுமானவர் முக்தியை யடைகின்றனர்" என்றுமாதிய சுருதிகளிருக்கின்றன. அவ்விதமே "தத்புத்தயஃ=ப்ரம்ஹத்தினிடத்தில் சித்தத்தைச் செலுத்தினவர்களும், ததாத்மானஃ=ப்ரம்ஹஸ்வரூபர்களும், தந்நிஷ்டாஃ=ஶ்ரவணாதிகளை யனுஷ்டிப்பவர்களும், தத்பராயணாஃ=ப்ரம்ஹத்தை யடையவிருப்பமுள்ளவர்களும் அதாவது:—நிஷ்காமர்களும்" என்றதாதிகளான ஸ்மிருதிகள் ப்ரம்ஹஸம்ஸ்தனுக்கு(ஸன்யாஸிக்கு)கர்மமின்மையைத் தெரிவிக்கின்றன. ஆகவே ஸன்யாஸிக்கு ஆஶ்ரமத்தினால் மட்டும் அமிருதத்வப்ராப்தியேற்படுவதால் க்ஞானம் வேண்டுவதில்லை என்ற இந்தத் தோஷமும் வருவதற்கு இடமில்லை. ஆகவே இவ்விதம் பார்க்குங்கால் வேறு ஆஶ்ரமங்களின் அனுவாதம் காணப்படினுங்கூட ப்ரம்ஹஸம்ஸ்தத்வ ரூபமான ஸன்யாஸமானது கிடைக்கவே தான் செய்கிறது. வேறுஆஶ்ரமத்தை விதிக்கின்ற ஜாபாலஶ்ருதியை எதிர்பாராமலே ஆசிரியரால் இந்தவிசாரமானது தொடங்கப்பட்டது. வேறு ஆஶ்ரமத்தை விதிக்கின்ற சுருதியானது ப்ரத்யக்ஷமாகவே இருக்கின்றதன்றோ. அதாவது:—"ப்ரம்ஹசர்யத்தை முடித்துக்கொண்டு கிருஹஸ்தனாகவாகவேண்டும். கிருஹஸ்தனாக வாகி வானப்ரஸ்தனாக வாகவேண்டும். வானப்ரஸ்தனாக விருந்து ஸன்யாஸியாக வாகவேண்டும். அவ்விதமில்லாவிடில் (ப்ரம்ஹசர்யத்திலிருக்கும் பொழுதே ஜன்மாந்தரபுண்ணியத்தினால் வைராக்கியமுண்டாகுமானால்) ப்ரம்ஹசர்யத்தினின்றும் ஸன்யாஸியாகலாம், கிருஹஸ்தாஶ்ரமத்தினின்றும் ஸன்யாஸியாகலாம்." என்றாம்.

இந்தஶ்ருதியானது கர்மாவில் அதிகாரம் பெறாதவரை விஷயமாகக் கொண்டது என்று சொல்லமுடியாது. ஏன்? பொதுவாகக் கூறியிருப்பதே அதன்

कृतानाम् 'अथ पुनरेव व्रती वाऽव्रती वा स्नातको वाऽस्नातको वोत्सन्नाग्निरनग्निको वा' (जाबा० ४) इत्यादिना। ब्रह्मज्ञानपरिपाकाङ्गत्वाच्च पारिव्राज्यस्य नानधिकृतविषयत्वम्। तच्च दर्शयति—'अथ परिव्राड्विवर्णवासा मुण्डोऽपरिग्रहः शुचिरद्रोही भैक्षाणो ब्रह्मभूयाय भवति' (जाबा० ५) इति। तस्मात्सिद्धा ऊर्ध्वरेतसामाश्रमाः। सिद्धं चोर्ध्वरेतःसु विधानाद्विद्यायाः स्वातन्त्र्यमिति ॥ २०॥

३ स्तुतिमात्राधिकरणम्। सू० २१-२२

स्तुतिमात्रमुपादानादिति चेन्नापूर्वत्वात् ॥ २१ ॥

காரணமாகும். "பின்னர், வ்ரதமுள்ளவனே, வ்ரதமில்லாதவனே, ஸ்நாதகனே, ஸ்நாதகனாகவில்லாதவனே, நஷ்டமான அக்னியுள்ளவனே, அக்னியே இல்லாதவனே" என்றதாதியால் கர்மாவில் அதிகாரம் பெறாதவர்களுக்குத் தனியான விதி காணப்படுவதும் மற்றொரு காரணமாகும். ஸன்யாஸமானது ப்ரம்ஹக்ஞானத்தின் பரிபாகத்துக்கு அங்கமாக இருப்பது பற்றியும் கர்மாவில் அதிகாரம் பெறாதவரை விஷயமாகக்கொண்டதாகவு மாகமாட்டாது. அதையும் சுருதியானது "பிறகு ஸன்யாஸியானவன் நிறம்மாறின வஸ்திரமுள்ளவனாகவும், தலையில் மயிரற்றவனாகவும், பத்னியற்றவனாகவும், சுத்தனாகவும், துரோஹஞ் செய்யாதவனாகவும், பிக்ஷை எடுத்துண்பவனைக் கொண்டு ப்ரம்ஹபாவத்தை யடைந்தவனாகவாகிறான்" என்றதால் தெரிவித்து மிருக்கிறது. ஆனதுபற்றி ஊர்த்வரேதஸ்ஸுகளின் ஆஶ்ரமங்கள் ஸித்திக்கின்றன. ஊர்த்வரேதஸ்ஸுகளிடத்தில் விதிக்கப்பட்டிருப்பதுபற்றி வித்யைக்கு (ப்ரம்ஹக்ஞானத்துக்கு) ஸ்வாதந்திரியமும் ஸித்திக்கிறது. (20) (எ-று)

இரண்டாவது பராமர்சாதிகரணம் முற்றிற்று.

ஸ்துதிமாத்ராதிகரணம். (3)

(அ-கை) சாந்தோக்யோபநிஷத்தில் "एषां भूतानां पृथिवी रसः, पृथिव्या आपो रसः, अपामोषधयो रसः, ओषधीनां पुरुषो रसः, पुरुषस्य वाग्रसः, वाच ऋग्रसः, ऋचः साम रसः, साम्न उद्गीथोरसः, स एष रसानां रसतमः परमः परार्ध्योऽष्टमो य उद्गीथः" இந்தப் பூதங்களுக்குள் ப்ருதிவிஸாரமானது, பூமிக்குள் ஜலம் ஸாரமானது ஜலத்துக்குள் ஓஷதிகள் ஸாரமானது, ஓஷதிக்குள் புருஷன் (தேஹம்) ஸாரமானது, புருஷனுக்குள் வாக்கு ஸாரமானது, வாக்குக்குள் ருக் ஸாரமானது, ருக்குக்குள் ஸாமம் ஸாரமானது, ஸாமத்துக்குள் உத்கீதம் ஸாரமானது, அந்த இந்த உத்கீதமானது (உத்கீதாவயமான ஓங்காரமானது) முற்கூறிய ஸாரமான ஏழுபதார்த்தங்களுக்குள்ளும் மிக்கஸாரமானது. அதுவே பரமாத்மாவுக்கு ப்ரதீகமாக இருப்பதுபற்றி பரமமுமாகும். அதுவே பரம்ப்ரம்ஹத்தினுடைய ஸ்தானத்தை யடைய அர்ஹமாக இருப்பதுபற்றி பரார்த்யமுமாகும். உத்கீதாவயவமான எட்டாவதான ஓங்காரம் யாதுண்டோ" என்றதாதி படிக்கப்படுகிறது. இந்தவாக்கியத்தில்

स्तोत्रं रसतमत्वादि ध्येयं वा गुणवर्णनात् । जुहूरादित्य इत्यादाविव कर्मांगसंस्तुतिः ॥ १ ॥

भिन्नप्रकरणस्थत्वान्नांगविध्येकवाक्यता । उपासीतेति विध्युक्तेर्ध्येयं रसतमादिकम् ॥ २ ॥

'स एष रसानां रसतमः परमः परार्ध्योऽष्टमो यदुद्गीथः' (छा० १।१।३)

ரஸதமத்வம் முதலிய குணங்களுடன் கூடின உத்கீதாவயவமான ஓங்காரத்தினுபாஸ்தி விதிக்கப்படுகிறதா? அலல்து ப்ரணவத்தினுடைய ஸ்துதிமட்டுமே தானா? (அதாவது:—இந்த வாக்கியம் ப்ரணவத்தை ஸ்துதிக்கவந்த அர்த்தவாதம் மட்டுந்தானா? என்றும்.) எனஸந்தேஹம் வரவே "ஜுஹூவானது (இது ஒரு வகை ஹோமபாத்திரமாகும்) இந்த ப்ருதிவீயே, சயனத்திலுள்ள கூர்மமானது ஆதித்யனே, ஆஹவனீயமென்ற அக்னியானது ஸ்வர்க்கலோகமே" என்றதாதிகள் ஜுஹூமுதலியவற்றின் ஸ்துதிக்குவேண்டி படிக்கப்படுவது எவ்விதமோ அவ்விதமேதான் ரஸதமத்வாதிகளும் உத்கீதாவயவமான ஓங்காரத்தின் ஸ்துதியாகும் எனப்ராப்தமாகவே ரஸதமத்வாதி குணங்களுடன் கூடின ப்ரணவோபாஸ்தியானது வேறுப்ரமாணத்தால் கிடைக்காதது பற்றி அபூர்வவிதிமுறையால் அவ்வுபாஸ்தி விதிக்கப்படுகிறது என ஸித்தாந்தப்படுத்தவேண்டி இரண்டு ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணமானது ஆரம்பிக்கப்படுகிறது. அவற்றுள் முதல் ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ஸ்துதிமாத்ரமுபாதாநாத் இதிசேத் ந அபூர்வத்வாத்()

(ப—ரை) स्तुतिमात्रम् (ஸ்துதிமாத்ரம்)="ஸ ஏஷ ரஸாநாம் ரஸதம:" என்றதாதி வாக்கியமானது ப்ரணவத்தின் ஸ்துதியாக மட்டுமாகுமே யொழிய உபாஸ்யஸமர்ப்பகமாகவாகாது. ஏன்? उपादानात् (உபாதாநாத்)="ஓமித்யேததக்ஷர முத்கீதமுபாஸீத" என்றதால் உத்கீதாதிகளான கர்மங்களை யெடுத்துக்கொண்டு ஸ்துதி காணப்படுவதே அதன் காரணமாகும். इति चेत् (இதிசேத்)=என்றுலோ न (ந)=அது பொருந்தாது. ஏன்? अपूर्वत्वात् (அபூர்வத்வாத்)=இந்த வாக்கியத்தாற் சொல்லப்படும் ரஸதமத்வாதி குணங்கள் வேறுப்ரமாணத்தினால் கிடைக்காதிருப்பது பற்றி உத்கீதாதி விசேஷபரத்வமானது ஸம்பவிக்கும் பொழுது ஸ்துதியாக மட்டும் சொல்லுவது பொருந்தாததே அதன்காரணமாகும். (21) (எ—று)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ரஸதமத்வம் முதலியன வெறும் ஸ்தோத்திரமா? அல்லது த்யா
னஞ் செய்யத்தகுந்தனவா? என்பது ஸந்தேஹம். "ஜுஹூவானது இந்தப் பூமி
யே. சயனத்திலுள்ள கூர்மமானது ஆதித்யனே" என்றதாதிகளிற்போல குணவர்
ணனஞ் செய்திருப்பதால் கர்மாங்கத்தின் ஸ்துதியேயாகும் என்பது **பூர்வபக்ஷம்.**
வேறுப்ரகரணத்தி லிருப்பதால் அங்கவிதியுடன் ஏகவாக்யத்வமானது ஸம்பவிக்
காது. "உபாஸீத" என விதிசொல்லி யிருப்பதாலும் ரஸதமத்வம் முதலியன
த்யானஞ் செய்யத்தகுந்தனவே யாகும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—எட்டாவதான யாதொரு உத்கீதமுண்டோ (உத்கீதாவயமான

'इयमेवर्गग्निः साम' (छा० १।६।१) 'अयं वाव लोक एषोऽग्निश्चितः। तदिदमेवोक्थमियमेव पृथिवी' इत्येवञ्जातीयकाः श्रुतयः किमुद्गीथादेः स्तुत्यर्था आहोस्विदुपासनाविध्यर्था इत्यस्मिन्संशये स्तुत्यर्था इति युक्तम्। उद्गीथादीनि कर्माङ्गान्युपादाय श्रवणात्। यथा—'इयमेव जुहूरादित्यः कूर्मः स्वर्गो लोक आहवनीयः' इत्याद्या जुह्वादिस्तुत्यर्थास्तद्वदिति चेत्। नेत्याह। नहि स्तुतिमात्रमासां श्रुतीनां प्रयोजनं युक्तमपूर्वत्वात्। विध्यर्थतायां ह्यपूर्वोऽर्थो विहितो भवति स्तुत्यर्थतायां त्वानर्थक्यमेव स्यात्। विधायकस्य हि शब्दस्य वाक्यशेषभावं प्रतिपद्यमाना स्तुतिरुपयुज्यत इत्युक्तम् 'विधिना त्वेकवाक्यत्वात्स्तुत्यर्थेन विधीनां स्युः' इत्यत्र। प्रदेशान्तरविहितानां तूद्गीथादीनामियं प्रदेशान्तरपठिता स्तुतिर्वाक्यशेषभावमप्रतिपद्यमानानर्थिकैव स्यात्। इयमेव जुहूरित्यादि तु विधिसन्निधावेवाम्नातमिति वैषम्यम्। तस्माद्विध्यर्था एवैवञ्जातीयकाः श्रुतयः ॥ २१ ॥

ஓங்காரமுண்டோ) அந்த இது ரஸங்களுள் மிக்கஸாரமானதும், பரமாத்மாவுக்கு ப்ரதீகமாக இருப்பதுபற்றிப் பரமமும், பரப்ரப்ஹத்தினுடைய ஸ்தானத்தை யடைவதற்குத் தகுதியுள்ளதா யிருப்பதுபற்றி பரார்த்யமுமாகும், என்றும் "இந்தப் பூமியே ருக், அக்னியே ஸாம" என்றும், சயனஞ் செய்யப் பட்ட இந்த அக்னி யாதுண்டோ இது இந்தலோகமேயாகும். அந்த இதுவே உக்தமாகிறது, இதே ப்ருதிவியுமாகிறது" என்றதாதிகளான ஶ்ருதிகள்உத்கீதாதிகளின் ஸ்துதியை ப்ரயோஜனமாகக் கொண்டனவா? அல்லது உபாஸனவிதியைப் பயனாகக் கொண்டனவா? என்ற இந்த ஸம்சயம் வருங்கால் ஸ்துதியைப் பயனாகக் கொண்டன என்பதுதான் யுக்தமாக வாகிறது. உத்கீதம் முதலிய கர்மாங்கங்களை எடுத்துக் கொண்டு சொல்லியிருப்பதே அதன் காரணமாகும். "ஜுஹூவானது இந்தப் பூமியே, சயனத்திலுள்ள கூர்மம் ஆதித்யனே, ஆஹவனீயமானது ஸ்வர்க்கலோகமே" என்றதாதிகள் ஜுஹ்வாதிகளின் ஸ்துதிக்கவேண்டி ஏற்பட்டன என்பது எவ்விதமோ அவ்விதமேயாகும் எனின்? இல்லை எனச் சொல்லுகிறார். இந்த ஶ்ருதிகளுக்கு ஸ்துதியைமட்டும் ப்ரயோஜனமாகச் சொல்லுவது பொருந்தாது. அபூர்வமாக(அபூர்வார்த்தத்தைப் போதிப்பதாக)விருப்பதே அதன் காரணமாகும். வித்யார்த்தத்வம் சொன்னாலோ அபூர்வமான (வேறுப்ரமாணத்தால் கிடைக்காத) பொருள் விதிக்கப்பட்டதாக வாகிறது. ஸ்துத்யர்த்தத்வம் சொன்னாலோ பயனில்லாத் தன்மையே வந்து விடுகிறது. ஸ்துதியானது விதிபோதக சப்தத்தின் வாக்கிய சேஷமாயிருத்தலை யடைந்து கொண்டு உபயோகத்தையடைகிறது என "(1) விதினா த்வேகவாக்யத்வாத் ஸ்துத்யர்த்தேன விதீநாம் ஸ்யு:" என்றவிடத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. வேறிடத்தில் விதிக்கப்பட்ட உத்கீதாதிகளுக்கு வேறிடத்தில் படிக்கப்பட்ட ஸ்துதியானது வாக்கிய சேஷத்தன்மையை யடையாததாய்க் கொண்டு பயனற்றதாகவே ஆகிவிடும். "ஜுஹூவானது இந்தப்ருதிவியே" என்றதாதியோவெனில் விதியின் ஸமீபத்திலேயே படிக்கப்பட்டிருப்பது பற்றி

---

(1) இதன் பொருளை முதலாவது அத்யாயம் 1-வதுபாதம் நான்காவது ஸூத்திர பாஷ்ய மொழிபெயர்ப்பிற் காண்க.

भावशब्दाच ॥ २२ ॥

'उद्गीथमुपासीत' (छा० १।१।१), 'सामोपासीत' (छा० २।२।१), 'अहमुक्थमस्मीति विद्यात्' इत्यादयश्च विस्पष्टा विधिशब्दाः श्रूयन्ते, ते च स्तुतिमात्रप्रयोजनतायां व्याहन्येरन्। तथाच न्यायविदां स्मरणम्—'कुर्यात्क्रियेत कर्तव्यं भवेत्स्यादिति पञ्चमम्। एतत्स्यात्सर्ववेदेषु नियतं विधिलक्षणम्' इति। लिङाद्यर्थो विधिरिति मन्यमानास्त एवं स्मरन्ति। प्रतिप्रकरणं च फलानि श्राव्यन्ते—'आपयिता ह वै कामानां भवति' (छा० १।१।७) 'एष ह्येव कामागानस्येष्टे' (छा० १।७।९) 'कल्पन्ते हास्मै लोका ऊर्ध्वाश्चावृत्ताश्च' (छा० २।२।३) इत्यादीनि। तस्मादप्युपासनविधानार्था उद्गीथादिश्रुतयः ॥ २२ ॥

அந்தத் திருஷ்டாந்தம் முறண்பட்டதாகவே ஆகிறது. ஆகவே இம்மாதிரியான ஶ்ருதிகள் வித்யார்த்தங்களாகவே தாகும். (21) (எ—று)

(ஸூ) பாவசப்தாத்ச (22)

(ப—ரை) भावशब्दाच (பாவசப்தாத்ச)="வித்யாத்" "உபாஸீத" என்றதாதிகளான விதிபோதகசப்தங்கள் இவ்விடத்தில் தெளிவாகக் காணவும் படுகிறது. च (ச)=அவ்வுபாஸனைக் குரியபலன்களும் சுருதியிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

பாஷ்யம்.—"உத்கீதத்தை யுபாஸிக்கவேண்டும்" "ஸாமத்தை யுபாஸிக்க வேண்டும்" "நான் உக்தமாக விருக்கிறேன் என வுபாஸிக்கவேண்டும்" என்றதாதிகளான விதிபோதக சப்தங்கள் தெளிவாய் ஶ்ருதியில் காணப்படுகின்றன. அவை ஸ்துதியை மட்டும் ப்ரயோஜனமாகக் கொண்டன என்று சொல்லும் பக்ஷத்தில் வீணுகிவிடும். அவ்விதமேமீமாம்ஸா ந்யாயமறிந்த பெரியாரின் ஸ்மிருதியுமிருக்கிறது. அதாவது:—"குர்யாத், க்ரியேத, கர்த்தவ்யம், பவேத், ஸ்யாத் என்ற இது எல்லாவேதங்களிலும் மாறுதலற்ற விதியின் லக்ஷணமாகும்" என்றும். லிங், லோட், தவ்ய, ப்ரத்யயங்கள் விதியைத் தெரிவிக்கக்கூடியன என எண்ணுகின்றவர்களாய் அப்பெரியார் இவ்விதம் ஸ்மிருதி செய்திருக்கின்றனர். மேலும் ஒவ்வொரு உபாஸன ப்ரகரணதிலும் பலன்கள் சொல்லவும் படுகின்றன. அவையாவன "காமங்களைக் கொடுப்பதாகவே யாகிறது" என்றும், "உபாஸகனை இந்த ருத்விக்கானவன் கானத்தினுலேயே பயனை ஸம்பாதித்துத் தருவதற்குச் சக்தனுகவுமாகிறுன்" என்றும், "மேலுள்ளனவும் கதி (அடைதல்) ஆகதி (திரும்புதல்) இவற்றுடன் கூடினவுமான லோகங்கள் இவ்வுபாஸகனுக்கு ஸித்திக்கின்றன" என்றுமானவைகளாம். ஆனதுபற்றியும் உத்கீதாதி ஶ்ருதிகள் உபாஸனுவிதானத்தையே பயனுகவுடையன என்றேற்படுகிறது. (22) (எ—று)

குறிப்பு—அங்கத்தை யாஶ்ரயித்த வித்யைக்கே ஸ்வதந்திரமான பலனிருக்குமானல் எதற்கும் அங்கமாகவில்லாத ஆத்மவித்யைக்கு ஸ்வதந்திரமான மோக்ஷபலன் ஸித்திக்கும் எனச் சொல்லவும் வேண்டுமோ என்றேற்பட்டது. (எ—று)

மூன்றாவது ஸ்துதிமாத்ராதிகரணம் முற்றிற்று.

४ पारिप्लवाधिकरणम् । सू० २३-२४

पारिप्लवार्था इति चेन्न विशेषितत्वात् ॥ २३ ॥

பாரிப்லவாதிகரணம் 4.

(அ-கை) அஸ்வமேதயாக ப்ரகரணத்தில் புத்திராதிகளுடன்கூடின ராஜனுக்கு "**पारिप्लवमाचक्षीत** (பாரிப்லவமாசக்ஷீத)=பாரிப்லவத்தை பற்பலவிதமான கதைகளைச் சொல்லவேண்டும் என விதிக்கப்பட்டிருக்கிறது. அஸ்வமேதயாகமானது மூன்றுதினங்களில் செய்யக்கூடியது. அந்தத்தினங்களுள் முதல் தினத்தில் "**मनुर्वैवस्वतो राजा**" (மனுர்வைவஸ்வதோராஜா) என்றுதொடங்கிக் கூறப்படும் கதையையும், இரண்டாவதுதினத்தில் "**यमो वैवस्वत:**" (யமோவைவஸ்வத:) என்றுதொடங்கி படிக்கப்படும் கதையையும், மூன்ருவது தினத்தில் "**वरुण आदित्य:**" (வருண ஆதித்ய:) என்றுதொடங்கி படிக்கப்படும் கதையையும் சொல்லவேண்டும் என விதியிருக்கிறது. மேலும் உபக்ரமத்தில் "**सर्वाण्याख्यानानि पारिप्लवे शंसन्ति**" (ஸர்வாண்யாக்யாநாநி பாரிப்லவே ஶம்ஸந்தி) எல்லாக்கதைகளையும் பாரிப்லவத்திற் சொல்லவேண்டும் என்றும் காணப்படுகிறது. அங்கு எல்லாக்கதைகளையும் என்று சொல்லியிருப்பதிலிருந்து "**याज्ञवल्क्यस्य द्वे भार्ये बभूवतु:** (யாக்ஞவல்க்யஸ்ய த்வேபார்யே பபூவது:) யாக்ஞவல்க்யருக்கு இரண்டு மனையாளிருந்தனர் என்றதாதிகளான உபநிடதத்திற் சொல்லப்படும் கதைகளும் முற்கூறிய பாரிப்லவத்திற் சேர்ந்தனவா? அல்லது வேறானவைகளா? என ஸந்தேஹம்வர அங்கு உபக்கிரமத்தில் "**सर्वाण्याख्यानानि**" (ஸர்வாண்யாக்யாநாநி) எல்லாக்கதைகளையும் என்றிருப்பதால் உபநிடதத்திற் சொல்லப்படும் கதைகளும் பாரிப்லவத்திலேயே தான் சேருமேயொழிய தனியானதொரு பொருளைத் தெரிவிப்பதாக வாகமாட்டாது. எனப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே அந்த மூன்று தினங்களுள் சுருதியில் ஆங்காங்கு சொல்லப்பட்ட எல்லாக்கதைகளையும் சொல்லுவதென்பது முடியாதகாரியமாகையாலும் உபக்கிரமத்திலுள்ள **सर्वाणि** (ஸர்வாணி) எல்லாக்கதையையும் என்றதை ஸங்கோசப்படுத்தி அஸ்வமேதயாகப்ரகரணத்தில் வாக்யசேஷத்தில் (உபஸம்ஹாரத்தில்=முடிவில்) படிக்கப்பட்ட "மனுர் வைவஸ்வத:" "யமோ வைவஸ்வத:" "வருண ஆதித்ய:" என்றதாதி கதைகளை மட்டுந்தான் பாரிப்லவத்திற் சொல்லவேண்டுவதாக வாவதாலும் உபநிடதத்திற் சொல்லப்படும் "யாக்ஞவல்க்யருக்கு இரண்டு மனையாளிருந்தனர்" என்றதாதிகளாற் சொல்லப்படுவது பாரிப்லவமாக ஒருபொழுது மாகமாட்டாது. ஆகவே அவை அடுத்துஸமீபத்தில் சொல்லப்படும் வித்யையின் ஸ்துதியாகவாகி அதைச் சுளுவாகக் கிரஹிப்பதில் தானுபயோகப்படும் என ஸித்தாந்தப்படுத்த வேண்டி இரண்டுஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணமாரம்பிக்கப்படுகிறது. அவற்றுள் முதல் ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) பாரிப்லவார்த்தா இதிசேத் ந விசேஷிதத்வாத் (23)

(ப-ரை) "யாக்ஞவல்க்யருக்கு இரண்டு மனையாளிருந்தனர்" என்றதாதி

पारिप्लवार्थमाख्यानं किं वा विद्यास्तुतिः स्तुतेः। ज्यायोऽनुष्ठानशेषत्वं तेन पारिप्लवार्थता ॥ १ ॥
मनुर्वैवस्वतो राजेत्येवं तत्र विशेषणात्। अत्र विद्यैकवाक्यत्वभावाद्विद्यास्तुतिर्भवेत् ॥ २ ॥

'अथ ह याज्ञवल्क्यस्य द्वे भार्ये बभूवतुर्मैत्रेयी च कात्यायनी च' (बृ० ४। ५। १), 'प्रतर्दनो ह वै दैवोदासिरिन्द्रस्य प्रियं धामोपजगाम' (कौषी० ३। १), 'जानश्रुतिर्ह पौत्रायणः श्रद्धादेयो बहुदायी बहुपाक्य आस' (छा० ४। १। १) इत्येवमादिषु वेदान्तपठितेष्वाख्यानेषु संशयः—किमिमानि पारिप्लवप्रयोगार्थान्याहोस्वित्सन्निहितविद्याप्रतिपत्त्यर्थानीति। पारिप्लवार्था इमा आख्यानश्रुतयः। आख्यानसामान्यात्। आख्यानप्रयो-

---

வேதாந்தத்திற் சொல்லப்படும் கதைகள் ஸமீபித்துள்ள வித்யையை ஸ்துதிப்பன வன்று. பின்னேயோவெனில் **पारिप्लवार्थाः** (பாரிப்லவார்த்தாः)=பாரிப்லவத்தையே ப்ரயோஜனமாகக்கொண்டன **इति चेत्** (இதிசேத்)=என்ருலோ **न** (ந)=அது பொருந்தாது. ஏன்? ராஜஸூயப்ரகரணத்திலுள்ள வாக்கியசேஷத்தில் **विशेषितत्वात्** (விசேஷிதத்வாத்)="மனுர் வைவஸ்வதோ ராஜா" என்றதாதிகளைத் தனியாக அதற்கென வுபதேசித்திருப்பதா லென்க. (23)

வையாஸிக நியாயமாலே.

(க—ரை) "யாச்ஞவல்க்யருக்கு இரண்டுமனேயா ளிருந்தனர்" என்றதாதி கதைகள் பாரிப்லவத்துக்கு வேண்டி சொல்லப்பட்டனவா? அல்லது அதே வாக்கியத்தில் சொல்லப்படும்வித்யையை ஸ்துதிக்கவேண்டி சொல்லப்படுகின்றனவா? என்பது ஸந்தேஹம். வெரும் ஸ்துதியாகச் சொல்லுவதைக்காட்டிலும் ஒரு அநுஷ்டானத்துக்குச்சேஷ (அங்க) மாகச் சொல்லுவதுதான் மேலானது. ஆனது பற்றி இம்மாதிரியான கதை பாரிப்லவத்துச்கு வேண்டியே ஏற்பட்டதாக வாகிறது என்பது பூர்வபக்ஷம். அந்த அய்வமேதயாக ப்ரகரணத்தின் வாக்கிய சேஷத்தில் "மனுர்வைவஸ்வதோராஜா" என்றதாதிகளைத் தனித்து பாரிப்லவத்துக்குவேண்டி கூறியிருப்பதாலும், இவ்விடத்தில் மேலுள்ள வித்யையுடன் எக வாக்யத்தன்மை யேற்படுவதாலும் இந்தக்கதை வித்யையின் ஸ்துதியாகவே தானுகும் என்பது ஸித்தாந்தம்.

பாஷ்யம்.—"யாக்ஞவல்க்யருக்கு மைத்ரேயி என்றும் காத்யாயனி என்றுமாக இரண்டு மனேயாளிருந்தனர்" என்றும், "திவோதாஸர் என்பவரின் புத்திரரான ப்ரதர்த்தனன் என்பவர் இந்திரனது ப்ரியமான ஸ்தானத்தை யடைந்தார்" என்றும், "புத்திரன் என்பவரின் கோத்திரத்திற் பிறந்தவரும், ஜனய்ருதர் என்பவரின் புத்ரனுமான அரசன் ய்ரத்தையை முன்னிட்டு வெகுதானஞ் செய்பவராகவும், வெகு அன்னதானஞ் செய்கின்றவராகவும், கொடையாளியாகவும் இருந்தார்" என்றுமான இம்மாதிரியான வேதாந்தங்களிற் சொல்லப்படும் கதைகளிற் பின்வருமாறு ஸந்தேஹமுதயமாகிறது. அதாவது:—இக்கதை பாரிப்லவ ப்ரயோகத்துக்குவேண்டி யேற்பட்டனவா? அல்லது ஸமீபத்திலுள்ள வித்யாப்ரதிபத்திக்குவேண்டி யேற்பட்டனவா? என்றும். கதைசொல்லும் இந்த ய்ருதிகள் பாரிப்லவத்துக்கு வேண்டியேற்பட்டனவே யாகும். கதையாகவிருத்தல் என்பது பொ

गस्य च पारिप्लवे चोदितत्वात्। ततश्च विद्याप्रधानत्वं वेदान्तानां न स्यात्, मन्त्रवत्प्रयोगशेषत्वादिति चेत्। तन्न। कस्मात्। विशेषितत्वात्। 'पारिप्लवमाचक्षीत' इति हि प्रकृत्य 'मनुर्वैवस्वतो राजा' इत्येवमादीनि कानिचिदेवाख्यानानि तत्र विशेष्यन्ते। आख्यानसामान्याच्चेत्सर्वगृहीतिः स्यादनर्थकमेवेदं विशेषणं भवेत्। तस्मान्न पारिप्लवार्था एता आख्यानश्रुतयः॥ २३॥

तथा चैकवाक्यतोपबन्धात्॥ २४॥

असति च पारिप्लवार्थत्व आख्यानानां सन्निहितविद्याप्रतिपादनोपयोगितैव न्याय्या। एकवाक्यतोपबन्धात्। तथाहि तत्र तत्र सन्निहिताभिर्विद्याभिरेकवाक्यता दृश्यते प्ररोचनोपयोगात्प्रतिपत्तिसौकर्योपयोगाच्च। मैत्रेयीब्राह्मणे तावत्—'आत्मा वा अरे द्रष्टव्यः' (बृ० ४।५।६) इत्याद्यया विद्ययैकवाक्यता दृश्यते। प्रातर्दनेऽपि 'प्राणोऽस्मि प्रज्ञात्मा

துவாக விருப்பதே அதன் காரணமாகும். கதை சொல்லுவதோ பாரிப்லவத்தில் விதிக்கவும் பட்டிருக்கிறது. ஆகவே வேதாந்தங்கள் வித்யையை ப்ரதானமாக (முக்கியமாகக்) கொண்டன என்பது ஸம்பவிக்காது. மந்திரமானது போல ப்ரயோகத்துக்குச் சேஷமாக(அங்கமாக)இருப்பதே அதன் காரணமாகும். எனின்? அது பொருந்தாது. என்? தனிப்படக் கூறப்பட்டிருப்பதாலென்க. அதாவது:—"பாரிப்லவத்தைச் சொல்லவேண்டும்" என்று தொடங்கி "மனுர்வைவஸ்வதோ ராஜா" என்றதாதிகளான சிலகதைகளே தனிப்பட அங்கு கூறப்படுகிறது என்றும். கதையாக இருப்பதைக் கொண்டு மட்டும் எல்லாக் கதைகளையும் கிரஹிப்பதாயின் "மனுர்வைவஸ்வத:" என்றதாதிகளான தனித்த வுபதேசம் வீணாகவாகிவிடும். ஆகவே வேதாந்தத்திற் சொல்லப்படும் கதைகள் பாரிப்லவத்துக்கு வேண்டியல்ல.

(ஸூ) ததாச ஏகவாக்யதோபபந்தாத் (24)

(ப-ரை) **तथा च** (ததா ச)=ஆக்யானங்களுக்கு பாரிப்லவார்த்தத்வமான தில்லாதிருப்பதால் ஸமீபத்திலுள்ள வித்யையைச் சொல்லுவதற்கு உபயோகப்படுந் தன்மைதான் நியாயமாகவாகிறது. என்? **एकवाक्यतोपबन्धात्** (ஏகவாக்யதோபந்தாத்)=ஸமீபத்திலுள்ள வித்யைகளுடன் இவற்றுக்கு ஏகவாக்யத்வமேதான் காணப்படுகிறது. (24) (எ-று)

பாஷ்யம்—பாரிப்லவத்துக்கு வேண்டியதென்பது இல்லாதபொழுது ஆக்யானங் (கதை) களுக்கு ஸமீபத்திலுள்ள வித்யையின் ப்ரதிபாதனத்துக்கு உபயோகமாக விருக்கும் தன்மையே தான் நியாயமாக வாகிறது. என்? ஏகவாக்யதை காணப்படுவதாலென்க. அதாவது:—ஆங்காங்கு ஸமீபத்திலுள்ள வித்யைகளுடன் ஏகவாக்யத்வமானது காணப்படுகிறது. ப்ரரோசனையில் (ருசியையுண்டு பண்ணுவதில்) உபயோகமுள்ளதா யிருப்பதும், க்ஞானஸவுகரியத்தில் உபயோகமுள்ளதா யிருப்பதுமே அதன் காரணமாகும். மைத்ரேயீ ப்ராம்ஹணத்திலோவெனில்—"ஹேமைத்ரேயி! ஆத்மாவேயன்றோ தர்சனார்ஹமானது" என்றதாதி

इत्याद्यया । जानश्रुतिरित्यत्रापि 'वायुर्वाव संवर्गः' (छा० ४ । ३ । १) इत्याद्यया । यथा 'स आत्मनो वपामुदखिदत्' इत्येवमादीनां कर्मश्रुतिगतानामाख्यानानां सन्निहितविधिस्तुत्यर्थता तद्वत् । तस्मान्न पारिप्लवार्थत्वम् ॥ २४ ॥

५ अग्नीन्धनाद्यधिकरणम् । सू० २५

अत एव चाग्नीन्धनाद्यनपेक्षा ॥ २५ ॥

आत्मबोधः फले कर्मापेक्षो नोवाह्यपेक्षते । अङ्गिनोऽङ्गेष्वपेक्षायाः प्रयाजादिषु दर्शनात् ॥ १ ॥
अविद्यातमसोर्ध्वस्तौ दृष्टं हि ज्ञानदीपयोः । नैरपेक्ष्यं ततोऽत्रापि विद्या कर्मानपेक्षिणी ॥ २ ॥

'पुरुषार्थोऽतः शब्दात्' (ब्र० सू० ३ । ४ । १) इत्येतद्व्यवहितमपि संभवादत इति

வித்யையுடன் ஏகவாக்யத்வமானது காணப்படுகிறது. ப்ராதர்தனுக்யாயிகை சொல்லுமிடத்திலோ வெனில் "ப்ரக்ஞாத்மாவான ப்ராணனாக விருக்கிறேன்" என்றதாதி வித்யையுடன் ஏகவாக்யத்வமானது காணப்படுகிறது. ஜாநஶ்ருதி என்ற இந்த விடத்திலுங்கூட "வாயுவேயன்றோ ஸம்வர்க்கம்" என்றதாதி வித்யையுடன் ஏகவாக்யத்வமானது காணக்கிடக்கிறது. "அவர் தன்னுடைய வபையைப் பிடிங்கினார்" என்பதாய் கர்மகாண்ட ஶ்ருதிகளிலுள்ள இம்மாதிரியான கதைகளுக்கு அதனருகிலுள்ள விதியை ஸ்தோத்திரஞ் செய்யுந்தன்மை சொல்லப்படுவது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காணவேண்டும். ஆனதுபற்றி ஆக்யானங்கள் பாரிப்லவத்துக்கு வேண்டியல்ல என்றேற்பட்டது. (24) (எ—று)

நான்காவது பாரிப்லவாதிகரணம் முற்றிற்று.

அக்னீந்தனாத்யதிகரணம் 5.

(ஸூ) அதஏவ ச அக்னீந்தனாத்யநபேக்ஷா (25)

(ப—ரை) अत एव (அதஏவ)=வித்யையானது புருஷார்த்தஹேதுவாக வாவதிலிருந்து अग्नीन्धनाद्यनपेक्षा च (அக்னீந்தனாத்யநபேக்ஷாச)=அக்னீந்தனாதிகளின் (அவற்றை ஸாதனமாகக்கொண்ட கர்மாதிகளின்) அபேக்ஷை வித்யைக்கில்லை.

வையாஸிக ந்யாயமாலை.

(க—ரை) ஆத்மக்ஞானமானது தனது பலனில் கர்மாவை யபேக்ஷிக்கிறதா? அல்லது அபேக்ஷிப்பதில்லையா? என்பது ஸந்தேஹம். அங்கத்தின் அபேக்ஷை அங்கிக்கிருப்பதை ப்ரயாஜாதிகளில் காண்பதால் ஆத்மக்ஞானமான அங்கியானது தனது அங்கமான கர்மாவை அபேக்ஷிக்கத்தான் செய்யும் என்பது பூர்வபக்ஷம். அவித்யை, இருள் இவற்றை நாசஞ்செய்யும் விஷயத்தில் முறையே க்ஞானம் தீபம் இவற்றுக்குப் பிறவற்றின் அபேக்ஷையின்மையானது காணப்படுகிறதன்றோ? ஆனதுபற்றி இவ்விஷயத்திலும் ஆத்மக்ஞானமானது கர்மாவை யபேக்ஷிப்பதில்லை என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"புருஷார்த்தோத: ஶப்தாத்" என்பது வெகுஅதிகரணங்களுக்கு முன் படிக்கப்பட்டிருப்பினும் இங்கு ஸம்பவமிருப்பதை யொட்டி ஸூத்திரத்தி

परामृश्यते। अत एव च विद्यायाः पुरुषार्थहेतुत्वादग्नीन्धनादीन्याश्रमकर्माणि विद्यया स्वार्थसिद्धौ नापेक्षितव्यानीत्याद्यस्यैवाधिकरणस्य फलमुपसंहरत्यधिकविवक्षया ॥ २५ ॥

६ सर्वापेक्षाधिकरणम्। सू० २६–२७

सर्वापेक्षा च यज्ञादिश्रुतेरश्ववत् ॥ २६ ॥

ுள்ள "அத:" என்றதால் அனுவாதம் செய்யப்படுகிறது. அத ஏவச=வித்யையானது புருஷார்த்தத்துக்கு ஹேதுவாகவாவதால் அக்னீந்தனுதிகளை=ஆஸ்ரம கர்மங்களைத் தனதுபயன் ஸித்திக்கும் விஷயத்தில் வித்யையானது அபேக்ஷிப்ப தில்லையென்பதாய் இந்தப் பாதத்தின் முதலாவது அதிகரணத்தினுடைய பயனை அதிகமான விஷயத்தைச் சொல்லக் கருத்துக்கொண்டவராய் முடிக்கிறார். (25)

குறிப்பு—கர்மங்களுக்கு ஸாமர்த்தியமில்லாததால் முக்தியில் அபேக்ஷயில் லையே யொழிய வித்யையுண்டாகும் விஷயத்தில் சித்தசுத்தி வாயிலாக கர்மாவின் அபேக்ஷயுண்டு என்பது பாஷ்யத்தின் கருத்து. (எ–று)

ஐந்தாவது அக்னீந்தனுத்யதிகரணம் முற்றிற்று

ஸர்வாபேக்ஷாதிகரணம் 6.

(ஸூ) ஸர்வாபேக்ஷா ச யக்ஞாதிச்ருதே: அச்வவத்(26)

(ப–ரை) ஆத்மவித்யைக்குத் தனது உத்பத்தியில் सर्वापेक्षा च (ஸர்வாபேக்ஷாச)=எல்லா ஆஸ்ரமகர்மங்களின் அபேக்ஷயு மிருக்கிறது. ஏன்? यज्ञादिश्रुतेः (யக்ஞாதிஸ்ருதே:)="யக்ஞேந தானேன" என்றதாதி சுருதியிருப்பதே அதன் காரணமாகும். अश्ववत् (அஸ்வவத்)=குதிரையானது அதன் யோக்யதையை முன்னிட்டு தேர்முதலியவற்றில் கட்டப்படுகிறதே யொழிய கலப்பை யுழுவதில் கட்டப்படுவதில்லை என்பது எவ்விதமோ அவ்விதமே இங்குங் காண்க. (26) (எ–று)

குறிப்பு—சிலதேசங்களில் குதிரையைக் கலப்பையிற் கட்டிஉழுவதிலேயே உபயோகப்படுத்துவதைநாம் அனுபவத்தில் காண்கிறோம். அவ்விதமிருக்க "அஸ்வவத்" என்றுசொன்னது எவ்விதம் பொருந்துமெனின்? கூறுவாம். பொதுவாய் குதிரையானது தேர் முதலியவற்றில் கட்டத்தகுதியுடையதே அன்றிக் கலப்பையிற் கட்டத் தகுதியுடையதன்று. என்றகருத்துக்கொண்டே இவ்விதஞ் சொல்லப்பட்டது. ஆனல் சிலதேசத்தில் கலப்பையில் கட்டுகின்றனரே எனின்? பெரும்பாலான வைதிகர்கள் பசுவைத்தைவமாக எண்ணிப் பூஜிக்கின்றனர். அவ்விதமே வைதிக சாஸ்திரமு மிருக்கிறது. சிலர் பசுவைவதை செய்கின்றனர் அதற்காக அவர்செய்வது தகுதியுள்ளதாகவாகுமோ? ஒருபொழுதும் தகுதியுள்ளதாகவாகமாட்டாது. அதுபோலவே குதிரையைக் கலப்பையில் கட்டுவது முற்றிலும் தகாதகாரியமே என்பது ஸூத்திரக்காரரின் கருத்து என்றேற்படுகிறது.

उत्पत्तावनपेक्षेय मुत कर्माण्यपेक्षते । फले यथानपेक्षैवमुत्पत्तावनपेक्षता ॥ १ ॥
यज्ञशान्त्यादिसापेक्षं विद्याजन्म श्रुतिद्वयात् । हलेऽनपेक्षितोऽप्यश्वो रथे यद्वदपेक्ष्यते ॥ २ ॥

इदमिदानीं चिन्त्यते किं विद्याया अत्यन्तमेवानपेक्षाश्रमकर्मणामुतास्ति काचिदपेक्षेति। तत्रात एवाग्नीन्धनादीन्याश्रमकर्माणि विद्यया स्वार्थसिद्धौ नापेक्ष्यन्त एवमत्यन्तमेवानपेक्षायां प्राप्तायामिदमुच्यते सर्वापेक्षा चेति। अपेक्षते च विद्या सर्वाण्याश्रमकर्माणि नात्यन्तमनपेक्षैव। ननु विरुद्धमिदं वचनमपेक्षते चाश्रमकर्माणि विद्या नापेक्षते चेति। नेति ब्रूमः। उत्पन्ना हि विद्या फलसिद्धिं प्रति न किञ्चिदन्यदपेक्षते, उत्पत्तिं प्रति त्वपेक्षते। कुतः—यज्ञादिश्रुतेः। तथाहि श्रुतिः—'तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ஆத்மஜ்ஞானமானது தனது உத்பத்தியில் கர்மாக்களையபேக்ஷிப்பதில்லையா? கர்மாக்களை அபேக்ஷிக்கின்றதா? என்பது ஸந்தேஹம். பலனில் எவ்விதமபேக்ஷிப்பதில்லையோ அவ்விதமே தனது உத்பத்தியிலுங் கூடகர்மாக்களையபேக்ஷிப்பதில்லை என்பது பூர்வபக்ஷம். "यज्ञेन दानेन" யஜ்ஞத்தாலும் தானத்தாலும் என்றும், "शान्तो दान्तः" சாந்தனாகவும் தாந்தனாகவும் என்றுமாக இரண்டு சுருதிகளிருப்பதால் வித்யையின் (ஆத்மஜ்ஞானத்தின்) உத்பத்தியானது யாகம், शान्ति (சமகுணம்) இவற்றை யபேக்ஷித்தே ஏற்படுகிறது. கலப்பையில் குதிரையானது அபேக்ஷிக்கப்படா விடினும் தேரில் எவ்விதம் அபேக்ஷிக்கப்படுகிறதோ அவ்விதமே இங்குமாகும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—வித்யைக்கு முற்றிலும் ஆஶ்ரமகர்மங்களின் அபேக்ஷையேகிடையாதா? அல்லது யாதானுமொருவகையில் அவற்றின் அபேக்ஷையுண்டா? என்பது இதுபோழ்து விசாரிக்கப்படுகிறது. அவ்விடத்தில் ஆனதுபற்றியே அக்னீந்தனாதிகளான ஆஶ்ரமகர்மங்கள் வித்யையின் சொந்தப்பயன் (அவித்யாநிவிருத்தி) ஏற்படும் விஷயத்தில் அபேக்ஷிக்கப்படாததால் இவ்விதமே முற்றிலுமே அவற்றின் அபேக்ஷையில்லை எனப்ராப்தமாகவே "ஸர்வாபேக்ஷாச" என்ற இது சொல்லப்படுகிறது. அதாவது:—வித்யையானது எல்லா ஆஶ்ரமகர்மங்களையு மபேக்ஷிக்கிறதேயொழிய முற்றிலும் அவற்றின் அபேக்ஷையே இல்லை என்பதில்லை.

சங்கை—வித்யையானது ஆஶ்ரமகர்மங்களை யபேக்ஷிக்கவும் செய்கிறது அபேக்ஷிப்பதுமில்லை என்ற இந்தவசனம் முறண்பட்டதாகவாகுமன்ருே எனின்?

உத்தரம்—இல்லையென்று சொல்லுகிருேம். அதாவது:—உண்டானவித்யை (ஆத்மஜ்ஞான) யானது பலஸித்தியைக் குறித்து வேறுஒன்றையு மபேக்ஷிப்பதில்லை. தனது உத்பத்தியைக் குறித்தோ வெனில் பிறவற்றை யபேக்ஷிக்கிறது. ஏன்? யஜ்ஞாதி ஶ்ருதியிருப்பதே அதன் காரணமாகும். அதாவது:—"அந்த இந்த ஆத்மாவை ப்ராம்ஹணர்கள் வேதாநுவசனத்தினுலும், யாகத்தாலும், தானத்தாலும், தபஸ்ஸினுலும் விஷயங்களை விலக்குவதாலும் அறியவிரும்புகின்றனர்"

यज्ञेन दानेन तपसाऽनाशकेन' (बृ० ४।४।२२) इति यज्ञादीनां विद्यासाधनभावं दर्शयति। विविदिषासंयोगाच्चैषामुत्पत्तिसाधनभावोऽवसीयते। 'अथ यद्यज्ञ इत्याचक्षते ब्रह्मचर्यमेव तत्' (छा० ८।५।१) इत्यत्र च विद्यासाधनभूतस्य ब्रह्मचर्यस्य यज्ञादिभिः संस्तवाद्यज्ञादीनामपि हि साधनभावः सूच्यते। 'सर्वे वेदा यत्पदमामनन्ति तपांसि सर्वाणि च यद्वदन्ति। यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं सङ्ग्रहेण ब्रवीमि' (कठ० २।१५) इत्येवमाद्या च श्रुतिराश्रमकर्मणां विद्यासाधनभावं सूचयति। स्मृतिरपि—'कषायपक्तिः कर्माणि ज्ञानं तु परमा गतिः। कषाये कर्मभिः पक्वे ततो ज्ञानं प्रवर्तते' इत्येवमाद्या। अश्ववदिति योग्यतानिदर्शनम्। यथाच योग्यतावशेनाश्वो न लाङ्गलाकर्षणे युज्यते रथचर्यायां तु युज्यते। एवमाश्रमकर्माणि विद्यया फलसिद्धौ नापेक्ष्यन्त उत्पत्तौ चापेक्ष्यन्त इति॥ २६॥

शमदमाद्युपेतः स्यात्तथापि तु तद्विधेस्तदङ्गतया तेषामवश्यानुष्ठेयत्वात्॥ २७॥

என்ற சுருதியானது யாகாதிகள் வித்யைக்கு ஸாதனமென்பதைத் தெரிவிக்கிறது. இந்த யக்ஞம் தானம் தபஸ் முதலியவற்றுக்கு விவிதிஷை (வேதநேச்சை) யுடன் ஸம்யோகமிருப்பதாலும் க்ஞானோத்பத்திக்கு ஸாதனமாக இருக்குந்தன்மை நிஸ்சயிக்கப்படுகிறது. "பின்னர் எதை யக்ஞமெனச் சொல்லுகின்றனரோ அது ப்ரம்ஹசர்யமே யாகும்" என்றவிடத்திலும் வித்யைக்கு ஸாதனமாகவான ப்ரம்ஹசர்யத்தை யாகாதிகளாக ஸ்துதிசெய்திருப்பதிலிருந்து யக்ஞாதிகளுக்கும் வித்யைக்கு ஸாதனமாக இருக்குந்தன்மை சூசிப்பிக்கப்படுகிறது. "எல்லாவேதங்களும் எந்தப் பதத்தைச் சொல்லுகின்றனவோ எல்லாத் தபஸ்ஸுகளும் எதைச் சொல்லுகின்றனவோ, எதில் இச்சை கொண்டவர்களாய் ப்ரம்ஹசர்யத்தை யனுஷ்டிக்கின்றனரோ அந்தப் பதத்தைச் சுருக்கமாக உமக்குச் சொல்லுகின்றேன்" என்றதாதி ஸ்ருதியும் ஆஸ்ரம கர்மங்களுக்கு வித்யையைக்குறித்து ஸாதனமாக விருத்தலைச் சூசிப்பிக்கின்றது. "கர்மங்களைச் செய்தால் சித்ததோஷம் விலகுகிறது. க்ஞானமே முடிவானபலனாகும். கர்மங்களால் கஷாயமானது (சித்த தோஷமானது) பக்குவத்தை யடைந்ததும் அதனின்றும் க்ஞானமானது ஏற்படுகிறது" என்றதாதி ஸ்மிருதியு மிருக்கிறது. ஸூத்திரத்தில் குதிரை போல என்றது தகுதியைக் காட்டுவதாகும். தகுதியை முன்னிட்டுக் குதிரையானது கலப்பையை இழுப்பதில் கட்டப்படாது தேரிழுப்பதிலே கட்டப்படுவது எவ்விதமோ அவ்விதமே ஆஸ்ரமகர்மங்கள் வித்யையினால் தனது பலனுண்டாகும் விஷயத்தில் அபேக்ஷிக்கப் படாது தனது (க்ஞானத்தினது) உத்பத்தியில் அபேக்ஷிக்கப்படுகிறது என்றும். (26) (எ—று)

(ஸூ) சமதமாத்யுபேத: ஸ்யாத் ததாபி து தத்விதே: ததங்கதயா தேஷாம் அவச்யானுஷ்டேயத்வாத் (27)

यदि कश्चिन्मन्येत यज्ञादीनां विद्यासाधनभावो न न्याय्यो विध्यभावात्। 'यज्ञेन विविदिषन्ति' इत्येवञ्जातीयका हि श्रुतिरनुवादस्वरूपा विद्याभिष्टवपरा न यज्ञादिविधिपरा। इत्थं महाभागा विद्या यद्यज्ञादिभिरेतामवाप्तुमिच्छन्तीति। तथापि तु शमदमाद्युपेतः स्याद्विद्यार्थी 'तस्मादेवंविच्छान्तो दान्त उपरतस्तितिक्षुः समाहितो भूत्वात्मन्येवात्मानं पश्यति' (बृ० ४।४।२३) इति विद्यासाधनत्वेन शमदमादीनां विधानाद्विहितानां चावश्यानुष्ठेयत्वात्। नन्वत्रापि शमाद्युपेतो भूत्वा पश्यतीति वर्तमानापदेश उपलभ्यते न

(ப—ரை) (யக்ஞாதிகளுக்கு வித்யாஸாதனத்தன்மை சொல்லுவது பொருந்தாதுஎன்றும், "யக்ஞத்தால் அறிவை யடையவிருப்பு கின்றனர்" என்றது யாகாதிகளால் இதையடைய விரும்புகின்றன ரென்றால் வித்யையின் பெருமையைச் சொல்லவேண்டுமோ? என வித்யையை ஸ்துதிக்கவந்ததே யொழிய இந்த வாக்கியம் யாகாதிகளை விதிக்கவந்த தன்று என்றும் ஒருவன் எண்ணுவான்) तथापितु (ததாபி து)=அவ்விதமெண்ணினபோதிலும், [विद्यार्थी (வித்யையில் விருப்பமுள்ளவன்]=शमदमाद्युपेतः स्यात् (ஶமதமாத்யுபேதஃ ஸ்யாத்)=சமம் தமம் முதலியவற்றுடன் கூடினவனுகவே இருக்கவேண்டும். तद्विधेः (தத்விதேஃ)=அந்தச் சமாதிகள் வித்யாஸாதனங்களென விதியிருப்பதே அதன் காரணமாகும். तदङ्गतया (ததங்கதயா)=அந்த வித்யைக்கு அங்கமாகும் முறையில் तेषाम् (தேஷாம்)=அந்தச் சமதமாதிகள் अवश्यानुष्ठेयत्वात् (அவஶ்யாநுஷ்டேயத்வாத்)=கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டியனவாகவு மிருக்கின்றன. (27) (எ—று)

பாஷ்யம்.—விதியில்லாமை பற்றி யக்ஞாதிகளுக்கு வித்யைக்குச் சாதனமாகுந்தன்மை சொல்லுவது பொருந்தாது. "யக்ஞேந விவிதிஷந்தி" யாகத்தால் அறிய விருப்புகின்றனர் என்ற இம்மாதிரியான சுருதியானது அனுவாத ஸ்வரூபமுள்ளதாய் வித்யையை ஸ்துதிக்கவந்ததாகுமே யொழிய யக்ஞாதிகளை விதிக்க வந்ததன்று. யக்ஞாதிகளைக் கொண்டும் இந்த வித்யையை அடையவிரும்புகின் கின்றனர் என்பது பற்றி இந்தவித்யையானது இத்தகைய மஹிமை யுள்ளது என வொருவன் எண்ணுவானேல் அவ்விதமவனெண்ணின போதிலும் வித்யையில் விருப்பமுள்ளவன் சமதமாதிகளுடன் கூடினவனுகவே இருத்தல்வேண்டும். "ஆனதுபற்றி இவ்வித அறிவுள்ளவன் சாந்தனுகவும், (அந்தரிந்திரிய ஜயமுள்ளவனுகவும்) தாந்தனுகவும் (பாஹ்யேந்திரிய ஜயமுள்ளவனுகவும்) உபரதனுகவும் (ஸன்யாஸியாகவும்) திதிக்ஷுவாகவும் (காமாதிகளை ஜயித்தவனுகவும்) ஸமாஹிதனுகவும் (ஒரேயிடத்தில் மனத்தை நெறுத்தினவனுகவும்) இருந்து கொண்டு தன்னிடத்திலேயே ஆத்மாவைப்பார்க்கிறுன்" என்றதால் வித்யைக்கு ஸாதனமாக சமதமாதிகளின் விதியிருப்பதாலும் விதிக்கப்பட்டவை அவஶ்யமனுஷ்டேயமாகவிருப்பதாலுமேஎன்க.

சங்கை— இவ்விடத்திலுங்கூட சமாதிகளுடன் கூடினவனுகவாகிப்பார்க்கிறுன் என்றதால் நிகழ்கால ப்ரயோகம் காணப்படுகிறதே யொழிய விதிகாணப்படவில்லை யன்றோ எனின்?

विधिः। नेति ब्रूमः। तस्मादिति प्रकृतप्रशंसापरिग्रहाद्विधित्वप्रतीतेः। पश्येदिति च माध्यन्दिना विस्पष्टमेव विधिमधीयते। तस्माद्यज्ञाद्यनपेक्षायामपि शमादीन्यपेक्षितव्यानि। यज्ञादीन्यपि त्वपेक्षितव्यानीति यज्ञादिश्रुतेरेव। ननूक्तं यज्ञादिभिर्विविदिषन्तीत्यत्र न विधिरुपलभ्यत इति। सत्यमुक्तं तथापि त्वपूर्वत्वात्संयोगस्य विधिः परिकल्प्यते। नह्ययं यज्ञादीनां विविदिषासंयोगः पूर्वं प्राप्तो येनानूद्येत 'तस्मात्पूषा प्रपिष्टभागोऽदन्तको हि' इत्येवमादिषु चाश्रुतविधिकेष्वपि वाक्येष्वपूर्वत्वाद्विधिं परिकल्प्य पौष्णं पेषणं विकृतौ प्रतीयेतेत्यादिविचारः प्रथमे तन्त्रे प्रवर्तितः। तथाचोक्तम् 'विधिर्वा धारणवत्' (ब्र० सू० ३।४।२०) इति। स्मृतिष्वपि भगवद्गीताद्यास्वनभिसन्धाय फलमनुष्ठितानि यज्ञादीनि मुमुक्षोर्ज्ञानसाधनानि भवन्तीति प्रपञ्चितम्। तस्माद्यज्ञादीनि शमदमादीनि च यथाश्रमं सर्वाण्येवाश्रमकर्माणि विद्योत्पत्तावपेक्षितव्यानि। तत्राप्येवंविदिति विद्यासंयो-

---

உத்தரம்—அவ்விதமில்லை யென்று சொல்லுகிறோம். சுருதியில் [யாதுகாரணத்தால் இவ்வித அறிவுள்ளவன் பாபமான கர்மத்தினால் லேபத்தை (ஸம்பந்தத்தை) அடைவதில்லையோ] "அக்காரணத்தினால்" என்றதால் முன்னர் கூறிய ப்ரஶம்ஸையைப் (புகழுரையைக்) கிரஹித்திருப்பதால் "**पश्यति** (பஶ்யதி)=என்றவிடத்தில் விதித்தன்மையின் தோற்றம் ஏற்படவேதான் செய்கிறது. மாத்யந்தினர்கள் (சுக்லயஜுர்வேதிகள்) **पश्येत्** (பஶ்யேத்)=என்பதாய்த் தெளிவாகவே விதியை (விதிபோதக சப்தத்தைப்) படிக்கின்றனர். ஆகவே யக்ஞாதிகளின் அபேக்ஷையில்லாவிடினுங்கூட ஶமாதிகள் அபேக்ஷிக்கக்கூடியனவாகவே தானாகின்றன. யக்ஞாதிகளுங் கூட அபேக்ஷிக்கத்தக்கனவே தானாகும். யக்ஞாதிஶ்ருதி யிருப்பதினாலேயே என்க.

சங்கை—"யக்ஞாதிகளால் அறிவை யடையவிரும்புகின்றனர்" என்ற விடத்தில் விதிகாணப்படவில்லை எனச் சொல்லப்பட்டதன்றோ எனின்?

உத்தரம்—சொல்லப்பட்டது உண்மைதான். ஆயினுங்கூட அபூர்வமாக (வேறுப்ரமாணத்தாற் கிடைக்காததாக) இருப்பதால் யக்ஞாதி ஸம்பந்தத்தின் விதியானது கல்பிக்கப்படுகிறது. யக்ஞாதிகளுக்கு வேதநேச்சையுடன் ஸம்பந்தமானது முன்னர் ப்ராப்த்தமன்று. எதுகொண்டு அது அனுவதிக்கப்படுமோ. "ஆகவே பூஷா என்றதேவதை பிஷ்டத்தை (மாவைத்) தனது பாகமாகவுடையது. அது தந்தங்களற்றதன்றோ" என்றதாதிகளான விதிகாணப்படாத வாக்கியங்களினுங்கூட அபூர்வமாக (வேறுப்ரமாணத்தாற் கிடைக்காததாக) இருப்பது பற்றி விதியைக் கல்பிக்கவேண்டும் என "பௌஷ்ணம் பேஷணம் விகிருதௌ ப்ரதீயேத" என்றதாதி விசாரமானது பூர்வமீமாம்ஸையில் செய்யப்பட்டிருக்கிறது. அவ்விதமே "விதிர்வாதாரணவத்" என்ற விடத்திற் சொல்லவும் பட்டிருக்கிறது. பகவத்கீதாதிகளான ஸ்மிருதிகளில் பலனை எதிர்பாராது செய்யப்பட்ட யக்ஞாதிகள் முமுக்ஷுவுக்குக் ஞானஸாதனங்களாகவாகின்றன என விளக்கவும் பட்டிருக்கிறது. ஆகவே யக்ஞாதிகளும் சமதமாதிகளுமான அந்தந்த ஆஶ்ரமத்துக்குத்

गात्प्रत्यासन्नानि विद्यासाधनानि शमादीनि, विविदिषासंयोगात्तु बाह्यतराणि यज्ञादीनीति विवेक्तव्यम् ॥ २७ ॥

७ सर्वान्नानुमत्यधिकरणम् । सू० २८–३१

सर्वान्नानुमतिश्च प्राणात्यये तद्दर्शनात् ॥ २८ ॥

தக்கபடிக்குள்ள எல்லா ஆஸ்ரம கர்மங்களுமே வித்யையினுத்பத்தியில் அபேக்ஷிக்கத் தக்கனவாகவே தானுகின்றன. அதிலுங்கூட "ஏவம் வித்" இவ்விதமறிபவன் என்பது வித்யையுடன் ஸம்பந்தத்தை யடைவதால் சமாதிகள் அந்தரங்கங்களான வித்யாஸாதனங்களென்றும், வேதநேச்சையுடன் ஸம்பந்தத்தை யடைவதால் யக்ஞாதிகள் பஹிரங்கஸாதனங்களென்றும் பகுத்தறியவேண்டும். (27)

ஆறுவது ஸர்வாபேக்ஷாதிகரணம் முற்றிற்று.

ஸர்வான்னாநுமத்யதிகரணம் 7.

(அ-கை) சாந்தோக்கியத்தில் இந்திரியங்கள் ஒன்றுக்கொண்டு விவாதிக்கத் தொடங்கின என்றவிடத்தில் முக்யப்ராணன் அந்த இந்திரியங்களைப் பார்த்து எனக்கு எது அன்னமாகப் போகிறது என்றது. அதுகேட்ட இந்திரியங்கள் "நாயீருகவும், பக்ஷிகளீருகவுமுள்ள எல்லாப்ராணிகளுக்கும் எது அன்னமோ அதுவே உனது அன்னமாகும்" என்றன. ஆகவே இம்முறையால் ஸர்வமும் ப்ராணனுடைய அன்னம் எனச் சிந்திக்கவேண்டும் என்றுவிதித்துச் சுருதி சொல்லுவதாவது:—"இவ்வித ப்ராணோபாஸகன் விஷயத்தில் அன்னமாகவில்லாதது ஒன்றுமே இல்லை" என்றும். அதாவது:—எல்லாமே ப்ராணனுக்கு அன்னமாகவாவதால் எல்லாவற்றையுமே அன்னமாகக் கொண்ட ப்ராணோபாஸகன் விஷயத்தில் அன்னமாகவாகாதது ஒன்றுமே இல்லையென்றும். அங்கு ஸம்சயமுதயமாகிறது. அதாவது:—ப்ராணோபாஸகனுக்குச் சொன்ன இந்த ஸர்வான்ன அனுமதியானது சமதமாதிகள் போல வித்யைக்கு அங்கமாகச் சொல்லப்படுகிறதா? அல்லது ஸ்துதிக்கு வேண்டி சொல்லப்படுகிறதா? என்றும். இவ்விதம் ஸந்தேஹம் வரவே ஸர்வான்ன அனுமதியானது வித்யாங்கமாகத் தான் விதிக்கப்படுகிறது என்று பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே வித்யையை ஸ்துதிக்கவேண்டியே ஸ்ர்வான்னுநுமதி சொல்லப்படுகிறது என்று ஸித்தாந்தப் படுத்தவேண்டி நான்கு ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணம் ஆரம்பிக்கப் படுகிறது. அவற்றுள் முதலாவது ஸூத்திரம் பின்வருமாறு.—

(ஸூ) ஸர்வன்னுநுமதி: ச ப்ராணுத்யயே தத்தர்சனுத் (28)

(ப-ரை) **सर्वान्नानुमतिश्च** (ஸர்வான்னுநுமதிஸ் ச)=ப்ராணோபாஸகனுக்குச் சொன்ன ஸர்வான்னுநுமதியும், **प्राणात्यये** (ப்ராணுத்யயே)=ப்ராணனுக்கே (உயிர்க்கே) ஆபத்து நேருங்காலத்திற்றுன் என்று கண்டுகொள்ள வேண்டும். என்? **तद्दर्शनात्** (தத்தர்ஸனுத்)=அவ்விதம் சுருதியில் காணப்படுவதாலென்க. (28)

सर्वाशनविधिः प्राणविदोऽनुज्ञाऽथवाऽऽपदि। अपूर्वत्वेन सर्वान्नभुक्तिर्ध्यातुर्विधीयते ॥ १ ॥

श्वाद्यन्नभोजनाशक्तेः शास्त्राचाभोज्यवारणम्। आपदि प्राणरक्षार्थमेवानुज्ञायतेऽखिलम् ॥ २ ॥

प्राणसंवादे श्रूयते छन्दोगानाम्—'न ह वा एवंविदि किञ्चनानन्नं भवति' (छां० ५। २। १) इति। तथा वाजसनेयिनाम्—'न ह वा अस्यानन्नं जग्धं भवति नानन्नं प्रतिगृहीतम्' (बृ० ६। १। १४) इति। सर्वमेवास्यादनीयमेव भवतीत्यर्थः। किमिदं सर्वान्नानुज्ञानं शमादिवद्विद्याङ्गं विधीयत उत स्तुत्यर्थं सङ्कीर्त्यत इति संशये विधिरिति तावत्प्राप्तम्। तथाहि—प्रवृत्तिविशेषकर उपदेशो भवत्यतः प्राणविद्यासन्निधानात्तदङ्गत्वेनेयं नियमनिवृत्तिरुपदिश्यते। नन्वेवं सति भक्ष्याभक्ष्यविभागशास्त्रव्याघातः स्यात्। नैष दोषः,

---

வையாஸிக நியாயமாலே.

(க – ரை) ப்ராணோபாஸகனுக்கு ஸர்வான்னசனம் விதிக்கப்படுகிறதா? அல்லது ஆபத்தில் ஸம்மதி மட்டுமா? என்பது ஸந்தேஹம். அபூர்வமாக (வேறுப்ரமாணத்தால் கிடைக்காததாக) இருப்பதுபற்றி ப்ராணோபாஸகனுக்கு ஸர்வான்னபோஜனம் விதிக்கத்தான் படுகிறது என்பது பூர்வபக்ஷம். நாய் முதலியவற்றைப் புஜிப்பதென்பது முடியாததாகையாலும் சாஸ்திரத்தினல் அபோஜ்யான்னமானது மறுக்கப்பட்டிருப்பதாலும், ப்ராணபத் காலத்தில் ப்ராணனை ரக்ஷிக்கவேண்டி எல்லாம் ஸம்மதிக்கப்படுகிறது. என்பது ஸித்தாந்தம். (எ–று)

பாஷ்யம்.—சந்தோகர்களுடைய(உபநிடதத்தில்)ப்ராணஸம்வாதஞ் சொல்லுமிடத்தில் "இவ்வித ப்ராணோபாஸகன் விஷயத்தில் அன்னமாகவில்லாதது ஒன்றுமே இல்லையன்றோ" எனப் படிக்கப்படுகிறது. அவ்விதமே வாஜஸநேயிகளுடைய (சுருதியிலும்) "இவ்வித ப்ராணோபாஸகனுக்கு அன்னமாகவில்லாதது (நிஷித்தமான அன்னமானது) சாப்பிடப்பட்டதாகவுமாகாது அன்னமாக இல்லாதது ப்ரதிக்ரஹமாகப் பெறப்பட்டதாகவுமாகாது" எனப்படிக்கப்படுகிறது. எல்லாமே இவனால் சாப்பிடக்கூடியதாகவே தானாகிறது என்பது அதன் பொருள். இந்த ஸர்வான்னானுமதியானது ஸமதமாதிகள் போல வித்யாங்கமாக விதிக்கப்படுகிறதா? அல்லது வித்யாஸ்துதிக்கு வேண்டி சொல்லப்படுகிறதா? என ஸந்தேஹம் வரவே முதலில் கிடைத்தது யாதென்னில் ப்ரவிருத்தி விசேஷத்தைச், செய்வதாக உபதேசமிருக்கிறது. * ஆகவே ப்ராணோபாஸனத்தின் ஸன்னிதியில் பாடமிருப்பதைக் கொண்டு அந்த ப்ராணோபாஸனத்துக்கு அங்கமாகவே இந்த ஆஹாரநியமத்தின் நிவிருத்தியானது உபதேசிக்கப்படுகிறது என்றும்.

சங்கை—இவ்விதமாயின் சாப்பிடத்தக்கதையும் சாப்பிடத்தகாததையும் பிரித்து உபதேசிக்கும் சாஸ்திரம் வீணாகிவிடுமன்றோ எனின்?

உத்தரம்—இந்தத்தோஷமில்லே. பொதுவிதி விலக்குவிதி என்ற முறையில் அந்தப் பக்ஷ்யாபக்ஷ்ய சாஸ்திரத்துக்குப் பாதம் ஸம்பவிக்கலாம். ஒருப்ராணியை

---

* விதியை அங்கீகரித்தால் இந்த வாக்கியத்துக்கு ப்ரவிருத்தியில் விசேஷத்தைப் போதிக்கும் தன்மை ஏற்படுகிறது. ஆதலால் விதாயகத்வத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று கருத்து.

सामान्यविशेषभावाद्बाधोपपत्तेः। यथा प्राणिहिंसाप्रतिषेधस्य पशुसंज्ञपनविधिना बाधः। यथाच 'न काञ्चन परिहरेत्तद्व्रतम्' (छा० २।१३।२) इत्यनेन वामदेव्यविद्याविषयेण सर्वस्त्र्यपरिहारवचनेन तत्सामान्यविषयं गम्यागम्यविभागशास्त्रं बाध्यते। एवमनेनापि प्राणविद्याविषयेण सर्वान्नभक्षणवचनेन भक्ष्याभक्ष्यविभागशास्त्रं बाध्येतेति। एवं प्राप्ते ब्रूमः—

नेदं सर्वान्नानुज्ञानं विधीयत इति। नह्यत्र विधायकः शब्द उपलभ्यते 'न ह वा एवंविदि किञ्चनानन्नं भवति' (छा० ५।२।१) इति वर्तमानापदेशात्। नचासत्यामपि विधिप्रतीतौ प्रवृत्तिविशेषकरत्वलोभेनैव विधिरभ्युपगन्तुं शक्यते। अपिच श्वादिमर्यादं प्राणस्यान्नमित्युक्त्वेदमुच्यते 'नैवंविदः किञ्चिदनन्नं भवतीति। नच श्वादिमर्यादमन्नं मानुषेण देहेनोपभोक्तुं शक्यते। शक्यते तु प्राणस्यान्नमिदं सर्वमिति विचिन्तयितुम्। तस्मात्प्राणान्नविज्ञानप्रशंसार्थोऽयमर्थवादो न सर्वान्नानुज्ञानविधिः। तद्दर्शयति 'सर्वान्नानुमतिश्च प्राणात्यये' इति। एतदुक्तं भवति—प्राणात्यय एव हि परस्यामापदि सर्वमन्नम

யும் கொல்லக்கூடாது என்ற சாஸ்திரத்துக்குப் பசுஸம்க்ஞபனத்தை (யாகத்தில் பசுவதையைச்) சொல்லும் விதியினல்பாதம் ஏற்படுவது எவ்விதமோ, வாமதேவ்யம் என்ற ஸாமத்தை யுபாஸிப்பவன் "ஒருஸ்திரீயையும் தள்ளக்கூடாது" என்ற இந்த ஸர்வஸ்திரீயையும் விலக்கக்கூடாதென்ற வசனத்தினல் ஸ்திரீஸாமான்யத்தை விஷயமாகக் கொண்ட இன்ன ஸ்திரீயினிடத்தில் தான் போகலாம் இன்னஸ்திரீயினிடத்தில் போகக்கூடாது என்ற சாஸ்திரம் பாதிக்கப்படுவது எவ்விதமோ, இவ்விதமே ப்ராணோபாஸனையை விஷயமாகக்கொண்ட ஸர்வான்ன பக்ஷண வசனத்தினல் பக்ஷ்யாபக்ஷ்ய விபாகத்தைச் சொல்லும் சாஸ்திரம் பாதிக்கத்தான் படும். என இவ்விதம் பூர்வபக்ஷமானது ப்ராப்தமாகவே ஸித்தாந்தஞ் சொல்லுகிறோம். இந்த ஸர்வான்னநுமதியானது விதிக்கப்படவில்லை என்றும். இவ்விடத்தில் விதிபோதகமான சப்தமொன்றும் காணப்படவில்லையன்றே. "இவ்வித ப்ராணோபாஸகன் விஷயத்தில் அன்னமில்லாததாக வொன்று மாவதில்லை" என்ற விடத்தில் பவதி என நிகழ்கால போதகமானசப்தமே காணப்படுகிறது. விதியின்தோற்றமில்லாவிடினுங்கூட ப்ரவிருத்தி விசேஷத்தைத் தரும் விஷயத்தில் ஆசைகொண்டு விதியை ஒப்புக்கொள்ளவும் முடியாது. மேலும் நாய்முதலியவற்றை முடிவாகக்கொண்டது ப்ராணனுக்கு அன்னமாகவாகிறது என்றுசொல்லி "இவ்வித உபாஸகனுக்கு அன்னமாக வில்லாதது ஒன்றுமில்லை" எனச் சொல்லபடுகிறது. நாய்முதலியவற்றை முடிவாகக் கொண்ட அன்னமானது மானுஷமானதேஹத்தினல் சாப்பிட முடியாததன்றே. இவையாவும் ப்ராணனுடைய அன்னம் எனச் சிந்திக்கவேண்டுமானல் முடியும். ஆகவே ப்ராணனுடைய அன்னவிக்ஞானத்தைப் புகழவேண்டி இது அர்த்தவாதமே யொழிய ஸர்வான்னநுமதி விதியன்று. அதை ஸூத்திரக்காரர் "ஸர்வான்னநுமதி: ப்ராணாத்யயே" என்றதால் காண்பிக்கிறார். அதனல் இது சொல்லப்பட்டதாகவாகிறது. ப்ராணனுக்கு அழிவு வரக்கூடியதான மேலான ஆபத்தில் எல்லா அன்னமும் சாப்பிடக்கூடியது என அனுமதி தரப்படு

दनीयत्वेनाभ्यनुज्ञायते तद्दर्शनात्। तथाहि श्रुतिश्चाक्रायणस्यर्षेः कष्टायामवस्थायामभक्ष्यभक्षणे प्रवृत्तिं दर्शयति—'मटचीहतेषु कुरुषु' (छा० १।१०।१) इत्यस्मिन्ब्राह्मणे। चाक्रायणः किलर्षिरापद्गत इभ्येन सामिखादितान्कुल्माषांश्चखाद। अनुपानं तु तदीयमुच्छिष्टदोषात्प्रत्याचचक्षे। कारणं चात्रोवाच 'न वा अजीविष्यमिमानखादन्' (छा० १।१०।४) इति, 'कामो म उदपानम्' (छा० १।१०।४) इति च। पुनश्चोत्तरेद्युस्तानेव स्वपरोच्छिष्टान्पर्युषितान्कुल्माषान्भक्षयांबभूवेति। तदे तदुच्छिष्टोच्छिष्टपर्युषितभक्षणं दर्शयन्त्याः श्रुतेः आशयातिशयो लक्ष्यते प्राणात्ययप्रसङ्गे प्राणसन्धारणायाभक्ष्यमपि भक्षयितव्यमिति। स्वस्थावस्थायां तु तन्न कर्तव्यं विद्यावतापीत्यनुपानप्रत्याख्यानाद्गम्यते। तस्मादर्थवादो 'न ह वा एवंविदि' (छा० ५।२।१) इत्येवमादिः॥ २८॥

अबाधाच्च ॥ २९॥

एवञ्च सत्याहारशुद्धौ सत्त्वशुद्धिरित्येवमादि भक्ष्याभक्ष्यविभागशास्त्रमबाधितं भविष्यति॥ २९॥

கிறது என்றும். அவ்விதமே காணவும் படுகிறது. அதாவது சுருதியானது சாக்ராயணர் என்ற ருஷிக்குக் கஷ்டமான ஆபத்காலத்தில் சாப்பிடத்தகாததைச் சாப்பிடும் விஷயத்தில் பிரவிருத்தியைக் காண்பிக்கிறது. "மடசீ ஹதேஷுகுருஷு (துர்பிக்ஷத்தினுல் குருதேசம் நாசமடைந்த காலத்தில்) என்ற ப்ராம்ஹணத்தில் சாக்ராயணர் என்ற ருஷியோ வெனில் ஆபத்தை யடைந்தவராய் யானைப்பாகனுல் பாதிகடிக்கப்பட்ட கொள்ளைச் சாப்பிட்டார். அதன் பிறகு அவன் கொடுத்த ஜலத்தை அவனது உச்சிஷ்ட தோஷமுள்ளது எனமறுத்தார். இவ் விஷயத்தில் "இக்கொள்ளுகளை சாப்பிடாமலிருப்பேனுயின் ஜீவிக்கமாட்டேன், ஜலமோ வேண்டியபடி கிடைக்கக்கூடியதே" என்றதால் அதற்குக் காரணத்தையும் சொல்லி யிருக்கிறுர் என்றும். திரும்பவும் மறுநாளில் தானும் பிறரும் சாப்பிட்டு எஞ்ஜினகொள்ளுகளையே சாப்பிட்டு மிருக்கிறுர் என்றும். உச்சிஷ்டமென்ன, உச்சிஷ்டத்தின் பர்யுஷிதம் (மறுநாள் மீதப்படுத்தப்பட்டது) என்ன இவற்றைக் காண்பிக்கின்ற ஶ்ருதிக்கு ப்ராணனுக்கு அழிவுவரக்கூடிய நிலை வருங்கால் ப்ராணனைத் தரிப்பதற்கு வேண்டி அபக்ஷ்யமான பொருளையும் பக்ஷித்தல் வேண்டும் என்பதில் அதிகமான ஆதரவு இருப்பதாகக் தெரிகிறது. ஸ்வஸ்தமான நிலையிலோ வெனில் உபாஸகனுயினுங்கூட அதைச் செய்தல் கூடாது என்பது ஜலத்தை மறுத்ததினின்றும் அறியப்படுகிறது. ஆகவே "இவ்வுபாஸகன் விஷயத்தில்" என்றதாதி சுருதியானது அர்த்தவாதமே யாகிறது. (28) (எ-று)

(ஸூ) அபாதாத் ச (29)

(ப-ரை) **अबाधात्, च** (அபாதாத்ச)=இவ்வித மங்கீகரித்தால்தான் ஆஹாரஞ் சுத்தமானுல் சித்தந் தெளிகிறது என்றதாதி பக்ஷ்யாபக்ஷ்ய விபாகத்தைச் சொல்லும் சாஸ்திரம் பாதிக்கப்படாததாகவு மாகிறது. (29)

अपिच स्मर्यते ॥ ३० ॥

अपिचापदि सर्वान्नभक्षणमपि स्मर्यते विदुषोऽविदुषश्चाविशेषेण—'जीवितात्ययमापन्नो योऽन्नमत्ति यतस्ततः। लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा' इति। तथा 'मद्यं नित्यं ब्राह्मणः', 'सुरापस्य ब्राह्मणस्योष्णामासिञ्चेयुः', 'सुरापाः कृमयो भवन्त्यभक्ष्यभक्षणात्' इति च स्मर्यते वर्जनमनन्नस्य॥ ३० ॥

शब्दश्चातोऽकामकारे ॥ ३१ ॥

शब्दश्चानन्नस्य प्रतिषेधकः कामकारनिवृत्तिप्रयोजनः काठकानां संहितायां श्रूय-

---

பாஷ்யம்.—இவ்வித மிருந்தால்தான் ஆஹாரம் சுத்தமாயின் சித்தம் சுத்தமாகிறது என்ற இம்மாதிரியான பக்ஷ்யாபக்ஷ்ய விபாகத்தைச் சொல்லுஞ் சாஸ்திரமானது பாதிக்கப்படாததாக வாகும். (29) (எ—று)

(ஸூ) அபிசஸ்மர்யதே (30)

(ப-ரை) **अपिच** (அபிச)=மேலும் **स्मर्यते** (ஸ்மர்யதே)=வித்வான் அவித்வான் இருவர்க்கும் பொதுவாக ப்ராணாத்யயகாலத்தில் நிஷித்தான்ன போஜனம் தோஷத்தைத் தராதென்றும், ஆயினும் எக்காலத்திலும் ஸுராபானஞ் செய்தல் கூடாதென்றும் ஸ்மிருதியிற் சொல்லப்பட்டிருக்கிறது. (30) (எ—று)

பாஷ்யம்.—"ஜீவிதத்துக்கு அத்யயத்தை (ஆபத்துவரும் நிலைமை) யடைந்த எந்தமனிதன் எந்த விடத்திலுள்ள அன்னத்தைச் சாப்பிட்ட போதிலும் தாமரை இலையுடன் ஜலமானது போல அவன் பாபத்துடன் ஸம்பந்தத்தை யடையமாட்டான்" என்பதாய் வித்வான் அவித்வான் இருவர்க்கும் பொதுவாக ஆபத்காலத்தில் ஸர்வான்ன பக்ஷணமும் ஸ்மிருதியிற் சொல்லப்பட்டிருக்கிறது. "ப்ராம்ஹணன் எப்பொழுதும் (ஆபத்காலத்திலும் கூட) மத்யத்தைவிலக்க வேண்டும்" என்றும், "ஸுராபானஞ் செய்த ப்ராம்ஹணனுடைய (வாயில்) பழுக்கக் காய்ச்சின ஸுரையை விடவேண்டும்" என்றும், "ஸுராபானஞ் செய்தவர் அபக்ஷ்ய பக்ஷணஞ் செய்ததால் புழுக்களாகப் பிறக்கின்றனர்" என்றும் நிஷித்தான்னவர்ஜனத்தை ஸ்மிருதி சொல்லியு மிருக்கிறது. (30) (எ—று)

(ஸூ) சப்த: ச அத: அகாமகாரே (31)

(ப-ரை) **अकामकारे** (அகாமகாரே)=தனதிஷ்டப்படி செய்தலை மறுக்கும் விஷயத்தில் **शब्दः** (சப்தஃ)=சப்தமிருக்கிறது. **अतश्च** (அதஶ்ச)=இதனாலும் இது போன்றவை அர்த்தவாதங்களே யாகும். (31) (எ—று)

பாஷ்யம்.—காமகார நிவிருத்தியைப் ப்ரயோஜனமாக வுடையதும், அனன்னத்தை (சாஸ்திரம் ஸம்மதிக்காத அன்னத்தை) மறுக்கின்றதாயுமுள்ள சப்தமும் காடக ஸம்ஹிதையில் படிக்கப்படுகிறது. அதாவது:—"ஆனதுபற்றி ப்ராம்ஹணன் ஸுரையைப் பானஞ்செய்தல் கூடாது" என்றும். "இவ்வித

ते—'तस्माद्ब्राह्मणः सुरां न पिबेत्' इति। सोऽपि 'न ह वा एवंविदि' (छा० ५।२।१) इत्यस्यार्थवादत्वादुपपन्नतरो भवति। तस्मादेवञ्जातीयका अर्थवादा न विधय इति॥ ३१॥

८ आश्रमकर्माधिकरणम्। सू० ३२-३६

विहितत्वाचाश्रमकर्मापि॥ ३२॥

विंद्यार्थमाश्रमार्थञ्च द्विःप्रयोगोऽथवा सकृत्। प्रयोजनविभेदेन प्रयोगोपि विभिद्यते॥ १॥

श्राद्धार्थभुक्त्या तृप्तिः स्याद्विद्यार्थेनाश्रमस्तथा। अनित्यनित्यसंयोग उक्तिभ्यां खादिरे मतः॥ २॥

'सर्वापेक्षा च—' (ब्र० सू० ३।४।२६) इत्यत्राश्रमकर्मणां विद्यासाधनत्वमवधा-

---

ப்ராணோபாஸகன் விஷயத்தில் அன்னமாக வாகாதது ஒன்றுமில்லை" என்றது அர்த்தவாதமாகவாவதால் அந்த நிஷேதமும் மிக்கப் பொருத்தமுள்ளதாக வாகிறது. ஆனதுபற்றியும் இம்மாதிரியானவை ("நஹவா ஏவம் விதி" என்றதாதிகள்) அர்த்தவாதங்களே யொழிய விதிகளன்று என்றேற்படுகிறது. (31) (எ-று)

ஏழாவது ஸர்வான்னாநுமத்யதிகரணம் முற்றிற்று.

ஆச்ரமகர்மாதிகரணம் 8.

(ஸூ) விஹிதத்வாத் ச ஆச்ரமகர்மாபி (32)

(ப-ரை) முமுக்ஷுவாக இல்லாதவனுக்கும் கூட **आश्रमकर्मापि** (ஆஶ்ரமகர்மாபி)=ஆஶ்ரமத்துக்குச் சொல்லிய நித்யகர்மமும் [**अनुष्ठेयमेव** (அனுஷ்டேயமேவ)=அனுஷ்டிக்கவேண்டுவது அவஶ்யமேயாகிறது. ஏன்? **विहितत्वाच्च** (விஹிதத்வாச்ச)=சாஸ்திரத்தில் விதிக்கப்பட்டிருப்பதாலென்க. (32) (எ-று)

வையாஸிக ந்யாயமாலை.

(க-ரை) நித்யகர்மங்களை க்ஞானத்துக்கு வேண்டியும், ஆஶ்ரமத்துக்கு வேண்டியும் இரண்டுதடவைப் பிரயோகிக்க (செய்ய) வேண்டுமா? அல்லது இரண்டுக்குமாக ஒரேதடவை பிரயோகிக்க(செய்ய)வேண்டுமா? என்பது ஸந்தேஹம். பிரயோஜனம் வேறாக விருப்பதால் பிரயோகமும் வேறுபடத்தான் செய்கிறது என்பது பூர்வபக்ஷம். சிராத்தத்துக்குவேண்டி செய்யப்படும் போஜனத்தினால் போக்தாவுக்கும் திருப்தி உண்டாவதைக் காண்கிறோம். அதுபோலவே வித்யைக்குவேண்டிய நித்யகர்மானுஷ்டானத்தினால் ஆஶ்ரமமும் பயனுள்ளதாக வாகலாம். "**खादिरो यूपो भवति**" யூபமானது காதிரமாக=(கருங்காலிமரத்தினாற் செய்யப்பட்டதாக) வாகிறது என்ற சுருதியினால் க்ரத்வர்த்தமாகவும், "**खादिरं वीर्यकामस्य**" வீர்யத்திற் காமனை யுள்ளவனுக்கு காதிரம் யூபமாகும் என்ற சுருதியினால் புருஷார்த்தமாகவும் ஆவது எவ்விதமோ அவ்விதமே "**तमेतं वेदानुवचनेन**" என்ற வாக்கியத்தினால் கல்பிக்கப்பட்ட அநித்ப ஸம்யோகமும் "**यावज्जीवमग्निहोत्रं जुहोति**" என்ற வாக்கியத்தினால் கல்பிக்கப்பட்ட நித்யஸம்யோகமும் ஏற்படலாம்.

रितम्। इदानीं तु किममुमुक्षोरप्याश्रममात्रनिष्ठस्य विद्यामकामयमानस्य तान्यनुष्ठेयान्युताहो नेति चिन्त्यते। तत्र 'तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति' (बृ० ४।४।२२) इत्यादिनाश्रमकर्मणां विद्यासाधनत्वेन विहितत्वाद्विद्यामनिच्छतः फलान्तरं कामयमानस्य नित्यान्यननुष्ठेयानि। अथ तस्याप्यनुष्ठेयानि, न तर्ह्येषां विद्यासाधनत्वं नित्यानित्यसंयोगविरोधादिति। अस्यां प्राप्तौ पठति—आश्रममात्रनिष्ठस्याप्यमुमुक्षोः कर्तव्यान्येव नित्यानि कर्माणि 'यावज्जीवमग्निहोत्रं जुहोति' इत्यादिना विहितत्वात्। नहि वचनस्यातिभारो नाम कश्चिदस्ति॥ ३२॥ अथ यदुक्तं नैवं सति विद्यासाधनत्वमेषां स्यादित्यत उत्तरं पठति—

सहकारित्वेन च ॥ ३३॥

विद्यासहकारीणि चैतानि स्युर्विहितत्वादेव 'तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदि-

---

பாஷ்யம்.—"ஸர்வாபேக்ஷா ச" என்ற விடத்தில் ஆஶ்ரமகர்மங்கள் வித்யைக்கு ஸாதனங்கள் என்று சொல்லப்பட்டது. இப்பொழுதோவெனில் முமுக்ஷுவாக வில்லாதவனும், ஆஶ்ரமத்தில் மட்டு மிருப்பவனும், வித்யையில் காமனை யில்லாதவனுமான மனிதனுக்கு அந்த ஆஶ்ரமகர்மங்கள் அனுஷ்டிக்கத்தக்கனவா? அல்லது இல்லையா? என்பது விசாரிக்கப்படுறது. அவ்விஷயத்தில் "तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति" அந்த இந்த ஆத்மாவை ப்ராம்ஹணர்கள் வேதாநுவசனத்தினுல் அறிய விரும்புகின்றனர் என்றதாதி வசனத்தினுல் ஆஶ்ரமகர்மங்கள் வித்யைக்குச் சாதனங்களாக விதிக்கப்பட்டிருப்பதால் வித்யையை விரும்பாதவனும், வேறுபலனை விரும்புகின்றவனுமானவனுக்கு நித்யகர்மங்கள் அனுஷ்டேயங்களல்ல. அவனுக்கும் அனுஷ்டேயங்களாக வாகுமானுல் அப்பொழுது இந்த நித்யகர்மங்களுக்கு வித்யைக்கு ஸாதனமாக இருக்குந்தன்மை ஏற்படமாட்டாது. நித்யாநித்ய ஸம்யோகரூபமான விரோதம் வருவதாலென்க என இவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்த்தமாகவே ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது. ஆஶ்ரமமாத்திர நிஷ்டனுன அமுமுக்ஷுவுக்கும் நித்யகர்மங்கள் அனுஷ்டிக்க வேண்டுவனவாகவே தானுகும். "உயிருள்ளவரை அக்னிஹோத்திரத்தைச் செய்ய வேண்டும்" என்றதாதியால் விதிக்கப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். வசனத்துக்கு அதிகச்சுமை யொன்றுமில்லை யன்றே. (32) (எ—று)

அவதாரிகாபாஷ்யம்.—"இவ்விதமாயின் இவற்றுக்கு வித்யைக்கு ஸாதனமாக இருக்குந்தன்மை யேற்படமாட்டாது" என யாதொன்று சொல்லப்பட்டதோ இவ்விஷயத்தில் பதிலைச் சொல்லுகிறுர்—

(ஸூ) ஸஹகாரித்வேந ச (33)

(ப—ரை) सहकारित्वेन च (ஸஹகாரித்வேந ச)=இவைவித்யைக்கு உதவிஸாதனமாகவாவதால் வித்யையில் விருப்பமுள்ளவனும் இவற்றை யனுஷ்டிக்க வேண்டுவதுதான். (33) (எ—று)

பாஷ்யம்.—"தமேதம் வேதாநுவசநேந ப்ராம்ஹணு விவிதிஷந்தி" என்ற

षन्ति' (बृ० ४। ४। २२) इत्यादिना। तदुक्तम्—'सर्वापेक्षा च यज्ञादिश्रुतेरश्ववत्' (ब्र० सू० ३। ४। २६) इति। नचेदं विद्यासहकारित्ववचनमाश्रमकर्मणां प्रयाजादिवद्विद्याफलविषयं मन्तव्यम्। अविधिलक्षणत्वाद्विद्यायाः। असाध्यत्वाच्च विद्याफलस्य। विधिलक्षणं हि साधनं दर्शपूर्णमासादि स्वर्गफलसिषाधयिषया सहकारिसाधनान्तरमपेक्षते नैवं विद्या। तथाचोक्तम् 'अतएव चाग्नीन्धनाद्यनपेक्षा' (ब्र० सू० ३। ४। २५) इति। तस्मादुत्पत्तिसाधनत्व एवैषां सहकारित्ववाचोयुक्तिः। नचात्र नित्यानित्यसंयोगविरोध आशङ्क्यः, कर्माभेदेऽपि संयोगभेदात्। नित्यो ह्येकः संयोगो यावज्जीवादिवाक्यकल्पितो न तस्य विद्याफलत्वम्। अनित्यस्त्वपरः संयोगः 'तमेतं वेदानुवचनेन' (बृ० ४। ४। २२) इत्यादिवाक्यकल्पितस्तस्य विद्याफलत्वम्। यथैकस्यापि खादिरत्वस्य नित्येन संयोगेन क्रत्वर्थत्वमनित्येन संयोगेन पुरुषार्थत्वं तद्वत्॥ ३३॥

தாதி வசனத்தினல் விதிக்கப்பட்டிருப்பதால் இந்த நித்யகர்மங்கள் வித்யாஸாதனங்களுமாகும். அவ்விஷயம் "ஸர்வாபேக்ஷா ச யக்ஞாதிஸ்ருதே: அஸ்வவத்" என்றவிடத்தில் சொல்லவும் பட்டிருக்கிறது. ஆஸ்ரமகர்மங்களுக்கு வித்யாஸஹகாரித்வத்தைச் சொன்ன இந்த வசனமானது ப்ரயாஜாதிகள் போல வித்யையின் பயனை (மோக்ஷத்தை) விஷயமாகக் கொண்டதென எண்ணவேண்டுவதில்லை. வித்யையானது விதியினலேற்படக்கூடியதாக வில்லாதிருப்பதே அதன்காரணமாகும். வித்யையின் பலனுன மோக்ஷமானது ஸாதனஸாத்யமாக இல்லாமலுமிருக்கிறது. விதியை லக்ஷணமாகக்கொண்ட தர்சபூர்ணமாஸம் முதலிய ஸாதனமானது ஸ்வர்க்கரூபமான பலனை ஸாதிக்கவெண்ணங்கொண்டதாய் தனக்கு ஸஹகாரியான (உதவிசெய்வதான)வேறு ஸாதனத்தை எதிர்பார்க்கிறது. வித்யையோ இவ்விதமில்லை. அவ்விதமே "அதஏவ ச அக்னீந்தனத்யநபேக்ஷா" என்றதாற் சொல்லப்பட்டுமிருக்கிறது. ஆகவே இவற்றுக்கு(நித்யகர்மங்களுக்கு)உத்பத்திக்கு ஸாதனமாகவாகுந்தன்மை மட்டும் அங்கிகரிக்கப்படுகிறது. இவ்விடத்தில் நித்யாநித்யங்களுக்கு ஸம்யோகம் வருமென்ற விரோதமானது ஆசங்கிக்கக்கூடியதன்று. கர்மமானது ஒன்ருக விருந்தபோதிலுங்கூட ஸம்யோகமானது(விநியோகமானது) வேருகவேகாணவும் படுகிறது. "யாவஜ்ஜீவம் அக்னிஹோத்ரம் ஜுஹோதி" என்றதாதிவாக்கியத்தினல் கல்பிக்கப்பட்ட ஒரு ஸம்யோகமோ (விநியோகமோ) நித்யமாக(உயிருள்ளவரை செய்யவேண்டுவதாக)இருக்கிறது. அது வித்யையைப் பயனுகவுடையதன்று. "தமேதம் வேதாநுவசனேந" என்றதாதி வாக்கியத்தினல் கல்பிக்கப்பட்ட வேறுஸம்யோகமோ (விநியோகமோ) அநித்யமாக இருக்கிறது. அது வித்யையைப் பயனுகவுடையதாகவாகிறது. "காதிரோ யூபோபவதி" என்றவிடத்தில் நித்யமான ஸம்யோகத்தினல் காதிரத்வத்துக்கு க்ரத்வர்த்தமாக இருக்குந்தன்மையும், "காதிரம் வீர்யகாமஸ்ய" என்றவிடத்தில் அநித்யஸம்யோகத்தினல் காதிரத்வத்துக்குப் புருஷார்த்தத்துவமும் ஏற்படுவது எவ்விதமோ அவ்விதமே இங்கும் காண்க. (33) (எ-று)

सर्वथापि त एवोभयलिङ्गात् ॥ ३४ ॥

सर्वथाप्याश्रमकर्मत्वपक्षे विद्यासहकारित्वपक्षे च त एवाग्निहोत्रादयो धर्मा अनुष्ठेयाः। त एवेत्यवधारयन्नाचार्यः किं निवर्तयति। कर्मभेदशङ्कामिति ब्रूमः। यथा कुण्डपायिनामयने 'मासमग्निहोत्रं जुह्वति' इत्यत्र नित्यादग्निहोत्रात्कर्मान्तरमुपदिश्यते नैवमिह कर्मभेदोऽस्तीत्यर्थः। कुतः—उभयलिङ्गात्। श्रुतिलिङ्गात्स्मृतिलिङ्गाच्च। श्रुतिलिङ्गं तावत् तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति' (बृ० ४।४।२२) इति सिद्धवदुत्पन्नरूपाण्येव यज्ञादीनि विविदिषायां विनियुङ्क्ते नतु जुह्वतीत्यादिवदपूर्वमेषां रूपमुत्पादयतीति। स्मृतिलिङ्गमपि 'अनाश्रितः कर्मफलं कार्यं कर्म करोति यः' (गी० ६।१) इति विज्ञातकर्तव्यताकमेव कर्म विद्योत्पत्त्यर्थं दर्शयति। यस्यैतेऽष्टाचत्वारिंशत्संस्कारा इत्याद्या

(ஸூ) ஸர்வதாபி த ஏவ உபயலிங்காத் (34)

(ப–ரை) **सर्वथापि** (ஸர்வதாபி)=ஆஶ்ரமகர்மத்வபக்ஷத்திலும், வித்யாஸஹகாரித்வபக்ஷத்திலும் **त एव** (த ஏவ)=அந்த அக்னிஹோத்ராதிகளான தர்மங்களே அனுஷ்டேயங்களாகின்றன. ஏன்? **उभयलिङ्गात्** (உபயலிங்காத்) = சுருதி ஸ்மிருதி இரண்டிலும் அதற்குரிய லிங்கம் (அறிகுறி) காணப்படுவதே அதன் காரணமாகும். (34) (எ–று)

பாஷ்யம்.—ஆஶ்ரம கர்மத்வபக்ஷம், வித்யாஸஹகாரித்வ பக்ஷம் என்ற எதிலும் அதே அக்னிஹோத்ராதிகளான தர்மங்கள் அனுஷ்டேயங்களாகவே ஆகின்றன. ஸூத்திரக்காரர் "த ஏவ" (அவைகளே)எனத் தேற்றம் கொடுத்துக் கூறுகின்றவராய் எதை விலக்கிக்காட்டுகிறார் எனின்? கர்மபேதசங்கையை விலக்குகிறார் என்கிறோம். *குண்டபாயினமயனத்தில் "மாஸம் அக்னிஹோத்ரம் ஜுஹ்வதி" என்றவிடத்தில் நித்யமான அக்னிஹோத்ரத்தைக் காட்டிலும் மாஸகுணவிசிஷ்டமான வேறுகர்மமானது உபதேசிக்கப் படுவது எவ்விதமோ அவ்விதம் இங்கு கர்மபேதமானது கிடையாது என்பது அதன் பொருள். ஏன்? உபயலிங்கமிருப்பதாலென்க. ஶ்ருதிலிங்கமும் ஸ்மிருதிலிங்கமும் இருப்பதால் என்பது அதன் பொருள். அவற்றுள் சுருதிலிங்கமாவது—"தமேதம் வேதாநுவசனேந ப்ராம்ஹணா விவிதிஷந்தி" என்றதால் ஸித்தவத்தாக உண்டான ஸ்வரூபமுள்ளவைகளான யக்ஞாதிகளை விவிதிஷையில் (வேதநேச்சையில் சுருதி) விநியோகப்படுத்துகிறதேயொழிய "மாஸமக்னிஹோத்ரம் ஜுஹ்வதி" என்றதாதிபோல இவற்றுக்கு அபூர்வமான (புதிதான) ஸ்வரூபத்தை யுண்டுபண்ணவில்லை என்றும். ஸ்மிருதிலிங்கமாவது—"கர்மபலனை எதிர்பாராது அவஶ்யகர்த்தவ்யமான (நித்யமான) கர்மத்தை எவன் செய்கிறானோ" என்றதால் செய்யும் முறை இன்னதென அறியப்பட்டதாகவேயுள்ள கர்மத்தை வித்யையினுத்பத்திக்கு வேண்டித் தெரிவிக்கிறது என்றும். "எவனுக்கு இந்த நாற்பத்தெட்டு ஸம்ஸ்காரங்களிருக்கின்றவோ" என்றதாதியானது, வைதிககர்மங்களில் ஸம்ஸ்காரத்வ ப்ரஸித்தியானது அக்கர்மங்களால்

---

* இது இப்பெயர் கொண்டதொரு யாகமாகும்.

च संस्कारत्वप्रसिद्धिर्वैदिकेषु कर्मसु तत्संस्कृतस्य विद्योत्पत्तिमभिप्रेत्य स्मृतौ भवति। तस्मात्साध्विदमभेदावधारणम् ॥ ३४ ॥

अनभिभवं च दर्शयति ॥ ३५ ॥

सहकारित्वस्यैवैतदुपोद्बलकं लिङ्गदर्शनमनभिभवं च दर्शयति श्रुतिर्ब्रह्मचर्यादिसाधनसंपन्नस्य रागादिभिः क्लेशैः 'एष ह्यात्मा न नश्यति यं ब्रह्मचर्येणानुविन्दते' (छा० ८। ५। ३) इत्यादिना। तस्माद्यज्ञादीन्याश्रमकर्माणि च भवन्ति विद्यासहकारीणि चेति निश्चितम् ॥ ३५ ॥

९ विधुराधिकरणम्। सू० ३६–३९.

अन्तरा चापि तु तद्दृष्टेः ॥ ३६ ॥

ஸம்ஸ்கரிக்கப்பட்டவனுக்கு வித்யோத்பத்தி யேற்படுகிறது என்பதைக் கருத்திற்கொண்டு ஸ்மிருதியில் கூறப்படுகிறது. ஆனதுபற்றி ஸூத்திரத்தில் "த ஏவ" என்றதால் கர்மாபேதத்தை உறுதிப்படுத்திக்கூறினது ஸாதுவாகவே தானாகிறது.

(ஸூ) அநபிபவஞ்ச தர்சயதி (35)

(ப–ரை) अनभिभवञ्च (அநபிபவஞ்ச)=ப்ரம்ஹசர்யாதி ஸாதனங்களுடன் கூடினவனுக்கு ராகாதிக்லேசங்களின் பீடையில்லாமையையும் दर्शयति (தர்ஶயதி)=சுருதி காண்பித்திருக்கிறது. (35) (எ–று)

பாஷ்யம்.—சுருதியானது "எதை ப்ரம்ஹசரியத்தினால் அடைகின்றானோ இந்த ஸ்வரூபமானது நாசத்தை யடைவதில்லையன்றோ" என்றதாதியால் ப்ரம்ஹசர்யம் முதலிய ஸாதனங்களுடன் கூடினவனுக்கு ராகம் முதலிய க்லேசங்களினால் அநபிபவத்தையும் (பீடையின்மையையும்) தெரிவிக்கிறது. இது ஸஹகாரித்வத்துக்கே (நித்யகர்மங்கள் வித்யைக்கு உதவியாகவாகின்றன என்பதுக்கே) உபோத்பலகமான (திருடப்படுத்தக்கூடியதான) லிங்கதரிசனமாகவாகிறது. ஆகவே யக்ஞாதிகளான ஆஶ்ரமகர்மங்களும் வித்யைக்கு ஸஹகாரிகளாகவே தானாகின்றன என்பது நிஶ்சயிக்கப்பட்டதாகவாகிறது. (35) (எ–று)

எட்டாவது ஆஶ்ரமகர்மாதிகரணம் முற்றிற்று.

விதுராதிகரணம் 9.

(ஸூ) அந்தராசாபி தத்த்ருஷ்டே: (36)

(ப–ரை) अन्तराचापि (அந்தராசாபி)=இடையிலிருக்கின்ற * விதுராதிகளுக்கும் வித்யையில் அதிகாரமுண்டு. ஏன்? तद्दृष्टेः (தத்த்ருஷ்டே:)=அவ்விதம் சுருதியில் காணப்படுவதே அதன் காரணமாகும். (36) (எ–று)

---

* பத்தினியில்லாமலும் வானப்ரஸ்தாதி ஆச்ரமங்களை யடையாமலுமிருப்பவர் விதுரர் எனப்படுவர்.

नास्त्यनाश्रमिणो ज्ञानमस्ति वा नैव विद्यते। धीशुद्ध्यर्थाश्रमित्वस्य ज्ञानहेतोरभावतः ॥ १ ॥
अस्त्येव सर्वसंबन्धिजपादेश्चित्तशुद्धितः। श्रुताहि विद्या रैक्कादेराश्रमे त्वतिशुद्धता ॥ २ ॥

विधुरादीनां द्रव्यादिसंपद्रहितानां चान्यतमाश्रमप्रतिपत्तिहीनानामन्तरालवर्तिनां किं विद्यायामधिकारोऽस्ति किंवा नास्तीति संशये नास्तीति तावत्प्राप्तम्। आश्रमकर्मणां विद्याहेतुत्वावधारणादाश्रमकर्मासंभवाच्चैतेषामिति। एवं प्राप्त इदमाह—अन्तरा चापि त्वनाश्रमित्वेन वर्तमानोऽपि विद्यायामधिक्रियते। कुतः—तद्दृष्टेः। रैक्कवाचक्नवीप्रभृतीनामेवंभूतानामपि ब्रह्मवित्त्वश्रुत्युपलब्धेः ॥ ३६ ॥

अपि च स्मर्यते ॥ ३७ ॥

संवर्तप्रभृतीनां च नग्नचर्यादियोगादनपेक्षिताश्रमकर्मणामपि महायोगित्वं स्मर्यत इतिहासे ॥ ३७ ॥

வையாஸிக ந்யாயமாலை.

(க–ரை) எவ்வித ஆஸ்ரமத்திலும் சேராத விதுராதிகளுக்கு ஆத்மக்ஞானமுண்டா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். ஆத்மக்ஞானஹேதுவான சித்தசுத்தியைத்தரும் ஆஸ்ரமித்வமானது (ஆஸ்ரமதர்மமானது) இல்லாமையால் அவர்களுக்கு ஆத்மக்ஞானமே கிடையாது என்பது பூர்வபக்ஷம். எல்லா ஆஸ்ரமங்களிலும் ஸம்பந்தம் பெற்ற ஜபம் முதலியவற்றினால் சித்தசுத்தி உண்டாகலாமாதலால் அவர்களுக்கும் ஆத்மக்ஞானமுண்டு என்று தானேற்படுகிறது. ரைக்வர் முதலியோருக்கு ப்ரம்ஹவித்யை இருந்ததாகச் சுருதியில் காணவும் படுகிறது. ஆஸ்ரமத்தில் இருப்பவர்க்கோ அதிகம் சித்த சுத்தி ஸம்பவிக்கலாம். (36)

பாஷ்யம்.—திரவியம் முதலிய ஸம்பத்தியில்லாதவர்களும், வேறு எந்த ஆஸ்ரம பிராப்தியுமற்றவர்களும் (ஆனதுபற்றியே இரண்டு ஆஸ்ரமங்களுக்கு) இடையிலிருப்பவர்களுமான விதுராதிகளுக்கும் ப்ரம்ஹவித்யையில் அதிகாரமுண்டா? அல்லது கிடையாதா? என ஸந்தேஹமுதயமாகவே அதிகாரம் கிடையாது என்றே ப்ராப்தமாகிறது. ஆஸ்ரமத்தில் செய்யப்படும் கர்மங்கள் வித்யைக்கு ஸாதனங்களென நிஸ்சயிக்கப்பட்டிருப்பதும், இவர்களுக்கு ஆஸ்ரமகர்மங்களில்லாதிருப்பதுமே அதன் காரணமாகும் என இவ்விதம் பூர்வபக்ஷம். ப்ராப்தமாகவே இதை (ஸித்தாந்தத்தைச்) சொல்லுகிறார். **அந்தராசாபி**=ஆஸ்ரமியாக இல்லாதவருங் கூட ப்ரம்ஹவித்யையில் அதிகாரத்தை யடைகிறார். ஏன்? **தத்திருஷ்டே:** இவ்விதம் அனாஸ்ரமிகளாகவே இருக்கின்ற **ரைக்வர் வாசக்னவீ** முதலியோருக்கும் ப்ரம்ஹவித்வத்தைச் சொல்லும் சுருதியிருப்பதே அதன் காரணமாகும்.

(ஸூ) அபிச ஸ்மர்யதே (37)

(ப–ரை) **अपि च** (அபிச)=மேலும் **स्मर्यते** (ஸ்மர்யதே)=ஆஸ்ரமகர்மாபேக்ஷையற்றவர்களான ஸம்வர்த்தர் முதலியோருக்கும் ப்ரம்ஹவித்யை இருந்ததாக ஸ்மிருதியிலும் காணப்படுகிறது. (37) (எ–று)

ननु लिङ्गमिदं श्रुतिस्मृतिदर्शनमुपन्यस्तं कानु खलु प्राप्तिरिति साऽभिधीयते—

विशेषानुग्रहश्च ॥ ३८ ॥

तेषामपि च विधुरादीनामविरुद्धैः पुरुषमात्रसंबन्धिभिर्जपोपवासदेवताराधनादिभिर्धर्मविशेषैरनुग्रहो विद्यायाः संभवति। तथाच स्मृतिः—'जप्येनैव तु संसिध्येद्ब्राह्मणो नात्र संशयः। कुर्यादन्यन्न वा कुर्यान्मैत्रो ब्राह्मण उच्यते' इत्यसंभवदाश्रमकर्मणोऽपि जप्येऽधिकारं दर्शयति। जन्मान्तरानुष्ठितैरपि चाश्रमकर्मभिः संभवत्येव विद्याया अनुग्रहः। तथाच स्मृतिः—'अनेकजन्मसंसिद्धस्ततो याति परां गतिम्' (६। ४५) इति जन्मान्तरसञ्चितानपि संस्कारविशेषाननुग्रहीतॄन्विद्यायां दर्शयति। दृष्टार्था च विद्या प्रति-

பாஷ்யம்.—* நக்னசர்யையுடன் சேர்ந்திருப்பதுபற்றி ஆஶ்ரமகர்மங்களின் அபேக்ஷையற்றவர்களான ஸம்வர்த்தர் முதலியோருக்கு மஹாயோகித்வமானது இதிஹாஸத்தில் (ஸ்காந்தம் காசீகண்டத்தில்) சொல்லவும்பட் டிருக்கிறது.

அவதாரிகா பாஷ்யம்.—சுருதிஸ்மிருதிகளில் காணப்படுவதாகக் காட்டின இது வெறும்லிங்கமாக மட்டுமே ஆகும் வித்யாப்ராப்தியைத்தரும் ப்ரமாணம் யாது? எனின். அது அடுத்த ஸூத்திரத்தினுல் சொல்லப்படுகிறது.—

(ஸூ) விசேஷாநுக்ரஹ: ச (38)

(ப—ரை) அந்த விதுராதிகளுக்கு विशेषानुग्रहश्च (விசேஷாநுக்ரஹஸ்ச)=ஜபம் உபாவாஸம் தேவதாராதனம் முதலிய தர்மவிசேஷங்களினுல் ப்ரம்ஹவித்யாவிஷயமான அனுக்ரஹமும் ஏற்படலாம். (38) (எ—று)

பாஷ்யம்.—அந்த விதுராதிகளுக்குங்கூட முறண்படாதனவும், புருஷனுயுள்ளவர் யாவரிடத்திலும் ஸம்பந்தித்தனவும், ஜபம் உபவாஸம் தேவதாராதனம் முதயனவுமான தர்மவிசேஷங்களினுல் வித்யைக்கு அநுக்ரஹமானது(உபகாரமானது) ஸம்பவிக்கிறது. அவ்விதமே ஸ்மிருதியும் "ப்ராம்ஹணன் ஜபமாத்திரத்தினுலேயே ஸித்தியை யடைந்து வடுவான், இவ்விஷயத்தில் ஸம்சயமில்லை. பிறவொன்றைச் செய்தபோதிலும் செய்யாவிடினும் தயையுள்ளவன் ப்ரம்ஹவித்தென்றே சொல்லப்படுகிறுன்" என்றதால் ஆஶ்ரமகர்மம் ஸம்பவிக்காவிடினுங்கூட ஜபத்தில் அதிகாரத்தை காண்பிக்கிறது. வேறுபிறவியில் அனுஷ்டிக்கப்பட்ட ஆஶ்ரமகர்மங்களினுலுங்கூட வித்யைக்கு அனுக்ரஹமானது ஸம்பவிக்கவேகூடும். அவ்விதமே ஸ்மிருதியும் "அனேகஜன்மங்களில் நன்கு ஸித்தியைப்பெற்றவனுய் அதனின்றும் மேலானகதியையடைகிறுன்" என்றதால் வேறுபிறவியில் தேடப்பட்டவைகளான ஸம்ஸ்கார விசேஷங்களை வித்யையில் அனுக்கிரஹஞ் செய்கின்றனவாகத் தெரிவிக்கிறது. திருஷ்டமான பயனுள்ள ப்ரம்ஹவித்யையானது நிஷேதமில்லாமையைக்கொண்டு மட்டுமே ஶ்ரவணுதிகளில் ஆவலுள்ளவனை அதிகாரி

* சரீராத்யபிமானமின்மை காரணமாய் இடையில் வஸ்திராதிகளற்று ஸஞ்சரிப்பவர் நக்னசர்யை யுள்ளவராவர்.

षेधाभावमात्रेणाप्यर्थिनमधिकरोति श्रवणादिषु। तस्माद्विधुरादीनामप्यधिकारो न विरुध्यते ॥ ३८ ॥

अतस्त्वितरज्ज्यायो लिङ्गाच्च ॥ ३९ ॥

अतस्त्वन्तरालवर्तित्वादितरदाश्रमवर्तित्वं ज्यायो विद्यासाधनम्। श्रुतिस्मृतिसन्दृष्टत्वात्। श्रुतिलिङ्गाच्च 'तेनैति ब्रह्मवित्पुण्यकृत्तैजसश्च' (बृ० ४।४।९) इति। 'अनाश्रमी न तिष्ठेत दिनमेकमपि द्विजः। संवत्सरमनाश्रमी स्थित्वा कृच्छ्रमेकं चरेत्' इति च स्मृतिलिङ्गात् ॥ ३९ ॥

१० तद्भूताधिकरणम्। सू० ४०

तद्भूतस्य तु नातद्भावो जैमिनेरपि नियमातद्रूपाभावेभ்यः ॥ ४० ॥

யாக்குகிறது. ஆனதுபற்றியும் விதுரர் முதலியோருக்கும் ப்ரம்ஹவித்யாதிகாரமானது முறண்படுவதில்லை. (38) (எ—று)

(ஸூ) அதஸ்து இதரத் ஜ்யாயோ லிங்காத்ச (39)

(ப—ரை) अतस्तु (அதஸ்து)=இரண்டு ஆஸ்ரமங்களுக்குமிடையிலிருப்பதைக் காட்டிலுமோ इतरत् (இதரத்)=ஆஸ்ரமவர்த்தித்வமானது ज्यायः (ஜ்யாயः)=சிறந்தவித்யாஸாதனமாக வாகிறது. लिङ्गाच्च (லிங்காத்ச)=அவ்விதம் சுருதிஸ்மிருதிகளில் கூறியிருப்பதே அதன் காரணமாகும். (39) (எ—று)

பாஷ்யம்.—(எந்த ஆஸ்ரமத்திலும் சேராது) மத்தியிலிருத்தலென்ற இதைக் காட்டிலுமோ பற்றதானது (யாதானுமொரு) ஆஸ்ரமத்திலிருத்தலானது சிறந்த வித்யாஸாதனமாகவாகிறது. சுருதிஸ்மிருதிகளில் நன்கு காணப்பட்டிருப்பதாலென்க. "புண்ணியத்தைச் செய்தவனும் சுத்தசித்தனுமான ப்ரம்ஹவித்தானவன் அந்தக்ஞானமார்க்கத்தினால் ப்ரப்ஹத்தையடைகிறான்" எனஸ்ருதிலிங்கமுமிருக்கிறது. "த்விஜனுயுள்ளவன் ஒருக்ஷணமுங்கூட அனுஸ்ரமியாக (யாதானுமொரு ஆஸ்ரமத்திலில்லாதவனுக) இருத்தல் கூடாது. ஒருவருஷகாலம் ஆஸ்ரமியாகவில்லாதிருப்பவன் ஒருகிருச்சிரத்தை யனுஷ்டிக்கவேண்டும்" என ஸ்மிருதிலிங்கமுமிருக்கிறது. (39)

ஒன்பதாவது விதுராதிகரணம் முற்றிற்று.

தத்பூதாதிகரணம் 10.

(ஸூ) தத்பூதஸ்யது ந அதத்பாவ: ஜைமிநேரபி நியமாதத்ருபாபாவேப்ய: (40)

(ப—ரை) तद्भूतस्य तु (தத்பூதஸ்ய து)=துறவியாகவானவருக்கு अतद्भावः (அதத்பாவः)=அதனின்றும் விலகுதலானது न (ந)= கிடையாது. नियमातद्रूपाभावेभ्यः

अवरोहोऽस्त्याश्रमाणां न वा रागात्स विद्यते। पूर्वधर्मश्रद्धया वा यथाऽऽरोहस्तथैच्छिकः ॥ १ ॥
रागस्यातिनिषिद्धत्वाद्विहितस्यैव धर्मतः। आरोहनियमोक्त्यादेर्नावरोहोऽस्त्यशास्त्रतः ॥ २ ॥

सन्त्यूर्ध्वरेतस आश्रमा इति स्थापितम्। तांस्तु प्राप्तस्य कथञ्चित्ततः प्रच्युतिरस्ति नास्ति वेति संशयः। पूर्वकर्मस्वनुष्ठानचिकीर्षया वा रागादिवशेन वा प्रच्युतोऽपि स्याद्विशेषाभावादिति। एवं प्राप्त उच्यते—तद्भूतस्य तु प्रतिपन्नोर्ध्वरेतोभावस्य न कथञ्चिदप्यतद्भावो न ततः प्रच्युतिः स्यात्। कुतः—नियमातद्रूपाभावेभ्यः। तथाहि—'अत्यन्तमात्मानमाचार्यकुलेऽवसादयन्' (छा० २। २३। १) इति 'अरण्यमियादिति पदं ततो न

(நியமாதத்ரூபாபாவேப்ய:)=நியம=அந்த ஆஸ்ரமத்திலேயேதா னிருக்கவேண்டும் என்றநியமமும், அதத்ரூப=அதனின்றும் விலகுதலைச்சொல்லும் சாஸ்திரமின்மையும், அபாவ=அத்தகைய சிஷ்டாசாரமின்மையுமே அதன்காரணமாகும். जैमिनेरपि (ஜைமினேரபி)=ஜைமினிக்கும் (வியாஸருக்கும்) இவ்விஷயத்திலொத்துமை காணவும்படுகிறது. (40) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) ஆஸ்ரமிகளுக்கு அவரோஹமானது (கீழுள்ள ஆஸ்ரமத்தை யடைதலானது) உண்டா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். இச்சையினுலும், முன்னுள்ள ஆஸ்ரம தர்மங்களில் ஸ்ரத்தையினுலும் அவரோஹமானது ஸம்பவிக்கலாம். கீழுள்ள ஆஸ்ரமத்தினின்றும் மேலான ஆஸ்ரமத்தை யடைதல் எவ்விதமோ இவ்விதமே அவரோஹமானது (கீழுள்ளஆஸ்ரமத்தை யடைதலானது) ஐச்சிகமேயாகும் என்பது பூர்வபக்ஷம். ராகமானது முற்றிலும் நிஷித்தமாக விருப்பதாலும், சாஸ்திரவிஹிதமாயுள்ளதே தர்மமாகுமாதலாலும், ஆரோஹம் நியமோக்தி இவை முதலியன காணப்படுவதாலும், அவரோஹத்தைவிதிக்கும் சாஸ்திரமில்லாமையாலும் அவரோஹமானது (ஸன்யாஸா ஸ்ரமத்திலிருந்து அதற்குக்கீழுள்ள ஆஸ்ரமத்தை யடைதலானது) ஸம்பவிக்க முடியாது. என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—ஸன்யாஸாதி ஆஸ்ரமங்கள் இருப்பதாக ஸ்தாபிக்கப்பட்டன. அந்த ஆஸ்ரமங்களை யடைந்தவர்க்கு அதனின்றும் இரங்குதல்(கீழுள்ள ஆஸ்ரமத்தை அடைதல்) உண்டா? அல்லது இல்லையா? என ஸம்சயமுதயமாகிறது. முன்னருள்ள ஆஸ்ரமங்களுக்குரிய கர்மங்களை யனுஷ்டிக்கவேண்டுமென்ற வெண்ணத்தினுலோ, ராகாதிகளின் வசத்தாலோ அதனின்றும் இரங்கினவனுகவும் ஆகக்கூடும். விசேஷமில்லாதிருப்பதே அதன்காரணமாகும். எனஇவ்விதம் (பூர்வபக்ஷம்) ப்ராப்த்தமாகவே ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது. தத்பூதஸ்ய=ஸன்யாஸியாக விருக்குந் தன்மையை யடைந்தவர்க்கு எக்காரணம்பற்றியும் அதத்பாவமானது=அதனின்றும் இரங்குதலானது ஸம்பவிக்காது. ஏன்? நியமம், அதத்ரூபம், அபாவம் இவை இருப்பதாலென்க. அதாவது:—"முற்றிலுமே சரீரத்தை ஆசாரிய கிருஹத்தில் அழிப்பவனுய்" என்றும், "அரண்யத்தை (ஸன்யாஸாஸ்ரமத்தை)} அடைவானுக

अपित्वेक आचार्या उपपातकमेवैतदिति मन्यन्ते। यन्नैष्ठिकस्य गुरुदारादिभ्योऽन्यत्र ब्रह्मचर्यं विशीर्येत न तन्महापातकं भवति गुरुतल्पादिषु महापातकेष्वपरिगणनात्। तस्मादुपकुर्वाणवन्नैष्ठिकस्यापि प्रायश्चित्तस्य भावमिच्छन्ति ब्रह्मचारित्वाविशेषादवकीर्णित्वाविशेषाच्च। अशनवत्। यथा ब्रह्मचारिणो मधुमांसाशने व्रतलोपः पुनःसंस्कारश्चैवमिति। ये हि प्रायश्चित्तस्याभावमिच्छन्ति तेषां न मूलमुपलभ्यते। ये तु भावमिच्छन्ति तेषां ब्रह्मचार्यवकीर्णीत्येतदविशेषश्रवणं मूलम्। तस्माद्भावो युक्ततरः। तदुक्तं प्रमाणलक्षणे—'समा विप्रतिपत्तिः स्यात्' (जै० सू० १। ३। ८) 'शास्त्रस्था वा तन्निमित्तत्वात्' (जै० सू० १। ३। ९) इति। प्रायश्चित्ताभावस्मरणं त्वेवं सति यत्नगौरवोत्पादनार्थमिति व्याख्यातव्यम्। एवं भिक्षुवैखानसयोरपि 'वानप्रस्थो दीक्षाभेदे कृच्छ्रं द्वाद-

---

ரிக்கு மதுமாம்ஸபக்ஷணத்தினல் விரதலோபமேற்படுவதால் திரும்பவும் உபநயனதி ஸம்ஸ்காரம் பெறவேண்டுவது எவ்விதமோ அவ்விதமே இங்குமாகும். तदुक्तम् (ததுக்தம்)=அவ்விஷயமாகப் பூர்வமீமாம்ஸையில் சொல்லப்பட்டுமிருக்கிறது.

பாஷ்யம்—ஆனலோ சிலஆசிரியர்கள் இதை உபபாதகம் என்றே எண்ணுகின்றனர். நைஷ்டிக ப்ரம்ஹசாரிக்கு குருபத்தினியைக்காட்டிலும் வேறிடத்தில் ப்ரம்ஹசர்யம் நழுவிவிடுவது யாதுண்டோ அதுமஹா பாதகமாக வாகமாட்டாது. குருதல்டம் முதலிய மஹாபாதகங்களில் அவைசேர்க்கப்படாதிருப்பதே அதன் காரணமாகும். ஆகவே உபகுர்வாணனுக்குப்போல நைஷ்டிகனுக்கும் ப்ராயஶ்சித்தத்தின் இருப்பை விரும்புகின்றனர். ப்ரம்ஹசாரித்வம் இருவர்க்கும் பொதுவாக விருப்பதும், அவகீர்ணியாக (ப்ரம்ஹசரியத்தினின்றும் நழுவினவனக) இருத்தல் இருவர்க்கும் பொதுவாகவிருப்பதுமே அதன் காரணமாகும். அஶநம் போலவாம். அதாவது:—ப்ரம்ஹசாரிக்கு மதுமாம்ஸ பக்ஷணத்தில் ப்ரம்ஹசர்ய விரதலோபமும், திருப்பவும் ஸம்ஸ்காரம்பெறுதலும் எவ்விதமோ அவ்விதமே இங்கும்காணவேண்டும் என்றும். எவர் ப்ராயஸ்சித்தத்தின் அபாவத்தை விரும்புகின்றனரோ அவர்க்கு மூலப்ரமாணம் காணப்படவில்லை. எவர் ப்ராயஸ்சித்தத்தின் இருப்பை விருப்புகின்றனரோ அவர்க்கு "ப்ரம்ஹசாரியும் அவகீர்ணியும்" என்றுதொடங்கி ப்ராயஸ்சித்தத்தைப் பொதுப்படையாகக்கூறும் வசனமே மூலமாகிறது. ஆகவே ப்ராயஸ்சித்த முண்டென்பதுதான் மிக்கயுக்தமாக வாகிறது. அவ்விஷயம் (எதில் ப்ரமாணமிருக்கிறதோ அதையனுஸரிக்க வேண்டுமென்பது) பூர்வமீமாம்ஸையில் "ஸமாவிப்ரதிபத்தி:ஸ்யாத்" என்றதாலும், "ஶாஸ்த்ரஸ்தாவா தந்நிமித்தத்வாத்" என்றதாலும் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ராயஸ்சித்தம் கிடையாதென்று சொன்னஸ்மிருதியோவெனில் ப்ரம்ஹசரியத்தை ரக்ஷிப்பதில் அதிகம் முயற்சி செய்யவேண்டியாம் என வியாக்கியானம் செய்யவேண்டும். இவ்விதமே துறவி, வானப்ரஸ்தன் இருவர்க்குள் "வானப்ரஸ்தன் நியமம் பேதிக்கப்படுமாயின் பன்னிரண்டுநாட்கள் க்ருச்சிராநுஷ்டானத்தைச் செய்து பெரியகாட்டை வளர்க்கவேண்டும்" என்றும், "ஸன்னியாஸியானவன் வானப்ரஸ்தன்போல ஸோமலதையைத்தவிர்த்து பெரியகாட்டைவளப்பதுடன் ஸன்னியாஸத்தைவிதிக்

शरात्रं चरित्वा महाकक्षं वर्धयेत्', 'भिक्षुर्वानप्रस्थवत्सोमवल्लिवर्जं स्वशास्त्रसंस्कारश्च' इत्येवमादि प्रायश्चित्तस्मरणमनुस्मर्तव्यम् ॥ ४२ ॥

१२ बहिरधिकरणम् । सू० ४३

बहिस्तूभयथापि स्मृतेराचाराच्च ॥ ४३ ॥

शुद्धः शिष्टैरुपादेयस्त्याज्यो वा दोषहानितः । उपादेयोऽन्यथा शुद्धिः प्रायश्चित्तकृता वृथा ॥ १ ॥

आमुष्मिके च शुद्धिः स्यात्ततः शिष्टास्त्यजन्ति तम् । प्रायश्चित्तादृष्टिवाक्यादशुद्धिस्त्वैहिकीष्यते ॥ २ ॥

यद्यूर्ध्वरेतसां स्वाश्रमेभ्यः प्रच्यवनं महापातकं यदि वोपपातकमुभयथापि शिष्टैस्ते

கும் சாஸ்திரத்திற் சொல்லிய ஸம்ஸ்காரத்தையும் செய்துகொள்ளவேண்டும்" என இம்மாதிரியான ப்ராயஸ்சித்தங்கூறும் ஸ்மிருதியை யனுஸரித்து நடக்க வேண்டும் என்றும். (42) (எ—று)

பதினொன்றுவது உபபாதகாதிகரணம் முற்றிற்று.

பஹிரதிகரணம் 12.

(அ—கை) முந்தின அதிகரணத்திற் சொல்லியதைமறுத்து இந்தஅதிகரணத்தில் ஊர்த்துவரேதஸ்ஸுகள் விஷயமான நிர்ணயமானது சொல்லப்படுகிறது—

(ஸூ) பஹிஸ்து உபயதாபி ஸ்மிருதே: ஆசாராத்ச(43)

(ப—ரை) **उभयथापि** (உபயதாபி)=ஊர்த்துவரேதஸ்ஸுகளுக்குத் தமது ஆஸ்ரமத்தினின்றும் விலகுதல் உபபாதகமாகவோ, மஹாபாதகமாகவோ ஆனபோதிலுங்கூட அவர்கள் ப்ராயஸ்சித்தஞ் செய்துகொண்ட போதிலுங்கூட **बहिः**(பஹிः)=சிஷ்டர்களால் விலக்கத்தக்கவரே ஆவர். **स्मृतेः**(ஸ்மிருதேः)=ஸ்மிருதியும், **आचाराच्च** (ஆசாராத் ச)=சிஷ்டாசாரமு மிருப்பதே அதன்காரணமாகும். (43)

வையாஸிக நியாயமாலை.

(க—ரை) ப்ராயஸ்சித்தம் செய்து சுத்தனுகவான ஸன்யாஸியானவன் சிஷ்டர்களால் அங்கிகரிக்கதக்கவனு? அல்லது விலக்கத்தக்கவனு? என்பது ஸந்தேஹம். தோஷமானது போய்விட்டபடியால் அங்கிகரிக்கத்தக்கவனே ஆவான். அவ்விதமில்லாவிடில் ப்ராயஸ்சித்தத்தாற் செய்யப்பட்டசுத்தியானது வீணுகவே ஆகிவிடும் என்பது பூர்வபக்ஷம். ப்ராயஸ்சித்தமூலமேற்படும் சுத்தியானது பரலோகத்திலேயே ஒழிய இஹலோகத்திலில்லை. ஆனதுபற்றித்தான் சிஷ்டர்கள் (சாஸ்திரவஸ்யர்கள்) அவனைச்சேர்க்க மறுக்கின்றனர். "ப்ராயஸ்சித்தத்தை நான் பார்க்கவில்லை" என்ற வசனத்தைக்கொண்டு இஹலோகத்தில் அசுத்தி இருப்பதாகவேதான் எண்ணப்படுகிறது. (43) (எ—று)

பாஷ்யம்.—ஊர்த்துவரேதஸ்ஸுகளுக்குத் தமது ஆஸ்ரமத்தினின்றும் நழுவுதலானது மஹாபாதகமாகவோ உபபாதகமாகவோ ஆனபோதிலும் இரண்டுவிதத்

बहिष्कर्तव्याः । आरूढो नैष्ठिकं धर्मं यस्तु प्रच्यवते पुनः । प्रायश्चित्तं न पश्यामि येन शुध्येत्स आत्महा' इति 'आरूढपतितं विप्रं मण्डलाच्च विनिःसृतम् । उद्बद्धं कृमिदष्टं च स्पृष्ट्वा चान्द्रायणं चरेत्' इति चैवमादिनिन्दातिशयस्मृतिभ्यः । शिष्टाचाराच्च । नहि यज्ञाध्ययनविवाहादीनि तैः सहाचरन्ति शिष्टाः ॥ ४३ ॥

१३ स्वाम्यधिकरम् । सू० ४४–४६

स्वामिनः फलश्रुतेरित्यात्रेयः ॥ ४४ ॥

अङ्गद्ध्यानं याजमानमार्त्विज्यं वा यतः फलम् । ध्यातुरेवश्रुतं तस्माद्याजमानमुपासनम् ॥ १ ॥

ब्रूयादेवंविदुद्गातेत्यार्त्विज्यत्वं स्फुटं श्रुतम् । क्रीतत्वाद्दत्विजस्तेन कृतं स्वामिकृतं भवेत् ॥ २ ॥

திலும் அவர்கள் சிஷ்டர்களால் பஹிஷ்கரிக்கத் தக்கவர்களே ஆவர். "நைஷ்டிகமான (மரணம்வரை யனுஷ்டிக்கவேண்டியதான) தர்மத்தை யடைந்தவன் அதனின்றும் நழுவுவானேல், ஆத்மாவைக் கெடுத்துக்கொண்ட அவன் எதனால் சுத்தனாகவாவானோ அத்தகைய ப்ராயஸ்சித்தத்தை நான் பார்க்கவில்லை." என்றும், "ஆரூடபதிதனான விப்ரனையும், தேசத்தினின்றும் எல்லைக்கடத்தப்பட்டவரையும், தூக்குப்போட்டுக்கொண்டவனையும், புழுக்களால் கடிக்கப்பட்டவனையும் தொட்டால் சாந்திராயணம் என்ற விரதத்தைச் செய்யவேண்டும்" என்றுமாதிய நிந்தாதிசயத்தைச் சொல்லும் ஸ்மிருதிகளுமிருக்கின்றன. சிஷ்டர்களின் ஆசாரமுமிருக்கிறது. முற்கூறியவர்களுடன் சிஷ்டர்கள் யக்ஞம், அத்யயனம் விவாஹம் முதலியவற்றைச் செய்வதில்லையன்றோ? (43) (எ—று)

பன்னிரண்டாவது பஹிரதிகரணம் முற்றிற்று.

ஸ்வாம்யதிகரணம் 13.

(அ—கை) யாகாங்கங்களில்செய்யப்படும் உபாஸனங்களை யாகத்தைச்செய்யும் கர்த்தா செய்யவேண்டுமா? அல்லது ருத்விக்செய்யவேண்டுமா? எனஸந்தேஹம் வர அதைவிளக்கவேண்டி மூன்றுஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணமாரம்பிக்கப்படுகிறது. அவற்றின் முதல்ஸூத்திரம் பின்வருமாறு—

(ஸூ) ஸ்வாமிநः பலச்ருதேः இதி ஆத்ரேயः (44)

(ப—ரை) [अङ्गोपासनानि (அங்கோபாஸனானி)=அங்கங்களிற் செய்யப்படும் உபாஸனங்கள்] **स्वामिनः** (ஸ்வாமிநः)=யஜமானனுடையதே ஆகும். ஏன்? **फलश्रुतेः** (பலஶ்ருதேः)=பலனை யஜமானனைச் சார்ந்ததாக சுருதிசொல்லியிருப்பதே அதன் காரணமாகும் என **आत्रेयः** (ஆத்ரேயः)=ஆத்ரேயர் என்ற ஆசிரியர் எண்ணுகிறார். (44) (எ—று)

வையாஸிக ந்யாயமாலை.

(க—ரை) கர்மாங்கங்களிற்செய்யப்படும் தியானமானது யஜமானனுடையதா? ருத்விக்கினுடையதா? என்பது ஸந்தேஹம். யாதுகாரணத்தால் தியானஞ் செய்

अङ्गेषूपासनेषु संशयः। किं तानि यजमानकर्माण्याहोस्विदृत्विक्कर्माणीति। किं तावत्प्राप्तं यजमानकर्माणीति। कुतः—फलश्रुतेः। फलं हि श्रूयते—'वर्षति हास्मै वर्षयति ह य एतदेवं विद्वान्वृष्टौ पञ्चविधं सामोपास्ते' (छा० २। ३। २) इत्यादि। तच्च स्वामिगामि न्याय्यम्। तस्य साङ्गे प्रयोगेऽधिकृतत्वात्। अधिकृताधिकारत्वाच्चैवंजातीयकस्य। फलं च कर्तर्युपासनानां श्रूयते—'वर्षत्यस्मै य उपास्ते' इत्यादि। नन्वृत्विजोऽपि फलं दृष्टम् 'आत्मने वा यजमानाय वा यं कामं कामयते तमागायति' (बृ० १। ३। २८) इति। न। तस्य वाचनिकत्वात्। तस्मात्स्वामिन एव फलवत्सूपासनेषु कर्तृत्वमित्यात्रेय आचार्यो मन्यते ॥ ४४ ॥

आर्त्विज्यमित्यौडुलोमिस्तस्मै हि परिक्रीयते ॥ ४५ ॥

பவனுக்கே பலன் சொல்லப்பட்டிருக்கிறதோ அக்காரணத்தால் உபாஸனம் யஜமானனுடையதே தானாகும் என்பது பூர்வபக்ஷம். "இவ்விதமுபாஸிக்கும் உத்காதாசொல்லவேண்டும்" என ருத்விக்கினுடையதாகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்ப'தாலும், ருத்விக்கானவன் பணத்தால் விலைக்குவாங்கப்பட்டவனாதலாலும் ருத்விக்கினால் செய்யப்பட்டதும் யஜமானனால் செய்யப்பட்டதாகவே தானாகும் என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—அங்கோபாஸனங்களில் ஸம்சயமுண்டாகின்றது. அவை யஜமானனுடைய கர்மங்களா? அல்லது ருத்விக்கினுடைய கர்மங்களா? என்றும். முதலில் கிடைப்பது யாதென்னில்? யஜமானனுடைய கர்மங்களே என்றும். ஏன்? பலன் கூறும் சுருதியிருப்பதே அதன் காரணமாகும். பலமானது சுருதியில "இவனையும் பொருட்டு வர்ஷிக்கிறது வர்ஷிக்கும்படியும் செய்கிறது என்பதாய் எந்த வித்வான் இவ்விதமறிந்து மழையில் * ஐந்துவிதமான ஸாமபுத்தி செய்கிறானோ" என்றதாதி படிக்கப்படுகிறது. அந்தப்பலன் யஜமானனை யடைவது நியாயமானது. அவன் அங்கத்துடன் கூடின முழுப்ரயோகத்திலும் அதிகாரம் பெற்றவனாக விருப்பதே அதன் காரணமாகும். இம்மாதிரியான உபாஸனம் கர்மாவில் அதிகாரம் பெறறவனால் செய்யக்கூடியதாகவு மிருக்கிறது. "எவனுபாஸிக்கிறானோ அவனையும் பொருட்டு வர்ஷிக்கிறது" என்றதாதியான பலனும் உபாஸனங்களின் கர்த்தாவினிடத்தில் சுருதியிற் சொல்லப்படுகிறது.

சங்கை—"தனக்கோ யஜமானனுக்கோ எந்தப்பொருளை விரும்புகிறானோ அதை ஸாமகானத்தினால் ஸம்பாதிக்கிறான்" என்றதால் ருத்விக்குக்கும் பலன் சுருதியில் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. அது தனியான வசனத்தால் கூறப்பட்டிருப்பதே அதன் காரணமாகும். ஆகவே பலனுடன் கூடின உபாஸனங்களில் யஜமானனுக்கேதான் கர்த்திருத்வம் என ஆத்ரேயர் என்ற ஆசிரியர் எண்ணுகிறார்' (44)

---

* ஹிங்காரம், உத்கீதம், ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதனம் என ஸாமம் ஐந்து விதமாகும்.

नैतदस्ति स्वामिकर्माण्युपासनानीति। ऋत्विक्कर्माण्येतानि स्युरित्यौडुलोमिराचार्यो मन्यते। किं कारणं, तस्मै हि साङ्गाय कर्मणे यजमानेनर्त्विक्परिक्रीयते। तत्प्रयोगान्तःपातीनि चोद्गीथाद्युपासनानि। अधिकृताधिकारत्वात्। तस्माद्गोदोहनादिनियमवदेवर्त्विग्भिर्निर्वर्त्येरन्। तथाच 'तं ह बको दाल्भ्यो विदांचकार स ह नैमिशीयानामुद्गाता बभूव' (छा० १। २। १३) इत्युद्गातृकर्तृकतां विज्ञानस्य दर्शयति। यत्तूक्तं कर्त्राश्रयं फलं श्रूयत इति। नैष दोषः। परार्थत्वादृत्विजोऽन्यत्र वचनात्फलसंबन्धानुपपत्तेः॥४५॥

श्रुतेश्च॥४६॥

(ஸூ) ஆர்த்விஜ்யமிதி ஔடுலோமி: தஸ்மைஹி பரிக்ரீயதே()

(ப—ரை) **औडुलोमिः** (ஔடுலோமி:)=ஔடுலோமி என்ற ஆசிரியர் **आर्त्विज्यमिति** (ஆர்த்விஜ்யமிதி)=ருத்விக் செய்யவேண்டிய கர்மமே இது என எண்ணுகிறார். ஏன்? **तस्मै** (தஸ்மை)=அங்கத்துடன் கூடின கர்மாவுக்கு வேண்டி **परिक्रीयते हि** (பரிக்ரீயதே ஹி)=விலைகொடுத்தன்றோ ருத்விக் வாங்கப்படுகிறான். (யஜமானன் கொடுக்கும் தக்ஷிணைக்கு வேண்டியன்றோ ருத்விக் முற்கூறிய கர்மங்களைச் செய்கிறான் என்று கருத்து. (45) (எ—று)

பாஷ்யம்.—உபாஸனங்கள் யஜமானனுடைய கர்மங்கள் என்ற இது பொருந்தாது. இவை ருத்விக்கினுடைய கர்மங்களே யாகும் என ஔடுலோமி என்ற ஆசிரியர் எண்ணுகிறார். என்ன காரணம்? ருத்விக்கானவன் அங்கங்களுடன் கூடின அந்தக் கர்மத்தையும் பொருட்டன்றோ யஜமானனால் விலைக்குவாங்கப்படுகிறான். உத்கீதாதிகளான உபாஸனங்கள் அந்தக் கர்மப்ரயோகத்துக்குள்ளடங்கினவைகளாகின்றன. கர்மாவில் அதிகாரம் பெற்றவனுக்கு இதில் அதிகாரமேற்படுவதே அதன் காரணமாகும். ஆகவே கோதோஹனம் முதலிய நியமமானது போல [பால்கறக்கும் பாத்திரத்தினால் அப்பை (ஜலத்தை) ப்ரணயநம் செய்ய வேண்டும் என்றதுபோல] ருத்விக்குகளாலேயே இவை செய்து முடிக்கப்படும். "அந்த உத்கீதமெனப் பெயரிய ப்ரணவத்தை தால்ப்யரென்ற பகர் உபாஸித்தார் அவர் நைமிஸத்திலுள்ள ஸத்ரயாகஞ் செய்பவர்க்கு உத்காதாவாக (ஸாமகானஞ் செய்பவராக) ஆனார்" என்பதாய் உபாஸனமானது உத்காதாவான ருத்விக்கினால் செய்யப்படுவதாகச் சுருதி காண்பித்திருக்கிறது. கர்த்தாவை யாஸ்ரயித்ததாகப் பலன் சுருதியில் கூறப்படுகிறது என யாதொன்று சொல்லப்பட்டதோ. இந்தத் தோஷம் இங்கில்லை. ருத்விக்கானவன் பிறனுக்கு வேண்டி வேலை செய்வதால் (தனித்த) வசனமிருந்தால் அல்லாது அவனுக்குப் பலனில் ஸம்பந்தம் சொல்லுவது பொருத்தமற்றதே யாகும். (45) (எ—று)

(ஸூ) சுருதே: ச (46)

(ப—ரை) ருத்விக்கினால் செய்யப்படும் பலன் யஜமானனைச் சேருகிறது. என்ற விஷயத்தில் **श्रुतेश्च** (ஶ்ருதேஶ்ச)=சுருதியுமிருக்கிறது. (46) (எ—று)

'यां वै कांचन यज्ञ ऋत्विज आशिषमाशासत इति यजमानायैव तामाशासत इति होवाच' इति, 'तस्मादु हैवंविदुद्गाता ब्रूयात्कं ते काममागायानि' (छा० १।७।८-९) इति। तच्चर्त्विक्कर्तृकस्य विज्ञानस्य यजमानगामि फलं दर्शयति। तस्मादङ्गोपासनानामृत्विक्कर्मत्वसिद्धिः ॥ ४६ ॥

१४ सहकार्यन्तरविध्यधिकरणम्। सू० ४७-४९

பாஷ்யம்.—"யாகத்தில் ருத்விக்குகள் யாதானுமொரு பலனை விரும்புவாராயின் யஜமானனையும் பொருட்டே அதை விரும்புகின்றனர். எனச் சொன்னர்" என்றும், "ஆகவே உனக்கு வேண்டிய எந்தக் காமத்தை (ப்பொருளை) ப்பற்றிய கானத்தை நான் செய்யட்டும் என இவ்விதமுபாஸனஞ் செய்த உத்காதாவானவன் யஜமானனைக் கேட்கவேண்டும்" என்றும் சுருதியிருக்கிறது. அதுவும் ருத்விக்கினல் செய்யப்படும் உபாஸனத்தின் பலன் யஜமானனைச் சாருகிறது என்பதைத் தெரிவிக்கிறது. ஆனதுபற்றி அங்கோபாஸனங்கள் ருத்விக்குகளால் செய்யவேண்டுவன என்பது ஸித்திக்கிறது. (46) (எ-று)

பதிமூன்ருவது ஸ்வாம்யதிகரணம் முற்றிற்று.

ஸஹகார்யந்தர வித்யதிகரணம் 14.

(அ-கை) ப்ருஹதாரண்யகத்தில் பின்வரும் வாக்கியம் காணப்படுகிறது. அதாவது:—யாதுகாரணத்தால் முன்னருள்ள ப்ராம்ஹணர்கள் ஆத்மாவையறிந்து ஸன்னியாஸத்தை யடைந்து பிக்ஷாசர்யத்தை யனுஷ்டிக்கின்றரோ तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेत् बाल्यं च पाण्डित्यं च निर्विद्याथमुनिः अमौनं च मौनं च निर्विद्याथ ब्राह्मणः (தஸ்மாத் ப்ராம்ஹணஃ பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத் பால்யஞ்ச பாண்டித்யஞ்ச நிர்வித்ய அதமுனிஃ அமௌநஞ்ச மௌநஞ்ச நிர்வித்ய அதப்ராம்ஹணஃ) ஆனதுபற்றி இதுபோழ்துள்ள ப்ராம்ஹணனுங்கூட பாண்டித்யத்தை=ஆபாத க்ஞானமுள்ள பண்டிதரின் காரியத்தை அதாவது ஶ்ரவணத்தை நிஶ்சயமாக அடைந்து பால்யத்துடன்=ஶ்ரவணத்தால் கிடைத்த க்ஞானத்தின் பலத்தன்மையுடன் அதாவது மனனத்துடன், இருக்க விரும்பவேண்டும். இவ்விதம் பாண்டித்ய பால்யங்களை(அதாவது ஶ்ரவணமனனங்களைச்) செய்து பிறகு முனியாக=நிதித்யாஸனத்தைச் செய்பவனக, ஆகவேண்டும். பிறகு அமௌனத்தையும்=பால்யபாண்டித்யங்களையும், மௌனத்தையும் நிதித்யாஸனத்தையும் அடைந்து பிறகு நான் ப்ரம்ஹமாக இருக்கிறேன் என ப்ரம்ஹஸாக்ஷாத்காரமுள்ள ப்ராம்ஹணனுக ஆகிருன்" என்றும். இங்குள்ள மௌனம் என்ற சப்தத்துக்கு ஸித்தரூபமான ஸன்னியாஸத்திலும், அனுஷ்டிக்கத் தகுந்தத்தியானத்திலும் பிரயோகம் காணப்படுவதால் ஸம்சயமுதயமாகிறது. அதைப் போக்கி மௌனம் என்றதால் தியானமே விதிக்கப்படுகிறது என்பதைச் சித்தாந்தப்படுத்தவேண்டி மூன்று ஸூத்திரங்கள் கொண்ட இந்த அதிகரணம் ஆரம்பிக்கப்படுகிறது. அதன் முதல் ஸூத்திரம் பின்வருமாறு—

सहकार्यन्तरविधिः पक्षेण तृतीयं तद्वतो विध्यादिवत् ॥ ४७ ॥

अविधेयं विधेयं वा मौनं तत्र विधीयते। प्राप्तं पाण्डित्यतो मौनं ज्ञानवाच्युभयं यतः ॥ १ ॥

निरन्तरज्ञाननिष्ठा मौनं पाण्डित्यतः पृथक्। विधेयं तद्भेददृष्टिप्राबल्ये तन्निवृत्तये ॥ २ ॥

तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेद्बाल्यं च पाण्डित्यं च निर्विद्याथ मुनिरमौनं च मौनं च निर्विद्याथ ब्राह्मणः' (बृ० ३।५।१) इति बृहदारण्यके श्रूयते। **तत्र संशयः मौनं विधीयते न वेति। न विधीयत इति तावत्प्राप्तम्। बाल्येन तिष्ठासेदित्य-**

(ஸூ) ஸஹகார்யந்தரவிதி: பக்ஷேண திருதீயம் தத்வதோ வித்யாதிவத் (47)

(ப-ரை) **सहकार्यन्तरविधिः** (ஸஹகார்யந்தரவிதி:)=வித்யைக்கு ஸஹகாரியான பால்யபாண்டித்யங்களுக்குப் போல மௌனத்துக்கும் விதியையாஶ்ரயிக்க வேண்டுவது அவஶ்யமாகும். வேறு ப்ரமாணத்தால் இது கிடைக்காதிருப்பதே அதன் காரணமாகும். ஆகவே **तृतीयम्** (திருதீயம்)=பால்யம், பாண்டித்யம் இவ்விரண்டைக் காட்டிலும் மூன்றாவதான மௌனமானது=க்ஞானாதிசயமானது **तद्वतः** (தத்வத:)=ஸன்னியாஸிக்கு **पक्षेण** (பக்ஷேண)=பேததர்சனமானது ப்ரபலமாக இருக்கும் பக்ஷத்தில் விதிக்கவேபடுகிறது. **विध्यादिवत्** (வித்யாதிவத்)=ஸ்வர்க்கத்தில் ஆசைஉள்ளவன் தர்சபூர்ணமாஸங்களால் யஜிக்கவேண்டும் என்ற விடத்தில் அக்னியின் அன்வாதானம் முதலிய ஸஹகாரியான அங்கஸமூஹமானது விதிக்கப்படுவது போலவே இங்கும் காணவேண்டும். (47) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) மௌனமானது=நிதித்யாஸனமானது விதிக்கப்படுவதில்லையா? அல்லது விதிக்கப்படுகிறதா? என்பது ஸந்தேஹம். யாதுகாரணத்தால் பாண்டித்யம் என்பதும் மௌனமென்பதுமான இரண்டும் க்ஞானத்தைச் சொல்லும் பதங்களோ அக்காரணம்பற்றி பாண்டித்யத்தினாலேயேமௌனமும்ப்ராப்தமாகவாவதால் அது(மௌனம்)விதிக்கப்படுவதில்லை என்பது பூர்வபக்ஷம். இடையறாத (எவ்வித பேதமுமற்ற) க்ஞானநிஷ்டையே மௌனம் என்றபதத்தாற் சொல்லப்படுவதால் அது பாண்டித்யத்தைக் காட்டிலும் வேறுபட்டதேயாகும். ஆகவே பேதக்ஞானமானது வலுவாக விருக்கும்கால் அந்த மௌனமானது விதிக்கவேண்டுவதாகவே தானாகிறது என்பது ஸித்தாந்தம். (எ-று)

பாஷ்யம்.—"ஆகவே ப்ராம்ஹணன் ஆபாதமான (பேததர்சனத்துடன் கூடின) க்ஞானத்தை யடைந்து=அதாவது சிரவணஞ் செய்து, பால்யத்துடன்=ஶ்ரவணத்தாலேற்பட்ட க்ஞானவலுவுடன், இருக்க முயலவேண்டும். பால்யத்தையும் பாண்டித்யத்தையும் அடைந்த பிறகு முனியாகவாகிறான். அமௌனத்தையும் (பால்யபாண்டித்யத்தையும்) மௌனத்தையும் (எவ்விதபேதமுமற்ற ஆத்மக்ஞானத்தையும்) அடைந்தபிறகு ப்ராம்ஹணனாக(ப்ரம்ஹஸ்வரூபத்திலிருப்பவனாக) ஆகிறான்" என ப்ருஹதாரண்யகத்தில் படிக்கப்படுகிறது. அங்கு மௌனமா

त्रैव विधेरवसितत्वात्। नह्यथ मुनिरित्यत्र विधायिका विभक्तिरुपलभ्यते तस्मादयमनुवादो युक्तः। कुतः प्राप्तिरिति चेत्। मुनिपण्डितशब्दयोर्ज्ञानार्थत्वात्पाण्डित्यं निर्विद्येत्येवं प्राप्तं मौनम्। अपिचामौनं च मौनं च निर्विद्याथ ब्राह्मण इत्यत्र तावन्न ब्राह्मणत्वं विधीयते प्रागेव प्राप्तत्वात्। तस्मादथ ब्राह्मण इति प्रशंसावादस्तथैवाथ मुनिरित्यपि भवितुमर्हति समाननिर्देशत्वादिति। एवं प्राप्ते ब्रूमः—सहकार्यन्तरविधिरिति। विद्यासहकारिणो मौनस्य 'बाल्यपाण्डित्यवद्विधिरेवाश्रयितव्योऽपूर्वत्वात्। ननु पाण्डित्यशब्देनैव मौनस्यावगतत्वमुक्तम्। नैष दोषः। मुनिशब्दस्य ज्ञानातिशयार्थत्वात्। मननान्मुनिरिति च व्युत्पत्तिसंभवात्। 'मुनीनामप्यहं व्यासः' (गी० १०। ३७) इति च प्रयोगदर्शनात्। ननु मुनिशब्द उत्तमाश्रमवचनोऽपि श्रूयते गार्हस्थ्यमाचार्यकुलं मौनं वानप्रस्थम्' इत्यत्र।

னது விதிக்கப்படுகிறதா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். மௌனம் விதிக்கப்படுவதில்லை எனப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது. "பால்யத்துடன் இருக்கவிரும்பவேண்டும்" என்ற இவ்விடத்திலேயே விதிமுடிந்து விடுகிறது. "பிறகு முனி" என்ற இவ்விடத்தில் விதியைச் சொல்லும் விபக்தியானது) விதியைக் காட்டும் ப்ரத்யயமானது) காணப்படவில்லையன்றோ? ஆனதுபற்றி 'அத முனி:" என்ற இது அனுவாதமேயாகும் என்பது தான் பொருந்துகிறது. (இதை அனுவாதமென்றால்) எதிலிருந்து ப்ராப்த்தியேற்படுகிறது எனின்? முனி என்றும் பாண்டித்யம் என்றுமான இவ்விரு சப்தங்களுக்கும் ஆத்மக்ஞானம் என்றே பொருளாகையால் பாண்டித்யத்தை யடைந்து என்றதாலேயே மௌனமும் ப்ராப்த்தமாகி விடுகிறது. மேலும் அமௌனத்தையும், மௌனத்தையும் அடைந்த பின்னர் ப்ராம்ஹணனாகிறான் என்ற விடத்தில் ப்ராம்ஹணத்தன்மை விதிக்கப்படுவதில்லை. முன்னரே ப்ராம்ஹண்யம் ப்ராப்த்தமாக விருப்பதே அதன்காரணமாகும். ஆனதுபற்றி "பிறகு ப்ராம்ஹணனாகிறான்" என்பது ப்ரஶம்ஸா வாதமாக (புகழுரையாக) ஆவது எவ்விதமோ அவ்விதமே "அத முனி:" என்பதும் ஆவது தான் பொருத்தமுள்ளதாக வாகிறது. உபதேசிக்கும் முறை இரண்டிடத்திலும் ஸமானமாக இருப்பதே அதன் காரணமாகும். என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்த்தமாகவே ஸஹகார்யந்தரவிதி: என்றதால் (ஸித்தாந்தம்) சொல்லுகிறோம். வித்யைக்கு ஸஹகாரியான (உதவி ஸாதனமான) மௌனத்துக்கு பால்யம் பாண்டித்யம் இவற்றுக்குப் போல விதியே தான் ஆஶ்ரயிக்கவேண்டும். அபூர்வமாக (வேறு ப்ரமாணத்தால் கிடைக்காததாக) இருப்பதே அதன் காரணமாகும்.

சங்கை—பாண்டித்ய சப்தத்தினாலேயே மௌனமும் அறியப்பட்டதெனச் சொல்லப்பட்டதன்றோ? எனின்?

உத்தரம்—இது தோஷமாகாது. முனி என்ற சப்தத்துக்கு க்ஞானாதிசயமானது (எவ்விதபேதமுமற்ற ஆத்மக்ஞானமானது) பொருளாக ஏற்படுகிறது. மனனஞ் செய்வதால் முனி எனப்படுவர் என்ற வ்யுத்பத்தி ஸம்பவிப்பதுடன் "முனிகளுக்குள் நான்வியாஸராக இருக்கிறேன்" எனப்பிரயோகமுமிருக்கிறது.

न। 'वाल्मीकिर्मुनिपुङ्गवः' इत्यादिषु व्यभिचारदर्शनात्। इतराश्रमसन्निधानात्तु पारिशेष्यात्तत्रोत्तमाश्रमोपादानं ज्ञानप्रधानत्वादुत्तमाश्रमस्य। तस्माद्बाल्यपाण्डित्यापेक्षया तृतीयमिदं मौनं ज्ञानातिशयरूपं विधीयते। यत्तु बाल्य एव विधेः पर्यवसानमिति तथाप्यपूर्वत्वान्मुनित्वस्य विधेयत्वमाश्रीयते मुनिः स्यादिति। निर्वेदनीयत्वनिर्देशादपि मौनस्य बाल्यपाण्डित्यवद्विधेयत्वाश्रयणम्। तद्वतो विद्यावतः सन्न्यासिनः। कथञ्च विद्यावतः सन्न्यासिन इत्यवगम्यते। तदधिकारात् 'आत्मानं विदित्वा पुत्राद्येषणाभ्यो व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति' इति। ननु सति विद्यावत्त्वे प्राप्नोत्येव तत्रातिशयः किं मौनविधिनेत्यत आह—पक्षेणेति। एतदुक्तं भवति—यस्मिन्पक्षे भेददर्शनप्राबल्यान्न प्राप्नोति तस्मि-

---

சங்கை—"கார்ஹஸ்த்யம், ஆசார்யகுலம், மௌனம், வானப்ரஸ்தம்" என்ற விடத்தில் முனிசப்தமானது ஸன்னியாஸாஶ்ரமத்தைச் சொல்லுவதாகவும் காணப் படுகின்றதன்றோ எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. "வால்மீகி என்ற முனிபுங்கவர் (முனிகளுட்சிறந்தவர்)" என்றதாதிகளில் வ்யபிசாரம் வருகிறது (அதாவது முனிசப்தம் ஸன்னியாஸாஶ்ரமத்தையே சொல்லுமாயின் ஸன்னியாஸியாக இல்லாத வால்மீகியை முனி சிரேஷ்டர் என்றது வீணாகிவிடும் என்றும்) ஆனால் சுருதியில் வேறு ஆஶ்ரமங்களின் ஸமீபபாடமிருப்பதைக் கொண்டு !எஞ்ஜியிருப்பதைக்காணும் முறையில் முனிசப்தத்தால் ஸன்னியாஸாஶ்ரமம் கிரஹிக்கப்படுகிறது. ஸன்னியாஸாஶ்ரமமானது க்ஞானத்தை ப்ரதானமாகக்கொண்டதாகவு மிருக்கிறது. ஆகவே பால்யம் பாண்டித்யம் இவற்றை யபேக்ஷித்து க்ஞானாதிசயரூபமான மூன்றாவதான இந்த மௌனமானது (நிதித்யாஸனமானது) விதிக்கப்படுகிறது. ("பால்யேன திஷ்டாஸேத்" என்றதால்) பால்யத்திலேயேதான் விதியின் முடிவேற்படுகிறது என்றாலோ அவ்விதமாயினுங்கூட முனியாக விருத்தலானது அபூர்வமாக (வேறுப்ரமாணத்தால் கிடைக்காததாக) இருப்பதால் முனியாக இருக்கவேண்டும் என அதற்கே விதேயத்வமானது ஆஶ்ரயிக்கப் படுகிறது. ("மௌனம்ச நிர்வித்ய" என்றதால்) நிஶ்சயமாக அடையவேண்டியதாக விருத்தல் சொல்லியிருப்பதைக்கொண்டு பால்யம் பாண்டித்யம் இவற்றுக்குப் போல மௌனத்துக்கு விதேயத்வமானது ஆஶ்ரயிக்கப்படுகிறது. (ஸூத்திரத்திலுள்ள) தத்வத: என்றதற்கு வித்யையுள்ள ஸன்னியாஸிக்கு என்று பொருள். வித்யையுள்ளஸன்னியாஸிக்கு என எவ்விதம் கிடைக்கிறது எனின்? "ஆத்மாவை யறிந்து புத்திராதி ஏஷணைகளினின்றும் விடுபட்டவனாய் பிக்ஷாடனத்தைச் செய்கின்றனர்" என்றதால் ஸன்னியாஸியைச் சொல்லத்தொடங்கி யிருப்பதே அதன் காரணமாகும்.

சங்கை—வித்யையுள்ளவனாக விருத்தல் இருக்குங்கால் அதில் ஒரு அதிசயமும் தானே கிடைத்துவிடக்கூடும். இவ்விதமிருக்க மௌனவிதியினால் யாது பயன் எனின்?

உத்தரம்—இதற்கு வேண்டியே ஸூத்திரத்தில் "பக்ஷேண" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இவ்விதம் சொல்லப்பட்டதாக வாகிறது. அதா

न्नैष विधिरिति । विध्यादिवत् । यथा—'दर्शपूर्णमासाभ्यां स्वर्गकामो यजेत' इत्येवञ्जातीयके विध्यादौ सहकारित्वेनाऽग्न्यन्वाधानादिकमङ्गजातं विधीयते । एवमविधिप्रधानेऽस्यस्मिन्विद्यावाक्ये मौनविधिरित्यर्थः ॥ ४७ ॥

एवं बाल्यादिविशिष्टे कैवल्याश्रमे श्रुतिमति विद्यमाने कस्माच्छान्दोग्ये गृहिणोपसंहारः 'अभिसमावृत्य कुटुम्बे' (छा० ८ । १५ । १) इत्यत्र । तेन ह्युपसंहरंस्तद्विषयमादरं दर्शयतीति । अत उत्तरं पठति—

कृत्स्नभावात्तु गृहिणोपसंहारः ॥ ४८ ॥

तुशब्दो विशेषणार्थः । कृत्स्नभावोऽस்य विशेष्यते । बहुलायासानि हि बहून्याश्रम-

---

வது:—எந்தப் பக்ஷத்தில் பேதக்ஞானம் வலுவாக விருப்பதுபற்றி மௌனம் ப்ராப்த்தமாகவாவதில்லையோ அந்தப் பக்ஷத்தில் மௌனத்தை விதிக்க வேண்டியே என்றும். * வித்யாதிபோலவாம். "ஸ்வர்க்கத்தில் ஆசையுள்ளவன் தர்சபூர்ணமாஸங்களால் யஜிக்கவேண்டும்" என்ற இம்மாதிரியான விதியின் ஆதியில் ஸஹகாரியாக இருப்பதுபற்றி அக்னியின் அங்வாதானம் முதலிய அங்கஸமூஹமானது விதிக்கப்படுவது போலவாம். இவ்விதமே விதியை ப்ரதானமாகக் கொள்ளாவிடினுங்கூட இந்த வாக்கியத்தில் மௌனமானது விதிக்கப்படுகிறது என்பதுபொருள்.

அவதாரிகா பாஷ்யம்.—இவ்விதம் பால்யாதிகளுடன் கூடின ஸன்யாஸாஸ்ரமமானது சாஸ்திரத்தில் சொல்லப்படுவதாக இருக்கும் பொழுது சாந்தோக்கியத்தில் "ஆசாரிய குலத்தினின்றும் திரும்பிவந்து குடும்பத்திலிருக்கவேண்டும்" என கிருஹஸ்தனுடன் முடிவு செய்தது யாது காரணம் பற்றி எனின்? கிருஹஸ்தனுடன் முடிவு பெறும் வேதமானது கிருஹஸ்தன் விஷயத்தில் தனக்குள்ள ஆதரவைத் தெரிவிப்பதற்கன்றோ எனின்? இவ்விஷயத்தில் பதில் சொல்லவேண்டி மேல் ஸூத்திரம் படிக்கப்படுகிறது—

(ஸூ) கிருத்ஸ்னபாவாத்து கிருஹிணு உபஸம்ஹாரः ()

(ப-ரை) **कृत्स्नभावात्तु** (கிருத்ஸ்னபாவாத்து) வெகு ஆயாஸத்துடன் செய்ய வேண்டிய யாகாதிகர்மங்களுள்ளதா யிருப்பதுபற்றியும், வேறு ஆஸ்ரமத்துக்குரிய அஹிம்ஸை இந்திரியஜயம் இவையுள்ளதா யிருப்பதுபற்றியுமே **गृहिणा** (க்ருஹிணு)=கிருஹஸ்தனுடன் **उपसंहारः** (உபஸம்ஹாரः)=முடிவானது செய்யப்பட்டது. (48) (எ-று)

பாஷ்யம்.—ஸூத்திரத்திலுள்ள து என்ற சப்தமானது வேறு ஆஸ்ரமத்தைக் காட்டிலும் இந்த ஆஸ்ரமத்தை பிரித்துக் காட்டுகிறது. இந்த ஆஸ்ரமத்துக்கு கிருத்ஸ்னபாவமானது விசேஷித்துச் சொல்லப்படுகிறது. வெகு ஆயாஸ

---

* ப்ரதானம் தொடங்கி அங்கத்தை முடிவாகக் கொண்டது விதி எனப்படும். அதில் ப்ரதானமான யாகமானது விதியின் ஆதியாகவும், அங்கமானது விதியின் அந்தமாகவும் கொள்ளப்படுகிறது.

कर्माणि यज्ञादीनि तं प्रति कर्तव्यतयोपदिष्टान्याश्रमान्तरकर्माणि च यथासंभवमहिंसेन्द्रियसंयमादीनि तस्य विद्यन्ते । तस्माद्गृहमेधिनोपसंहारो न विरुध्यते ॥ ४८ ॥

मौनवदितरेषामप्युपदेशात् ॥ ४९ ॥

यथा मौनं गार्हस्थ्यं चैतावाश्रमौ श्रुतिमन्तावेवमितरावपि वानप्रस्थगुरुकुलवासौ । दर्शिता हि पुरस्ताच्छ्रुतिः—'तप एव द्वितीयो ब्रह्मचार्याचार्यकुलवासी तृतीयः' (छा० २ । २३ । १) इत्याद्या । तस्माच्चतुर्णामप्याश्रमाणामुपदेशाविशेषात्तुल्यवद्विकल्पसमुच्चयाभ्यां प्रतिपत्तिः । इतरेषामिति द्वयोराश्रमयोर्बहुवचनं वृत्तिभेदापेक्षयाऽनुष्ठातृभेदापेक्षया वेति द्रष्टव्यम् ॥ ४९ ॥

१५ अनाविष्काराधिकरणम् । सू० ५०

अनाविष्कुर्वन्नन्वयात् ॥ ५० ॥

முள்ள யாகம் முதலிய வெகு ஆஶ்ரமகர்மங்கள் அந்தக் கிருஹஸ்தாஶ்ரமத்தைக் குறித்து செய்யவேண்டுவனவாக உபதேசிக்கப்பட்டிருப்பதுடன், அஹிம்ஸை, இந்திரியஜயம் முதலிய வேறு ஆஶ்ரமகர்மங்களும் அவருக்குச் செய்யவேண்டுவனவாக விருக்கின்றன. ஆனதுபற்றியே கிருஹஸ்தனுடன் உபஸம்ஹாரம் செய்தது விரோதப்படமாட்டாது. (48) (எ—று)

(ஸூ) மௌனவத் இதரேஷாமபி உபதேசாத் (49)

(ப—ரை) मौनवत् (மௌனவத்)=ஸன்னியாஸம், கார்ஹஸ்த்யம் என்ற இரண்டு ஆஶ்ரமங்கள்போல, इतरेषामपि (இதரேஷாமபி)=வேறு ஆஶ்ரமங்களுக்கும் उपदेशात् (உபதேசாத்)=உபதேசமானது சுருதியில் காணவும்படுகிறது. (49)

பாஷ்யம்.—மௌனம், கார்ஹஸ்த்யம் என்ற இந்த இரண்டு ஆஶ்ரமங்களும் சுருதியில் எவ்விதம் கூறப்படுகின்றனவோ இவ்விதமே வானப்ரஸ்தம், குருகுலம் (ப்ரம்ஹசர்யம்) என்ற ஆஶ்ரமங்களுமாகும். "தபஸ்ஸே இரண்டாவதாகும். ப்ரம்ஹசாரி ஆசாரியகுலவாஸீ மூன்றாவதாகும்" என்றதாதியான சுருதியும் முன்னர் காண்பிக்கப்பட்டதன்றோ? ஆகவே நான்கு ஆஶ்ரமங்களுக்கும் உபதேசம் பொதுவாக விருப்பதால் துல்யமாகவே விகல்பமாகவும் ஸமுச்சயமாகவும் அவற்றின்ப்ராப்தி ஏற்படுகிறது. ஸூத்திரத்தில் இதரேஷாம் என இரண்டு ஆஶ்ரமங்களுக்கு பஹுவசனம் (பன்மை) சொன்னதானது அவற்றின்விருத்திபேதத்தை யொட்டியோ, அவற்றை யனுஷ்டிப்பவரின் பேதத்தை யொட்டியோ சொல்லப்பட்டதெனக் கண்டுகொள்ள வேண்டும். (49) (எ—று)

பதினான்காவது ஸஹகார்யந்தரவித்யதிகரணம் முற்றிற்று

அநாவிஷ்காராதிகரணம் 15.

(ஸூ) அநாவிஷ்குர்வன் அன்வயாத் (50)

(ப—ரை) अनाविष्कुर्वन् (அநாவிஷ்குர்வன்)=க்ஞானம் அத்யயனம் தார்மி

बाल्यं वयः कामचारो धीशुद्धिर्वा प्रसिद्धितः। वयस्तस्याविधेयत्वे कामचारोऽस्तु नेतरा ॥ १ ॥
मननस्योपयुक्तत्वाद्भावशुद्धिर्विवक्षिता। अत्यन्तानुपयोगित्वाद्विरुद्धत्वाच्च न द्वयम् ॥ २ ॥

'तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेत्' (बृ० ३। ५। १) इति बाल्यमनुष्ठेयतया श्रूयते। तत्र बालस्य भावः कर्म वा बाल्यमिति तद्धिते सति बालभावस्य वयोविशेषस्येच्छया संपादयितुमशक्यत्वाद्यथोपपादं मूत्रपुरीषत्वादिबालचरितमन्तर्गता वा भावविशुद्धिरप्ररूढेन्द्रियत्वं दम्भदर्पादिरहितत्वं वा बाल्यं स्यादिति संशयः। किं तावत्प्राप्तं कामचारवादभक्षणता यथोपपादमूत्रपुरीषत्वं च प्रसिद्धतरं लोके बाल्यमिति तद्ग्रहणं युक्तम्। ननु पतितत्वादिदोषप्राप्तेर्न युक्तं कामचारताद्याश्रयणम्। न। विद्यावतः

கத்வம் முதலியவற்றால் தன்னை ப்ரகடனப்படுத்திக் கொள்ளாதவனாக இருக்க வேண்டும். अन्वयात् (அன்வயாத்)=இவ்விதம் பொருள் கொண்டால் தான் வாக்கியத்துக்குத் தொடர்ந்த பொருள் ஏற்படும். (50) (எ—று)

வையாஸிக ந்யாயமாலை.

(க—ரை) சுருதியில் "பால்யேந திஷ்டாஸேத்" என்றதால் சொல்லப்படும் பால்யமானது இளமைவயதைச் சொல்லுகிறதாய் காமசாரத்தை (இஷ்டப்படி நடத்தலை) ச் சொல்லுகிறதா? அல்லது சித்தத்தின் தெளிவைச் சொல்லுகிறதா? என்பது ஸந்தேஹம். ப்ரஸித்தியைக் கொண்டு பால்யம் என்பது வயோவிசேஷத்தையே தான் சொல்லும். அந்த வயோவிசேஷமானது விதிக்கவேண்டுவதாக இல்லாதபடியால் காமசாரமானது (இஷ்டப்படி நடத்தலானது) விதேயமாக வாகுமே யொழிய பிறவொன்றுமாகாது என்பது பூர்வபக்ஷம். மனனத்துக்கு உபயோகப்படுவதுபற்றி சித்த சுத்தியானது சொல்ல விரும்பப்பட்டது. முற்றிலும் உபயோகப்படாதிருப்பது பற்றியும், விருத்தப் படுவதுபற்றியும், வயோவிசேஷமும், காமசாரமும் பால்ய என்ற சப்தத்தால் சொல்லப்படமாட்டாது. என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"ஆனதுபற்றி ப்ராம்ஹணன் பாண்டித்யத்தை யடைந்து பால்யத்துடன் இருக்க விரும்பவேண்டும்" என்றதால் பால்யமானது அனுஷ்டேயமாகச் சொல்லப்படுகிறது. அவ்விடத்தில் बाल्यम् (பால்யம்)=என்பதற்கு பாலனுடையதன்மையோ கர்மமோ, பால்யம் எனப்படும் என்பதாய் பால=என்ற சப்தத்தின் மேல் ய என்ற தத்தித ப்ரத்யயம் வைக்கும் பொழுது பால்ய சப்தமேற்படுவதிலிருந்து பால்ய என்றதால் பாலபாவமான வயோவிசேஷமானது (இளமைப் பருவமானது) இச்சையினால் ஸம்பாதிக்க முடியாதிருப்பது பற்றி தனது இஷ்டப்படி மூத்திரபுரீஷாதிகளை விடுதலாகிற பாலனுடைய சரித்திரம் சொல்லப்படுகிறதா? அல்லது அப்பாலனின் உள்ளிருக்கின்ற சித்தசுத்தியும், இந்திரியங்களுக்கு விஷயப்பற்றில்லாமையும், தம்பம் தர்ப்பம் முதலியன அற்றிருத்தலும் ஆகிற தர்ம விசேஷம் சொல்லப்படுகிறதா? என ஸம்சய முதயமாகிறது, முதலில் கிடைப்பது யாதென்னில் இஷ்டப்படி நடத்தல் இஷ்டப்படி பேசல் இஷ்டப்படி பக்ஷித்தல் என்ன, இஷ்டப்படி மூத்திர புரீஷாதிகளை விடுதல் என்ன இவையுள்ளதாயிருத்தல்

सन्न्यासिनो वचनसामर्थ्याद्दोषनिवृत्तेः पशुहिंसादिष्विवेति। एवं प्राप्तेऽभिधीयते। न। वचनस्य गत्यन्तरसंभवात्। अविरुद्धे ह्यन्यस्मिन्बाल्यशब्दाभिलप्ये लभ्यमाने न विध्यन्तरव्याघातकल्पना युक्ता। प्रधानोपकाराय चाङ्गं विधीयते। ज्ञानाभ्यासश्च प्रधानमिह यतीनामनुष्ठेयम्। नच सकलायां बालचर्यायामङ्गीक्रियमाणायां ज्ञानाभ्यासः संभाव्यते। तस्मादान्तरो भावविशेषो बालस्याप्ररूढेन्द्रियत्वादिरिह बाल्यमाश्रीयते। तदाह—अनाविष्कुर्वन्निति। ज्ञानाध्ययनधार्मिकत्वादिभिरात्मानमविख्यापयन्दम्भदर्पादिरहितो भवेत्। यथा बालोऽप्ररूढेन्द्रियतया न परेषामात्मानमाविष्कर्तुमीहते तद्वत्। एवं ह्यस्य वाक्यस्य प्रधानोपकार्यर्थानुगम उपपद्यते। तथाचोक्तं स्मृतिकारैः—'यं न सन्तं न चासन्तं नाश्रुतं

பால்யம் என்பதாய் உலகில் பிரஸித்தமாக விருப்பதால் அதைக் கிரஹிப்பது தான் பொருத்த முள்ளதாக வாகிறது.

சங்கை—பதிதத்வம் முதலிய தோஷப்ராப்தி யேற்படுமாதலால் காமசாரதை (இஷ்டப்படிநடத்தல்) முதலியதைக் கிரஹித்தல் பொருத்தமாக வாகாது என்கிறோம் எனின்?

உத்தரம்—அவ்விதமில்லை. கிருஹஸ்தனுக்கு வசனத்தைக்கொண்டு யாகத்தில் பசுஹிம்ஸாதிகளில் தோஷம் ஸம்பவிக்காதது போல க்ஞானமுள்ள ஸன்னியாஸிக்கு வசனமிருப்பதைக் கொண்டு தோஷநிவிருத்தி யேற்படலாமென்கிறோம். என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது. அவ்விதமில்லை. வசனத்துக்கு வேறுகதி ஸம்பவிப்பதாகவே இருக்கிறது. அதாவது:—பால்ய சப்தத்தால் சொல்லப்படக்கூடிய முரண்படாத பொருள் கிடைக்குங்கால் அதை விடுத்து விதியைப் பாதிக்கக்கூடிய வேறு பொருளைக் கல்பிப்பது பொருந்தக் கூடியதன்று. ப்ரதானத்துக்கு உபகாரஞ் செய்யவேண்டி அங்கமானது விதிக்கப்படுகிறது. இவ்விடத்திலோ ஸன்னியாஸிகளுக்கு அனுஷ்டேயமான க்ஞானப்யாஸமானது ப்ரதானமாக இருக்கிறது. பாலனுடைய நடத்தை முழுதுமே அங்கிகரிக்கப் படுமானல் க்ஞானப்யாஸம் ஸம்பவிக்கவும் மாட்டாது. ஆகவே விஷயத்தை நோக்கிச் செல்லாத இந்திரியங்களையுடைத்தா யிருத்தல் முதலிய சித்தத்திலுள்ள அவனது பாவவிசேஷமானது இங்குள்ள பால்யம் என்ற சப்தத்தால் கிரஹிக்கப்படுகிறது. அதையே "அனுவிஷ்குர்வன்" என்றதால் சொல்லுகிறார். 'க்ஞானம், அத்யயனம், தார்மிகத்வம் முதலியவற்றால் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ளாதவனாகவும், தம்பம் தர்ப்பம் முதலியனவற்றவனாகவும் இருத்தல் வேண்டும். இந்திரியங்கள் விஷயத்தை நோக்கிச்செல்லாதிருத்தல் காரணமாய் பிறர்க்குத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்ள பாலன் எவ்விதம் விரும்புவதில்லையோ அவ்விதமே இங்குமாகும். இவ்விதம் பொருள் கொண்டாலன்றோ இந்த வாக்கியத்துக்கு ப்ரதானத்துக்கு உபகாரப்படும் அர்த்தத்தின் தொடர்பு பொருத்தமுள்ளதாகவாகும். அவ்விதமே ஸ்மிருதிக் காரர்களாலும் "எவனை ஒருவன் ஸாதுவாக அறியமாட்டானே, அஸாதுவாகவுமறியாட்டானே, வித்யை

न बहुश्रुतम्। न सुवृत्तं न दुर्वृत्तं वेद कश्चित्स ब्राह्मणः॥ गूढधर्माश्रितो विद्वानज्ञातचरितं चरेत्। अन्धवज्जडवच्चापि मूकवच्च महीं चरेत्॥' 'अव्यक्तलिङ्गोऽव्यक्ताचारः' इति चैवमादि॥ ५०॥

१६ ऐहिकाधिकरणम्। सू० ५१

ऐहिकमप्यप्रस्तुतप्रतिबन्धे तद्दर्शनात्॥ ५१॥

इहैव नियतं ज्ञानं पाक्षिकं वा नियम्यते। तथाभिसन्धेर्यज्ञादिः क्षीणो विविदिषाजनौ॥ १॥

असति प्रतिबन्धेऽत्र ज्ञानं जन्मान्तरेऽन्यथा। श्रवणायेत्यादिशास्त्राद्वामदेवोद्भवादपि॥ २॥

யற்றவனுகவுமறியமாட்டானே, வெகுவித்தையுள்ளவனுகவுமறியமாட்டானே, நன்னடத்தையுள்ளவனுகவுமறிய மாட்டானே, கெட்ட நடத்தையுள்ளவனுகவுமறிய மாட்டானே அவனே ப்ரம்ஹத்தை யறிந்தப்ராம்ஹணனுவான்" "என்றும் வித்வான் (ப்ரம்ஹத்தை யறிந்தவன்) மறைந்த தர்மத்தை யாஸ்ரயித்தவனுக இருந்து கொண்டு பிறர் அறியமுடியாத முறையில் நடக்கவேண்டும். பொட்டையன் போலும், மூடன்போலும், ஊமைபோலும் பூமியில் ஸஞ்சரிக்காவேண்டும்" என்றும், "தெளிவான அடையாள மற்றவனுகவும் தெளிவான ஆசாரமற்றவனுகவும் இருக்கவேண்டும்" என்றும் உபதேசிக்கப் பட்டிருக்கிறது. (50)

பதிணைந்தாவது அனுவிஷ்காராதிகரணம் முற்றிற்று.

ஐஹிகாதிகரணம் 16.

(ஸூ) ஐஷிகமபி அப்ரஸ்துதப்ரதிபந்தே தத்தர்சனுத் (51)

(ப-ரை) **विद्याजन्म** (வித்யாஜன்ம)=வித்யையினுத்பத்தியானது **अप्रस्तुतप्रतिबन्धे** (அப்ரஸ்துதப்ரதிபந்தே)=வேறுகர்மங்கள் மூலம்தடை யேற்படாவிடில் **ऐहिकमपि** (ஐஹிகமபி)=இதேபிறவியிலும் ஏற்படலாம். **तद्दर्शनात्** (தத்தர்ஸனுத்)=அவ்விதமே சுருதிஸ்மிருதிகளிருப்பதே அதன் காரணமாகும். (51) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) க்ஞானமானது நிஸ்சிதமாக இதே பிறவிலேயேதானுண்டாகிறதா? அல்லது இப்பிறவியிலாவது மறுபிறவியிலாவது உண்டாகலாம் என விகல்பித்துக் கூறப் படுகின்றதா? என்பது ஸந்தேஹம். இதேபிறவியில் தானுண்டாகிறது என நிஸ்சிதமாகக் கூறப்படுகிறது. ஸாதனனுஷ்டானஞ் செய்பவனுக்கு அவ்விதமே எண்ணமுமிருக்கக் கூடும். க்ஞானேத்பத்திக்கு ஹேதுவான யாகாதிகள் விவிதிஷையை உண்டுபண்ணினவுடன் தேய்ந்தும் விடுகிறது என்பது பூர்வபக்ஷம். வேறுகர்மங்கள் மூலம் ப்ரதிபந்தமானது (தடையானது) இல்லாவிடில் இப்பிறவியிலும், ப்ரதிபந்தமிருக்குமாயின் வேறுபிறவியிலும் க்ஞானமுண்டாகலாம். "கேட்டும் (ஸ்ரவணஞ்செய்துங்கூட) சிலர் அறிவதில்லை" என்ற சாஸ்திரவசனமிருப்பதும், அவ்விதமே வாமதேவர் என்பவருக்கு வேறுபிறவியிற் செய்த ஸாதனு

'सर्वापेक्षा च यज्ञादिश्रुतेरश्ववत्' (ब्र० सू० ३।४।२६) इत्यत आरभ्योच्चावचं विद्यासाधनमवधारितं, तत्फलं विद्या सिध्यन्ती किमिहैव जन्मनि सिध्यत्युत कदाचिदमुत्रापीति चिन्त्यते। किं तावत्प्राप्तम्। इहैवेति। किं कारणम्। श्रवणादिपूर्विका हि विद्या। नच कश्चिदमुत्र मे विद्या जायतामित्यभिसन्धाय श्रवणादिषु प्रवर्तते। समान एव तु जन्मनि विद्याजन्माभिसन्धायैतेषु प्रवर्तमानो दृश्यते। यज्ञादीन्यपि श्रवणादिद्वारेणैव विद्यां जनयन्ति प्रमाणजन्यत्वाद्विद्यायाः। तस्मादैहिकमेव विद्याजन्मेति। एवं प्राप्ते वदामः—ऐहिकं विद्याजन्म भवत्यसति अप्रस्तुतप्रतिबन्ध इति। एतदुक्तं भवति—यदा प्रक्रान्तस्य विद्यासाधनस्य कश्चित्प्रतिबन्धो न क्रियत उपस्थितविपाकेन कर्मान्तरेण तदेहैव विद्योत्पद्यते, यदा तु खलु तत्प्रतिबन्धः क्रियते तदामुत्रेति। उपस्थितविपाकत्वं च कर्मणो देशकालनिमित्तोपनिपाताद्भवति। यानि चैकस्य कर्मणो विपाचकानि देशकाल-

---

னுஷ்டானத்தினுல் அப்பிறவியிலுண்டாகாமல் தாயின் கர்ப்பத்திலிருக்கும் பொழுது க்ஞானமுண்டானதாகச் சுருதியில் கூறியிருப்பதுமே அதன் காரணமாகும். என்பது ஸித்தாந்தம். (எ—று)

பாஷ்யம்.—"ஸர்வாபேக்ஷாச யக்ஞாதிஸ்ருதே ரஸ்வவத்" என்று தொடங்கி உயர்வுதாழ்வுள்ள வித்யா (க்ஞான) ஸாதனம் சொல்லப்பட்டது. அதன் பலனுக ஏற்படும் க்ஞானமானது இதேஜன்மத்திலுண்டாகிறதா? அல்லது ஒருஸமயம் அடுத்தஜன்மத்திலு முண்டாகிறதா? என விசாரிக்கப்படுகிறது. முதலில் கிடைப்பது யாதென்னில்? இப்பிறவியிலேயே என்றும். என்னகாரணம்? ஸ்ரவணுதிகளை முன்னிட்டன்றே வித்யையேற்படுகிறது. ஒருவனும் அடுத்த பிறவியில் எனக்கு க்ஞானமுண்டாகட்டுமென எண்ணங் கொண்டவனுய் ஸ்ரவணுதிகளில் ப்ரவிருத்திக்க பாட்டானன்றே. ஸமானமான பிறவியிலேயே(ஸதானுஷ்டானஞ்செய்யும் பிறவியிலேயே) வித்யாத்பத்தியை விருப்பிக்கொண்டு இந்த ஸாதனங்களில் ப்ரவிருத்தி செய்வதாகவன்றே காணப்படுகிருன். யாகாதிகளும் ஸ்ரவணுதிகள் வாயிலாகவே வித்யையை உண்டுபண்ணுகின்றன. வித்யை ப்ரமாணமூலமேற்படுவதே அதன் காரணமாகும். ஆகவே இதே ஜன்மத்திற்றுன் வித்யையின்உத்பத்தியேற்படுகிறது. என இவ்விதம் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகவே ஸித்தாந்தத்தைச் சொல்லுகிருேம். ப்ரதிபந்த மில்லாவிடில் வித்யையினுத்பத்தியானது இதே பிறவியிலுண்டாகிறது என்றும். இதனுல் பின்வருமாறு சொல்லப்பட்டதாக வாகிறது. அதாவது:—எதுபோழ்து ஆரம்பிக்கப்பட்ட வித்யாஸாதனத்துக்கு உபஸ்திதமான பலனையுடைய வேறுகர்மத்தினுல் எவ்விதத் தடையும் செய்யப்படவில்லையோ அது போழ்து இப்பிறவியிலேயே வித்யையானது உண்டாகிறது. எதுபோழ்து கர்மாந்தரத்தினுல் தடையானது செய்யப்படுமோ அதுபோழ்து அடுத்த பிறவியிற்றுன் உண்டாகிறது. கர்மத்துக்கு உபஸ்திதவிபாகத்வமானது (ஸமீபத்தில் பலன் தரத்தக்க தன்மையானது) தேசம், காலம், நிமித்தம் இவற்றின் சேர்க்கையால் உண்டாகிறது. ஒரு கர்மத்தைப் பலன் தரத்தக்கதாகச் செய்யக்கூடிய தேசகால நிமித்தங்கள் எவையுண்டோ அவைகளேதான் மற்றவற்றுக்கும் எனக்கட்டாயப்

निमित्तानि तान्येवान्यस्यापीति न नियन्तुं शक्यते। यतो विरुद्धफलान्यपि कर्माणि भवन्ति। शास्त्रमप्यस्य कर्मण इदं फलं भवतीत्येतावति पर्यवसितं न देशकालनिमित्तविशेषमपि सङ्कीर्तयति। साधनवीर्यविशेषात्त्वतीन्द्रिया कस्यचिच्छक्तिराविर्भवति तत्प्रतिबद्धा परस्य तिष्ठति॥

नचाविशेषेण विद्यायामभिसन्धिर्नोत्पद्यत इहामुत्र वा मे विद्या जायतामिति, अभिसन्धेर्निरङ्कुशत्वात्। श्रवणादिद्वारेणापि विद्योत्पद्यमाना प्रतिबन्धक्षयापेक्षयैवोत्पद्यते। तथाच श्रुतिर्दुर्बोधत्वमात्मनो दर्शयति—'श्रवणायापि बहुभिर्यो न लभ्यः शृण्वन्तोऽपि बहवो यं न विद्युः। आश्चर्योऽस्य वक्ता कुशलोऽस्य लब्धाश्चर्यो ज्ञाता कुशलानुशिष्टः' (क० २।७) इति। गर्भस्थ एव च वामदेवः प्रतिपेदे ब्रह्मभावमिति वदन्ती जन्मान्तरसञ्चितात्साधनाज्जन्मान्तरे विद्योत्पत्तिं दर्शयति। नहि गर्भस्थस्यैवैहिकं किञ्चित्साधनं संभाव्यते। स्मृतावपि—'अप्राप्य योगसंसिद्धिं कां गतिं कृष्ण गच्छति' (गी० ६।३७) इत्यर्जुनेन पृष्टो भगवान्वासुदेवः 'नहि कल्याणकृत्कश्चिद्दुर्गतिं तात गच्छति' (गी० ६।४०) इत्यु-

---

படுத்தமுடியாது. சாஸ்திரமும் இந்தக்கர்மத்துக்கு இந்தப்பலன் உண்டாகிறது எனத்தெரிவிப்பதோடு மட்டும் முடிகிறதே யொழிய (பயனுண்டாகும்) தேசகால நிமித்தங்களையும் சொல்லவில்லை. ஸாதனத்தின் சக்திவிசேஷத்தை யொட்டி இந்திரியங்களுக்குப் புலப்படக்கூடாதபடி ஒன்றுக்குச் சக்தியானது தோன்றலாம். அதனால் தடுக்கப்பட்டதாகப் பிறவற்றின் சக்தியானது(பலன் தராமல்)நிற்கலாம். இப்பிறவியிலோ அப்பிறவியிலோ எனக்கு வித்யையுண்டாகட்டும் என்பதாய் வித்யோத்பத்தியில் விசேஷமின்றி ஆசையானது உண்டாகாதென்றும் (கூறமுடியாது)ஏன்? ஆசையானது தடை செய்யமுடியாததாக விருப்பதுபற்றியே என்க. வித்யையானது ஶ்ரவணாதிகள் வாயிலாக உண்டாவதாயினும் கூட ப்ரதிபந்தத்தின் தேயதலை முன்னிட்டே தான் உண்டாகிறது. அவவிதமே ஶ்ருதியுங் கூட ஆத்மா அறிதற்கறிதானது என்பதைத் தெரிவிக்கிறது அதாவது:—"எது பலரால் கேட்பதற்கும்முடியாததோ, பலர் கேட்பினும் எதை அறிகின்றனரில்லையோ, இதை யுபதேசிப்பவர் ஆஶ்சரியமானவர். உபதேசத்தை யடைபவர் ஆஶ்சரியமானவர். நற்கர்மங்களால் தயாராக்கப்பட்டவராய் இதை அறிபவர் ஆஶ்சரியமானவர்" என்றும். கர்ப்பத்தி லிருப்பவராகவே உள்ள வாமதேவரானவர் ப்ரம்ஹபாவத்தை யடைந்தார் எனச் சொல்லும் சுருதியானது வேறு ஜன்மத்தில் சேர்த்து வைக்கப்பட்ட ஸாதனத்தினால் வேறு ஜன்மத்தில் வித்யையினுத்பத்தியைக் காண்பித்திருக்கிறது. கர்ப்பத்திலிருக்கும் பொழுதே அவர்க்கு ஐஹிகமான ஸாதனம் கொஞ்சமும் ஸம்பவிக்கமுடியாதன்றோ? ஸ்மிருதியிலுங் கூட "ஹே கிருஷ்ண! யோகபலனை யடையாதவன் எந்தக் கதியை யடைகிறான்" என அர்ஜுனனால் கேட்கப்பட்ட பகவான் வாஸுதேவன் "அப்பனே! நற்காரியத்தைச் செய்தவன் ஒருவனும் கெட்டகதியை யடையமாட்டான்" என்று சொல்லிப் பிறகு அவனுக்குப் புண்ணியலோக ப்ராப்த்தியையும், பிறகு ஸாதுக்களின் குலத்தில் பிறவியை

त्वया पुनस्तस्य पुण्यलोकप्राप्तिं साधुकुले संभूतिं चाभिधायानन्तरम् 'तत्र तं बुद्धिसंयोगं लभते पौर्वदैहिकम्' (गी० ६।४३) इत्यादिना 'अनेकजन्मसंसिद्धस्ततो याति परां गतिम्' (गी० ६।४५) इत्यन्तेनैतदेव दर्शयति। तस्मादैहिकमामुष्मिकं वा विद्याजन्म प्रतिबन्धक्षयापेक्षयेति स्थितम् ॥ ५१ ॥

१७ मुक्तिफलानियमाधिकरणम्। सू० ५२

एवं मुक्तिफलानियमस्तदवस्थावधृतेस्तदवस्थावधृतेः ॥ ५२ ॥

मुक्तिः सातिशया नोवा फलत्वाद्ब्रह्मलोकवत्। स्वर्गवच्च नृभेदेन मुक्तिः सातिशयैव हि ॥ १ ॥
ब्रह्मैवमुक्तिर्न ब्रह्म क्वचित्सातिशयं श्रुतम्। अत एकविधा मुक्तिः वेधसो मनुजस्य वा ॥ २ ॥

யும் சொல்லிப் பிறகு "அங்கு அவன் முன்தேஹத்தில் கிடைத்த அந்த க்ஞான ஸம்யோகத்தையடைகிருன்" என்றது முதல் "அனேகம் ஜன்மங்களில் ஸம்ஸித்தியை யடைந்தவனுய் அதனின்றும் மேலான கதியை யடைகிருன்" என்றது முடியவுள்ள வுபதேசத்தினுல் இதையே காண்பித்து மிருக்கிருர். ஆகவே ப்ரதிபந்தம் தேய்வதை முன்னிட்டு வித்யையினுத்பத்தியானது இப்பிறவியிலோ வேறு பிறவியிலோ ஏற்படுகிறது என்பது ஸித்திக்கிறது. (51) (எ-று)

பதினாருவது ஐஹிகாதிகரணம் முற்றிற்று.

முக்திபலாநியமாதிகரணம் 17.

(ஸூ) ஏவம் முக்திபலாநியம: ததவஸ்தாவதிருதே: ததவஸ்தாவதிருதே: (52)

(ப-ரை) **एवम्** (ஏவம்)= முமுக்ஷுவுக்கு வித்யாரூபமான பலனில் ஐஹிகத்வம் ஆமுஷ்மிகத்வம் இவற்ருல் செய்யப்பட்ட விசேஷநியமமானது போல, **मुक्तिफलानियमः** (முக்திபலாநியமः)=முக்திரூபமான பலனிலும் இதுபோன்ற நியமம் ஒன்றும் கிடையாது. ஏன்? **तदवस्थावधृतेः** (ததவஸ்தாவதிருதே:)=முக்தி அவஸ்தையை ஒரேரூபமுள்ளதாக எல்லாவேதாந்தங்களிலும் உறுதிபடுத்தியிருப்பதே அதன் காரணமாகும். **तदवस्थावधृतेः** (ததவஸ்தாவதிருதேः)=என்றுமறுபடியும் சொன்னது பாதத்தின் முடிவைக்காட்டுகிறது. (52) (எ-று)

வையாஸிக நியாயமாலை.

(க-ரை) முக்தியானது யாதானுமொரு அதிஶயத்துடன் (உயர்வு தாழ்வுடன்) கூடினதா? அல்லது இல்லையா? என்பது ஸந்தேஹம். பலனுகை விருப்பது பற்றி ப்ரம்ஹலோகம் போலும், ஸ்வர்க்கம்போலும், மனுஷ்யபேதத்தை யொட்டி முக்தியானது ஸாதிஶயமாகவே(உயர்வுதாழ்வுடன் கூடினதாகவே) தானுகும் என்பது பூர்வபக்ஷம். ப்ரம்ஹமேதான் முக்தியாகும். ப்ரம்ஹமானது ஸாதிஶயமாக(உயர்வு தாழ்வுடன் கூடினதாக) ஓரிடத்திலும் சுருதியில் சொல்லப்படவில்லை. ஆகவே மனுஷ்யனுக்காகட்டும் ப்ரம்ஹதேவனுக்காகட்டும் முக்தியானது ஒரேவிதமாகவே தானுகும் என்பது ஸித்தாந்தம். (எ-று)

यथा मुमुक्षोर्विद्यासाधनावलम्बिनः साधनवीर्यविशेषाद्विद्यालक्षणे फल ऐहिकामुष्मिकफलत्वकृतो विशेषप्रतिनियमो दृष्टः। एवं मुक्तिलक्षणेऽप्युत्कर्षापकर्षकृतः कश्चिद्विशेषप्रतिनियमः स्यादित्याशङ्क्याह—एवं मुक्तिफलानियम इति। न खलु मुक्तिफले कश्चिदेवंभूतो विशेषप्रतिनियम आशङ्कितव्यः। कुतः—तदवस्थावधृतेः। मुक्त्यवस्था हि सर्ववेदान्तेष्वेकरूपैवावधार्यते। ब्रह्मैव हि मुक्त्यवस्था नच ब्रह्मणोऽनेकाकारयोगोऽस्ति। एकलिङ्गत्वावधारणात् 'अस्थूलमनणु' (बृ० ३।८।८), 'स एष नेति नेत्यात्मा' (बृ० ३।९।२६), 'यत्र नान्यत्पश्यति' (छा० ७।२४।१), 'ब्रह्मैवेदममृतं पुरस्तात्' (मुण्ड० २।२।११), 'इदं सर्वं यदयमात्मा' (बृ० २।४।६), 'स वा एष महानज आत्माजरोऽमरोऽमृतोऽभयो ब्रह्म' (बृ० ४।४।२५), 'यत्र त्वस्य सर्वमात्मैवाभूत्तत्केन कं पश्येत्' (बृ० ४।५।१५) इत्यादिश्रुतिभ्यः। अपिच विद्यासाधनं स्ववीर्यविशेषात्स्वफल एव विद्यायां कञ्चिदतिशयमासञ्जयेन्न विद्याफले मुक्तौ। तद्ध्यसाध्यं नित्यसिद्ध-

---

பாஷ்யம்.— வித்யைக்குரிய ஸாதனத்தை அவலம்பித்திருக்கிற முமுக்ஷுவுக்கு ஸாதனத்தினுடைய வீரியவிசேஷத்தை முன்னிட்டு வித்யாரூபமான பலனில் ஐஹிகாமுஷ்மிகபலனாக இருத்தல் மூலமேற்பட்ட விசேஷநியமமானது எவ்விதம் காணப்பட்டதோ இவ்விதம் முக்திரூபத்திலும் உத்கர்ஷாபகர்ஷத்தால் (உயர்வு தாழ்வு களால்) செய்யப்பட்ட ஒருவிசேஷ நியமமிருக்கலாம் என ஆசங்கித்து "ஏவம் முக்திபாலநியம:" என்ற ஸூத்திரத்தைச் சொல்லுகிறார். முக்திரூபமான பலனில் இம்மாதிரியான விசேஷநியமம் ஒன்றும் ஆசங்கிக்க இடமில்லையன்றோ. என்? "ததவஸ்தாவதிருதே:" முக்தியவஸ்தையோ வெனில் எல்லாவேதாந்தங்களிலும் ஏகரூபமுள்ளதாகவே நிர்த்தாரணஞ் செய்யப்படுகிறது. ப்ரம்ஹமேயன்றோ முக்தியவஸ்தையாகிறது. ப்ரம்ஹத்துக்கு அனேக ஆகாரத்துடன் (ஸ்வரூபத்துடன்) சேர்க்கையானது கிடையாதன்றோ. ஏகரூபமுள்ளதாகவே நிர்த்தாரணஞ் செய்யப்பட்டுமிருக்கிறது. "ஸ்தூலமாகவில்லாதது அணுவாக இல்லாதது" என்றும், "இதன்றிதன்றெனச் சேஷித்த அந்த இந்த ஆத்மா" என்றும், "என்னிலையில் வேறாக வொன்றையும் பார்க்கிறானில்லையோ" என்றும், "அமிருத ஸ்வரூபமான இந்த ப்ரம்ஹமே முன்னும்" என்றும், "இந்த ஆத்மாவே இவை யாவுமாகும்" என்றும், "அதே இந்த ஆத்மா மஹானும் அஜனும் அஜரனும் அமிருதனும் அமரனும் அபயனும் ப்ரம்ஹமுமாகும்" என்றும், "என்னிலையில் இவனுக்கு எல்லாம் ஆத்மாவாகவே ஆகுமோ அந்நிலையில் எதைக்கொண்டு எதைப் பார்க்கக்கூடும்" என்றுமாதிய சுருதிகளிருப்பதே அதன் காரணமாகும்.

மேலும் வித்யையின் ஸாதனமானது தனது சக்திவிசேஷத்தால் தனது பலனான வித்யையில் மட்டும் ஒரு அதிசயத்தை உண்டுபண்ணுமே யொழிய வித்யையின் பலனான முக்தியில் உண்டுபண்ணமாட்டாது. அந்த வித்யையின் பலன் ஒரு ஸாதனத்தினால் ஸாத்யமன்றென்றும் நித்யஸித்தஸ்வபாவமாகவே உள்ளதென்றும் வித்யையினால் அடையப்படுகிறதென்றும் அடிக்கடி சொல்லி யிருக்கின்றோமன்றோ. அந்த வித்யையிலுங் கூட உயர்வு தாழ்வு ரூபமான அதிசயமா

स्वभावमेव विद्ययाधिगम्यत इत्यसकृदवादिष्म। नच तस्यामभ्युत्कर्षनिकर्षात्मकोऽतिशय उपपद्यते निकृष्टाया विद्यात्वाभावादुत्कृष्टैव हि विद्या भवति। तस्मात्तस्यां चिराचिरोत्पत्तिरूपोऽतिशयो भवन्भवेत्। नतु मुक्तौ कश्चिदतिशयसंभवोऽस्ति। विद्याभेदाभावादपि तत्फलभेदनियमाभावः कर्मफलवत्। नहि मुक्तिसाधनभूताया विद्यायाः कर्मणामिव भेदोऽस्तीति। सगुणासु तु विद्यासु—'मनोमयः प्राणशरीरः' (छा० ३।१४।२) इत्याद्यासु गुणावापोद्वापवशाद्भेदोपपत्तौ सत्यामुपपद्यते यथास्वं फलभेदनियमः कर्मफलवत्। तथाच लिङ्गदर्शनम्—'तं यथा यथोपासते तदेव भवति' इति। नैवं निर्गुणायां विद्यायां गुणाभावात्। तथाच स्मृतिः—'नहि गतिरधिकास्ति कस्यचित्सति हि गुणे प्रवदन्त्यतुल्यताम्' इति। तदवस्थावधृतेस्तदवस्थावधृतेरिति पदाभ्यासोऽध्यायपरिसमाप्तिं द्योतयति॥ ५२॥

इति श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छंकरभगवत्पूज्यपादकृतौ शारीरकमीमांसाभाष्ये

तृतीयाध्यायस्य चतुर्थः पादः॥ ४॥

तृतीयाध्यायश्च समाप्तः॥

னது பொருந்தமாட்டாது. தாழ்வுள்ளது வித்யையாகவாகாதாகையால் உயர்வுள்ளதேயன்றோ வித்யையாகவாகிறது. ஆகவே அந்த வித்யையில் விளம்பித்து உண்டாகுதல் சீக்கிரமுண்டாகுதல் ரூபமான அதிசயம்வேண்டுமானால் ஸம்பவிக்கலாம். முக்தியிலோ ஒருவித அதிசயமும் ஸம்பவிப்பதற்கில்லை. வித்யையில் பேதமில்லாதிருப்பதைக் கொண்டும் அதன் பலனில் பேதநியமம் கிடையாது. கர்மபலன் போலவாம். முக்திக்கு ஸாதனமாகவான வித்யைக்குக் கர்மங்களுக்குப் போல பேதமானது இல்லை யன்றோ. "மனோமய: ப்ராணசரீர:" என்றதாதி ஸகுணங்களான வித்யைகளிலோ வெனில் குணங்களைச் சேர்த்தல் விலக்குதல் இவைமூலம் பேதமானது பொருந்தக்கூடியதாக இருக்கும்கால் அதற்குத் தக்கபடி பலனுடைய பேதமும் நியமாக ஸம்பவிக்கலாம். கர்மத்தின் பலன் போலவாம். அவ்விதமே சுருதியில் "அதை எவ்வித முபாஸிக்கின்றனரோ அவ்விதமாகவே ஆகின்றனர்" என லிங்கதரிசனமு மிருக்கிறது. நிர்க்குணவித்யையில் இவ்விதம் ஸம்பவிக்காது. குணமில்லாதிருப்பதாலென்க. அவ்விதமே ஸ்மிருதியும் "நிர்க்குண ப்ரம்ஹத்தை யறிந்தவர்க்கு அதிகமான (உயர்வு தாழ்வுள்ள) மார்க்கமானது கிடையாதன்றோ. குணமிருந்தாலன்றோ துல்லியமாக இல்லாதிருத்தலைச் சொல்லுகின்றனர்" எனக் கூறுகிறது. ஸூத்திரத்தில் 'ததவஸ்தாவதிருதே:, ததவஸ்தாவதிருதே:' என்ற பதத்தை இரண்டுதடவை கூறினது அத்தியாத்தின் முடிவைத் தெரிவிக்கிறது. (52) (எ-று)

பதினேழாவது முக்திபலாநியமாதிகரணம் முற்றிற்று.

இவ்விதம் பரமஹம்ஸபரிவ்ராஜகாசாரியர்களான ஸ்ரீமத் சங்கரபகவத்பூஜ்யபாதர் அவர்களின் கிருதியான சாரீரகமீமாம்ஸாபாஷ்யத்தில் மூன்றாவது அத்தியாயத்தின் நான்காவது பாதம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

तृतीयाध्यायस्थसूत्राणामकारादिक्रमः ॥

पृष्ठम्.

अक्षरधियां त्ववरोधः सामान्यतद्भावाभ्यामौपसदवत्तदुक्तम् ... 224
अग्न्यादिगतिश्रुतेरितिचेन्न भाक्तत्वात् 8
अङ्गावबद्धास्तु न शाखासु हि प्रतिवेदम् 280
अङ्गेषु यथाश्रयभावः ... 295
अत एवाचाग्नीन्धनाद्यनपेक्षा ... 335
अत एवचोपमासूर्यकादिवत् ... 87
अतः प्रबोधोऽस्मात् ... 70
अतस्त्वितरज्ज्यायो लिङ्गाच्च ... 353
अतिदेशाच्च ... 264
अतोऽनन्तेन तथाहि लिङ्गम् ... 109
अधिकोपदेशात्तु बादरायणस्यैवं तद्दर्शनात् ... 308
अध्ययनमात्रवतः ... 313
अनभिभवं च दर्शयति ... 350
अनाविष्कुर्वन्नन्वयात् ... 367
अनियमः सर्वासामविरोधः शब्दानुमानाभ्याम् ... 215
अनिष्टादिकारिणामपि च श्रुतम् ... 29
अनुबन्धादिभ्यः प्रज्ञान्तरपृथक्त्ववदृष्टश्च तदुक्तम् ... 268
अनुष्ठेयं बादरायणः साम्यश्रुतेः ... 321
अनेन सर्वगतत्वमायामशब्दादिभ्यः... 121
अन्तराचापि तु तद्दृष्टेः ... 350
अन्तराभूतग्रामवत्स्वात्मनः ... 231
अन्यथात्वं शब्दादितिचेन्नाविशेषात् 144
अन्यथाभेदानुपपत्तिरिति चेन्नोपदेशान्तरवत् ... 233
अन्याधिष्ठितेषु पूर्ववदभिलापात् ... 43
अन्वयादितिचेत्स्यादवधारणात् ... 171
अपिच सप्त ... 32
अपिच स्मर्यते ... 345
अपिच स्मर्यते ... 351
अपिचैवमेके ... 83
अपिच संराधने प्रत्यक्षानुमानाभ्याम् 107
अबाधाच्च ... 344
अम्बुवदग्रहणात्तु न तथात्वम् ... 88
अरूपवदेव हि तत्प्रधानत्वात् ... 83
अशुद्धमितिचेन्न शब्दात् ... 45
अश्रुतत्वादितिचेन्नेष्टादिकारिणां प्रतीतेः ... 12
असार्वत्रिकी ... 311

आ.

आचारदर्शनात् ... 305
आत्मगृहीतिरितरवदुत्तरात् ... 168
आत्मशब्दाच्च ... 167
आदराद्लोपः ... 244
आध्यानाय प्रयोजनाभावात् ... 165
आनन्दादयः प्रधानस्य ... 161
आनर्थक्यमिति चेन्न तदपेक्षत्वात् ... 27
आर्त्विज्यमित्यौडुलोमिस्तस्मै हि परिक्रीयते ... 360
आह च तन्मात्रम् ... 86

इ.

इतरे त्वर्थसामान्यात् ... 164
इयदामननात् ... 229

उ.

उपपत्तेश्च ... 120
उपपन्नस्तल्लक्षणार्थोपलब्धेर्लोकवत्. 214
उपपूर्वमपित्वेके भावमशनवत्तदुक्तम्. 356
उपमर्दं च ... 315
उपसंहारोऽर्थाभेदाद्विधिशेषवत्समाने च ... 142
उपस्थितेऽतस्तद्वचनात् ... 247
उभयव्यपदेशात्त्वहि कुण्डलवत् ... 109

ऊ.

ऊर्ध्वरेतस्सु च शब्दे हि ... 315

पृष्टम्.

ए.

एक आत्मनः शरीरे भावात् ... 274
एवं मुक्तिफलानियमस्तदवस्थावधृतेस्तदवस्थावधृतेः ... 373

ऐ.

ऐहिकमप्यप्रस्तुतप्रतिबन्धे तद्दर्शनात्. 370

क.

कामकारेण चैके ... 314
कामादीतरत्र तत्रचायतनादिभ्यः ... 241
काम्यास्तु यथाकामं समुच्चीयेरन्नवा पूर्वहेत्वभावात् ... 294
कार्याख्यानादपूर्वम् ... 176
कृतात्ययेऽनुशयवान् दृष्टस्मृतिभ्यां यथेतमनेवं च ... 17
कृत्स्नभावात्तु गृहिणोपसंहारः ... 366

ग.

गतेरर्थवत्त्वमुभयथाऽन्यथा हि विरोधः ... 213
गुणसाधारण्यश्रुतेश्च ... 297

च.

चरणादितिचेन्नोपलक्षणार्थेति कार्ष्णाजिनिः ... 26

छ.

छन्दत उभयाविरोधात् ... 212

त.

तच्छ्रुतेः ... 306
तत्रापि तद्व्यापारादविरोधः ... 33
तथाचैकवाक्यतोपबन्धात् ... 334
तथान्यप्रतिषेधात् ... 120
तदन्तरप्रतिपत्तौ रंहति संपरिष्वक्तः प्रश्ननिरूपणाभ्याम् ... 2
तदभावो नाडीषु तच्छ्रुतेरात्मनि च. 61
तदव्यक्तमाहहि ... 106

पृष्टम्.

तद्भूतस्य तु नातद्भावो जैमिनेरपि नियमातद्रूपाभावेभ्यः ... 353
तद्वतो विधानात् ... 306
तन्निर्धारणानियमस्तद्दृष्टेः पृथग्घ्य प्रतिबन्धः फलम् ... 249
तुल्यं तु दर्शनम् ... 310
तृतीयशब्दावरोधः संशोकजस्य ... 38
त्र्यात्मकत्वात्तु भूयस्त्वात् ... 6

द.

दर्शनाच्च ... 37
" " ... 90
" " ... 265
" " ... 300
दर्शयति च ... 140
" " ... 188
दर्शयति चाथो अपि स्मर्यते ... 86
देहयोगाद्वा सोऽपि ... 59

ध.

धर्मं जैमिनिरत एव ... 125

न.

नचाधिकारिकमपि पतनानुमानात्तद्योगात् ... 355
न तृतीये तथोपलब्धेः ... 36
नभेदादितिचेन्न प्रत्येकमतद्वचनात् ... 81
नवा तत्सहभावाश्रुतेः ... 298
नवा प्रकरणभेदात्परोवरीयस्त्वादिवत् ... 146
नवा विशेषात् ... 186
न सामान्यादप्युपलब्धेर्मृत्युवन्नहि लोकापत्तिः ... 271
न स्थानतोपि परस्योभयलिङ्गं सर्वत्र हि ... 79
नातिचिरेण विशेषात् ... 41

पृष्ठम्.

नानाशब्दादिभेदात् ... 288
नाविशेषात् ... 313
नियमाच्च ... 307
निर्मातारं चैके पुत्रादयश्च ... 51

प.

परमतः सेतून्मानसंबन्धभेदव्यपदेशेभ्यः ... 112
पराभिध्यानात्तु तिरोहितं ततो ह्यस्य बन्धविपर्ययौ ... 58
परामर्शं जैमिनिरचोदनाचापवदति हि 318
परेण च शब्दस्य ताद्विध्यं भूयस्त्वात्त्वनुबन्धः ... 273
पारिप्लवार्था इति चेन्न विशेषितत्वात्. 332
पुरुषविद्यायामिव चेतरेषामनाम्नानात्. 191
पुरुषार्थोऽतश्शब्दादिति बादरायणः ... 301
पूर्वं तु बादरायणो हेतुव्यपदेशात् ... 126
पूर्ववद्वा ... 111
पूर्वविकल्पः प्रकरणात्स्यात्क्रिया मानसवत् ... 262
प्रकाशवच्चावैयर्थ्यम् ... 85
प्रकाशादिवच्चावैशेष्यं प्रकाशश्च कर्मण्यभ्यासात् ... 108
प्रकाशाश्रयवद्वा तेजस्त्वात् ... 110
प्रकृतैतावत्त्वं हि प्रतिषेधति ततो ब्रवीति च भूयः ... 100
प्रतिषेधाच्च ... 112
प्रथमेऽश्रवणादिति चेन्न ता एव ह्युपपत्तेः ... 9
प्रदानवदेव तदुक्तम् ... 254
प्राणगतेश्च ... 7
प्रियशिरस्त्वाद्यप्राप्तिरुपचयापचयौ हि भेदे ... 162

फ.

फलमत उपपत्तेः ... 122

पृष्ठम्.

ब.

बहिस्तूभयथापि स्मृतेराचाराच्च ... 358
बुद्ध्यर्थः पादवत् ... 117

भ.

भाक्तं वानात्मवित्त्वात्तथाहि दर्शयति. 14
भावशब्दाच्च ... 331
भूम्नः क्रतुवज्ज्यायस्त्वं तथाहि दर्शयति ... 285
भेदान्नेति चेन्नैकस्यामपि ... 136

म.

मन्त्रादिवद्वाऽविरोधः ... 283
मायामात्रं तु कार्त्स्न्येनानभिव्यक्तस्वरूपत्वात् ... 52
मुग्धेऽर्धसंपत्तिः परिशेषात् ... 75
मौनवदितरेषामप्युपदेशात् ... 367

य.

यावदधिकारमवस्थितिराधिकारिकाणाम् ... 219
योनेः शरीरम् ... 48

र.

रेतस्सिग्योगोऽथ ... 47

ल.

लिङ्गभूयस्त्वात्तद्धि बलीयस्तदपि ... 260

व.

विकल्पोऽविशिष्टफलत्वात् ... 291
विद्याकर्मणोरिति तु प्रकृतत्वात् ... 33
विद्यैव तु निर्धारणात् ... 265
विधिर्वा धारणवत् ... 323
विभागश्शतवत् ... 311
विशेषानुग्रहश्च ... 352
विहितत्वाच्चाश्रमकर्मापि ... 346
वृद्धिह्रासभाक्त्वमन्तर्भावादुभयसामञ्जस्यादेवम् ... 89
वैयाग्र्यर्थभेदात् ... 194

पुटम्.

व्यतिरेकस्तद्भावाभावित्वान्नतूपलब्धिवत् ... 277
व्यतिहारो विशिंषन्तिहीतरवत् ... 235
व्याप्तेश्च समञ्जसम् ... 152

श.

शब्दश्चातोऽकामकारे ... 345
शमदमाद्युपेतस्स्यात्तथापि तु तद्विधेस्तदङ्गतया तेषामवश्यानुष्ठेयत्वात् ... 338
शिष्टेश्च ... 296
शेषत्वात्पुरुषार्थवादो यथान्येष्विति जैमिनिः ... 303
श्रुतत्वाच्च ... 124
श्रुतेश्च ... 361
श्रुत्यादिबलीयस्त्वाच्च न बाधः ... 266

स.

संज्ञातश्चेत्तदुक्तमस्ति तु तदपि ... 151
संयमनेत्वनुभूयेतरेषामारोहावरोहौ तद्गतिदर्शनात् ... 31
सन्ध्ये सृष्टिराह हि ... 49
समन्वारंभणात् ... 306
समान एवञ्चाभेदात् ... 181
समाहारात् ... 297
सम्बन्धादेवमन्यत्रापि ... 184
सम्भृतिद्युव्याप्त्यपि चातः ... 189
सर्वथापि त एवोभयलिङ्गात् ... 349

पुटम्.

सर्ववेदान्तप्रत्ययं चोदनाद्यविशेषात् . 130
सर्वान्नानुमतिश्च प्राणात्यये तद्दर्शनात्. 341
सर्वापेक्षा च यज्ञादिश्रुतेरश्ववत् ... 336
सर्वाभेदादन्यत्रेमे ... 156
सहकारित्वेन च ... 347
सहकार्यन्तरविधिः पक्षेण तृतीयं तद्वतो विध्यादिवत् ... 363
साभाव्यापत्तिरुपपत्तेः ... 39
सामान्यात्तु ... 116
सांपराये तर्तव्याभावात्तथाह्यन्ये ... 210
सुकृतदुष्कृत एवेतितु बादरिः ... 28
सूचकश्च हिश्रुतेराचक्षते च तद्विदः... 55
सैव हि सत्यादयः ... 237
स एवतु कर्मानुस्मृतिशब्दविधिभ्यः 71
स्तुतयेऽनुमतिर्वा ... 314
स्तुतिमात्रमुपादानादितिचेन्नापूर्वत्वात् ... 328
स्थानविशेषात्प्रकाशादिवत् ... 119
स्मरन्ति च ... 32
स्मर्यतेऽपिच लोके ... 37
स्वाध्यायस्य तथात्वेन हि समाचारेऽधिकाराच्च सववच्च तन्नियमः 139
स्वामिनः फलश्रुतेरित्यात्रेयः ... 359
हानौ तूपायनशब्दशेषत्वात्कुशाच्छन्दःस्तुत्युपगानवत्तदुक्तम् ... 202

अकारादिक्रमस्समाप्तः ॥

ப்ரம்ஹஸூத்திர சாங்கரபாஷ்யம்.—(முதலத்தியாயம்.) தேவநாகர எழுத்தில் மூலமும் தமிழுரையுமுள்ளது. கிளேஸ் ரூ. 8. ஆண்டிக் பேபர் ரூ 10.

ஷை இரண்டாவது அத்தியாயம்.—தேவநாகரத்தில் மூலமும் தமிழுரையுமுள்ளது. கிளேஸ் ரூ. 6. பெதர்வெட் ஆண்டிக்பேபர் ரூ. 8.

ஷை இரண்டாவது அத்தியாயம்.—கிரந்த எழுத்தில் தனியாய் மூலமும் தமிழுரையுமுள்ளது. கிளேஸ் ரூ. 6.

நான்காவது அத்தியாயமும் கூடியசீக்கிரத்தில் வெளிவரும்.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள் அவர்களால் வெளியிடப்பட்ட தேவநாகர லிபியில் மூலத்துடனும் தமிழுரையுடனும் கூடின புஸ்தகங்கள்.

1. பிருஹத்ஜாதகம்.—இதற்குப் பல வியாக்கியானங்களுக் கிணங்கவும், நமது சொந்தமான பல அனுபவங்களுக்கிணங்கவும் தமிழில் பதவுரை கருத்துரை, விசேஷவுரை இவைகளை எழுதி தேவநாகரலிபியில் மூலத்துடன் வெளியிட்டிருக்கிறோம். சோதிடத்தைஅப்யஸிக்கவிருப்பமுள்ளோரும், பலசாஸ்திரத்திற் பழகுகின்றவர்களும் இப்புஸ்தகத்தைப் படிப்பது மிகவுமவசியம். டிம்மி 8 பக்க அளவில் சுமார் 750 பக்கங்களுள்ளது. கிலிட்டு எழுத்துடன் உயர்ந்த காலிகோ பைண்டுசெய்தது. கிளேஸ் ரூ. 8. ரப் ரூ. 7.

2. ஜாதக த்வாதசபாவ பலநிர்ணயம்.—முதற்பாகம். 1ம் பாவம்முதல் 5ம் பாவம் முடிய. இதில் பாராசரஸம்ஹிதை, ஸாராவளீ, பலதீபிகை, ஸர்வார்த்தசிந்தாமணி, ஜாதகதத்துவம் முதலிய கிரந்தங்களில் ஒவ்வொருபாவ விஷயமாகவும் கூறியுள்ள வசனங்கள் யாவையும் தனித்தனியே எழுதி அவற்றைத் தமிழில் பெயர்த்து வெளியிட்டிருக்கிறோம். கிளேஸ் ரூ. 3–8--0. ரப். ரூ. 3.

3. ஷை 2ம் பாகம். இதில் 6, 7, 8வது பாவபலன்கள் முற்கூறியபடி அடங்கியிருக்கின்றன. இதில் ஸ்திரீ ஜாதகபலனைப் பற்றித் தனியே விரிவாய் எழுதப்பட்டிருக்கிறது. கிளேஸ் ரூ. 3–8–0. ரப். ரூ. 3.

4. ஷை 3ம் பாகம். இதில் 9, 10, 11, 12-வது பாவபலன்கள் முற்கூறியபடி அடங்கியிருக்கின்றன. கிளேஸ் ரூ. 3. ரப் ரூ. 2–8–0.

5. உடுதசாபல நிர்ணயம்.—தசை, புக்தி, அந்தரம், ஸூக்ஷ்மம், ப்ராணன் வரையுள்ள அதாவது: ஒவ்வொரு நாழிகையிலும் நடக்கும் பலனை இதன் மூலம் நன்கறிந்துகொள்ளக்கூடும். டிம்மி 1க்கு 8பக்க அளவில் சுமார் 480 பக்கங்களுள்ளது. கிளேஸ் ரூ. 4. ரப் ரூ. 3–8.

6. பலதீபிகை.—இது ஜாதகபலனைத் தெளிவாகவும் அனுபவத்துக் கொத்ததாகவும் விளக்குகின்றது. பலபாகத்தில் இதில் கூறப்படாத முறை வேறிராதென்று கூசாமற் கூறலாம். இதன் ஆழ்ந்த கருத்துக்களனைத்தையும் நமது தமிழுரையில் விளக்கி இருக்கிறோம். கிளேஸ்ரூ. 3--8--0. ரப் ரூ. 3.

7. சதுனபல நிர்ணயம்.—ஸ்ரீவராஹமிஹிராசாரியரால் ப்ருஹத்ஸம்ஹிதையில் 85-வது முதல் 95-வது முடியவுள்ள 11 அத்தியாயங்களால் உபதேசிக்கப்பட்டது. கிளேஸ். ரூ. 1–8. ரப் ரூ. 1–4.

8. கோசரபல நிர்ணயம்.—இதில் கோசரபலன் பார்க்கவேண்டிய முறைகள் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றன. அணா 12 ஷை இங்கிலீஷ்டிரான்ஸ்லேஷன். அணா 12

9. ஜாதகசந்திரிகை.—இப்புஸ்தகம் சோதிட சாஸ்திரமாகிற இரும்புப்பெட்டிக்குத் திறவுகோலாகும். நாகரலிபியில் மூலமும், எளியதமிழ் நடையில் பதவுரை, கருத்துரைகளும் 10விதப்பொருத்தம் பார்க்கும் முறையுமிதிலடங்கியிருக்கின்றன. ரூ 1.

10. நவக்கிரஹாராதனக் கிரமம்.—இதில் பூஜாக்கிரமம், மந்திரம், ஸ்தோத்திரம், கவசம், அஷ்டோத்தரம், ஆதித்யஹிருதயம் இவைகள் தேவநாகரலிபியிலுள்ளன. மந்திரங்களுக்கு தமிழுரையுள்ளது. கிளேஸ் ரூ. 1-4-0. ரப் ரூ. 1.

11. மந்திரப்ரச்னம்.—விவாஹம், உபநயனம் முதலிய பூர்வகர்மங்களின் மந்திரங்கள் தேவநாகரத்திலும், தமிழுரையுமிதில் அடங்கி யிருக்கின்றன. கிளேஸ் ரூ. 3. ரப் ரூ. 2–8–0.

12. தைத்திரீ யோபநிஷத்.—இதில் சிக்ஷாவல்லீ, ஆனந்தவல்லீ, பிருகுவல்லீ. என்ற மூன்று வல்லிகளுக்கும் ஸ்ரீசங்கர பாஷ்யத்திற்கிணங்க அர்த்தமும், ஆங்காங்கு வித்யாரண்ய ஸ்வாமிகளால் எழுதப்பட்ட விசேஷமான பொருளும் தமிழில் வெளியிடப் பட்டிருக்கின்றன. தேவநாகரலிபியில் மூலமுள்ளது. பெதர்வெட் ஆண்டிக்பேபர் ரூ. 4–0–0. கிளேஸ் காலிகோபைண்டு ரூ. 3–8–0. சாதாபைண்டு ரூ. 3–0–0.

13. स्वाराज्यसिद्धिः—अद्वैत वेदान्त ग्रन्थः श्लोकतद्व्याख्यान रूपः मूल्यम् ग्लेस् ४. रफ् ३–८.

கடலங்குடி நடேச சாஸ்திரிகள்,

72, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

அல்லது—

கஸ்தூரிரங்கவிலாஸ், நடேசய்யர் தெரு, மாம்பலம், சென்னை.